


# தன்னேர் இலாத தமிழ்

வித்துவான் க. வேந்தனார்

# தண்ணீர் இலாத தமிழ்

## -கட்டுரைகள்-

# தன்னேர் இலாத தமிழ்

வித்துவான் க. வேந்தனார்

மித்ர ஆர்ட்ஸ் & கிரியேஷன்ஸ்

32/9 ஆற்காடு சாலை சென்னை 24

தமிழ்நாடு இந்தியா

**தன்னேர் இலாத தமிழ்**

ஆசிரியர் : வித்துவான் க. வேந்தனார்
உரிமை : 2010, திருமதி சவுந்தரநாயகி வேந்தனார்
முதற்பதிப்பு : 2010
வெளியீடு : மித்ர வெளியீடு

**Thanner Ilatha Thamizh**

By
**Vidwan K. Venthanar**
**© Mrs. Savuntharanayagi Venthanar**

**First Edition** : May 2010

Mithra : 201
ISBN : 978 - 81 - 89748 - 88 - 3

Pages : 360
Price :


Printed & Published by
**Mithra Arts & Creations Pvt Ltd.,**
32/9 Arcot Road, Kodambakkam,
Chennai - 600 024.
Ph : 2372 3182, 2473 5314
www.mithra.co.in

செந்தமிழ்த் தாயைத் திருவளர்
செல்வியைத் தென்பொதியக்
கொந்தலர் சோலையி லேழிசை
கூவுங் குலக்குயிலை
நந்தலில் எல்லை நறைபொழி
கொண்டலை நன்றெனுளம்
வந்து புகுந்திட மாமறை
யாட்டியை வாழ்த்துவனே

**—வித்துவான் க. வேந்தனார்**

உள்ளம் உவகையுற ஊக்கமுடன் வீற்றிருந்து
அள்ளுசுவைத் தேனை ஆர்ந்திடல்போல் - விள்ளுஞ்சீர்
தெய்வமார் செந்தமிழைத் தேர்ந்துநான் கற்றவிடம்
ஐயனார் கோவிலடி ஆல்

**—வித்துவான் க. வேந்தனார்**



# வித்துவான் வேந்தனார் (1918 - 1966)

*"வேந்தனாரின் பேச்சு மூச்செல்லாம் தமிழ். உள்ளம்*
*உயிர் எல்லாம் தமிழ். அவர் வாழ்வு தமிழ்.*
*தமிழே அவர். அவரே தமிழ் - தனித்தமிழ்."*

என அறிஞர் போற்றத்தக்க வகையிலே கால்நூற்றாண்டுக்கு மேலாக ஈழத்திலே தமிழ் மொழியின் வளர்ச்சிக்குப் பணியாற்றியவர் வித்துவான் வேந்தனார்.

சிறுவயதில் இருந்தே தமிழ்ப்பற்றும் தமிழைக் கற்பதில் பேரார்வமும் மிக்கவராக இருந்த இவர் 'தனித்தமிழ்' ஈடுபாட்டினால் தமது பதினாறாவது வயதில், **நாகேந்திரம்பிள்ளை** என்று பெற்றோர் சூட்டிய பெயரை **வேந்தனார்** என மாற்றினார்.

தமிழ்ப் பற்றினாலும் சமய ஈடுபாட்டினாலும் பிறர் துணையின்றித் தாமாகவே தமிழ் இலக்கிய இலக்கண நூல்களையும் சைவ சிந்தாந்த நூல்களையும் கற்று, **பாலபண்டிதர்** (1934 - ஆரிய திராவிட பாஷாபிவிருத்திச் சங்கம்), **பண்டிதர்** (1941 - மதுரைத் தமிழ்ச்சங்கம்), **சைவப்புலவர்** (1942 - சைவ சித்தாந்த சமாஜம்) ஆகிய பட்டங்களைப் பெற்றார். தொடர்ந்து **பயிற்றப்பட்ட ஆசிரியர்** (1943 - யாழ்ப்பாணம் திருநெல்வேலி பரமேசுவரக் கல்லூரி ஆசிரிய பயிற்சிக் கழகம்) ஆகவும், **வித்துவான்** (1944 - சென்னைப் பல்கலைக்கழகம்) ஆகவும் தகுதி பெற்றார். வித்துவான் தேர்வுக்காகச் சென்னையில் இருந்த காலத்திலே 'தனித்தமிழ்' இயக்க முன்னோடி மறைமலையடிகளாரைத் தமது வழிகாட்டியாகக் கொண்டார்.

வேந்தனாருக்குத் திருவாவடுதுறை மகா சந்நிதானம் "தண் தமிழ்த்தாயின் தனித் தெய்வத் தன்மைகளைத் தேமதுரத் தமிழ்ப்பாக்களால் திசைமணக்கத் திகழ்வித்திருப்பதற்காக" **தமிழ்ப்**

**பேரன்பர்** (1947) என்னும் பட்டத்தை வழங்கியது. இவரின் சைவ சித்தாந்த அறிவை வியந்து பாராட்டி ஸ்ரீலங்கா சைவாதீனம் **சித்தாந்த சிரோமணி** (1964) என்னும் பட்டத்தை அளித்தது.

வித்துவான் வேந்தனார் 32 ஆண்டுகள் தமிழ் ஆசிரியராகப் பணியாற்றினார். 1934 - 1945 காலப்பகுதியில் தாம் கல்வி கற்ற வேலணை சைவப்பிரகாச வித்தியாசாலை, சரசுவதி வித்தியாசாலை ஆகியவற்றிலும், 1946ஆம் ஆண்டிலிருந்து தமது மறைவு வரை யாழ்ப்பாணம் பரமேசுவரக் கல்லூரியிலும் ஆசிரியராக இருந்து, தமிழ்ப்பணி ஆற்றி மாணவர் உலகில் மதிப்புப் பெற்றார். மேலும் 1964ஆம் ஆண்டிலிருந்து இலங்கை அரசாங்க புத்தக வெளியீட்டுச் சபையின் தமிழ்ப்பகுதி உறுப்பினராகவும், ஸ்ரீலங்கா சைவாதீனத்தின் 'நாவலன்' பத்திரிகையின் ஆலோசனைக்குழு உறுப்பினராகவும் தமது தமிழ்ப்பணியை விரிவு செய்தார்.

1940களில் எழுத்துலகில் இறங்கிய வேந்தனார் தமது எழுத்துக்களால் கவிஞர், குழந்தைக் கவிஞர், கட்டுரையாசிரியர், உரையாசிரியர் எனப் பல நிலைகளில் தனித்துவம் பெற்று விளங்கினார். ஈழத்துப் பத்திரிகைகளிலும், சஞ்சிகைகளிலும் கவிதைகளையும் பல நூற்றுக்கணக்கான இலக்கிய இலக்கண சமயக் கட்டுரைகளையும், இலக்கிய விவாதக் கட்டுரைகளையும் எழுதினார். 1940களின் இறுதியில் வேந்தனாரின் இலக்கிய விவாதக் கட்டுரைகள் எழுப்பிய கருத்து மோதல்களினால் 'ஈழகேசரி' வேந்தனாரின் இலக்கிய விவாதத்திற்கு ஓர் இலக்கிய அரங்கினையே அமைத்துக் கொடுத்தது. 1950களில் தினகரனில் வேந்தனார் எழுதிய கட்டுரைகள் தமிழின் சிறப்பினையும், தமிழ் இலக்கியங்களின் நயத்தினையும் எடுத்து விளக்குவனவாகவும், தமிழ் மொழியின் உரிமைக்குக் குரல் எழுப்புவனவாகவும் அமைந்தன. அன்று வேந்தனார் எழுதிய குழந்தைப் பாடல்கள் இன்றுவரை ஈழத்துக் குழந்தைகளின் நாவில் ஒலிக்கின்றன. இன்று உலகின் பல நாடுகளில் வாழும் எமது குழந்தைகளும் இவற்றைப் பாடுகின்றனர்.

'திருநல்லூர்த் திருப்பள்ளி எழுச்சியும் குயிற்பத்தும்' (1961), 'கவிதைப் பூம்பொழில்' (1964) என்பன இவரது கவிதை நூல்கள். மாணவர்களின் பயன்பாட்டுக்கு 'இந்துசமயம்' என்ற நூலினையும்,

கம்பராமாயணம் கும்பகர்ணன் வதைப் படலம், காட்சிப் படலம், நிந்தனைப் படலம், மந்தரை சூழ்ச்சிப் படலம், கைகேயி சூழ்வினைப் படலம் என்பவற்றிற்கான உரைகளையும், பாரதியார் பாடல்களுக்கு உரையினையும் எழுதியுள்ளார்.

எழுத்தாற்றல் மிகப் பெற்ற வேந்தனார் தலைசிறந்த பேச்சாளரும் ஆவார். 1940களிலும் 1950களிலும் ஈழத்துப் பத்திரிகைகள் வேந்தனாரின் சொற்பொழிவுகளைப் பெரிய தலைப்புகளுடன் முழுமையாகவும், பகுதிகளாகவும் வெளியிட்டுப் பெருமைப்படுத்தின.

வேந்தனார் தமது எழுத்தாலும் பேச்சாலும் தமிழ்மொழி, தமிழ் இனம், தமிழர் பண்பாடு, தமிழர் உரிமை, சமூகநலன் என்பனவற்றிற்கு முதன்மை கொடுத்து உணர்ச்சியுடன் செயற்பட்டவர். ஆசிரியப் பணியினால் மாணவர்கள் மத்தியிலும் இத்தகைய உணர்வுகளை ஊட்டியவர். இவற்றால் பண்டிதர் பரம்பரையில் இருந்து சிறிது வேறுபடுத்தியும் நோக்கப்பட்டார்.

05-11-1918இல் யாழ்ப்பாணம் வேலணையூரில் பிறந்து, ஈழத்தமிழ் உலகில் முடிசூடா வேந்தனாகக் கால்நூற்றாண்டு ஆட்சி செலுத்திய வித்துவான் வேந்தனார் 18.09.1966இல் அமரர் உலகடைந்தார்.

# முன்னுரை

1940களில் எழுத்துலகில் இறங்கிய வித்துவான் வேந்தனார் இருபத்தைந்து ஆண்டுகளுக்கு மேலாக எழுத்துப் பணியில் ஈடுபட்டவர். தமது எழுத்துக்களால், கவிஞராக, கட்டுரையாசிரியராக ஈழத்துத் தமிழ் இலக்கிய உலகிலே சிறப்பிடம் பெற்றவர்; பாட நூலாசிரியராக, உரையாசிரியராக ஆசிரியர் உலகிலும் மாணவர் உலகிலும் செல்வாக்குப் பெற்றவர். வேந்தனாரின் எழுத்துக்களுக்கு இருந்த வரவேற்பினால் ஈழத்துப் பத்திரிகைகள் பல, அவரின் ஆக்கங்களுக்குக் களம் அமைத்துக் கொடுத்துச் சிறப்பித்தன.

வேந்தனாரது ஆக்கங்களில், மாணவர்களின் பயன்பாட்டுக் கென அவர் எழுதிய பாடநூல்களும் உரைநூல்களும் காலத்திற்குக் காலம் வெளிவந்துள்ளன. அவர் தமது கவிதைகள் சிலவற்றின் தொகுப்பாகக் 'கவிதைப் பூம்பொழில்' என்ற நூலை 1964இல் வெளியிட்டார். தொடர்ந்து, பத்திரிகைகளில் வெளிவந்த தமது கட்டுரைகளைத் தொகுத்து நூல் வடிவிற் கொண்டுவர முயற்சி எடுத்தாரெனினும் அதனைச் செயற்படுத்த முன்னர் இவ்வுலக வாழ்வை நீத்துவிட்டார்.

எனது தந்தை வித்துவான் வேந்தனாரின் மறைவின் பின்னர், அவரது ஆக்கங்களை நூலுருவில் வெளிக்கொணர விரும்பினேன். எனினும் வாழ்வுச் சிக்கல், நாட்டு நடப்பு, புலம் பெயர்வு எனத் தொடர்ந்த பல தடைகளால் அதனை நிறைவேற்ற முடியவில்லை. கால ஓட்டத்தில், ஈழவிடுதலைப் போராட்டக் காலத்தில் வேந்தனார் சேர்த்து வைத்திருந்த - எம்மிடமிருந்த - அவரது ஆக்கங்கள் அனைத்தையும் இழக்க வேண்டிய நிலையும் ஏற்பட்டது. இவை

யாவற்றிற்கும் பிறகு, மீண்டும் வேந்தனாரின் ஆக்கங்களைத் தேடித் சேர்க்கும் பணியில் இறங்கியதன் விளைவே இந்நூல்.

இதுவரை எனக்குக் கிடைத்த, வேந்தனார் எழுதிய ஏழு கட்டுரைத் தொடர்களின் தொகுப்பாக, 'தன்னேர் இலாத தமிழ்' என்ற இந்த நூலினை வெளியிடுவதில் மிகுந்த மகிழ்ச்சி அடைகின்றேன். இந்நூலில் இடம் பெற்றுள்ள முதல் ஆறு கட்டுரைத் தொடர்களும் 1956ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் தொடக்கம் 1957ஆம் ஆண்டு யூலை மாதம் வரை 'தினகரன்' ஞாயிறு இதழ்களில் வெளிவந்தவை. ஏழாவது கட்டுரைத் தொடர் 1966இல் 'சிவதொண்டன்' சஞ்சிகையில் வெளிவந்தது. இந்நூலில் உள்ள முதலாவது கட்டுரைத் தொடரின் தலைப்பையே நூலின் பெயராக அமைத்துள்ளேன்.

வித்துவான் வேந்தனார் தணியாத தமிழ்ப்பற்றும், தனித்தமிழ் ஈடுபாடும், சங்க இலக்கியங்கள் முதல் இருபதாம் நூற்றாண்டு மக்கள் கவிஞன் பாரதியின் பாடல்கள் வரை ஆழமான அறிவும், தமிழன் என்ற இன உணர்வும் கொண்டவர். தமிழ்மொழியின் சிறப்பினைத் தமிழ்மக்கள் எல்லோரும் அறிந்து, போற்றிப் பெருமைப் படவேண்டும் என்று விரும்பியவர். அதனால் தமது ஆசிரியப்பணி ஊடாக மாணவர்களிடையே தமிழ் இலக்கியங்களின் சுவையினை விளக்கித் தமிழ்மொழிப் பற்றினையும் தமிழ் இலக்கியங்களில் ஈடுபாட்டினையும் ஏற்படுத்த உண்மையாக உழைத்தவர். தமது பேச்சாற்றலினாலே பொதுமக்களுக்கும் தமிழர் பண்பாட்டையும் தமிழ் இலக்கியங்களின் செழிப்பையும் உணர்த்தியவர். இத்தகைய தமிழ்ப்பேரன்பர் தமது எழுத்துக்களால், மக்களுக்கு - சிறப்பாக இளையோருக்குத் தமிழ்மொழியின் சிறப்பினையும் தமிழ் இலக்கியங்களின் நயத்தினையும் உணர்த்தி, தமிழ்ப்பற்றினை ஊட்ட முயன்றுள்ளமையை 50 ஆண்டுகளுக்கு முன்னர் தினகரனில் வெளிவந்த இக்கட்டுரைகள் காட்டுகின்றன.

மேலும், இலக்கியம் காலத்தோடு - மக்களின் வாழ்க்கையோடு ஒட்டி அவற்றின் பிரதிபலிப்பாக அமையவேண்டும் என்ற கொள்கை யும் கொண்டவர் வித்துவான் வேந்தனார். தமது ஆக்கங்களிலும்

சொற்பொழிவுகளிலும் இக்கருத்தினை முன்வைத்த வேந்தனார் அவ்வகையிற் செயற்பட்டும் உள்ளார். 1950களில் இலங்கை அரசியலிலே தமிழ்மொழிக்குக் கொடுக்கப்பட்ட நெருக்கடிகள், தமிழ்மொழியின் உரிமை பறிக்கப்பட்டமை என்பனவற்றால் ஈழத்தமிழர்களிடையே மொழிபற்றிய விழிப்புணர்வு மேலோங்கியது. அத்தகைய சூழ்நிலையிலே தமது எழுத்துக்களால் அந்த உணர்வை வலுப்படுத்த வேந்தனார் முயன்றுள்ளமையையும், சமகால நிகழ்வுகள், சிந்தனைகள் என்பனவற்றைக் கருத்திற் கொண்டமை யையும் முதல் இரண்டு கட்டுரைத் தொடர்களும் காட்டுகின்றன.

எமது தாய்நாட்டிலே தமிழ்மொழியைப் பாதுகாக்கவேண்டும் என்ற சிந்தனை பரவலாக ஏற்பட்ட காலத்தில் எழுதிய முதலாவது கட்டுரைத் தொடரில் வேந்தனார், பலவேறு காலப்பகுதிகளிலே தமிழ்மொழியைப் போற்றிப் பாடிய தமிழ்ப்புலவர்கள் சிலரின் பாடல் களை அறிமுகப்படுத்தி, அவர்கள் கூறும் கருத்துக்களை விளக்கித் தமிழ்மொழியின் சிறப்புக்களை எடுத்துக் கூறியுள்ளார். தமிழ் மொழியைப் போற்றும் பல பாடல்களை ஒருங்கிணைத்து வழங்கியுள்ள இக்கட்டுரைகள் இன்றும் பயன் அளிக்கத்தக்கன.

இரண்டாவது கட்டுரைத்தொடரான ‘உரிமைக்குரல்’ எமது மொழியுரிமை பறிக்கப்பட்ட காலத்தில் எழுதப்பட்டது. பண்டைத் தமிழரின் வீரம், பண்டைத்தமிழர் பண்பாடு, பண்டைய தமிழ் அரசர்களின் பண்பு, சங்ககாலப் புலவர்களின் அரசியல் பங்களிப்பு, மொழியுரிமை இழந்த ஈழத்தமிழரின் நிலை, இழந்த உரிமையை மீளப்பெறச் செய்ய வேண்டியவை எனப் பல கருத்துக்களை உணர்ச்சியுடன் இக்கட்டுரைத் தொடரில் வேந்தனார் விளக்கியுள்ளார். ‘உரிமைக்குரல்’ கட்டுரைகளை இன்று படிக்கும்பொழுதும் அவை, இன்றைய எமது நிலையை விளக்குவனபோல அமைந்து உணர்வு ஊட்டுகின்றன.

அடுத்து வரும் நான்கு கட்டுரைத் தொடர்களிலும் குறிப்பிட்ட தலைப்புகளின் அடிப்படையிலே தமிழ் இலக்கியப் பாடல்களை அறிமுகப்படுத்தி அவற்றின் கவிநயத்தினையும், அவையுணர்த்தும்

வாழ்க்கை உண்மைகளையும், குறிப்புப் பொருள்களையும் தெளிவாக வேந்தனார் எடுத்துரைத்துள்ளார். இலக்கியச் சுவைஞர்க்கு இக்கட்டுரைகள் என்றும் விருந்தாகும்.

ஏழாவது கட்டுரைத் தொடரில் சம்பந்தரின் தேவாரத்தமிழின் சுவையினை விளக்கியதுடன் சமயக் கருத்துகளையும் வெளிக் கொணர்ந்துள்ளார். இது வேந்தனார் இறுதியாக எழுதிய முற்றுப் பெறாத கட்டுரைத்தொடர் என்பது குறிப்பிடத்தக்கது.

கட்டுரைகள் அனைத்தையும் யாவரும் வாசித்து விளங்கக் கூடிய வகையில், தெளிவான விளக்கங்களுடன், எளிமையான இனிய தமிழ் நடையில் வேந்தனார் எழுதியுள்ளார். இதனால் தமது புலமையை வெளிப்படுத்துவதிலும் பார்க்கத் தமது நோக்கத்தில் வெற்றி பெறுவதிலேயே வேந்தனார் கவனம் செலுத்தியுள்ளார் என்பது தெரிகின்றது.

இவ்வாறாக, அன்று எமது நாட்டு மக்களுக்கு - சிறப்பாக இளையோருக்கு - மொழிப்பற்றினையும் விடுதலை உணர்வினையும் இலக்கிய ஈடுபாட்டினையும் ஏற்படுத்தும் நோக்கில் வேந்தனார் எழுதிய இக்கட்டுரைகளை, இன்று வெளியிடும் பொழுது, புலம் பெயர்ந்து வாழும் எமது இளந்தலைமுறையினரிடையே மொழிப் பற்று, இனஉணர்வு, தமிழ்ப் புலவர்கள் - தமிழ் இலக்கியப் பாடல்கள் பற்றிய அறிவு என்பனவற்றை ஊட்டவும் இக்கட்டுரைகள் உதவலாம் என நம்புகின்றேன்.

ஏறத்தாழ இருபத்தைந்து ஆண்டுகளில் வேந்தனார் எழுதிய நூற்றுக்கணக்கான கட்டுரைகளில் ஒரு சிறுபகுதியே இத்தொகுப்பில் அடங்கியுள்ளது. ஏனைய கட்டுரைகள் கிடைக்குமிடத்து அவையும் நூலுருப் பெறலாம் என்ற நம்பிக்கை உண்டு.

வித்துவான் வேந்தனாரின் குழந்தைப் பாடல்களின் தொகுப் பான 'குழந்தை மொழி' என்ற நூலினையும், 'கவிதைப் பூம்பொழில்' என்ற கவிதைத் தொகுதியின் இரண்டாவது பதிப்பினையும் வெளி யிடும் இந்த ஆண்டில், அவரது கட்டுரைகள் சிலவற்றின் தொகுதியாக அமையும் இந்த நூலினையும் வெளியிட எனக்கு உதவியவர்களுக்கு

நன்றி கூறக் கடமைப்பட்டுள்ளேன். இந்த நூலை வெளியிடுவதற்கு அடிப்படையாக, தினகரனில் வெளிவந்த கட்டுரைத் தொடர்களை, இலங்கை தேசிய சுவடிக் கூடத்திலிருந்து தனது அயரா முயற்சியினால் எடுத்துதவியவர் எனது மைத்துனர் இடைக்காடு திரு. வேலுப்பிள்ளை முருகையா அவர்கள். அவருக்கு எனது உளம் நிறைந்த நன்றியினைத் தெரிவித்துக் கொள்கின்றேன். சிவதொண்டனில் வெளிவந்த கட்டுரைத் தொடரை எடுத்துதவியவர் தற்பொழுதைய 'சிவதொண்டன்' ஆசிரியர் திரு. வினாசித்தம்பி அவர்கள். அவருக்கும் என் உளம் நிறைந்த நன்றி. பத்திரிகைக் கட்டுரைகளை நூலுருவாக்கும் முயற்சியில் பொறுமையைக் கடைப் பிடித்து, இந்த நூலைச் சிறப்பாக வடிவமைத்து வெளியிடுபவர்கள் மித்ர வெளியீடு நிறுவனத்தினர். அவர்களின் முயற்சிக்கும் ஒத்துழைப் பிற்கும் என் உளம் நிறைந்த நன்றி.

**கலையரசி சின்னையா**

2, Sardinia Avenue
Glenwood
NSW 2768
Australia

Email : kalaichinniah@gmail.com

***May 2010***

# கட்டுரைகள்

1. தன்னேர் இலாத தமிழ் .................................. 19

2. உரிமைக் குரல் ........................................ 89

3. கபிலரின் புலமை உள்ளத்தில் இடம்பெற்ற
பாரியின் உயர் பண்புகள் .............................. 181

4. இலக்கியத்தில் வயல் வளம் ........................... 211

5. இலக்கியத்தில் பாலை நிலம் ......................... 257

6. திருக்குற்றாலச் செந்தமிழ் .......................... 273

7. மூவர் தமிழ் விருந்து ................................. 303

# 1

# தன்னேர் இலாத தமிழ்

சுதந்திரத்தின் பின்னர் இலங்கை அரசியலில் தமிழ்மொழிக்குக் கொடுக்கப்பட்ட நெருக்கடியினால், 1950களின் முற்பகுதியிலிருந்து ஈழத்தமிழர்களிடையே தமிழ்மொழிபற்றிய சிந்தனை - உணர்வு - மேலோங்கியது. அந்நிலையில், "இன்று தமிழை நினைந்து உருகுகின்ற தமிழர்கள், தமக்கு முன்னே தமிழை நினைந்து உருகித் தமிழை வாழ்வித்துத் தாமும் வாழ்ந்த தமிழ்ப்புலவர்களை நினைக்க வேண்டும்" என்ற நோக்குடன், தமிழைப் போற்றிப் பாடிய பன்னிரு புலவர்களின் கருத்துக்களை விளக்கிய கட்டுரைகள் இவை.

# செங்கதிரும் செந்தமிழும்

இன்று தமிழ்மொழியைத் தமிழர்கள் எல்லோரும் நினைக்கின்றார்கள். தமிழிலே பேசுவது, மானம் அழிந்த செயல் என எண்ணி மனம் வருந்திய தமிழர்களும் இன்று தமிழுக்காகத் தங்கள் உயிரை விடத் துணிந்துவிட்டார்கள்.

இதுமட்டும் அல்ல, கல்லூரிகளில் கற்கின்ற தங்கள் பிள்ளைகளின் தேர்தல் அறிக்கையிலே தமிழ்ப் பாடத்தில் அவர்கள் குறைவாகச் செய்திருப்பதைக் கண்டு, மனம் மகிழ்கின்ற பெற்றோர்களும் இன்று தமிழுக்காகக் கண்ணீர் வடிக்கின்றார்கள்.

இங்ஙனம் தமிழை மறந்து வாழ்ந்த இவர்களின் தமிழன்பை, தமிழையே தங்கள் உயிராகக் கருதிக் கற்று மகிழ்ந்த பரம்பரைத் தமிழ் அறிஞர்களும் வியக்கின்றார்கள். சுருங்கச் சொன்னால், தமிழுக்குப் புதியதோர் பெருவாழ்வு தோன்றிவிட்டது என்றே கொள்ளலாம். தமிழர்கள் எல்லோரும் தமிழ்மொழி வாழவேண்டுமென்று கருதுகின்ற செயல் ஒன்றே தமிழ் வளரப் போதியதாகும்.

தமிழர்கள் தமிழை மறந்து வாழ்ந்த காலத்திலே தமிழைக் கற்றுத் தமிழ் ஆராய்ச்சி செய்த மேலைநாட்டு அறிஞர்களைத் தமிழர்கள் பாராட்டவேண்டும். தமிழ் உயர்தனிச் செம்மொழிகளில் ஒன்றென்பதை நிலைநாட்டிய கோல்டுவெல் பேராசிரியர் அவர்களை இன்று தமிழை நினைக்கின்ற தமிழர்கள் நினைக்க வேண்டும்.

இனி இன்று தமிழை நினைந்து உருகுகின்ற தமிழர்கள், தமக்கு முன்னே தமிழை நினைந்து உருகித் தமிழை வாழ்வித்துத்

தாமும் வாழ்ந்த தமிழ்ப் புலவர்களையும் நினைக்க வேண்டும். அப்புலவர்கள் தமிழைப்பற்றி நினைத்த நினைவுகள் என்றும் தமிழை வாழ்விக்கின்றன. ஒரு சிறந்த தமிழ்ப் புலவர் தமிழைப் பற்றிச் சிந்தித்த உண்மைகளை நாங்கள் இன்றைய நெருக் கடியில் நினைத்தல் மிகப் பொருத்தமாகும்.

*ஓங்க லிடைவந் துயர்ந்தோர் தொழவிளங்கி*
*ஏங்கொலிநீர் ஞாலத் திருள்கடியும் — ஆங்கவற்றுள்*
*மின்னேர் தனியாழி வெங்கதிரொன் றேனையது*
*தன்னே ரிலாத தமிழ்*

இச்செய்யுளிலே தமிழின் தனிச் சிறப்புச் சொல்லப்படுகின்றது. உலகமெல்லாம் ஒளி பரப்பி உலாவுகின்ற கதிரவனுடன் தமிழை ஒப்பிட்டுக் கூறுகின்ற புலவனின் உள்ளத்தெளிவு போற்றத் தக்கதாகும். தமிழ் பொதியமலையிலே பிறந்தது. கபிலர், பரணர், நக்கீரர் முதலான சங்கப் புலவர்களாலும், வள்ளுவர், இளங்கோ, கம்பர் முதலான பிற்காலச் சான்றோராலும், நாயன் மார், ஆழ்வார்கள் எனும் தெய்வப் புலவர்களாலும் வழிபட்ட ஒருமையைத் தமிழ் பெற்று விளங்குகின்றது. உலக மக்களின் அகஇருளை - அறியாமையைப் போக்கி உள் ஒளியைப் பெருக்கு கின்ற உயர்ந்த நூல்கள் தமிழ்மொழியிலே உள்ளன. இதனால் தமிழ்மொழி, மலையிலே பிறந்து, உயர்ந்த அறிஞர்கள் வழிபட்ட பெருமையைத் தாங்கி, உலக மக்களின் அகஇருளை அகற்றி நிலவுகின்றதென்பதை அறிகின்றோம்.

மலையிலே பிறந்தது என்பதனால், மிகப் பழமையான தென்பதையும், "உயர்ந்தோர் தொழவிளங்கி" என்பதனால், பண்பட்டதென்பதையும், "ஏங்கொலிதீர் ஞாலத்து இருள் கடியும்" என்பதனால், உயர்ந்த மெய்யுணர்ச்சியைத் தரவல்ல நூற்செல்வம் உடையதென்பதையும் தெளிவுபடுத்தினார்.

இங்ஙனம் பழமையும் பண்பும் மெய்யுணர்ச்சியைத் தரும் நூல்களையும் படைத்த தமிழ்மொழி ஊழி பல சென்றும் உலையாது நிலைபெறும் என்பதைப் புலவர் கூறுகின்றார்.

**வித்துவான் க. வேந்தனார்**

கதிரோனும் (ஞாயிறும்) மலையிலே எழுகின்றான் (உதிக்கின்றான்). அறிஞர்களாலும் அந்தணர்களாலும் அக்கதிரோன் தொழப்படுகின்றான். உலகத்திலே நிறைந்துள்ள புறஇருளைக் கதிரவன் போக்குகின்றான். இத்துடன் உலகந்தோன்றிய காலத்தே தோன்றிய பழமை கதிரவனுக்கும் உரியதாகும். கதிரவன் ஒளியினாலே இயற்கை ஒளி இல்லாத திங்கள் (சந்திரன்) முதலியன ஒளிபெற்று விளங்குவது போலத் தமிழ்மொழியின் உதவியால் இறந்துபட்ட வடமொழியும் உயிருடன் உலாவுகின்றது. கன்னடம், தெலுங்கு, மலையாளம், துளுவம் எனும் மொழிகளிலெல்லாம் தமிழ்மொழியின் அமைப்புக் காணப்படுகின்றது. கதிரவன் உவமானம்; தமிழ்மொழி உவமேயம்; மலையிலே தோன்றுதல், உயர்ந்தோரால் தொழப்படல், இருளைப் போக்குதல் என்பன இரண்டிற்கும் உள்ள பொதுத் தன்மைகள்.

இனிக் கதிரோனிலும் தமிழ் உயர்ந்ததென்பதையும் குறிப்பால் உணர்கின்றோம். கதிரவன் புறஇருளை மாத்திரம் நீக்குவான். தமிழ் அகஇருளை - அறியாமையைப் போக்கி உள் ஒளியைப் பெருக்குகின்றது. கதிரவன் எவ்வளவு நன்மைகளைச் செய்யினும், வெம்மை உடையவன். தமிழ்மொழி தண்மை நிரம்பியது. "தண்ணார் தமிழளிக்கும் தண்பாண்டி நாட்டானை" என்றார் மாணிக்கப் பெருமானும். கதிரவன் மறைந்து தோன்றும் தன்மையை உடையவன். தமிழ் தான் தோன்றிய காலந்தொட்டு வீழாமல் என்றும் இளமைப் பண்புடன் வாழ்கின்றது.

இங்ஙனம் எல்லாம் சிறந்த பண்புகளுடன் பொலிகின்ற தமிழ் மொழி உலகம் உள்ளளவும் வாழக்கூடிய இயற்கை நிரம்பியது. இனிமையும் எளிமையும் மொழியாக்கச் செழிப்பும் வாய்ந்த உயர்தனிச் செம்மொழியாகிய தமிழ் ஏனைய மொழிகளைப் போல இறந்துபடாமல் நிலவும் என்பதைக் காட்டுதற்காகவே புலவர் கதிரவனுடன் ஒப்பிட்டுக் கூறினார். இதனால் தமிழ் மொழி கதிரவனைப் போல இயற்கை மொழியென்பதையும் புலவர் உணர்த்துகின்றார். உலக மக்கள் ஒப்புக் கொள்ளக்கூடிய

மெய்யுணர்ச்சிச் செல்வம் கனிந்த சிறப்பே தமிழின் பெரு வாழ்வுக்குக் காரணமாகும். இனி, பாட்டைப் படித்துப் பாருங்கள்.

*ஓங்க லிடைவந் துயர்ந்தோர் தொழவிளங்கி*
*ஏங்கொலிநீர் ஞாலத் திருள்கடியும் — ஆங்கவற்றுள்*
*மின்னேர் தனியாழி வெங்கதிரொன் றேனையது*
*தன்னே ரிலாத தமிழ்*

இப்பாட்டைப் படிக்கும்பொழுது எங்களை நோக்கிப் புலவன் கூறுகின்ற ஆறுதல் மொழி போலவே கேட்கின்றது. உலகத்திலே கதிரவன் உலாவுமளவும் தமிழ்மொழியும் நின்று வாழும். நீங்கள் அஞ்ச வேண்டாம். இயல்பாக நின்று வாழக்கூடிய தமிழ் மொழிக்குத் தமிழ்மக்களின் ஒன்றுபட்ட ஆதரவும் வரவேற்பும் கிடைத்துவிட்டால் அதன் சிறப்பு எத்துணை பெருகும் என்பதை எடுத்துச் சொல்லவும் வேண்டுமா.

இதனால், "தமிழ்மொழி அந்நிய மொழிகளுக்கு அடிமைப் பட்ட காலத்திலும் அழிந்தொழியவில்லை" எனவும், "அத்தகு விழுமிய மொழி தமிழ்மக்கள் விழிப்புற்ற காலத்தில் அழியுமா? எவராலும் அழிக்கவும் முடியுமா?" எனவும் ஆன்றோர் கூறுகின்ற பொருள் மொழிகளை மீண்டும் நினைவூட்டுகின்றேன். வாழ்க தமிழ்!

# சுந்தரம் பிள்ளையின் தமிழ் வணக்கம்

**த**மிழ்மொழியைப் பற்றிப் பத்தொன்பதாம் நூற்றாண்டிலே சிந்தித்த தமிழ் அறிஞர்களில் தலைமை வாய்ந்தவர் பேராசிரியர் பொ. சுந்தரம்பிள்ளை அவர்களேயாவர். ஆங்கிலமொழிப் புலமையால் ஆராய்ச்சி உள்ளம் படைத்த பேராசிரியர் சுந்தரம் பிள்ளை அவர்கள் தமிழ்மொழியின் சிறப்பை மொழி ஆராய்ச்சி வழியில் நின்று நோக்கினார். பத்தொன்பதாம் நூற்றாண்டிலே வாழ்ந்த மொழிநூல் அறிஞர்களில் பலர் தமிழ்மொழி வட மொழியில் நின்று பிறந்ததென்னுங் கொள்கை உடையவராய் இருந்தனர். ஆராய்ச்சி வல்லுனராகிய பிள்ளை அவர்கள் தமிழ் மொழிக்கும் வடமொழிக்கும் உள்ள வேறுபாட்டை எடுத்துக் காட்டித் தமிழ் தானே தனக்கு நிகரான உயர்தனிச் செம்மொழி என்பதை நிலைநாட்டினார்கள். அவர்கள் பாடிய தமிழ்மொழி வாழ்த்து தமிழ்மொழிக்குப் புதுவாழ்வைக் கொடுத்தது.

*பல்லுயிரும் பலஉலகும் படைத்தளித்துத் துடைக்கினுமோர்*
*எல்லையறு பரம்பொருள்முன் இருந்தபடி இருப்பதுபோல்*
*கன்னடமும் களிதெலுங்கும் கவின்மலையாள முந்துளுவும்*
*உன்உதரத்து உதித்தெழுந்தே ஒன்றுபல வாயிடினும்*
*ஆரியம்போல் உலகவழக்கு அழிந்தொழிந்து சிதையாவுன்*
*சீரிளமைத் திறம்வியந்து செயல்மறந்து வாழ்த்துதுமே*

இந்த வாழ்த்தைப் படித்தவுடனே தமிழ் அறிஞர்கள் விழித்தார்கள். பிள்ளை அவர்களின் ஆராய்ச்சித் திறத்தையும் அஞ்சாமையையும் பாராட்டினார்கள். பரம்பரை பரம்பரையாகப் பிறர் கூறியபடியே கூறிவந்த பழக்கத்தால் சிந்தனையைப்

பறிகொடுத்த தமிழ் அறிஞர்கள், வடமொழியே தமிழின் தாய் மொழி என்பதை நம்பிவிட்டார்கள். அங்ஙனம் நம்பின அளவில் நில்லாமல், வடமொழியே தமிழின் தாய்மொழி என்று சொல்லிப் பெருமைப்பட்டார்கள். இவ்வகைத் தமிழர்களே தமிழ்மொழியின் சிறப்பை அறியாமல் மயங்கிய காலத்திலே பிள்ளை அவர்களின் ஆராய்ச்சிக் குரல், மொழி ஆராய்ச்சியாளர்களை வியப்படையச் செய்தது. தமிழ் ஒரு சிறிய நாட்டு மொழி என்ற எண்ணத்துடன் இருந்த பலர், பிள்ளை அவர்களின் பாட்டைப் படித்தவுடனே திடுக்கிட்டார்கள். தமிழ்மொழியை ஆராயத் தொடங்கினார்கள். இந்தப் பாட்டிலே பிள்ளை அவர்கள் முழுமுதல் இறைவனுடன் தமிழ்மொழியை ஒப்பிட்டுக் கூறுகின்றார்.

பல உலகங்களையும் உயிர்களையும் படைத்தும், காத்தும், அழித்தும் செயல்புரிகின்ற இறைவன், தான் என்றும் ஒரே தன்மையுடன் விளங்குகின்றான். அதேபோலத் தமிழ் மொழியும், கன்னடம், தெலுங்கு, மலையாளம், துளுவம் எனும் வழிமொழிகளைப் படைத்தும், காத்தும், அவற்றின் வளர்ச்சிக்கு வரும் தடைகளை அழித்தும் தான் இளமை குன்றாது என்றும் ஒரு தன்மையாக உலகிலே நிலைபெறுகின்றது என்பதே கருத் தாகும். இதில் “ஆரியம் போல் உலக வழக்கு அழிந்து ஒழிந்து சிதையாவுன் சீரிளமைத் திறம் வியந்து செயல் மறந்து வாழ்த்துதுமே” எனும் அடிகளில் அமைந்துள்ள பொருள் பிள்ளை அவர்களின் ஆராய்ச்சித் திறனையும் தமிழின் மேலுள்ள அன்பையும் காட்டுகின்றது. பல வழிமொழிகளைப் படைத்துத் தானும் அழியாமல் வாழ்கின்ற சிறப்புத் தமிழ்மொழிக்கே உரிய தாகும். ஆரியம் பல வழிமொழிகளைத் தோற்றுவித்ததென்றாலும் தான் வாழமுடியாமல் மடிந்துவிட்டது. ஆரியமொழியிலும் பல அறிவு நூல்கள் உள்ளன. அறிவு நூல்களைப் படைத்தும் ஆரியம் பேச்சு வழக்கில் இல்லாமல் அழிந்துவிட்டது. மக்கள் நாவால் பேசப்படாமல் ஏட்டிலே மட்டும் இருக்கின்ற மொழி இறந்த மொழியாகும். தமிழ்மொழியோடு ஒத்த பழமை உடைய ஆரியமொழி பேச்சு வழக்கில் இல்லாமல் இறந்துபட, இன்றும்

இளமைக் கோலத்துடன் உலகில் வாழ்கின்ற தமிழ்மொழியின் மேம்பாட்டைப் பிள்ளை அவர்களால் மறக்க முடியவில்லை.

ஆரியமொழி, உலகவழக்கு ஒழிந்ததுடன் நில்லாமல், அழிந்து, உருவமே அறிய முடியாத வகையில் சிதைந்தும் விட்டது. தமிழ் உலகவழக்கில் நின்று, மீண்டும் மீண்டும் புதிய இளமை தோன்ற வாழ்கின்றது. இதனைச் "சீரிளமைத் திறம் வியந்து செயல் மறந்து வாழ்த்துதுமே" எனப் பிள்ளை அவர்கள் சொல்லிச் சொல்லி மகிழ்கின்றார்.

இன்னும், இந்த உவமானத்தால், இறைவன் தோற்றம் அறியப்படாதவன், அதே போலத் தமிழின் தோற்றம் அறிய முடியா தென்றும், இறைவன் என்றும் உள்ளவன், அதே போலத் தமிழ் மொழியும் உலகம் உள்ளளவும் வாழும் என்றும், உயிர்கள் இறைவனை மறந்து உலகப் பற்றுள் மூழ்கித் தாம் வேறானவைகள் என்ற எண்ணத்துடன் வாழ்ந்தாலும், இறைவனின் தன்மை வேறு படாமை போலத் தமிழ்மொழியிலே நின்று தோன்றிய தெலுங்கு முதலான வழிமொழிகள், வடமொழி இலக்கணத்தைத் தழுவித் தாம் வேறு மொழிகள் என்று இயங்கினாலும் அதனால் தமிழ் மொழியின் தலைமை குறையாதென்றும் உணரலாம்.

இனி, இறைவன் எல்லாராலும் போற்றப்படுவான். தமிழ் மொழியும் சாதி சமய வேறுபாடில்லாமல் எல்லா மக்களாலும் காலந்தோறும் போற்றப்பட்டு வருகின்றது. இறைவன் அருளிலே ஈடுபாடு பெற்றவர்கள் என்றும் இறைவனை மறவாமல் வணங்கி இன்பம் அடைவார்கள். தமிழின் சுவையிலே ஈடுபட்டவர்களும் தமிழை மறவாமல் என்றும் படித்துப் படித்து இன்பம் அடைவார்கள். இறைவன் பிறரின் துணையின்றித் தானே செயலாற்றுகின்ற முதன்மை வாய்ந்தவன். தமிழும் பிறமொழிகளின் துணையில்லா மல் தனித்தியங்கும் தலைமைப்பாடுடையது. இறைவன் எல்லாப் பொருள்களும் தோன்றுதற்கு முதல்வனாக நிற்பவன். தமிழும், வழிமொழிகள் பல தோன்றுதற்கு நிலைக்களனாக நிலவுகின்றது. இறைவன் அடைந்தாரை ஆதரிக்கும் அருள் நிறைந்தவன்.

தமிழும், தன்னுடன் வந்து சேர்ந்த பிறமொழிச் சொற்களையும் தன் கோலமாக்கி வாழ்விக்கும் மாண்பு பொருந்தியது.

இங்ஙனம் முழுமுதல் இறைவனோடு உவமை கொள்ளத்தக்க தமிழ்மொழி அழிந்துவிடுமென எண்ணி அஞ்ச வேண்டாம். தமிழர்கள் தங்கள் உயிரை இழந்தாலும் தமிழை இழக்க விரும்பார்கள் என்ற உண்மையை இன்று நாங்கள் மெய்ப்பிக்க வேண்டும். பேராசிரியர் சுந்தரம்பிள்ளை அவர்கள் வடமொழியின் வழிமொழி என்று தமிழை இகழ்ந்தவர்களைத் தமது ஆராய்ச்சியினால் அடிபணிய வைத்தார். நாங்கள் இன்று எங்களின் ஒன்றுபட்ட உழைப்பினால் தமிழ் ஆளும் மொழி யென்பதையும் காட்டிவைப்போம். இறைவன் (பரம்பொருள்) உவமானம், தமிழ்மொழி உவமேயம். பல உலகங்களையும் உயிர்களையும் படைத்தல், பல வழிமொழிகளைத் தோற்று வித்தல் என்பனவும் என்றும் ஒரு தன்மையாக நிலை பெறுதலும் இறைவனுக்கும் தமிழ்மொழிக்கும் உள்ள பொதுத் தன்மைகளாகும்.

# தங்கப்புலவனின் தமிழ் உணர்ச்சி

தமிழ்மொழி இயல்பாகவே இனிமை உடையது. அதன் இனிமையிலே ஊறிக் கனிந்த புலவர்கள் பலர். நவாலியூர் திரு. க. சோமசுந்தரப்புலவர் அவர்கள் தமிழே உருவானவர். அவர் தமிழ்மொழியைத் தெய்வக் கோலத்தில் கண்டு சிந்தை உருகி உருகிப் பாடிய பாக்கள் பல. தமிழின் இனிமையோடு, புலவர் அவர்களின் அன்புங் கலந்து, தமிழுக்குப் புதியதோர் இனிமையைக் கொடுக்கின்றது.

*"மன்னும் அருட் தன்மையினும் வாய்மையினும் புதுமையினும்*
*உன்னை நிகரானமொழி உலகிலே வேறுண்டோ"*

எனப் புலவர் தமிழ் அன்னையைக் கேட்கின்றார். தமிழ்மொழியிலே அருள் நூல்கள் பல உள்ளன. வாய்மையைக் காத்து வாழ வழி காட்டுகின்ற அறநூல்களும் பல உள்ளன. அருளும் அறமும் இல்லாவிட்டால் உலகம் அழிந்துவிடும். தமிழ்மக்கள் தாம் அழிய நேர்ந்தாலும் அறத்தையும் அருளையும் கைவிடமாட்டார்கள். அறமும் அருளும் நிறைந்த வாழ்விலே தெய்வச்சாயல் வீசும். அன்பு அறத்துடன் கலந்து இல்லறத்தைப் பண்படுத்துகின்றது. இதனை "அன்பும் அறனும் உடைத்தாயின் இல்வாழ்க்கை பண்பும் பயனும் அது" என வரும் வள்ளுவர் மொழியால் உணர்க.

பின் இந்த அன்பு முதிர்ந்து அருளாக மாறுகின்றது. "அன்பு ஈன் குழவி அருள்" என்றார் வள்ளுவர். அருள் துறவறத்தில் பயன் நிறைகின்றது. அன்பும் அருளும் எந்நிலையிலும் அறத்தை விட்டு நீங்காமல் நின்று பயன் தருவன. இந்த உண்மைகளைப் பல பல நூற்றாண்டுகட்கு முன்னமே தமிழர் தம் வாழ்வில் கண்டு

மலர்ந்தவர்கள். அறத் தெளிவாகத் திருக்குறளும் அருளின் தெளிவாகத் திருவாசகமும் நின்று தமிழை வாழ்விக்கின்றன.

இங்ஙனம் தமிழின் நிலைபேறாகிய மெய் நூல்களைக் கற்றுக் கனிந்த புலவர் அவற்றைப் பாராட்டுகின்றார். அருள்நலமும் வாய்மையும் (அறமும்) நிரம்பிய தமிழ்மொழியைப் புலவரால் மறக்க முடியவில்லை. தமிழ்மொழியில் மட்டுந்தானா அறமும் அருளும் ஆராயப்படுகின்றன. பிற மொழிகளிலே எத்தனையோ அறநூல்களும் அருள் நூல்களும் இருக்கின்றனவே என்ற கேள்வி எமதுள்ளத்தில் எழுகின்றது. இந்த எண்ணம் புலவர் உள்ளத்திலும் எழுந்தது. அவர் தமது அழுத்தப் புலமையில் நின்று சுரந்த ஆராய்ச்சியால் கூறுகின்ற காரணம் மிக மேலானது. அறமும் அருளும் ஆராயப்படுகின்ற நூல்கள் நிரம்பி இருப்பதினால் மட்டும் ஒரு மொழி வாழாது. காலத்தைக் கடந்து நிலைபெறுகின்ற ஓசையும் எளிமையும் இளமையும் அம்மொழியின் பண்புகளாக அமைய வேண்டும். மொழியைப் பேசுகின்ற மக்களின் இயற்கை யோடு ஒட்டி இயங்கக் கூடிய ஆற்றல் வாய்ந்த மொழிதான் இறந்து படாமல் வாழக் கூடியதாகும். தமிழ்மொழி, பல ஆயிரக்கணக்கான மக்களால் பேசப்பட்டு வருகின்ற உயர்தனிச் செம்மொழிகளில் ஒன்றாகும்.

தமிழ்மொழியில் உள்ள அறநூல்களும் அருள் நூல்களும், மக்கள் படித்து உணரக்கூடியதாக இன்றும் உள்ளன. அவற்றுள் உள்ள சொற்களை மக்கள் பேசிவருகின்றார்கள். இரண்டாயிரம் ஆண்டுகட்கு முந்திய சங்க இலக்கியங்களில் உள்ள சொற் களுக்கும், இருபதாம் நூற்றாண்டிலே வாழ்கின்ற நாம் பேசுகின்ற சொற்களுக்கும் உள்ள வேறுபாடு மிகக் குறைவு.

இங்ஙனம் காலத்தைக் கடந்து வாழ்கின்ற தமிழ் மொழியின் பண்பைப் புலவர், “புதுமையினும்” என்ற தொடரால் கூறுகின்றார். பழைய கோலத்துடன் நில்லாமல் புதிய புதிய கோலங்களையுங்கொண்டு மக்களின் வாழ்வுக்காக வாழ்கின்ற மொழி தமிழேயாகும். புலவர் அவர்கள் தமிழின் நிலைபேற்றுக்கு

உரிய காரணங்களைத் தெளிவாகக் கூறுகின்றார். அருளும் வாய்மையும் புதுமையும் அமைந்த தன்மையால் தமிழ் அன்றும் இன்றும் இனியும் நின்று வாழும் என்பதைப் புலவர் எமக்கு நினைவூட்டுகின்றார்.

இனித் தமிழ்மொழி போல் பழமையும் புதுமையும் வாய்ந்த மொழி வேறொன்றும் இன்று வாழுகின்ற மொழிகளிலே இல்லை என்பதை மொழிநூல் வல்லார் ஆராய்ந்து கூறுகின்றார் கள். புலவர் உள்ளத்திலும் இந்த எண்ணம் ஊறிவிட்டது. தமிழ் மொழியின் பண்பும், அதன் நீண்டகால வாழ்வும் புலவர் உள்ளத்தில் புதிய உணர்ச்சியை எழுப்பிவிட்டன.

*"உன்னை நிகரான மொழி*
*உலகிலே வேறுண்டோ"*

என மிக உணர்ச்சியுடன் தமிழ்த் தாயைக் கேட்கின்றார். "உண்டோ" என்ற சொல்லில் எழுகின்ற ஓசை புலவரின் இறுமாப்பையும் தமிழ் மொழியின் தனிச் சிறப்பையும் காட்டுகின்றது. தமிழின் தனிச் சிறப்பிலே கலந்து உள்ளம் செழித்த புலவர் தமிழின் தெய்வ வாழ்வைப் பற்றிப் பாடுகின்றார். தமிழ்மொழி ஊழி பல சென்றா லும் உலையாமல் உயிருடன் வாழும் இயற்கை வாய்ந்த தென்பதைப் புலவர் எமக்குக் கூறுகின்றார்.

*வண்ணப் புனலும் வளியும் நெடுவிசும்பும்*
*மண்ணுமன லும்மறைந்து நின்றாலும் – எண்ணுமிரு*
*கண்ணும்மன மும்உருகக் காட்டி வெளியாக*
*நண்ணும் தமிழரசி நன்று.*

இந்தப் பாட்டிலே புலவர் தமிழின் நிலைபேற்றைப் போற்றுகின்றார். ஐம்பெரும் பூதங்களும் மறைந்து, உலகமே இல்லாத காலத்திலும் தமிழ்த் தெய்வம், தமது கண்ணிலும், மனத்திலும் நீங்காமல் நின்று வாழ்வாள் என்பதைப் புலவர் மிகத்துணிவுடன் கூறுகின்றார். நெருப்பிலே இட்டபொழுதும் நீரிலே விட்டபொழுதும் அழியாமல் நிலைபெற்ற தமிழ், ஏனைய

பூதங்களாலும் அழியாதென்பதையும் புலவர் குறிப்பாகக் கூறுகின்றார். இயற்கையோடு இணைந்த இன்பத் தமிழின் தெய்வ அழகு, அறிவுக்கண்ணுக்கே புலனாகும் என்ற உண்மையைக் கருதிய புலவர், உலகம் அழிந்த காலத்திலும் தமிழ் தன் கண்ணை விட்டு அகலாது எனக் கூறினார். இனி, மனத்தினால் நினைத் தாலும் இனித்து இனித்து இன்பம் பெருக்கும் இயல்புடைய தமிழைத் தான் ஒருபோதும் மறக்க முடியாதென்பதையும் புலவர் கூறுகின்றார். தனக்குத்தானே நிகராகத் தனித்து நிற்கின்ற தலைமையுடையது தமிழ்மொழியென்பதை அறிவித்தற்காகவும், சங்கத்தில் ஆராய்ந்த சிறப்பும் தமிழ் மொழிக்கே உரியதென்பதை விளக்குதற்காகவும் "தமிழ் அரசி" என்றும் கூறினார். "கூடலில் ஆய்ந்த ஒண் தீந் தமிழ்" என்றார் மணிவாசகரும்.

எனவே, தமிழ்மொழியைப் பேசுகின்ற நாங்கள் அருளையும் அறத்தையும் கைவிடாமல் வாழ்ந்து தமிழ்மொழியையும் வாழ்விக்க வேண்டுமென்று புலவர் கருதுகின்றார். தமிழர்களாக நாங்கள் அறத்தையும் அருளையும் மறந்து வாழ்ந்தால் தமிழும் வாழாது என்பதையும் மறக்கக்கூடாது. இன்று தமிழுக்கு ஏற்பட்டிருக்கின்ற நெருக்கடிகள் எல்லாம் தமிழர்கள் தமிழை மறந்து வாழ்ந்ததினால் வந்தனவாகும். தமிழர்கள் என்று உண்மையான உருக்கத்துடன் தமிழை நினைக்கின்றார்களோ, அன்றே தமிழும் உரிமை ஒளி வீசி உலாவும். தெய்வத்தை மறந்து வாழ்ந்தாலும் தமிழை மறந்து தமிழர்கள் வாழமுடியாது.

*"நண்ணும் தமிழரசி நன்று,"*

என்று நாங்களும் புலவருடன் சேர்ந்து தமிழ்மொழியை வாழ்த்து வோம்.

## திரு. வி. க. வின் வாழ்த்து

இருபதாம் நூற்றாண்டிலே, தமிழ்மொழிக்குப் புதுவாழ்வு கொடுத்த புலமையாளர்களில் திரு.வி. கலியாணசுந்தர முதலியார் அவர்கள் மிகச் சிறந்தவர். திரு.வி.க. என்றால் தெரியாத தமிழரைக் காணமுடியாது. திரு. வி. க. அவர்களின் செந்தமிழ் உரைநடை, தமிழர்கள் பெற்ற பெரும் செல்வமாகும். இனிமையும், தெளிவும், எழுச்சியும் நிரம்பிய அவரின் உரைநடை நூல்கள் என்றுமில்லாத உணர்ச்சியையும், ஆர்வத்தையும் தமிழ்மக்கள் உள்ளத்திலே எழுப்பிவிட்டன.

திரு.வி.க. சிறிய சொற்களில் பெரிய பொருளைப் புகுத்தி எழுதுவார். வள்ளுவர் குறள் போலத் தெள்ளிய உரைநடைக்குறள் விருந்தைத் தமிழ்மொழிக்குத் தந்த பெருமை திரு. வி. க. அவர்களையே சார்ந்ததாகும்.

"தமிழ்நாடு தொன்மை வாய்ந்தது; மிக்க தொன்மை வாய்ந்தது. அதன் தொன்மையைக் காலத்தால் அறுதியிட்டுக் காட்டல் இயலாது. அது, நாவலந்தீவு, தமிழ் நிலமாய்த் திகழ்ந்ததைக் கண்டது. இந்துமாக்கடல், நிலப்பரப்பாய் நின்றதைக் கண்டது; இமயம் நீரிடை மூழ்கிக் கிடந்ததைக் கண்டது. தமிழ்நாட்டின் தொன்மை என்னே! என்னே! இன்றும் தொன்மையை வலியுறுத்தும் சான்றுகள் பல உள்ளன."

இந்த உரைநடைப் பகுதி திரு. வி. க. அவர்களின் புதுப் படைப்பாகும். இதைப் படித்துப் பாருங்கள். படிக்கப் படிக்க, எம துள்ளத்தில் புதிய ஒளி வீசுகின்றது. இதில் கூறப்படுகின்ற கருத்து மிக மிகப் பழமையானது. எத்தனையோபேர் எடுத்துச் சொல்

லியது. அப்படியிருந்தும், திரு. வி. க. அவர்கள் எழுதிய வகையும், ஈடுபாடும், நடையும், ஓசையமைப்பும் எம்மை இழுத்து இன்பம் ஊட்டுகின்றன. இங்ஙனம் எல்லாம் தமது உரைநடையாலும் பேச்சாலும் தமிழ்மொழியை வாழ்வித்த திரு. வி. க. அவர்கள் தமிழின் சிறப்பைப் பற்றிப் பாடினால் எப்படியிருக்கும். தம் உடலும், பொருளும், ஆவியும் தமிழாகவே மலர வாழ்ந்த தமிழ் முனிவர் திரு. வி. க. தமிழை வாழ்த்துகின்றார்.

*இயற்கையிலே கருத்தாங்கி இனிமையிலே வடிவெடுத்துச்*
*செயற்கைகடந் தியல்இசையில் செய்நடமே வாழியரோ*

இந்த வாழ்த்து தமிழுக்காக வாழ்ந்தவன், தமிழ் வாழ வேண்டும் என்ற ஆராமையுடன் தமிழை வாழ்த்துகின்ற வாழ்த்து. திரு. வி. க. வின் உயிர் உருகி வழிவது போன்ற உள் ஒளியும், ஓசையும் பாட்டிலே உலாவுகின்றன. தமிழர்கள் இயற்கை யோடு இயைந்து வாழ்ந்தவர்கள். அவர்கள் பேசுகின்ற தமிழ் மொழியும் இயற்கையானது; இயல்பாகவே தோன்றியது. தமிழின் மொழியாக்க மரபும், மென்மையும், நிலைபேறும், இளமையும். அதன் இயற்கைப் பண்பை எடுத்துக்காட்டுகின்றன. திரு. வி. க. தமிழை இயற்கை மரபு மாறாமல் படித்து, நுகர்ந்து, பழுத்த புலமையாளர். அவர் தமது உள்ளத்திலே ஊறிய உண்மையை உணர்ந்தபடியே உரைக்கின்றார். பிறர் புகழவேண்டும் என்ற எண்ணத்தினால் உண்மையை மாற்றி உரைக்காத உரனாளராகிய திரு. வி. க. தமிழ்மொழியின் தோற்றத்தை

*“இயற்கையிலே கருத்தாங்கி”*

என்னும் தொடரால் உணர்த்துகின்றார். மொழியாராய்ச்சியாளர் களும் ஏற்றுக்கொள்ளத்தக்க ஒழுங்குடன், தமிழின் தோற்ற வரலாற்றை ஓரடியிலே அடக்கிக் கூறிய திரு. வி. க. வின் தெளிவு மேலானது. மக்கள், மொழி பேசப் பழகிய போதே தோன்றிய இயற்கைமொழி தமிழ் என்பதை இதனால் உணர்கின்றோம். இன்னொரு மொழியின் பகுதியாய்த் தோன்றி வழங்கும்

செயற்கைமொழிகளில் ஒன்றாகத் தமிழை வைத்து எண்ணிய ஆராய்ச்சியாளர்கள், தமிழின் இயற்கைப் பண்புகளை ஆராய்ந்து தெளியத் தவறிவிட்டார்கள் என்பதையும் இத்தொடர்களால் திரு. வி. க. விளக்குகின்றார்.

*"இயற்கையிலே கருத்தாங்கி"*

என்ற தொடர்களைப் படிக்கும் பொழுது எழுகின்ற ஓசை எவ்வளவு காலமாகத் தமிழ்மொழி இயற்கையிலே கருவாகி நின்றதோ என அறிய முடியாத பழமையை அறிவிக்கின்றது.

இனி இங்ஙனம் இயற்கையாகவே தோன்றிய தமிழின் வடிவத்தைக் கண்டு நுகர்ந்த திரு. வி. க. மிக மகிழ்ச்சியுடன் எமக்குக் கூறுகின்றார்.

*"இனிமையிலே வடிவெடுத்து"*

என்ற தொடர்களைப் படியுங்கள். தமிழின் வடிவம், இனிமையாகும். பேசுகின்ற மக்களின் நாவிலே மிக எளிதாகத் தவழ்ந்து செவியிலே சென்று கனிகின்ற இனிமைப் பண்பு தமிழுடன் பிறந்ததொன்றாகும்.

*சிந்தையிற் பூத்துச் செந்நாவில் பழுத்துச் செவிப்புலத்தே*
*வந்து கனியும் பனுவற் பிராட்டியை வாழ்த்துவனே*

என நவாலியூர் சோமசுந்தரப்புலவர் அவர்களும் தமிழின் இனிமையைப் பாடுகின்றார். இங்ஙனம், என்றும் மாறாத இளமையுடன் இனிமையும் கொண்ட தமிழ்மொழியின் இயல்பு, உணரமுடியாத ஓர் உண்மையாகும்.

*"இயற்கையிலே கருத்தாங்கி*
*இனிமையிலே வடிவெடுத்து"*

என்னும் இரண்டு தொடர்களாலும் தமிழ்மொழியின் தோற்றத்தையும் பண்பையும் மிகத் தெளிவாகத் திரு. வி. க. சொல்லிய திறமை வியத்தற்குரியதாகும்.

*"இறைகளோடு இசைந்த இன்பம்*
*இன்பத்தோடு இசைந்த வாழ்வு"*

என வரும் சுந்தரர் தேவாரத் தொடர்களுடன்

"இயற்கையிலே கருத்தாங்கி
இனிமையிலே வடிவெடுத்து"

என்னும் தொடர்களையும் ஒப்பிட்டுப் படிக்கும்பொழுது, எம துள்ளத்திலே ஓர் ஒளி தோன்றுகின்றது. இறைவனோடு சேர்ந்த இன்பம் போலவே தமிழின் பண்பு என்றும் நிலையானதென்பதும், இன்பத்தோடு இசைந்த வாழ்வு என்றும் நிலவுதல் போலவே இயற்கையோடு கலந்து தோன்றிய தமிழ்மொழியும் நின்று நிலவும் என்பதும் தெளிவாகின்றன. இயற்கையோடு இசைந்து தோன்றிய பழமை உடையது தமிழ்மொழியென்பதை உணர்த்தவே தமிழை இறைவன் தந்தார் என்று கூறுகின்ற வழக்கமும் ஏற்பட்டதென்க.

இனி, இங்ஙனம் "இயற்கையிலே கருத்தாங்கி, இனிமை யிலே வடிவெடுத்த" தமிழ்மொழி இன்றும் செயற்கையைக் கடந்தே வாழ்கின்றது. மக்களின் நாவிலே பயில முடியாத செயற்கை மொழிகளைப் படைத்து, அவற்றை வாழ்விக்க எடுத்துக்கொண்ட முயற்சிகள் எல்லாம் பாழான வரலாற்றை மொழி நூல்கள் உணர்த்துகின்றன. தமிழ்மொழி இயல்பாகவே மக்களால் பேசப் பட்டு வளர்ந்த இயற்கை மொழியாகவே நிற்றலால் அதன் பண்பு பாராட்டப்படுகின்றது. இவற்றை ஆராய்ந்து, அறிந்து, உணர்ந்து, ஒளிபெற்ற திரு. வி. க.

*"செயற்கை கடந்து இயல் இசையில்*
*செய் நடமே வாழிய ரோ"*

எனச் சொல்கின்றார். தமிழ் இயல்பாக மக்களால் பேசப்பட்டு இயல் தமிழாகவும், இயல்பாகவே பாடப்பட்டு இசைத் தமிழாகவும், இயல்பாகவே ஆடப்பட்டு நாடகத் தமிழாகவும் நின்று வாழ்கின்றது. மக்கள் பேசியும் பாடியும் ஆடியும் வாழ்கின்ற உண்மைகளையே

தன் உருவமாகப் பெற்றுத் தமிழ்மொழி வாழ்கின்றதென்பதாம். செயற்கையாகப் பேசியும் பாடியும் ஆடியும் பயில்கின்ற மொழிகள் இயற்கையோடு ஒட்டி வாழ முடியாமல் இறந்து விடுகின்றன என்ற உண்மைகளை எல்லாம் "செயற்கை கடந்து" என்ற தொடரால் திரு. வி. க. எமக்குச் சொல்கின்றார். தமிழ்மொழி செயற்கை கடந்து வாழ்கின்ற சிறப்பை,

*இயலால் இவ்வுலகியன்றும்*
*இசையால் நல்லிசை வளர்த்தும்*
*மயல் தீர்நன் நாடகத்தால்*
*மக்கள் அறிவுறச் செய்தும்*
*அயல்நாடு தலைவணங்கப்*
*பிறமொழிகள் வாய்அடங்க*
*வியலரசு வீற்றிருந்த*
*விழுமியாள் கோத்தும் பீ*

என முருக இலக்குவனார் பாடி மகிழ்கின்றார். நாங்கள் செயற்கை கடந்து வாழ்கின்ற தெய்வத் தமிழை இயற்கையான அன்புடன் படித்துப் போற்றினால் அது எம்மையும் பாதுகாக்கும். செயற்கை மொழியால் இயற்கை மொழியாகிய தமிழ் சிதையாது என்பதைத் தெரிந்து செயலாற்றவேண்டும். திரு. வி. க. அவர்களின் உளக் கனிவுடன் தொண்டு புரிந்தால், செயற்கை கடந்த செந்தமிழ், ஆட்சி மொழியாகவும் வாழ்ந்து எம்மையும் வாழ்விக்கும்.

*"செயற்கை கடந்து இயல் இசையில்*
*செய்நடமே வாழியரோ"*

என இயற்கையிலே கருத்தாங்கிய தமிழ்மொழியை ஏத்துவோம்.

## பாரதியாரின் பரவல்

அமரகவி சுப்பிரமணியபாரதி ஆராய்ச்சி உள்ளமும், எதிர்கால சிந்தனையும் வாய்ந்தவர். தமிழ்மொழியின் சிறப்பை உணர்ந்து உணர்ந்து உயிர் தளிர்த்தவர். தமது உள்ளத்திலே நின்று சுரந்த உணர்ச்சி வெள்ளத்தை தமிழ்க் குரலாற் பாய்ச்சி தமிழையும், தமிழ்மக்களையும் செழிக்கச் செய்தவர். அவரின் கவிதைகள் புதிய எழிலும், எழுச்சியும் பொருந்தி, படிக்கின்ற ஒவ்வொரு தமிழனையும் பதினாறாயிரம் பேராகப் படைத்து வாழ்கின்றன. இங்ஙனம் கவிதை உள்ளம் உடைய பாரதியார் தமிழின் ஆக்கம் கருதி ஆக்கிய கவிதைகள் அவரின் ஆண்மைக் கோலத்துடன் எமது உள்ளத்தில் உலாவுகின்றன.

*யாமறிந்த மொழிகளிலே தமிழ்மொழிபோல்*
*இனிதாவது எங்கும் காணோம்*
*பாமரராய் விலங்குகளாய் உலகனைத்தும்*
*இகழ்ச்சிசொலப் பான்மை கெட்டு*
*நாமமது தமிழரெனக் கொண்டிங்கு*
*வாழ்ந்திடுதல் நன்றோ சொல்லீர்*
*தேமதுரத் தமிழோசை உலகமெலாம்*
*பரவும்வகை செய்தல் வேண்டும்*

இந்தப் பாட்டிலே தமிழின் இனிமைப் பண்பையும், தமிழை மறந்து வாழ்கின்ற தமிழரின் புன்மையையும், தமிழர், தமிழ் மொழிக்கு ஆற்றவேண்டிய பணியையும் பற்றிப் பாரதியார் கூறுகின்றார். தமிழின் இனிமையிலே ஊறிக் கனிந்த பாரதியாரின் உள்ளம் தமிழாகவே மாறிவிட்டது. பல மொழிகளையும்

ஆராய்ந்து காணும் வாய்ப்புகள் நிரம்பிய காலத்திலே வாழ்ந்த பாரதியார், தமிழிலே இயற்கையாக அமைந்துள்ள இனிமையை மிக வியக்கின்றார். பிற மொழிகளைப்பற்றிச் சிந்தியாமல், தன் தாய்மொழியை இனிமையானதென்று கூறுவதில் ஒரு சிறப்பும் இல்லை. ஒவ்வொருவருக்கும் தங்கள் தாய்மொழி இனிமை யானதாகவே தோன்றும். பாரதியார் தமிழை மற்றும் படித்தவுடனே தமிழ் மிக இனிமையான மொழி என்று ஆராய்ச்சி இல்லாமல் கூற மாட்டார். பிற மொழிகளுடன் தமிழையும் ஒப்பிட்டுப் பார்த்து உணர்ந்த பின்புதான் தமிழின் இனிமைப் பண்பை எமக்குப் பாரதியார் எடுத்துச் சொல்கின்றார்.

*"யாமறிந்த மொழிகளிலே தமிழ்மொழிபோல்*
*இனிதாவது எங்கும் காணோம்"*

என்ற தொடரில் எழுகின்ற பாரதியாரின் குரலிலே நின்று பிறக்கின்ற உணர்ச்சியும் துடிப்பும் எம்மை ஊக்குகின்றன. நீங்களும் தமிழைப் படித்துப் பாருங்கள் என உலக மக்களைப் பாரதியார் கேட்கின்றார். இவ்வளவு துணிவுடனே அறுதியிட்டுக் கூறிய பாரதியாரின் ஆண்மைக் குரல் ஆராய்ச்சியாளர்களைத் துயில் எழுப்பிவிட்டது. தமிழ்மொழியிலே எம்மொழிக்கும் இல்லாத இனிமைப் பண்பு இயல்பாகவே அமைந்துள்ளது. தமிழைப் பிறமொழிகளுடன் ஒப்பிட்டுப் படித்தால் இந்த உண்மை தெரியும். இனிமையிலே வடிவெடுத்த இயற்கைமொழி தமிழ் ஒன்றுதான் என்பதை இன்றைய மொழிநூல் அறிஞர்கள் ஏற்றுவிட்டார்கள். தமிழர்கள் தமிழின் பெருமையை இன்னும் உணரவில்லை. அவர்களை,

*"பாமரராய் விலங்குகளாய் உலகனைத்தும்*
*இகழ்ச்சிசொலப் பான்மை கெட்டு*
*நாமமது தமிழரெனக் கொண்டிங்கு*
*வாழ்ந்திடுதல் நன்றோ சொல்லீர்"*

எனப் பாரதியார் கேட்கின்றார்.

தமிழரிற் பலர், எழுத்தும் தெரியாத நிலையில் இருக்கின்றார்கள். விலங்குகளைப்போல் உண்பதும், நுகர்வதும், உறங்குவதுமே வாழ்க்கையென்ற எண்ணத்துடன் வாழ்கின்றார்கள். அவர்கள் தமிழ் இனத்தைப்பற்றியோ, தமிழ் மொழியைப்பற்றியோ, எட்டுணையும் எண்ணாமல் இருந்து இறந்துவிடுகின்றார்கள். தமிழர் என்ற பெயருடன் தமிழைப்பற்றிச் சிந்தியாமல் வாழ்கின்ற தமிழரை, உலகமெல்லாம் இகழ்கின்றது. மொழிப் பற்றும், இனப் பற்றும், நாட்டுப் பற்றும் இல்லாத அடிமைச்சாதி தமிழர் என்ற எண்ணம் உலகிலே நிலைபெற்று விட்டது. இங்ஙனம் பல ஆயிரக்கணக்கான தமிழர்கள், தமிழை மறந்து, விலங்கு வாழ்க்கையிலே இருக்கும்பொழுது தமிழ் எப்படி வளரும்? ஒரு சில தமிழ்ப்புலவர்கள், தமிழின் பெருமையைப் பாடிக்கொண்டே இருப்பதால் தமிழ் வளர்ந்து விடுமா? என்றெல்லாம் பாரதியார் எம்மைக் கேட்கின்றார்.

*"உலகனைத்தும்*
*இகழ்ச்சிசொலப் பான்மை கெட்டு*
*நாமமது தமிழரெனக் கொண்டிங்கு*
*வாழ்ந்திடுதல் நன்றோ சொல்லீர்"*

என்று பாரதியார் எம்மைக் கேட்கின்ற குரலிலே எவ்வளவு துடிப்பும் மானமும் தோன்றுகின்றன என்பதைச் சிந்தித்துப் பாருங்கள். தமிழ்மக்கள் தமிழைப் புறக்கணித்து வாழ்கின்ற நிலைமையைப் பாரதியார் ஒளியாமல் எடுத்துக் காட்டுகின்றார். தமிழ் வாழவேண்டுமானால் தமிழ்மக்கள் தமிழை உணர வேண்டும். தமிழ்மக்களே தமிழை இகழ்ந்தும், மறந்தும் வாழ்ந்தால் தமிழ் ஒருபோதும் வளராது. ஒவ்வொரு நாட்டு மக்களும் தங்கள் தங்கள் தாய்மொழிகளைக் கற்று உணர்ந்து போற்றுகின்றார்கள். தமிழர் மட்டும் தமிழை மறந்து பிறமொழி களுக்கே அடிமையாகி வாழ்வதைக் கண்டால் யார்தான் இகழ மாட்டார்கள். தமிழை மறந்தும், இகழ்ந்தும் தமிழைக் கொலை செய்கின்ற தமிழர்கள், தமிழர் என்ற பெயருடன் ஏன் இருக்கின்

றார்கள்? என்று எண்ண எண்ணப் பாரதியாரின் உள்ளம் இடிகின்றது.

இன்தமிழ், தீந்தமிழ், நறுந்தமிழ், அமிழ்தத் தமிழ், பசுந் தமிழ், தண்தமிழ் எனத் தமிழைத் தமிழரிற் சிலர் மட்டும் பாராட்டுவதுடன் நில்லாமல் தமிழர்கள் எல்லாரும் பாராட்ட வேண்டும். நாம் நமது தமிழைப் பாராட்டுவது போல, பிறமொழி களைப் பேசுகின்ற மக்களும் தமிழைப் பாராட்ட வேண்டும்.

*"தேமதுரத் தமிழோசை உலகமெலாம்*
*பரவும்வகை செய்தல் வேண்டும்"*

என எம்மைப் பாரதியார் வேண்டிக் கொள்கின்றார். பாரதியா ரால் தமிழின் இனிமைப் பண்பை எடுத்துச் சொல்லாமலிருக்க முடியவேயில்லை. தமிழிலே அமைந்த இயற்கையான இனிமையை உலக மக்கள் எல்லாரும் உணர்ந்து மகிழும் காலம் என்று வருமோ, எனப் பாரதியார் எண்ணுகின்றார். அவரது எண்ணத்தின் ஆற்றலும், ஆராமையும்

*"தேமதுரத் தமிழோசை உலகமெலாம்*
*பரவும்வகை செய்தல் வேண்டும்"*

என்ற தொடர்களிலே நின்று அலை எறிகின்றன.

*தாயெழிற் றமிழை என்றன்*
*தமிழரின் கவிதை தன்னை*
*ஆயிரம் மொழியிற் காண*
*இப்புவி அவாவிற் றென்ற*
*தோயுறும் மதுவின் ஆறு*
*தொடர்ந்தென்றன் செவியில் வந்து*
*பாயு நாள் எந்த நாளோ*
*ஆரிதைப் பகர்வார் இங்கே*

என்னும் இச்செய்யுளால், பாரதியாரின் உள்ளத்திலே எழுந்து மோதிய ஆர்வ அலைகள் பாரதிதாசன் உள்ளத்திலே மதுவின்

ஆறாகப் பாய்வதைப் பார்க்கின்றோம். தமிழை உலக மக்கள் உணர்ந்து சுவைக்க வழிகாட்டுகின்ற ஆற்றலும், எழுச்சியும், ஆர்வமும் தமிழ்மக்கள் இடத்திலேதான் அமைய வேண்டும். வாழ்கின்ற மக்களின் உள்ளத்திலே இடம்பெறாத எந்தப் பொருளும் நிலைத்து வாழ மாட்டாது. தமிழ்மொழியின் ஆக்கம் கருதி தமிழ்மக்கள், உழைக்க வேண்டும். பிற மொழிகளில், உள்ள கலை நூல்களைத் தமிழில் மொழிபெயர்க்க வேண்டும். புதிய நூல்களை ஆராய்ந்து இயற்ற வேண்டும். நாம் ஒன்றும் தேடாமல் எமது முன்னோர் தேடிவைத்த செல்வத்தையே புகழ்ந்து "பேசிப் பேசி" நுகர்ந்து கொண்டிருந்தால், அச்செல்வம் விரைவில் அழிந்துவிடும். எமக்குப் பின்வருகின்ற எமது பரம்பரையில் உள்ளவர்கள் வறியவர்களாக வாழ்கின்ற நிலைமை ஏற்படும். தமிழ்மொழிக்குப் பழந்தமிழர்களாகிய எமது முன்னோர்கள் தேடிக்கொடுத்த நூல்களாம் செல்வங்களை, நாங்கள் படித்துப் படித்துப் பாராட்டுவதுடன் அமைந்து விடுகின்றோம். நாங்கள் முயன்று புதிய நூல்களை, இன்றைய நிலைமைக்கேற்ப எழுதித் தமிழை வளம்படுத்தல் வேண்டும். இனி வருகின்ற எங்கள் பரம்பரையினர், இன்று நாம் ஆக்குகின்ற நூற் செல்வத்தை முதலாகக் கொண்டு, தாமும் வாழ்ந்து புதிய ஆக்கங்களையும் புனைவார்கள். இங்ஙனம் தொடர்ச்சியான கலைச் செல்வத்தை ஈட்டிக்கொள்ளாத மொழி காலம் கடந்து வாழமுடியாமல் சிதைந்து போகும். நாங்கள் பரம்பரை பரம்பரையாக பழம் பெருமை பேசிப் பேசி வருவதால் தமிழ் வளராது. எங்கள் தமிழ்மொழியின் நூற் செல்வத்தின் மேம்பாட்டை உணர்ந்து, வெளிநாட்டார் மதிக்க வேண்டும் என்பதே பாரதியாரின் எண்ணம்.

*பிறநாட்டு நல்லறிஞர் சாத்திரங்கள்*
*தமிழ்மொழியிற் பெயர்த்தல் வேண்டும்*
*இறவாத புகழுடைய புதுநூல்கள்*
*தமிழ்மொழியில் இயற்றல் வேண்டும்*
*மறைவாக நமக்குள்ளே பழங்கதைகள்*
*சொல்வதிலோர் மகிமை இல்லை*

*திறமான புலமையெனில் வெளிநாட்டோர்*
*அதைவணக்கம் செய்தல் வேண்டும்*

இந்தப் பாட்டிலே தமிழ்மொழி ஆக்கங்கருதி நாம் செய்ய வேண்டிய பணிகளைப் பாரதியார் கூறுகின்றார். தமிழ்மொழி இன்று போல் இனிவரும் உலகிலும் தலைமை பெற்று வாழ வேண்டுமானால் இப்பணிகளை நாம் ஆற்ற வேண்டும்.

பாரதியாரின் எண்ணத்தை நிறைவேற்றுவோமானால் எங்கள் தமிழ்மொழியைப் பிற நாட்டினரும் விரும்பிக் கற்பார்கள். தமிழ் வாழும். தமிழர் இனம் உலகின் மதிப்பையும் வரவேற்பையும் பெற்றுச் சிறக்கும்.

## நாட்டாரின் நல் உவகை

**நா**வலர் திரு. மு. வேங்கடசாமி நாட்டார் அவர்கள் நடுக்காவேரி நாட்டில் பிறந்தவர். ஆராய்ச்சிப் புலமையும் தமிழ் அறிவும் ஆர்ந்தவர். தமிழ்ப் பெருங்கடல். அவரின் மரபு திரியாத அழுத்தப் புலமையும், தெளிவும், நடுவுநிலைமையும் தமிழ் மொழியை இன்றும் ஆக்கிவருகின்றன. இருபதாம் நூற்றாண்டிலே வாழ்ந்த தமிழ் அறிஞர்கள் எல்லோராலும் மதித்துப் பாராட்டப் பெற்ற பெருவாழ்வு நாட்டார் அவர்களுக்கே உரியதாகும். நாட்டார் என்ற பெயரைக் கேட்டாலே தமிழ் அறிஞரின் நெஞ்சம் மலரும். நாட்டார் பெற்ற அறிவிலும், அவரின் ஒழுக்கமே மிக உயர்ந்தது. ஒழுக்கமும், உள்ஒளியும், ஊக்கமும் நாட்டார் அவர்களை அடைந்து நல்வாழ்வு பெற்றுவிட்டனவென்றே கூறலாம். நாட்டாரின் தமிழன்பு அருவி ஊற்றைப் போன்றது. மலையிலே நின்று சுரந்து பாயும் அருவி, மன்னுயிர்களை வாழ்விக்கின்றது. நாட்டாரின் நிலைகலங்காத உள்ளத்திலே நின்று சுரக்கின்ற தமிழன்பு, தமிழ்மக்கள் உள்ளம் செழிக்கும் வண்ணம் பாய்ந்து, பயன்தருகின்றது. அவர் செந்தமிழ் அன்னையை என்றும் மாறாத இளமைக் கோலத்துடன் கண்டு கண்டு உள்ளங் களிக்கின்றவர்.

இங்ஙனம் களித்துத் தன்னை மறந்த நாட்டார், பந்தாடும் கோலத்தில் செந்தமிழ் அன்னையைப் பார்க்கின்றார்.

*கொந்தலர்ந்த கோதைசூடு கொண்டலாட ஓடியே*
*முந்தளவில் மூதறிஞர் தந்தபுகழ் பாடியே*
*தந்தையோடு கந்தன்மேய சங்கம்வளர் பீடினாள்*

*செந்தமிழ்மான் வாழ்கவென்று சென்றுபந் தடித்துமே*
*சேணிலாணை சென்றுவாழ்க வென்றுபந் தடித்துமே*

இந்தப் பாட்டிலே நாட்டாரின் உள்ளத்தில் நின்று, சுரந்து பாய் கின்ற தமிழன்பைக் காண்கின்றோம். பாட்டின் ஓசை பந்தெழுந்து துள்ளுதல் போலவே கேட்கின்றது. தமிழ் அன்னை நாட்டாரின் உள்ளத்திலே ஓடி ஓடிப் பந்தடிக்கின்றாள். மலர்மாலை அணிந்து கரிய கூந்தல் ஆட ஆட ஓடிப் பந்தடிக்கின்ற தமிழ் அன்னையின் உருவப் பொலிவை நாட்டாரால் மறக்க முடியவில்லை.

*"கொந்தலர்ந்த கோதைசூடு*
*கொண்டலாட ஓடியே"*

என்ற அடியைப் படியுங்கள். எமது கண்முன் நின்று தமிழ்த் தெய்வம் களிநடம் புரிவது போலல்லவா இருக்கின்றது. இளமைக் கோலத்தோடு தமிழ்மொழி மக்கள் நாவிலே உலாவி வாழ்கின்றது என்பதையே நாட்டார் இங்ஙனம் பாடி மகிழ்கின்றார். ஓடியே என்ற சொல்லின் எழுச்சியால், காலங்கடந்து வாழும் ஆற்றல் தமிழ் மொழிக்கே உரியதென்பதை உணர்கின்றோம். தமிழ்மொழியின் மாறாத இளமையை,

*"கொந்தலர்ந்த கோதை சூடு*
*கொண்டல் ஆட"*

என்ற தொடரால் அறிகின்றோம். இளமையின் கனிவைக் காட்டுவது கூந்தலின் செழிப்பேயாகும். தமிழ் அன்னை பல பல் நூற்றாண்டுகளாக மக்கள் நாவிலே ஓடி, உலாவி உலாவிப் பண்பட்ட சிறப்பால் மீண்டும் மீண்டும் புதிய இளமை பெற்றுப் பொலிகின்றாள் என்பதாம்.

*"கொந்தலர்ந்த கோதை"*

என்றது, தேன்சிந்துகின்ற புதிய மலர்களால் தொடுக்கப்பட்ட மாலையைக் குறிக்கின்றது. தேன், தமிழில் இயல்பாகவே

அமைந்திருக்கின்ற இனிமையைக் காட்டுகின்றது. புதிய மலர், தமிழிலே புதிது புதிதாகப் படைக்கப்படுகின்ற சொற்களைக் காட்டுகின்றது. மாலை, இனிய புதிய பொருள் நிரம்பிய சொற் களால் இயற்றப்பட்ட நூல்களைக் காட்டுகின்றது. இதனால், தமிழ்மொழி, இனிமை மாறாததாய்ப் புதிய புதிய கலைச் சொற்களைக் காலத்தோடொட்டிப் பெற்றுப் புத்தம் புதிய கலை நூல்களை உடையதாய், மக்கள் நாவிலே பயின்று வாழ்கின்ற சிறப்புடையதென்பதை உணர்கின்றோம்.

இனி இங்ஙனம் புதிய கலை நூல்களைப் பெற்று வாழ் கின்ற அளவிலே மட்டும் தமிழின் நிலைபேறு தங்கவில்லை. மொழி ஆக்க மரபும், அறிவும் அமைந்த சான்றோர் பலரால் செப்பஞ்செய்து பாராட்டிய பண்பினாலேதான் பல இன்னல்கள் வந்தும் சிதையாமல் தமிழ் இன்றும் வாழ்கின்றது. இயற்கையிலே கருத்தாங்கித் தோன்றிய மொழிவளம் தமிழுக்கே உரிய தனிச் செல்வமாகும். தமிழ்மொழியின் இயற்கை வாழ்வை ஆராய்ந்து கண்ட மூதறிஞர்கள் அதன் மரபை இலக்கண நூல்களால் வரைவு செய்திருக்கின்றார்கள்.

*"முந்தளவில் பேரறிஞர்*
*தந்தபுகழ் பாடியே"*

என்ற அடியில் தமிழ்மொழி பெற்ற பழம் சிறப்புகளை எல்லாம் நாட்டார் காட்டுகின்றார். "நூன்மரபு, மொழிமரபு, கிளவியாக்கம், நாடக வழக்கினும், உலகியல் வழக்கினும் பாடல் சான்ற புல நெறிவழக்கம்" எனத் தொல்காப்பியனார் தமிழ்மொழியின் பண் பட்ட ஆக்க நிலைகளை எடுத்துக் கூறுகின்றார்.

இங்ஙனம் பண்பட்ட தமிழ்மொழி சங்கத்தில் ஆராய்ந்து வழுக்களைந்த தூய்மை பொருந்தியது என்பதையும் நாட்டார் சொல்கின்றார். முழுமுதல் இறைவனாகிய சிவனும், முருகக் கடவுளும் சங்கத்திலே வீற்றிருந்து தமிழை ஆராய்ந்தார்களாம்.

இச்செய்தி தமிழின் காலங்கடந்த பழமையையும், என்றும் இளமையுடன் வாழும் புதுமையையும் குறிப்பாகக் காட்டுகின்றது.

*"முன்னைப் பழம்பொருட்கும் முன்னைப் பழம்பொருளே*
*பின்னைப் புதுமைக்கும் பேர்த்தும் அப்பெற்றியனே"*

என வரும் திருவாசகத்தை நோக்குக. தமிழ்மொழியில் சிவனையும் முருகனையும் சிறப்பித்துப் பாடிய அருட்பனுவல் கள் பல இருத்தலால், அக்கடவுளர் இருவரையும் தமிழ் மொழியின் பாதுகாவலராகப் போற்றும் மரபு ஏற்பட்டது. இங்ஙனம் இறைவனுடன் தமிழைத் தொடர்புபடுத்திக் கூறுவதி னால் தமிழ், பல நூற்றாண்டுகளாக வாழ்ந்து செழித்த பண்புடை யதென்பதையும், உயர்ந்த அறநூல்களையும் அருள் நூல்களை யும் உடையதாய் விளங்குகின்றதென்பதையும் அறிகின்றோம். தமிழின் தொன்மையையும் இளமையையும் நினைந்து உருகி மகிழ்ந்து தமிழ்ப்பாவைப் பாடிய சுவாமி சுந்தானந்தபாரதியார்,

*முன்னை மொழிக்கெல்லாம் முன்மொழியை முத்தமிழை*
*இன்னர் மொழிக்கும் இனிதாம் இளந்தமிழைப்*
*பொன்னைப் போற்போற்றிப் புதுநயங்கள் ஏற்றிடுவோம்*
*அன்னிய மாயத் தழுந்திக் கிடக்காதே*
*சொன்னச் சுரங்கம் சுரந்திருக்க உன்மலையில்*
*இன்னொருவர் வீட்டில் இரந்துண்ணப் போவாயோ*
*என்னேயுன் ஏழமைதான் எம்மொழிக்கும் தாரகமாய்*
*அன்னை மொழி ஓங்க அருட்பணிசெய் யெம்பாவாய்*

என்று புகழ்கின்றார். இப்பாட்டிலே தமிழின் தொன்மையும், மாறாத இளமையும் தெளிவாகின்றன. தோற்றத்தில் இயற்கை யாகவே அமைந்த பண்புகளுடன் மக்கள் நாவிலே பயிலும் புதுமை யால் இளமை நலமும் தாங்கித் தமிழ் தழைக்கின்றதென்பதைப் பாரதியார் கண்டு மகிழ்கின்றார்.

இனி இங்ஙனம் மக்கள் வாழ்வுடன் கலந்து வாழ்கின்ற தமிழ்மொழி உலகம் உள்ளளவும் நிலவி மலரவேண்டும் என நாட்டார் வாழ்த்துகின்றார். தமிழ்மொழியில் அமைந்துள்ள செம்மைதான் அதன் நீண்டகால வாழ்வுக்குச் சிறந்த காரண மாகும். சங்கத்திலே ஆராய்ந்து செம்மைப்படுத்தியதினாலே செந்தமிழ் எனும் காரணப் பெயரையும் தமிழ் பெற்றது. "கூடலில் ஆய்ந்த ஒண்தீந்தமிழ்" என்னும் மணிவாசகர் மொழி இதனை வலியுறுத்துகின்றது.

*"செந்தமிழ்மான் வாழ்கவென்று*
*சென்று பந்தடித்துமே"*

என்ற அடியின் ஓசையிலே எழுகின்ற பெருமிதத்தையும் இன்பத்தையும் உணருங்கள். "பந்தடித்தல்" அல்லல் நீத்த உவகையால் நிகழும் விளையாட்டாகும். தமிழ்மொழி கோடி கோடி அல்லல்கள் வந்தாலும் அவற்றையெல்லாம் வென்று வாழக் கூடிய ஆற்றல் நிரம்பியதென்பதை நாட்டார் எமக்குக் கூறுகின்றார். மானின் அழகும் இளமையும் உள்ளத்தை அள்ளுதல் போலத் தமிழின் இனிமையும் இலக்கிய நலங் கனிந்த இளமையும் நாட்டாரின் உள்ளத்தை அள்ளிவிட்டன.

இனி எவ்வளவு சிறப்புக்களுடன் தமிழ்மொழி வாழ்ந்தாலும் அதன் புகழ் வெளிநாடெல்லாம் பரவ வேண்டும். தமிழ்நாட்டிலே மட்டும் தமிழ் வளர்ந்தால் போதாது. தமிழின் இலக்கியச் செல்வமும், அருட்பனுவல்களும் அப்பாலுக்கப்பாலாய்ச் சென்று ஆட்சிபெறவேண்டும். இதனை,

*சேணில் ஆணை சென்று*
*வாழ்க என்று பந்தடித்துமே*

என நாட்டார் பாடிப்பாடிக் கூத்தாடுகின்றார். தமிழ் ஆட்சி மொழியானால் அதன் ஆணை வெளி (சேண்) நாடெல்லாம் சென்று சிறக்கும். தமிழின் கலை நூல்களைப் பிறநாட்டறிஞர்களும்

விரும்பிக் கற்பார்கள். தமிழர்கள் ஒன்றுபட்டெழுந்தால் தமிழ் மொழி சேண் எலாம் தன் ஆணை செலுத்தி அரசாளும் திருநாளை விரைவில் காணலாம். நாட்டாரின் ஆர்வத்தை நிறைவேற்ற நாம் உழைக்க வேண்டும்.

*கொந்தலர்ந்த கோதைசூடு கொண்டலாட ஓடியே*
*முந்தளவில் மூதறிஞர் தந்தபுகழ் பாடியே*
*தந்தையோடு கந்தன்மேய சங்கம்வளர் பீடினாள்*
*செந்தமிழ்மான் வாழ்கவென்று சென்று பந்தடித்துமே*
*சேணிலாணை சென்றுவாழ்க வென்று பந்தடித்துமே*

என்று நாங்களும் நாட்டாருடன் சேர்ந்து கந்துகவரி பாடுவோம். பாடிச் செயல் புரிந்து ஆளும் மொழியாகத் தமிழை ஆக்குவோம்.

## விபுலாநந்தரின் வேண்டுதல்

உயர்திரு விபுலாநந்தஅடிகள் ஈழநாட்டு மட்டக் களப்பிலே உள்ள காரேறு என்னும் ஊரில் பிறந்தவர். ஆங்கிலத் திலும் தமிழிலும் பெரும் புலமை படைத்த ஆராய்ச்சியாளர். இளமையிலேயே துறவு பூண்டு, கலைத்தொண்டாற்றிய கலைஞர். இளங்கோவடிகள் சிலப்பதிகாரத்தை இயற்றித் தமிழ் அன்னையை வாழ்வித்தார். விபுலாநந்தஅடிகள், யாழ்நூலை இயற்றித் தமிழ் அன்னையை வாழ்வித்தார். அண்ணாமலைப் பல்கலைக்கழகத்திலும், இலங்கைப் பல்கலைக்கழகத்திலும் தமிழ்ப் பேராசிரியராக வீற்றிருந்து அறிவொளி பரப்பித் தமிழ் அறிஞர் உள்ளத்தை அள்ளிய சிறப்பு விபுலாநந்தஅடிகளுக்கே உரியதாகும். அவர் உலகப்பற்றைத் துறந்தும் தமிழ்ப்பற்றைத் துறவாமல் வாழ்ந்த தண்ணளியால், தமிழ்மொழி பெற்ற ஆக்கங்கள் பல. தமிழ்மொழியின் பரப்பையும், கலைச் செல்வத்தையும் ஆராய்ச்சிக் கண்கொண்டு நோக்கிய அடிகளார் தமிழைத் தெய்வமாக எண்ணிப் பாடுகின்றார்.

*கைக்கிளை ஈறாய்க் கட்டிய நரம்பில்*
*கலந்துநின் றின்னிசை எழுப்பி*
*மெய்க்கிளை நட்புப் பகையிணை தெரித்த*
*மெல்லியல் இணையடி பணிவாம்*
*புக்கிளை யாத புலமையின் ஊற்றாய்ப்*
*பொருந்தினர்க் காரமிழ் தாகி*
*எக்கிளை ஞரினும் மிக்கஅன் பளிக்கும்*
*இருந்தமிழ் அணங்கினை உவந்தே*

இந்தப் பாட்டிலே விபுலாநந்த அடிகள், தமிழ்மொழியின் இசைச் செல்வத்தையும் புலமைப் பேற்றையும் இனிமையையும் பாராட்டுகின்றார். முத்தமிழிலே இசைத்தமிழ் தமிழின் இனிமைப் பண்பின் ஊற்றிடமாக உள்ளது. யாழினிமையும் தமிழ் இனிமை யும் கலந்து சுரக்கின்ற இசையின்பம் மிக மேலானது. தமிழர்கள் யாழிசையுடன் கூட்டித் தமிழ் இன்பத்தை நுகர்ந்து நுகர்ந்து செழித்த செவியும், கனிந்த நெஞ்சும் வாய்ந்தவர்கள். மணிவாசகர் சங்கத்திலே ஆராய்ந்து செப்பஞ்செய்யப்பட்ட தமிழின்பமும், யாழினால் எழுப்புகின்ற ஏழிசை இன்பமும் உள்ளத்தை உருக்கும் இயல்புடையன என்று கூறுகின்றார். இதனை,

*சிறைவான் புனல்தில்லைச் சிற்றம் பலத்துமென் சிந்தையுள்ளும்*
*உறைவான் உயர்மதிற் கூடலின் ஆய்ந்தஒண் தீந்தமிழின்*
*துறைவாய் நுழைந்தனை யோஅன்றி ஏழிசைச் சூழல்புக்கோ*
*இறைவா தடவரைத்தோட் கென்கொலாம் புகுந் தெய்தியதே*

என வரும் செய்யுளால் அறிக. இதனால் தமிழிலே அமைந்த இசைநூல் ஆய்வும், யாழிசையின் இனிமையை உணர்ந்து பயன் கொண்ட தமிழ்மக்களின் கலை ஆர்வமும் தெளிவாகின்றன. யாழ் என்னும் கருவியின் இலக்கணங்களை நுட்பமாக ஆராய்ந்துணர்ந்த அடிகளார், அந்த யாழிலே நின்று எழுகின்ற ஓசையுடன் கலந்து கனியும் தமிழின்பத்தை எண்ணி எண்ணி மகிழ்கின்றார்.

*"கைக்கிளை ஈறாய்க் கட்டிய நரம்பில்*
*கலந்துநின் றின்னிசை எழுப்பி*
*மெய்க்கிளை நட்புப் பகையிணை தெரித்த*
*மெல்லியல் இணையடி பணிவாம்"*

என்ற தொடர்களால், யாழின் இலக்கணத்தையும், யாழிசையின் இன்பத்தையும் உணர்கின்றோம். இறைவனோடு கலந்து அருள் வாழ்வு வாழ்கின்ற அடியார்கள் இசைத் தமிழிலே மிகவும் ஈடுபாடுள்ளவர்களாக இருக்கின்றார்கள். நெஞ்சை உருக்கும் இனிமை வாய்ந்த இசையினால் இறைவனைப் பாடிப்பாடி இன்பம் அடைகின்றார்கள். இறைவனையே இசையின் வடிவமாகக் கண்டும்

இசையின் பயனாக நுகர்ந்தும் தாம் அடைந்த இன்பத்தைக் கூறி மகிழ்கின்ற சுந்தரரின் குரலைக் கேளுங்கள்.

*ஏழிசையாய் இசைப்பயனாய்*
*இன்னமுதாய் என்னுடைய*
*தோழனுமாய் யான்செய்யும்*
*துரிசுகளுக் குடனாகி*
*மாழைஒண்கண் பாவையைத்தந்*
*தாண்டானை மதியில்லா*
*ஏழையேன் பிரிந்திருக்கேன்*
*என்ஆரூர் இறைவனையே*

இதனால் இறைவனை இசை இன்பமாகவே காண்கின்ற பண்பை உணர்கின்றோம். உலகப் பற்றில் அழுந்தாமல் இறைவன் உண்மையை உணர்ந்து ஒளிபெற்ற விபுலாநந்த அடிகளார் யாழிசையை இறைவனின் அருள் வெள்ளமாக அள்ளிப் பருகி ஆனந்தப்படுகின்றார்.

இனி, இங்ஙனம் திருவருளின் பேறாகக் கொண்டு நுகர்கின்ற இசை, நல்ல யாழிலே நின்று, யாழ்நூல் வல்ல ஆசிரியனால் எழுப்பப்படவேண்டும். யாழிலே குற்றம் இருந்தாலும் யாழ்நூல் ஆசிரியனின் புலமையில் குறை இருந்தாலும் யாழிசையிலே இறையின்பம் தோன்றாது. இவற்றை எல்லாம் கருதிய விபுலாநந்த அடிகள் "நரம்பில் கலந்து நின்று, இன்னிசை எழுப்பி" எனக் கூறினார். இயல்பாகவே இனிமையும் இளமையும் பொருந்திய தமிழ்மொழி, யாழிசையுடன் கலந்து எழும்பொழுது மிகவும் மென்மை பெறும் என்பதை உணர்ந்த அடிகளார் "மெல்லியல் இணையடி பணிவாம்" எனப் பாராட்டுகின்றார்.

இங்ஙனம் நெஞ்சை உருக்கும் இசையின்பம் இருப்பதினால் மட்டும் தமிழ்மொழி வாழாது. என்றும் நிலை குலையாத புலமை வளமும், அடைந்தவரை ஆதரித்து வளர்க்கும் அரும் பண்பும் உடையதாய் விளங்குவதினாலேதான் இன்றும் தமிழ் மொழி வாழ்கின்றது. இதனை,

*"புக்கிளை யாத புலமையின் ஊற்றாய்ப்*
*பொருத்தினர்க் காரமிழ்தாகி"*

என்னும் தொடர்களால் அடிகள் அறிவிக்கின்றார். தமிழை ஆரமுது எனக்கூறிய கருத்து மிகப்பொருத்தமானது. தமிழாகிய ஆரமுதம் உயிரிலே கலந்து இனிக்கின்ற அமுதம். பிறப்புப் பிணிக்கு மருந்தாகிய அருட் பனுவல்களை அளித்து ஆக்கம் புரிகின்ற அமுதம் என்பதே அடிகளின் கருத்தாகும். "அன்பினில் விளைந்த ஆரமுதே" என வருகின்ற திருவாசகத் தொடருடன் "பொருந்தினர்க் காரமிழ்தாகி" என்னுந் தொடரை ஒப்பிட்டுக் காண்க. உலகம் உள்ளளவும் நிலைபெறக் கூடிய சிறந்த நூல்களைப் படைக்கின்ற புலமையின் ஊற்றாக நின்று தமிழ் வாழ்வதைக் கண்ட அடிகளார் மிக ஆராமையுடன் பாடுகின்றார்.

*"புக்கிளை யாத புலமையின் ஊற்றாய்"*

என்ற தொடரிலே எழுகின்ற ஓசை, வள்ளுவர் உள்ளத்திலே நின்று சுரந்த தமிழ்ப் புலமையின் ஊற்றை நினைவூட்டுகின்றது.

இனித் தமிழை உணர்ந்து நுகர நுகரச் சுரக்கின்ற இனிமை, ஏனைய இன்பங்களை எல்லாம் மறப்பிக்கின்றது. உற்றாரையும் பொருளையும் துறந்த அடிகளார் உள்ளத்திலே தமிழ்மொழி வாழ்ந்து பெரிய இன்பத்தைக் கொடுக்கின்றது. பெற்றாரிலும் மிக அன்பாகத் தமிழன்னை அடிகளாரை வளர்த்து விட்டாள். அடிகளாரை வளர்த்த அருந் தமிழ் அன்னையை

*"எக்கிளை ஞரினும் மிக்க அன்பளிக்கும்*
*இருந்தமிழ் அணங்கு"*

என அவர் போற்றுகின்றார். இந்தத் தொடர்களால் அடிகளார் எவ்வளவு ஆர்வத்துடனும் பெருமிதத்துடனும் தமிழ் அன்னையைத் தெய்வமாகத் தெளிந்து உள்ளம் செழிக்கின்றார் என்பதைக் காண்கின்றோம்.

*"எக்கிளை ஞரினும் மிக்க அன்பளிக்கும்*
*இருந்தமிழ் அணங்கு"*

என அடிகளார் கூறிய பொருளின் விளக்கம் போலப் பாரதிதாசன் தமிழைப் பாடுகின்றார்.

*பயிலுறும் அண்ணன் தம்பி - அக்கம்*
*பக்கத் துறவின் முறையார்*
*தயைமிக உடையாள் அன்னை - என்னைச்*
*சந்ததம் மறவாத் தந்தை*
*குயில்போற் பேசிடும் மனையாள் - அன்பைக்*
*கொட்டி வளர்க்கும் பிள்ளை*
*அயலவ ராகும் வண்ணம் - தமிழ் என்*
*அறிவினில் உறைதல் கண்டீர்*

எனவரும் பாரதிதாசன் குரலோடு, "எக்கிளைஞரினும் மிக்க அன்பளிக்கும் இருந்தமிழ் அணங்கு" எனவரும் அடிகளாரின் குரலும் கலந்து என்றுமில்லா இன்பத்தை அளிக்கின்றன.

# சோமசுந்தரபாரதியாரின் எழுச்சி

**நா**வலர் திரு. ச. சோமசுந்தரபாரதியார் அவர்கள் ஆராய்ச்சிப் புலமையும் அருந்தமிழ்ப் புலமையும் அமைந்தவர். தொல்காப்பியத்திற்கு நல்லுரை கண்டவர். 'சேர தாய முறை' என்னும் ஆராய்ச்சி நூலை எழுதி, அறிவொளி பரப்பிய அறிஞர். அவரின் ஆராய்ச்சித் திறன் மிகமிக நுட்பமாகவும், அகன்றும், ஆழ்ந்தும் வழக்கியல் அறிவோடு கலந்து, அளவை நூல் அமைதி பெற்று விளங்கும் மாண்புடையது. பிறர் எச்சில் படுத்தாத புதிய வழியில் சென்று, அவர் கண்ட ஆராய்ச்சி முடிவுகள் தமிழ்மொழியின் ஆற்றலையும் நிலைபேற்றையும் ஆயிரம் மடங்காகக் கூட்டிவிட்டன. அவருடைய பேச்சிலும் பாட்டிலும் உரைநடையிலும் நின்று அலைமோதுகின்ற பெருமிதச் சுவை தனிச் சிறப்பு வாய்ந்தது. தமிழ்மொழியின் ஆக்கம் கருதிப் பாரதியார் அவர்கள் ஆக்கிய கலைப் பணிகள் பல. தமிழ்த் தெய்வத்தைப் பல்லாண்டு பாடிப் பாரதியார் வாழ்த்துகின்றார்.

*மண்ணுலகில் மொழிகள்பல*
*மாண்டிட நாம்காண்போம்*
*வளமலிநூல் பலபடைத்தும்*
*வாழ்ந்தில அம்மொழிகள்*
*எண்ணரிய வயதுமுதுக்*
*குறைவறத்தால் முதியள்*
*எழிலிளமை வளமிறவாக்*
*கன்னி தமிழ்க்கடவுள்*

இந்தப் பாட்டிலே தமிழ்மொழியின் பழமையையும் என்றும் மாறாத இளமையையும் பாரதியார் பாராட்டுகின்றார். பல மொழிகள் வாழமுடியாமல் மாண்டுபோன வரலாற்றை மொழி வரலாற்று நூல்களால் அறிகின்றோம். மக்கள் நாவிலே தவழ்ந்து, அவர்களின் மனக்கருத்தை எளிதில் வெளிப்படுத்தமுடியாத மொழிகள், பேச்சு வழக்கில் நின்று விடைபெற்றுவிட்டன. உரத்தும் களைத்தும் கூறாமல் இயல்பாகவே எழுகின்ற அழுத்த உச்சரிப்புச் செம்மையும், இனிமையும் உடையதாய் நிலவுகின்ற தமிழ்மொழி பல பல நூற்றாண்டுகளாகியும் தன் இளமை மாறாமல் வாழ்கின்றது. காலங்கடந்து வாழக்கூடிய மொழி அமைப்புகள் யாவும் தமிழின் பண்புகளாக விளங்குகின்றன. சிறந்த கலைநூல்கள் நிரம்பி இருப்பதால் மட்டும் ஒரு மொழி பேச்சு வழக்கில் நின்று வாழமுடியாது. அந்தக் கலைநூல் களை மிக எளிதாக மக்கள் படித்தும், படித்தவற்றை முட்டின்றிப் பிறர்க்கு எடுத்துக் கூறியும் பயிலக்கூடிய மொழிச் செல்வம் வாய்ந்தனவாய் இருக்க வேண்டும். இலத்தீன், ஆரியம் எனும் மொழிகள் சிறந்த கலைநூல்களைப் பெற்றிருந்தும், மக்களின் இயற்கையோடு ஒட்டி அவர்கள் நாவில் எளிதாக உலாவிக் கருத்தை வெளியிடக்கூடிய எளிமை இல்லாமையால் பேச்சு வழக்கில் நின்று வாழமுடியாமல் மாண்டுவிட்டன. மக்கள், விலங்குகள், மரங்கள் முதலான உயிரினங்களும் தாம் வாழ்கின்ற சூழ்நிலைக்கேற்பத் தம்மை மாற்றிக் கொள்ளாவிட்டால் விரைவில் அழிந்துபோவதை நாம் காண்கின்றோம். மக்களால் பேசப்படு கின்ற மொழிகளும் மக்களின் இயற்கை நிலைமையோடு ஒட்டி இயங்கும் தன்மையில் நின்றும் வேறுபட்டால் காலப்போக்கில் மக்கள் ஆதரவைப் பெறாமல் அழிந்துபோகின்றன. தமிழ்மொழி மக்களின் இயற்கையோடு கலந்து வாழும் தன்மை நிரம்பிய படியால் இன்றும் இளமையுடன் வாழ்கின்றது. இவற்றையெல்லாம் ஆராய்ந்து தெளிந்த பாரதியார்,

*"மண்ணுலகில் மொழிகள்பல*
*மாண்டிட நாம்காண்போம்*
*வனமலிநூல் பலபடைத்தும்*
*வாழ்ந்தில அம்மொழிகள்'*

எனக் கூறுகின்றார்.

இனி இங்ஙனம் அரசியல் ஆதரவும் கலை நூல்களும் பெற்ற மொழிகள் பல இயற்கைநெறி கடந்து செயற்கை வழிப்பட்ட தன்மையால் செத்துப்போயின. நம் தமிழ்மொழி ஆட்சிப்பீடம் ஏறாமல் பிறநாட்டாரின் ஆட்சியின் கீழ் நின்றபோதும், தன் மொழியாக்கச் செம்மையாலும், கலைச் செல்வத்தாலும் இளமை மாறாமல் வாழ்கின்றது என்பதை எண்ண எண்ணப் பாரதியாரின் உள்ளத்திலே உவகை பொங்குகின்றது.

*"எண்ணரிய வயதுமுதுக்*
*குறைவறத்தால் முதியள்*
*எழிலிளமை வளமிறவாக்*
*கன்னி தமிழ்க்கடவுள்"*

என்ற அடிகளிலே தமிழின் தெய்வப் பண்பில் கலந்து செழித்த பாரதியாரின் செம்மாப்பைக் காண்கின்றோம். தமிழ் அன்னையின் வயது அளவிட முடியாத கால எல்லையைக் கடந்து விட்டது. அவளின் அறிவு மிகச் சிறந்தது. அறப்பண்பை விட்டு விலகாத ஆற்றலில் நிரம்பியவள். காலத்தால் மிகவும் முதியவள். இங்ஙனம் காலம் பல கண்ட தமிழ் அன்னை, சாலவும் இளமை நலம் உடையவளாய் எழில் கனிந்து நிற்கின்றாள். எனவே, ஆண்டிலும் அறிவிலும் முதியவளாய், புதிய புதிய எழிலும் இளமையும் பூத்துப் பொலிதலால் கன்னியாய்த் தமிழ்க் கடவுள் காட்சி அளிக்கின்றாள்.

*"எழிலிளமை வளம்இறவாக்*
*கன்னி தமிழ்க்கடவுள்"*

என்ற தொடரிலே தமிழின் தெய்வக்கோலத்தைச் சொல்லோவி யமாகத் தீட்டிப் பாரதியார் எமக்குக் காட்டுகின்றார். எழில், தமிழ் மொழியிலே உள்ள மொழிச் செழுமையைக் காட்டுகின்றது. இளமை, தமிழ்மொழியிலே உள்ள இயற்கை நலத்தைக் காட்டுகின்றது. வளம், தமிழ்மொழியிலே உள்ள அருட் பனுவல் களையும் இலக்கியங்களையும் கலை நூல்களையும் காட்டு கின்றது. கடவுள் தோற்றமும் முடிவும் இல்லாதவராய் என்றும் ஒரே தன்மை உடையவராக நின்று உலகுயிர்களைக் காப்பாற்று கின்றார். தமிழ்மொழியும் தோற்றம் அறியப்படாததாய் இயற்கை யிலே கருத்தாங்கி, இறந்துபடாமல் பேச்சுவழக்கில் நிலை பெற்றுப் பல அறநூல்களையும் அருள் நூல்களையும் இலக்கிய நூல்களையும் கலை நூல்களையும் வழங்கி மக்களை வாழ்விக்கின்றது.

*"கன்னி தமிழ்க் கடவுள்"*

என்ற தொடரைப் படித்துப் பாருங்கள். இளமையும், எழிலும் கனிந்து உலாவுதலால் கன்னியாகவும், காலங்கடந்து நிலைபெறுதலால் கடவுளாகவும் தமிழ்மொழி விளங்குகின்றது.

*முன்னைப் பழம் பொருள்போல்*
*முன்தோன்றி நின்றுலவும்*
*அன்னையே செந்தமிழே*
*அடியோம் வணங்குகின்றோம்*
*பண்டை மொழிகள்*
*பலசாவ நீவாழக்*
*கண்டோம் தமிழே*
*களித்தோம் வணங்குகின்றோம்*

என வரும் கோவிந்த மூப்பனாரின் குரலுடன் பாரதியாரின் குரலை ஒப்பிட்டுக் காண்க.

இங்ஙனம் தமிழின் தெய்வப் பண்புகளைப் பாடி மகிழ்ந்த பாரதியார், தமிழ்மக்கள் தமிழ்மொழிக்குச் செய்யவேண்டிய ஆக்கப்பணிகளையும் எடுத்துக்கூறுகின்றார்.

*நல்லதமிழ் நங்கைவளம்*
*நாடுதும் நாம்நாடி*
*நானிலத்து மேன்மொழிகள்*
*நல்குபல நலமும்*
*எல்லையறும் எழிலிளையாட்*
*கணிந்து மகிழ்ந்தேத்தி*
*என்றும் இசை வளர்க்குவம்*
*பல்லாண்டு நிதம்பாடி*

தமிழின் ஆக்கங் கருதிப் புதிய கலைநூல்கள் பல தமிழில் இயற்ற வேண்டும். இன்றைய உலகில் மேல்நிலை பெற்றோங்கும் உயர்தனிச் செம்மொழிகள் படைத்திருக்கின்ற பல கலைச் செல்வங்களை தமிழ்மொழியும் பெற்று நலங்கனியவேண்டும். தமிழ் மக்களாகிய நாங்கள் புதிய கலைகளைத் தமிழ் அன்னைக்குப் புனைந்து அவளின் இளமை எழுச்சியைப் புதுக்க வேண்டும். எங்கும் தமிழ் அன்னையின் இசை பரவவேண்டும் என்றெல்லாம் பாரதியார் எம்மை ஊக்குகின்றார்.

*"எல்லையறும் எழிலிளையாட்*
*கணிந்து மகிழ்ந்தேத்தி*
*என்றும்இசை வளர்க்குவம்*
*பல்லாண்டு நிதம்பாடி"*

என்ற அடிகளில் பாரதியாரின் ஆர்வத்தைப் பார்க்கின்றோம். தமிழ் இன்னும் பல ஊழி நிலைபெற வேண்டுமானால் இன்றைய தமிழ்மக்கள் தமிழன்னையைப் புதிய கலை மாலைகளால் அணிசெய்ய வேண்டும். அன்னையைக் காலத்தோடு ஒட்டி வளம்படுத்திய பின்புதான் நாம் பல்லாண்டு பாடவேண்டும். தாய்

பசியால் வருந்த அந்த வருத்தத்தைப் போக்க எண்ணாமல் அன்பு மொழி கூறுவதால் பயன் ஒன்றும் இல்லை.

தமிழின் பழம் பெருமைகளைப் பேசிப் பேசிப் பல்லாண்டு பாடுகின்ற பரம்பரைப் பழக்கம் ஒழிய வேண்டும். தமிழ்மொழி இன்னும் ஆயிரம் ஊழி வாழக்கூடிய வழிகளை ஆராய்ந்து தமிழ் மக்கள் ஆர்வத்துடன் முயலவேண்டுமென்பதே பாரதியாரின் விருப்பம். பாரதியாரின் விருப்பத்தை ஆதரித்துப் பணிபுரிய இன்றைய தமிழ்மக்கள் விழித்துவிட்டார்கள். இனிவரும் உலகில் தமிழ் அன்னையின் ஆட்சிக்கொடி உலகமேடையில் உயர்ந்து பறக்கப்போகின்ற நன்னாளைத் தமிழ்மக்கள் வரவேற்கின்றார்கள்.

# இராகவையங்காரின் அன்பு

மகாவித்துவான் ரா. இராகவையங்கார் அவர்கள் பொன்மால் இமயம் போல எல்லாராலும் அறியப்பட்ட தமிழ்ப் பேரறிஞர். நான்காம் மதுரைத் தமிழ்ச் சங்கத்தில் வீற்றிருந்து தமிழ் ஆராய்ந்த நல்லிசைப் புலவர்களில் தலைமை பெற்றோங்கிய தகைமையாளர். மதுரைத் தமிழ்ச் சங்கத்தினரால் வெளியிடப்பட்ட "செந்தமிழ்" என்னும் திங்கள் வெளியீட்டின் ஆசிரியராக இருந்து, திரு. ஐயங்கார் அவர்கள் ஆற்றிய பணிகள் பல. தமிழ் நாட்டில் வாழ்ந்த தமிழ் அறிஞர்களில் தலைசிறந்த ஆராய்ச்சி யாளருடைய கட்டுரைகள் செந்தமிழில் இடம் பெற்றன. மறைத் திரு மறைமலையடிகளார், அரசஞ்சண்முகனார், திரு. வி. கனக சபைப்பிள்ளை, திரு. மு. இராகவையங்கார், திரு. அ. ந. கோபிநாதராவ், பின்னத்தூர் திரு. அ. நாராயணசாமிஐயர், திரு. அ. குமாரசாமிப்புலவர் எனும் தமிழ் அறிஞர்கள் செந்தமிழில் எழுதிய கட்டுரைகள் இன்றும் தமிழ்மொழியின் கலைச் செல்வ மாக நின்று விளங்குகின்றன. திரு. ஐயங்கார் அவர்கள் செந்தமிழில் தொடர்ந்து எழுதிவந்த இலக்கிய ஆராய்ச்சியும் சரித்திர ஆராய்ச்சியும் தமிழ்மொழிக்குப் புதிய வாழ்வைக் கொடுத்தன. திரு. ஐயங்கார் அவர்களின் ஆழ்ந்த கல்வியும், நுட்பம் நிரம்பிய ஆராய்ச்சித் திறனும் பொருள்களை ஒழுங்குபடப் பாகுபாடுசெய்து எடுத்து விளக்குகின்ற பேராற்றலும் அவரின் புலமையை வளம்படுத்தின. அவர் அண்ணாமலைப் பல்கலைக்கழகத்திலே தமிழ் ஆராய்ச்சித்துறைத் தலைவராக விளங்கிய காலத்தில் எழுதிய குறுந்தொகையுரை மிகச் சிறந்ததாகும். பல ஏடுகளின் துணை கொண்டு திருத்தமான பாடங்களை

ஆராய்ந்து எழுதியுள்ளார். இவ்வுரை இன்னும் அச்சிடப் பெற்று வெளிவராதிருப்பது வருந்தத்தக்கதாகும். திரு. ஐயங்கார் அவர்கள் இயற்றிய 'பாரிகாதை' எனும் செய்யுள் நூல் மிகச்சிறந்தது. இந்நூல் அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் அரங்கேற்றப் பட்டது. தமிழ்நாட்டறிஞர் பலர் அரங்கேற்றவையில் கூடி இருந்து தங்கள் உடன்பாட்டையும் மதிப்பையும் தெரிவித்தார்கள். செட்டி நாட்டு அரசர் சேர். அண்ணாமலைச் செட்டியார் அவர்கள் சிறந்த பரிசிலும் வழங்கினார்கள்.

இங்ஙனம் பெரும்புலமையும் மதிப்பும் வாய்ந்த திரு. ஐயங்கார் அவர்கள், தமிழ் அன்னையை வணங்கிப் பாடுகின்றார்.

*அன்பகம் மேவினை நன்புறம் தூயாய்*
*ஆரும் வியப்புறும் வீரம் நிறைந்தாய்*
*என்பும் உருக்கும் இசைத் திறங்கண்டாய்*
*எவர்க்கும் ஒத்த உயர்நெறி விண்டாய்*
*முன்பொரு மூவரைப் பெற்ற ரசாக்கி*
*மும்முர செங்கும் முழங்க வளர்த்தாய்*
*இன்புரு வாயினை இன்தமிழ்த் தாய்நீ*
*ஈண்டமர்ந் தன்பர்க் கினிதருள் வாயே*

இந்தப் பாட்டிலே தமிழ்மொழியின் தன்மைகள் யாவும் கூறப்படுகின்றன. அன்பு தழுவிய அக ஒழுக்கமாகவும், அறம் தழுவிய புற ஒழுக்கமாகவும் மக்கள் வாழ்வை முறைப்படுத்தி ஆராயும் சிறப்பு தமிழ்மொழிக்கே உரியதாகும். அக ஒழுக்கத்தில் கருத்து ஒருமித்த காதலரின் தூய இன்பநுகர்வும், புற ஒழுக்கத்தில் அறத்தையும் பொருளையும் பற்றிய பொதுவாழ்வும் ஆராயப்படுகின்றன. இங்ஙனம் மக்கள் வாழ்வை அகம் புறம் என இரண்டு பிரிவுகளாக அமைத்துத் தொல்காப்பியர் இலக்கணம் கூறுகின்றார். தொல்காப்பியர் காலத்திற்குப் பல நூற்றாண்டுகளின் முன்பே தமிழகத்தில் மக்கள் வாழ்வைப் பற்றிய உயர்ந்த கொள்கைகள் நிலைபெற்றுவிட்டன. கருத்தொரு

மித்த காதல் வாழ்வுதான் அறத்தையும் பொருளையும் பயன் கொண்டு, இறைவன் திருவருள் பேற்றிற்கும் வழிகாட்டும் என்ற முடிவைத் தமிழ்மக்கள் உணர்ந்து வாழ்ந்தார்கள். இரண்டு தலைகளை உடைய ஓர் பறவையைப் போலத் தலைவனும் தலைவியும் ஒருவருயிரில் ஒருவருயிர் கலந்து பிரிவின்றி நுகரும் இன்பமே பேரின்ப நெறியை அடைதற்கும் உதவிபுரிகின்றது. இங்ஙனம் கருத்தொன்றுபட்ட காதல் வாழ்வின் இரண்டு கண்களாக அறமும், பொருளும் நின்று ஆட்சிபுரிகின்றன.

*அன்பும் அறனும் உடைத்தாயின் இல்வாழ்க்கை*
*பண்பும் பயனும் அது*

என்பது திருக்குறள். தூய காதல் நெறியிலே நின்று, இறைவன் திருவருளைப் பெறுகின்ற நிலையைத் திருநாவுக்கரசடிகள் மிகத் தெளிவாக விளக்குகின்றார்.

*முன்னம் அவனுடைய நாமங் கேட்டாள்*
*மூர்த்தி அவனிருக்கும் வண்ணங் கேட்டாள்*
*பின்னை அவனுடைய ஆரூர் கேட்டாள்*
*பெயர்த்தும் அவனுக்கே பிச்சி ஆனாள்*
*அன்னையையும் அத்தனையும் அன்றே நீத்தாள்*
*அகன்றாள் அகலிடத்தார் ஆசாரத்தைத்*
*தன்னை மறந்தாள் தன்னாமங் கெட்டாள்*
*தலைப்பட்டாள் நங்கை தலைவன் தாளே*

இதில், உயிர் படிப்படியாக உலகப்பற்றை விட்டு இறைவனுடன் ஒன்றுபடுகின்ற நிலையை அடிகளார் அறிவிக் கின்றார். ஓர் இளம் பெண் தன் காதலனிடம் வைத்த அன்பினால் தாய், தந்தை, உற்றார், அயலார், ஊரார் என்போரைப் படிப்படி யாக மறந்து ஈற்றில் தன்னைத் தன் காதலனுக்கே ஒப்படைத்து, அவனுடன் சென்றுவிடுகின்றாள். இந்தக் காதல் நெறியைக் கடவுளின் திருவடிப் பேற்றை அடைவிக்கும் தூய நெறியாகத் தமிழ்மக்கள் கொண்டொழுகிய வரலாற்றைத் தொல்காப்பியரும்

மாணிக்கவாசகரும் மிகத் தெளிவாகக் கூறுகின்றார்கள். இவற்றை யெல்லாம் எண்ணிய திரு. ஐயங்கார் அவர்கள்,

*"அன்பகம் மேவினை*
*நன்புறம் தூயாய்"*

எனத் தமிழ் அன்னையைப் பாராட்டுகின்றார். அக ஒழுக்கமும் புற ஒழுக்கமும் வழுவின்றி ஆராயப்பட்ட தூய இலக்கணப் பெருநூலை உடைய தமிழன்னையின் மேம்பாட்டை ஐயங்கார் அவர்கள் எண்ணி எண்ணி இன்பம் அடைகின்றார்.

இனி வீரத்திற்கும் தொல்காப்பியனார் இலக்கணங் கூறு கின்றார். அறத்தைவிட்டு விலகாத வீரத்தை வாகைத்திணையில் தொல்காப்பியர் ஆராய்கின்றார். இன்றைய ஆராய்ச்சி அறிஞர் களும் பாராட்டத்தக்க முறையில் போரொழுங்குகளைப் புறத் திணையில் தொல்காப்பியர் போற்றியுரைக்கின்றார். உயிரைப் பொருளாக மதியாமல் அறத்தின் வழிநின்று மானத்துக்காகப் போர் ஆற்றி மாள்கின்ற வீரர் பண்புகளையெல்லாம் தும்பைத் திணையில் தொல்காப்பியர் தெளிவாகச் சொல்கின்றார். இங்ஙனம் அறத்தின் அடிப்படையிலே நின்று செயற்படும் வீரத்தை ஐயங்கார் அவர்கள் மிக வியப்புடனும் பெருமிதத்துடனும் எமக்கு விளக்குகின்றார்.

*"ஆரும் வியப்புறும்*
*வீரம் நிறைந்தாய்"*

என்ற தொடரில் எழுகின்ற ஓசை மிடுக்கும் பொருள் நிலையும் ஐயங்கார் அவர்களின் அழுத்தம் திருத்தமான ஆராய்வுத் திறனைக் காட்டுகின்றன.

இனித் தமிழிலே இயல்பாக அமைந்துள்ள இன்னோசை யின்பத்துடன் அதன் இசைச் செல்வமும் கலந்து அளிக்கின்ற இன்பத்தை நுகர்ந்து நுகர்ந்து ஐயங்கார் அவர்கள் அப்படியே ஆவி உருகிவிட்டார்.

*"என்பும் உருக்கும்*
*இசைத்திறங் கண்டாய்"*

என்ற தொடரில் ஐயங்கார் எவ்வளவு ஆர்வமுடன் தமிழ் இசையை ஆதரிக்கின்றார் என்பதை உணர்கின்றோம். தமிழின் உயர் நெறியைத் திருக்குறளும் திருவாசகமும் இன்றைய உலகில் நிலைநாட்டி விட்டன. அறிவுக் கொடையாகத் திருக்குறளையும் அன்புக்கொடையாகத் திருவாசகத்தையும் உலகிற்குக் கொடுத்த பெருமை தமிழ்மொழியின் சிறப்பை மலர்த்திவிட்டது.

*"எவர்க்கும் ஒத்த*
*உயர்நெறி விண்டாய்"*

என்ற தொடரிலே அமைந்துள்ள பெருமிதச்சுவை எம்மையும் எழுச்சிப்படுத்துகின்றது.

இங்ஙனம் அகம்புற அமைப்பும் இசைத்திறனும் எல்லோரும் வரவேற்கக்கூடிய உயர்ந்த கொள்கைகளையும் படைத்த நூல்கள் இருந்தால் மட்டும் தமிழ்மொழி வளர்ந்திருக்க மாட்டாது. தமிழகத்தைத் தமிழ் மன்னர்கள் ஆட்சி செய்த தினால் ஏற்பட்ட தமிழார்வம்தான் தமிழை வளர்த்தது. முடியுடை மூவேந்தர்களாகிய சேர, சோழ, பாண்டியர்களின் கொடி நிழலிலே நின்று தமிழகம் செழித்தபோது தமிழ் மொழியும் பேராற்றலுடன் பொலிந்தது. பாண்டியன் சங்கம் அமைத்துத் தமிழை ஆராய்ந்தான். தமிழகமெங்கும் வெற்றி முரசும் கொடை முரசும் நீதி முரசும் ஒலித்தன.

*"முன்பொரு மூவரைப் பெற்ற ரசாக்கி*
*மும்முர செங்கும் முழங்க வளர்த்தாய்"*

என்ற அடிகளால் ஐயங்கார் அவர்கள் தமிழ்மொழி முடி யுடை மூவேந்தர்களால் போற்றப்பெற்ற சிறப்பை மொழிந்து மகிழ்கின்றார். இன்று ஆட்சிப்பீடம் ஏறாமல் அடக்கி ஒடுக்கப்படு கின்ற தமிழ்மொழி முன்னெல்லாம் ஆட்சிப்பீடத்தில் அமர்ந்து அறத்தையும், ஆண்மையையும், ஈகையையும் வளர்த்தது. தமிழ்

அன்னையை ஆட்சிப்பீடத்தில் மீண்டும் ஏற்ற வேண்டும் என்ற ஆர்வம் ஐயங்காரின் உள்ளத்திலே பொங்குகின்றது.

*"முன்பொரு மூவரைப் பெற்ற ரசாக்கி*
*மும்முர செங்கும் முழங்க வளர்த்தாய்"*

என்ற அடிகளைப் படிக்குந்தோறும் எமதுள்ளத்திலும் தமிழன் னையை இனி ஆட்சிப்பீடம் ஏற்ற வேண்டுமென்ற துடிப்பும் மானமும் தோன்றுகின்றன. இனித் தமிழ்மொழியின் இன்புரு வத்தை எண்ணி ஐயங்கார் அவர்கள் எழுப்புகின்ற ஆர்வக் குரல் தமிழ்மக்களின் நெஞ்சை உருக்கக் கூடியது.

*"இன்புரு வாயினை*
*இன்தமிழ்த் தாய் நீ*
*ஈண்டமர்ந் தன்பர்க்*
*கினிதருள் வாயே"*

என்ற அடிகளிலே ஐயங்கார் அவர்களின் உயிர் உலாவித் திரிகின்றது. இன்பமே உருவமாகத் தமிழன்னை விளங்குகின்றாள். தமிழ்மொழியின் இலக்கியச் செல்வத்தை நுகர்ந்து உள்ளம் கனிந்த ஐயங்கார் அவர்கள் தமிழ்மொழியின் இனிமையைச் சொல்லியும், உணர்ந்தும், துய்த்தும் எல்லையில்லா இன்பம் அடைகின்றார்.

"இன்புருவாயினை இன் தமிழ்த் தாய் நீ" என்ற குரலிலே எவ்வளவு உவகையும் இறுமாப்பும் அமைந்து நின்று அலை எறிகின்றதென்பதை உணருங்கள்.

*"இன்பமே என்னுடை அன்பே"*

என்ற திருவாசகத் தொடருடன் "இன்புருவாயினை இன் தமிழ்த்தாய் நீ" என்ற தொடரையும் சேர்த்துப் படியுங்கள். மணிவாசகரும் ஐயங்காரும் தாம் பெற்ற இன்பத்தின் பயனை எமக்கும் உணர்த்தி உய்விக்க எவ்வளவு பாடுபடுகின்றார்கள் என்பதையும் பாருங்கள். தமிழ்மொழி இன்பமே வடிவமாக விளங்கி இன்னும் பல ஊழிக்காலம் உலகில் வாழ வேண்டும் என்பதே

ஐயங்கார் அவர்களின் எண்ணமாகும். காலங்கடந்து வாழக்கூடிய கலைச் செல்வத்தையும் இலக்கியங்களையும் புதிது புதிதாகப் படைத்துத் தமிழ்மொழியை வளர்த்தால் தமிழ்மொழி என்றென்றும் இளமையுடன் இறவாமல் வாழும் என்பதையும் ஐயங்கார் அவர்கள் எமக்கு நினைவூட்டுகின்றார்.

*"ஈண்டு அமர்ந்து அன்பர்க்கு*
*இனிது அருள்வாயே"*

எனத் தமிழ்த் தெய்வத்தை வேண்டுகின்றார். இந்த உலகத்தில் நிலவக்கூடிய ஆக்கங்களைத் தமிழர்கள் தமிழ் மொழிக்கு ஆற்ற வேண்டும். "ஈண்டு அமர்ந்து" என்ற தொடரில் இதனை வற்புறுத்திக் கூறுகின்றார். தமிழ் அன்னை தன்னைப் பேணிக் கற்கின்ற புலவர்க்கு வேண்டிய அறிவுச் செல்வத்தை அளித்து ஆக்குவாள் என்பதையும் ஐயங்கார் அறிவிக்கின்றார். தான் தமிழன்னையிடம் பெற்ற அருளைப் பிறர்க்கும் அவள் வழங்கி வாழ்விக்க வேண்டுமென்பதே ஐயங்கார் அவர்களின் விருப்பம். அவர் தமிழ் அன்னையை வணங்கி வேண்டுகின்ற குரலைக் கேளுங்கள்.

*"இன்புரு வாயினை*
*இன்தமிழ்த் தாய்நீ*
*ஈண்டமர்ந் தன்பர்க்கு*
*இனிதருள் வாயே."*

ஐயங்கார் அவர்களின் அன்புக் குரலுடன் கலந்து நாமும் தமிழன்னையை வேண்டுவோம்.

# மறைமலை அடிகளின் வழிபாடு

உயர்திரு மறைமலை அடிகளார் அவர்கள் சிறந்த தமிழ்ப் பேரறிஞர். உள் ஒளியும் ஆராய்ச்சிப் புலமையும் நிறைந்தவர். இன்று தமிழகத்திலே நிலவுகின்ற மறுமலர்ச்சியின் தந்தையாக நின்று வழிகாட்டிய பெருமை மறைமலை அடிகளார் ஒருவருக்கே உரியதாகும். தமிழர் நாகரிகம் தனிப்பட்ட சிறப்புடையதென்பதை வெளிப்படுத்தித் தமிழர் பெருமையை நிலைநாட்டுதற்காக அடிகளார் ஆற்றிய ஆராய்ச்சிப் பெரும் போர்களின் பயனை இன்று நாங்கள் உணர்கின்றோம். ஆரியர் நாகரிகமே தமிழ் நாகரிகத்தின் பிறப்பிடம் என்ற கொள்கையையே வேரோடு வீழ்த்தி வெற்றி கண்ட பெருவீரனாக அடிகளார் விளங்குகின்றார். 'பண்டைத் தமிழரும் ஆரியரும்' என்ற ஆராய்ச்சி நூலால் அடிகளாரின் திறமையை அறியலாம். ஆங்கிலப் பெரும் புலவர்களின் போக்கைத் தழுவித் தமிழிலே முதன் முதலாக இலக்கியத் திறனாய்வுக் கலையைக் கையாண்டு நூல்கள் எழுதிய சிறப்பும் அடிகளாரையே சாரும். 'பட்டினப்பாலை ஆராய்ச்சியுரை,' 'முல்லைப்பாட்டு ஆராய்ச்சியுரை' என்ற இரு ஆராய்ச்சிகளாலும் தமிழ் இலக்கியச் சிறப்பை மேம்படுத்தித் தமிழ்ப்புலவர் உலகிலும் புதிய விழிப்பைத் தோற்றுவித்தார். தமிழ்மொழியிலே அளவுகடந்து வடசொற்களைப் புகுத்திப் பேசியும் எழுதியும் வருகின்ற பழக்கம் பெருகுவதைக்கண்டு, அதனைத் தடுக்க அடிகளார் ஆற்றிய தனித்தமிழ்ப் பணியினால் தமிழ்மொழி தழைத்தது. வழக்கிலே உள்ள நல்ல தமிழ்ச் சொற்களைப் புறக்கணித்து, அவற்றிற்குப் பதிலாக வடசொற் களைப் புகுத்திப் பேசியும் எழுதியும் வருகின்ற செயலை அடிகளார் மிகமிக வெறுத்தார். தண்ணீர் என்னும் தமிழ்ச் சொல் இருக்க ஜலம் என்னும் வடசொல்லை ஏன் கூற

வேண்டும் என்ற உணர்ச்சி அடிகளாரின் உள்ளத்திலே எழுந்தது. அடிகளார் காலத்திலே வாழ்ந்த தமிழ் அறிஞர்களில் பலர் தமிழ்ச் சொற்களால் கூறுவதிலும் வடசொற்களால் கூறுவதே மதிப்புக்குரிய செயல் என்றும் கருதினார்கள். சோறு என்று தமிழ்ச் சொல்லால் கூறுவதிலும் சாதம் என்னும் வடசொல் லாற் கூறுவதை இன்றும் சிலர் மதிப்பென்று கருதுகின்றார்கள். இங்ஙனம் தமிழ்ச்சொற்களை வழக்கொழிய விட்டால் காலப்போக்கில் தமிழ்மொழியும் சிதைந்து போகும் என்ற உண்மையை அடிகளார் எடுத்து விளக்கினார். அடிகளாரின் தனித்தமிழ் இயக்கத்தை அன்று இகழ்ந்து எதிர்த்த பலரும், இன்று போற்றுகின்றார்கள். ஒரு பொருளைக் குறிக்கும் சொல் தமிழிலே இல்லாவிட்டால் அதற்குப் பதிலாகப் பிறமொழி யிலே உள்ள சொல்லை மொழிபெயர்த்துக் கொள்ளலாம். அல்லது, அச்சொல்லையே தமிழ்மொழியின் ஓசைக்கேற்பத் திரித்து வழங்கலாம். இவற்றைத் தொல்காப்பியரும் ஒப்புக் கொள்கின்றார். தமிழிலே ஒரு பொருளைக் குறித்து வழங்குகின்ற சொல்லை நீக்கி, அந்தச் சொல்லுக்குப் பதிலாகப் பிறமொழிச் சொல் ஒன்றைப் புகுத்தி, எழுதுவதும் பேசுவதும் தமிழ்க் கொலையாகும் என்பதே அடிகளாரின் கொள்கையாகும். இங்ஙனம் தமிழர் நாகரிகத்தையும் தமிழ்மொழியையும் தமிழ் இலக்கியங்களையும் பாதுகாத்த அடிகளார் தமிழ்மொழியின் சிறப்பைப் பாடுகின்றார்.

*செழுந்தமி ழென்னும்*
*கொழுந்தமிழ்க் குழவியை*
*மன்றினுட் குனிக்கும்*
*கொன்றையஞ் சடையோன்*
*தெறுவேல் ஏந்திய*
*அறுமுகற் கருள*
*ஆங்கவன் இனிதெழுந்*
*தேற்றுப் பாங்குறக்*
*குறங்கினில் இரீஇ*
*வெரிந் புறந்தைவந்து*
*இயல்வகை என்னும்*

பயில்பால் ஊட்டிச்
சின்னாள் வளர்த்த
பின்னர் மன்னிய
வெள்ளியம் பலத்துள்
துன்னிய பெருமான்
பீடுற அமர்ந்த
கூடன்மா நகரில்
மெய்பெற இருந்த
தெய்வப் புலமைப்
பெருமதிப் புலவோர்க்
குரிமையின் உதவினன்
அவரும்
உளம்துளும் புவகை
வளம்பெற ஏற்றே
அகம்புறம் என்னும்
தொகுகலன் பூட்டி
நூலெனும் ஆடையும்
வாலரைக் கொளீஇச்
சொற்சுவை பொருட்சுவை
கனிந்த பற்பல
பாவுணா நாடொறும்
பல்வே றூட்டிச்
சங்கம் என்னும்
பொங்குபூந் தடத்தினும்
ஆலவாய் என்னும்
கோலமார் காவினும்
வடமொழி யென்னும்
மடங்கெழு தோழியொடும்
உடம்படுத் தொருங்கு
விடுப்பக் குடம்புரை
கொங்கைப் பொறைகெழு
கொழுந்தமிழ் மங்கை
ஆனா வேட்கையின்

*ஆடி மேனாள்*
*தென்னா டதனில்*
*மன்னி யமர்ந்தனள்*
*கவின்மிகு திருமகள்*
*நறும்பொதி யவிழ்க்கும்*
*செழுந்தா மரையின் மேவி*
*எழுந்தினி தமர்ந்த*
*இயல்பினா லெனவே*

இந்தப் பாட்டிலே தமிழ்மொழியின் கடவுள் தன்மையும் தொன்மையும் மேன்மையும் மொழி ஆக்கச் செம்மையும் கூறப்படுகின்றன. சங்கச் சான்றோரின் செய்யுள் போன்ற ஓசையும் பொருட் கருவும் நிரம்பிய அடிகளாரின் செய்யுள் நடையிலே அமைந்துள்ள பெருமிதச் சுவை எல்லை இல்லாத இன்பத்தை அளிக்கின்றது. தமிழ்மொழி முழுமுதல் இறைவனாகிய சிவ பெருமானால் தோற்றுவிக்கப்பட்டதென்பதை அடிகளார் அழுத்தம் திருத்தமாகக் கூறுகின்றார். மொழிநூற் புலமை கைவந்த அடிகளார் இறைவனே தமிழைத் தோற்றுவித்தார் எனக் கூறுகின்ற கருத்து ஆராயத்தக்கதாகும். மக்கள் நாவிலே தவழ்ந்து இயல்பாகவே தோன்றிய தமிழ்மொழி இறைவன் திருவருளால் இடையூறுகளை எல்லாம் கடந்து வளர்ந்து வளம்படைத்ததென்பதையே அடிகளார் அறிவிக்கின்றார். தமிழ் மக்கள், மொழி பேசப்பயின்ற காலந்தொட்டே தமது மொழியை இறைவனுடன் தொடர்புபடுத்திப் பாராட்டுகின்ற பரம்பரைப் பண்புள்ளவர்கள். இறைவனே தமக்கு மொழி பேசும் ஆற்றலை அளித்தார் என்ற ஈடுபாடும் நம்பிக்கையும் தமிழ்மக்களிடத்திலே அமைந்துள்ளன.

*"தண்ணார் தமிழளிக்கும்*
*தண்பாண்டி நாட்டானை"*

என வருகின்ற திருவாசகத்தை நோக்குக. இறைவன் தமிழ்மொழி என்னும் குழந்தையை முருகப் பெருமானிடம் கொடுத்தார் என அடிகளார் கூறுகின்ற வரலாறு மிக நுட்பமானது.

*"செழுந்தமிழ் என்னும்*
*கொழுந்தமிழ்க் குழவியை*
*மன்றினிற் குனிக்கும்*
*கொன்றையஞ் சடையோன்*
*தெறுவேல் ஏந்திய*
*அறுமுகற் கருள"*

என்ற அடிகளிலே அமைந்துள்ள பொருள் தமிழ்மொழியின் தொன்மையையும் கடவுள் தன்மையையுங் காட்டுகின்றன. தமிழ் செம்மைப்பட்டுக் கலைவளம் கனிந்தபோதே கடவுளைப் போற்றும் அருட் பனுவல்களைப் பெற்றுவிட்டது. அருட் பனுவல்கள் படிக்கின்றவரின் உள்ளத்தை உருக்கும் குழைவு கொண்டிருத்தலினால் "கொழுந்தமிழ்" என்று கூறினார். "தண்ணார் தமிழ்" என்பதும் இதனையே வலியுறுத்துகின்றது.

*வினையில் நீங்கி*
*விளங்கிய அறிவின்*
*முனைவன் கண்டது*
*முதல் நூலாகும்*

என வரும் தொல்காப்பியர் குரலால் தமிழரின் கடவுட் கொள்கையை உணரலாம்.

இங்ஙனம் அருட் பனுவல்களைப் பெற்றுச் சிறந்த தமிழ் மொழி, இளங்குழந்தைகள் பெற்றார் உள்ளத்தைத் தமது மழலை மொழிகளால் மகிழ்விப்பது போலக் கற்றவரின் உள்ளத்தைக் கவர்ந்தது.

இங்ஙனம் சிறந்த தமிழ்மொழியை இறைவன் முருகனிடம் கொடுத்தார் என அடிகளார் கூறுகின்றார். முருகன் வழிபாடு தொல்காப்பியர் காலத்திற்கு முன்னமே தமிழ்நாட்டில் இடம் பெற்றுவிட்டது. முருகன் வழிபாட்டினால் அன்பையும் தொண்டையும் வீரத்தையும் தமிழர் காப்பாற்றி வருகின்றார்கள். இறைவன் கொடுத்த தமிழ் என்பதினால் தமிழின் தொன்மையும், முருகன் வளர்த்தான் என்பதினால் தமிழின் மொழி ஆக்கச் செம்மையும் தெளிவாகின்றன. தமிழ்மக்கள் அன்பையும் தொண்டையும்

பேணித் தமது ஆண்மையினால் தமிழ்நாட்டை ஆண்டு தமிழை வளர்த்தார்கள் என்பதையே அடிகள் விளக்குகின்றார்.

*"தெறுவேல் ஏந்திய அறுமுகன்"*

என வீரத்தையே முருகனின் முதற்பண்பாக அடிகளார் மொழி கின்றார். முருகன் போன்ற வீரத் தமிழ் இளைஞர்கள் விழித் தெழுந்து தமிழ்நாட்டை ஆட்சி புரிந்து தமிழை வளர்க்க வேண்டும் என்பதே அடிகளாரின் விருப்பம். பழந்தமிழ் மக்கள் பரம்பரை பரம்பரையாகத் தமிழ்நாட்டை ஆட்சிபுரிந்த சிறப்பினாலேயே தமிழ்மொழி வளர்ந்ததென்பதைச் சங்க இலக்கியங்களால் அறிகின்றோம்.

இங்ஙனம் முருகன் போன்ற வீரத் தமிழரால் தமிழ்மொழி பாதுகாக்கப்பட்டபின், புலவர்கள் தமிழை ஆராய்ந்து செப்பஞ் செய்யத் தொடங்கினார்கள். முருகனால் வளர்க்கப்பட்ட தமிழ் சங்கப் புலவர்களால் ஆராயப்பட்டதென்று அடிகளார் கூறிய கருத்தும் இதுவேயாகும். இதனை,

*"சின்னாள் வளர்த்த*
*பின்னர் மன்னிய*
*வெள்ளியம் பலத்துள்*
*துன்னிய பெருமான்*
*பீடுற அமர்ந்த*
*கூடன்மா நகரில்*
*மெய்பெற இருந்த*
*தெய்வப் புலமைப்*
*பெருமதிப் புலவோர்க்*
*குரிமையின் உதவினன்"*

என வரும் அடிகளால் அறிகின்றோம். சங்கம் கூடித் தமிழை ஆராயக்கூடிய ஆர்வமும் அமைதியும் தோன்றுவதற்குத் தமிழ் நாட்டைப் பகைவர் நலியாமல் ஆட்சிபுரிந்து பாதுகாத்த மன்னர் களின் ஆண்மையே காரணமாகும்.

*"வண்புகழ் மூவர்*
*தண்பொழில் வரைப்பின்*
*நாற்பேரெல்லை*
*அகத்தவர்"*

எனத் தொல்காப்பியனார், முடியுடை மூவேந்தர் தமிழ்நாட்டை ஆண்டு தமிழை வளம் படுத்திய வரலாற்றைக் குறிப்பிடுகின்றார். முருகன் தமிழைப் பாதுகாத்த செயல் மன்னர்களால் தமிழ் வளர்க்கப்பட்டதையும், புலவோர்க்கு முருகன் தமிழை ஆராயும் வண்ணம் அளித்த செயல் மன்னர்களின் ஆதரவால் புலவர் பெருமக்கள் கூடிச் சங்கத்திலே தமிழை ஆராய்ந்த வரலாற்றையும் குறிப்பாகக் காட்டுகின்றன.

சங்கத்தில் வீற்றிருந்து தமிழை ஆராய்ந்த புலவர் பெருமக்கள் நுண்மாண் நுழைபுலம் படைத்தவர்கள். இயற்கையாக அமைந்த மதிவளத்தை நூலாராய்ச்சியினால் பெருக்கிப் புதிய புதிய ஆக்கங்களைப் படைக்கும் வல்லமை வாய்ந்தவர்கள்.

*மதிநுட்பம் நூலோடு உடையார்க்கு அதிநுட்பம்*
*யாஉள முன்னிற் பவை*

என்பது திருக்குறள். இங்ஙனம் மதிநுட்பமும் நூலறிவும் வாய்ந்த நல்லிசைப் புலவர்களை ஆதரித்துத் தமிழை ஆராயும் வண்ணம் ஊக்க ஊக்க அவர்கள் அரிய நூல்களை ஆக்கித் தமிழை வாழ்விப்பார்கள்.

*"உளம்துளும் புவகை*
*வளம்பெற ஏற்றே*
*அகம்புறம் என்னும்*
*தொகுகலன் பூட்டி*
*நூலெனும் ஆடையும்*
*வாலரைக் கொழீஇச்*
*சொற்சுவை பொருட்சுவை*
*கனிந்த பற்பல*
*பாவுணா நாடொறும்*

*பல்வே றூட்டிச்*
*சங்க மென்னும்*
*பொங்கு பூந்தடத்தினும்*
*ஆலவாய் என்னும்*
*கோலமார் காவினும்*
*வடமொழி என்னும்*
*மடங்கெழு தோழியோடும்*
*உடம் படுத்து*
*ஒருங்கு விடுப்ப"*

என்ற அடிகளிலே புலவர் பெருமக்கள் தமிழ்மொழிக்கு ஆற்றிய கலைத் தொண்டுகளைக் காண்கின்றோம். புலவர்கள் உவகையுடன் தமிழை ஆராய்ந்து அகம்புற இலக்கியங்களைத் தொடுத்தார். சங்கத்தில் வீற்றிருந்து தமிழைச் செம்மைப் படுத்திய செயலை அடிகளார் மிக மிகப் பாராட்டி உரைக் கின்றார். சங்கத்தில் ஆராய்ந்து வெளிப்படுத்திய நூல்கள் தமிழ்மக்களின் நாகரிகத்தை நிலைநிறுத்தித் தமிழையும் தமிழினத்தையும் காப்பாற்றி வருதலால்

*"சங்கமென்னும் பொங்குபூந்தடம்"*
எனக் கூறினார்.

தமிழ்மொழி பண்டு தொட்டே இறைவனுடன் இணைந்து வளர்ந்து வருதலாலும், ஆலவாயிலே எழுந்தருளியிருக்கும் கண்ணுதற் பெருங்கடவுளும் தமிழ்ச் சங்கத்தில் வீற்றிருந்து தமிழாராய்ந்தார் என வருகின்ற வரலாற்றாலும்

*"ஆலவாய் என்னும்*
*கோலமார் காவினும்"*

எனக் கூறினார். சோலை தேன்தங்கிய புதிய மலர்களை விரித்தும், நறுங்கனிகளை நல்கியும், தண்ணிழலைப் பரப்பியும் இன்பம் செய்தல் போலக் கூடல் என்னும் ஆலவாயும் தமிழ் மொழிக்குப் புதிய நூல்களைப் புனையும் ஆற்றலை அளித்தும், சுவை நிரம்பிய பழம்பனுவல்களைப் படைத்தும், என்றும் இளமையுடன் வாழக்கூடிய தன்மையை நல்கியும் பாதுகாத்த தென்பதாம்.

இனி வடமொழி, தமிழ்மொழியின் துணையால் இன்றும் வாழ்ந்துவருவதால் அதனைத் தோழி என்று கூறினார். பேச்சு வழக்கின் நின்று வீழ்ந்த வடமொழி பேச்சு வழக்கிலே நின்று வாழ்கின்ற தமிழ்மொழியுடன் கலந்து வழங்கிவருகின்ற தென்பதாம்.

*"கொழுந்தமிழ் மங்கை*
*ஆனாவேட்கையின் ஆடிமேனாள்*
*தென்னாடதனில் மன்னி அமர்ந்தனள்"*

என்ற அடிகளிலே தமிழ்மொழி தென்னாட்டிலே நிலவி வாழ்கின்ற சிறப்பைக் கூறுகின்றார். ஆராய்வுக்கெட்டாத காலந்தொடங்கித் தமிழ்மொழி தென்னாட்டிலே வாழ்கின்றதென்பதை அடிகளார் உறுதிப்படுத்துகின்றார்.

*"மேனாள் தென்னா டதனில்*
*மன்னி அமர்ந்தனள்"*

என்ற தொடரிலே எழுகின்ற பெருமிதச் சுவையை உணருங்கள். தமிழ்மொழி தென்னாட்டிலேயே தோன்றி வளர்ந்த இயற்கை மொழியாகும். செந்தமிழும் சிவநெறியும் தோன்றிச் செழித்த நிலப்பரப்பு தென்னாடென்பதை இன்றைய ஆராய்ச்சியாளர்களும் ஒப்புக்கொள்கின்றார்கள்.

*"தென்னாடுடைய சிவனே போற்றி"*

என வரும் மணிவாசகர் குரலுடன் "வடவேங்கடம் தென்குமரியா யிடைத் தமிழ் கூறு நல்லுலகம்" என வரும் பனம்பாரனார் குரலையும் சேர்த்துப் படியுங்கள். தென்னாட்டில் நிலவுகின்ற செந்தமிழ் மொழியை எந்நாட்டவரும் போற்றி வரவேற்கத்தக்க தாக வளர்த்துவிடுதல் தமிழ்மக்கள் கடமையாகும். மறைமலை அடிகளார் தமிழ்மொழியை வளர்த்த வழிகளைப் பின்பற்றி நாமும் வழி வழியாகத் தமிழை வளர்த்து வருவோமானால் தமிழ்மொழி உலகறிந்த செம்மொழியாக ஓங்கி ஒளிவீசும். வாழ்க தமிழ்மொழி!

# வரந்தருவார் வாழ்த்து

**வ**ரந்தருவார் சிறந்த நல்லிசைப் புலவர். பதினைந்தாம் நூற்றாண்டில் வாழ்ந்து பாரதம் பாடிய வில்லிபுத்தூர் ஆழ்வாரின் மைந்தர். இவர் இயல்பாகவே நிறைந்த புலமையும் தமிழ் ஆர்வமும் வாய்ந்தவர். தமது தந்தையார் பாடிய பாரதத்திற்கு தக்க சிறப்புப்பாயிரம் கொடுத்த செயல் ஒன்றே வரந்தருவாரின் பெரும் மதிப்பையும், புலமையையும் எமக்குக் காட்டுகின்றது. வரந் தருவார் தமிழன்னையைப் பாடிப் பாடி மகிழ்கின்ற ஆர்வக்குரலைக் கேளுங்கள்.

*பொருப்பிலே பிறந்து தென்னன்*
*புகழிலே கிடந்து சங்கத்து*
*இருப்பிலே இருந்து வைகை*
*ஏட்டிலே தவழ்ந்த பேதை*
*நெருப்பிலே நின்று கற்றோர்*
*நினைவிலே நடந்து ஓர்ஏன*
*மருப்பிலே பயின்ற பாவை*
*மருங்கிலே வளர்கின்றாள்*

இந்தப் பாட்டிலே தமிழ்மொழியின் தோற்றமும், வளர்ச்சியும், செழிப்பும், ஆற்றலும், நிலைபேறும் பாராட்டப் படுகின்றன. பொதிய மலையிலே தமிழ் பிறந்ததென்று கூறு கின்ற மரபு தமிழின் தோற்றம் மிக முற்பட்டதென்பதைக் காட்டு கின்றது. மலைகள் நிறைந்த குறிஞ்சி நிலத்திலேதான் முதன் முதல் மக்கள் தோன்றினார்கள் என்று கூறும் ஆராய்ச்சியுரை களுடன் தமிழரின் வரலாறும் ஒட்டிச் செல்கின்றது. முருகனைக் குறிஞ்சி நிலத்தின் கடவுளாகவும், தமிழ்மொழியை பொதிய

மலையில் பிறந்ததென்றும் தமிழ் இலக்கியங்கள் கூறுவதால் பழந்தமிழர் வாழ்வு மலைகள் நிறைந்த குறிஞ்சி நிலத்தி லேயே தொடங்கியிருக்க வேண்டும் என்பதை உணரலாம். சங்க இலக்கியங்களில், மலைகளைப் பற்றிய உவமைகள் நிரம்பி இருத்தலும், குறிஞ்சி நிலத்தையே காதல் வாழ்வின் நிலைக்களமாகச் சொல்லுதலும் இதனை வலியுறுத்துகின்றன.

"பொருப்பிலே பிறந்து" என்ற தொடரில் எழுகின்ற ஓசை தமிழ்தான் உலகிலே முதன் முதல் தோன்றிய மக்களால் பேசப்பட்ட மொழி என்பதைக் காட்டுகின்றது.

*வையம் ஈன்றதொன் மக்கள் உளத்தினைக்*
*கையினால் உரை காலம் இரிந்திடப்*
*பைய நாவை அசைத்த பழந்தமிழ்*
*ஐயை தாள்தலை கொண்டு பணிகுவாம்.*

என வரும் திரு.நீ.கந்தசாமிப்பிள்ளை அவர்கள் குரலும் தமிழ்தான் உலகிலே முதன் முதலாகப் பேசப்பட்ட மொழி என்பதை உணர்த்துகின்றது.

இங்ஙனம் உலகில் முதன் முதல் தோன்றிய மக்களால் பேசப்பட்ட தமிழ்மொழி, பாண்டியர்கள் தமிழ்நாட்டை ஆண்ட காலத்திலே வளர்ச்சி அடைந்ததென்பதையும் வரந்தருவார் கூறுகின்றார். தமிழ்நாட்டை வெற்றித் திருவுடன் ஆண்டு, வெளி நாடுகளிலும் தமது புகழைப்பரப்பிய பாண்டிய மன்னர்களால் பல பல நூற்றாண்டுகளாகத் தமிழ்மொழி வளர்க்கப்பட்டது என்பதை

*"தென்னன் புகழிலே கிடந்து"*

என்ற தொடரால் அறிகின்றோம். "கிடந்து" என்ற சொல் பரம்பரை பரம்பரையாகத் தமிழ்ச் சங்கத்திலே ஆராய்ந்து பண்படுத்தப் பட்ட செயலை நினைவூட்டுகின்றது. தமிழ்மொழி சங்கத்திலே பல ஆண்டுகள் தொடர்ந்து ஆராயப்பட்டதினாலேதான் காலங்கடந்து வாழக்கூடிய ஆற்றலையும் மொழியாக்கச் செம்மையையும் பெற்றது.

*"தென்னன் புகழிலே கிடந்து*
*சங்கத்து இருப்பிலே இருந்து"*

என்ற தொடர்களைப் படிக்கும்போது தமிழ்மொழி எவ்வளவு விழிப்பாக ஆராய்ந்து பண்படுத்தப்பட்டதென்பதை அறிகின்றோம். பாண்டிய மன்னர்கள் மாற்றாரை வென்று, தமிழ்நாட்டை ஆட்சி புரிந்தபொழுதுதான் தமிழ்மொழியின் ஆக்கங்கருதி உழைத் தார்கள் என்பதை வரந்தருவார் தெளிவாகக் கூறுகின்றார்.

தொல்காப்பியம் பாண்டியன் அவைக்களத்திலே அரங் கேற்றப்பட்டதென்பதைக் கூறிய பனம்பாரனார்

*"போக்கறு பனுவல்*
*நிலந்தரு திருவிற்*
*பாண்டியன் அவையத்து"*

எனப் பாண்டியனைச் சிறப்பிக்கின்றார். குற்றமில்லாத நூலாராய்ச்சி யும், மாற்றாரின் நிலத்தைத் தனது நிலமாக அகப்படுத்துகின்ற வெற்றித் திருவும் உடையவனாய் விளங்கிய பாண்டியனின் அவைக்களத்திலே தொல்காப்பியம் அரங்கேற்றப்பட்டதென்பதாம். இதனால் பாண்டியனின் தமிழ் ஆர்வத்தையும் ஆண்மையையும் அறிகின்றோம். தமிழ்மொழி சங்கத்திலே ஆராயப்பட்டு வளம் படைத்ததின் காரணம், பாண்டிய மன்னர்களின் தமிழ் உணர்ச்சியும் வெற்றி வாழ்வுமே என்பதைத் தொல்காப்பியச் சிறப்புப்பாயிரம் நிலைநாட்டுகின்றது.

*"தென்னன் புகழிலே கிடந்து*
*சங்கத்து இருப்பிலே இருந்து"*

என்னும் வரந்தருவார் குரலுடன்

*"போக்கறு பனுவல்*
*நிலந்தரு திருவில்*
*பாண்டியன் அவையத்து"*

என வரும் பனம்பாரனார் குரலையும் சேர்த்துப் படியுங்கள்.

வாழையடி வாழைபோலத் தொடர்ந்து நிலவிய தமிழ் உணர்ச்சியும், தமிழ் ஆற்றலும் எமதுள்ளத்தை அள்ளுகின்றன.

இனி இங்ஙனம் செழித்த தமிழ்மொழி, கடவுள் தன்மையுடையதாய், பயன் கனிந்து சுரந்த செயலை வரந்தருவார் நினைவூட்டுகின்றார்.

*"வைகை ஏட்டிலே*
*தவழ்ந்த பேதை"*

என்ற தொடரில் தமிழின் அருள் ஆற்றலை அறிகின்றோம். திருஞானசம்பந்தப் பெருமானின் தீந்தமிழ்ப்பாடல் எழுதப்பட்ட ஏடு வைகை நீரைக் கிழித்துச் சென்று சைவ நெறியின் மேம்பாட்டை மலர்த்திய அருட் செயலை நினைந்து நினைந்து வரந்தருவார் மகிழ்கின்றார்.

*''வைகை ஏட்டிலே*
*தவழ்ந்த பேதை"*

என்று சொல்லும் பொழுதே ஓர் இன்பம் எழுகின்றது. "பேதை" என்ற சொல் தமிழ் என்றும் இளமையுடன் உலாவி வாழ்கின்ற ஏற்றத்தைக் காட்டுகின்றது. இனி வைகை ஏட்டிலே தவழ்ந்த பேதை என்பதினால் கால வெள்ளத்தில் அள்ளுப் படாமல் நிலைபெறுகின்ற ஆற்றல் தமிழ்மொழிக்கு உண்டு என்பதையும் குறிப்பாக உணர்த்துகின்றது.

*"நெருப்பிலே நின்று"*

என்ற தொடர், சம்பந்தரின் தமிழ் எழுதிய ஏடு, நெருப்பிலும் எரியாமல் நின்று விளங்கிய வரலாற்றைக் குறிக்கின்றது. இதனால், ஊழித் தீ உருத்தெழுந்து உலகை அழிக்கின்ற போதும் அழியாமல் நின்று சிறக்கும் கடவுள் தன்மை வாய்ந்தது தமிழ் என்பதையும் அறிகின்றோம்.

*"பொய்யுரைப் போர் புன்னாவில்*
*பொருந்திய தீட்டோட்டுதற் கோ*

*செய்ய தமிழ்ப் பெரு மாட்டி*
*தீயிடை நீ குளித்தது வே"*

*"வேற்று மொழி தீண்டுத லால்*
*மேனி கழீஇக் கொள்வதற் கோ*
*ஆற்றெதிரே ஏட்டின் மிசை*
*அம்மா நீ நீந்திய தே"*

எனப் பாடிய நவாலியூர் திரு. சோமசுந்தரப்புலவர் அவர்கள் தமிழ்மொழி நெருப்பாலும், நீராலும் ஏற்படுகின்ற ஊழிகளிலும் அழியாமல் நிலைபெறும் என்பதைக் குறிப்பாகக் கூறுகின்றார்.

இங்ஙனம் நெருப்பையும், நீரையும் வென்ற தெய்வத் தமிழ் கற்றவர் நெஞ்சிலே உலாவிப் புதிய ஒளியையும் எழிலையும் பெற்று வாழ்கின்றது என்பதையும் வரந்தருவார் கூறுகின்றார்.

*"கற்றோர் நினைவிலே*
*நடந்து"*

என்ற தொடர்கள் தமிழ்மொழியின் நிறைந்த வாழ்வை எமக்கு நினைவூட்டுகின்றன. கற்றோரால் விரும்பிப் பாராட்டப் பெறாத மொழி நீண்ட காலம் வாழமுடியாது. தமிழ்மொழி பிறந்த நாள் தொடங்கிக் கற்றோரால் நுகர்ந்து நுகர்ந்து பாராட்டப் பெற்ற பண்புடையது. கற்றவர் உள்ளத்திலே தோன்றுகின்ற எண்ணங் களையெல்லாம், முட்டின்றி அப்படியே வெளியிடக்கூடிய மொழிச் செழிப்பும் ஓசை இன்பமும் உடையதாய் அமைந்த பெருமையே தமிழ்மொழியின் வளர்ச்சிக்குக் காரணமாகும். இதனை, "கற்றோர் நினைவிலே நடந்து" என்ற தொடரால் வரந்தருவார் விளக்குகின்றார். "நினைவிலே நடத்தல்" என்பது கற்றோர் உள்ளத்தோடு ஒன்று பட்டு அவர்களின் புலமைக் கருவிற் கலந்து செழித்துப் பயன் கனிதலைக் காட்டுகின்றது.

*"கருத் திருத்தி உட்புகுந்து*
*கருணையினால் ஆட்கொண்ட"*

என வரும் திருவாசகத்துடன்,

*"கற்றோர் நினைவிலே*
*நடந்து"*

என வரும் வரந்தருவார் குரலையும் ஒப்பிட்டுப் பாருங்கள். "உள்ளத்தில் உண்மை ஒளி உண்டானால், வாக்கினிலே ஒளி உண்டாகும்" என்றார் பாரதியாரும். கற்றோரின் உள் ஒளியுடன் கலந்து தமிழ்மொழி பெற்ற ஆக்கங்கள்தான் இன்றும் எம்மை வாழவிக்கின்றன. இதனை,

*தேவர் குறளாட்டித் திருவாசகஞ் சூட்டி*
*மூவர் தமிழ்பாடி நாலாயிரம் மொழிந்து*
*தாவடங்க ளாகமுச் சங்கத்தமி ழணைத்துக்*
*காவிய மாமணியாங் கம்ப முடிகவித்துத்*
*தீவினை மாற்றும் திருமந்திரஞ் சொல்லி*
*ஆவி உருக்கும் அருட்பாவால் அர்ச்சித்துக்*
*கூவித் திருப்புகழைக் கூத்தாடித் தெண்டனிட்டுத்*
*தேவாதி தேவனருள் சேர்ந்திடுவோம் எம்பாவாய்*

எனச் சுத்தானந்த பாரதியார் பாடிய தமிழ்ப் பாவால் உணர்க. கற்றோர்கள் நினைவிலே தமிழ்மொழி நடந்து நடந்து வாழ்வதால் நாம் பெற்ற அருட் பனுவல்களையெல்லாம் பாரதியார் பாட்டிலே அமைத்துப் பாடி எம்மை ஊக்குகின்றார்.

இனி இங்ஙனம் தமிழ்மொழி என்றும் நிலைபெறக்கூடிய இலக்கியங்களையும் அருட்பனுவல்களையும் கற்றோர் நெஞ்சிலே உலாவிச் சுரந்த பேராற்றலாலேதான், இந்த உலகில் நிலைத்து வாழ்கின்றதென்பதையும் வரந்தருவார் உரைக்கின்றார்.

*"ஓர் ஏன மருப்பிலே*
*பயின்ற பாவை*
*மருங்கிலே வளருகின்றாள்"*

ஏன மருப்பிலே பயின்ற பாவை, நில மகள். திருமால், பன்றி வடிவத்தாங்கி, நிலவுலகத்தைக் கொம்பினாலே தாங்கினார் என்ற வரலாற்றைத் தழுவி இங்ஙனம் கூறப்பட்டது. நிலவுலகத்திலே

பேச்சு வழக்கில் நின்று வீழாமல் தமிழ்மொழி நிலைபெற்று வாழ்கின்ற சிறப்பை வரந்தருவார் பாராட்டுகின்றார். தமிழ் மொழி அன்றும், இன்றும் மாறாத இளமையுடன் செழித்து வளர்கின்றதென்பதை வலியுறுத்த "வளருகின்றாள்" என்று நிகழ் காலத்தால் கூறினார். "வளருகின்றாள்" என்ற தொடரைப் படிக்கும் பொழுது எழுகின்ற ஓசை, தமிழ்மொழியின் நீண்ட வாழ்வையும் கடவுள் தன்மையையுங் காட்டுகின்றது.

*ஞாலமொழி பல இறக்கத்*
*தானிலவுஞ் செய்யாள்*
*நல்லியல்பை உயிர் நிலையாய்க்*
*கொண்டதமிழ் நங்கை*
*காலவிடம் தொட்டறியாக்*
*கட்டிளமை காட்டும்*
*கற்புயர்நற் காதலுயர்*
*மெய்ப் புலவர்க் கருள்வாள்*

என நாவலர் திரு. ச. சோமசுந்தரபாரதியார் அவர்களும் தமிழ்மொழியை ஏத்துகின்றார். காலத்தைக் கடந்து வாழ்கின்ற சிறப்பு தமிழ்மொழியின் செம்மையைக் காட்டுகின்றது.

*"காலவிடம் தொட்டறியாக்*
*கட்டிளமை காட்டும்"*

என வரும் சோமசுந்தரபாரதியார் குரலுடன்,

*"ஓர்ஏன மருப்பிலே*
*பயின்ற பாவை*
*மருங்கிலே வளருகின்றாள்"*

என வரும் வரந்தருவார் குரலும் கலந்து தமிழ்மொழியின் நிலையான வாழ்வின் ஆற்றலை நிலைநாட்டுகின்றன. காலவிடம் தொட்டறியாத தமிழ்மொழியைக் காலத்தோடொத்த கலை நூல்களால் அணி செய்து, ஆளும் மொழியாக அரியணையில் ஏற்றி வாழ்வித்தல் இன்றைய தமிழ்மக்கள் கடமையாகும்.

# சிவஞானமுனிவரின் சிந்தனை

திருவாவடுதுறை ஆதீனத்துச் சிவஞானமுனிவர் வடநூற் கடலையும் தென்தமிழ்க் கடலையும் நிலை கண்டுணர்ந்த பெரும் புலவர். இவரை மாதவச் சிவஞானயோகிகள் என்றும் சொல் வார்கள். பதினெட்டாம் நூற்றாண்டிலே தமிழ்மொழிக்குப் பெரு வாழ்வு கொடுத்த தலைமை சிவஞானமுனிவருக்கே உரிய தாகும். இவர், மெய்கண்டார் தமிழிலே அருளிய சிவஞான போதத்திற்கு எழுதிய 'கண்டமாபாடியம்' என்னும் பேருரை தமிழ்மொழியின் ஆற்றலையும் இலக்கண மரபையும் நிலைநாட்டி விட்டது. எடுத்துக் கொண்ட பொருளை மிகத் தெளிவாக விளக்கி உரைக்கின்ற வல்லமைப்பாடும் எழுச்சியும் வாய்ந்த உரைநடையை முதன் முதலாக தமிழ் மொழியிலே எழுதி வழிகாட்டிய பெருமையும் சிவஞானமுனி வரையே சாரும். முனிவர் இங்ஙனம் தம் உள்ளத்திலே கடல் போலப் பெருகி எழுந்த மெய்கண்டநூற் பொருள்களை எல்லாம் வாரி வாரி வெளிப்படுத்தி விளக்கந்தருதற்கு ஏற்றதாக விரிந்தும் பரந்தும் நுணுகியும் இடந்தந்த தமிழ்மொழியின் தனிச்சிறப்பை மிகமிகப் பாராட்டி உரைக்கின்றார்.

*வடமொழியைப் பாணினிக்கு வருத்தருளி அதற்கிணையாத்*
*தொடர்புடைய தென்மொழியை உலகமெலாம் தொழுதேத்தும்*
*குடமுனிக்கு வலியுறுத்தார் கொல்லேற்றுப் பாகரெனில்*
*கடல் வரைப் பின் இதன்பெருமை யாவரே கணித்தறிவார்*

இந்தப் பாட்டிலே தமிழ்மொழியின் தனிச்சிறப்பை முனிவர் எடுத்து மொழிகின்றார். முனிவர் வாழ்ந்த பதினெட்டாம் நூற்றாண்டிலே வடமொழிதான் தமிழின் தாய்மொழி என்ற கொள்கை பரவி இருந்தது. மொழியாராய்ச்சி இல்லாமல், வட

மொழிப்பற்று மிகுதியால் தமிழை இகழ்ந்து வந்தார்கள். வட மொழிதான் தெய்வத்தன்மை வாய்ந்ததென்றும், தமிழ்மொழி அறிவில் குறைந்த மக்கள் பேசுகின்ற மொழியென்றும் நூல்களும் எழுதி இருந்தார்கள். திருவாவடுதுறை ஆதீனத்துச் சுவாமிநாத தேசிகர் அவர்கள்,

*"அன்றியும் தமிழ்நூற் களவிலை அவற்றுள்*
*ஒன்றே ஆயினும் தனித் தமிழ் உண்டோ.*
*அன்றியும் ஐந்தெழுத் தாலொரு பாடையென்று*
*அறையவே நாணுவர் அறிவுடை யோரே*
*வடமொழி தென்மொழி யெனுமிரு மொழியினும்*
*இலக்கணம் ஒன்றே என்றே எண்ணுக."*

எனத் தாம் இயற்றிய இலக்கணக் கொத்து என்னும் நூலில் கூறுகின்றார்.

இங்ஙனம் சிறிதும் சிந்தனை இல்லாமல் தமிழ்மொழியை இகழ்ந்து சுவாமிநாததேசிகர் அவர்கள் கூறுதற்கேற்ற வடமொழிப் பற்றும், நடுநிலைமை இல்லாத புலமை வாழ்வும் பதினெட்டாம் நூற்றாண்டிலே தமிழ்நாட்டில் நிலவியது. சுவாமிநாததேசிகர் அவர்கள் கூறிய கொள்கைகளைச் சிறிது மொழிநூல் ஆராய்வு உள்ளவர்களும் ஒப்புக்கொள்ளமாட்டார்கள். இவற்றையெல்லாம் கண்ட மாதவச் சிவஞானயோகிகளின் உள்ளம் வருந்தியது. வடமொழியையும் தமிழ்மொழியையும் ஆராய்ந்து, ஒப்பிட்டுக் கற்றுணர்ந்த முனிவர், வடமொழிதான் தமிழின் தாய்மொழி என்பதையும், வடமொழி இலக்கணமும் தமிழ்மொழி இலக் கணமும் ஒன்றே என்பதையும் ஒப்புக்கொள்ள மறுத்தார். அவர், தாம் எழுதிய தொல்காப்பியப் பாயிர விருந்தியில் வடமொழிக்கும், தமிழ்மொழிக்கும் உள்ள வேறுபாட்டை மிகத் தெளிவாக எடுத்து விளக்குகின்றார்.

"தமிழ்மொழிப் புணர்ச்சிக்கண்படும் செய்கைகளும், குறியீடுகளும், வினைக்குறிப்பு, வினைத்தொகை முதலிய சில சொல் இலக்கணங்களும், உயர்திணை, அஃறிணை முதலிய சொற்பாகுபாடுகளும், அகம் புறம் என்னும் பொருட் பாகுபாடு

களும், குறிஞ்சி, வெட்சி முதலிய திணைப் பாகுபாடுகளும், அவற்றின் பகுதிகளும், வெண்பா முதலிய செய்யுள் இலக்கணமும், இன்னோரன்ன பிறவும், வடமொழியில் பெறப் படாமையானும்...”

எனவும்,

“ஈண்டுப் பொருள் என்றது அகம் புறம் என்னும் இரு கூற்றுப் பதினாற்றிணைப் பகுதியவாய்ச் செய்யுளிற் பாடுதற்குரிய இன்பம் முதலிய உலகியற்பொருளை, மொழித்திறம் உணர்தற் பொருட்டுச் செய்யுள் ஆராய்ச்சிக்கு ஒருதலையான் வேண்டப் படுதல் பற்றி இயற்தமிழ் ஒலியாகக் கொண்டு ஓதற்பாலன அவையேயாகலின் அற்றேல், இஃதெழுத்தும் சொல்லும்போலச் செந்தமிழ் இயற்கை சிவணுதற்கு ஏதுவாகாமையானும், வட மொழியார் வேறோதுவதல்லது சத்த நூலுள் ஓதாமையானும், ஈண்டோதல் வேண்டாம் பிறவெனில், ஈண்டுக் கூறும் பொருட் பாகுபாடுகள், பொதுவாகாது, தமிழுக்கே சிறந்து வேறொன்றாற் பெறப்படாமையின், இப்பொருள் பற்றி வரும் பரிபாடல், கலி, அகநானூறு, ஐங்குறுநூறு, நற்றிணை, குறுந்தொகை, ஆற்றுப் படை, பதிற்றுப்பத்து முதலிய செய்யுள் ஆராயப் புகுந்தார்க்கு இப்பொருட் பாகுபாடுகள் உணராக்காற், குன்று முட்டிய குரீஇப்போல, இடர்ப்பட்டுச் செய்யுண் மொழித்திற முணர்ந்து செந்தமிழ் இயற்கை சிவணுதற்கு ஒருதலையான் ஓதவேண்டு மென்க” எனவும் வருகின்ற முனிவரின் ஆய்வுரைகளைக் காண்க. இங்ஙனம் முனிவர் ஆராய்ந்து கூறிய முடிவுகளைக் கண்டதும், ஆராய்வின்றி வடமொழிக்குத் தலைமை கொடுத்துத் தமிழ்மொழியை இகழ்ந்து வந்த கூட்டத்தினர் நாவடங்கி விட்டார்கள். இன்றைய மொழி ஆராய்ச்சியாளர்கள் தமிழ் மொழி தென்னாட்டிலேயே தோன்றி நிலைபெற்று வருகின்ற உயர்தனிச் செம்மொழியென்று கண்ட முடிவுகளைப் பதினெட்டாம் நூற்றாண்டில் மாதவச் சிவஞானயோகிகள் கூறிவிட்டார்கள். மாதவச் சிவஞானயோகிகளின் ஆராய்ச்சிக் குரலால் தமிழ் அறிஞர் விழித்தெழுந்தார்கள். தமிழ்மொழி தனித்தியங்கும் ஆற்றல் உடையதென்பதையும், வடமொழியில் நின்று தமிழ் தோன்ற

வில்லை என்பதையும் உணர்ந்தவுடனே, பல அறிஞர்கள் தமிழ் மொழி ஆராய்ச்சியில் ஈடுபட்டார்கள். காலப்போக்கில் தமிழ்மொழி வடமொழிக்குச் சிறிதும் தொடர்பில்லாத தனிக் குடும்பத்தைச் சேர்ந்ததென்ற உண்மை தெளிவாயிற்று. இவற்றுக்கெல்லாம் வழிகாட்டியாக நின்று, எம்மை ஊக்குகின்ற முனிவரின் குரலைக் கேளுங்கள்.

*"வடமொழியைப் பாணினிக்கு*
*வகுத்தருளி அதற்கிணையாத்*
*தொடர்புடைய தென்மொழியை*
*உலகமெலாம் தொழுதேத்தும்*
*குடமுனிக்கு வலியுறுத்தார்"*

என்ற குரலிலே வடமொழியோடொத்த பழமையும், தெய்வத் தன்மையும், உடையதாய் வாழ்கின்ற தமிழ்மொழியை முனிவர் ஆர்வமுடன் பாடுகின்ற பெருமிதத்தை அறிகின்றோம். வட மொழியை வளம்படுத்தும் ஆற்றலைப் பாணினிக்குக் கொடுத்த இறைவன், தென் மொழியாகிய தமிழை வளம்படுத்தும் ஆற்றலை அகத்திய முனிவருக்குக் கொடுத்தார் என்பதாம்.

"குடமுனிக்கு வலியுறுத்தார்" என்ற தொடரால் தமிழ் மொழியின் தனிப்பட்ட பண்பையும் மொழியாக்க மரபையும், பிற எம் மொழிக்கும் இல்லாத பொருள் இலக்கணச் சிறப்பையும் அழுத்தம் திருத்தமாக அகத்திய முனிவர்க்கு விளக்கினார் என்பதைத் தெளிகின்றோம்.

*"உலகமெலாம் தொழுதேத்தும் குடமுனி"*

எனச் சிவஞானமுனிவர் அகத்தியரைப் பாராட்டுகின்றார். வடமொழிக்கு இலக்கணம் வகுத்த பாணினி முனிவரிலும் மேலான தவ ஆற்றல் உடைய அகத்தியரால் தமிழ்மொழி செப்பஞ் செய்யப்பட்டதென்பதை எண்ணிச் சிவஞானமுனிவர் பெருமைப்படுகின்றார். பாணினி முனிவரால் செப்பஞ்செய்யப்பட்ட வடமொழி பேச்சு வழக்கில் நின்று இறந்துபடவும், அகத்திய முனிவரால் செப்பஞ்செய்யப்பட்ட தமிழ்மொழி ஆயிரம் ஆயிரம் ஊழிகள் சென்றாலும் அழியாத ஆற்றலுடன் பேச்சு வழக்கிலும்,

செய்யுள் வழக்கிலும் நின்று வாழ்கின்ற மேம்பாட்டையும் முனிவர் குறிப்பாகக் காட்டுகின்றார். இனி,

*"குடமுனிக்கு வலியுறுத்தார்*
*கொல் ஏற்றுப் பாகரெனில்*
*கடல்வரைப்பின் இதன் பெருமை*
*யாவரே கணித்தறிவார்"*

என்ற தொடர்களிலே, உலகவழக்கில் நின்று மக்கள் நாவிலே தவழ்ந்து செழிக்கின்ற தமிழ்மொழியின் பெருமை ஒருவராலும் அறிய முடியாததென்பதை முனிவர் உணர்ச்சியுடன் கூறுகின்றார்.

*"இதன்பெருமை யாவரே கணித்தறிவார்"*

என்ற குரலிலே எழுகின்ற ஓசை, முனிவரின் நெஞ்சறிந்த உண்மையை அப்படியே எமக்கு எடுத்துக் காட்டுகின்றது. தமிழ் மொழியின் வரலாற்றை ஆராய்ந்துணராமல் அதனை இழித்துக் கூறுவது அறிவிலார் செயலாகும். மொழி ஆராய்ச்சியாளர் ஒருவர் மிகப் பழமையான மொழிகள் எல்லாம் பேச்சு வழக்கில் நின்று இறந்துபட்டனவாகவே இருக்கவேண்டும் என ஓர் பொதுவிதி அமைத்துக்கொண்டு, மொழிகளை ஆராயத் தொடங்கினார். அவருடைய பொது விதிக்குள் அடங்காமல், பேச்சு வழக்கில் நின்று வாழ்ந்த தமிழ்மொழியை, மிக அண்மைக்காலத்தில் தோன்றிய மொழி என்றே அவர் முடிவு செய்தார். அதன்பின், அவர் பல மொழி நூல் அறிஞர்கள் தமக்கு எழுதிய மறுப்புக்களில், தமிழ்மொழியின் பழமையைத் தக்க காரணங்கள் காட்டி நிறுவியதை, மறுக்க முடியாமல் ஒப்புக்கொண்டதுடன், தமது பிழையான ஆராய்ச்சியையும் உணர்த்துகொண்டார். இவற்றையெல்லாம் தெளிந்த முனிவர்,

*"இதன் பெருமை யாவரே*
*கணித்தறிவார்"*

எனக் கூறினார். இதனால் தமிழ்மொழி ஆராய்ச்சி மிகவும் பரந்துபட்டதொன்றென்பதையும் அந்த ஆராய்ச்சியில் ஈடுபடு கின்றவர், சிறந்த அறிவும், நடுநிலை உள்ளமும், நிறைந்த

மொழிநூற்புலமையும் வாய்ந்தவராய் விளங்கவேண்டு மென்பதையும் முனிவர் குறிப்பாகக் காட்டுகின்றார்.

இனி, வடமொழிக்குத் தமிழ்மொழி எந்தவகையினும் தாழ்ந்ததில்லை என்பதை முனிவர் மிக இறுமாப்புடன் கூறுகின்றார்.

*இருமொழிக்கும் கண்ணு தலார் முதற்குரவ ரியல்வாய்ப்ப*
*இருமொழியும் வழிப்படுத்தார் முனிவேந்தர் ரிசைபரப்பும்*
*இருமொழியும் ஆன்றவரே தழீஇயினா ரென்றாலிவ்*
*இருமொழியும் நிகரென்னும் மிதற்கைய முளதேயோ*

என வரும் முனிவரின் நடுநிலையான திறனாய்வுக் குரலைக் கேளுங்கள். முனிவரின் நடுநிலைமைக் குரலுடன்,

*"வட மொழியும் தென் தமிழும்*
*ஆனான் கண்டாய்"*

என வரும் நாவுக்கரசர் குரலையும் ஒப்பிட்டுப் பாருங்கள். இங்ஙனம் வடமொழியோடொத்த பழமை உடைய தமிழ்மொழி அவ்வடமொழிக்கில்லாத பொருளிலக்கணப் பொலிவுடன் இன்றும் பேச்சு வழக்கிலும், செய்யுள் வழக்கிலும் நின்று வாழ்கின்ற செம்மையை முருக இருக்குவனார் மொழிகின்றார்.

*எழுத்தொடு சொற் பெற்றார்கள்*
*எல்லாரும் பொருளிலராய்*
*வழுத்திநனி கையேந்த*
*வளஞ்சான்ற பொருள் பெற்றாள்*
*தழைத்தனவால் அகம் புறமும்*
*தமிழ்த் தாய்தன் தண்ணார்ந்த*
*முழுத்த புகழ்ச் சேவடியே*
*முன்னூதாய் கோத்தும்பீ*

இந்தச் செய்யுளால் தமிழ் என்றும் இளமையுடன் வாழ்ந்து வாழ்ந்து செழிக்கின்ற காரணத்தை அறிகின்றோம். இன்றைய உலகில் தமிழ்மொழியின் ஆற்றலை நிலைநாட்டி, உயர்தனிச் செம்மொழியாக உலாவச் செய்கின்ற பொறுப்பு எம்மைச் சார்ந்ததாகும்.

# 2

# உரிமைக் குரல்

'சிங்களம் மட்டும் சட்டம்' நிறைவேற்றப்பட்ட - சிங்களமொழி ஆட்சி மொழி ஆக்கப்பட்ட - 1956 இல், "இன்றைய நிலையில், இன உணர்ச்சியையும் தன்மானத் துடிப்பையும் எழுப்பி எங்கள் உள்ளத்தை முறுக்கேற்றக்கூடிய இலக்கியங்களைத்தான் நாம் தேடிக் கற்கவேண்டும்" என்ற கருத்துடன், தமிழ் மக்களுக்கு தமிழ் உணர்வினையும் விடுதலை வேட்கையினையும் ஊட்டும் வகையில், புறநானூற்றுப் பாடல்களையும், பாரதி, பாரதிதாசன் கவிதைகளையும் மேற்கோள் காட்டி, தமது கவிதைகளையும் இணைத்து தமிழரின் உரிமைக்காகக் குரல் எழுப்பிய கட்டுரைகள் இவை.

# தமக்கென வாழா அறப்போர் வீரர்

**உ**ரிமை உணர்ச்சி மக்கள் உயிரினும் மேலானது. அடிமையாக இருந்து ஐந்தடுக்கு மாடத்தில் வாழ்வதிலும் பார்க்க, உரிமை வாழ்வு பெற்று ஓட்டைக் குடிசையில் இருத்தல் உயர்ந்ததாகும். பட்டத்தையும் பதவியையும் பெறுதலையே பெரிதாக மதித்துப் பரம்பரை பரம்பரையாக வந்த உரிமைகளைப் பறிகொடுத்து வாழ விரும்புகின்ற மக்களினம் பாழ்பட்டுப்போகும்.

இன்று வாழ்கின்ற நாங்கள் இனிமேல் வாழ இருக்கும் எங்கள் குலத்தினரைச் சிந்தியாமல் செயலாற்றுவது அறியாமையாகும். இன்று வாழ்கின்ற மக்கள்தான் இனி வாழப்போகும் மக்களுக்கு வழி காட்ட வேண்டும். தமது இனத்தின் உரிமை பறிபோவதைக் கண்டும் தன்மானமற்று உயிரைப் போற்றி வாழ்கின்றவரை உலகம் மதியாது. கண்ணை விலைக்கு விற்றுக் கவின் நிறைந்த ஓவியத்தை வேண்டுதல் போல், உள்ள உரிமைகளையெல்லாம் பறிகொடுத்து உயர்ந்த உத்தியோகத்தை விரும்பி வாழ்தல் பேதையர் செயலாகும். அழிந்து போகும் சிறிய இன்பங்களுக்காக ஆயிரம் ஆயிரம் ஆண்டுகள் முயன்று நம் முன்னோர்கள் தேடிவைத்த அரிய பண்பாடுகளையும் அன்னை மொழியையும் இழந்து வாழ விரும்பலாமா?

தாய் மொழிக்காகவும் தாய் நாட்டிற்காகவும் தமது குருதியை ஊற்றி உயிரைப் பலி கொடுத்த உணர்ச்சியாளரின் வரலாற்றை உணர வேண்டும். உறுப்புறுப்பாக வெட்டினாலும், ஓங்கி எரிகின்ற நெருப்பில் இட்டு எரித்தாலும் உரிமை உணர்ச்சியை விடாமல் உருத்தெழுந்து போராடிய செயல் வீரர்களை நாம் பின்பற்ற

வேண்டும். மாடமும் செல்வமும் மனைவி மக்களும் இன்று அழியாவிட்டாலும் என்றோ ஒரு நாள் அழியக்கூடியன என்ற உணர்ச்சியுடன் அவற்றை உதறித் தள்ளி, தம் உயிரையும் பொருட்படுத்தாமல் உலக மக்களுக்காக உழைத்த ஆண்மை யாளரின் அடிச்சுவட்டை ஆதரித்து நாம் செயலில் இறங்க வேண்டும்.

எங்கள் உரிமைக்காக நாம் உயிர்விடுவதைக் கண்டால் ஆவி உலகில் வாழ்கின்ற நம் முன்னோர்கள் மகிழ்ச்சி அடைவார் கள். எமது முன்னோரின் உணர்ச்சியும் உள் ஒளியும் பேச்சும் மூச்சும் நின்று நிழலாடுகின்ற எங்கள் நெஞ்சம் நேர்மைக்கு மாறான கொடுமைகளைக் கண்டு நிலை கலங்கக் கூடாது. வாள்கொண்டு வெட்டினாலும் தோள்கொடுத்து எங்கள் மானத்தைக் காப்பாற்ற வேண்டும். மானம் அழித்து வாழ்வதினும் பார்க்க மாற்றாரும் மதிக்கத்தக்கதாக அறப்போர் ஆற்றி ஆவியை விடுதலே சிறந்த செயலாகும்.

*ஒட்டார்பின் சென்றொருவன் வாழ்தலின் அந்நிலையே*
*கெட்டான் எனப்படுதல் நன்று*

என்பது திருக்குறள். துன்பம் எங்களைத் தாக்குகின்ற பொழுது சோர்வடையாமல் இன்பம் இன்பம் என்று எழுச்சிக்குரல் எழுப்பிப் போராட வேண்டும். சுடச் சுட ஒளிவிடுகின்ற பொன்போல நாமும் துன்பத்தீயில் நின்று செயலாற்றி இன்பத்தைக்காண வேண்டும். துன்பத்தை வெல்வதுதான் இன்பம். துன்பத்தை வென்று பெறாத இன்பம் முயற்சி செய்யாமல் கிடைத்த செல்வம் போல் விரைந்து தொலைந்துபோகும். துன்பத்தைக் கண்டு ஏங்குகின்றவர்கள் ஒருபோதும் இன்பத்தைப் பெற மாட்டார்கள். இன்பம் பிறரிடம் இருந்து தட்டிப் பறிக்கக்கூடிய பொருளுமல்ல, கேட்டுப் பெறக்கூடிய பொருளுமல்ல. தானே முயன்று முயன்று அடைகின்ற பொருள்தான் இன்பம்.

உணர்ச்சியும் தன்மானத் துடிப்பும் உள்ள ஒருவனுக்குத் துன்பம் தோன்றாது. அவன் என்றும் இன்பமே என்று இறு

மாந்திருப்பான். இன உணர்ச்சியும், மொழி உணர்ச்சியும், தன் மானமும் இல்லாமல் தாங்கள் மட்டும் வாழ்ந்தால் போதுமென்ற எண்ணத்துடன் இருக்கின்றவர் இறந்தவரே ஆவர். அவர்கள் வெறும் எலும்புக்கூடுகள் - என்புதோல் போர்த்த உடம்புகள். உள் உணர்ச்சி இல்லாதவர்கள், உரிமையின் மதிப்பை அறிய மாட்டார்கள். உரிமைகளைப் பாதுகாத்து வாழ்கின்ற மக்களினம் தான் உலகம் உள்ளளவும் நிலைபெறக் கூடியதாகும். உரிமையைப் பறிபோக விடாமல் போராடுகின்ற உணர்ச்சிதான் உயர்ந்த மானம் என்று பாராட்டப்படுகின்றது.

*மருந்தோமற்று ஊன்ஓம்பும் வாழ்க்கை பெருந்தகைமை*
*பீடழிய வந்த இடத்து*

என்பது திருக்குறள். பெருந்தகைமை என்பது உரிமையைப் பாதுகாக்கின்ற மான உணர்ச்சியைக் குறிக்கின்றது. உரிமை பறிபோவதைக் கண்டும் அதனைப் பெற முயலாமல் மானமின்றி வாழ்கின்ற வாழ்வு இனிமேல் சாகாமல் இருத்தற்கு மருந்தா குமோ என்று வள்ளுவர் கேட்கின்றார். உரிமையைப் பெறுதற்காக நாங்கள் ஒன்றுபட்டு அறப்போர் ஆற்றுவோம்.

*அறத்தின்ஊங்கு ஆக்கமும் இல்லை அதனை*
*மறத்தலின் ஊங்கில்லை கேடு*

என்பது திருக்குறள்.

# இலக்கியத் தோற்றமும் இன எழுச்சியும்

ஓர் இனத்தின் உயிர்த் துடிப்பும் உயர்ந்த வாழ்வும் இலக்கியத்தால் வளம்படுகின்றன. சென்ற காலத்தில் வாழ்ந்த மக்களின் எண்ணத்தையும் இன்று வாழ்கின்ற மக்களின் எண்ணத்தையும் ஒன்றுபடுத்தி உயிர் கொடுக்கின்ற சிறப்பு இலக்கியத்துக்குத்தான் உண்டு. ஒருவரின் சிந்தனையை ஒருவர் உள்ளத்தில் பதித்து, உருப்படுத்தும் இலக்கியத்தாலேதான் மக்களின் வாழ்வு மலர்கின்றது. மக்களின் வெளிக்கோலத்தை மட்டும் கூறுகின்ற இலக்கியங்கள் கால வெள்ளத்தில் அள்ளுப் பட்டு அழிந்து போகின்றன. மக்களின் உள் உணர்ச்சியை எடுத்துக்காட்டுகின்ற இலக்கியங்கள் உலகம் உள்ளளவும் வாழ்கின்றன. இலக்கியத்தைப் படைக்கின்ற புலவனின் உணர்ச்சி யிலே ஊற்றெழுகின்ற எண்ணங்கள், வாழுகின்ற மக்களின் எண்ணங்களுடன் கலந்து, அவர்களின் வாழ்வைப் புதுக்கிப் படைக்கின்றன. மக்களின் வாழ்க்கையைப்பற்றிச் சிந்தியாமல் பாடுகின்ற இலக்கியங்கள், ஓடுகின்ற வெள்ளத்திலே அள்ளுப் பட்டுச் செல்கின்ற சிறிய துரும்புகளைப்போல, மக்களின் உள்ளத்தைவிட்டு விலகி நெடுந் தொலைக்குச் சென்று மறைந்துவிடுகின்றன.

உணர்ச்சியும், சிந்தனையும், உள் ஒளியும் நிரம்பிய புலவனின் இலக்கியம் உலகத்தையே மாற்றிப் படைக்கக் கூடிய ஆற்றல் வாய்ந்ததாகும். எழுச்சிகொண்ட இலக்கியப் புலவன், உறங்கிக்கிடக்கும் மக்களினத்தைத் தட்டி எழுப்பி உலக நிலையை உணரவைப்பான். அஞ்சி ஓடுகின்ற பேடிகளை ஆண்மை

யாளராக்கிவிடவும் இலக்கியப் புலவனால் முடியும். அதிகாரமும் செருக்கும் தன்னலமும் படைத்த கூட்டத்தினரை அடக்கி, அன்பும் பொதுநல உணர்ச்சியும் வாய்ந்த சான்றோராக மாற்றி வாழ்விக்கத்தக்க வல்லமையும் இலக்கியப் புலவனுக்குத்தான் உண்டு. இன்றைய நிலையில் இன உணர்ச்சியையும் தன்மானத் துடிப்பையும் எழுப்பி எங்கள் உள்ளத்தை முறுக்கேற்றக்கூடிய இலக்கியங்களைத்தான் நாங்கள் தேடிக் கற்கவேண்டும். மக்கள் வாழ்வில் ஏற்படுகின்ற இன்னல்களைப் போக்க வழிகாட்டாத இலக்கியங்களைப் படித்துப் படித்துப் பாழ்பட்டுப்போன எங்கள் வாழ்வை இனியாகிலும் மாற்றி வளம்படுத்த வேண்டும்.

இன்று தொடங்கித் தமிழன் தமிழனாக வாழ்ந்த சங்ககால இலக்கியங்களைப் புரட்டிப் பாருங்கள். வழி வழியாக வாழப் பிறந்த மக்களினம் நாங்கள் என்ற எண்ணத்துடன் வாழ்ந்து வாழ்ந்து உயர்ந்த தமிழ் இனத்தின் வாழ்க்கை நெறியை அங்கே காணலாம். ஒரே இனத்தில் பிறந்தவர்கள் தம்முள் பகைகொண்டு போரிடுவதால், அந்த இனம் அயலவனுக்கு அடிமைப்பட்டுவிடும் என்று கூறுகின்ற அறிவுக் குரலையும் அங்கு கேட்கலாம்.

*ஒருவீர் தோற்பினும் தோற்பது நுங்குடியே*
*இருவீர் வேறல் இயற்கையும் அன்றே*
*குடிப்பொருள் அன்று நும் செய்தி கொடித்தேர்*
*நும்மோர் அன்ன வேந்தற்கு*
*மெய்ம்மலி உவகை செய்யும் இவ் இகலே*

*(புறம் - 45)*

ஒரு குலத்தில் பிறந்த மன்னர் இருவர், தம்முள் மாறு பட்டுப் போர்செய்யும் பொழுது கோவூர்கிழார் என்னும் நல்லிசைப் புலவர் சொல்லுகின்ற அறிவுரைகளை இப்பாட்டில் கேட்கின்றோம். உங்களில் ஒருவர் தோற்றாலும் அத்தோல்வியினால் தாக்கப் படுவது உங்கள் குலமேயாகும். இருவரும் வெற்றி பெறமுடியாது. இங்ஙனம் ஒரு குலத்தில் பிறந்த நீங்கள் ஒருவரை ஒருவர் எதிர்த்துப் போர்புரிவதால் உங்கள் குலப்பெருமை குறையப்

போகின்றது. உமது பகைவர் மிகவும் மகிழ்ச்சி அடையப் போகின்றார்கள். போரை நிறுத்தி உங்கள் குலத்தைக் காப்பாற் றுங்கள் என்பதாம். இந்தப் பொருள் உரைகள் இன்று எமது உள்ளத்தைத் தொட்டு உணர்ச்சியை ஊட்டுகின்றன. உட்பகை களை உதறித்தள்ளி உடனே ஒன்றுபடுங்கள். ஒன்றுபட்டு நின்று உங்கள் உரிமைக்காகப் போராடுங்கள். உங்கள் ஆவியினும் இனிய அன்னை மொழிக்கு இன்னல் வந்த நிலையைக் கண்டு கொண்டுமா, இன்னமும் நீங்கள் முன்னைய வேறுபாடுகளைக் காட்டி முதன்மைபெற முயல்கின்றீர்கள் என்றெல்லாம் கோவூர் கிழார் எம்மைக் கேட்கின்றார்.

இங்ஙனம், இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்ட சங்க இலக்கியத்திலே கேட்கின்ற பொருள் உரைகள் இன்றைய இருபதாம் நூற்றாண்டில் வாழ்கின்ற தமிழ் இனத்துக்கு ஏற்பட்ட இன்னலைப் போக்க வழிகாட்டியாக நின்று விளங்குகின்றன. இதனால் மக்களின் வாழ்க்கையோடு ஒன்றுபட்ட இலக்கியத்தின் நீண்ட கால வாழ்வை உணர்கின்றோம்.

இனி, இன்றைய நூற்றாண்டில் எழுந்த மக்கள் இலக்கியங்களிலும் எங்கள் சிந்தனையை எழுப்பி உணர்ச்சி ஊட்டு கின்ற உரிமைக் குரலைக் கேட்கலாம்.

*ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு — நம்மில்*
*ஒற்றுமை நீங்கில் அனைவருக்குந் தாழ்வு*

என வரும் பாரதியாரின் அறிவுக்குரலைக் கேளுங்கள், இந்தக் குரல் புறநானூற்றிலே கேட்ட கோவூர்கிழார் குரலுடன் கலந்து நின்று, எமதுள்ளத்தில் உரிமை வேட்கையையும் ஒற்றுமை உணர்ச்சியையும் எழுப்புகின்றது. இதனை அடுத்து இன்னும் ஓர் உணர்ச்சிக் குரல் எமக்குக் கேட்கின்றது.

*வெள்ளம்போல் தமிழர் கூட்டம்*
*வீரங்கொள் கூட்டம் அன்னார்*
*உள்ளத்தால் ஒருவரே மற்று*
*உடலினால் பலராய்க் காண்பார்*

*கள்ளத்தால் நெருங் கொணாதே*
*எனவையம் கலங்கக் கண்டு*
*துள்ளும்நாள் எந்நாள் உள்ளம்*
*சொக்கும்நாள் எந்த நாளோ*

இந்தப் பாட்டைப் படிக்கும் பொழுது எழுகின்ற இன்பத்தையும் இன உணர்ச்சியையும் எழுத்தினால் எழுதமுடியுமா? தமிழரின் கூட்டம் வெள்ளம் போல எழுந்து போர்புரிந்து, உரிமைகளைப் பாதுகாக்கின்ற வீரர் கூட்டம். அவர்கள் உள்ளத்தால் ஒருவர்தான். உடம்புகளால் மட்டும் பலர் போலக் காட்சி அளிக்கின்றார்கள். இங்ஙனம் கருத்தொருமித்து நின்று உரிமைப் போராடுகின்ற தமிழர்களை இனிமேல் கள்ளத்தால் (வஞ்சனையால்) வெல்ல முடியாது என்றெல்லாம் எண்ணி எண்ணி இந்த உலகம் கலங்கவேண்டுமாம். இங்ஙனம் உலகம் தமிழர் ஒற்றுமையைக் கண்டு கலங்குகின்ற நாள் எந்த நாளோ, அந்த நாளைக்கண்டு, என் உள்ளம் எழுச்சிகொண்டு இறுமாக்கின்ற நாள் எந்த நாளோ கூறுங்கள் என்று பாரதிதாசன் தமிழ் மக்களைக் கேட்கின்றார். அந்த நாள் இந்த நாள்தான் என்று நாங்கள் பாரதிதாசனுக்குச் சொல்லுகின்றோம். தமிழர்கள் விழித்து விட்டார்கள். விடுதலைப் போர் முழக்கம் தமிழகம் எங்கும் கேட்கிறது. இன உணர்ச்சி கொண்ட தமிழர் கூட்டம், வெள்ளம்போல் வெளிப்பட்டு விட்டார்கள். புதிய இலங்கியங்கள் தோன்றுகின்ற சூழ்நிலையை இன்றைய தமிழர் தோற்றுவித்துவிட்டார்கள். அறத்தின் நிழலிலே நின்று தமிழர்கள் கொட்டுகின்ற விடுதலைப் போர் முரசு வெளி உலகெல்லாம் ஒலிக்கின்றது. இன்றைய இன எழுச்சி, இனி வருங்கால இனத்துக்கு வழிகாட்டுகின்ற மக்கள் இலக்கியத்தை மலர்த்தித் தமிழை வாழ்விக்கின்றது என்றுதான் கூறவேண்டும்.

*“இறவாத புகழுடைய புதுநூல்கள்*
*தமிழ் மொழியில் இயற்றல் வேண்டும்”*

# அன்னை மொழியின் இன்னல் போக்குவோம்

அன்புக்குரிய அன்னையரே! தந்தையரே! இளஞ்செல்விகளே! செல்வர்களே! விழித்தெழுங்கள். எங்கள் அன்னை மொழியாகிய தமிழுக்கு வந்த இன்னலைப் போக்க ஒன்று சேருங்கள். மொழிதான் ஒரு மக்கள் இனத்தின் உயிர். மொழி அழிந்தால் இனம் அழியும். தமிழ்மொழி மறைந்தால் தமிழர் என்றொரு இனமே இல்லாமல் மறைந்து போகும். தமிழர்கள் தங்கள் மொழியைப் போற்றி வந்த மரபு மிக மேலானது. தமிழ் மொழியைத் தெய்வமாக எண்ணி வழிபடுகின்ற பெருமை தமிழர்களுக்கு உரியதாகும். தங்கள் உள்ளத்தில் நின்று சுரக்கின்ற எண்ணங்களை வெளிப்படுத்த உதவும் மொழியைத் தெய்வமாக வைத்து வழிபடுகின்ற வழக்கம் பிறமொழியாளரிடம் கிடையாது. தமிழர்கள் தமிழ்மொழியைப் பாராட்டிப் பல ஆயிரக்கணக்கான பாக்களைப் பாடியுள்ளார்கள். இன்றைய உலகில் தமிழர்களுக்குப் பெருமையைக் கொடுப்பது தமிழ் மொழி ஒன்றேயாகும். தமிழ்மொழியின் எழுத்தும் சொல்லும் அவற்றின் புணர்ப்பும் பொருளும் தமிழ்மக்களின் அறிவுத் திறனைக் காட்டுகின்றன. தொல்காப்பியம் ஐயாயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்ட தமிழரின் நாகரிகத்தை ஆய்ந்து கூறுகின்றது. சங்க இலக்கியங்கள் இரண்டாயிரத்து ஐந்நூறு ஆண்டுகளுக்கு முந்திய தமிழரின் சிறந்த வாழ்வை எடுத்துக்காட்டுகின்றன. தமிழ்மொழி பல பல நூற்றாண்டுகளாகப் பண்பட்டு வளர்ந்த செம்மை பொருந்தியது. வள்ளுவர் தமது உள்ளத்தில் ஊறிய எண்ணங்களை அள்ளித்தருதற்கும் பொருத்தமான சொல்வளமும், பொருள் வளமும், ஓசைவளமும் படைத்த

உயர் தனிச் செம்மொழி தமிழேயாகும். இங்ஙனம் எளிமையும் செழிப்பும் இளமையும் கனிந்த நிலையில் நின்று, இன்றும் எம்முடன் வாழ்கின்ற எம் அன்னை மொழியாகிய தமிழை நாம் பாதுகாக்க வேண்டும்.

எங்கள் அன்னைமொழி மிகத் தொன்மை வாய்ந்தது. அது நாவலத்தீவு தமிழ்கூறு நல்லுலகமாய்த் திகழ்ந்ததைக் கண்டது. இந்துமாக்கடல் நிலப்பரப்பாய் நிலவியதைக் கண்டது. இமய மலை நீருள் மூழ்கிக்கிடந்த நிலைமையைக் கண்டது. இங்ஙனம் காலங்கடந்து வாழ்கின்ற எங்கள் அன்னைமொழி இன்னும் கன்னித்தமிழாகவே விளங்கி, எங்கள் உள்ளத்தில் உலாவுகின்றது. பொருளை இழந்தாலும் மீண்டும் தேடிக்கொள்ளலாம். அரசை இழந்து அடிமையானாலும் அதனையும் ஒருகாலம் பெற்றுக் கொள்ளலாம். நாம் பேசுகின்ற அன்னைமொழியை இழந்தால் ஒருபோதும் பெறமுடியாது. எங்கள் உள்ளத்தில் ஊறுகின்ற எண்ணங்கள்தான் எம்மை வாழ்விக்கின்றன. எங்கள் முன்னோரின் உள்ளத்தில் ஊறிய எண்ணங்களுடன், இன்று வாழ்கின்ற எங்களுடைய எண்ணங்களும் கலந்து செயற்படுதற்குத் துணை யாய் உள்ளது நாம் பேசுகின்ற மொழியேயாகும். மொழி உரிமை பறிக்கப்பட்டால் எங்கள் இனத்தின் உயர்ந்த பண்பாடு களை உணர்த்துகின்ற இலக்கியங்களும் அறிவு நூல்களும் அருள் நூல்களும் அழியவேண்டிய நிலைமை ஏற்படும்.

இன்றைய உலகெங்கும் உரிமைக் குரல் கேட்கின்றது. உரிமையைப் பெறுதற்காக ஆற்றுகின்ற போரின் எழுச்சி, இனிமேல் அடிமை வாழ்வின் அடிச்சுவட்டையும் காணமுடியாது என்று எண்ணத்தக்கதான நிலைமையை உணர்த்துகின்றது. இங்ஙனம் அடிமைவாழ்வு அழிகின்ற நேரத்தில் அரசாண்ட, பரம்பரைச் சிறப்புப் பொருத்திய தமிழர் இனம் மட்டும் உரிமைகளைப் பறிகொடுத்து வாழ விரும்புமா? மானத்திற்கு இலக்கணம் சொன்ன வள்ளுவனைப் பெற்ற தமிழர் இனம் மானம் அழிந்து வாழ்வதா? சிந்தித்துப் பாருங்கள். சாதி, சமயம், பணம், பட்டம் என்ற வேறுபாடுகளை எல்லாம் உதறித் தள்ளுங்கள்.

தமிழைத் தம் அன்னை மொழியாகப் பெற்ற தமிழர் எல்லோரும் ஓர் இனம் என்ற உணர்ச்சியுடன் ஒன்று பட்டு எழுங்கள்.

*தமிழ் எங்கள்உயிர் என்பதாலே - வெல்லும்*
*தரமுண்டு தமிழருக்கு இப்புவி மேலே*
*தமிழ் என்னில் எம்உயிர்ப்பொருளாம் - இன்பத்*
*தமிழ் குன்றுமேல் தமிழ்நாடெங்கும் இருளாம்*
*தமிழுண்டு தமிழ்மக்கள் உண்டு - இன்பத்*
*தமிழுக்கு நாளும்செய்வோம் நல்ல தொண்டு*
*தமிழ் என்று தோள்தட்டி ஆடு - நல்ல*
*தமிழ் வெல்கவெல்க என்றே தினம் பாடு*

என வரும் பாரதிதாசன் குரலைக் கேளுங்கள். தமிழர்கள் தமிழைத் தங்கள் உயிராகக் கொள்கின்றவர்கள். உயிர்போன்ற தமிழ்மொழிக்கு வருகின்ற இன்னலைத் தமது உயிருக்கு வருகின்ற இன்னலாகவே எண்ணுவார்கள். தமிழ் இருக்கின்ற படியால்தான் தமிழ்மக்களும் இருக்கின்றார்கள். தமிழ் அன்னையின் மக்கள் தமிழர்கள். அன்னைக்கு இன்னல் வரக்கண்டும், இன்னமும் நாங்கள் ஒன்றுபடாமல் நிற்பதா? இன்றே ஒன்றுபடுங்கள். தமிழ் எங்கள் அன்னைமொழி என்று எல்லோரும் தோளைத் தட்டி ஆடுங்கள். தமிழ் வெல்க, தமிழ் ஆட்சி மொழியாகுக என்றெல்லாம் பாடுங்கள் என்றுதான் பாரதிதாசன் சொல்கின்றார். தமிழர்கள் கருத்தொருமித்து எழுச்சி கொண்டால் தமிழர்களின் அன்னைமொழி தனக்கு வந்த இன்னல்கள் எல்லாம் நீங்கி, இன்னமும் ஆயிரம் ஆயிரம் ஊழிகள் நின்றுவாழும்.

இனித் தமிழ்மக்கள் தங்கள் அன்னைமொழியாகிய தமிழை மிக ஆர்வத்துடன் கற்க வேண்டும். நாம் பேசுகின்ற அன்னைமொழியின் மாண்பை அறிய அறிய எழுகின்ற இன்பம் எம்மை ஈடேற்றும். உணர்ச்சியுள்ளவர்களாகப் புதுக்கிப் படைக்கும். அன்னைமொழியின் இன்னலைப் போக்க வேண்டுமென்ற ஆர்வமும் உயிர்த்துடிப்பும் உண்டாகும்.

*என்னருந் தமிழ்நாட் டின்கண்*
*எல்லோரும் கல்வி கற்றுப்*
*பன்னரும் கலைஞா னத்தால்*
*பராக்கிர மத்தால் அன்பால்*
*உன்னத இமயமலை போல்*
*ஓங்கிடும் கீர்த்தி யெய்தி*
*இன்புற்றார் என்று மற்றோர்*
*இயம்பக் கேட்டிடல் எந்நாளோ*

என்று பாரதிதாசன் கேட்கின்றார். உள்ளத்தில் கல்வி அறிவு ஏற ஏற, உள்ஒளி பெருகும். உண்மை உணர்ச்சியும் தன்னம்பிக்கையும் பொது நலம் பேணும் பண்பும் உண்டாகும். அறத்தை மறந்து வாழ்கின்ற கொடியோரை எதிர்த்துப் போராடக் கூடிய மனத்திண்மை ஏற்படும். இந்த ஆற்றல்கள் எல்லாம் அமைந்த நிலைதான், உரிமைப் போர் ஆற்றுதற்கு ஏற்ற தகுதியை எமக்குத் தரும்.

நாங்கள் எங்கள் அன்னைமொழியின் இன்னலை வெறும் வாய்ச்சொல்லால் போக்க முடியாது. பல ஆண்டுகள் தொடர்ந்து போராற்ற வேண்டிய நெருக்கடிகள் ஏற்படலாம். நாம் அந்த நெருக்கடிகளைக் கண்டு மனந்தளர்ந்தால் உரிமைப்போரில் பின்னடைய வேண்டிவரும். என்ன துன்பங்கள் அடுத்தடுத்து வந்தாலும், அவற்றை எல்லாம் ஏற்கக்கூடிய மனநிலை நமக்கு வேண்டும். பசித்துன்பம், சிறைத்துன்பம், பதவி நீக்கத் துன்பம் முதலான பல துன்பங்களையும் தாங்கி, எங்கள் அன்னை மொழியின் இன்னலைப் போக்குவோம் என்ற மான உணர்ச்சி எமக்குத் தோன்றிவிட்டால், வெற்றி மிக விரைவில் கிட்டிவிடும் என்றே கூறலாம். தன்னம்பிக்கையும், தளராத உழைப்பும் உடையவர்களின் உரிமைகளை எவராலும் பறித்துக்கொள்ள முடியாது. இன்று தமிழ்மக்களிடத்தில் தோன்றியுள்ள விழிப் புணர்ச்சி, இனி வரும் புதிய உரிமைத் தமிழகத்தைப் படைத்து விடுமென்றே கூறலாம். நெருக்கடியைக் கண்டு நெஞ்சம்

தளராமல் போராடத் துணியுங்கள். உங்கள் வருங்கால மரபினர்க்கு வாழ வழிவகுத்து விடுங்கள். தமிழ்மொழியின் தெய்வச் சாயலும் பொருள்மரபும் நீண்டகால நிலைபேறும் எம்மைக் காப்பாற்றி வாழ்விக்கும் என்ற துணிவுடன் போரைத் தொடங்குவோம்.

*"தமிழுக்கு அமுதென்று பேர் - அந்தத்*
*தமிழ் இன்பத்தமிழ் எங்கள் உயிருக்குநேர்"*

## சங்ககாலத் தமிழர்

தமிழர்கள் தமிழராக வாழ்ந்த தனிச்சிறப்புடைய காலம், சங்ககாலமே ஆகும். ஆண்மையும், அறிவும், அறத்தோடு கலந்து ஒளிவீசிய பெருவாழ்வைச் சங்ககாலத் தமிழகத்தில் காணலாம். குடிகளின் நலம்பேணி அரசாண்ட முடியுடை மூவேந்தரின் கொடிகள் தமிழகமெங்கும் நிழல் பரப்பின. அறிவும் ஆராய்ச்சியும் அறப்பண்பும் நிறைந்த சான்றோர்கள், மன்னரின் ஆட்சித் துணையாளராக வீற்றிருந்து, மக்கள் வாழ்வை மலர்த்தினார்கள். குடிகளின் நன்மையைக் கருதிப் புரிகின்ற ஆட்சிதான் வழிவழியாக நிலைபெறும் என்பதை அடிக்கடி மன்னர்களுக்கு எடுத்துரைக்கும் அறங்கூறவையங்கள் பல ஆங்காங்கு விளங்கின. மன்னர்கள் சான்றோரையும் தமிழ்ப் புலவர்களையும் தம் உயிரினும் மேலாக மதித்தார்கள். கருத் தொருமித்த காதல் வாழ்வு போற்றப்பட்டது. மக்கள் உள்ளத்தில் உரிமை உணர்ச்சியும் கலை ஊற்றமும் சுரந்தன. ஈகையும் அன்பும் வாகையும் அருளும் வாழ்வுடன் மருவி, பயன் பெருக்கின. தமிழகம் இமயம் வரையும் பரந்து கிடந்தது. தமிழ் நாடெங்கும் மலைவளமும் நிலவளமும் ஆற்றுவளமும் நிரம்பிப் பொலிந்தன. குடிகள் மன்னனைத் தங்கள் உயிராக மதித்தார்கள்.

*"நெல்லும் உயிரன்றே நீரும் உயிரன்றே*
*மன்னன் உயிர்த்தே மலர்தலை உலகம்"*

என்ற குரல் சங்ககாலத் தமிழகத்தில் கேட்கின்றது. உயிரைப் பாதுகாக்கின்ற உணவும் நீரும் குறைவில்லாமல் கிடைத்தாலும், ஆளுகின்ற மன்னவன் அறத்தை மறந்தானானால், எல்லை இல்லாத அல்லல்களை மக்கள் அடைய வேண்டிய

நிலைமை ஏற்படும். மழை வளஞ் சுருங்கி வாழ வழியில்லாத வறுமை ஏற்பட்டாலும் ஆளுகின்ற மன்னவன் அறத்தைப் பாதுகாப்பானானால், அவன்கீழ் வாழும் குடிகள் மகிழ்ச்சியுடன் இருப்பார்கள். இன்றைய மக்கள் ஆட்சியிலும் ஆளுங் கட்சித் தலைவனின் கையிலே தான் மக்களின் உரிமைகள் இருக்கின்றன. ஆளுங்கட்சித் தலைவன் மக்களின் ஆக்கங்கருதி நடுவுநிலை யுடன் ஆட்சி புரியாவிட்டால் அவனின் ஆட்சி நீண்டகாலம் நிலை பெற முடியாது.

சங்ககாலத்தில் முடியாட்சி நிலவினாலும், குடியாட்சித் தலைவன் போலவே மன்னன் மக்களின் ஆதரவை எதிர்பார்த்து ஆட்சிபுரிந்தான்.

*"சிறுசொற் சொல்லிய சினங்கெழு வேந்தரை*
*அருஞ்சமம் சிதையத் தாக்கி முரசமொடு*
*ஒருங்ககப் படேன் ஆயிற் பொருந்திய*
*என்னிழல் வாழ்நர் சென்னிழற் காணாது*
*கொடியன் எம்இறையெனக் கண்ணீர் பரப்பிக்*
*குடிபழி தூற்றும் கோலேன் ஆகுக"*

*(புறம் - 72)*

இந்தப் பாட்டிலே தலையாலங்கானத்துச் செருவென்ற நெடுஞ் செழியன் குரலைக் கேட்கின்றோம். "என்னை இகழ்ந்து போர்க்கு அறைகூவிய மன்னர்களை நான் வெல்லத் தவறினால், என் ஆட்சியின் கீழ் வாழ்கின்ற மக்கள், அல்லற்பட்டுச் செல்லும் நிழலைக் காணாது, எம் அரசன் கொடியோன் எனப் பழிதூற்றிக் கண்ணீர் சொரியத்தக்கதான கொடுங்கோலன் ஆவேன்" என்று நெடுஞ்செழியன் கூறுகின்றான். முடியுடைப் பெருவேந்தனாகிய நெடுஞ்செழியன், தன்னுடைய ஆட்சி நிலைபெறவேண்டு மானால், குடிகளின் அன்பும் ஆதரவும் வேண்டுமென்பதை ஒப்புக் கொள்கின்றான். சங்ககாலத்தில் நிலவிய மன்னன் ஆட்சி மக்கள் ஆட்சியாகவே விளங்கியதென்பதை நெடுஞ்செழியனின் வஞ்சின மொழிகள் நிலைநாட்டுகின்றன.

இங்ஙனம், ஆளுகின்ற மன்னனும் வாழுகின்ற மக்களும் அன்புரிமையால் ஒன்றுபட்டுயர்ந்த சங்கத் தமிழகத்தை எண்ண எண்ண உள்ளம் எழுச்சி கொள்கின்றது. மன்னனையும் தம்முள் ஒருவனாகவே கருதி மக்கள் மகிழ்ந்தார்கள். மன்னனும் தான் மக்களின் தொண்டன் என்ற எண்ணத்துடன் ஆட்சிபுரிந்தான். தமிழ்நாடு தமிழருக்கே என்ற இறுமாப்பும் உரிமை வேட்கையும் சங்ககால மக்கள் உள்ளத்தில் நிலை பெற்றிருந்தன. நாட்டின் உரிமையைப் பாதுகாத்தலே ஆண்மக்களின் ஆண்மைச் செயலென்று சங்ககாலத் தாய்மார் எண்ணினார்கள்.

*ஈன்று புறந்தருதல் என்தலைக் கடனே*
*சான்றோன் ஆக்குதல் தந்தைக்குக் கடனே*
*வேல்வடித்துக் கொடுத்தல் கொல்லற்குக் கடனே*
*நன்னடை நல்கல் வேந்தற்குக் கடனே*
*ஒளிறுவாள் அருஞ்சமம் முருக்கிக்*
*களிறுஎறிந்து பெயர்தல் காளைக்குக் கடனே"*

*(புறம் - 312)*

என்னும் பாட்டைப் படியுங்கள். இந்தப் பாட்டிலே சங்ககாலத் தாய் ஒருவரின் குரல் கேட்கின்றது. தான் பெற்று வளர்த்த புதல்வன் கற்று வல்லவனாகிவிட்டால் மட்டும் போதாதாம். அவன், போர்க்களத்தில் யானையை வேலால் எறிந்து வீழ்த்தும் போர் வீரனாகவும் விளங்க வேண்டுமாம். இங்ஙனம் ஆண்மையும், அறிவும், அஞ்சாமையும் வாய்ந்த வீர மைந்தர்களை ஈன்று தமிழ் நாட்டைக் காப்பாற்றிய வீரத் தாய்மாரின் உணர்ச்சிக் குரலிற் கலந்து இன்றைய தாய்மாரும், செல்விகளும் விழித்துச் செய லாற்ற வேண்டும்.

இனி, அறத்தை மறந்த ஆண்மையும் ஆட்சியும் அழிந்தே போவன என்ற கொள்கை சங்ககாலத் தமிழர் வாழ்வில் ஊறிக் கிடந்தது. அவர்கள் அறத்தின் வழி நின்று அழிவதை வாழ்வ தாகவே மதித்தார்கள்.

*"கடுஞ் சினத்த கொல்களிறும்*
*கதழ்பரிய கலிமாவும்*

*நெடுங்கொடிய நிமிர்தேரும்*
*நெஞ்சுடைய புகன்மறவரும் என*
*நான்குடன் மாண்ட தாயினும் மாண்ட*
*அறநெறி முதற்றே அரசின் கொற்றம்"*
*(புறம் - 55)*

என்ற குரலைக் கேளுங்கள். நாற்பெரும் படைகளும் நிரம்பி இருப்பதினால் ஏற்படும் போர்த்திரு மட்டும் அரசரின் வெற்றியாகாது. அறத்தின் நிழலிலே நின்று அரசாட்சி மலரும் பொழுதுதான் உண்மையான வெற்றியை அரசன் அடைகின்றான் என்று புலவர் கூறுகின்றார். அறத்தின் ஊற்றமாக அரசை அமைத்த தமிழகம் இன்று அறத்தை மறந்த ஆட்சியாளர்களால் அல்லற் படுகின்றது.

*அறத்தின்ஊங்கு ஆக்கமும் இல்லை அதனை*
*மறத்தலின் ஊங்கில்லைக் கேடு*

என வரும் வள்ளுவரின் அறிவுக் குரலை இன்றைய தமிழர்கள் உயிர்த்துணையாகக் கொண்டு உரிமைப் போரில் இறங்கவேண்டும. "அறநெறி முதற்றே அரசின் கொற்றம்" என வரும் சங்ககாலத் தமிழனின் அறிவுக் குரலுடன், "அறத்தின் ஊங்கு ஆக்கமும் இல்லை" என வரும் வள்ளுவர் குரலையும் சேர்த்துப் படியுங்கள். சங்ககாலந்தொட்டு வள்ளுவர் காலம் வரையும் தொடர்ந்து நிலைபெற்ற அறத்தின் செழிப்பிலே ஊறி ஊறிப் பண்பட்ட தமிழர் பரம்பரையில் பிறந்த நாங்கள், இன்று அல் லற் படுகின்றோம். அல்லற் பட்டாலும் அறத்தை மறக்க மாட்டோம் என்று, அன்னைமொழிமேல் ஆணையிட்டு உரிமைப்போர்க்குச் செல்வோம். இறந்தாலும், செல்வம் எல்லாம் தொலைந்தாலும் அறத்தை மறவாத ஆண்மையாளராக வாழ்வோம். வாழ்ந்து, வாழ்ந்து தந்தைக்குப்பின் மைந்தனாய் வாழையடி வாழையாக உரிமைப்போரை ஆற்றுவோம்.

சங்ககாலத் தமிழ் - சங்கத் தமிழ் - கூடலில் ஆய்ந்த ஒண் தீந்தமிழ் - எட்டுத் தொகையையும் பத்துப் பாட்டையும்

படைத்துத் தந்த தமிழ் - எங்கள் அன்னைமொழி என்று எண்ணி எண்ணி இன்பவெறி கொள்ளுங்கள். அறம் வளர்த்த சோழரின் ஆண்மை வாழ்வைப் பின்பற்றிச் செயலில் இறங்குங்கள்.

*"மறங்கெழு சோழர்*
*உறந்தை அவை அவையத்து*
*அறம் நின்று நிலையிற்று"*

என்ற குரலைக் கேளுங்கள். அறத்தின் ஊற்றத்திலே நின்று ஆட்சிபுரிந்த சங்ககாலத் தமிழகம் போன்ற தமிழகத்தை நாங்கள்தான் ஆக்க வேண்டும். தமிழர் என்ற இனம் தன்மானமும் அறப் பண்பும் ஆண்மையும் வாய்ந்த இனம் என்று இன்றைய உலக மக்கள் அறிந்து பாராட்டத் தகுந்த ஏற்றத்தை நாங்கள் படைக்க வேண்டும். இனி வரும் இன்பத் தமிழகத்தை - சங்க காலத் தமிழகம் போன்ற தன்மானத் தமிழகத்தை ஆக்குதற் கேற்ற ஆண்மையாளராக எங்களை நாங்கள் ஆற்ற வேண்டும்.

*"வெங்கொடுமைச் சாக்காட்டில்*
*விளையாடும் தோளெங்கள் வெற்றித் தோள்கள்*
*கங்கையைப்போல் காவிரிபோல்*
*கருத்துக்கள் ஊறுமுள்ளம் எங்கள் உள்ளம்*
*வெங்குருதி தனிற்கமழ்ந்து*
*வீரம்செய்கின்ற தமிழ் எங்கள் மூச்சாம்"*

என வரும் பாரதிதாசன் குரலைக் கேளுங்கள். அறத்தை மறந்து கொடியோரை எதிர்த்து, இறக்கின்ற செயலை விளை யாட்டாகக் கொள்கின்ற வீர உள்ளம் எமக்கு வேண்டும். கங்கை யுடன் காவிரி கலத்தல் போல அறமும் அன்பும் கலந்த பண்பாடு எமது வாழ்வில் சுரந்து பாயவேண்டும். இரத்த வெள்ளத்திலே கிடந்தும் தமிழ் மணக்கின்ற நெஞ்சம், எங்கள் நெஞ்சமாக மாற வேண்டும். இந்தத் தகுதிகள் எல்லாம் எங்களிடம் என்று சேருமோ, அன்றே சங்ககாலத் தமிழகம் போன்ற புதிய உரிமைத் தமிழகத்தைப் படைத்துவிடுவோம். இனிக் கட்டாயம் படைத்து விடுவோம்.

# அரசாண்ட தமிழர்

இன்று ஆட்சி உரிமையை இழந்து அல்லற்படுகின்ற தமிழர்கள், அன்று அரசாண்ட ஆண்மைத் தமிழரின் வழிவந் தோர் என்பதை எண்ணும்பொழுது உணர்ச்சி எழுகின்றது. குடிகளின் நலத்தைப் பேணிச் செங்கோல் செலுத்திய தமிழரின் ஆட்சி ஏன் ஒழிந்தது என்பதை ஆராய்ந்து அறியவேண்டும். மன்னர்களுக்கும் மக்களுக்கும் உள்ள தொடர்பும் அன்புரிமை யும் மெல்ல மெல்லக் குறைந்து, மக்கள் மன்னர்களின் அடிமைகள் என்ற நிலை ஏற்பட்டிருக்க வேண்டும். மன்னரின் ஆட்சிக்கும், மக்களின் வாழ்க்கைக்கும் தொடர்பில்லாத அளவுக்கு ஏற்பட்ட வேறுபாடுகளால் ஆட்சி உரிமை அழிந்திருக்கலாம். முல்லை, குறிஞ்சி, மருதம், நெய்தல் என்னும் நிலப் பிரிவுகளின் அமைப்புக்கு ஏற்ப வாழ்ந்த தமிழ் மக்கள் காலப்போக்கில் குலப் பிரிவுகளை ஏற்படுத்தித் தம்முள் உயர்வு தாழ்வு கற்பித்துக் கொண்டார்கள். நான் உயர்ந்த குலம், அவன் தாழ்ந்த குலமென்று தமிழர்கள் தம்முள் வேறுபட்டுப் பிரித்து வாழத் தொடங்கிவிட்டார்கள். இதனால் தமிழர் என்ற இன உணர்ச்சி குறையத் தொடங்கியது. இத்துடன் சமயப் போரும் தமிழரின் ஒற்றுமையைக் கொலை செய்தது. சாதிப் பிரிவாலே பிரிந்த தமிழர்கள் சமயப் போராலே தங்களைத் தாங்களே எதிர்த்துக் கொல்லும் பகைவர்களாக மாறிவிட்டார்கள். மன்னர்கள் தங்களைக் கடவுளின் "திரு அவதாரம்" எனக் கூறிப் பொது மக்களை அடிமைகளாக நடத்த முற்பட்டார்கள். உயர்ந்த குலத்தினரையும் பொருள் படைத்த பெருஞ்செல்வர்களையுமே

மன்னர்கள் மதித்தார்கள். ஏனைய பொது மக்கள் அடைகின்ற துன்பங்களைப் பொருட்படுத்தாமல் ஆட்சி செலுத்துகின்ற கொடி யோராக மன்னர்கள் மாறிவிட்டார்கள். இந்த நிலைமைகள், கி.பி. 14-ம் நூற்றாண்டு தொடக்கம் தமிழ்நாட்டில் இடம்பெற்று விட்டதென்பதை அந்நூற்றாண்டுகளில் எழுந்த தமிழ் இலக்கியங் களால் அறிகின்றோம்.

சங்ககாலத்தில் தமிழர் என்ற ஒரு இனமே தமிழ்நாட்டில் விளங்கியது. தமிழ் மன்னர்கள் ஆட்சி உரிமைக்காக ஒருவரை ஒருவர் எதிர்த்துப் போர்புரிந்த செய்திகள் பல, சங்க இலக்கியங் களில் காணப்படுகின்றன. சாதியாலும் சமயத்தாலும் வேறு பட்டுத் தமிழ்மக்கள், தமிழ்மக்களை எதிர்த்துப் போராடிய செய்தியொன்றும் சங்க இலக்கியங்களில் கூறப்படவில்லை. ஆட்சி உரிமைக்காகத் தம்முள் வேறுபட்டு நின்ற தமிழ் வேந்தர்களும், தமிழ் நாட்டிற்கு அல்லது தமிழ் இனத்திற்கு ஓர் இன்னல் வந்தவுடன் ஒன்றுபட்டுவிடுவார்கள். தங்களுக்குள் ஏற்பட்ட சிறிய வேறுபாடுகளுக்காகத் தமிழினத்தை அடிமைப் படுத்த தமிழர்கள் வழிகாட்டிகளாக இருந்தார்கள் என்ற வரலாற்றைச் சங்க இலக்கியங்களில் காண முடியாது. ஆரியரின் தொடர்பு தமிழ்நாட்டில் ஏற்பட்ட கி.பி. 7-ம் நூற்றாண்டு தொடக்கம் படிப்படியாகத் தமிழர்கள் தம்முள் வேறுபட்டுத் தமிழினத்தின் சிறப்பைக் கெடுத்த வரலாற்றை அறிகின்றோம்.

இன்று நாங்கள் அடைகின்ற இன்னல்களுக்கெல்லாம் காரணம், மேற்கூறியவாறு தமிழர்கள் தமிழரை எதிர்த்து வாழ்ந்து வந்ததின் பயன்தான் என்பதை ஒப்புக்கொள்ள வேண்டும். தமிழர்கள் தமிழர் என்ற இன உணர்ச்சி இல்லாமல், மத உணர்ச்சியாலும் குல உணர்ச்சியாலும் பண உணர்ச்சி யாலும் சிறு சிறு கூட்டங்களாகப் பிரிந்து வாழ்ந்து பழகி விட்டார்கள். அந்தப் பழக்கம் வாழைபடி வாழையாக வந்த தமிழரின் பரம்பரை உரிமைகளையெல்லாம் பறிகொடுத்து

வருந்துகின்ற நிலையை இன்று தந்துவிட்டது. ஐந்து நூற்றாண்டு களாகத் தொடர்ந்து தமிழர் இனத்திலே வளர்ந்து வந்த இத் தீமைகள் எல்லாம் இன்று வாழ்கின்ற தமிழ்மக்களாகிய எங்களைத் தாக்குகின்றன. தீமைகள் எம்மை நோக்கி வருவதைக் கண்டு நாம் அஞ்சிப் புறங்கொடுத்தால் எங்கள் கண்காணவே எமது இனம் அழிந்துவிடும். எதிர்காலத்தில் தமிழர் என்றொரு இனம் இருந்ததென்ற அடிச்சுவடும் இல்லாமல் மறைந்து போகும்.

அரசாண்ட தமிழர் நாங்கள், உரிமையைப் பறிகொடுத்து வாழ்வதிலும் உயிரை விடுதல் உயர்ந்தது என்ற கொள்கையை உடைய தமிழர் நாங்கள் என்ற உண்மைகளை நிலைநாட்ட வேண்டிய நெருக்கடி இன்று எம்மை நோக்கி வருகின்றது. எங்களின் செயல்களை வெளி உலக மக்கள் மிக விழிப்புடன் பார்க்கின்றார்கள். உரிமை பறிபோவதைக் கண்டும் நாங்கள் வாளாவிருந்தால் எம்மை அவர்கள் இகழ்வார்கள். உரிமையைப் பாதுகாத்தற்காக நாங்கள் அறப்போர் தொடுத்து ஆண்மையுடன் செயலாற்றுவதைக் கண்டால் எங்களைப் பாராட்டுவார்கள். எங்கள் உரிமைக் குரலைக் கேட்டு, எம்மை ஊக்கி வழிகாட்டு வார்கள். சொல்ல முடியாத துன்பங்களைத் தொடர்ந்து பல ஆண்டுகளாக அனுபவித்துத் தமது உரிமைகளைப் பெற்ற மானமுள்ள மக்களினம் இன்றும் வாழ்கின்றார்கள். அவர்களின் நன்மதிப்பை நாங்களும் பெறவேண்டும். எதிர் காலத் தமிழ்மக்கள் இன்று நாங்கள் புரிகின்ற உரிமைப் போரின் பயனை நுகர்வார்கள். நாங்கள் உரிமையைப் பெறுதற் காக ஆற்றிய செயல்களையும் தியாகங்களையும் போற்றிப் பெரிய இலக்கியங்களை இயற்றுவார்கள். உலகம் எங்கும் தமிழினத்தின் பெருமையையும் உரிமை வேட்கையையும் எடுத்துப் பேசுவார்கள். தமிழரின் நாகரிக வரலாற்றை ஆராய்ச்சிப் பாடமாக உயர்ந்த பல்கலைக்கழகங்களில் கற்பிக்கின்ற பெருஞ் சிறப்பைத் தமிழ்மக்கள் கண்டு சிந்தை செழிப்பார்கள்.

இந்த நல்வாய்ப்புக்களை எல்லாம் இன்று வாழ்கின்ற தமிழ்மக்கள் தமது உரிமை எழுச்சியால் இயற்ற வேண்டிய நிலையில் இருக்கின்றார்கள். மடித்த சால்வை குலையாமல் தாம் மட்டும் வாழ வழி தேடிக்கொண்டு அடுத்தவரின் அவலக் குரலுக்குச் செவி கொடுக்காமல் தமிழர்கள் என்ற பெயரோடு மாத்திரம் இருந்த காலத்தை இனி நினைக்கமுடியாது. இனி புதிய உணர்ச்சியும் தன்மானத்துடிப்பும் கொண்ட தமிழர்களாக நாம் வாழவேண்டும். தமிழர், தமிழ்மொழிக்காகவும் தமிழ் நாட்டுக்காகவும் தம் உடல், பொருள், ஆவி மூன்றையும் காணிக்கை கொடுக்கின்ற காலம் கிட்டிவிட்டது. தமிழகத்தில் எதிர்காலச் சிந்தனையும் இன எழுச்சியுங் கொண்ட தன்மானத் தமிழ் இளைஞர்கள் விழித்துவிட்டார்கள்.

*"சொந்த நாட்டில் பிறர்க்கடிமை செய்தே*
*துஞ்சிடோம் - இனி - அஞ்சிடோம்*
*எந்த நாட்டினும் இந்த அநீதிகள்*
*ஏற்குமோ - தெய்வம் - பார்க்குமோ"*

என வரும் பாரதியாரின் தன்மானக்குரல் ஒவ்வொரு இளத்தமிழர் உள்ளத்திலும் உயிர்த்துடிப்பு ஊட்டுகின்றது. அரசுக்கும் அமைச்சுக்கும் இலக்கணம் வகுத்த தமிழர்கள் இன்று தங்கள் நாட்டைத் தாங்கள் ஆளமாட்டாமல் அயலவனுக்கு அடிமைப்பட்டு வாழ்வதிலும் மானக்கேடான செயல் வேறென்ன இருக்கின்றது. ஏனைய இனமக்கள் எங்கள் நாடு எமக்கென்று கூறினால், அது உரிமை உணர்ச்சியாம். தமிழர்கள் மட்டும் தமிழ்நாடு தமிழருக்கே என்று கூறினால், அது குறுகிய நோக்கமாம். இப்படித் தமிழர்களே "தமிழன் தமிழ்நாட்டை ஆள வேண்டும்" எனக் கூறி உரிமைப் போர் தொடுக்கின்ற உண்மைத் தமிழரை இகழ்ந்து உரைக்கின்றார்கள். தமிழர்கள் தமிழை மறந்து - தமிழை இகழ்ந்து - தமிழினால் பேச நாணி வாழ்வதால் மதிப்புத் தேடிய காலம் இனி மறைய வேண்டும். தமிழன்

தமிழைப் படித்தால் - தமிழை மதித்தால் தமிழ் வளரும். தாயை இகழ்ந்தவனை மதித்து வரவேற்கின்ற கண்மூடித்தனம் தமிழகத்தில் நின்று அகலுகின்ற அவலக்குரல் கேட்கின்றது.

*யாம்அறிந்த மொழிகளிலே தமிழ்மொழிபோல்*
*இனிதாவது எங்குங் காணோம்*
*பாமரராய் விலங்குகளாய் உலகனைத்தும்*
*இகழ்ச்சிசொலப் பான்மை கெட்டு*
*நாமமது தமிழரெனக் கொண்டிங்கு*
*வாழ்ந்திடுதல் நன்றோ*

எனப் பாரதியார் மனம் உடைந்து கூறுவதற்கேற்ற அளவு தமிழர்கள் தமிழை மறந்திருந்தார்கள் என்பதை எண்ண எண்ண, இன்றைய இளத்தமிழர் உள்ளம் எரிகின்றது. இங்கிலாந்தின் உரிமைப் போரைப்பற்றி மிக எழுச்சியுடன் தமிழர்கள் பேசுவார்கள். அமெரிக்காவின் விடுதலைக்கு அடிகோலிய ஆண்மையாளரைப்பற்றி மிக ஆர்வத்துடன் தமிழர் பேசுவார்கள். பொதுவுடைமை ருசியாவைப் பற்றியும் அதன் பொருளாதார வளர்ச்சியைப்பற்றியும் தமிழர்கள் புதிய உணர்ச்சியுடன் பேசுவார்கள். இங்ஙனம் எல்லாம் பிறநாட்டாரின் பெருமைகளைப் புகழ்ந்து பேசிப் பேசித் தங்களுக்குள் பிரிந்து வாழ்கின்ற தமிழர்கள், தமிழ்நாட்டிலே தமிழர்கள் பிறர்க்கடிமை யாக இருந்து வாழ்வதைப்பற்றி ஒன்றும் பேசார்கள். கங்கை யையும் கடாரத்தையும் வென்று எங்கும் தமது ஆட்சி நிழலைப் பரப்பிய தமிழர்கள் ஏன் அடிமைப்பட்டார்கள் என்பதைப் பற்றி எள்ளளவும் சிந்திக்கமாட்டார்கள்.

*“கங்கையோடு கடாரம் வென்று*
*காவல் கொண்ட தமிழர் நாம்*
*அங்கையோடு அங்கை தேய்க்கும்*
*அடிமை ஆளர் ஆவதோ”*

என்று, இன்றுதான் இன உணர்ச்சி கொண்ட இளந் தமிழர்கள் கேட்கின்றார்கள். இந்தக் குரலை அடுத்து,

> *“ஆட்சிநிலை ஈழத்திலே*
> *ஆக்கி வைத்த தமிழர் நாம்*
> *மாட்சி கெட்டு உரிமைபோக*
> *மானம் இன்றி வாழ்வதோ”*

என்ற குரலை ஈழத் தமிழ் இளைஞர்களும் எழுப்புகின் றார்கள். இந்த எழுச்சிக்குரல்கள் இனிவரும் எதிர்காலத் தமிழகத்தைப் படைக்கப் போகின்றன. அரசாண்ட தமிழர் மீண்டும் அரியணை ஏறப்போகின்றார்கள்.

# தமிழகத்தை வாழ்வித்த தமிழ்ப் புலவர்கள்

தமிழகம் முழுவதும் தமிழர் ஆட்சியில் மலர்ந்த சங்க காலத்தில் தமிழ்ப் புலவர்கள் பெருந்தலைமை பெற்று விளங்கினார்கள். பொருள் பெறுதற்காகப் பொய் புனைந்து பாடுகின்ற பழக்கம், சங்காலத் தமிழ்ப் புலவர்களிடம் கிடையாது. அவர்கள் அறத்தின் வழிநின்று ஆட்சிபுரிகின்ற மன்னர் களையே மதித்தார்கள். குடிகள் பழிதூற்றக் கொடுங்கோல் செலுத்துகின்ற மன்னர்களைத் தமது அடியின் கீழ்த் தூசள வேனும் மதியாமல், இகழ்ந்து பாடுகின்ற அஞ்சாமைகொண்ட நெஞ்சுடன் தமிழ்ப் புலவர்கள் உலாவித்திரிந்தார்கள். முடியுடைப் பெருமன்னர்கள்கூடத் தம்மைத் தமிழ்ப் புலவர்கள் பாராட்டிப் பாடவேண்டும் என்ற எண்ணத்துடன், அறத்தைப் பாதுகாத்து ஆட்சிபுரிந்தார்கள். நாற்பெரும் படைகளுடன் போர்க்களம் சென்று, மாற்றாரை வென்று, பெறுகின்ற வெற்றிச் செல்வத்திலும் பார்க்கப் புலவர்களால் பாடப்படுகின்ற சிறப்பை மிகப் பெரிதாக எண்ணி மகிழ்கின்ற மன்னர் பலர் தமிழகத்தை ஆண்டார்கள்.

*"நெடுநல் யானையும் தேரும் மாவும்*
*படைஅமை மறவரும் உடையம் யாம்என்று*
*உறுதுப்பு அஞ்சா துடல்சினம் செருக்கிச்*
*சிறுசொற் சொல்லிய சினங்கெழு வேந்தரை*
*அருஞ்சமம் சிதையத் தாக்கி முரசமொடு*
*ஒருங்கு அகப் படேன் ஆயின்*
..............................
*ஓங்கிய சிறப்பின் உயர்ந்த கேள்வி*

*மாங்குடி மருதன் தலைவ னாக*
*உலகமொடு நிலைஇய பலர்புகழ் சிறப்பின்*
*புலவர் பாடாது வரைகஎன் நிலவரை"*
*(புறம் - 72)*

இந்தப் பாட்டில் முடியுடைப் பெருவேந்தனாகிய பாண்டியன் நெடுஞ்செழியனின் குரலைக் கேட்கின்றோம். தலையாலங் கானத்தில் கூடிய தன் பகைவர்களின் மேல் படை எடுத்துச் செல்கின்ற நெடுஞ்செழியன், அப்பகைவர்களைத் தன்னால் வெல்ல முடியாவிட்டால் ஏற்படும் பழியைப்பற்றிக் கூறுகின்றான். "என்னைச் சிறியன் என்று இகழ்ந்து, படை எடுத்து வந்த இப்பகைவர்களைத் தாக்கிச் சிதறடித்துச் சிறை செய்யேனாயின், மாங்குடி மருதனாரைத் தலைவராகக் கொண்ட புலவர் பெருமக்கள் என் நாட்டைப் பாடாது நீங்குவாராக" என்பதாம். இங்ஙனம் ஒரு பெரிய முடிவேந்தன் புலவர்களால் பாடப் படுவதைப் போற்றி, வஞ்சினம் கூறுகின்ற அளவுக்குப் புலவர்களின் பெருமை சிறந்து விளங்கியதென்பதை உணர உணர உயிர் தளிர்க்கின்றது. ஆட்சி உரிமையுடன் புலவர்களின் நடுநிலைமை திறம்பாத அறிவுரைகளும் கலந்து செயற்பட்ட சிறப்பைச் சங்க இலக்கியங்களில் காண்கின்றோம். தமிழ்ப் புலவர்களை நகைச்சுவை விருந்தாக இகழ்ந்து மதிக்கின்ற நிலைமை, சங்ககாலத்தில் கிடையாது. புலவர்கள் தன்மான உணர்ச்சியுடன் வாழ்ந்து தமிழ் நாட்டையும் தமிழ் அரசையும் காப்பாற்றி உள்ளார்கள் என்ற உண்மையை மறக்கமுடியாது. குடிகளின் நலத்தைப்பேணி நல்லாட்சி செய்யும் வண்ணம் மன்னர்களை ஊக்கி ஊக்கிப் புலவர்கள் கூறிய அறிவுக் குரலைக் கேளுங்கள்.

*"கண்பொர விளங்கும்நின் விண்பொரு வியன்குடை*
*வெயின்மறைக் கொண்டன்றோ அன்றே வருந்திய*
*குடிமறைப் பதுவே கூர்வேல் வளவ*
*....................*

*குடிபுறந் தருகுவை யாயின்நின்*
*அடிபுறத் தருகுவர் அடங்கா தோரே”*
*(புறம் - 35)*

என வெள்ளைக்குடி நாகனார் என்னும் நல்லிசைப் புலவர் சோழன் குளமுற்றத்துத் துஞ்சிய கிள்ளிவளவனுக்குக் கூறுகின்றார். “மன்னனே! நீ ஏந்திய வெண்கொற்றக் குடை வெயிலை மறைத்தற்குக் கொண்டதன்று; வருத்துகின்ற குடிகளின் துன்பத்தைப் போக்கவே கொண்டதாகும். நீ வெற்றியை விரும்பினால் உன் ஆட்சியை நம்பி இருக்கின்ற மக்களின் கவலையைப் போக்குவாயாக'' என்பதே வெள்ளைக்குடி நாகனாரின் வேண்டுதல் ஆகும். அரசன் முடியின்மேல் நின்று நிழலைத் தருகின்ற வெண்கொற்றக்குடை, குடிகளுக்கு ஏற்படும் துன்பமாகிய வெயிலைப் போக்கி இன்பமாகிய நிழலைக் கொடுத்து அரசன் காப்பாற்றுவான் என்ற உண்மையைப் புலப்படுத்துகின்றது என்று புலவர் கூறுகின்றார். அரசனுடைய படைப் பெருக்காலே மட்டும் அவன் வெற்றியைப் பெற முடியாது, தன் ஆட்சியில் உள்ள குடிகளின் ஆதரவுதான் அரசனின் வெற்றிக்குக் காரணமாகும். குடிகளின் நலத்தை எண்ணாமல் அரசு செய்கின்ற மன்னனின் வெற்றி நிலைபெற மாட்டாது. குடிகளின் வெறுப்பை ஒரு பற்றுக்கோடாகக் கொண்டு பகைவர்கள் நாட்டில் புகுந்து கலகங்களை உண்டாக்குவார்கள். இவற்றையெல்லாம் தமிழ்ப்புலவராகிய வெள்ளைக்குடி நாகனார் விளக்கிக் கூறுகின்ற செய்தியைக் கொண்டு, சங்க காலத் தமிழ்ப் புலவர்களின் அரசியல் அறிவை அறியலாம். தமிழ்ப் புலவர்கள் அரசியலில் பங்குபற்றத் தகுதி இல்லாதவர் என்ற எண்ணம் ஆட்சியில் இருக்கின்ற இன்றைய நிலையை எண்ணி இரங்க வேண்டியவர்களாகின்றோம். இன்று அரசியலை ஓர் கலையாகப் பல்கலைக்கழகங்களில் படித்து ஆராய்ந்து கூறுகின்ற கொள்கைகளை வெள்ளைக்குடி நாகனார் மிகத் தெளிவாகக் கூறியிருக்கின்றார். தமிழரின் ஆட்சி முறைகளைக் கூறுகின்ற சங்க இலக்கியங்களைப் படிக்காமல் தமிழர் என்ற பெயருடன் வாழ்ந்து, தமிழையும் தமிழ்ப்

புலவர்களையும் இகழ்ந்து பேசுகின்றவர்கள் தமிழ்த் தலைவர்களாக இருக்கின்ற நிலை மாற வேண்டும். தமிழ்ப் புலவர்களும், தமிழறிஞர்களும் அரசியலில் ஈடுபட்டுச் சங்க இலக்கியங்களில் உள்ள அரசியல் வழிகளுடன் இன்றைய அரசியல் வழிகளை ஒப்பிட்டுப் பேசியும் எழுதியும் பொது மக்களைத் தூண்ட வேண்டும். சங்க காலத் தமிழ்ப் புலவர்களின் பாட்டுகள் எல்லாம் அரசியல் கொள்கைகளை அடிப்படையாகக் கொண்டே விளங்குகின்றன. அரசியல் ஒருசில தலைவர்களின் உரிமைப் பொருள் என்ற கொள்கை சங்க காலத்தில் ஏற்படவில்லை.

*"காவல் - குழவி கொள்பவரின்*
*ஓம்புமதி"*

என நரிவெரூஉத்தலையார் என்னும் புலவர் பெருஞ் சேரல் இரும்பொறைக்குச் சொல்கின்றார். "பெற்றோர் தம் மக்களைக் காப்பாற்றுவதுபோல, நீ குடிகளைக் காப்பாற்றுவாய்" எனப் புலவர் கூறுகின்ற கருத்தை உணருங்கள். மன்னனும் அவன் ஆட்சியில் உள்ள மக்களும், பெற்றோரும் பிள்ளைகளும் போல் ஒருவரை ஒருவர் அறிந்து, உரிமை உணர்ச்சியுடன் வாழவேண்டும் என்று கூறுகின்ற கொள்கை, இன்றைய மக்கள் ஆட்சியிலும் இல்லாத உரிமை நிறைந்த மன்னன் ஆட்சிவழியைக் காட்டுகின்றது.

*"புலி புறங்காக்கும் குருளைபோல*
*மெலிவில் செங்கோல் நீபுறங்காப்ப"*

என்று கோவூர்கிழார் என்னும் புலவர் சேரமான் பெருஞ் சேரல் இரும்பொறைக்குக் கூறுகின்றார். குட்டி ஈன்ற புலி தன் குட்டிகளுக்கு, ஒரு துன்பமும் ஏற்படாமல் ஆண்மையுடன் காவல்புரியும். புலியின் வீரத்தையும் குட்டிகளின் மேல் வைத்த அன்பையுங் கண்டவர்கள், அதன் குட்டிகளுக்குத் துன்பம் செய்ய அஞ்சுவார்கள். ஆட்சிப் பொறுப்பை ஏற்ற அரசனும் தன் ஆண்மையால், தன் நாட்டில் வாழ்கின்ற மக்களுக்குப் பிறரால் ஓர் துன்பமும் ஏற்படாமல் பாதுகாக்க வேண்டும். குட்டிகளுக்குத்

துன்பம் ஏற்பட்டால், புலி தன் உயிரையும் பொருட்படுத்தாமல் துன்பம் செய்தவரை எதிர்த்து இறந்துபோகும். மன்னனும் குடிகளின் நன்மைக்காகத் தன் உயிரையும் விடக்கூடிய உள்ளம் படைத்தவனாக இருக்க வேண்டும். இன்று ஒன்றும் அறியாத பொதுமக்கள் போரினாலும் கலகங்களினாலும் அழிந்துபட அந்த அழிவுகளின் காரணங்களை ஆராய்ந்து பேசுகின்ற ஆட்சியாளர்கள் வீற்றிருக்கின்ற காலத்தில் நாங்கள் வாழ்கின்றோம். பல ஆயிரக்கணக்கான மக்கள் உயிர்விட்ட பின்பு அவர்கள் ஏன் உயிர்விட்டார்கள் என்று ஆராய்கின்றவர்கள், உண்மை யாகக் குடிகளின் நலம் பேணவிரும்பினால், அக்கலகங்கள் எழாத வகையில் முன்னேற்பாடுகளைச் செய்ய வேண்டும். வீடு எரிந்த பின்பு சமையல் அறையை உயர்த்திக் கட்டியிருந்தால் அடுப்பில் எரிந்த நெருப்பு பிடித்திராதென்று கூறுவது போலக் கலகங்களால் மக்கள் இறந்த பின்பு கலகம் தோன்றாமல் இருத்தற்கு முன், பாதுகாப்புப் போட்டிருக்க வேண்டுமென்று சொல்வதால் என்ன பயன் இருக்கின்றது. புலி குட்டியைக் காப்பதுபோல, மன்னன் குடிகளைக் காப்பாற்ற வேண்டுமென்று தமிழ்ப் புலவர் கூறிய அரசியல் நுட்பத்தை உணர்ந்தால் அரசியல் புலவனுக்குப் புறம்பானதொரு பொருளல்ல என்பதை நாம் ஒப்புக்கொள்வோம்.

இங்ஙனம் தமிழ்ப் புலவர்கள் அரசியலில் பங்குபற்றிச் செயலாற்றுகின்ற சிறப்பைப் பெறுதற்குக் காரணம், அவர்களின் தன்மான உணர்ச்சியே ஆகும். தம்மை மதியாதவரை மதித்து வாழாத மான உணர்ச்சி, சங்கப் புலவர்களின் வாழ்வை மலர்த்து கின்றது.

*முற்றிய திருவின் மூவர் ஆயினும்*
*பெட்புஇன்றி ஈதல் யாம்வேண் டலமே*

எனப் பெருந்தலைச் சாத்தனாரின் தன்மானக்குரல் கேட்கின்றது. முடியுடை மூவேந்தராயினும் எம்மை மதியாமல் தருகின்ற பொருளை நாங்கள் ஏற்கமாட்டோம் என்பதே புலவரின்

கொள்கையாகும். இங்ஙனம் மான உணர்ச்சியுடன் வாழ்ந்து, மன்னரின் ஆட்சித் துணையாளராக நின்றுதவிய தமிழ்ப் புலவர் களைப் பின்பற்றி இன்றைய தமிழ்ப் புலவர்கள் செயலாற்ற வேண்டும். மானத்தைவிட்டு வாழ விரும்பாத சங்ககாலத் தமிழ்ப் புலவர் மரபை மீண்டும் மலர்த்திய அமரகவி பாரதியாரைப் போற்றுங்கள், அவரின் தன்மானக்குரல் எம்மை எல்லாம் அறைகூவி அழைக்கின்றது.

*"இன்னல்வந் துற்றிடும் போததற் கஞ்சோம்*
*ஏழைய ராகிஇனி மண்ணில் துஞ்சோம்*
*தன்னலம் பேணி இழிதொழில் புரியோம்"*

என்ற குரலைக் கேளுங்கள்.

# பழம் பெருமை பேசும் பண்பு போகவேண்டும்

**ப**ழம் பெருமை பேசிப் பேசிச் செயலற்று இருக்கின்ற பழக்கம் மிகக் கொடியது. தமிழர்கள் பழம் பெருமை பேசுவதில் நிரம்பிய ஊக்கம் உடையவர்கள் என்பது தெரிந்த உண்மையாக நிலவுகின்றது. நிகழ்காலத்தையும் எதிர்காலத்தையும் எண்ணாமல் இறந்த காலத்தை மாத்திரம் எண்ணுகின்ற மக்களினம் மலர்ச்சி அடையாது.

இதனால் இறந்த காலத்தை முற்றாக மறந்து வாழவேண்டும் என்பது கருத்தல்ல. இறந்தகால நினைவுகள், நிகழ்கால முன்னேற்றத்திற்குத் துணை செய்வனவாக அமைய வேண்டும். நிகழ்காலத்தில் ஆற்ற வேண்டிய செயல்களை மறந்து, இறந்த காலப் பெருமைகளை எடுத்தெடுத்துச் சொல்வதால் ஆக்கம் ஏற்படாது. சேரன் செங்குட்டுவன் வடநாட்டில் படை எடுத்துச் சென்று ஆரிய மன்னரை வென்று மீண்டான் என்ற செய்தியை இன்று நாங்கள் அடிக்கடி எடுத்துச் சொல்கின்றோம். வட நாட்டாரின் ஆட்சியைத் தென்னாட்டுத் தமிழர்களில் பலர் ஆதரித்து வரவேற்கின்ற நிலையில் எங்களுடைய பேச்சு வீண் பகையை வளர்க்கத்தான் உதவும். தென்னாட்டில் தமிழர்கள் ஒன்றுபடாமல் பல கட்சிகளாகப் பிரிந்து நின்று தங்களைத் தாங்களே எதிர்க்கின்றார்கள். தமிழன் என்ற இன உணர்ச்சியுடன் தமிழர்கள் ஒன்றுபட்டு உரிமைப்போர் தொடுக்கும் விழிப்பு ஏற்பட்டபொழுதுதான், செங்குட்டுவனின் வெற்றிச் செயலை எடுத்துக் கூற வேண்டும். செங்குட்டுவன் தமிழரின் மானத்தைக் காப்பாற்றப் படையெடுத்துச் சென்ற செய்தியை அறியும்

பொழுது, வடநாட்டாரின் ஆட்சியை வரவேற்றுத் தமிழன் என்ற இன உணர்ச்சி இல்லாமல் இருந்த தமிழர்கள் எல்லோரும் உரிமை வெறி கொண்டெழுவார்கள்.

*சாதியால் சமய வாழ்வால்*
*தனித்தனி பிரிந்து வாழும்*
*பேதைமை ஒழிந்து நாங்கள்*
*பிறப்பினால் தமிழர் என்றே*
*ஓதியோர் கணத்தில் சேர்ந்தால்*
*உலகத்தை ஆள வல்லோம்*
*சாதலே வாழ்வாய்க் காணும்*
*தறுகண்மை தமிழர்க் குண்டு**

என்பதை ஒவ்வொரு தமிழனும் உள்ளத்தில் எண்ணி உணர வேண்டும். சாதியாலும் சமயத்தாலும் வேறுபட்டுத் தமிழர்கள் தமிழரை எதிர்க்கின்ற அறியாமை நீங்கவேண்டும். இப்பொழுது நாங்கள் வாழ்கின்ற நிகழ்காலத்தை நோக்கி நாங்கள் செல்ல வேண்டும். எங்கள் அயல்நாட்டினர் எல்லாம் தங்கள் நாட்டைத் தாங்களே ஆட்சிபுரிகின்றார்கள். தமிழர்களாகிய நாங்கள் வாழ்கின்ற தமிழ்நாடு மட்டும் பிறரால் ஆளப்படுகின்றதே என்பதை நாங்கள் எண்ணுகின்றோமா? எண்ணுகின்றோம் - இன்று எண்ணத் தொடங்கிவிட்டோம் என்ற உணர்ச்சி உரைகள் தமிழ் நாட்டில் கேட்கின்றன. பழம் பெருமை பேசிப் பேசித் தாழ்ந்த தமிழர்கள் தன்மானத்துடிப்பால் விழித்துவிட்டார்கள். தமிழ்நாட்டைத் தமிழர் கள்தான் ஆளவேண்டுமென்ற உணர்ச்சி தோன்றுதற்கான பழம் பெருமைகளையே இனித் தமிழர்கள் பேசவேண்டும். இன்று அடிமையாக இருக்கின்ற தமிழர்கள், நாங்கள் அரசாண்ட சாதி என்பதை இறந்தகால இலக்கியங்களில் இருந்து எடுத்துக் காட்டுவதால் என்ன பெருமை கிடைக்கும்? யார் நம்பப் போகின்றார்கள்?

*கங்கையைக் கொண்டார் என்றும்*
*கடாரத்தை வென்றார் என்றும்*

*இங்குநாம் பழைமை பேசி*
*எடுத்திடும் பயனொன் றில்லை*
*அங்கையோ டங்கை கூப்பி*
*அடிமைசெய் கூலி யாக*
*எங்கும்போய்த் தமிழர் வாழும்*
*இழிவினைப் போக்க வேண்டும்**

என்று கூறுகின்ற கொள்கையைச் சிந்தியுங்கள். கங்கைநதி பாய்கின்ற நிலப்பரப்பை எல்லாம் தமிழர்கள் வெற்றி கொண்டார்கள் என்றும், கடாரத்தை வெற்றிகொண்டு தமிழர்கள் ஆண்டார்கள் என்றும் பழம் பெருமைகளைப் பேசுகின்ற அளவில் நாம் நின்றுவிடுகின்றோம். நாங்கள் ஏன் அடிமைகளாக இருக்கின்றோம்; உலகின் பல பாகங்களிலும் கூலித் தொழிலாளர்களாகத் தமிழர்கள் ஏன் வாழ்ந்து கவலைப்படுகின்றார்கள் என்று எண்ணிப்பார்க்க வேண்டும். எங்களுடைய சிந்தனையும் செயலும் இறந்தகாலத்தை நோக்கிச் செல்கின்ற விரைவு மிகக் கூடிவிட்டது. நிகழ்காலத்திலே எமது சிந்தனையும் செயலும் நிலைபெற்றுவிட்டால் நாங்கள் உயர்ந்துவிடுவோம். இறந்தகாலத்தையே நீள நினைந்து பழகிய எமது எண்ணம், நிகழ்காலக் கடமைகளை எண்ண மறந்துவிடு கின்றது. நிகழ்காலத்தை எண்ணாமல் இருக்கின்ற மக்களினம் ஒருபோதும் முன்னேறமுடியாது. பசியால் வருந்துகின்ற ஒருவன், தன் பசியைப் போக்க முயலாமல் தான் முன்னொருகாலத்தில் பசியால் வாடிய வறியவர்களுக்கு உணவு கொடுத்த கதையைச் சொல்லிப் பழம் பெருமை பேசுவதால் உள்ள பசி தீரப்போவ தில்லை. அவனுடைய பேச்சைக் கேட்டவர்களும் நகைப்பார்கள். ஆகவே இன்று தமிழர்களாகிய நாமும் பழம் பெருமை பேசினால் ஆற்ற வேண்டிய கடமைகளை மறந்து பிறரால் இகழப்படுவோம். இனிப் பழம் பெருமை பேசாமல் புதிய செயல்களை ஆற்றி எங்கள் உரிமைகளைப் பெற முயலுவோம்.

*"இன்னலும் அடிமை வாழ்வும்*
*எம்தமிழ் இனத்தை விட்டு*

*வென்றிடும் வழியைத் தேடி*
*விடுதலைப் போர்க்குச் செல்வோம்”*

என்ற எழுச்சி எங்கள் உள்ளத்தில் தோன்றிவிட்டது. இனி,

*“ஆரெமை ஆண்டால் என்ன*
*அவரவர்க் கேற்ற தாகக்*
*காரியம் புரிந்து வாழ்ந்து*
*காலத்தைக் கழிப்போம் என்னும்*
*ஓரினம் தமிழர் போல*
*உலகத்தில் எங்கும் இல்லை**

என்ற இழிவைப் போக்க உரிமைப் போர் தொடங்கி விட்டோம். பழமைக்கும் ஊழுக்கும் பரம்பரை அடிமைகளாக வாழ்ந்து பழகிய பழக்கம் எம்மைவிட்டுப் போகின்ற காலம் நெருங்கிவிட்டது. அடிமைகளாக இருந்துகொண்டே, உலகை ஆண்ட தமிழர் என்று கூறுவதை விட்டு, உரிமைப் போராற்றி எமது நாட்டை நாமே ஆட்சிசெய்வோம். உலகாண்ட இனம் தமிழர் என்பதை உலகத்தில் நிலைநாட்டுவோம். நிகழ்காலத்தைப் புதுக்கி எதிர்காலத்தைப் படைப்போம். நடந்தவற்றை எடுத்துப் பேசின பழக்கத்தை மறந்து இனிமேல் நடக்க வேண்டிய வற்றை எடுத்துப் பேசுவோம். எம்மை நோக்கி வருகின்ற இன்னல் களைப் போக்க வழிதேடுவோம். ஒன்றுபட்டு ஒரே உணர்ச்சி யோடு சென்ற கால நிகழ்ச்சிகளிலும் சிறந்த நிகழ்காலப் புது நிகழ்ச்சியைத் தொடங்கி வைப்போம்.

*..............முன்பு நான் தமிழச்*
*சாதியை அமரத் தன்மை வாய்ந்தது என்று*
*உறுதி கொண்டிருந்தேன் ஒருபதி னாயிரம்*
*சனிவாய்ப் பட்டும் தமிழச் சாதிதான்*
*உள்ளுடை இன்றி உழைத்திடு நெறிகளைக்*
*கண்டெனது உள்ளங் கலங்கிடா திருந்தேன்*
*ஆபிரிக்கத்துக் காப்பிரி நாட்டிலும்*

*தென்முனை அடுத்த தீவுகள் பலவினும்*
*பூமிப் பந்தின் கீழ்ப்புறத் துள்ள*
*பற்பல தீவினும் பரவி இவ்வெளிய*
*தமிழச் சாதி தடியுதை உண்டும்*
*காலுதை யுண்டும் கயிற்றடி உண்டும்*
*வருந்திடும் செய்தியும் மாய்ந்திடும் செய்தியும்*
*பெண்டிரை மிலேச்சர் பிரித்திடல் பொறாது*
*செத்திடும் செய்தியும் பசியால் சாதலும்*
*பிணிகளாற் சாதலும் பெருந்தொலை யுள்ளதம்*
*நாட்டினைப் பிரிந்த நலிவினால் சாதலும்*
*ஈதெலாம் கேட்டும் எனதுளம் அழிந்திலேன்*

என வரும் பாரதியாரின் சிந்தனைக் குரலைக் கேளுங்கள். பழங்காலப் பெருமைகளைப் பேசி, நிகழ்காலச் சிறுமைகளை மறக்கின்ற பண்பு பாரதியாரிடங் கிடையாது. இன்றைய உலகில் தமிழர் அடைகின்ற இன்னல்களையும் கீழ்த்தரமான வாழ்க்கை நிலையினையும் எண்ணி எண்ணிப் பாரதியார் இரங்குகின்றார். தமிழர் என்ற பெயருடன் உலகின் பல பாகங்களிலும், மனித உரிமைகளைப் பெறாமல் வாழ்கின்ற மக்களின் நிலைமையைப் பாரதியார் சிந்தித்துச் சிந்தை உருகப்பாடிய பாட்டிலே நிகழ் காலத்தில் தமிழர் ஆற்ற வேண்டிய கடமைகள் நிரம்பியுள்ளன. ஒருசில தமிழர் மட்டும் உயர்ந்த வாழ்வு வாழ்ந்திருப்பதால், தமிழர் இனம் உலகத்தில் மதிப்பைப் பெறமுடியாது. தமிழர்கள் தமிழ்நாட்டை ஆட்சிபுரியும் நிலைமை ஏற்பட்டால் ஒழியத் தமிழர்கள் தன்மானத்துடன் வாழமுடியாது. ஆட்சி உரிமை இல்லாத அடிமைச்சாதியாரின் அல்லல்களை அயல்நாட்டினரும் பொருட்படுத்த மாட்டார்கள். இவற்றை எல்லாம் எண்ணிச் செயலாற்ற வேண்டிய பொறுப்பு இன்று வாழ்கின்ற எம்மிடத்தில் தான் இருக்கின்றது. இனிப் பழம் பெருமைகளைப் பேசிப் புதிய முயற்சிகளை மேற்கொள்ளாமல் காலத்தோடொட்டித் திருந்தி வாழ முயலாமல் நாம் இருக்கவே முடியாது.

*இமயத்தில் கொடியை நாட்டி*
*இவ்வுல காண்டோம் என்று*
*சுமையினைத் தூக்கும் கூலி*
*சொல்வதால் பெருமை உண்டோ*
*நமையொத்த அடிமைச் சாதி*
*நானிலத் தெங்கும் இல்லை*
*சமயப்போர் சாதிப் போரால்*
*தமிழர்கள் தாழ்ந்து விட்டோம்**

என்ற நிலைமையை இன்று நாம் சிந்திக்கின்றோம். உரிமைப் போர் ஆற்றுதற்கான தகுதிநிலை தமிழர்களாகிய எம்மிடம் தோன்றி வருகின்றது.

*செந்தமிழ் நாடெனும் போதினிலே இன்பத்*
*தேன்வந்து பாயுது காதினிலே எங்கள்*
*தந்தையர் நாடென்ற பேச்சினிலே ஒரு*
*சக்தி பிறக்குது மூச்சினிலே*

என்று பாடுவோம்.

# தமிழர்கள் விழிப்புக் கொண்டார்

இன்று தமிழர்கள் விழித்துவிட்டார்கள். அரசாண்ட தமிழரினம் ஏன் அரசை இழந்து அல்லற்படுகின்றது என்பதைச் சிந்திக்கின்றார்கள். உலகமெங்கும் உரிமை எழுச்சி அலை எறிகின்ற இந்நூற்றாண்டிலே தமிழர்கள் மட்டும் அடிமைகளாய் வாழ்வதா என்ற உயிர்த்துடிப்பு ஒவ்வொரு தமிழன் உள்ளத்திலும் நிலைபெற்றுவிட்டது. தமிழ்நாடு தமிழர்க்கே என்ற விடுதலை வெறி வெள்ளமாகப் பெருகிப் பாய்கின்றது. உயிரினும் பார்க்க உரிமை வாழ்வு மேலானதென்ற எண்ணம் சுரந்துவிட்டது. இனி மேல் தமிழர்களின் உரிமைகளை எவரும் பறிக்க முடியாது. தன்மானமும் தளராத ஊக்கமுங்கொண்ட தமிழர்கள் செயலாற்றத் தொடங்கி விட்டார்கள். உரிமைப்போர் ஆற்றக்கூடிய ஆற்றல் களைப் படிப்படியாக வளர்த்து வழிகாட்டுகின்ற செயல் வீரர்கள் பலர் தமிழினத்தில் தோன்றி விட்டார்கள். தமிழ்நாடெங்கும் உரிமைக்குரல் கேட்கின்றது.

*எழுத்தினில் வல்லார் என்றும்*
*இலக்கியம் புனைவோர் என்றும்*
*செழித்திடும் உணர்ச்சிப் பாக்கள்*
*தீட்டிடும் கவிஞர் என்றும்*
*அழித்திடும் அடிமை வாழ்வை*
*அகற்றிடும் வீரர் என்றும்*
*விழித்தனர் தமிழர் பல்லோர்*
*விடிந்தது தமிழர் வாழ்வு**

என்ற குரல் தமிழ்நாட்டில் கேட்கின்றது.

சாதிசமய வேறுபாடுகள் மெல்ல மெல்லத் தமிழ்நாட்டில் நின்று மறைகின்றன. தமிழர் என்ற இன உணர்ச்சி தலை எடுத்து வளர்கின்றது. தம் நலத்தையே கண்ணாகக் கொண்டு, தமிழர் என்ற பெயருடன் தமிழ் உணர்ச்சி இல்லாமல் வாழ்ந்த தமிழர் களின் தலைமை வீழ்ந்துவிட்டது. பணத்தையும் பட்டத்தையும் பரம்பரைப் பெருமைகளையும் வைத்துக்கொண்டு, பொது மக்களை ஏமாற்றி வாழ்ந்தவர்கள் இனிமேல் ஏமாற்றமுடியாது. தன்னம்பிக்கையுடன் உண்மை வழியைப் பின்பற்றிச் செய லாற்றுகின்ற திறமை, மக்கள் வாழ்வில் நிலைபெற்றுவிட்டது. உரிமைப் போரில் உயிரையும் கொடுப்போம் என்ற இறுமாப்புடன் தமிழர் பலர் முன்வந்து நிற்கின்றார்கள்.

*நெஞ்சினில் தாய்நாட் டன்பு*
*நிழலிடும் புதிய வாழ்வும்*
*அஞ்சிடோம் அடிமை வாழ்வை*
*அகற்றுவோம் என்ற வீறும்*
*நஞ்சினை அமுத மாக*
*நயத்துணும் சால்புங் கொண்ட*
*வெஞ்சின மறவர் கோடி*
*விரைந்தனர் தமிழர் வாழ்ந்தார்**

என்னும் நிலைமை தோன்றிவிட்டது. அச்சம் சிறிதும் இல்லாமல், அடிமை வாழ்வை அகற்றி உரிமை வாழ்வைப் பெறுதற்காக ஆயிரம் ஆயிரம் தமிழர்கள் பெருகிவருகின்றார்கள். உலகாண்ட தமிழர்கள் உரிமையற்ற நிலையில் வாழ்வதா என்ற உணர்ச்சி குழந்தைகள் உள்ளத்திலும் குடிகொண்டுவிட்டது.

என்னென்ன இன்னல்களை ஏற்றாலும் எங்கள் தாய் நாட்டை இனி நாங்களே ஆளவேண்டும் என்ற உரிமை வேட்கை தோன்றிவிட்டால் அதனை மாற்றமுடியாது. உரிமைப் போரை ஆற்ற ஆற்றப் புதிய வீறும் ஆண்மையும் உண்டாகும். தன்னை முற்றும் உரிமைப் போருக்கே உரித்தாக்குகின்ற உயிர்த் துடிப்புப் பெருகும்.

*மற்றவர் நாட்டை ஆள*
*மறப்படை திரட்டும் இந்நாள்*
*பெற்றநம் நாட்டை ஆளாப்*
*பேடிகள் தமிழர் தானோ*
*உற்றிடும் பொருளும் வாழ்வும்*
*உரிமையில் பெரிய தாமோ*
*அற்றைநாள் தமிழர் போல*
*ஆண்மையால் அரசு கொள்வோம்**

என்று இளந்தமிழர்கள் துடிக்கின்றார்கள். வீட்டிற்காகவே வாழ்கின்ற தன்னல வீரர்கள் தமிழர் என்ற எண்ணம் மாறிவிட்டது. இன்று நாட்டின் உரிமைக்காக அறப்போர் தொடுக்கின்ற ஆண்மையாளராகத் தமிழர்கள் மாறிவிட்டார்கள்.

*நாட்டிற்காய்ப் போரில் மாய்ந்து*
*நடுகல்லில் நின்ற வீரர்*
*பாட்டிற்கே விருந்தாய் வாழப்*
*பரம்பரை உணர்ச்சி இன்றி*
*வீட்டிற்கே உழைத்து வாழ்தல்*
*வீரமோ விழித்தெ ழுந்து*
*நாட்டிற்காய்த் தொண்டு செய்வோம்*
*நம்தமிழ் இளைஞர் வாரீர்**

என்று இளைஞர்கள் ஒருவரை ஒருவர் அறைகூவி அழைக்கின்ற ஆண்மைக் குரலைக் கேட்டுத் தமிழன்னை அகம் மலர்கின்றாள்.

# தமிழகத்தில் பெண்களின் உரிமை எழுச்சி

**த**மிழகம் எங்கும் உரிமைக்குரல் கேட்கின்றது. குதலை மொழி கூறும் குழந்தைகளின் உள்ளத்திலும் உரிமை வேட்கை எழுந்துவிட்டது. தங்கள் அன்புக் குழந்தைகளை முத்தமிட்டு, நீங்கள் சங்ககாலத் தமிழகம் போன்ற உரிமைத் தமிழகத்தைப் படைத்துத் தருவீர்களா என்று தாய்மார்கள் கேட்கின்ற குரலை இன்று கேட்கின்றோம். தமிழர் தமிழ்நாட்டை ஆளவேண்டுமென்ற தன்மானத்துடன் தமிழ்நாட்டுப் பெண்கள் செயலாற்றத் துணிந்து விட்டார்கள். உரிமைப்போரை ஆற்றும் பொழுது ஏற்படுகின்ற துன்பங்களைப் பொறுத்துத் தமது தலைவர்களையும், புதல் வர்களையும், அண்ணன் தம்பிமார்களையும் ஊக்கி உரிமைப் போரில் ஈடுபடுத்துகின்ற துடிப்பு பெண்களின் உள்ளத்தில் இடம் பெற்றுவிட்டது.

*அறிவு கொண்ட மனித வுயிர்களை*
*அடிமையாக்க முயல்பவர் பித்தராம்*
*நெறிகள் யாவினும் மேம்பட்டு மானிடர்*
*நேர்மை கொண்டுயர் தேவர்கள் ஆதற்கே*
*சிறிய தொண்டுகள் தீர்த்தடி மைச்சுருள்*
*தீயில் இட்டுப் பொசுக்கிட வேண்டுமாம்*
*நறிய பொன்மலர் மென்சிறு வாயினால்*
*நங்கை கூறும் நவீனங்கள் கேட்டிரோ*

என்று பாரதியார் சொன்ன புதுமைப் பெண்ணின் குரலை இன்று ஒவ்வொரு தமிழ்ப் பெண்ணும் எழுப்புகின்றாள். நாட்டின் விடுதலைக்காக உரிமைப் போர் ஆற்றுகின்ற வீர இளைஞனைத் துணைவனாகக் கொண்டு தமிழினத்தின் விடுதலைக்காகப்

போர் ஆற்ற வேண்டுமென்று எண்ணி எண்ணி உள்ளம் செழிக்கின்ற இளம் பெண்கள் ஆயிரம் ஆயிரமாகப் பெருகிவிட்டார்கள்.

*காதலால் நீரும் நானுங்*
*கலந்திடும் புதிய வாழ்வில்*
*சாதல்தான் வருமென் றாலும்*
*தளர்ந்திடா உள்ளத் தோடு*
*தீதெலாம் அடைந்து நாளும்*
*சிதைந்திடும் தமிழர் வாழக்*
*காதலாய் உழைக்க வேண்டும்.*
*கலையின்மேல் ஆணை இட்டேன்**

எனத் தன் காதலனை நோக்கிக் கூறுகின்ற இளம் பெண் மணியின் ஆர்வக்குரலை ஆரால் மறக்க முடியும். உரிமைப் போரெழுச்சி இளம் பெண்கள் உள்ளத்தில் நிலை பெற்று விட்டால் தமிழரின் உரிமைப் போர் வெற்றி பெறும் என்பதில் ஐயம் இல்லை. தாய்மை உள்ளத்தில் உரிமை எழுச்சியும் அஞ்சாமையும் வாய்மையும் சுரந்து பாயப் பாயச் சேய்கள் உள்ளத்தில் புதிய ஆற்றல்கள் உருவாகின்றன.

*கெடுக சிந்தை கடிதிவள் துணிவே*
*மூதின் மகளிர் ஆதல் தகுமே*
*மேனாள் உற்ற செருவிற்கு இவள்தன்னை*
*யானை எறிந்து களத்தொழிந் தனனே*
*நெருநல் உற்ற செருவிற் கிவள்கொழுநன்*
*பெருநிரை விலக்கி ஆண்டுப் பட்டனனே*
*இன்றும் செருப்பறை கேட்டு விருப்புற்று மயங்கி*
*வேல்கைக் கொடுத்து வெளிதுவிரித்து உடீஇப்*
*பாறுமயிர்க் குடுமி எண்ணெய் நீவி*
*ஒருமகன் அல்லது இல்லோள்*
*செருமுகம் நோக்கிச் செல்கென விடுமே*

*(புறம் - 279)*

எனப் புறநானூற்றில் வருகின்ற வீரத்தாயின் செய்தியை உணருங்கள். முதல்நாள் நடந்த போரில் தன் தமையனையும்

அடுத்த நாள் நடந்த போரில் தன் கணவனையும் இழந்து விட்டாள். அடுத்த நாள் போர்முரசங் கேட்கின்றது. அவளுடைய உள்ளத்தில் நாட்டுப் பற்று கொழுந்து விட்டெரிகின்றது. தன்னுடைய தாய்நாடு, மாற்றாரால் பிடிபடப் போகின்ற தென்னும் எண்ணத்தால் அவள் தன்னை மறந்து வீர உணர்ச்சி கொண்டுவிட்டாள். தன்னுடைய ஒரு மகனைப் போருக்குப் போக்கத் துணிந்தாள். தன் மகனை அன்போடு அணைத்து முத்தமிட்டாள். வெள்ளை நிறமான ஆடையை விரித்து உடுத்தாள். தலையிலே எண்ணெய் பூசிச் சீவி அழகாக முடித்தாள். வேற் படையை எடுத்துத் தன் மகனின் கையிலே கொடுத்தாள். மகனே! எமது தாய்நாட்டின் உரிமையைக் காப்பாற்றுதற்காக நீ இன்று போருக்குப் போவாயாக என்று வாழ்த்தி வழியனுப் பினாள் என்பதே பாட்டின் பொருளாகும். இங்ஙனம் உரிமை உணர்ச்சி கொண்ட வீரத்தாய்மார்கள் வாழ்ந்த பெருமையாலே தான், சங்க காலத் தமிழகம் சிறந்து விளங்கியது. இன்றைய தமிழ்நாட்டின் நிலைமையைச் சிந்தித்துச் செயலாற்ற வேண்டிய பொறுப்பைப் பெண்மணிகள் உணர்ந்து விட்டார்கள்.

*“பட்டங்கள் ஆள்வதும் சட்டங்கள் செய்வதும்*
*பாரினில் பெண்கள் நடந்த வந்தோம்”*

எனப் பெண்மணிகள் விழித்து நின்று சொல்கின்றார்கள். இனி வரும் உரிமைத் தமிழகத்தைப் பெற்றுத்தருவதில் பெண்களின் பொறுப்பு மிகப் பெரிதாகும்.

# விட்டுக்கொடுக்கும் மனப்பான்மை வேண்டும்

தமிழர்கள் பல நூற்றாண்டுகளுக்கு முன்பே நல்வாழ்வு வாழ்ந்தவர்கள். இன்றைய உலக மக்கள் பல்கலைக்கழகங்களிலும் அறநிலையங்களிலும் பண்படுத்தி வளர்க்கின்ற உயர்ந்த பண்பாடுகளைத் தம் வாழ்க்கை நெறியாகக் கொண்டு வாழ்ந்த சிறப்பு தமிழர்களுக்குத்தான் உண்டு. இதனைக் கடலுள் மாய்ந்த இளம்பெருவழுதி என்னும் அரசன் மிக ஆராமையோடு கூறுகின்றான்.

*உண்டால் அம்ம இவ்வுலகம் இந்திரர்*
*அமிழ்தம் இயைவ தாயினும் இனிதெனத்*
*தமியர் உண்டலும் இலரே முனிவிலர்*
*துஞ்சலும் இலர்பிறர் அஞ்சுவ தஞ்சிப்*
*புகழெனின் உயிரும் கொடுக்குவர் பழியெனின்*
*உலகுடன் பெறினும் கொள்ளலர் அயர்விலர்*
*அன்ன மாட்சி அனைய ராகித்*
*தமக்கென முயலா நோன்தாள்*
*பிறர்க்கென முயலுநர் உண்மை யானே*

(புறம் - 182)

இந்தச் செய்யுளில் அமைந்துள்ள கொள்கைகளிலும் மேலான கொள்கைகளை இந்த உலகிலும் காணமுடியாது. இனி வரும் உலகிலும் காணமுடியாது. இந்திரன் உண்ணும் அமுதம் கிடைப்பதாக இருந்தாலும் அதன் இனிமையையும் ஆக்கத்தையும் எண்ணிப் பிறர்க்குக் கொடாது, தாமே உண்ணும் பண்புடையவர்கள் தமிழ்நாட்டிலே வாழ்ந்திலர். எவருடனாயினும்

வெறுப்புக் கொள்கின்றவர்களும் அங்கு வாழ்ந்திலர். பிறர் அஞ்சு கின்றவற்றைக் கண்டு, தாமும் அஞ்சிச் செயலற்று வாழ்கின்றவர் களும் அங்கே இல்லை. புகழ்தரக்கூடிய நிலைமை வந்தால் தம் உயிரையும் கொடுப்பர். பழிதரக்கூடிய செயலொன்றை ஆற்று வதினால் இந்த உலகத்தையே பெறக்கூடியதாக இருப்பினும் அச்செயலை ஏற்றுச் செய்யார்கள். ஒரு கருமத்தைச் செய்கின்ற பொழுது மனத்தளர்ச்சி கொள்ளார்கள். இங்ஙனம் சிறந்த கொள்கையை உடையோராய்த் தம் நலங்கருதாத சான்றோர் பலர் தமிழ்நாட்டில் வாழ்ந்தபடியால்தான் தமிழ்நாடு புகழுடன் விளங்கியது என்பதே பாட்டின் பொருள்.

இந்தப் பாட்டின் பொருளை உணர உணர எமதுள்ளம் செழிக்கின்றது. இவ்வளவு உயர்ந்த கொள்கையுடன் வாழ்ந்த தமிழரின் அரசு ஏன் வீழ்ந்தது என்பதை ஆராய வேண்டும். பிறர்க்கென வாழ்கின்ற கொள்கை உடையவர்கள் அன்பும் பணிவும் உடையராக விளங்குவார்கள். அவர்கள் உரிமைக்கு முதன்மை கொடாமல், அன்புக்கு முதன்மை கொடுத்து வாழும் பண்புடையவர்கள். ஒருவர்க்கொருவர் விட்டுக்கொடுத்து வாழ் வதால் அன்புடன் இணைந்து உரிமை உணர்ச்சி வளரும். சங்ககாலத்திலேயே ஒருவர்க்கு ஒருவர் விட்டுக்கொடாத மனப் பான்மை தமிழர்களிடம் தலைகாட்டிவிட்டது. மூவேந்தர்களும் மாறிமாறி ஒருவரோடொருவர் போராற்றிய செய்திகள் புறநானூற் றில் காணப்படுகின்றன. முடியுடை மூவேந்தர்களும் ஒன்று சேர்ந்து தமிழகத்தைப் பாதுகாக்க எண்ணி இருப்பார்களேயானால் இன்று தமிழகம் அமெரிக்கா வரையும் பரந்து கிடக்கும் என்பதில் ஐயம் இல்லை. அவர்கள் தங்களுடைய மான உணர்ச்சியையும் வீரத்தையும் ஊக்கத்தையும் போர் ஆற்றலையும் தம்மைத் தாமே எதிர்த்துப் போராடுவதில் பயன்படுத்தி அழிந்து போனார்கள். புலவர்களும் அறிஞர்களும் அவர்களின் இகலைப்போக்கி ஒன்று படுத்த எடுத்துக்கொண்ட முயற்சிகள் யாவும் பயன்படா தொழிந்தன. அதன்பின் பல சங்கப் புலவர்களும், ஒரு தமிழ் வேந்தன் இன்னொரு தமிழ் வேந்தனுடன் போராற்றிப் பெறுகின்ற

வெற்றியைப் பாராட்டிப் பாடினார்கள். புறநானூற்றில் காணப் படுகின்ற போர்ச் செய்திகள் யாவும் தமிழ்நாட்டில் நடந்தனவாகவே இருக்கின்றன. இந்தப் போர்களால் தமிழ் மன்னர்களின் வலிமை குறைந்து போகப் பிறநாட்டினர் தமிழ்நாட்டை வென்று ஆட்சி செய்யும் நிலைமை உருவாகியதென்பதை எவரும் மறுக்க முடியாது.

இங்ஙனம் முடியுடை மூவேந்தர்களும் அவர்கள் வழிப்பட்ட குறுநில மன்னர்களும் தமிழர் என்ற இன உணர்ச்சியை மறந்து, ஒருவர்க்கொருவர் விட்டுக்கொடுக்காமல் ஆற்றிய போர்களின் பெறுபேற்றை இன்று நாங்கள் உணர்கின்றோம். உலகில் ஆட்சி உரிமை இல்லாத ஓர் இனமாக நாம் வாழ்கின்றோம்.

சோழன் பெருந்திருமாவளவனும், பாண்டியன் பெரு வழுதியும் ஒருங்கிருந்தபொழுது அவர்களைப் பாராட்டிக் காரிக்கண்ணனார் என்னும் நல்லிசைப் புலவர் பாடிய பாட்டின் பொருள் இன்றைய தமிழ்மக்களும் உணர்ந்து செயலாற்ற வேண்டிய நிலையில் அமைந்துள்ளது.

*நீயேதண்புனற் காவிரிக் கிழவனை இவனே*
*முழுமுதல் தொலைந்த கோளி ஆலத்துக்*
*கொழுநிழல் நெடுஞ்சினை வீழ்பொறுத் தாங்குத்*
*தொல்லோர் மாய்ந்தெனத் துளங்கல் செல்லாது*
*நல்லிசை முதுகுடி நடுக்கறத் தழீஇ*
*இளைய தாயினும் கிளைஅரா எறியும்*
*அருநரை உருமின் பொருநரைப் பொறாஅச்*
*செருமாண் பஞ்சவர் ஏறே............*
*................*
*பால்நிற உருவின் பனைக்கொடி யோனும்*
*நீல்நிற உருவின் நேமியோனு மென்று*
*இருபெரும் தெய்வமும் உடன் நின்றாஅங்கு*
*உருகெழு தோற்றமோடு உட்குவர விளங்கி*
*இந்நீர் ஆகலின் இனியவும் உளவோ*

*இன்னுங் கேண்மின் நும்இசை வாழியவே*
*ஒருவீர் ஒருவீர்க்கு ஆற்றுதிர் இருவீரும்*
*உடனிலை திரியீர் ஆயின் இமிழ்திரைப்*
*பௌவம் உடுத்தஇப் பயங்கெழு மாநிலம்*
*கையகப் படுவது பொய்யா காதே*
*அதனால் நல்ல போலவும் நயவ போலவும்*
*தொல்லோர் சென்ற நெறிய போலவும்*
*காதல் நெஞ்சினும் இடைபுகற்கு அலமரும்*
*ஏதில் மாக்கள் பொதுமொழி கொள்ளாது*
*இன்றே போல்கநும் புணர்ச்சி................*

*(புறம் - 58)*

இந்தப் பாட்டின் பொருளை உணருங்கள். சோழன் பெருந்திருமாவளவனும் பாண்டியன் பெருவழுதியும் ஒன்று சேர்ந்து இருந்த காட்சி காரிக்கண்ணனாரின் உள்ளத்தைக் கவர்ந்துவிட்டது. இரு பெரும் முடி வேந்தர்களும் உள்ளம் ஒன்றுபட்டு உடன் இருந்த செயல் தமிழ்நாட்டு வரலாற்றிலேயே மிகப் புதியதாகும். பரம்பரை பரம்பரையாகப் பகைகொண்டு போராடுகின்ற சோழனும் பாண்டியனும் ஒன்றுபட்டு நின்றால் இந்த நிலவுலகமெல்லாம் தமிழர் ஆட்சியின் கீழாகும் என்பதே புலவர் பெருமானின் நோக்கம். தமிழ்நாட்டில் ஆட்சி செய்த முடியுடை மூவேந்தர்களையும் ஒன்று சேராமல் பிரிப்பதில் பிற நாட்டினர் கண்ணும் கருத்துமாக இருந்தார்கள் என்பதையும் காரிக்கண்ணனார் கூறுகின்றார். அங்ஙனம் பிரித்து வைக்க முயல்கின்ற கூட்டத்தினரை "ஏதிலார்" எனக் குறிக்கின்றார். அவர்கள் பிரித்து வைக்கும் கலையில் மிகத் தேர்ந்தவர்கள். அவர்கள் பேசுகின்ற கொள்கைகள் கேட்கும்பொழுது மிக நல்லனவாகத் தோன்றும் தன்மை உடையன. நீதியோடு பொருந்தியன போலவும் அமைந்திருக்கக்கூடியன. குலத்தில் தோன்றிய முன்னோரின் ஒழுக்கத்தைத் தழுவிநிற்பன போலவும் விளங்கித் தோன்றுவன. இங்ஙனம் மிகத் திறமாகப் பேசி அன்பு பொருந்திய நெஞ்சம் கொண்டவராகிய நண்பர்களிடையே

புகுந்து, அவர்களைப் பிரித்தற்குச் சுழன்று திரிவார்கள். இங்ஙனம் திரிகின்ற அப்பகைவர்களின் பொருளில்லாத சொற்களைக் கேளாமல் நீங்கள் ஒன்றுபட்டு வாழுங்கள் எனப் புலவர் கூறுகின்றார். தமிழர்கள் தமிழரைப் பகைத்துப் போராடக்கூடாதென்பதே காரிக் கண்ணனாரின் கருத்தாகும்.

இன்றைய உலகில் தமிழ் இனத்திற்கு ஏற்பட்டுள்ள அல்லல் களைப் போக்க வேண்டுமானால் தமிழ்த்தலைவர்கள் ஒன்றுபட வேண்டும். எதிர்காலத் தமிழினத்தின் ஆக்கங்கருதி ஒருவர்க்கு ஒருவர் விட்டுக்கொடுத்துச் செயலாற்றத் தமிழ்த் தலைவர்கள் துணிய வேண்டும். அன்பினால் விட்டுக்கொடுத்துத் தமிழர் உரிமைகளைப் பாதுகாக்கத் தமிழர்கள் திரண்டெழ வேண்டும். தங்கள் தங்கள் தனி உரிமைகளில் சிலவற்றைத் தமிழரின் இன உரிமைக்காக விட்டுக்கொடுக்க முடியாத நிலைமை உடைய தமிழ்த் தலைவர்களைத் தமிழ்மக்கள் இனிப் பொருட் படுத்தார்கள். ஊருக்குப் பொதுவான ஒரு தெரு வருகின்ற பொழுது தன்னுடைய காணியில் சிறு பாகத்தை விட்டுக் கொடுக்க மனமில்லாதவனை ஊரார் எப்படி மதிப்பார்கள். அவன் ஊருடன் பகைத்து வேருடன் கெடுகின்ற நிலைமையைத் தேடிக்கொள் கின்றான் என்பது வெளிப்படையாகும். இதே போலத்தான் தமிழ்த் தலைவர்கள் சிலரும் தமது தனி உரிமைகளை விட்டுக் கொடுக்க மனம் இல்லாமல் தமிழ் இனத்துக்கே கேடு விளைக்கின்றார்கள். இத்தலைவர்களின் மதிப்பு, உரிமை வேட்கையால் வெள்ளம் போல் எழுகின்ற தமிழ்மக்களின் உணர்ச்சித் துடிப்பைப் புறக் கணித்து வாழ முடியாமல் மாண்டுபோகின்றதென்பதை உணர்கின்றோம். விட்டுக்கொடுக்கும் மனப்பான்மை இல்லா எவரும் பொதுப்பணியில் ஈடுபட முடியாதென்பதைத் தெரிந்து செயலாற்றுதலே தமிழ்த் தலைவர்கள் கடமையாகும்.

# பணத்தையே பெரிதாக மதிக்கின்ற பண்பு மாறவேண்டும்

இன்று உலகிலே தோன்றுகின்ற அல்லல்களுக்கெல்லாம் முதற்காரணம் பணம்தான் என்பதை ஒருவரும் மறுக்க மாட்டார். பணம் படைத்தவர்கள் உயர்ந்த நாகரிகமான வாழ்வு வாழ்கின்றார்கள். பணம் இல்லாதவர்கள் தாழ்ந்த நிலையில் இருந்து வாழ்கின்றார்கள். வறியவர்களைப் பணம் படைத்தவர்கள் மதியார்கள். ஒரே வயிற்றில் பிறந்தவர்கள்கூடப் பணத்தினால் வேறுபடுத்தப்பட்டு ஒருவரை ஒருவர் மறந்து வாழ்வதைக் காண்கின்றோம். இதனால் பணக்காரர், வறியவர் என்ற இருவேறு பிரிவுகள் மக்கள் இனத்தில் நிலைத்து விட்டன. இந்த இரண்டு பிரிவுகளும் உள்ளமட்டும் மக்களின் வாழ்வு மலராது. இன உணர்ச்சியும் உரிமை வேட்கையும் ஒற்றுமையும் பண வேட்டையால் சிதறடிக்கப்படுகின்றன. தமிழ்நாட்டிலே நிலைபெறுகின்ற அடிமை வாழ்வு அகல வேண்டுமானால், செல்வர் வறியவர் என்ற வேறுபாடு நீங்க வேண்டும். அறத்தை மறந்து பொருளைத் தேடுகின்ற கூட்டத்தினரை மதிப்புச் செய்கின்ற அறியாமை தமிழ்மக்களிடத்தில் நின்று விடைபெற்றுக்கொள்ள வேண்டும். பொய்யுரைத்தும் சூதாடியும் பிறரை ஏமாற்றியும் பொருளைத் தேடுகின்றவர்களே நாட்டின் ஆக்கங் கருதி உழைக்க முன் வந்தால் நாடு எப்படி முன்னேறும். அவர்கள் நாட்டுத் தொண்டு என்ற போர்வையில் மறைந்து நின்று நாட்டின் பொருளை வேட்டை ஆடுவார்கள். பொதுமக்களை எவ்வளவு ஏமாற்ற முடியுமோ அவ்வளவும் ஏமாற்றித் தலைமை கொள்ள முயல்

வார்கள். அவர்களின் வஞ்சகத்தை உணரக் கூடிய விழிப்பு நிலை பொதுமக்கள் வாழ்வில் அமையவேண்டும்.

சங்ககாலத் தமிழகத்தில் செல்வர்கள், வறியவர்களுக்கு உதவி வாழ்ந்தார்கள். ஈகை என்ற அறத்தைப் பெரிதாக மதித்து வாழ்ந்த செல்வர்களைப் புலவர்கள் பாராட்டியுரைத்த பாக்கள் பல சங்க இலக்கியங்களில் உள்ளன. செல்வர்கள் உள்ளத்திலே அறத்தின் சாயல் வீசுமானால் வறியவர்கள் என்ற இனம் ஒன்று நிலைத்துவர முடியாது. பொருள் படைத்தவன் அப்பொருளைப் பிறர்க்கு உதவாமல் வாழ்வதைச் சங்ககாலத் தமிழர்கள் இகழ்ந் துரைத்தார்கள். அறத்தின் வழி நின்று தேடாத பொருளையும், அதனை உடைய செல்வர்களையும் மதியாமல் இகழ்ந்துரைந்த பாக்கள் பல புறநானூற்றில் காணப்படுகின்றன.

*எழுஇனி நெஞ்சம் செல்கம் யாரோ*
*பருகு அன்ன வேட்கை இல்வழி*
*அருகிற் கண்டும் அறியார் போல*
*அகம்நக வாரா முகனழி பரிசில்*
*தாள்இலாளர் வேளார் அல்லர்*
*வருகென வேண்டும் வரிசை யோர்க்கே*
*பெரிதே உலகம் பேணுநர் பலரே*
*மீளி முன்பின் ஆளி போல*
*உள்ளம் உள்ளவிந் தடங்காது வெள்ளென*
*நோவா தோன் வயின் திரங்கி*
*வாயா வன்கனிக்கு உலமரு வோரோ*

*(புறம் - 207)*

இச்செய்யுளில் தமக்குப் போதிய பொருளைக் கொடாமல் சிறிது கொடுத்த இளவெளிமான் என்னும் அரசனை இகழ்ந்து பாடிய பெருஞ்சித்திரனாரின் குரலைக் கேட்கின்றோம். “எம்முடைய நெஞ்சே, இனி நீ எழுந்திருப்பாயாக. யாம் போவோம். கண்டவுடன் ஆர்வத்துடன் பாராமல், கண்டும் காணாதவர்போல மன மகிழ்ச்சி இல்லாமல், முகத்தை மாற

வைத்துத் தந்த பொருளை (பரிசிலை), வேறொரு இடத்தில் செல்லும் முயற்சி இல்லாதாரும் வேண்டார்கள். எம்மை வருக வென்று வரவேற்று, மதிக்கும் தகுதி உடையோர்க்குப் பெரிது உலகம்; விரும்புவோரும் பலர். ஆதலால் ஆற்றல் வாய்ந்த யாளியைப் போல உள்ளம் மேற்கொள் இன்றித் தணியாது. கண்டோர் யாவர்க்கும் தெரியத் தம்மைக் கண்டு இரங்காத வனிடத்திலே, நின்று இரங்கிச் சூழ்வோரின் செயல் உள்ளே கனியாத வலிய கனியைப் பெறுதற்காக முயல்கின்றவரின் செயலைப்போன்றதாகும்" என்பதே பாட்டின் பொருள். இங்ஙனம் தாம் பெற்ற பெருஞ் செல்வத்தை வறியவர்க்குக் கொடுத்து வாழ்விக்கும்வண்ணம் மன்னர்களையும், பெருங்குடிச் செல் வர்களையும் ஊக்கி வழிகாட்டிய புலவர்களின் செயல் போற்றத் தக்கதாகும். இதனால் சங்ககாலத் தமிழகத்தில் வாழ்ந்த மன்னர் களும் பரம்பரைச் செல்வர்களும் தாம் அறநெறியில் நின்று ஈட்டிய செல்வத்தை வறியோர்க்குக் கொடுத்துவக்கும் இன்பத்தைப் பெரிதாக மதித்தார்கள்.

வறியவர்க்குக் கொடாது தொகுத்து வைத்திருக்கும் செல் வத்தை "நன்றியில் செல்வம்" என வள்ளுவர் இகழ்த்துரைக் கின்றார். அறத்தை உணர்ந்த அறிவாளர் இடத்தில் சேர்ந்த செல்வம் உலகப் பொதுச் செல்வமாக நிலவும் என்பதை வள்ளுவர் மிகத் தெளிவாகச் சொல்கின்றார். ஊர்மக்கள் எல்லாரும் அள்ளுகின்ற பொதுக் கிணற்றில் அல்லது குளத்தில் தண்ணீர் நிறைந்திருந்தால் ஊரார் எல்லாரும் மகிழ்வார்கள். அறிவுடையவர்களிடம் அறத்தின் வழியாக வந்து சேர்ந்த செல்வமும் வறுமையால் வாடுகின்ற மக்களின் துன்பத்தைப் போக்கும் பொதுச் செல்வமாக விளங்கும். அறத்தைத் தழுவிய அறிஞரின் நெஞ்சத்தில் அன்பு சுரந்து பாயும். அவர்கள் வறுமைப் பிணியால் வாடுகின்ற மக்களின் இன்னலைப் போக்கி இதயங் களிப்பார்கள்.

*ஊருணி நீர்நிறைந் தற்றே உலகவாம்*
*பேரறி வாளன் திரு*

என்பதே வள்ளுவரின் குரல். இங்ஙனம் அறிவுடையவனிடத்தில் நிரம்பிய செல்வம் வறுமையால் வருந்துகின்ற மக்களுக்குப் பயன்படுகின்ற வகையை மீண்டும் வள்ளுவர் விளக்கிக் கூறுகின்றார். நல்ல நறுங்கனிகளைத் தருகின்ற பயன்மரம் ஒன்று ஊரின் நடுவே நிற்பதுபோல அறிவுள்ளவரின் செல்வம் யாவர்க்கும் உதவுகின்றது என்பதாம். நல்ல பழங்களைத் தாங்கிய மரம் தன்னிடத்தில் வந்தார்க்குத் தண்ணிய நிழலைப் பரப்பிக் களைப்பை ஆற்றுகின்றது. பின் இனிய பழத்தை அருந்தக் கொடுத்து அவரின் பசித்துன்பத்தையும் தணிக்கின்றது. அறிஞர் களும், வறுமையால் வாடித் தம்மைத் தேடிவந்த மக்களை இன்முகம் காட்டி வரவேற்று இனிய மொழிகள் கூறி ஆதரிக் கின்றார்கள். பின் அறுசுவை உணவும் அளித்து அவர்களுக்கு வேண்டிய பொருளையும் கொடுத்து மகிழ்விக்கின்றார்கள்.

*பயன்மரம் உள்ளூர்ப் பழுத்தற்றால் செல்வம்*
*நயனுடை யான்கண் படின்*

என வரும் வள்ளுவர் குரலை உணர்க.

இனித் தாம் தேடிய செல்வத்தை இல்லாதவர்க்குக் கொடுத்துதவாத வன்கண்ணரையும் அவர் கைப்பட்ட செல்வத் தையும் வள்ளுவர் வெறுத்துரைக்கின்றார்.

*நச்சப் படாதவன் செல்வம் நடுவூரில்*
*நச்சு மரம்பழுத் தற்று*

என்பதே வள்ளுவர் மொழி. நச்சுத் தன்மையான பழங் களைத் தருகின்ற நச்சுமரம் நடுவூரில் நின்று பழுத்தால் எவ்வளவு கெடுதியை உண்டாக்குமோ, அப்படியே வறியார்க்குதவ மன மில்லாதவனுடைய செல்வமும் பெருந்தீங்கு தருமென்பதாம். ஊர் நடுவிலே நச்சுமரம் பழுத்து நின்றால், அறியாதவர்கள் அதன் பழத்தை அருந்தி உயிர்விட வேண்டிய நிலைமையும் உண்டாகும். இங்ஙனமே பிறரால் விரும்பப்படாத கொடியவ னொருவன் பெருஞ்செல்வனாய் ஊரில் இருந்து வாழ்வதால்,

அவ்வூரில் உள்ள மக்களுக்குப் பெருங் கேடும் வந்தடையக் கூடுமென்பதாம்.

இன்று தமிழ் மக்களின் ஆக்கங்கருதாத செல்வர்கள் சிலர் நச்சுமரம் போலத் தோன்றியுள்ளார்கள். அவர் தாம் படைத்த செல்வத்தினால் பொதுமக்களை அகப்படுத்தித் தலைமை தாங்கவும் முயல்கின்றார்கள். செல்வச் செருக்கும் தற்பெருமையும் தம் நலமும் கொண்ட நன்றியில்லாத செல்வர்களை இனித் தமிழ் மக்கள் நம்பினால் மானத்துடன் வாழமுடியாது. பணப் பெருக்கு மட்டும் எம்மை வாழ்வியாது. அறத்தைவிட்டு விலகாத பண்பாடும், பிறரின் துன்பத்தைக் கண்டு மனமுருகி உதவிசெய்கின்ற அருளும் உடையவர்கள்தான் தமிழினத்தைக் காப்பாற்றக் கூடியவர்கள். தாம் தீய வழிகளால் தேடிய செல்வத்தைப் பண நிலையங்களில் நிரப்பி வைத்திருக்கும் பண்பில்லாத வர்கள் - பொதுத் தொண்டில் தமது செல்வத்தைச் செலவு செய்ய மனமில்லாமல் பொதுமக்களை ஏமாற்றிப் பதவி பெற முயல்கின்ற பாதகர்கள் - பணப் பெருக்கினால் இனிமேல் தலைமை பெற முடியாதென்பதைக் காட்டத் தன்மானத் தமிழர்கள் திரண்டுவிட்டார்கள். பணத்தினாலும் பட்டத்தினாலும் தலைமை பெற்ற காலம் சாய்ந்துவிட்டது. இன்று நல்ல குணத்தினாலும் பொதுநலத் தொண்டினாலும் சிறந்த ஊழியர்கள் கையிலேதான் தலைமையும் கடமையும் தங்கி நிற்கின்றன. வழி வழியாக ஒரு பகுதியார் மட்டும் வாழ்ந்து தலைமை தாங்கிய நிலைமை மாறிவிட்டது. எல்லோரும் வாழவேண்டும். எல்லோர்க்கும் தொழில் உண்டு. தொழில் வளர்ந்தால் பொருளுண்டு என்ற விழிப்புணர்ச்சி எழுந்துவிட்டது. இந்த விழிப்புணர்ச்சி தமிழர்கள் தமிழராக வாழவேண்டுமென்ற இன உணர்ச்சியையும் தந்துவிட்டது.

## விழிப்பும் விடுதலையும்

உரிமை வேட்கையால் விழித்தெழுந்த மக்களினம் உலையாத உழைப்பினால் உரிமையைப் பெற்றுவிடும் என்பதில் ஐயம் இல்லை. உரிமை வேட்கை காட்டுத்தீ போன்றது. ஒவ்வொரு கண்ணிமைப் பொழுதும் புதிய புதிய வீறுபெற்று எழுகின்ற உரிமை வேட்கையின் ஆற்றலைக் கட்டுப்படுத்த முடியாது. இன்று தமிழ்நாடெங்கும் உரிமைக் குரல் கேட்கின்றது. உடல் பொருள் ஆவி மூன்றையும் உரிமைக்காகப் பலிகொடுப் போம் என்னும் உணர்ச்சியுடன் உரிமைப் போர்க்குத் தயாராகி நிற்கின்ற வீரங்கொள் தமிழர் கூட்டம், வெள்ளம் போற் பெருகி விட்டது. தமிழ்நாட்டிலே தமிழ்மொழிக்குத் தலைமை இல்லை என்றால் தமிழர்கள் தாங்குவார்களா? தம் தாய்மொழியாகிய தமிழைக் கொலைசெய்ய முற்படுகின்றோரைப் பணிந்து, தரணி ஆண்ட தன்மானத் தமிழர்கள் இனி வாழமாட்டார்கள். "நீ ஒரு இனத்தை அழிக்க எண்ணினால் முதலில் அந்த இனமக்கள் பேசுகின்ற மொழியை அழித்துவிடு" என்பது ஓர் ஆங்கிலப் பழமொழியாகும். இந்தப் பழமொழியை இன்று தமிழர்கள் சிந்திக்கின்றார்கள். சிந்தித்துச் செயலாற்ற முனைந்துவிட்டார்கள்.

*தந்தையின் தந்தை யாகத்*
*தமிழர்கள் ஆண்ட நாட்டை*
*வந்தவர்கள் ஆட்சி செய்ய*
*வாழ்ந்திடும் அடிமை வாழ்வு*
*இந்திர போக மாக*
*இருக்கினும் இன்பம் உண்டோ*

*கந்தையைச் சுற்றி னாலும்*
*களிப்பெமக் குரிமை வாழ்வே**

என்று தமிழர்கள் ஆர்க்கின்றார்கள்

இந்த நெருக்கடியான நேரத்தில் லொரையின் மொழியின் உரிமையைக் காப்பாற்றிய லொரையின் நாட்டுப் பள்ளிச் சிறுமியின் செயலை ஒவ்வொரு தமிழ் இளஞ்செல்வியும் இளைஞரும் எண்ண வேண்டும். சென்ற நூற்றாண்டில் ஜெர்மன் நாட்டை ஆட்சி புரிந்த கெய்சர் வெற்றி வீரனாக விளங்கினான். அவன் ஐரோப்பாக் கண்டத்தில் உள்ள பல நாடுகளை வென்று தன் ஆட்சியின் கீழ்ப்படுத்தினான். அந்த நாடுகளில் லொரையின் நாடும் ஒன்றாகும். லொரையின் நாட்டைக் கைப்பற்றிய கெய்சர் கொடுங்கோல் ஆட்சி புரியத் தொடங்கினான். லொரையின் மொழியைப் பேசக்கூடாதென்று சட்டம் ஏற்படுத்தினான். லொரையின் நாட்டு மக்களுக்கு, லொரையின் மொழியில் பேசவோ எழுதவோ முடியாத நிலைமை ஏற்பட்டுவிட்டது. தாய்மொழிப் பற்றுக் கொண்டு உரிமைப் போர் ஆற்ற எழுந்த லொரையின் நாட்டுத் தன்மானத் தலைவர்கள் கொல்லப்பட்டார்கள். லொரையின் நாட்டுப் பள்ளிக்கூடங்களில் எல்லாம் ஜெர்மன் மொழிதான் கற்பிக்கப்பட்டது. லொரையின் மக்கள் என்ற இனத்தையே ஐரோப்பாக்கண்டத்தில் இல்லாமல் அழிக்க எண்ணிய கெய்சர் லொரையின் மொழியை முதலில் அழிக்கத் தொடங்கினான். இங்ஙனம் முப்பது ஆண்டுகள் கெய்சரின் கொடுங்கோலாட்சி லொரையின் நாட்டில் நிலவியது. இந்த நேரத்தில் கெய்சரின் அன்புக்குரிய மனைவி, லொரையின் நாட்டின் வளத்தையும் மக்களின் வாழ்க்கை நிலைமையையும் அறிதற்காக நாடெங்கும் உலாவி வந்தார். இங்ஙனம் லொரையின் நாட்டிலே உள்ள பல இடங்களையும் சுற்றிப் பார்த்துக்கொண்டு வந்த அரசியார், ஒரு பாடசாலைக்குச் சென்றார். பாடசாலையில் உள்ள ஒவ்வொரு வகுப்பறையையும் பார்த்துக்கொண்டு வந்த அரசியார் ஓர்

வகுப்பறையில் அமைதியாக அமர்ந்தார். அவர் அந்த வகுப்பிலே உள்ள ஒரு மாணவியை நோக்கி "உனக்கு என்ன பரிசில் வேண்டும்?" என்று கேட்டார். அச்சிறுமி ஆச்சரியத்துடன் அரசியாரைப் பார்த்து, "நான் கேட்கின்ற பரிசை நீங்கள் கட்டாயம் தருவீர்களா?" என்று கேட்டாள். "ஆம், நான் தருகின்றேன்" என்று அரசியார் உறுதிமொழி கூறினார்.

அரசியாரின் உறுதிமொழியைக் கேட்டவுடன் சிறுமியின் முகம் மலர்ந்தது. அவள் அரசியை மிக ஆர்வத்துடன் நோக்கினாள். "மதிப்புக்குரிய மகாராணி அவர்களே! என் அன்னை மொழியாகிய லொரையின் மொழியே நான் கேட்கும் பரிசு. அதிகாரத்தினால் அடக்கி உரிமை பறிக்கப்பட்ட என் அன்னை மொழி – அழிக்கப் பட்டு வருகின்ற என் அன்னை மொழி – என் தாய் பேசிய என் தாயக மொழியாகிய லொரையின் மொழி உயிர்ப்பிச்சை பெற வேண்டும். இதுவே நான் கேட்கும் பரிசு" என்று ஆர்வங்கலந்த உறுதியான குரலில் கூறினாள். "மன்னனின் மனைவியே! என் பரிசைக் கொடு" என்று விழிகளாலும் வேண்டினாள்.

பள்ளிச்சிறுமி இங்ஙனம் பெரிய பரிசைக் கேட்பாள் என்று அரசியார் எதிர்பார்க்கவில்லை. பள்ளிச்சிறுமிக்குத் தான் கொடுத்த உறுதி உரைக்காகப் பாராளும் வேந்தனாகிய தம் கணவரின் கட்டளையை மாற்ற வேண்டிய நிலைமையை எண்ணிய அரசியார் திடுக்கிட்டார். சிறுமியின் தாய்மொழிப் பற்றை எண்ணி எண்ணி மகிழ்ந்த அரசியார் மன்னரைச் சந்தித்துச் சட்டத்தை மாற்ற வேண்டும் என்ற திட்டத்துடன் ஜெர்மன் தலைநகரை அடைந்தார். அடைந்த அரசியார் மாமன்ன னாகிய கெய்சரை வேண்டி லொரையின் நாட்டு மக்களுக்கு மொழி உரிமை வழங்குவித்தாள். முப்பது ஆண்டுகளாக உரிமை பறிக்கப்பட்டுக் கிடந்த லொரையின் மொழி மீண்டும் உயிர்

பெற்றது. சின்னஞ்சிறுபருவப் பள்ளிச் சிறுமியின் மொழி உணர்ச்சி மன்னன் கெய்சரின் கட்டளையை மாற்றிவிட்டது; மாண்டுபோகும் நிலையில் இருந்த லொரையின் மொழியை வாழ்வித்துவிட்டது.

மேற்காட்டிய லொரையின் நாட்டுப் பள்ளிச் சிறுமியின் செயலை எண்ணிப்பாருங்கள். லொரையின் நாட்டுத் தலைவர்கள் தங்கள் அன்னை மொழிக்காக, ஆவியைப் பலிகொடுத்தும் சிறையில் இருந்து சித்திரவதைப்பட்டும் ஆற்றிய உரிமைப் போரின் பயன் பள்ளிச் சிறுமியின் உள்ளத்தில் இடம் பெற்று மலர்ந்துவிட்டது. உண்மைத் தலைவர்கள் தொடர்ந்து உரிமைப் போரை ஆற்றினால் உரிமை ஒளி ஒவ்வொரு தமிழன் உள்ளத்திலும் தோன்றும்.

அன்று லொரையின் மொழிக்கு ஏற்பட்ட இன்னல்தான் இன்று எங்கள் அன்னை மொழியாகிய தமிழுக்கும் ஏற்பட்டுள்ளது. முடியுடை மூவேந்தர் வளர்த்த தமிழ்மொழியை அடிமை மொழி யாக்கி அழிக்க வழிதேடுகின்றவர்களின் செயலை நாம் அடக்க வேண்டும். கனகவிசயர் தலையில் கல் ஏற்றிக் கண்ணகிக்குக் கோவில் கட்டிய தமிழ் — கங்கையையும் கடாரத்தையும் வென்ற கன்னித் தமிழ் — ஒதுக்கப்படுவதா? இமயத்தில் கொடி நாட்டி ஈழத்தை அடிபணியச் செய்த இன்பத் தமிழ் – இறவாத இலக்கண இலக்கியச் சிறப்பு வாய்ந்த சங்கத் தமிழ் – இன்று விளம்பரப் பலகைகளில் கூட இடமில்லாமல் வெட்டப்படுவதா? என்ற உரிமைவெறி – விடுதலைப் போர் எழுச்சிகொண்ட வீரத் தமிழர் கூட்டத்தின் அறப்போர்க் குரல் – திக்கெல்லாம் சென்று ஒலிக்க வேண்டும். லொரையின் நாட்டு மக்கள் முப்பது ஆண்டுகள் தொடர்ந்து தங்கள் அன்னை மொழிக்காகப் போராடினார்கள். பல அல்லல்களை அடைந்தார்கள். அவர்களின் அடிச்சுவட்டை நாமும் பின்பற்றிப் போர் தொடுப்போம். தமிழர்கள் விழித்து விட்டார்கள் என்பதை இன்றைய உலகம் உணர்ந்துவிட்டது.

*தமிழனுக்கு வீழ்ச்சி இல்லை தமிழன் சீர்த்தி*
*தாழ்வதில்லை தமிழ்நாடு தமிழ் மக்கள்*
*தமிழ்என்னும் பேருணர்ச்சி இந்நாள் போலே*
*தமிழ்நாட்டில் எந்நாளும் இருந்த தில்லை*
*தமிழர்க்குத் தொண்டுசெய்யும் தமிழ னுக்குத்*
*தடைசெய்யும் நெடுங்குன்றும் தூளாய்ப் போகும்*
*தமிழுக்குத் தொண்டுசெய்வோன் சாவதில்லை*
*தமிழ்த்தொண்டன் பாரதிதான் செத்த துண்டோ*

என்று பாரதிதாசன் எம்மைக் கேட்கின்றார்.

## சுதந்திர தாகம்

**சு**தந்திர உணர்ச்சி செயலாகி வெற்றி பெறுதற்குச் சுதந்திர தாகம் வேண்டும். சுதந்திரம் பெற்றே தீரவேண்டும் என்ற ஆராமைதான் சுதந்திர தாகம். சுதந்திர தாகம் தோன்றினால் உயிரைப் பொருட்படுத்தாத தன்மானத் துடிப்பும், தன்னல மறதியும், வெள்ளம் வெள்ளமாய்ப் பெருகப் போர் தொடுக்கின்ற புதிய ஆற்றலும் உண்டாகும். அடிமை வாழ்விலே கிடந்து அல்லற்பட்ட உடம்பைச் சுதந்திரத் தீயில் இட்டுப் புடம் பிடித்துப் புதிய பிறப்பெடுக்கத் துணிந்த சுதந்திர வீரரின் முழக்கத்தைக் கேட்கலாம். சுதந்திரப் போரில் ஈடுபட்டுப் போராற்ற ஆற்றச் சுதந்திரதாகம் சுரந்து பெருகும். மனைவி, மக்கள், வாழ்வு என்ற பற்றெல்லாம் பறந்து போக மானமும் உரிமை வேட்கையும் நிரம்பிய வீரர்களாக நாங்கள் மாறிவிடுவோம். எங்களை எங்களுக்குத் தெரியாத நிலையிலே நின்று எங்கள் உரிமைகளைப் பெறுதற்காகப் போராடிக்கொண்டே இருப்போம். சிறையும், சித்திரவதையும், தூக்குமேடையும் இந்திரபோக வாழ்வாகவே எங்களுக்குத் தோன்றும்.

*மண்ணில்இன் பங்களை விரும்பிச் சுதந்திரத்தின்*
*மாண்பினை இழப்பாரோ*
*கண்ணிரண்டும் விற்றுச் சித்திரம் வாங்கினால்*
*கைகொட்டிச் சிரியாரோ*

என்று பாரதியார் கூறுகின்ற குரல் எங்கள் ஆவியில் ஊறி ஆண்மையை அளிக்கின்றது.

இன்றைய நிலையில் தமிழ்நாட்டு மக்கள் ஆகிய எங்களின் சுதந்திரதாகம் கரைபுரண்டு பாய்கின்ற ஆற்று வெள்ளமாகப்

பெருக வேண்டும். அடிமைகளாகவே வாழப் பிறந்த இனம் போல எம்மை ஆளுகின்றோர் கருதுகின்றார்கள். பழந்தமிழ் இலக்கியங்களில் உள்ள பழம் பெருமைகளைப் பேசிப் பேசிப் பல நூற்றாண்டுகளாக அடிமைப்பட்டுக் கிடக்கின்றோம். எங்கள் முன்னோர்கள் அடைந்திருந்த மேன்மைகளை மேடைகளில் கூறி மார்பு தட்டுவதுடன் நின்றுவிட்டோம். எங்கள் முன்னோர்களைப் போல நாமும் சுதந்திரமாக வாழவேண்டும் — எங்கள் நாட்டை நாங்களே ஆளவேண்டும் என்னும் எழுச்சியுடன் போராற்றத் தவறிவிட்டோம். பொன்னையும் பொருளையும் போகத்தையும் பெரிதாக எண்ணி வாழ்ந்துவிட்டோம்.

*சொந்த அரசும்புவிச் சுகங்களும் மாண்புகளும்*
*அந்தகர்க் குண்டாகுமோ—கிளியே*
*அலிகளுக் கின்பம் உண்டோ*

*பழமை பழமைஎன்று பாவனை பேசல்அன்றிப்*
*பழமை இருந்த நிலை — கிளியே*
*பாமரர் ஏதறி வார்*

என்று பாரதியார் வருந்திக் கூறுகின்ற அளவுக்கு நாங்கள் மானமின்றி வாழ்ந்துவிட்டோம். ஆளுகின்றோர் எமக்குத் தருகின்ற பதவிகளையும் பட்டங்களையும் மதித்து, நமது நாடு அடிமைப்பட்டிருத்தலையோ, நமது மொழி ஒதுக்கப்படுதலையோ பொருட்படுத்தாமல் இருக்கப் பழகிக்கொண்டோம். இந்தப் பரம்பரைப் பழக்கம் எம்மைவிட்டு நீங்கவேண்டுமானால் எமக்குச் சுதந்திர தாகம் எழவேண்டும். சுதந்திரத்தின் மேம்பாட்டை அறியாத மக்களாக வாழ்கின்ற வாழ்வை உலகத்தார் இகழ்வார்கள்.

*இதந்தரு மனையில் நீங்கி*
*இடர்மிகு சிறைப்பட்டாலும்*
*பதந்திரு இரண்டும் மாறிப்*
*பழிமிகுந் திழிவுற்றாலும்*
*விதந்தரு கோடி இன்னல்*
*விளைந்தெனை அழித்திட்டாலும்*

*சுதந்திர தேவி நினைத்*
*தொழுதிடல் மறக்கிலேனே*

என்ற பற்று எங்கள் உள்ளத்தில் ஊறிச் செழிக்கா விட்டால் சுதந்திர தேவி எம்மை நோக்கமாட்டாள். பஞ்சம், பட்டினி, பிரிவு முதலான துன்பங்கள் எல்லாம் சுதந்திரதாகங் கொண்டெழுந் தோரின் முன்னே வரவும் அஞ்சுகின்றன. "இன்பமே எந்நாளும் துன்பம் இல்லை" என்ற இறுமாப்பு சுதந்திர தாகங் கொண்டோரின் உள்ளத்திலே குடி புகுந்துவிடும். சாதலை வாழ் வாகக் கொள்ளும் தனி ஆற்றல் சுதந்திர தாகத்தின் தோற்ற மாகும். சுதந்திரத்தைப் பெறவேண்டும் என்ற தாகம் எமக்கு உண்டானால் பெற்றே தீருவோம். சுதந்திரதாகம் ஒவ்வொரு தமிழன் உள்ளத்திலும் ஊறவேண்டும். ஊறினால் அந்த வேட்கையை அணுகுண்டாலும் அழிக்க முடியாது. தந்தைபின் மைந்தனாகச் சந்ததி சந்ததியாய்ச் சுதந்திரப் போரை ஆற்றக் கூடிய தாய்நாட்டன்பையும் தாய்மொழிப் பற்றையும் தாங்கிய தன்மானத் தமிழர் கூட்டம், தமிழ்நாடெல்லாம் பெருகிவிடும். ஆளுகின்றோரின் சிறைக் கூடங்களும், கொலைக்கூடங்களும் தமிழ் மணம் வீசத் தொடங்கிவிடும்.

*"என்று தணியும் இந்தச் சுதந்திர தாகம்*
*என்று மடியும் எங்கள் அடிமையின் மோகம்*
*என்றெம தன்னைகை விலங்குகள் போகும்*
*என்றெம தின்னல்கள் தீர்ந்து பொய்யாகும்"*

எனப் பாரதியார் ஊட்டுகின்ற சுதந்திரதாகத்தை நாங்கள் கொள்ள வேண்டும். சுதந்திரம் தெய்வ உரிமை. அதை வெறும் நடிப்பினால் பெறமுடியாது. தன்னலத்தை உதறித்தள்ளிச் சாதலுக்கும் அஞ்சாத உளச் செழிப்புடன் தமிழர்கள் திரண்டு போராடினால் தமிழ்நாடு தமிழர்க்காகும். சுதந்திர தாகம் தமிழர் ஆவியில் கலந்து பாய்கின்ற நாள் நெருங்கிவிட்டது. "கல் தோன்றி மண்தோன்றாக் காலத்தே முன்தோன்றி வாழ்ந்த"

தமிழர்களின் வீரப் பரம்பரை மீண்டும் ஆட்சிபுரியும் என்பதற்கான அறிகுறிகள் பல காணப்படுகின்றன. இன உணர்ச்சி இல்லாத பேடிகளாகத் தமிழரைப் படைத்துவைத்த சூழ்ச்சிகள் எல்லாம் பாழ்பட்டுப் போகின்றன. இன்று தமிழ்நாடு தமிழர்க்கே என்ற சுதந்திரதாகம் எழுந்துவிட்டது. இந்தச் சுதந்திரதாகம் தீருமளவும் தமிழர்கள் போராடத் தயாராகிவிட்டார்கள்.

*நாமிருக்கும் நாடுநமது என்பதறிந்தோம் - இது*
*நமக்கே உரிமையாம் என்பதறிந்தோம் - இந்தப்*
*பூமியில் எவர்க்கும்இனி அடிமைசெய்யோம் - பரி*
*பூரணனுக்கே அடிமை செய்து வாழ்வோம்*

என்று பாடிய பாரதியாரின் எண்ணமும் ஆர்வமும் இன்று தமிழர்கள் உள்ளத்தில் உலாவித் திரிகின்றன.

# மானத்துடன் வாழவேண்டும்

**மா**னத்துடன் வாழ்கின்ற வாழ்வுதான் உயர்ந்த வாழ்வு. "மானம் அழிந்தபின் வாழாமை இனிது" என்பதே தமிழ்நாட்டுப் பழமொழி. மானத்தைப் போற்றி வாழ்கின்ற மக்களினம் வழி வழியாக உலகத்தில் வாழ்கின்றது. தங்கள் உரிமைகள் பறிபோக அடிமையாக இருந்து வாழவிரும்பாத உணர்ச்சியே மான மாகும். முதலாவது உலகப் போரிலே படைப்பெருக்கும் கொடுங் கோன்மையும் பொருந்திய ஜெர்மன் நாட்டு மாமன்னனாகிய கெய்சர் சிறிய பெல்ஜியத்தை இகழ்ந்து மதித்தான். தனது படைகளை பெல்ஜியத்தின் வழியாக நடத்தி பிரான்சைப் பிடிக்கத் துணிந்தான். படைப் பெருக்கில்லாத பெல்ஜியம் தன்னைப் பணிந்து, போக வழிவிடும் என்ற எண்ணத்தால் முன்னறிக்கை இல்லாமலே பெல்ஜியத்தின் ஊடாகப் படை களைச் செலுத்தினான். தங்களைப் பொருட்படுத்தாமல் தமது நாட்டின் வழியாகப் பாய்ந்து வந்த ஜெர்மன் படைகளை பெல்ஜிய மக்கள் எதிர்த்தார்கள். தங்கள் உயிரைப் பெரிதென்று நினையாமல் வெள்ளம் போல வந்த ஜெர்மன் படைகளைச் சின்னஞ்சிறிய பெல்ஜியப் படைவீரர்கள் திரண்டெதிர்த்துச் செத்தார்கள். ஜெர்மன் படை எழுச்சியைத் தடுக்க வேண்டு மென்று பெல்ஜிய மக்கள் போர் தொடுத்து மாண்டார் அல்லர். தங்களை மதிக்காமல் தங்கள் நாட்டின் வழியாக மாற்றான் படை வந்துவிட்டதே என்ற மானத்தினாலேதான் போர் தொடுத் தார்கள். தங்களை பெல்ஜியம் தடுக்காது என்ற இறுமாப்புடன் வந்த ஜெர்மன் வீரர்கள் பெல்ஜியத்தின் எதிர்பாராத எதிர்ப்பைக் கண்டு திகைத்து விட்டார்கள். மான உணர்ச்சியுடன் போர் புரிந்த பெல்ஜிய வீரர்கள் ஒருவர் ஆயிரம் பேராக உருத்தெழுந்து ஜெர்மன் வீரரை அழித்தார்கள். ஈற்றில் பெல்ஜியம் வீழ்ந்தது.

மானம் அழிந்து வாழ விரும்பாத மாண்பு இன்றும் பெல்ஜிய மக்களை வாழ்விக்கின்றது.

*மானத்தால் வீழ்ந்து விட்டாய்*
*மதிப்பிலாப் பகைவர் வேந்தன்*
*வானத்தாற் பெருமை கொண்ட*
*வலிமைதான் உடைய னேனும்*
*ஊனத்தால் உள்ளம் அஞ்சி*
*ஒதுங்கிட மனமொவ் வாமல்*
*ஆனத்தைச் செய்வோம் என்றே*
*அவன்வழி எதிர்த்து நின்றாய்*

என்று மானத்தால் வீழ்ந்த பெல்ஜியத்தை பாரதியார் வாழ்த்துகின்றார். தங்கள் ஆவியைப் பலிகொடுத்து மானத்தைப் பாதுகாத்த பெல்ஜிய மக்களைப் பாரதியாரால் மறக்க முடிய வில்லை. பாரதியாரின் உள்ளத்திலே ஊறிப் பாய்கின்ற மான உணர்ச்சி பெல்ஜிய மக்களின் மானத்துடன் கலந்து புதிய ஆற்றல் பெற்றுப் பெருகுகின்றது. தமிழ்மக்களும் பெல்ஜிய மக்களைப் போல மானத்துடன் எழுந்து தமது உரிமைகளைப் பெறுதற்காகப் போராட வேண்டுமென்பதே பாரதியாரின் விருப்பம். மானத்தால் வீழ்ந்த பெல்ஜியம் மீண்டும் தன் உரிமைகளைப் பெற்று வாழ்கின்றது. தமிழர்களும் மானத்துடன் உரிமைப் போரில் குதித்து மாய்ந்துதான் மறுமலர்ச்சி பெறவேண்டும் என்பதையும் பாரதியார் நினைவூட்டுகின்றார்.

தமிழர்கள் மான உணர்ச்சி மிகுந்தவர்கள். தமிழ் இலக்கியங்களில் மானத்தின் மாண்பு மிகமிகச் சிறப்பாகப் பாராட்டப்படுகின்றது.

*இளியவரின் வாழாத மானம் உடையார்*
*ஒளிதொழு தேத்தும் உலகு*

என்பது திருக்குறள். இன்று தங்கள் உரிமைகளை யெல்லாம் பறிகொடுத்து அடிமையாக வாழ்கின்ற சாதி தமிழர் தான். ஒருசில தமிழர்கள் உயர்ந்த நிலையில் இருப்பதால்

மட்டும் தமிழர்கள் உயர்ந்துவிட்டார்கள் என்று சொல்ல முடியாது. அங்ஙனம் உயர்ந்த நிலையில் இருக்கின்றவர்களும் ஆளுகின்ற வரின் ஆதரவை எதிர்பார்த்துத்தான் இருக்கின்றார்கள். ஆளு கின்றவரை எதிர்த்துத் தங்கள் உரிமைகளைப் போராடிப் பெறும் செயலை உயர்ந்த வாழ்வில் இருக்கின்ற தமிழர்கள் ஒப்புக் கொள்ளமாட்டார்கள். அவர்கள் வறியவர்களாகத் தாழ்ந்த வாழ்வில் இருக்கின்ற தமிழர்கள் எல்லாரும் தமக்கடிமை என்று எண்ணுகின்றார்கள். இவற்றையெல்லாம் பாரதியார் சிந்திக்கின்றார். தமிழர்கள் மானத்துடன் வாழவில்லை யென்பதைப் பாரதியார் வெளிப்படையாகக் கூறுகின்றார். வெளி உலகில், தமிழரைப்பற்றி என்ன எண்ணம் இருக்கின்றதென்பதைப் பாரதியார் எடுத்துச் சொல்கின்றார் கேளுங்கள்.

*"ஒரு பதினாயிரம்*
*சனிவாய்ப் பட்டும் தமிழச் சாதிதான்*
*உள்ளுடை வின்றி உழைத்திடு நெறிகளைக்*
*கண்டெனது துள்ளம் கலங்கிடா திருந்தேன்*
*ஆபிரிக்கத்துக் காப்பிரி நாட்டினும்*
*தென்முனை அடுத்த தீவுகள் பலவினும்*
*பூமிப் பந்தின் கீழ்ப்புறத் துள்ள*
*பற்பல தீவினும் பரவி இவ்வெளிய*
*தமிழச் சாதி தடியுதை உண்டும்*
*காலுதை உண்டும் கயிற்றடி யுண்டும்*
*வருந்திடும் செய்தியும் மாய்ந்திடும் செய்தியும்*
........................
*பிணிகளால் சாதலும் பெருந்தொல்லை உள்ளதம்*
*நாட்டினைப் பிரிந்த நலிவினால் சாதலும்"*

என்பதே பாரதியாரின் குரல்.

இங்ஙனம் வெளிநாடுகளில் எல்லாம் தமிழர்கள் மானம் அழிந்து வாழ்கின்றார்கள். இன்றும் இப்படித்தான் வாழ்கின் றார்கள். தமிழ்நாட்டைத் தமிழர்கள் ஆண்டால் மானமின்றி

வாழ்கின்ற இழிநிலை தமிழர்களுக்கு ஏற்படுமா என்றெண்ணிப் பாருங்கள். தமிழர்கள் மானத்துடன் வாழவேண்டுமானால் தமிழ்நாட்டில் மீண்டும் தமிழர் ஆட்சி நிலவ வேண்டும். தமிழ் அரசு ஒன்றிருந்தால் தமிழரைப் பிறநாட்டாரும் மதித்து நடத்து வார்கள். இன்று பிற நாடுகளிலே அடிமைகளாய் இருந்து அல்லற்படுகின்ற சாதியாகவே தமிழர்கள் வாழ்கின்றார்கள். தமிழ்நாட்டிலேயே தமிழன் தன் உரிமையுடன் வாழமுடியாத நிலைமையிருக்கின்றது. வீட்டிலே குறைவில்லாமல் உண்டுடுத்து வாழ்ந்தால் போதும்; அதுதான் மானத்துடன் வாழ்கின்ற வாழ் வென்று நினைக்கக் கூடாது. பிற இனத்தாருக்கு அடிமையாகாமல் தமிழர்கள் சுதந்திரத்துடன் வாழ்கின்ற வாழ்வுதான் மானத்துடன் வாழ்கின்ற வாழ்வு. தமிழர்கள் தமிழ்நாட்டை ஆளமுடியாமல் அடிமைகளாக இருந்து வாழ்கின்ற வாழ்வை மானத்தடன் வாழ்கின்ற வாழ்வாக வெளிநாட்டார் மதிக்கமாட்டார்கள்.

*தந்தையின் தந்தை யாகத்*
*தமிழர்கள் ஆண்ட நாட்டை*
*வந்தவர் ஆட்சி செய்ய*
*வாழ்ந்திடும் அடிமை வாழ்வு*
*இந்திர போக மாக*
*இருப்பினும் இன்பம் உண்டோ*
*கந்தையைச் சுற்றி னாலும்*
*களிப்பெமக் குரிமை வாழ்வே**

என்ற எண்ணம் தமிழ்மக்கள் உள்ளத்தில் ஊறிவிட்டால் தன்மான உணர்ச்சி தழைத்து விடும்.

# இளந்தமிழர் எழுச்சி

இளந்தமிழர்களே! எழுச்சி கொள்ளுங்கள். உங்கள் உள்ளத்தில் உரிமை ஒளி வீசவேண்டும். இன்று வாழ்கின்ற உங்கள் அன்னையரும் தந்தையரும் தமிழர்கள். அவர்கள் உடலிலும் தமிழ்க் குருதிதான் ஓடுகின்றது. ஆனால் அவர்களின் உடல் கட்டுத் தளர்ந்துவிட்டது. உள்ளத்தில் எழுகின்ற உரிமை உணர்ச்சி செயலாக உருத்தாங்கி, உலக மக்களின் வரவேற்பை விரைந்து பெற வேண்டும். அன்னை மொழிக்கு வந்த இன்னல் களைத் துடைத்து ஆக்கம் புரியக்கூடிய ஆற்றல் உங்களிடம் தான் உண்டு. உச்சிமேல் வானம் இடிந்து வீழ்ந்தாலும் அச்சம் இல்லாமல் ஆண்மைப் போராற்றவல்ல இளந் தமிழர்கள் ஆயிரம் ஆயிரமாகப் பெருக வேண்டும். உங்கள் தமிழ்த் தாய் இந்த உலகத்தில் அடைகின்ற வெற்றி எல்லாம் உங்கள் வெற்றி. தமிழ்த்தாயின் சிலம்படிகள் உலாவிவருகின்ற முன்னேற்றம் எல்லாம் உங்கள் முன்னேற்றம். இளந்தமிழர்களே! நீங்கள் சிறைச்சாலைக்கும் குண்டுவீச்சுக்கும் அஞ்சாதீர்கள். உங்கள் உடம்பிலே ஓடுகின்ற குருதியின் ஒவ்வொரு துளியும் தமிழ் மொழிக்குத்தான் உரியது. நீங்கள் தமிழ் வாழவேண்டும் என்ற உணர்ச்சியுடன் ஊழியஞ் செய்யத் தொடங்குங்கள். தமிழைக் காப்பதுவே நீங்கள் ஆற்றுகின்ற அறம். தமிழுக்காக வாழ்வதே நீங்கள் ஈட்டுகின்ற பொருள். தமிழின் விடுதலை கண்டு மகிழ்வதே நீங்கள் அடைகின்ற இன்பம். நீங்கள் பார்த்துக் கொண்டிருக்கும்போதே உங்கள் அன்னை மொழியாகிய தமிழின் உரிமை இன்னொரு இனத்தினரால் பறிக்கப்படுவதா? இனி வரும் எதிர்காலத்தில் தமிழர் என்றோர் இனம் இருக்க வேண்டுமானால். இளந்தமிழர்களாகிய நீங்கள்

உரிமைப் போரில் இறங்க வேண்டும். இனிப் பொறுக்க முடியாது. இன்றே, இன்னே, இப்பொழுதே போரில் குதியுங்கள்.

*உயர்தமிழ்த்தாய் இந்நிலத்தில் அடைகின்ற*
*வெற்றியெல்லாம் உந்தன் வெற்றி*
*அயராதே எழுந்திருநீ இளந்தமிழா*
*அறம்செய்வாய் நாம டைந்த*
*துயரத்தைப் பழிதன்னை வாழ்வினிலோர்*
*தாழ்மையினைத் துடைப்பாய் இந்நாள்*
*செயல்செய்வாய் தமிழுக்குத் துறைதோறும்*
*துறைதோறும் சீறி வந்தே*

எனப் பாரதிதாசன் உங்களைக் கூவி உரைக்கின்றார்.

எங்கள் அன்னை மொழிக்கு இன்று எல்லாப் பக்கங்களிலும் இன்னல்கள் சூழ்கின்றன. ஆளுகின்றவர்கள் தமிழின் வாழ்வை அழிக்கத் துணிந்து விட்டார்கள். தமிழ் அழிந்தால் – தமிழின் ஆட்சி உரிமை பறிக்கப்பட்டால் தமிழரும் அழிந்து போவார்கள். இளந்தமிழர்களே! நீங்கள்தான் தமிழைக் காப்பாற்ற வேண்டும். உங்களில் ஒரு கோடி பேர் ஒன்றுபட்டால் – உயிரையும் தமிழுக்காக உதவுவோம் என்றெழுந்தால் – தமிழன்னை புது வாழ்வு பெற்றுவிடுவாள். தமிழ்மொழி தமிழகத்தின் ஆட்சி மொழியாக விளங்கும். தமிழர்கள் தன்மானத்துடன் தலை நிமிர்ந்து உலாவுவார்கள். தமிழர்கள் வாழ்கின்ற தமிழ் நாட்டிலே தமிழ்மொழிக்கு ஆட்சி உரிமை இல்லையென்றால், தமிழர்கள் ஏன் வாழவேண்டும். தமிழை இகழ்கின்றவர்கள் தமிழரை ஆள்வதா? தமிழ்நாடு தமிழர்க்கென்ற உணர்ச்சி தமிழர்க்கில்லையா? ஆட்சி உரிமை பெறாத அடிமை இனமாகவே தமிழர் வாழ வேண்டுமா? இளந்தமிழர் உள்ளத்தில் ஏன் இந்த எண்ணங்கள் எழவில்லை? எழுந்துவிட்டால் இன்றே உலக மேடையில் தமிழகத்தின் ஆட்சிக் கொடி – வில்லும் புலியும் மீனும் பொறித்த வெற்றிக் கொடி உயர்ந்து பறக்காதா? பறந்தால்,

*உடலியக்கும் நல்லுயிரே உயிரியக்கும்*
*நுண்கலையே மக்கள் வாழ்வாம்*

*கடலியக்கும் சுவைப்பாட்டே கண்ணான*
*செந்தமிழே அன்பே நாட்டில்*
*கெடல்இயக்கும் நெஞ்சுடையார் துறைதோறும்*
*நின்எழிலைக் கெடுக்கப் பாடு*
*படல்தன்னை நினைக்கையிலே நெஞ்சு*
*பதைக்கும் பகரவாய் பதைக்கும்*

என்று பாரதிதாசன் உள்ளம் உருகிக் கூறுகின்ற நிலைமை ஏற்படுமா? சிந்தித்துப் பாருங்கள்.

இளந்தமிழர்களே! நீங்கள் தமிழர்கள் எல்லோரும் உரிமை உணர்ச்சியுடன் ஒன்றுபட்டு நின்றுதான் உரிமைப் போர் ஆற்ற வேண்டும் என்று எதிர்பாராதீர்கள். ஒருபோதும் தமிழர்கள் எல்லோரும் ஒன்றுபடமாட்டார்கள். இன்றும் ஆளுகின் றோரைப் பாராட்டி வாழ்கின்ற அடிமை உணர்ச்சி கொண்ட தமிழர்கள் எம்முடன் வாழ்கின்றார்கள். அவர்கள் ஆளுகின்றோர் செய்கின்ற ஒவ்வொரு செயலுக்கும் உயர்ந்த காரணங்கள் காட்டிப் பேசுவார்கள். தமிழ் தெய்வமொழி, ஆட்சி உரிமை இல்லாவிட்டாலும் அழிந்து போகாது, நாங்கள் ஆளுகின்றோரின் மொழியைப் படிக்கலாம் என்று அழுத்தம் திருத்தமாகக் கூறு வார்கள். இவர்களைத் திருத்த முடியாது. திருத்தி உரிமைப் போர் ஆற்ற முன்பே தமிழ் அழிந்துவிடும். பல ஆண்டுகளாக, அடிமை வாழ்வு வாழ்ந்த பழக்கம் சிலரிடம் உயிர்க் குணமாகக் கலந்து விடுகின்றது. இந்தக் குணத்தை உங்களால் மாற்ற முடியாது. அடிமை உணர்ச்சிகொண்ட தமிழருடன் நீங்கள் போராடி நிற்பதால் ஆளுகின்றோரின் கை மிஞ்சிவிடும். நீங்கள் ஆளுகின்றோரை எதிர்த்து அறப்போர் தொடுங்கள். அன்னை மொழிக்கு இன்னும் பலபல ஊழி வாழும் வல் லமையைத் தேடிக்கொடுங்கள். தந்தைக்குப் பின் மைந்தனாகத் தொடர்ந்து போராடக்கூடிய அளவுக்கு இன்னல்கள் பல எய்தினாலும், உள்ளம் உலையாமல் உரிமைப் போரை ஆற்றுங்கள். உரிமைதான் உயிர். உரிமை அற்ற வாழ்வு உயிரற்ற வாழ்வு. அன்னை மொழியை அழிக்க முயல்பவரை அடக்காமல்

வாழ்கின்ற அடிமை வாழ்வை — ஆண்மை அற்ற பேடி வாழ்வைப் பார்த்து உலகம் சிரிக்கும். இளந்தமிழர்களே! தமிழன்னை உங்களை அழைக்கின்றாள். எழுங்கள், உரிமை முரசின் ஒலி உலகெல்லாம் கேட்கட்டும்.

*உணர்ந்திடுக தமிழ்த்தாய்க்கு வருந்தீமை*
*உனக்குவருந் தீமை அன்றோ*
*பிணிநீக்க எழுந்திருநீ இளந்தமிழா*
*வரிப்புலியே பிற்றை நாளுக்கு*
*அணிசெய்யும் இலக்கியம்செய் அறத்தைச்செய்*
*விடுதலைகொள் அழகு நாட்டில்*
*பணிசெய்வாய் தமிழுக்குத் துறைதோறும்*
*துறைதோறும் பழநாட்டானே*

என வரும் பாரதிதாசனின் குரலைக் கேளுங்கள். ஆளுகின்றோர் தமிழரின் உரிமைகளைப் பறித்துத் தமிழர் என்ற இனமே இல்லையென்று சொல்லத் துணிந்துவிட்டார்கள். இந்நிலையிலும் தமிழ்நாடு பிரியக்கூடாது. பிரிந்தால் தனித்து நின்று வாழாது. பிரியாமல் ஒன்றுபட்டு வாழ்வதுதான் நல்லது, ஒரே ஆட்சியின்கீழ் வாழ்வதுதான் பொருத்தமானது என்றெல்லாம் தமிழர்கள் பொதுமை பேசிக்கொண்டிருந்தால் ஆளுகின்றோர் என்னதான் செய்யமாட்டார்கள். தமிழன் தமிழ்நாட்டில் தன்மானத்துடன் வாழ்ந்துகொண்டு — உரிமையுடன் உலாவிக் கொண்டு — பொதுமை பேசினால் அவனுடைய கொள்கையை உலகம் ஏற்கும். உரிமை உணர்ச்சி இல்லாமல் தான் வாழ்கின்ற தமிழ்நாட்டைத் தான் ஆள வழிசெய்யாமல், "மீளா அடிமை உமக்கே ஆளாய்" என்ற நிலைமையில் இருந்துகொண்டு தமிழன் பேசுகின்ற பொதுமை அறத்தை ஆர் கேட்கப் போகின் றார்கள். தான் உரிமையுடன் வாழமுடியாதவன் பிறர்க்கு உரிமையின் மேம்பாட்டைக் கூறுவதினால் என்ன பெருமை இருக்கின்றது. இளந்தமிழர்களே! உங்கள் கையிலேதான் எதிர்காலத் தமிழினத்தின் வாழ்வு இருக்கின்றது.

*எதுசெய்ய நாட்டுக்கே எனத்துடித்த*
*சிங்கமே இன்றே இன்னே*
*புதுநாளை உண்டாக்கித் தமிழ்காப்பாய்*
*புத்துணர்வைக் கொணர்வாய் இங்கே*
*அதிர்ந்தெழுக தமிழுக்குத் துறைதோறும்*
*துறைதோறும் அழகு காப்பாய்*
*இதுதான்நீ செயத்தக்க எப்பணிக்கும்*
*முதற்பணியாம் எழுக இன்றே*

என்று பாரதிதாசனும் உங்களுடன் தோள்சேர்த்து நிற்கின்றார்.

# தள்ளாடும் முதியோரும் தமிழைக்காக்க எழவேண்டும்

தமிழ்நாட்டு முதியோரே! தந்தைமாரே! நீங்களும் தமிழைக்காக்க எழவேண்டும். கன்னித் தமிழின் இன்னலைத் துடைக்க வேண்டுமென்ற துடிப்பு உங்கள் உள்ளத்தில் தோன்ற வேண்டும். உங்கள் ஆவியுடன் கலந்து ஆக்கமளித்த உங்கள் அன்னை மொழியை ஆட்சி மொழியாகக் கண்டுதான் நீங்கள் சாகவேண்டும். சாகக்கிடக்கின்றவனும் தன் தாயை நினைக்கும் பொழுது, புதிய உணர்ச்சி அடைகின்றான். உங்கள் அன்னை மொழிக்கு இன்று ஏற்பட்டிருக்கின்ற அல்லல்களை நீங்கள் எண்ணுங்கள். எண்ணினால் கட்டுத் தளர்ந்த உங்கள் உடம்பிலே புதிய இளங்குருதி பாய்ந்து இளமைக்கால ஆற்றலைத் தரும். மானத்துடன் வாழ்ந்த பரம்பரைப் பண்பு உங்கள் உயிரில் ஊறிக்கிடக்கின்றது. தமிழ் இனத்தின் மானம் அழிகின்றபோது, முதுமைப் பருவம் இளமைப் பருவமாக மாறிவிடும். தண்டூன்றித் தளருங் கை, வாள்கொண்டு போராடக்கூடிய வலிமை கொள்ளும். மானஉணர்ச்சி வீறி எழுந்தால் உடலின் தளர்ச்சி மறைந்துவிடும். தாத்தாப்பருவத்தில் தமிழைக்காத்த பெருமையை உலகம் புகழட்டும். எதிர்காலத் தமிழினம் உங்களைப் பாராட்டட்டும். முன்வைத்த காலைப் பின்வையாமல் தண்டூன்றித் தள்ளாடும் தமிழ்நாட்டு முதியோரும், தமிழுக்காகப் போர் தொடுத்துச் சாகாமல் வாழ்கின்றார்கள் என்று புலவர்கள் பாடட்டும்.

*தண்டூன்றும் முதியோரே தமிழ்த்தொண் டென்றால்*
*இளமை தனைஎய் தீரோ*
*வண்டூன்றும் சிற்றடியால் மண்டுநறும்*
*பொடிசிதறும் பொதிகை தன்னில்*

*பண்டூன்றும் திருவடியால் பச்சைமயில்*
*போல்வந்து தமிழர்க் காவி*
*கொண்டூன்றி வருந்தமிழ்த்தாய் கொண்டகுறை*
*தவிர்ப்பதற்குக் குதித்து வாரீர்*

என்று பாரதிதாசன் உங்களைக் கூவி அழைக்கின்றார்.

சந்தனப் பொதிகை மலையிலே தளிர் அடிமிதித்து நடந்து தமிழினத்தின் உயிராக நிலவி உலகை ஆண்ட தமிழன்னை, ஆளுகின்ற பிறரால் இகழப்படுகின்றாள். அன்னையின் அடிமைத் தளையை வெட்டி அவளை மீண்டும் அரியணை எற்ற வேண்டும். உங்கள் அருமைத் தாய்க்கு வந்த குறையைப் போக்க நீங்களும் இளைஞர்கள் போலக் குதித்தோடி வாருங்கள். முதுமைப்பருவ உணர்ச்சியும் ஏக்கமும் உங்கள் உரிமை வேட்கையை வெல்லக் கூடியவைகள் அல்ல என்றுதான் பாரதிதாசன் உங்களுக்குக் கூறுகின்றார்.

முதியோர்களே! உங்கள் முறுக்கேறிய உடல் தளர்ந்து விட்டாலும், உணர்ச்சியுமா தளர்ந்துவிட்டது. உங்கள் ஆருயிரில் அள்ளிப் பிசைந்து, நீங்கள் அருந்திய அமிழ்தத் தமிழ் — உங்கள் உள்ளத்திலே ஒளி ஏற்றி, உரம் ஏற்றி உலாவுகின்ற ஒண் தமிழ் — இன்று உலைகின்றது. ஆளுகின்றோரால் உருக் குலைக்கப்படுகின்றது. இவற்றை உணர்ந்த பின்பும், நீங்கள் உடலின் தளர்ச்சியை எண்ணி, வாழ இருக்கிறீர்களா? தமிழ் மொழிக்கு வந்துள்ள நெருக்கடியைக் கேட்டவுடனே, உங்கள் நரம்பெல்லாம் இரும்பாக மாறவில்லையா? இழந்த இளமை உணர்ச்சிகள் எழவில்லையா? கூனிய உடம்பு நிமிரவில்லையா?

*பிரம்புவளை மெய்யுடையீர் ஆருயிரில்*
*வாரியிட்டுப் பிசைந்த தான*
*உரம்பெய்த செந்தமிழுக்கு ஒன்றிங்கு*
*நேர்ந்ததென உரைக்கக் கேட்டால்*
*நரம்பெல்லாம் இரும்பாகி நனவெல்லாம்*
*உணர்வாகி நண்ணி டீரோ*

*இரங்குநிலை கொண்டதமிழ் ஏற்றகுறை*
*தவிர்த்திடநீர் எழுச்சி கொள்வீர்*

என்று பாரதிதாசன் உங்களைக் கேட்கின்றார் — உரிமையுடன் ஆணை இடுகின்றார்.

எங்கள் தாய்மொழியை — எங்கள் ஆவியிலும் இனிய அருந்தமிழ் மொழியை — இகழ்ந்தவர்களை நாம் எதிர்க்க வேண்டும். எமதுயிரைப் போக்க வருகின்றவனை நாம் வழிபட்டு வாழ்வதா? இன்று நாங்கள் தமிழ்மொழியைக் காப்பாற்றப் பின்நின்றால், எதிர்காலத் தமிழ் இனத்தை அழித்த பழி எங்களைத்தான் சேரும். தமிழ் எங்கள் உயிர். உயிர் போனபின் உடம்பு ஏன்? தமிழ்மொழியைத் தமிழர்கள் மறந்து வாழ முடியுமா? இளமை கழிந்த நிலைமையை எண்ணி ஏங்குகின்ற நீங்கள், இனம் அழிவதைப் பற்றி எண்ணுங்கள். காந்தியடிகள் முதுமைப் பருவத்தில் ஆற்றிய செயல்களை எண்ணிப் பாருங்கள். மூப்படைந்து சாகாமல் மூவாத் தமிழ்மொழிக்காகச் சாதல் மிக மேலானது. ஆட்சியாளர் தமது அதிகாரத்தால் எமது உரிமைத்தாகத்தைத் தீர்க்கப் பார்ப்பார்கள். சிறையில் அடைத்தும், பொருளைப் பறித்தும், நாடுகடத்தியும் நலிவு செய்வார்கள். துன்பத்தைப் பொறுமையுடன் ஏற்றுக்கொள்ளும் வீரம்தான், எம்மை வாழ்விக்கும் மருந்தாகும். உடம்பில் ஏற்படும் துன்பங்களால் உயிரில் ஊறிய உரிமை உணர்ச்சி சாய்ந்து போகாது. தாய்மொழிப் பற்று தீயில் இட்டு எரித்தாலும் போகாது; தசையைத் துண்டு துண்டாக வெட்டினாலும் சாகாது. தங்கள் உரிமைகளைப் பெறுதற்காக அடைகின்ற துன்பமே உயர்ந்த தாம். பொன்னைத் தீயிலே இட்டு உருக்க உருக்க ஒளி கூடுவது போல, ஆளுவோர் நாம் ஆற்றுகின்ற உரிமைப் போரை எதிர்த்து, எமக்குச் செய்கின்ற துன்பங்களால் நாம் புதிய ஆற்றலைப் பெறுவோம். எம்மைச் சிறையிலே அடைத்தால் அந்தச் சிறைச் சாலை தமிழ்ச் சங்கம் போல எமக்குப் புதிய ஒளியை உதவும். எமது பொருளைப் பறித்தால், எங்கள் உள்ளம் தமிழையே பொருளாகப் போற்றிப் பொலியும். எம்மை நாடு கடத்தினால்,

நாம் போய் இருக்கின்ற நாடு தமிழ் நாடாகக் காட்சி தரும். துன்பத்தையும் இன்பமாகக் கருதுகின்ற வீரவாழ்வு எமக்குக் கிடைத்துவிட்டால், நாம் விடுதலை அடைவோம். இழந்த உரிமைகளைப் பெறுதற்காக நாம் ஆற்றுகின்ற உரிமைப் போரிலேதான் உண்மையான இன்பத்தைக் காண்கின்றோம். உரிமையைப் பெற்ற பின்பு அடைகின்ற இன்பத்திலும் பார்க்க, உரிமையைப் பெற முயலும் பொழுது நாம் துன்பத்தை வென்று வென்று இன்பத்தைத் தேடிச் செல்கின்ற ஆராமையுடன் நின்று பெறுகின்ற இன்பம் மிக உயர்ந்தது. முதியோரே! நீங்கள் இளைஞர்களுடன் தோள் சேர்ந்து நின்று உரிமைப் போரை ஆற்றுங்கள். நீங்கள் போர்க்களத்தில் முன்னணியிலே நிற்பதைக் கண்டால் இளைஞர்கள் முனைந்தெழுவார்கள். மூவுலகத்திலும் தமிழ்மொழி ஆட்சி செய்ய வைப்பார்கள். நாட்டிலே தமிழின் மாண்பை நலித்திடும் பகைவர் நெஞ்சை ஈட்டிக்கே விருந்து செய்யும் இளந் தமிழ் வீரர் கூட்டம் காட்டுத்தீ போலத் தோன்றிக் கடமையை ஆற்றுவார்கள்.

*அன்னையினை எதிர்த்தார்க்கும் அவள்மேன்மை*
*மறந்தார்க்கும் அயர்ந்த வர்க்கும்*
*மின்னைவிழி உயர்ந்ததுபோல மெய்யுயிரைப்*
*பெற்றதுபோல் தமிழ்ச்சாப் பாடு*
*தன்னையுணர் விப்பதற்குச் சாரைச்*
*சிற்றெறும் பென்னத் தமிழ் நாட்டீரே*
*முன்னைவைத்த காலைப்பின் வையாமே*
*வரிசையுற முடுகு வீரே*

எனப் பாரதிதாசன் முழங்குகின்றார். முதியோர்களே! தமிழ்த் தாத்தாக்களாகிய உங்களின் உரிமைப் போர்க்குரல் தமிழகத்தைத் தமிழர்க்கே ஆக்கட்டும். ஆண்மை, அறத்தோடு தோள் சேர்ந்து நிற்க அரசாண்ட தமிழரினம் மீண்டும் ஆட்சிப் பீடத்தில் ஏறும் காலம் நெருங்கிவிட்டது. தமிழகத்தின் தந்தையர் ஆகிய நீங்கள் தன்மானத்துடன் தமிழைக் காக்கப் போர் தொடுங்கள்!

# தமிழ்நாட்டுச் செல்வர்களே, தமிழ் மொழியைக் காக்க வாரீர்!

தமிழ்நாட்டுப் பெருஞ் செல்வர்களே! விழித்தெழுங்கள். நீங்கள் பாடுபட்டுத் தேடிய செல்வத்தைக் கொண்டு, உங்கள் பரம்பரைச் செல்வமாகிய தமிழ்மொழியைக் காப்பாற்றுங்கள். நீங்கள் நினைத்தால் இன்றே தமிழ்மொழி வாழ்வு பெறும். தமிழ்மொழியை, தமிழகத்தை ஆளுகின்ற ஆட்சியாளர்கள் அழிக்க முனைகின்றார்கள். தமிழர்கள், தமிழகத்தை ஆட்சி செய்ய முடியாத நிலையில் அடக்குமுறைகளும் சூழ்ச்சிகளும் நிரம்பிவிட்டன. தமிழ்மொழியை, ஆட்சி உரிமை இல்லாத சிறு மொழியாக ஒதுக்கித் தமிழினத்தையும் உலகத்தில் இல்லாமல் ஒழிக்கத் திட்டமிட்டுவிட்டார்கள். தாய்மொழியையும் இழந்து வாழ்கின்ற அடிமைச் சாதியாகத் தமிழர்கள் வாழமாட்டார்கள். தமிழைக் காப்பாற்றத் தமிழர்கள் உரிமைப் போரில் குதித்துவிட்டார்கள். உரிமைப் போரில் குதிக்கின்ற தமிழர்களை ஊக்கிப் பொருள் உதவ வேண்டிய பொறுப்பு, பொருள் படைத்த தமிழர்களின் கையிலேதான் தங்கி இருக்கின்றது. செல்வர்களே! நீங்கள் ஈட்டிய பெருஞ் செல்வத்தையும் ஆட்சியாளர் பறிக்க வழிபார்க்கின்றார்கள். தமிழ்மொழிக்கே கேடு சூழ்கின்ற ஆட்சியாளர்கள் பெருஞ்செல்வம் படைத்த தமிழர்களை வாழவிடுவார்களா? இனம் அழிந்த பின்பு பொருளேன்? தமிழ் இனம் மானத்துடன் வாழ வழிசெய்ய வேண்டுமென்ற தன் மானத்துடன், உங்கள் செல்வத்தை வாரி இறையுங்கள். தமிழர்கள் உரிமைப்போரில் குதித்துவிட்டால் ஆளுகின்றோரின் உதவி அற்றுவிடும். அரசியல் அலுவலாளர்கள் எல்லாம் வெளியேற வேண்டிய அல்லல் நேரும். தமிழர்கள் பசியால் வருந்துவார்கள்.

சிறையில் புகுவார்கள். நாடு கடத்தப்படுவார்கள். கொல்லப் படுவார்கள். இந்த நெருக்கடியான நேரத்தில் செல்வர்களாகிய நீங்கள் முன்வந்து தமிழர்களைக் காப்பாற்ற வேண்டும். "பொருள் இல்லார்க்கு இவ்வுலகம் இல்லை" என்பதே வள்ளுவர் கொள்கை. உரிமைப் போரில் இறங்கி இன்னல் அடைகின்ற தமிழர்களின் குடும்பங்களைக் காப்பாற்றும் பெருந் தொண்டைத் தமிழ் நாட்டுச் செல்வர்கள் ஆற்ற வேண்டும். அரசினரின் உதவி யின்றித் தமிழ்க் கல்லூரிகளை அமைத்துத் தமிழை வளர்க்கவும் செல்வர்கள் முன்வரவேண்டும்.

செல்வர்களே! எங்கள் அன்னை மொழியின் உரிமை பறிக்கப்படுகின்ற இந்த நேரத்தில் என்னென்ன பணிகளில் செல்வத்தைச் செலவு செய்ய வேண்டுமென்ற சிந்தனையுடன் நீங்கள் செயலாற்ற வேண்டும்.

*கோயில்பல கட்டுகின்றீர் குளங்கள்பல*
*வெட்டுகின்றீர் கோடை நாளில்*
*வாயிலுற நீர்ப்பந்தல் மாடுரஞ்ச*
*நெடுந்தறிகள் வாய்ப்பச் செய்தீர்*
*தாயிலும் பன்மடங்கான அன்போடு*
*மக்கள்நலம் தாவு கின்றீர்*
*ஆயினும்நம் தமிழ்நாட்டில் செயத்தக்க*
*தின்னதென அறிகி லீரே*

என்று புரட்சிக் கவிஞர் புகல்கின்ற பொருள் உரைகளைக் கேளுங்கள். தாய்மொழி அழிகின்ற நேரத்தில் அதன் அழிவைப் போக்கி ஆக்கந் தேட முயலாமல் கோவில்களைக் கட்டினால் ஆவதென்ன? குரலெடுத்துக் கூவிக் கூவி, ஆண்டவனை வேண்டிய அன்னை மொழியின் உரிமை அழிந்தபின் ஆண்டவனை என்ன வழியால் தொழமுடியும்? விடுதலை தவறிக் கெட்ட இனமாகத் தமிழர்கள் வாழ்ந்து மீண்டும் மீண்டும் அடிமைகளாய் அல்லற்பட வேண்டிய நிலையைக் கண்டும், அதனைப் போக்க வழிகாணாமல்

விழாக்கள் கொண்டாடுவதினால் என்ன பயன் உண்டு? வீடு எரிகின்ற நெருப்பிலே வெந்நீர் தயாரிக்கின்றவன் போலத் தமிழர்கள் விழாக் கொண்டாடுகின்றார்கள். தாய்மொழியின் உரிமை சாவதைக் கண்டும் அதனைத் தடுக்கும் எண்ணம் இல்லாமல் தமிழர்கள் என்ற பெயரோடு நாங்கள் வாழ்கின்றோம். வாணவேடிக்கையோடு விழாக்களும் ஆற்றுகின்றோம்.

*தமிழுயர்ந்தால் தமிழ்நாடு தானுயரும்*
*அறிவுயரும் அறமும் ஓங்கும்*
*இமயமலை போலுயர்ந்த ஒருநாடும்*
*தன்மொழியில் தாழ்ந்தால் வீழும்*
*தமிழுக்குப் பொருள்கொடுங்கள்*
*தமிழறிஞர் கழகங்கள் நிறுவிடுங்கள்*
*தமிழ்ப்பள்ளி கல்லூரி தமிழ்ஏடு*
*பலப்பலவும் நிலைப்பச் செய்வீர்*

என்று புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் தமிழ்நாட்டுச் செல்வர்களை வேண்டுகின்றார். தமிழர்களின் செல்வம் தமிழை வளர்க்க வேண்டும். தமிழைப் பழிக்கின்றவர்களை, தமிழின் உரிமைகளைப் பறிக்கின்றவர்களைத் தமிழ்நாட்டுச் செல்வர்கள் எதிர்க்க வேண்டும். தமிழ் இனத்தை அழிக்க முனைகின்ற ஆட்சியாளரை ஆதரித்துத் தமது செல்வத்தைப் பெருக்க முயல் கின்ற தமிழர் சிலரும் வாழ்கின்றார்கள். இவர்கள் குலத்தைக் கெடுக்கவந்த கோடரிக்காம்புகள். தாயைக் கொலை புரிந்தும் தாம் வாழ விரும்புகின்ற தன்மானமில்லாப் பேடிகள். இவர்களை உரிமை வேட்கை கொண்ட தமிழர்கள் ஒரு பொருளாக மதியார்கள்.

*மற்றவர் நாட்டை ஆள*
*மறப்படை திரட்டும் இந்நாள்*
*பெற்றநம் நாட்டை ஆளாப்*
*பேடிகள் தமிழர் தானோ*
*உற்றிடும் பொருளும் வாழ்வும்*

*உரிமையில் பெரிய தாமோ*
*அற்றைநாள் தமிழர் போல*
*ஆண்மையால் அரசு கொள்வோம்**

என்ற உரிமை உணர்ச்சியால் தமிழர்கள் விழித்து விட்டார்கள்.

பெரும்பொருள் படைத்த தமிழர்களே! உங்கள் பொருளைத் தமிழ் வாழத் தாருங்கள். தமிழ் இனம் வாழத் தாருங்கள். முன்னை நாள் வள்ளல்கள், தம்மைப் பாடிய புலவர்களைப் போற்றி ஆதரித்தார்கள். தமிழைக் கற்ற புலவர்களை மதித்துப் பரிசில் வழங்கினார்கள். இன்று நீங்கள் தன் உரிமைகளைப் பறி கொடுத்துத் தவிக்கின்ற தமிழ் வாழப் பொருளைக் கொடுங்கள். அரசிழந்து அல்லற்படுகின்ற அன்னை மொழியை ஆட்சிப் பீடத்தில் ஏற்றப் பொருளைக் கொடுங்கள். முடியுடை மூவேந்த ரால் காப்பாற்றப்பட்ட உங்கள் தமிழன்னை இன்று அடிமைப் பட்டு விட்டாள். ஆளுகின்றோர் அவளை அடியோடு அழிக்க முன் வந்து விட்டார்கள். உங்கள் உடன்பிறந்த தமிழர்கள் உரிமைப் போரில் குதித்துவிட்டார்கள். அவர்களுக்கு உண்டியும் உதவியும் ஊக்கமும் உண்டாக உங்கள் பொருளை அளியுங்கள். நிலை யாத செல்வத்தைக் கொண்டு நிலைதளும்பும் தமிழ்மொழியை நிலைபெறச் செய்யுங்கள். பெரிய தொழில் நிலையங்களை உங்கள் பொருளால் நிறுவுங்கள். பல்கலைக்கழகங்களைக் கட்டிப் பல கலைகளையும் தமிழிற் பயில வழிசெய்யுங்கள். ஆளுகின்றோரின் உதவியை எதிர்பாராமல் தமிழர்கள் தன் மானத்துடன் வாழ்ந்து தமிழ்நாட்டில் தமிழரசாட்சியை நிறுவத் தக்க வல்லமையைத் தாருங்கள். தமிழ்நாட்டுச் செல்வர்களே! நீங்கள் சிந்தை மகிழ்ந்து செல்வத்தைத் தந்தால், இந்தக் கணமே இழந்த தமிழர்கள் தமிழ்நாட்டைத் தமிழர் ஆளச்செய்வார்கள்.

*நெஞ்சினில் தாய்நாட்டன்பு*
*நிழலிடும் புதிய வாழ்வும்*
*அஞ்சிடோம் அடிமை வாழ்வை*

*அகற்றுவோம் என்ற வீறும்*
*நஞ்சினை அமுத மாக*
*நயந்துணும் சால்பும் கொண்ட*
*வெஞ்சின மறவர் கோடி*
*விரைந்தனர் தமிழர் வாழ்ந்தார்**

என்ற நிலைமை தமிழ்நாட்டில் தோன்றிவிட்டது. நீங்கள் பொருளைக் கொடுங்கள். புதிய வாழ்வைப் பெறுங்கள். பொன்னின் முடியைத் தமிழன்னை புனைகின்ற மங்கல விழாவைக் கண்டு மகிழுங்கள்.

## செந்தமிழைக் காக்க மங்கையரே வாரீர்!

தமிழ்நாட்டுத் தாய்மாரே! இளஞ் செல்விகளே! செந்த மிழைக் காக்கத் திரண்டு வாருங்கள். உங்கள் ஆவியிலும் இனிய அன்னை மொழியை ஆளுகின்றோர் அழிக்கப் புகுந்துவிட்டார் கள். அதிகார வெறியினால் அறத்தை மறந்துவிட்டார்கள். தாய்மாரே! உங்கள் அன்புக் குழந்தைகளைத் தொட்டிலிலே இட்டுத் தாலாட்டிய அருந்தமிழ் மொழியை மறக்காதீர்கள். பால் ஒழுகும் வாயாலே உங்கள் பச்சிளங் குழந்தைகள் அம்மா என்று அழைத்த அமிழ்தத் தமிழ்மொழியை மறந்துவிடாதீர்கள். உங்கள் குழந்தைகளைத் தமிழ்த் தொண்டர்களாகப் புதுக்கி விடுங்கள். ஆளுகின்றோர் அதிகாரத்தினால் தமது மொழியைக் கற்கும்படி கேட்டாலும், ஆக்கம் அளிப்போம் என்று ஆதரவாய்க் கேட்டாலும், எங்கள் அன்னை மொழிக்கு, ஒத்த அரசியல் உரிமை கொடுத்தால் அன்றி, நாங்கள் அயல்மொழியைக் கற்க விடோம் என்று ஆண்மையுடன் கூறுங்கள். ஆயிரம் அல்லல் கள் அடுத்தடுத்து வந்தாலும், எங்கள் அன்புத் தலைவர்களும் அருமைப் புதல்வியரும் புதல்வர்களும் ஆற்றுகின்ற அரசியல் அலுவல்கள் அற்றாலும், ஆளுகின்றோரை எதிர்த்து அன்னை மொழியின் அல்லலைப் போக்குவோம் என்று போர்க்குரல் எழுப்புங்கள்.

ஔவையார் வழியில் வந்த அன்னையரே! உங்கள் உள்ளத்தில் உரிமைக்கனல் மூளட்டும். மூண்டால் முடியுடை மூவேந்தர் ஆண்ட தமிழினம் விழிப்புக்கொள்ளும். மூவாத கன்னித் தமிழ் மீண்டும் அரியணை ஏறும். உங்களுடைய தொட்டில் பாட்டிலும் வட்டில் சோற்றிலும் தமிழ் மணக்கட்டும். உங்கள் அன்புப் புதல்வர்களைப் போர்க்கோலம் செய்து

விடுங்கள். அன்னை மொழியின் அடிமைத்தளையை அறுத்தெறிந்து வாருங்கள் என்று ஆசிகூறி விடுங்கள்.

*"வலிமை சேர்ப்பது தாய்முலைப் பாலடா*
*மானம் சேர்க்கும் மனைவியின் வார்த்தைகள்"*

என்று பாரதியார் கூறுகின்றார். உங்கள் பாலைக் குடித்து வளர்ந்த புதல்வர்களை நீங்கள் ஊக்கிவிடுங்கள். தாயிலும் பெரிது தாய்மொழி என்று தன்மானத்தை ஊட்டி விடுங்கள். தாய் மொழியின் விடுதலைக்காக நீங்கள் சாவதைக் கண்டால் உங்கள் தாய்மாரின் உள்ளம் தழைக்கும் என்று கூறிவிடுங்கள்.

வீரத்தாய்மாரே! உங்கள் காதல் கணவன்மாரைக் கை கூப்பித் தொழுது கனியினும் இனிய தமிழைக் காப்பாற்றும் வண்ணம் கேளுங்கள். நீங்கள் காதல் உரைகள் பேசி, எங்கள் கருத்தை அள்ளிய தமிழை, ஆளுகின்ற கட்சியார் அதிகாரத்தால் அழிக்க முனைந்துவிட்டார்கள். தமிழ் அழிந்தால் தமிழர் என்ற இனம் வாழ முடியுமா? அன்னை மொழியிலும் பார்க்க உங்கள் ஆவி பெரிதா? இன்னும் தமிழைக் காக்க உரிமைப் போரில் குதியாமல் இல்லத்தில் இருக்கின்றீரா? மானத்தை உயிரினும் மேலாக மதித்து வாழ்ந்த மானத்தமிழர் மரபில் வந்த நீங்கள், மானத்தை விட்டு வாழ விரும்புகின்றீர்களா? வாழ்க தமிழ் என்று கூறிப் புறப்படுங்கள்; ஆளுகின்றோரின் அதிகாரத்துக்குப் பணியாமல், அறப்போர் புரிந்து அன்னை மொழியைக் காப்பாற்றுங்கள்; என்று, மானமொழிகள் கூறி வழிவிடுங்கள். காலந்தாழ்ந்தாதீர்கள். காலந் தாழ்த்தினால் ஆளுங் கட்சியார் தமிழை அழித்துவிடுவார்கள்.

*ஒருவானில் பன்னிலவாய் உயர்தமிழ்ப்*
*பெண்கள்எல்லாம் எழுக உங்கள்*
*திருவான செந்தமிழின் சிறுமையினைத்*
*தீர்ப்பதென எழுக நீவிர்*
*பெருமானம் காப்பதற்கு வாரீரேல்*
*உங்கள்நுதற் பிறையே நாணும்*

*மருமலர்வாய்த் தாமரையும் கனியுதடும்*
*நன்நெஞ்சும் வாட்டம் எய்தும்*

என்று பாரதிதாசன் உங்களைப் போர்க்கோலம் கொள்ளும் படி அழைக்கின்றார் – ஆண்மை தவழும் அன்புக் குரலால் அறிவுறுத்துகின்றார்.

இளஞ்செல்விகளே! எதிர்காலத் தமிழகத்தை ஈடேற்று கின்ற பொறுப்பு உங்கள் கையிலேதான் இருக்கின்றது. அன்னையரின் ஆண்மைக்குரலில் கலந்து நீங்கள் அணி வகுத்து வாருங்கள். உங்கள் அன்னையரினும் இனிய தமிழை அழிய விடாதீர்கள். உங்கள் கன்னல் மொழித் தமிழைக் காப்பாற்றுங்கள்.

*"காதல் புரியும் அரம்பையர்போல் – இளங்*
*கன்னியர் சூழ்ந்த தமிழ்நாடு"*

என்று பாரதியார் உங்களைப் பாராட்டுகின்றார். உங்கள் காதல், தமிழைக் காக்க வழி செய்யவேண்டும். உங்கள் உள்ளத்தை அள்ளிய காதலரை ஊக்கி, உரிமைப்போரில் விடுங்கள். எங்கள் அன்னைமொழியின் இன்னலைத் துடைத்து வந்தபின்பே உங்களின் அன்புக் காதலை நாங்கள் ஆதரிப்போம் என்று கூறுங்கள். தாய்மொழி சாகும் நெருக்கடியில் நின்று தளரும்போதா, காதல் மணம் புரிந்து களிப்பது என்று கேளுங்கள். மீளா அடிமையாகத் தமிழினம் வீழ்ச்சியடையும் நிலையைப் போக்கி விடுதலை பெறுதலே எமக்கு நீங்கள் அளிக்கும் காதல் பரிசில் ஆகும் என்று கட்டாயப்படுத்திக் கூறுங்கள். நீங்கள், உங்கள் காதலரை ஊக்கித் தமிழைக் காப்பாற்றுங்கள் என்று சொன்னால் அவர்கள் காட்டுத்தீ போல எழுந்து கடமையை ஆற்றுவார்கள். முன்வைத்த காலைப் பின்வைக்காமல் உரிமைப்போரில் குதித்து, முத்தமிழை முன்போல முதன்மை பெறச்செய்வார்கள்.

*"காற்றில் ஏறியவ் விண்ணையுஞ் சாடுவோம்*
*காதற் பெண்கள் கடைக்கண் பணியிலே"*

என்று பாரதியார் பாடுகின்றார். உங்கள் கடைக்கண் வீச்சினாலே தமிழின் உரிமைகளைப் பெற்றுக் கொடுக்க முடியும். கட்டிளங் காளையர் உள்ளத்தில் தன்மானத் துடிப்பைத் தோற்றுவிக்க முடியும்.

*காதலால் நீரும் நானும்*
*கலந்திடும் புதிய வாழ்வில்*
*சாதல் தான்வரும் என்றாலும்*
*தளர்ந்திடா உள்ளத்தோடு*
*தீதெலாம் அடைந்து நாளும்*
*சிதைந்திடும் தமிழர் வாழக்*
*காதலாய் உழைத்தல் வேண்டும்*
*கலையின்மேல் ஆணையிட்டேன்* *

என்று நீங்கள் ஒவ்வொருவரும் உங்கள் காதல் தலைவனிடம் கூறிப் போருக்குப் புறப்படுங்கள். தமிழ்மொழி வாழவேண்டு மானால் தமிழ்நாட்டைத் தமிழர்கள் ஆளவேண்டும். தமிழ் இளஞ்செல்விகளாகிய நீங்களும் போரில் குதித்தால்தான் தமிழ் வாழும். தமிழகம் தமிழர்க்காகும். காதல் தவழும் உங்கள் நெஞ்சில் இன்றைய நெருக்கடியைப் போக்க வீரம் தவழவேண்டும். உங்கள் இளமை நலத்தை என்றும் இளமையுடன் வாழ்கின்ற இன்தமிழுக்காக உரிமைப்படுத்துங்கள். இனிமை தழுவிய உங்கள் சாயலை இளந்தமிழின் சாயல் மலரக் கொடுங்கள். உங்கள் ஐம்புலன்களின் நுகர்ச்சியையும் அன்னை மொழியின் ஆக்கத்துக்குக் கொடுங்கள்.

*பயிலுறும் அண்ணன் தம்பி—அக்கம்*
*பக்கத் துறவின் முறையார்*
*தயைமிக உடையாள் அன்னை—என்னைச்*
*சந்ததம் மறவாத் தந்தை*
*குயில்போல் பேசிடும் மனையாள்—அன்பைக்*
*கொட்டி வளர்க்கும் பிள்ளை*
*அயலவர் ஆகும் வண்ணம்—தமிழ்என்*
*அறிவினில் உறைதல் கண்டீர்*

எனப் பாரதிதாசன் கூறுகின்ற நிலையில் நின்று நீங்கள் தமிழ்த் தொண்டு ஆற்ற வேண்டும். உங்கள் மலர்முகமும், மான்விழியும், தேன்மொழியும், செந்தமிழின் பாதுகாப்புக்காகச் சிறிது முயன்றால் போதும், செந்தமிழ் அன்னை செங்கோல் பிடித்து விடுவாள். நீங்கள் தமிழ் வாழவேண்டுமென்ற காதலுடன் உங்கள் காதலரையும் சேர்த்து உரிமைப்போரில் இறங்கா விட்டால் உங்கள் உவகை ஒழிந்துவிடும். உலகமெல்லாம் பழிக்கின்ற நிலைக்குத் தமிழினம் தாழ்ந்துவிடும். தன்மானம் இல்லாத இனத்திலே என்னவகையால் உயர்ந்த காதல் உண்டாகும்? அடிமைகளாக நீங்கள் வாழ்ந்து, அடிமை இளைஞர் களைக் காதலிப்பதால் தூய அன்பு வாழ்வை வாழமுடியுமா? தமிழிளஞ் செல்விகளே! தளராமல் தமிழ் வாழ்க என்று வாழ்த்தி உரிமைப் போரில் இறங்குங்கள்.

*நகர்நோக்கிப் பசுந்தோகை நாடகத்து*
*மாமயில்கள் நண்ணி யாங்குப்*
*பகர்கின்ற செந்தமிழின் பழிநீக்கப்*
*பெண்கள்எல்லாம் பறந்து வாரீர்*
*மிகுமானம் காப்பதற்கு வாரீரேல்*
*வெண்ணிலவு முகம் சுருங்கும்*
*மகிழ்வான மலர்க்கன்னம் வாய்மையுளம்*
*வாட்டமுறும் மலர்க்கண் நாணும்*

என்று பாரதிதாசன் உங்களைத் துயில் எழுப்புகின்றார். எதிர்நோக்கி நிற்கும் இன்னல்களைக் காட்டி இடித்துரைக் கின்றார். உங்களின் போர்க்குரல் திசையெல்லாம் வெல்க! வெல்க தமிழ்!!

# கற்றறிந்த சான்றோரே கன்னித் தமிழைக் காக்க வாரீர்!

**ப**ல்கலைக்கழகப் பட்டதாரிகளே! பாவலரே! நாவலரே! அறிஞர்களே! கலைஞர்களே! உங்கள் ஆவியில் ஊறிய அன்னை மொழியைக் காக்க வாருங்கள். உலகமெங்கும் உரிமை ஒளி வீசுகின்ற காலத்தில் தமிழர் இனம் மட்டும் வழிவழி அடிமைகளாய் மாற்றாரைப் பணிந்து வாழ்வதா? தாய்மொழியின் உரிமை பறிக்கப்படுவதைப் பார்த்துக்கொண்டும், மனந்துடிக்காமல் பட்டத்தையும் பதவியையும் பெரிதாக மதித்துப் படித்துப் பட்டம் பெற்றவர்கள் இருப்பார்களா?

அடிமை வாழ்வில் இருந்து விடுதலை பெற்ற அயல் நாடுகளின் வரலாற்றையும் உரிமைப் போர் எழுச்சியையும் உணர்ந்த நீங்கள் வழிகாட்டிகளாக நின்று, உரிமைப் போரை ஆற்றுங்கள். இன உணர்ச்சி இல்லாவிட்டால் உலகில் தமிழர் மதிப்புடன் வாழமுடியாது. கற்ற தமிழர் உள்ளத்தில் இல்லாத இன உணர்ச்சி மற்றத் தமிழர் உள்ளத்தில் எங்ஙனம் உண்டாகும்? கற்ற கல்வியின் வல்லமை யால் தம் இனத்துக்கு உற்ற இன்னலைப் போக்க முயலாதவர் இருந்தும் இறந்தவரேயாவர். பொருளை விற்பவனுக்கும் வேண்டு கின்றவனுக்கும் இடையிலே நின்று அப்பொருளை அறிமுகஞ் செய்து வைக்கின்ற தரகனைப் போலக் கற்ற கல்வியைப் பிறருக்குக் கூறுவதுடன் வாழ்வு நிறைந்துவிடாது. கற்றறிந்தபடி ஒழுக வேண்டும். விடுதலைப் போரில் ஈடுபட்டுழைத்த வெளிநாட்டுத் தலைவர்களைப் பற்றி விரிவுரை நிகழ்த்துகின்ற பேராசிரியர் தன் நாட்டின் அடிமை விலங்கை அறுத்து, விடுதலையைப்பெற

நிகழ்த்துகின்ற போரிற் கலக்க அஞ்சி ஓடினால் — ஆளுகின்றோரை ஆதரித்து வாழ விரும்பினால் — அவரின் கல்வியை ஆர் மதிப்பார்கள்? தாய் நாடும் தாய் மொழியும் அடிமைப்பட்டுக் கிடப்பதைக் கண்டு கொண்டும், அதனைப் போக்க முயலாமல், வெளிநாடுகளிலே நிகழ்கின்ற உரிமைப் போர்களையும், அவ்விடங்களில் உள்ள அரசியல் கட்சிகளையும் பற்றிப் பேசுவதால் என்ன பயன் உண்டாகும்? உரிமையுடன் வாழ்கின்ற இனத்திலேதான் உயர்ந்த அரசியல் கொள்கைகள் உண்டாகின்றன. இன்று தமிழர்களின் தாய்மொழியையும் தமிழ்நாட்டை ஆளுகின்ற பிறஇனத்தவர் கள் அழிக்க வழிவகுக்கின்றார்கள். தமிழ்மொழியை அரசியல் தொடர்பில்லாத சிறு மொழியாக ஒதுக்கிவிட்டால் காலப் போக்கில் தமிழர் என்ற இனமே இல்லாமல் போகும் என எதிர் பார்க்கிறார்கள். இந்த நெருக்கடியான நேரத்தில் கற்றறிந்த தமிழர்கள், மற்ற நாட்டுக் கொள்கைகளை — அரசியல் கட்சி களைத் — தமிழ்நாட்டில் வளர்க்க முயன்றால் அதனை ஆர் ஆதரிப்பார்கள்?

*ஆங்கிலர் வல்லார் என்றும்*
*அமெரிக்கர் பெரியார் என்றும்*
*ஓங்குயர் "ருசியா" வே*
*உலகத்தை ஆளும் என்றும்*
*ஈங்கிவை பேசித் தம்முள்*
*இகலுறும் தமிழர் தாங்கள்*
*ஏங்குறும் அடிமை வாழ்வில்*
*இருத்தலைச் சிறிதும் எண்ணார்* *

என்ற நிலையில் கற்ற தமிழர்கள் காலத்தைப் போக்கினால் தமிழ் இனத்துக்கு விடுதலை எப்பொழுது கிடைக்கும்?

கற்றிடுஞ் சான்றோரே! இன எழுச்சி கொண்டெழுங்கள். தன் இனத்தின் உரிமையைப் பெற முயல்வது வகுப்புவாத உணர்ச்சியா? இனவெறியா? இல்லை. தன்மானத்தால் எழுந்த உரிமை உணர்ச்சியாகும். இன்னொரு இனத்தை அழித்துத்

தன் இனத்தை வாழ்விப்பதுதான் இனவெறி, ஒரு இனத்தார் பேசுகின்ற மொழியை அழித்துத் தன் இனத்தின் மொழியை வளர்க்க முயல்வதுதான் மொழிவெறி. தமிழர்கள் பிறநாட்டைப் பிடிக்க எண்ணிப் போர் தொடுக்கிறார்களா? பிற மொழியை அழித்துத் தமது மொழியைப் பரப்ப முயல்கின்றார்களா? அடிமை யாகக் கிடக்கும் தமது தாய்த் தமிழகத்தை மீட்க எண்ணி அறப் போர் தொடுக்கின்றார்கள். தமது அன்னை மொழியாகிய தமிழின் உரிமையைப் பெறுதற்காக, அறப்போர் தொடுக்கின்றார்கள். இந்த அறப்போரை ஆற்ற வேண்டாம், எங்களுக்கு அடிமையாக இருங்கள்; உங்கள் தாய் மொழியை மறந்து, எங்கள் மொழியைப் படியுங்கள்; உங்களுக்கு உயர்ந்த பதவிகள் தந்து உதவுகின்றோம் என்று ஆளுங்கட்சியார் தமிழ்மக்களுக்கு ஆசை மொழிகள் கூறுகின்றார்கள். கற்றுணர்ந்த தமிழர்கள் எழுந்து, ஆளுகின்றோர் கூறுகின்ற ஆசை மொழிகளை நம்ப வேண்டாம் என்று வாழுகின்ற தமிழ்ப் பொதுமக்களுக்குக் கூறினால், அவர்கள் ஆயிரம் ஆயிரமாகத் திரண்டு, அறப்போரில் குதித்து விடுவார்கள். இனம் அழிகின்றது, எழுங்கள்; உங்கள் தமிழ் தாழ்கின்றது, எழுங்கள்; என்று படித்த பட்டதாரிகள் எடுத்து விளக்கினால், இன உணர்ச்சி கொண்ட இளந்தமிழ் வீரர்கள் சிறைச்சாலைகளைத் தென்றல் தவழும் சோலையாக எண்ணிவிடுவார்கள்.

கலையுணர்ந்த தலைவர்களே! நீங்கள் பட்டத்தையும் பதவிகளையும் வீசி எறிந்து வெளிப்பட்டால், எட்டுத் திக்கிலும் தமிழினத்தின் புகழ் நிறையாதா? தாயினும் இனிய தமிழை, ஆளு கின்ற மாற்றார் மீளா அடிமையாய் வீழ்த்திவிடத் துணிந்தபோது, நீங்கள் பெற்ற பட்டங்களும் பதவிகளும், பண நிலையங்களில் சேர்த்துவைத்த பொருளும் ஒரு துட்டளவு மதிப்பையேனும் ஈட்டித்தர உதவுமா? தன் இனம் அழியவும், உள்ளம் துடிக்காமல் உத்தியோகத்தையே மதித்து வாழ்ந்தவனை, ஆளுகின்ற மாற்றா னும் கோழை இவன் என்று கூறி நகைப்பான்.

தன் இனத்தைப் பேணிப் பிற இனத்தைத் தழுவி வாழ்வதே உண்மையான உரிமை வாழ்வாகும். தான் தன்மானத்துடன் வாழ்ந்தாற்றான், பிறனும் மதித்து வரவேற்பான். தன் தாய் மொழியை இகழ்ந்து, பிற மொழியைப் புகழ்கின்றவனை — தன் நாடு அடிமையாக இருக்கப் பிற நாட்டின் உரிமை உயர்ச்சியைப் பாராட்டிப் பேசுகின்றவனை – பெற்ற தாயும் விரும்பாள். இன்றைய நெருக்கடியான நிலைமையை உணர்ந்து செயலாற்றுகின்ற பொறுப்பைக் கற்ற தமிழர்கள் ஏற்கவேண்டும். தமிழ்மக்களுக்கு இன உணர்ச்சி ஊட்டி மொழியைக் காப்பாற்ற வேண்டும். தமிழர் என்ற இனம் தலை எடுத்து உலாவக்கூடிய உயிர்த் துடிப்பை எழுப்பாவிட்டால், தமிழினம் அழிந்துவிடும். இழந்த உரிமையை எளிதாகப் பெற முடியாது. சிறையும், துன்பமும், கொலையும், உரிமையைப் பெறுதற்கு முனையும் தொண்டர்கள் ஏற்றுக்கொள்ளும் முதற்காணிக்கைகளாக இருக்கின்றன. இக்காணிக்கைகளை ஏற்கக்கூடிய இன எழுச்சியையும் தன்மானத்தையும் தமிழ்மக்கள் உள்ளத்தில் தோற்றுவிக்கக்கூடிய ஆற்றல் கலை வல்ல உங்களிடத்திலேதான் தங்கியுள்ளது. அறிஞர்களே! உங்களின் உயர்ந்த கல்வியை “மிகுந்த சம்பளம்” என்ற விலைக்கு வாங்கி, உங்களைக் கொண்டே உங்கள் தமிழ் இனத்தை அழிக்க ஆட்சியாளர் முயல்வார்கள். அவர்களின் எண்ணத்தை முறியடித்து, இன்றே தமிழினத்தைக் காப்பாற்றப் புறப்படுங்கள்.

*கற்றிடும் தமிழர் தம்முள்*
*கலந்துரை யாடும் போதும்*
*உற்றிடும் உத்தியோகம்*
*ஊதியம் இவற்றால் தாங்கள்*
*பெற்றிடும் பெருமை பேசிப்*
*பெருமிதம் அடைதல் அன்றி*
*இன்றைநாள் தமிழர் எய்தும்*
*இன்னலை எண்ணமாட்டார்* *

என்ற இழிநிலையைப் போக்கித் தமிழ் இனத்தை வாழ்விக்க வேண்டும். இன உணர்ச்சியின் ஆற்றல் தமிழர்களிடம் இன்னும் உயர்ந்த இடத்தைப் பெறவில்லை. கலை வல்ல நீங்கள் நிலைமைகளை விளக்கிக் கூறினால் தமிழ்மக்கள் விழித்து விடுவார்கள். தமிழ் தங்கள் உயிர் என்று எண்ணி விடுவார்கள். சாதி, மத, பண வேறுபாடுகளை மறந்து, தமிழர்கள் என்ற உணர்ச்சியுடன் ஒன்றுபட்டு விடுவார்கள். கற்றுயர்ந்த உங்களைக் கண்ணாகக் கொண்டு, வெற்றிமுரசைத் தமிழ்மக்கள் முழக்கு வார்கள். கற்றுயர்ந்த நீங்கள் மற்றத் தமிழ்மக்களுடன் தோள் சேர்ந்து உரிமைப் போரில் இறங்காமல் உத்தியோகப் பெருமை யுடன் ஒதுங்கி நின்றால், செத்த பிணங்களாகவே கருதப்படுவீர்கள்.

*உலகத்தோடு ஒட்ட ஒழுகல் பலகற்றும்*
*கல்லார் அறிவிலா தார்*

என்பது திருக்குறள். தமிழர் என்ற இனத்தைப் பாதுகாத்த பின்பு எவ்வகையான கொள்கைகளையும் பரப்பலாம். இனம் அழியும்பொழுது, கட்சிக் கொள்கைகளைப் பரப்பக் கற்றோர் முயல்வது கண்மூடித்தனமாகும். கல்வியில் வல்ல தமிழர்களே! அன்னை மொழிக்கு நேர்ந்த அல்லலைப் போக்க நல்ல வழிகளைக் காட்டித் தமிழினத்தை வாழ்வியுங்கள்!

# தமிழ்நாட்டுக் கவிஞர்களே
# தமிழ் மொழியைக் காக்க வாரீர்!

தமிழ் வாழ வாழ்கின்ற கவிஞர்களே! இன்று தமிழ் மொழியைக் காப்பாற்ற நீங்கள் எழுச்சி கொள்ள வேண்டும். சங்கத்தில் தமிழை ஆய்ந்து வளர்த்த சங்கச் சான்றோரின் பரம்பரை உரிமை உங்கள் கையிலேதான் இருக்கின்றது. நீங்கள் பெருஞ்செல்வர்களாய் மாடமும் காரும் வைத்து வாழவில் லையே என்று ஏக்கங்கொள்ளாதீர்கள். நீங்கள்தான் தமிழரசு வீழ்ந்த பின்பும் தமிழைக் கற்றுக் காப்பாற்றி வருகின்றீர்கள். வறுமையுடன் போராடி வாழையடி வாழையாகத் தமிழுக்காக வாழ்ந்திருக்கின்றீர்கள். அயல்மொழிகள் பல தமிழகத்தின் ஆட்சிப் பீடத்தில் ஏறி அரசாண்ட காலத்தில் தமிழ்மொழியைப் பேணி வளர்த்த பெரியோர்கள் நீங்கள்தான். பிறமொழிகளைக் கற்றுப் புலமை பெற்றுவிட்டோம் என்ற பெருமிதத்தால் தாய் மொழியாகிய தமிழை மறந்து வாழ்ந்த தன்மானமற்ற தமிழர் களும் இப்பொழுது தமிழ்மொழியைப்பற்றி நினைக்கின்றார்கள். தமிழையே உயிராக மதித்துத் தமிழைக் கற்றுத் தாழ்ந்த நிலையில் இருக்கின்ற நீங்கள் தமிழுக்காக உயிரைக் கொடுக்கவும் தளர மாட்டீர்கள்.

இன்றைய இருபதாம் நூற்றாண்டில் வாழ்கின்ற உணர்ச்சித் தமிழ்க் கவிஞர்களே! உங்களுடைய உள்ளத்தில் ஊறி எழுகின்ற உணர்ச்சி வெள்ளம் தமிழ்மக்கள் உள்ளத்திலே தமிழ் உணர்ச்சியை வளர்க்க வேண்டும். தமிழுக்காக உயிரையும் தருகின்றோம் என்று தமிழர்கள் தோள்தட்டி வரக்கூடிய துணிவை நீங்கள் கொடுக்கவேண்டும். அமரகவி பாரதியாரின் ஆற்றலை ஏற்று அமிழ்தத் தமிழ்மொழியை ஆக்கிவையுங்கள்.

*"மண்வெட்டும் கூலிகளோ நீங்கள்*
*உங்கள் வாள்வலியும் போச்சோ"*

என்று வாழ்கின்ற தமிழ் மக்களைக் கேளுங்கள். வள்ளுவரின் உள்ளத்தோடு கலந்து, அறிவு வளத்தை அள்ளிக் கொடுங்கள். இளங்கோவின் உள்ளத்தோடு கலந்து இன உணர்ச்சியை அள்ளிக்கொடுங்கள். பாரதியாரின் உள்ளத்தோடு கலந்து உரிமை உணர்ச்சியை அள்ளிக் கொடுங்கள். உங்கள் கவிதைக் குரலிலே கங்கையைக் கொண்டு கடாரத்தை வென்ற பொங்கு புகழ்ச் சோழனின் ஆண்மைத்திறன் எழுந்து அலை மோதட்டும். தமிழரை இகழ்ந்த வடநாட்டாரை வென்று வாகை சூடிய சேரன் செங்குட்டுவனின் மானத்தீ மூளட்டும். இமயம் வரையும் தமிழகமாகக் கண்ட இமயவரம்பன் நெடுஞ்சேரலாதனின் வீரம் நிழலாடட்டும். புலவர்களே! நிகழ்காலத்தில் நின்று எதிர்காலத்தைப் படைக்கின்ற ஆற்றல் உங்களுக்குத்தான் உண்டு. தமிழினத்தை வாழ்விக்க, உங்களால்தான் முடியும். தமிழ்மொழியின் சிறப்பை ஆளுகின்ற சாதியார் அழித்தால் தமிழ்ப் புலவர் பரம்பரை வாழமுடியுமா? சங்க காலத்திற்கு முன் தொட்டுத் தமிழ்ப்புலவர்கள் தேடிவைத்த தமிழ் இலக்கியங்கள் வாழமுடியுமா? நாங்கள் உலகப் புலவனைப் படைத்த மக்களினம் என்று மான உணர்ச்சியுடன் பேசமுடியுமா? காலங்கடந்து வாழுகின்ற தமிழ்மொழியை வீழ்த்தித் தமிழர் என்றொரு இனமே இல்லையென்று அழிக்க முன்வந்தோரை நீங்கள் அடக்க வேண்டும். வாள்கொண்டு போர் தொடுக்கவேண்டாம். வாழ்கின்ற தமிழர்கள் தமிழ்மொழிமேல் ஆராக்காதல் கொண்டு, அறப்போர் தொடுக்கும் வண்ணம் உணர்ச்சிக் கவிதைகளைப் பாடுங்கள். எங்கள் தமிழ், எங்கள் உயிர், எங்கள் வாழ்வு என்று ஒவ்வொரு தமிழனும் எண்ணச் செய்யுங்கள். பட்டம் பதவி பெற்ற பண்பற்ற போலித் தலைவர்களைப் பாடிப் பாடிப் பல் இளித்து வாழ்ந்த புன்புலவர் பரம்பரை பாரதியாரின் எழுச்சியால் பாழ்பட்டு விட்டது. தாய்நாடு அடிமையாகக் கிடக்கத் தசாங்கம் பாடிச் சமீந்தாரைப் பாராட்டிய தமிழ்ப் புலவர் பரம்பரை செத்துவிட்டது. நாட்டிலே

வாழ்கின்ற தமிழர்கள் வறுமையால் வாட, நான்மணிமாலை பாடித் தான் மட்டும் வாழ நாலுபணம் பெற்ற தமிழ்க் கொலைஞர் குலம் தலைசாய்ந்து விட்டது. தமிழர் நாகரிகத் தையும், தமிழர்களையும் இகழ்கின்ற பிறநாட்டுத் தலைவர்களைப் பாராட்டி வரவேற்புப் பாடிய தன்மானம் இல்லாத் தமிழ்ப் புலவர்கள் தாயைக் கொன்ற கீழோராக இகழப்படுகின்றார்கள். இன்று தமிழினத்தின் மானத்தைக் காப்பாற்ற நீங்கள் கவிதை தாருங்கள். நீங்கள் இன எழுச்சிக் கவிதைகளால் இன்றைய தமிழகத்தை விழிப்படையச் செய்யுங்கள். பட்டத்திலும் பணத்திலும் பதவியிலும் வைத்த பற்றினால் தமிழை மறந்து தமிழன் என்ற இன உணர்ச்சியும் இல்லாமல் "நாமமது தமிழர் எனக் கொண்டிங்கு வாழ்கின்ற" கூட்டத்தாரைத் தட்டி எழுப்புங்கள். நீங்கள் தமிழர், தமிழ்மொழி தமிழரின் உயிர். உங்கள் உயிரைக் காப்பாற்ற உடனே திரளுங்கள் என்று உங்கள் உணர்ச்சிக் கவிதைக் குரலால் கூவி அழையுங்கள். உணர்ச்சி யுடன் கூவி அழைத்தால் உயிரையும் பொருட்படுத்தாமல் உடனே திரண்டு விடுவார்கள். உள்ளத்தில் தோய்ந்து சுரக்கின்ற உண்மைக் கவிதைகள் ஓர் இனத்தை விழிப் படையச் செய்யும் வல்லமை உடையன. தமிழ் இனம் அடைகின்ற இன்னலைக் கண்டு, உள்ளந் துடித்துத் தமிழ்ப் புலவன் எழுப்புகின்ற உரிமைக் குரல், அணுகுண் டினும் ஆற்றல் வாய்ந்தது. உங்கள் கவிதை உள்ளத்திலே நின்று பிறக்கின்ற உணர்ச்சிக் குரலால் தமிழினம் தழைக் கட்டும். தமிழ் இனம் தன்மானத் துடிப்புடன் வாழட்டும்.

---

* இப்பாடல்கள் வித்துவான் வேந்தனார் இயற்றிய 'அவளும் அவனும்' என்னும் காவியத்தில் இடம்பெற்றவை.

## 3

# கபிலரின் புலமை உள்ளத்தில் இடம்பெற்ற பாரியின் உயர் பண்புகள்

பண்டைத் தமிழர் வரலாற்றிலே கொடைவள்ளலாக, தமிழ்ப் புலவர்களை அன்புடன் ஆதரித்தவனாக, தன் நாட்டு மக்கள் அல்லல் என்பதையே அறியாவண்ணம் ஆட்சி செலுத்தியவனாகச் சிறப்புப் பெற்றவன் பறம்புநாட்டு மன்னன் பாரி. குறுநில மன்னனான அந்தப் பாரியின் உயர்ந்த பண்புகளைப் போற்றியும், மூவேந்தரால் அவன் கொல்லப்பட்டமையை நினைந்து வருந்தியும் கபிலர் பாடிய – புறநானூறு, பதிற்றுப்பத்து ஆகிய இலக்கியங்களில் இடம்பெற்ற – பாடல்களின் விளக்கமாக அமையும் கட்டுரைகள் இவை.

# முல்லைக்கொடிக்குத் தேர் கொடுத்த வள்ளல்

**பா**ரி பறம்புநாட்டு மன்னன். அறிஞர்களையும் வறியோர் களையும் ஆதரித்து மகிழும் அரும் பண்பாளன். குறுநில மன்னனாகிய பாரி பெருங் கொடை வள்ளலாக விளங்கினான். பாரியின் உள்ளத்தில் அன்பும் அறமும் செழித்து வளர வளரப் பறம்புநாட்டிலும் வளம் பல நிரம்பி மலர்ந்தன. வள்ளல் பாரியின் அன்பு நிழலில் வாழ்ந்த பறம்புநாட்டு மக்கள் அல்லல் என்பதை அறியாராய் அறத்தைக் காத்து ஆக்கம் பெருக்கினார்கள். ஈந்துவக்கும் பாரியின் இனிய பண்புகள் நல்லிசைப் புலவராகிய கபிலரின் உள்ளத்தை அள்ளிவிட்டன. புலமை நலம் படைத்த கபிலர் பாரியின் புகழைப் பாடிப் பாடி ஆவி தளிர்த்தார்.

பாரி பயன்கருதாது கொடுக்கின்ற பண்பாளன் என்பதை உணர்ந்த கபிலர் மிகவும் மகிழ்ந்தார். மாரி இந்த உலகத்தை வாழ்விப்பதுபோலவே பாரியும் வாழ்விக்கின்றான். மாரியினால் மக்களும் விலங்கினங்களும் மட்டுமல்ல, புல்லும் கொடியும் மரமும் தளிர்த்துப் பூத்துக் காய்த்துக் கனிந்து பயன் தருகின்றன. பாரியும் மக்களுக்கு மட்டும் வாரி வழங்கிப் பாவும் பாராட்டும் பெறுகின்ற அளவில் நிற்பவன் அல்லன். கொடுத்தால் புகழ் பெருகும் என்ற எண்ணத்துடன் கொடுக்கின்ற வாணிகக் கொடையாளன் அல்லன். பிற உயிர்கள் படுகின்ற அல்லலைக் கண்டு ஆவி உருகிக் கொடுக்கின்ற அருளாளன்.

ஒருநாள் பாரி தேரில் ஏறி ஊரின் வளங் காணச் சென்றான். செல்லும் வழியில் ஒரு முல்லைக்கொடியை நோக்கினான்.

முல்லைக்கொடியின் துன்ப நிலையை உணர்ந்து, உள்ளம் உருகினான். தேரில் நின்று இறங்கி, நேரில் சென்று முல்லைக் கொடியின் வாட்டத்தை நீக்க என்ன வழி என்று நினைத்தான். கொழுவிப் படர்ந்து தழைத்து மலரக் கொழுகொம்பில்லாமல் முல்லைக்கொடி குழைந்து கிடந்த நிலையை நினைக்க நினைக்க அவனின் உள்ளம் நீராய் உருகியது. உடனே ஒரு முடிவுக்கு வந்தான். தான் ஏறிவந்த தேரைக் கொண்டுவந்து முல்லைக்கொடியின் பக்கத்தில் நிறுத்தினான். ஆராத அன்புடன் அந்த முல்லைக்கொடியை அணைத்துத் தூக்கித் தேரில் படர விட்டான். முல்லைக்கொடி தேரின்மேல் படருங் காட்சியைக் கண்டான். பச்சைக் குழந்தை தன் தளிர்க் கையால் தாயின் முகத்தைத் தடவும்பொழுது தாயின் உள்ளம் தழைத்தல் போன்ற மகிழ்ச்சியுடன் வள்ளல் பாரி விளங்கினான். மகிழ்ந்த பாரி, தான் மன்னன் என்பதையும் மறந்து, தேரில் வந்த வீதி வழியே காலால் நடந்து தன் அரண்மனையை அடைந்தான்.

*"பூத்தலை அறாஅப் புனைகொடி முல்லை*
*நாத்தழும் பிருப்பப் பாடா தாயினும்*
*கறங்குமணி நெடுந்தேர் கொள்க எனக்கொடுத்த*
*பரந்தோங்கு சிறப்பின் பாரி"*

*(புறம் - 200)*

எனக் கபிலர் பாராட்டுகின்றார்.

# உலகம் வாழப் பயன்பட்ட பறம்புநாட்டு வேந்தன்

**பா**ரி மிகவும் இனியவன். நறுங்கனிகளைத் தருகின்ற மரம் நடு ஊரில் நின்று பழுப்பதுபோலப் பயன்படுகின்ற செல்வத்தைப் படைத்தவன். இல்லார்க்கும் இரவலர்க்கும் அள்ளிப் பொருளை அளித்தளித்து ஆவி தளிர்ப்பவன். "கொடுக்கிலாதானைப் பாரியே என்று கூறினும் கொடுப்பாரிலை" என்று நம்பியாரூரரால் பாடப்பெற்ற சிறப்புப் பெருந்தியவன்.

இங்ஙனம் சிறந்த பாரியின் பண்பை நேரில் கண்டு பாடிப்பாடி உள்ளம் கனிந்த புலவர் பெருமான் கபிலரேயாவர். "புலன் அழுக்கற்ற அந்தணாளன்" எனப் புலவர்களால் போற்றப் படுகின்ற கபிலரின் புலமை உள்ளத்தில் இடம் பெற்ற பெருமை பாரிக்கே உரிய தனிச்சிறப்பாகும்.

பாரியைப் பாடிப் பரிசில் பெற விரும்பிய விறலி ஒருத்தியை நோக்கிக் கபிலர் கூறுகின்றார்:

பெண்ணே! நீ பாரியைப் பாடிச் சென்றால் பரிசிலாக நல்ல அணிகலங்களைப் பெறுவாய். அவன் பொய்கையில் உள்ள குவளையின் புதிய மலர்களின்கண் குளிர்ந்த துளிகளைக் கலக்கின்ற மழை பெய்தாலும் பெய்யாவிட்டாலும், மலையின் தலையிலே நின்று வழிகின்ற அருவி, நீர் ஓடும் கால்கள் வழியாகப் பாய்ந்து நிலத்தைச் செழிக்க வைக்கின்றது. உழவுத் தொழிலுக்கு உதவுகின்றது. இதேபோலப் பாரியும், தான் எவ்வளவு இன்னல் அடைந்தாலும், பரிசிலர்க்குக் கொடுத்து மகிழ்கின்ற தன்மை கொண்டவன். மலைகளின் தலைகளில் நின்று வழிந்து வருகின்ற அருவி உழவுக்குதவும்

பரந்துபட்ட நிலத்தைச் செழிப்பிப்பதுபோலப் பாரியின் பறம்பு நாட்டில் வருகின்ற வருவாய் எல்லாம் பரிசிலர்க்கே பயன் படுகின்றதென்பதாம். உயர்ந்த மலையில் நின்று வழிகின்ற அருவியின் பண்பும், கொடுத்து வாழும் பெருங் குடியில் தோன்றிய பாரியின் பண்பும் ஒரே தன்மையாய் உலகம் வாழப் பயன்படுவதைக்கண்டு பாடிய கபிலரின் கவிதை காலங்கடந்து வாழ்கின்றது.

*சேயிழை பெறுகுவை வாணுதல் விறலி*
*தடவுவாய்க் கலித்த மாஇதழ்க் குவளை*
*வண்டுபடு புதுமலர்த் தண்சிதர் கலாவப்*
*பெய்யினும் பெய்யா தாயினும் அருவி*
*கொள்ளுழு வியன்புலத்து உழைகால் ஆக*
*மால்புடை நெடுவரைக் கோடுதோ றிழிதரும்*
*நீரினும் இனிய சாயல்*
*பாரி வேள்பால் பாடினை செலினே*

*(புறம் - 105)*

## பாரியின் நாட்டைப் பெறக் கபிலர் கூறிய வழி

**பா**ரியின் பறம்புநாட்டைப் பற்ற முடியுடை மூவேந்தரும் முனைந்தார்கள். கொடைச் சிறப்பால் குறுநில மன்னனாகிய பாரி தம்மை வென்றுவிட்டான் என்ற எண்ணம் மூவேந்தரையும் போர்க்கோலம் பூணத் தூண்டியது. போர்புரியத் துணிந்த மூவேந்தரின் எழுச்சியை உணர்ந்த கபிலர் நகைத்தார். பறம்புநாட்டில் இயற்கையாக அமைந்த வளம் உள்ளளவும் பாரியை வெல்ல முடிவேந்தர் மூவர்க்கும் முடியாதென்பதை அறிந்த கபிலர் அவர்களை நோக்கிக் கூறுகின்றார்:

வேந்தர்களே, பாரியின் ஆட்சியில் நின்று மலர்கின்ற பறம்புநாட்டில் உழவர் உழாது இயற்கையாகவே விளைகின்ற பொருள்கள் நான்குள்ளன. மலையை அடுத்த பகுதிகளில் சிறிய இலைகளை உடைய மூங்கிலினது நெல் விளைகின்றது. இனிய சுளைகளை உடைய பலாப்பழங்கள் எளிதில் பெறக்கூடியதாக எங்கும் காணப்படுகின்றன. கொழுங் கொடியில் வீழ்கின்ற வள்ளிக் கிழங்குகள் நிரம்ப உள்ளன. மலையிலே உள்ள தேன் கூடுகளின்மேல் அழகிய முசுக் கலைகள் பாய்வதால் மலைத் தேன் வழிந்த வண்ணமாகவே இருக்கும். இங்ஙனம் வளம் சுரக்கின்ற பறம்புமலை, அகன்ற வானத்தைப்போல விளங்கும். அந்த மலையைச் சார்ந்துள்ள சுனைகள் வானத்தின்கண் காணப்படும் வெள்ளிக் கூட்டங்களைப்போல் விளங்கும்.

நீங்கள் உங்களுடைய படைப் பெருக்கினால் பாரியின் பறம்பைப் பற்ற முடியாது. நீங்கள் மரந்தோறும் கட்டப்பட்ட பெரிய யானைப் படையை வைத்திருந்தாலும், இடங்கள் எல்லாம் பரந்து தோன்றும் பெரிய தேர்ப் படையை வைத்திருந்தாலும்,

போர்புரிந்து பாரியின் பறம்புநாட்டைப் பிடிக்க மாட்டீர்கள். பாரி உங்கள் படை வலிக்குப் பயப்படான். நீங்கள் பாரியின் நாட்டைப் பெற விரும்பினால் அதற்கு நான் அறிந்த ஒரு வழி சொல் கின்றேன். யாழிலே இனிய இசையை எழுப்பி அழகிய விறலியர் பின்னே வர ஆடியும் பாடியும் பாரியிடஞ் செல்லுங்கள். அவன் பரிசிலாக உங்களுக்குப் பறம்புநாட்டையும் தருவான்; பறம்பு நாட்டின் சிறப்பை மலர்த்தும் மலையையும் தருவான்.

இப்படிக் கபிலர் முடியுடை மூவேந்தரையும் மதியாமல் பாரியின் கொடைச் சிறப்பையும் பறம்புநாட்டின் சிறப்பையும் பாராட்டி உரைத்த பெருமிதக் குரல், அவரின் புலமை ஆற்றலைக் காட்டுகின்றது. அறத்தைத் தழுவிக் கொடுத்து வாழ்ந்த பாரியின் பண்பைத் தமது படைப் பெருக்கால் மறைக்க முயன்ற மூவேந்தரையும் கபிலரின் புலமை உள்ளம் மிக வெறுக்கின்றது.

*அளிதோ தானே பாரியது பறம்பே*
*நளிகொள் முரசின் மூவிரும் முற்றினும்*
*உழவர் உழாதன நான்குபயன் உடைத்தே*
*ஒன்றே சிறியிலை வெதிரின் நெல்விளையும்மே*
*இரண்டே தீஞ்சுளைப் பலவின் பழம் ஊழ்க்கும்மே*
*மூன்றே கொழுங்கொடி வள்ளிக் கிழங்கு வீழ்க்கும்மே*
*நான்கே அணிநிற ஓரி பாய்தலின் மீதழிந்து*
*திணிநெடுங் குன்றம் தேன்சொரி யும்மே*
*வான்கண் அற்றவன் மலையே வானத்து*
*மீன்கண் அற்றதன் சுனையே யாங்கு*
*மரந்தொறும் பிணித்த களிற்றினிர் ஆயினும்*
*புலந்தொறும் பரப்பிய தேரினிர் ஆயினும்*
*தாளின் கொள்ளலிர் வாளின் தாரலன்*
*யான்அறி குவன்அது கொள்ளு மாறே*
*சுகிர்புரி நரம்பின் சீறியாழ் பண்ணி*
*விரையொலி கூந்தல்நும் விறலியர் பின்வர*
*ஆடினிர் பாடினிர் செலினே*
*நாடும் குன்றும் ஒருங்கீ யும்மே.*

*(புறம்.109)*

## பாரியை இழந்த பறம்புநாட்டின் சிறப்பு

**பா**ரியின் மேன்மையை உணர்ந்து பகை உணர்ச்சி கொண்ட மூவேந்தரும் பறம்புநாட்டை வளைத்துக் கொண்டார்கள். பாரியின் படைவீரர்களும் உறவினரும் போரில் மாய்ந்தனர். பாரியும் முறையற்ற போரில் மூவேந்தரின் முனிவுக்குப் பலியாகி, ஆவி விட்டான். பாரியின் பிரிவைக்கண்டு வருந்த அவன் புதல்வியர் இருவருமே இருந்தனர். பாரியின் செல்வத்தைத் தங்கள் செல்வ மாகக் கொண்டு, நுகர்ந்து, மகிழ்ந்த பாணர்குலம் இறந்துபட்ட பாரியை எண்ணி எண்ணி இரங்கியது. பாரியின் உயிர் நண்பரான கபிலர் அவன் புதல்விமார் படுகின்ற அல்லலைக் கண்டு ஆவி உருகினார். தங்கள் அருமைத் தந்தையை இழந்து ஆதரவற்றுத் தவித்த பாரி மகளிர் கண்ணீருடன் கபிலர் கண்ணீரும் கலந்தது. அவர் பாரியின் புதல்வியர்களைப் பேணத் துணிந்தார். தளர்ந்த முல்லை படர்ந்து செழிக்கும் வண்ணம் தேரைக்கொடுத்த பாரியின் புதல்விமார், தம்மைத் தாங்குவார் எவரும் இன்றித் தளர்ந்து புலம்புவதைக் கண்ட கபிலரின் உள்ளம் மிகமிக உருகியது. அவர் பாரி மகளிரை அழைத்துக்கொண்டு, பறம்புநாட்டை விட்டுப் பிரியும்பொழுது கூறிய உரைகள் அவரின் அன்பின் அகலத்தையும் நன்றி உணர்ச்சியுடன் கலந்த இரக்க உள்ளத்தையும் எமக்குக் காட்டுகின்றன.

பெரிய புகழ் நிரம்பிய பறம்பே! நீ முன் எல்லாம் எங்கள் அன்புக்குரிய பொருளாக அமைந்திருந்தாய். அப்பொழுது மது நிரம்பிய சாடிகள் எமக்காகத் திறந்திருந்தன. ஆடுகள் கொல்லப் பட்டன. நாங்கள் நல்ல துவையையும் இறைச்சியையும் உடைய சோற்றை விரும்பிய அளவு உண்டோம். நீயும் எங்களிடம் நீங்காத

அன்பு கொண்டிருந்தாய். நிரம்பிய செல்வமும் உன்னிடம் இருந்தது. இப்பொழுது பாரி இறந்துபட்ட செயலை எண்ணித் துணையற்றவராய்த் துயருற்றுக் கலங்குகின்றோம். கவலை பொறுக்க மாட்டாமல், கண்ணீர் அருவியாக ஒழுக உன்னை விட்டுப் பிரிந்து செல்கின்றோம். நறிய கூந்தலுடன், வளையல் களை அணிந்தவரான பாரியின் மகளிர்க்குத் தகுந்த தலைவரைக் காணுதற்குச் செல்கின்றோம்.

*மட்டுவாய் திறப்பவும் மைவிடை வீழ்ப்பவும்*
*அட்டுஆன்று ஆனாக் கொழுந்துவை ஊன்சோறும்*
*பெட்டாங்கு ஈயும் பெருவளம் பழுனி*
*நட்டனை மன்னோ முன்னே இனியே*
*பாரி மாய்ந்தெனக் கலங்கிக் கையற்று*
*நீர்வார் கண்ணேம் தொழுது நிற்பழுச்சிச்*
*சேறும் வாழியோ பெரும்பெயர்ப் பறம்பே*
*கோல்திரள் முன்கைக் குறுந்தொடி மகளிர்*
*நாறுஇருங் கூந்தற் கிழவரைப் படர்ந்தே.*

*(புறம்.113)*

## பாரியின் புதல்விமார் புலம்பிய அவலக் குரல்

**மா**ரிபோலக் கொடையாளன் என்று பாரியைப் புலவர்கள் பாடினார்கள். அன்பும் அறமும் நிழலாடும் நெஞ்சம் கொண்ட பாரி "இன்பமே எந்நாளும் துன்பம் இல்லை" என்று வாழ்ந்தான். பாரியின் பறம்புநாடு பாடும் புலவர்கள் உள்ளம் போல நாளும் பொழுதுமாய் செழித்துப் பயன் சுரந்தது. பாரியின் புகழ் தமிழகம் எல்லாம் பரந்தது. இங்ஙனம் புலவர் பாடும் புகழ் நிறைந்த பாரிக்கு இரு புதல்விமார் பிறந்தார்கள். பிறந்த புதல்விமாரின் சிறந்த குணங்களைக் கண்டு பாரி உள்ளம் செழித்தான். தந்தையாரின் அன்புப் பணியில் ஆர்வங்கொண்ட அப்பெண்கள் இருவரும் மங்கைப் பருவம் அடைந்தார்கள். இல்லாதாரின் தோழனாய், இனிய குணங்கள் படைத்த பாரி, பல்லாண்டு வாழவேண்டும் என்று எல்லோரும் வாழ்த்தினார்கள். இங்ஙனம் சிறிய பறம்புநாட்டு வேந்தனாகிய பாரியின் பெருமையைக் கேட்ட முடியுடை மூவேந்தர்களும் முகம் கறுத் தார்கள். பாரியைப் போரில் வென்று பறம்புநாட்டை ஆள எண்ணினார்கள். அறத்தை நம்பிய பாரி, முடிவேந்தரின் சினத்தைக் கேட்டும் அஞ்சாமல் முன் போல அரசாண்டான். ஆற்றல் வாய்ந்த மூவேந்தரும் அறத்தை மறந்து போர் புரியார்கள் என்று பாரி எண்ணினான். பாரியின் பண்பைப் பாராட்ட வேண்டிய மூவேந்தரும், பார்த்தவர் நகைக்கத்தக்கதாகப் பெரும் படையுடன் வந்து பறம்பு நாட்டை வளைத்துக் கொண்டார்கள். பறம்பை வளைத்து நிற்கும் மூவேந்தரின் படைப் பெருக்கை, நிறைந்த நிலா முற்றத்திலே நின்று பாரியும் அவன் புதல்வியரும் பார்த்தார்கள். கடல்போலப்

பரந்த அப்படைகளைக் கண்ட பாரி உடனே போர்க்களம் புகுந்தான். நீண்டகாலமாகப் போர் தொடர்ந்து நிகழ்ந்தது. ஈற்றில் எண்ணியபடியே மூவேந்தரும் பாரியின் உயிரைப் போக்கிப் பழியைத் தேடிக்கொண்டார்கள். கொடுத்து வாழ்ந்த பரம்பரையைக் கொலை செய்துவிட்டார்கள். வீரப்போர் புரிந்து பாரி விண்ணுலகம் புகுந்ததைக் கண்ட அவன் காதல் புதல்விமார் இருவரும் கண்ணீர் வடித்தார்கள்.

உலையாத அன்போடு உலகம் புகழ வாழ்ந்த தந்தையின் வாழ்வு நிலையாமல் அழிந்ததை நினைத்து நெடுமூச்செறிந் தார்கள். வஞ்சனையாகப் போர் புரிந்து தம் தந்தையைக் கொன்ற மூவேந்தரையும் நஞ்சென வெறுத்து நகைத்தார்கள். சென்ற திங்கள் (மாதம்) தோன்றிய அந்த நிலாவிலே— மூவேந்தரும் படையுடன் வந்து பறம்புநாட்டை வளைத்தபொழுது நாங்கள் எம் தந்தையுடன் இருந்தோம். எங்களுடைய பறம்பு மலையையும் எமக்கே உடையவராய் இருந்தோம். இந்த மாதம் எறிக்கின்ற இந்த வெண்ணிலாவிலே, எங்கள் தந்தையையும் இழந்தோம்; எமது பறம்பு மலையையும் பகைவர் பற்றிக்கொண்டனர் என்று கூறி இரங்கினார்கள். கொடுத்து வாழ்ந்த பாரியின் புதல்விமார் நெஞ்சம் துடித்துப் புலம்பிய குரல் எமது நெஞ்சையும் உருக்கு கின்றது. இச்செயல் முடியுடை மூவேந்தரின் புகழுக்கோர் கறையாக நின்று, அறிஞர் உள்ளத்தை வருத்துகின்றது. கபிலர் முதலான நல்லிசைப் புலவர் பாடும் பண்பு நிரம்பிய பாரியை நாங்களும் பாடி மகிழ்வோம். அவனின் அன்புப் புதல்விமாரின் அவலக் குரலைக் கேளுங்கள்.

*அற்றைத் திங்கள் அவ்வெண் ணிலவின்*
*எந்தையும் உடையேம் எம்குன்றும் பிறர்கொளார்*
*இற்றைத் திங்கள் இவ்வெண் ணிலவில்*
*வென்றெறி முரசின் வேந்தர்எம்*
*குன்றும் கொண்டார்யாம் எந்தையும் இலமே.*

*(புறம் - 112)*

# செங்கோல் பிழையாத பாரி ஆண்ட பறம்புநாடு

**பா**ரியின் புதல்விமாருடன் பறம்புநாட்டை விட்டுச் செல்கின்ற கபிலரின் உள்ளம் கவலையினால் கரைகின்றது. முடியுடை வேந்தர் மூவரும், எல்லோர்க்கும் இனியனாகிய பாரியை எதிர்த்துக் கொன்ற கொடுஞ்செயலை எண்ணி எண்ணிக் கபிலர் ஏங்குகின்றார். பாரி ஆண்ட பறம்புநாடு, விளைவுக்குப் பொருந்தாத புன்புலங்களை உடையது. பாரியின் செங்கோல் நலத்தினால், அந்தப் புன்புலங்கள் செழித்துவிட்டன. மழை பெய்யாவிட்டாலும் பறம்புநாட்டிலே உள்ள புன்புலங்கள் நிறைந்த விளைவைக் கொடுக்கக்கூடிய வளங்கொண்டிருந்தன. சனி என்னும் கோள் புகையோடு கூடிப் புகைந்தாலும், எல்லாத் திக்குகளிலும் புகை தோன்றினாலும், மழையைத் தருகின்ற வெள்ளி மாறித் தெற்குத் திசையை நோக்கிச் சென்றாலும் பறம்புநாட்டிலே மழை குறையாது. வயல்களில் எல்லாம் நெல் விளையும். புதல்களில் எல்லாம் பூ மலரும். கன்றுகளை ஈன்றதினால், வீடுகளிலே தங்கி நிற்கின்ற பசுக்களின் பெரிய கூட்டம் நல்ல புல்லை மேய்ந்து மகிழும். பல சான்றோர்கள் பறம்புநாட்டில் வாழ்ந்தார்கள். மழை பொய்யாது. இங்ஙனம் சிறந்த செங்கோல் செலுத்திய பாரியின் புதல்விமார் இன்று என்னுடன் ஆதரவற்று வருகின்றார்கள். அவர்கள் நுண்ணிய தொழில் அமைந்த வளையல்களை அணிந்திருக்கின்றார்கள். தமது தந்தையையும் இழந்து நாட்டையும் துறந்து அல்லற்பட வேண்டிய நிலைமை அவர் களுக்கு வந்துவிட்டதே என்றெல்லாம் கபிலர் இரங்குகின்றார்.

*மைம்மீன் புகையினும் தூமம் தோன்றினும்*
*தென்திசை மருங்கின் வெள்ளி ஓடினும்*
*வயலகம் நிறையப் புதற்பூ மலர*
*மனைத்தலை மகவை ஈன்ற அமர்க்கண்*
*ஆமா நெடுநிரை நன்புல் ஆரக்*
*கோஒல் செம்மையின் சான்றோர் பல்கிப்*
*பெயல்பிழைப் பறியாப் புன்புலத் ததுவே*
*பிள்ளை வெருகின் முள்ளெயிறு புரையப்*
*பாசிலை முல்லை முகைக்கும்*
*ஆய்தொடி அரிவையர் தந்தை நாடே.*

*(புறம் - 117)*

இதில் கபிலரின் கவலையும் அன்பும் ஆற்றாமையும் கலந்த குரலைக் கேட்கின்றோம்.

கொடுத்து மகிழ்ந்த செங்கோல் மன்னனாகிய பாரி அழிந்துவிட்டானே. அவனுடைய பறம்புநாட்டைப் பகைவர் பிடித்துவிட்டார்களே. செங்கோல் செலுத்திய செவ்வியோனை ஏன் முடியுடை மூவேந்தர்கள் எதிர்த்துக் கொன்றார்கள்? பாரியின் அன்புக்குரிய இளம் புதல்வியர் இருவரும் ஆதரவற்று அலைகின்றார்களே என்று நினைந்து நினைந்து கபிலரின் உள்ளம் நிலை தளும்புகின்றது. படைப் பெருக்கால் பண்பு நிறைந்த பாரியை மூவேந்தரும் சேர்ந்து முடித்து விட்டார்கள். இந்தக் கொடுமையை எப்படித் தாங்க முடியும் என்ற துடிப்பு கபிலரின் புலமை உள்ளத்தை உறுத்துகின்றது. அழகான பறம்புநாட்டைப் பகைவர் அழித்துப் பாழ்படுத்து வதைக் காணக் கபிலரின் உயிர் உருகுகின்றது.

“எட்டாம் பக்கத்துப் பிறைபோல வளைந்த கரைகளையும் தெளிந்த நீரையும் உடைய சிறு குளம் பாதுகாப்பார் இல்லாமை யால் உடைவது போலப் பாறைகளும் மலையும் கூடிய பாரியின் பறம்புநாடு அழிகின்றது” எனக் கபிலர் புலம்புகின்றார்.

அறையும் பொறையும் மணந்த தலைய
எண்நாள் திங்கள் அனைய கொடுங்கரைத்
தெண்ணீர்ச் சிறுகுளம் கீள்வது மாதோ
கூர்வேல் குவைஇய மொய்ம்பின்
தேர்வண் பாரி தண்பறம்பு நாடே.

*(புறம் - 118)*

# கபிலரின் கவலை

**பா**ரியின் பறம்புநாட்டை முடியுடை வேந்தர் மூவரும் சேர்ந்து பாழ்படுத்திவிட்டார்கள். பறம்புநாட்டின் இயற்கை வளத்தையும் எழிலையும் கண்டு கண்டு உள்ளங்களித்த கபிலர் கண்ணீர் விட்டார். சான்றோர்களையும் தமிழ்ப் புலவர்களையும் தாயினும் இனிய அன்புடன் ஆதரித்து, அறம் வளர்த்த பாரியின் பறம்பு பாழ்பட்டு விட்டதே என்பதை நினைந்து நினைந்து கபிலர் நெடுமூச்செறிந்தார். பாழ்படுத்த முன்னர் தாம் கண்ட பறம்புநாட்டின் சிறப்பை நினைக்கின்றார்.

அன்று, பூக்கள் நிரம்பிய சோலைகள் பல பறம்புநாட்டின் கண் விளங்கின. அந்தச் சோலைகளிலே வண்ண மயில்கள் நின்று ஆடுகின்ற அழகைக் காணலாம். பறம்புநாட்டில் உள்ள பெரிய மலைகளில் எல்லாம் முசுக்கலைகள் குதித்து விளையாடு கின்ற செயலைக் காணலாம். விளையாடுகின்ற முசுக்கலைகள் வேண்டிய அளவு உண்ணுதற்கான காய்களையும், கனிகளையும் காலவரைவு இல்லாமல் கொடுக்கின்ற பயன் மரங்கள் பல நிறைந்திருந்தன. இங்ஙனம் பயன் மரங்கள் நிரம்பிய மலையின் மேல் பாரியின் புதல்விமார் ஏறிநின்று, தம்முடைய தந்தையின் ஆற்றலை உணராமல் போர்ப்படையுடன் வருகின்ற மூவேந்தரின் குதிரைகளை எண்ணுவார்கள்.

இன்று, பாரியின் புதல்விமார் பறம்புநாட்டை இழந்து விட்டார்கள். தங்கள் ஆருயிர்த் தந்தையின் பிரிவை எண்ணி ஆவி உருகுகின்றார்கள். அவர்கள் புல்முளைத்து மொய்த்த வழிகளை உடைய சிறிய வீட்டிலே வாழ்கின்றார்கள். அந்த

வீட்டின் வேலி முள்ளால் அடைக்கப்பட்டிருக்கின்றது. வீட்டின் முற்றத்திலே பஞ்சு பரவிக் கிடக்கின்றது. வீட்டின் பக்கமெல் லாம் பீர்க்கும் சுரையும் படர்ந்திருக்கின்றன. அவற்றை அடுத்து ஈத்திலையை உடைய குப்பைக் குவியலின் மேல் பாரியின் புதல்விமார் ஏறிநின்று உப்பேற்றி வருகின்ற வண்டிகளை எண்ணு கின்றார்கள். முடியுடை வேந்தரின் படைகள் வந்து பரந்த பறம்பு நாட்டில் உப்பு வணிகரின் வண்டிகள் செல்கின்றன. வளம் நிரம்பிய மலையின்மேல் ஏறிநின்று மாற்றாரின் குதிரைகளை எண்ணிய பாரி மகளிர், குப்பைக் குவியலின்மேல் ஏறிநின்று உப்பு வண்டிகளை எண்ணுகின்றார்கள். மயில் ஆடும் சோலைகள் சூழ்ந்த மாளிகைகளிலே இருந்த பாரி மகளிர் புல்மொய்த்த வழிகளைக் கொண்டதும் முள்வேலியால் சூழப்பட்டதுமான சிறு மனையிலே இருக்கின்றார்கள். தழை உடைகளை அணிந்து, அழகு நிரம்பியவர்களாய் குளிர்ந்த களையும், இனிய முறுவலையும் கொண்டவர்களாய் மகிழ்ந்து வாழ்ந்த இளம் பெண்களாகிய பாரி மகளிர் துன்பமே உருவமாக நின்று, தங்கள் அன்புத் தந்தையை நினைந்து வருந்துகின்றார்கள் என்றெல்லாம் கபிலர் எண்ணு கின்றார். எண்ணி எண்ணி இரங்குகின்றார்.

*தீநீர்ப் பெருங்குண்டு சுனைப்பூத்த குவளைக்*
*கூம்பவிழ் முழுநெறி புரள்வரும் அல்குல்*
*ஏந்தெழில் மழைக்கண் இன்நகை மகளிர்*
*புன்மூசு கவலைய முள்மிடை வேலிப்*
*பஞ்சி முன்றில் சிற்றில் ஆங்கண்*
*பீரை நாறிய சுரையிவர் மருங்கின்*
*ஈத்திலைக் குப்பை ஏறி உமணர்*
*உப்புஒய் ஒழுகை எண்ணுப மாதோ*
*நோகோ யானே தேய்கமா காலை*
*பல்பூஞ் சோலை மயிலெழுந்து ஆலவும்*
*பயில்இருஞ் சிலம்பிற் கலைபாய்ந்து உகளவும்*
*கலையுங் கொள்ளா வாகப் பலவும்*
*காலம் அன்றியும் மரம்பயம் பகரும்*

*யாணர் அறாஅ வியன்மலை அற்றே*
*அண்ணல் நெடுவரை ஏறித் தந்தை*
*பெரிய நறவின் கூர்வேற் பாரியது*
*அருமை அறியார் போர்எதிர்ந்து வந்த*
*வலம் படுதானை வேந்தர்*
*பொலம்படைக் கலிமா எண்ணு வோரே.*

*(புறம் - 116)*

இந்தப் பாட்டைப் படிக்கும்பொழுது கபிலருடன் சேர்ந்து நாமும் இரங்கவேண்டிய உணர்ச்சி உண்டாகின்றது. வாழ்விலே மிக விரைவில் ஏற்படுகின்ற அல்லலையும் அவலத்தையும் தாங்க மாட்டாமல், அறிஞராகிய கபிலரே இரங்குகின்ற நிலைமையை எய்திவிட்டார் என்பதை அறிகின்றோம். அறத்தைப் பாதுகாத்து, அன்பு வழியில் நின்று, அரசாண்ட பாரிக்கு வந்த இன்னலை எண்ணியவுடன் கபிலரின் இதயம் நெக்கு நெக்கு உருகி நிலை அழிகின்றது. பாரி ஆண்ட பறம்புநாட்டின் பாழ்பட்ட தோற்றத்தைக் கண்டவுடன் கபிலர் கவலையே உருவாகி நின்று கதறுகின்றார். அறத்தை மறந்து அல்லல் புரிகின்றவர்களும் அன்பில்லாதவர்களும் ஏன் வாழ்கின்றார்கள் என்ற ஏக்கம் கபிலரின் புலமை உள்ளத்தைக் கலக்கிவிட்டது.

# பகைவரைப் புறங்கண்ட பாரியின் பறம்பு

**பா**ரியின் வெற்றிக்கும், ஈகைக்கும் நிலைக்களமாக விளங்கியது பறம்புநாட்டின் செழிப்பேயாகும். நிறைந்த விளைவு கொண்ட பறம்புநாட்டைப் பார்த்தும், பாடியும் களித்த பெரும் புலவர் கபிலர். பாரியின் பண்பைப் பறம்புநாட்டின் இயற்கை வளத்திலும், எழிலிலும் நிலைபெறக் கண்ட கபிலர் பாரியைப் பிரிந்த துன்பத்திலும் பறம்புநாட்டைப் பிரிய நேர்ந்த துன்பத் தால் உள்ளம் உருகுகின்றார். பறம்புநாட்டின் நிலவளத்தைப் பாடிப் பாடிப் புலம்புகின்றார்.

"பறம்புநாட்டின் மேட்டு நிலத்திலே வேங்கைமரங்கள் வளர்ந்துள்ளன. கார்காலத்தில் பொழிந்த பருவமழையால், சிவந்த மண்ணை உடைய அந்த மேட்டு நிலம் நல்ல பதமான ஈரத்தைப் பெறுகின்றது. பதம்பட்ட செம்பாட்டு நிலத்தை உழவர் கள் பலசால்பட உழுது, புழுதியிலே வரகை விதைப்பார்கள். வரகு நன்றாகச் செழித்து வளர்ந்து அடியும் நுனியும் நிறையக் கதிர்களை ஈன்று, விளையும். விளைந்த வரகை மிகவும் ஆரவாரத்துடன் வெட்டுவார்கள். வரகைப் போலவே செழித்து வளர்ந்து கதிர் ஈன்று, முற்றிய தினையையும் வெட்டுவார்கள். அவரையையும் அறுப்பார்கள்.

இங்ஙனம், விளைபொருள்களைப் பெற்று உளம் மகிழும் உழவர்கள் நன்றாகப் பதப்பட்ட மதுவாகிய தேனை எடுத்து, நிலத்திலே புதைத்து வைப்பார்கள். புதைத்துவைத்த தேனையும், நறிய நெய்யிலே துள்ளவிட்டு வதக்கிய கடலையையும், சோற்றையும் வருகின்ற விருந்தினர்க்கு அருந்தக் கொடுத்து

மகிழ்கின்ற செயல் பறம்புநாட்டில் உள்ள சிறிய மனைதோறும் நிகழும். பறம்புநாட்டில் வாழ்கின்ற குடும்பப் பெண்கள் வந்த விருந்தினரை உண்பித்து, வருகின்ற விருந்தினரை எதிர்பார்த்து நிற்பார்கள். இடையறாமல் பறம்புநாட்டு மக்கள் விருந்தினரை வரவேற்று உண்பிப்பதால் புதிய தோளை உடைய மணப் பெண்களும், உணவு ஆக்குதற்குரிய கலங்களைக் கழுவுவார்கள்.

இங்ஙனமெல்லாம் மக்கள் மகிழ்ந்து வாழ்வதற்குக் காரண மான புது வருவாயுடன் பொலிந்த பறம்புநாடு, இன்று அச்சிறப்பில் நின்று நீங்கிவிடும்போலத் தோன்றுகின்றது. கரிய கூந்தலை உடைய இளம் புதல்வியரின் தந்தையும், போரில் புறங்கொடுத்து ஓடுகின்ற பகைவரின் கழல் ஒலியைக் கேட்டு நாணி நிற்கின்ற வனும், போரை விரும்புகின்ற செவ்வேளை ஒத்த வெற்றியை உடையவனும் ஆகிய பாரியின் பறம்புநாடு - மலையின் உச்சியில் மூங்கில்கள் ஓங்கி வளர்ந்து ஒலிக்கின்ற நாடு - புலவர்களால் பாடப்படுகின்ற பாட்டு ஓயாத புகழ் நிரம்பிய பாரியின் நாடு, பகைவரால் கைப்பற்றப்பட்டது. இனி என்னவாகுமோ" என்றெல்லாம் கபிலர் கூறுகின்ற குரலைக் கேட்கின்றோம்.

*வெப்புள் விளைந்த வேங்கைச் செஞ்சுவல்*
*கார்ப்பெயற் கலித்த பெரும்பாட் டீரத்துப்*
*பூழி மயங்கப் பலஉழுது வித்திப்*
*பல்லி ஆடிய பல்கிளைச் செவ்விக்*
*களைகால் கழாலின் தோடொலிபு நந்தி*
*மென்மயிற் புனிற்றுப்பெடை கடுப்ப நீடிக்*
*கருந்தாள் போகி ஒருங்குபீள் விரிந்து*
*கீழ்மேலும் எஞ்சாமைப் பலகாய்த்து*
*வாலிதின் விளைந்த புதுவரகு அரியத்*
*தினைகொய்யக் கவ்வை கறுப்ப அவரைக்*
*கொழுங்கொடி விளர்க்காய் கோட்பத மாக*
*நிலம்புதைப் பழுனிய மட்டின் தேறல்*
*புல்வேய் குரம்பைக் குடிதொறும் பகர்ந்து*

*நறுநெய்க் கடலை விசைப்பச் சோறட்டுப்*
*பெருந்தோள் தாலம் பூசல் மேவர*
*வருந்தா யாணர்த்து நந்துக் கொல்லோ*
*இரும்பல் கூந்தல் மடந்தையர் தந்தை*
*ஆடுகழை நரலும் சேட்சிமைப் புலவர்*
*பாடி யானாப் பண்பிற் பகைவர்*
*ஓடுகழற் கம்பலை கண்ட*
*செருவெஞ் சேஎய் பெருவிறல் நாடே.*

(புறம் - 120)

# பாரியைப் போன்ற சேரமன்னன்

**பா**ரியின் பிரிவை நினைந்து கபிலர் மிகவும் கலங்கினார். பாரியைப் போன்ற பண்பாளனை இனி எங்கே பார்க்கப் போகின்றேன் என்று ஏங்கினார். சேரமான் செல்வக்கடுங்கோவாழியாதன், பாரியைப் போன்ற பண்பாளன் என்பதைக் கபிலர் கேள்வியுற்றார். சேரமன்னனின் கொடைச் சிறப்பை உணர்ந்த கபிலர் உள்ளம் உவந்தார். தமிழகத்தில் ஈகையின் சிறப்பு இன்னும் ஒழிந்து போகவில்லை என்ற ஆறுதல் கபிலர் உள்ளத்தில் ஒரு புதிய ஒளியை ஏற்றியது. அவர் உடனே சேரமான் செல்வக்கடுங்கோவாழியாதனைக் காணப் புறப்பட்டார்.

கபிலர் சென்ற நேரத்தில் சேரமான் போர்ப் பாசறையில் வீற்றிருந்தான். மாற்றாரைப் போரில் வென்ற வெற்றி விழாவைக் கொண்டாடி மகிழ்கின்ற காட்சியைக் கபிலர் கண்டார். பாசறை, விழா நடக்கின்ற சிறிய ஊரைப் போலப் பொலிந்தது. பாசறையின் பக்கமெல்லாம் போரில் மாண்ட யானைகளின் உடம்புகள் மலையைப்போலக் கிடந்தன. கபிலர் படைவீரர்கள் தங்கி இருந்த இடங்களைக் கடந்து சென்றார். பாசறையின் நடுவிலே இருந்த பெரிய கூடாரம் ஒன்றின்மேல் விற்கொடி பறந்தது. கபிலர் கூடாரத்தின் உள்ளே புகுந்தார். சேர வேந்தன் அரியணையில் வீற்றிருந்தான். படைத் தலைவர்களும் அமைச்சர்களும் பக்கத்திலே இருந்தார்கள். கபிலரைக் கண்டவுடன் சேரமான் எழுந்து வரவேற்றான். சேரமானின் பண்பாட்டைக் கண்ட கபிலர் பாரியின் பண்பை நினைத்தார். சேரமானை நோக்கிப் பாரியின்

பண்பையும் அவன் ஆண்ட பறம்புநாட்டின் வளத்தையும் கூறுகின்றார்.

வேந்தனே! பாரி ஆண்ட பறம்புநாடு மிகவும் வளம் பொருந்தியது. பறம்புநாட்டிலே பலாமரங்கள் நன்றாகச் செழித்து வளர்ந்து நின்றன. பழுத்த பலாப்பழங்கள் முற்றி வெடித்த பிளவுகளில் இருந்து தேன் வழியும். வழிந்த தேனை வாடைக்காற்று அள்ளி வீசுகின்ற செயலைக் காணலாம். பாரியின் உள்ளம் பறம்புநாட்டின் வளத்தால் மலர்ந்தது. அவன் பெரிய வெற்றி மிடுக்குடன் விளங்கினான். பாரியின் இல்லம் ஓவியம்போல் அழகுள்ளது. அவனுடைய மனையாள் கொல்லிப் பாவையைப்போல நல்ல அழகு வாய்ந்தவள், கற்பிற் சிறந்தவள். பாரியின் ஈகை உள்ளத்தில் வீற்றிருக்கும் பெருமை அவன் மனையாளுக்குத்தான் உண்டு. தன் காதல் மனையாளைத் தவிர வேறொரு பெண்ணைச் சிந்தையாலுந் தீண்டாத பண்புடன் பாரி வாழ்ந்தான். அவன் பகைவர் நாட்டிலே பொன்னைப் போன்ற பூக்களையும் சிறிய இலைகளையும் பொலிந்த அடியையுங் கொண்டு நிற்கும் உன்ன மரத்துக்குப் பகைவன். பாரியின் அகன்ற மார்பிலே பூசிப் புலர்ந்த சந்தனம் பொலியும். அவன் உள்ளத்திலே ஈரம் என்னும் அன்பு இடையறாது சுரக்கும். அந்த ஈர அன்பின் பயனே அவனுடைய ஈகையாகும். அவன் இறக்கும் அளவும் அவனுடைய உள்ளத்திலே ஊறிச் சுரக்கும் ஈகைப் பண்பு மாறவில்லை. அவன் மாவண் பாரியாகவே மாய்ந்தான். இப்பொழுது பாரி இல்லை. அவன் மீண்டுவராத இடத்தை அடைந்துவிட்டான். அவனுடைய பிரிவால் முழவை ஒலிக்கின்ற வர்கள் முழவை மறந்தார்கள். அந்த முழவத்தில் பூசப்பட்ட மார்ச்சனை உலர்ந்து கிடக்கின்றது. பரிசிலர் தம்மை ஆதரிக்கும் பாரியைக் காணாமல் வருந்திப் புலம்பி வாடுகின்றார்கள்.

புரவலனே! பாரியுடன் ஈகை மறைந்துவிட்டது என்று எண்ணிய என் உள்ளம் உமது புகழைக் கேட்டு மலர்ந்தது. செல்வக்கடுங்கோவாழியாதன் பாரியைப்போலக் கொடுக்கின்ற

பண்பாளன் என்று பாவலர்கள் பாராட்டினார்கள். அவர்களின் பாராட்டுரைகள்தான் என்னை இங்கே அழைத்துவந்தன. பொருள் வேண்டும் என்று இரப்பதற்கு யான் வரவில்லை. உம்மிடம் இல்லாத பண்புகளைப் புனைந்து பாடிப் புகழவும் நான் வர வில்லை. பாரியைப் போலக் கொடுக்கின்ற பண்பாளனாகிய உன்னைப் பார்த்து மகிழத்தான் வந்தேன்.

"சேரமான் செல்வக்கடுங்கோவாழியாதன் வரையாது கொடுக்கின்ற வள்ளல். பரிசிலர்க்குப் பொருளைக் கொடுத்த பின், அதுபற்றி வருந்தமாட்டான். நான் பொருளைக் கொடுக் கின்றேன் என்ற பெருமிதம் இல்லாதவன். கொடுப்பதையிட்டு மகிழ்ச்சி கொள்ளாதவன். முன் பொருள்பெற்றுச் சென்ற பரிசிலர் கள் மீண்டும் பரிசில்பெற வந்தாலும் மறுக்கமாட்டான். அவர்கள் எத்தனை முறை வந்தாலும் வரவேற்றுப் புதிய பரிசிலர்க்குக் கொடுப்பதுபோல, பொருளை வழங்குவான்" என்றெல்லாம் புலவர்கள் கூறினார்கள். இவற்றை எல்லாம் கேட்கக் கேட்க என் உள்ளம் தளிர்த்தது. இன்று நேரில் வந்து உம்முடைய ஈகைப் பண்பைக் கண்டேன். பாரியின் ஈகையைப் பாடி மகிழ்ந்த என் உள்ளம் உம்மைக் கண்டவுடன் குளிர்ந்தது.

புரவலனே! வாளால் வெட்டப்பட்ட களிறுகளின் புலால் நாறுகின்ற பாசறையில் நீ வீற்றிருக்கின்ற ஓலக்கம், நிலாவைப் போல ஒளிவிடுகின்ற பாரியின் வேலைப் பாடிய பாடினி (மகள்) மத்தளத்தின் தாளத்தோடு வீசிய எழிற்கையை உடைய விழாவைப்போல ஆரவாரமும் மகிழ்ச்சியும் உடையதாகப் பொலிகின்றது.

*பலாஅம் பழுத்த பசும்புண் அரியல்*
*வாடை துரக்கும் நாடுகெழு பெருவிறல்*
*ஓவத்து அன்ன வினைபுனை நல்இல்*
*பாவை யன்ன நல்லோள் கணவன்*
*பொன்னின் அன்ன பூவின் சிறியிலைப்*
*புன்கால் உன்னத்துப் பகைவன் எம்கோ*

*புலர்ந்த சாந்தின் புலரா ஈகை*
*மலர்ந்த மார்பின் மாவண் பாரி*
*முழவுமண் புலர இரவலர் இனைய*
*வாராச் சேட்புலம் படர்ந்தோன் அளிக்கென*
*இரக்கு வாரேன் எஞ்சிக் கூறேன்*
*ஈத்தது இரங்கான் ஈத்தொறும் மகிழான்*
*ஈத்தொறும் மாவள்ளியன் எனநுவலும் நின்*
*நல்இசை தரவந் திசினே ஒள்வாள்*
*உரவுக் களிற்றுப் புலாஅம் பாசறை*
*நிலவின் அன்ன வெள்வேல் பாடினி*
*முழவிற் போக்கிய வெண்கை*
விழவின் அன்னநின் கலிமகிழானே.

இச்செய்யுளிலே பாரியைப் போன்ற சேரனைக்கண்ட கபிலரின் ஆர்வக் குரல் கேட்கின்றது.

*(பதிற்றுப் பத்து - 61)*

# இனியோன் குன்று

**பா**ரி பரிசிலர்க்கு இனியவன். ஈரநெஞ்சத்தோடு ஈகை புரிந்து மகிழ்கின்ற இனியோன். அவனுடைய ஈகை வாழ்க்கையை நேரில் கண்டு நெஞ்சம் செழித்த கபிலர் நினைந்து நினைந்து உருகுகின்றார். இன்முகங்காட்டி, இன்சொல் மொழிந்து, எல்லை இல்லாத ஆர்வத்துடன் இரவலரை வரவேற்கின்ற பாரியின் பண்பையும் பணிவையும் கபிலரால் மறக்க முடியவில்லை. எல்லார்க்கும் இனியோனாய், ஈகையாளனாய் வாழ்ந்த பாரி, பல வேற்படைகளுடனே தலைமை பொருந்திய யானைகளை உடைய மூடியுடை மூவேந்தர்க்கும் ஏன் பகைவனானான்? தமிழ்நாட்டின் நலம்பேணிய மூவேந்தர்களும், தண்ணளியாள னாகிய பாரியை ஏன் வெறுத்தார்கள்? நாற்பெரும் படைகளுடன் வெளிச் சென்று, மற்றவர்களுடைய நாட்டைப் பிடித்து நலிவு செய்ய, நாளும் பொழுதும் கொடுத்துக் கொடுத்து மகிழ்கின்ற பாரி நினைத்தானல்லன். தன் பறம்புநாட்டின் வளத்தை எல்லாம், பாடி வருகின்ற பரிசிலர்க்கும், வாடி வருகின்ற இரவலர்க்கும் வாரி வாரிக் கொடுத்து மகிழ்கின்ற வாழ்வையே அவன் பெரிதாக மதித்தான். பாரியின் ஈகைப் புகழ் தமிழகம் எங்கும் பரந்தது. மாவண் பாரி என்று பாவலர்கள் பாடினார்கள். "மாரிபோலப் பாரி" என்று வாழ்த்தினார்கள். பாரியாண்ட பறம்புநாடு, முந்நூறு ஊர்களைக் கொண்டது. பாடி வந்த பரிசிலர்க்கு, கூடும் உவகையுடன் முந்நூறு ஊர்களையும் பாரி கொடுத்துவிட்டான். பறம்பு மட்டும்தான் பாரியின் உரிமையாக இருந்தது. மூவேந்தரும் பெரும் படையுடன் வந்து பறம்புநாட்டை வளைத்தார்கள். பாரியின் ஈகைப் புகழைக் கேட்டு உள்ளம் எரிந்த மன்னர்களின்

கொடுஞ் செயலைக்கண்ட கபிலர் வருந்தினார். சிறிய பறம்பை ஆண்ட பாரி தமிழ்மக்கள் வாழ வாழ்ந்த பெரிய பண்பை மூவேந்தரும் பாராட்டாமல் படை திரட்டி வந்தார்களே என்று எண்ண எண்ணக் கபிலரின் உள்ளம் உடைந்தது. கொடுத்து வாழ்ந்த குலக்கொழுந்தை அழித்துவிட எண்ணி விட்டார்களே. பாரி ஈகையில் சிறந்தவன் என்ற புகழ் பரவிய வுடன் அவன் வீரத்தில் குறைந்தவன் என்று மூவேந்தரும் எண்ணி விட்டார்கள். பாரி படை வலிமை குறைந்தவன் என்றாலும் பண்பற்ற மூவேந்தரையும் எதிர்த்து நின்று போராடக்கூடிய பேராண்மையாளன் என்பதையும் கபிலர் உணர்வார்.

*கடந்துஅடு தானை மூவிரும் கூடி*
*உடன்றனிர் ஆயினும் பறம்புகொளற்கு அரிதே*
*முந்நூறு ஊர்த்தே தண்பறம்பு நல்நாடு*
*முந்நூறு ஊரும் பரிசிலர் பெற்றனர்*
*யாமும் பாரியும் உளமே*
*குன்றும் உண்டு நீர் பாடினிர் செலினே*

*(புறம் - 110)*

என்று கபிலர் பாடினார். முந்நூறு ஊர்களையும் பரிசிலர்க்குக் கொடுத்த பாரியின் நாட்டை நீங்கள் போரில் வென்று பெறுதலோ மிகவும் அரிது; பாடிச்சென்றால் பரிசிலாகப் பெற்றுவிடலாம் என்று கபிலர் மூவேந்தருக்கும் மொழிகின்றார். பாடி வந்த பரிசிலர்க்குத் தன் ஊர் முந்நூற்றையும் பரிசிலாகக் கொடுத்த பாரியை நீங்கள் ஏன் போரில் வெல்ல எண்ணு கிறீர்கள்? தன் நாட்டையே பரிசிலர்க்குக் கொடுக்கின்ற பண்பாள னாகிய பாரி உங்கள் நாட்டைப் பற்றவருகின்றானா, என்று கபிலர் குறிப்பாகக் கூறுகின்றார்.

பண்பற்ற மூவேந்தரால் பாரி கொல்லப்பட்டான். பாரியின் புகழ் கொல்லப்படவில்லை. “கொடுக்கிலாதானைப் பாரியே என்று கூறினும் கொடுப்பாரிலை” என்ற புகழ் என்றும் நின்று நிலவுகின்றது.

பாரியைப் பிரிந்த பறம்புநாட்டைக் கபிலர் பார்க்கின்றார். பாரியின் அன்பு நிழலிலே தங்கிப் பண்பட்ட பறம்பு, ஒரு பக்கத்தில் ஆரவாரமாகப் பாய்கின்ற அருவிகளை உடையதாய் இருந்தது. இன்னொரு பக்கத்தில் பாடிவந்த பாணர்களுடைய உண் கலத்தில் ஊற்றிப் பருகக்கொடுத்த இனிய தேறல் வழிந்து பெருகிக் கல்லையும் உருட்டிக் கொண்டு பாயும். இப்பொழுது பாரி பறம்புநாட்டிலே இல்லை. அவன் பாணர்க்கும் பரிசிலர்க்கும் இனியோனாய் — முல்லைக் கொடிக்கு வந்த அல்லலைக் கண்டு ஆவி உருகிய அன்பாளனாய் வாழ்ந்தான். அவனின் அன்பு வாழ்வு, முடியுடை மூவேந்தர்க்கும் இன்னாவாக — கொடியதாக — இருந்தது. எல்லோர்க்கும் இனியனாய், மூவேந்தர்க்கும் இன்னாதவனாய்த் தோன்றிய பாரியின் பறம்பு பாரியைப் பிரித்த நிலையில் தன் ஈகைப் பண்பும் நீங்கிவிட்டது. இனிப் பாணர் உண்டு மகிழும்பொழுது வழிந்து பாய்ந்த தேறல் கல்லை உருட்டிச் செல்கின்ற காட்சியைப் பறம்புமலை யிலே பார்க்க முடியாது.

ஒருசார் அருவி ஆர்ப்ப ஒருசார்
பாணர் மண்டை நிறையப் பெய்ம்மார்
வாக்க உக்க தேக்கள் தேறல்
கல்அலைத் தொழுகும் மன்னே பல்வேல்
அண்ணல் யானை வேந்தர்க்கு
இன்னான் ஆகிய இனியோன் குன்றே.

*(புறம் - 115)*

இதில் கபிலரின் உள்ளத் துடிப்பையும் உருக்கத்தையும் காண்கின்றோம். எல்லார்க்கும் நல்லவனாகிய பாரியை வல்லமை யொன்றினாலே முடிமன்னர்கள் கொல்லத் துணிந்தார்களே. இனி, உலகில் அன்பும் அறமும் தங்கி எப்படி நிழல் இடப் போகின்றது என்று கபிலர் கலங்குகின்றார்.

# விச்சிக்கோவும் கபிலரும்

கபிலரின் உள்ளம் மிக மென்மையானது. அன்பு நிறைந்தது. தன் ஆருயிர் நண்பனாகிய பாரியின் புதல்விமார் ஆதரவின்றி அல்லற்படுவதைக் கண்ட அவரின் உள்ளம் உருகியது. பாரியின் அன்பு நிழலிலே வாழ்ந்த இளம் புதல்விமார் பறம்புநாட்டை இழந்து விட்டார்கள். பாரியின் உறவினர்களும் நண்பர்களும் போரில் இறந்து விட்டார்கள். இரக்கம் இல்லாத மூவேந்தரும் பாரியைக் கொன்ற பெருமிதத்தினால் தம்மை மறந்துவிட்டார்கள். பாரியின் புதல்விமார் கபிலரின் ஆதரவில் தங்கிவிட்டார்கள். ஊரையும் உறவினரையும் பெற்றோரையும் இழந்த இளம் பெண் களின் எதிர்கால வாழ்வை எண்ணி எண்ணிக் கபிலர் ஏங்கினார். விச்சிக்கோ என்னும் வேந்தனிடன் பாரியின் புதல்விமாரை அழைத்துக்கொண்டு சென்றார். பாரியைப் பாடிய நாவால் பாரிமகளிரின் வாழ்வுக்காக விச்சிக்கோவை கபிலர் வியந்து பாடுகின்றார். "ஆரும் அற்ற, பாரியின் புதல்விமாரை நீ ஆதரிக்க வேண்டும்" என்று கேட்கின்றார்.

"வேந்தனே! உனது மலை நாடு மிகவும் வளம் நிரம்பியது. அங்கெல்லாம் பசிய இலைகளை உடைய பலாமரங்கள் நிறைந்துள்ளன. அப்பலாமரங்களில் பழுத்த கனிகளைக் கரிய விரல்களை உடைய ஆண் குரங்கு பிடுங்கித் தன் அன்புக்குரிய பெண் குரங்குக்குக் கொடுத்துத் தானும் உண்டு மகிழும். பழத்தை உண்டு மகிழ்ந்த கடுவனும் மந்தியும் கவலை இல்லாமல் மலையின் பக்கத்திலே உள்ள உயர்ந்த மூங்கிலின் உச்சியிலே ஏறி உறங்குகின்றன. நீரோ மாற்றாரின் நிணத்தைத் தின்று

களித்த நெருப்பைப் போலச் சிவந்து தோன்றும் நெடிய வேற் படையைத் தாங்கியுள்ளாய். மாற்றாரின் போர்க்களத்தைத் தம தாக்கிக் கொள்ளும் பெரிய யானைப் படையை வைத்திருக் கின்றாய். விளங்குகின்ற அணிகலன்களை அணிந்து வீற்றிருக் கின்றாய்.

நான் அந்தணன்; பரிசில் வேண்டிப் பாடுகின்றவன். என்னுடன் வந்துள்ள இவர்கள் பாரியின் புதல்விமார். இவர்களின் தந்தையாகிய பாரி ஈகையாளன்; இரக்கம் நிரம்பியவன்; பூக்கள் மலர்ந்து அழகுடன் பொலிந்த, முல்லைக்கொடியின் நிலையை உணர்ந்து வாய்விட்டுப் பேசாத அம்முல்லைக்கொடி படர்ந்து வாழும் வண்ணம் தான் ஏறிச்சென்ற தேரை ஈந்தவன். இன்று முல்லைக்குத் தேர் கொடுத்த பாரி இல்லை. தமது அன்புத் தந்தையை இழந்து அல்லற்படுகின்ற இவர்களை நான் தர நீ ஏற்றுக்கொள்ள வேண்டும். பகைவரை வென்று பணிய வைக்கும் வாளாண்மை கொண்ட நீ, இவர்களை வாழ்க்கைத் துணைவியராக ஏற்றுக்கொள்வதால் வரப்போவதோர் இன்னல் இல்லை. பகை வேந்தர்களின் ஆற்றலை அடக்கக்கூடிய, விளைவு நிரம்பிய நாட்டின் தலைவனாகிய நீ இவர்களை ஏற்றுக்கொள்ளத் தான் வேண்டும்.

உன்னுடைய மலையிலே பழுத்த பலாக்கனியைத் தன் அன்புக்குரிய மந்தியுடன் உண்டு மகிழ்ந்த கடுவன் மூங்கிலின் உச்சியிலே அச்சமின்றி உறங்குவதுபோல, நீயும் இவர்களை மணந்து இன்பமாய் வாழ்வாயாக

*பனிவரை நிவந்த பாசிலைப் பலவின்*
*கனிகவர்ந் துண்ட கருவிரற் கடுவன்*
*செம்முக மந்தியொடு சிறந்துசேண் விளங்கி*
*மழைமிசை அறியா மால்வரை அடுக்கத்துக்*
*கழைமிசைத் துஞ்சும் கல்லக வெற்ப*
*நிணந்தின்று செருக்கிய நெருப்புத்தலை நெடுவேல்*
*களங்கொண்டு கனலும் கடுங்கண் யானை*

*விளங்குமணிக் கொடும்பூண் விச்சிக் கோவே*
*இவரே பூத்தலை அறாஅப் புனைகொடி முல்லை*
*நாத்தழும் பிருப்பப் பாடா தாயினும்*
*கறங்குமணி நெடுந்தேர் கொள்களனக் கொடுத்த*
*பரந்தோங்கு சிறப்பின் பாரி மகளிர்*
*யானே பரிசிலன் மன்னும் அந்தணன் நீயே*
*வரிசையில் வணங்கும் வாள்மேம் படுநன்*
*நினக்குயான் கொடுப்பக் கொண்மதி சினப்போர்*
*அடங்கா மன்னரை அடக்கும்*
*மடங்கா விளையுள் நாடு கிழவோயே*

*(புறம் - 200)*

பாரியின் மேல் கபிலர் கொண்ட அன்பின் அகலத்தை இதனால் அறிகின்றோம். விச்சிக்கோ மூவேந்தரின் பகையைப் பொருட்படுத்தாமல் பாரியின் புதல்விமாரை மணஞ் செய்து கொள்வான் என்ற எண்ணத்துடன் கபிலர் அவனை வேண்டு கின்றார். பாரியின் மகளிர் நல்லாக வாழவேண்டுமென்ற கபிலரின் ஆராமையும் துடிப்பும் பாட்டிலே நின்று எம்மைக் கவர்கின்றன.

# 4

# இலக்கியத்தில் வயல் வளம்

தமிழ் இலக்கியங்களில் அகப்பாடல்களிலும் காப்பியங்களிலும் மருதநில - வயல் - வளத்தினைப் புலவர்கள் பாடியுள்ளனர். கற்பனைச் சிறப்பும் கருத்து வளமும் நிறைந்த அப்பாடல் களின் இலக்கியச் சுவையினை மக்களுக்கு உணர்த்தி, தமிழ் இலக்கியங்களில் ஈடுபாட்டை ஏற்படுத்தும் நோக்கில் எழுதப்பட்ட கட்டுரைத் தொடர் இது. "பெருங்காப்பியத்தைப் பாடிப் புது உலகைப் படைக்கத் தொடங்குகின்ற புலவன், நாட்டிலே இறங்கி வயல் வளத்தை நோக்குவான் மக்களின் வாழ்வை மலர்த்துகின்ற வயல் வளத்திலே கலந்து, புலவனின் கவிதை உள்ளம் ஊற் றெடுத்தும் பாய்கின்ற எழுச்சியைப் பெருங்காப்பியத்தில் காணலாம்" எனத் தொடங்கி, சீவகசிந்தாமணி, பெரிய புராணம், கம்பராமாயணம், திருவிளையாடற் புராணம் ஆகியவற்றில் இடம் பெற்ற பாடல்களை எடுத்து, அவற்றின் கவிநயத்தையும் அவை உணர்த்தும் வாழ்க்கை உண்மை களையும் விளக்கி, மழைபெய்து வெள்ளம் பெருகுதல், நாற்று நடுதல், கதிர் முற்றி விளைதல், களை பிடுங்குதல், விளைவால் பயன் பெறுதல், பொருளும் போகமும் பெற்று பண்பான வாழ்க்கை நடாத்துதல் என உழவர்களின் வாழ்க்கை யையும் தொடர்ச்சியாகக் காட்டும் கட்டுரைகள் இவை.

# வெள்ளமும் வள்ளலும்

**வ**யல் வளத்தினால், நாட்டின் பொருள்வளம் சிறக்கும். மக்களின் வாழ்விலே அன்பு வளம் சுரந்து, அறத்தை வளர்க்கும், கலைவளம் கனிந்து கருத்து வளத்தைச் செழிப்பிக்கும். வயல் வளத்தைப் பாடிப்பாடி மகிழ்ச்சியைச் சொரிகின்ற பாட்டுக்கள் மிக இனிமையானவை. பெருங்காப்பியத்தைப் பாடிப் புது உலகைப் படைக்கத் தொடங்குகின்ற புலவன், நாட்டிலே இறங்கி, வயல் வளத்தை நோக்குவான். மக்களின் வாழ்வை மலர்த்துகின்ற வயல் வளத்திலே கலந்து புலவனின் கவிதை வெள்ளம் ஊற்றெடுத்துப் பாய்கின்ற எழுச்சியைப் பெருங்காப்பியத்தில் காணலாம். திருத்தக்கதேவர் பாடிய சிந்தாமணியிலே புகுந்து, வயல் வளத்தின் மாண்பைப் பார்ப்போம். வயல் வளத்தோடு சேர்ந்த தேவரின் கவிவளத்தை நுகர்ந்து களிப்போம்.

மேகக் கூட்டங்கள் ஒன்றின் மேல் ஒன்று நிரைத்து நின்ற வண்ணம் மழையைக் கொண்டு நின்றது. வானவெளி முழுவதும் வெள்ளிக் கம்பிகளை நிரைத்து வைத்தாற்போன்ற கோலத்துடன் பொழிந்த மழைநீர் தேன் கூடுகள் தங்கிய மலையின் உச்சியிலே நின்று வழிந்து, பெருவெள்ளமாகப் பாய்கின்றது. பாய்கின்ற வெள்ளமும் திருத்தக்கதேவரின் உள்ளமும் ஒன்றுபட்டு விடுகின்றன. மலைத் தலையில் நின்று பாய்ந்த வெள்ளி போன்ற அருவியுடன் மலையிலே உள்ள தேன்கூடுகள் உடைந்து வழிகின்ற தேனும் சேர்ந்து பெருவெள்ளமாகப் பாய்கின்றது. செந்நிறமான தேனும் வெண்நிறமான அருவியும் சேர்ந்து பாய்கின்ற காட்சியைத் தேவர் பார்க்கின்றார். மேல்மாடங்களிலே

நின்று பறக்கின்ற செந்நிறத் துகிற் கொடிகளையும் வெண்ணிறத் துகிற் கொடிகளையும் அவர் நினைக்கின்றார்.

இங்ஙனம் தேனுடன் கலந்து பாய்ந்த மழை வெள்ளம், மலைகளிலே உள்ள பொருள்களை எல்லாம் வாரிக்கொண்டு வந்து, நாட்டின் பல இடங்களிலும் பரப்பியது. வெள்ளத்தின் செயல், தேவரின் உள்ளத்தில் புதியதோர் எண்ணத்தை உண்டாக்கியது. தம்மிடத்திலே உள்ள பொருள்களை முயற்சி இல்லாத மக்கள் இருக்கின்ற ஊர்தோறும் எடுத்தெடுத்துச் சென்று கொடுக்கின்ற வள்ளல்களின் செயலைப் புலவர் நினைத்துவிட்டார்.

*வள்ளற் கைத்தல மாந்தரின் மால்வரைக்*
*கொள்ளை கொண்ட கொழுநிதிக் குப்பையை*
*உள்ள மில்லவர்க் கூர்தொறும் உய்த்துராய்*
*வெள்ள நாடு மடுத்து விரைந்ததே*

மலையிலே உள்ள பொருள்களை வாரிக்கொண்டு வந்து நாட்டிலே பரப்புகின்ற வெள்ளத்தின் செயலை, முயற்சி இல் லாமல் மடிந்து இருக்கின்ற மக்களைத் தேடித் தேடிச் சென்று, தம் பொருளை அள்ளிக் கொடுக்கின்ற வள்ளல்களின் செயலுடன் ஒப்பிட்டுக் கூறிய பெருமை திருத்தக்கதேவருக்கே உரியதாகும். வெள்ளப் பெருக்கோடு, பிறருக்குக் கொடுத்து வாழ்கின்ற நன் மக்களின் வாழ்வும் கலந்துவிட்டது. வெள்ளம் பெருகிப் பொருள் களை அள்ளிக்கொண்டு சென்ற செயலை மட்டும் கூறி இருந்தால் நாங்கள் அதனை மறந்துவிடுவோம். இல்லாதவர்க்குத் தம் பொருளை உதவி வாழ்கின்ற நல்லவர்களின் செயலை, எமக்கு நினைவூட்டும் செயலாக, வெள்ளத்தின் செயலைப் புலவர் எடுத்துரைக்கும்பொழுது எமது வாழ்வு வளம்பெறுகின்றது. வள்ளலோடு சேர்ந்து வெள்ளமும் எமது மனத்தில் வாழ்கின்றது.

# மழையும் வள்ளலும்

திருத்தக்கதேவரின் உள்ளத்திலே வள்ளலாகக் காட்சி அளித்த வெள்ளம், கம்பரின் உள்ளத்திலே மழையாக மாறி விடுகின்றது. வெள்ளத்தை வள்ளல் என்று கூறுவதிலும், மழையை வள்ளல் என்று கூறுவதே பொருத்தமாகுமெனக் கம்பர் கருதுகின்றார். மலையிலே உள்ள பொருள்களைக் கொள்ளை கொண்டு வழங்குகின்ற வெள்ளத்தை வள்ளல் என்று கூறக் கம்பரின் உள்ளம் மறுக்கின்றது. மற்றவரின் பொருள்களைக் கொள்ளை அடிக்கின்றவர், அடித்துக் கொடுக்கின்றவர்கள், திருடர்கள். அவர்களை வள்ளல்கள் என்று கூறுவது தமிழ் மரபல்ல என்று கம்பர் எண்ணிவிட்டார். மழையைக் கொட்டு கின்ற மேகத்தையே வள்ளலாகக் கம்பர் காட்டுகின்றார். பாரியும் மாரியும் என்ற பழந்தமிழ்ப் பாட்டின் பொருள், கம்பர் உள்ளத்தில் நிலைத்து விட்டது.

*"உள்ளி உள்ளவெலாம் உவந்தீயும் அவ்*
*வள்ளி யோரின் வழங்கின மேகமே"*

என்று கம்பர் பாடுகின்றார். மேகங்கள் வள்ளல்கள்போல மழையைக் கொட்டுகின்றன. கொள்ளைகொண்ட பொருள்களை இல்லாதவர்க்கு அள்ளி அள்ளிக் கொடுக்கின்ற வள்ளல்கள் போல் அல்லாமல், தம்மிடத்தில் உள்ள பொருள்களை இல்லாதவரின் இன்னலை எண்ணி எண்ணிக் கொடுக்கின்ற வள்ளல்கள் போல மேகங்கள் விளங்குகின்றன. "உள்ளி" என்ற சொல்லிலே வள்ளல்களின் உயர்ந்த பண்பைக் கம்பர் காட்டுகின்றார். திருத்தக்கதேவர் வெள்ளத்துக்குக் கூறிய உவமையை மழையைப் பொழிகின்ற மேகத்திற்குப் பொருத்தி உரைத்த கம்பர் வெள்ளப் பெருக்கிற்கு வேறு உவமை உரைக்கின்றார்.

*மானம் நேர்ந்தறம் நோக்கி மனுநெறி*
*போன தண்குடை வேந்தன் புகழென*
*ஞான முன்னிய நான்மறை யாளர்கைத்*
*தானம் என்னத் தழைத்தது நீத்தமே*

என்று வெள்ளப் பெருக்கைக் கம்பர் பாடுகின்றார். மானத்தைப் போற்றி மனுநெறி தவறாமல் வையத்தை ஆண்ட மன்னவன் புகழைப் போல வெள்ளம் — நீத்தம் பாய்கின்றதாம். மான உணர்ச்சியுடன் நீதி தவறாமல் மக்களைப் பாதுகாக்கின்ற மன்னனின் புகழ் எங்கும் பரந்து சென்று, நயம்புரிதல் போல மழை வெள்ளம் எங்கும் பெருகிச் சென்று, விளைவைப் பெருக்கு கின்றதென்பதே கம்பரின் கருத்தாகும்.

இத்துடன் கம்பரின் கற்பனை நின்றுவிடவில்லை. மெய் யுணர்ச்சி நிரம்பிய நான்மறைகளைத் தெளிந்த அந்தணர்கள் மிகவும் மேலானவர்கள், தூயவர்கள். அவர்களுக்குக் கொடுக் கின்ற தானத்தைப்போல வெள்ளம் பாய்கின்றதென்றும் கம்பர் கூறுகின்றார். நல்லவர்க்குக் கொடுக்கின்ற தானப்பயன் பிறவி தோறும் தொடர்ந்து நின்று பாதுகாக்கும் என்பது, அறநூற் கொள்கை. தானப்பயன் தொடர்ந்து நின்று வாழ்விப்பதுபோல வெள்ளப் பெருக்கும், இடையறாது நிலத்தைச் செழிப்பித்து, நிலையான அன்பு வாழ்வை மலர்த்துகின்றதென்பதைக் கம்பர் நினைவூட்டுகின்றார். தேவரின் உள்ளத்திலே தோன்றிய வள்ளலின் பண்பு கம்பரின் உள்ளத்திலே கலந்து புதிய ஒளி பெற்றுவிட்டது.

# நாற்று நடுதல்

**பெ**ருகிப் பாய்ந்த வெள்ளத்தைக் கண்ட உழவர்கள் உவகை கொண்டார்கள். மதம்பிடித்த யானையைப் பாகர்கள் தோட்டியால் குத்திச் செலுத்துதல் போல, வாய்க்கால்களால் வெள்ளத்தைச் செலுத்தி வயல்களை நிறைத்தார்கள். குலமகளிர் கற்பின் வழிநின்று தம் பெண்மையைக் காப்பதுபோல வயல் களில் நிரம்பிய நீர், கட்டிய வரம்பின் எல்லையைக் கடந்து செல்லாமல் நின்றது. உழவர்கள் எருமைக்கடாக்களையும் எருதுகளையும் பூட்டி நீரால் நனைந்து பதப்பட்ட வயல் நிலத்தை உழுது சேறாக்கினார்கள். சேறாக்கிய நிலத்திலே நிலமகளைத் தொழுது முளைநெல்லை விதைத்தார்கள். முளைத்த நாற்றைப் பண்படுத்திய வயல்களில் நடுதற்காகக் கடைசியர் என்னும் வயல்மாதர் கூட்டத்தை அழைத்துக்கொண்டு செல்வார்கள். அவர்கள் தங்களுடைய மார்பிலே சேறு தெறிக்கும் வண்ணம் நாற்றின் முடியைக் குலைத்து நடுவார்கள். நாற்று நடுகின்ற வயல்மாதர்களைக் கண்டு அஞ்சிய கயல் மீன்கள் கவரிகள் தம் கன்றை நினைத்துச் சொரிந்த பால் பரந்து கிடக்கின்ற இடத்திலே பாய்ந்து கிடந்து புரளுகின்ற செயலைக் காணலாம்.

இங்ஙனம் பாலிலே கிடந்து புரண்டு பாலைப் பருகிச் சுவையுணர்ந்த மீன்கள் வயல்களிலே மலர்ந்துள்ள தாமரைப் பூக்களின்மேல் பாய்ந்தன. தாமரை மலரில் இருந்து தேனைப் பருகிய வண்டுக் கூட்டங்கள், கயல் மீன்கள் பாய்ந்த அதிர்ச்சியால் அஞ்சிப் பறந்தன. பறந்த வண்டுகள் அழகிய வளையல்களை அணிந்தவர்களாய் முத்தை மாலையாகக் கோப்பவர்களாய் விளங்கிய வயல்மாதர்கள் அணிந்த மாலையில் பாய்ந்தன. வயல்

மாதர்கள் அணிந்த மாலையில் இருந்து தேனைப் பருகிய வண்டுகள் வெருண்டு பறந்தன.

*பாற்சுவை அறிந்தவை பழனத் தாமரை*
*மேற்செலப் பாய்தலின் வெரீஇய வண்டினம்*
*கோல்தொடி நுளைச்சியர் முத்தங் கோப்பவர்*
*ஏற்றிய மாலைத்தேன் இரியப் பாய்ந்தவே*

என்று திருத்தக்கதேவர் கூறுகின்றார்.

வயல்மாதர் அணிந்த மாலையிலே இருந்து பறந்த வண்டினங்கள் வயலில் உள்ள குவளைப்பூவில் பாய்ந்தன. குவளைமலரில் இருந்த வண்டுகள் வந்த வண்டுகளை வரவேற்க, வயல்மாதர்கள் அணிந்த மாலைகளிலே இருந்து தேனுண்ட வண்டினங்கள் முல்லை மொட்டு அவிழ்ந்து தேனைச் சொரிகின்ற குவளைமலரில் பாய்ந்தன. குவளைமலரில் இருந்த வண்டுகள், வந்த வண்டுகளை வரவேற்றுத் தேனுணவை விருந்திடுகின்றோம் உண்பீராக எனக் கூறுவதுபோல ஆரவாரித்து அவற்றைத் தழுவிக் கொண்டன.

*இரிந்ததேன் குவளையின் நெற்றி தைவர*
*முரிந்து போதவிழ்ந்து கொங்குயிர்க்கும் முல்லையின்*
*அரும்புசேர்ந் தணிஞிமி றார்ப்ப வாய்பதம்*
*விருந்தெதிர் கொண்மெனத் தழுவி வீழ்ந்தவே*

இச்செய்யுளில் தேவர் நிலமயக்கங் கூறுகின்றார். முல்லை மலர் காட்டிற்குரியது. குவளைமலர் வயல் நிலத்திற்குரியது. முல்லைமலரின் தேன் குவளைமலரில் வழிவதால் காடும் வயலுங் கலந்த காட்சியைக் காண்கின்றோம். குவளை மலரில் இருந்த வண்டுகள் வந்த வண்டுகளை வரவேற்று, விருந்தருந்தும் வண்ணம் தழுவுகின்றன எனக் கூறி, விருந்தோம்பி மகிழ்கின்ற வேளாண் மக்களின் மேன்மையை நினைவூட்டுகின்றார்.

கடைசியர் எனும் வயல்மாதர்கள் கள்ளை ஊற்றிக் கொடுக்கின்றார்கள். இடைவிடாது வயல் வேலை செய்து

களைத்தவர்கள் கள்ளை உண்கின்றார்கள். உண்ட கள்ளின் மிகுதி, வயல் நிலத்திலே வழிந்து கிடக்கின்றது. வழிந்து கிடந்த கள்ளை, இளமை நிரம்பிய அன்னம் உண்டு, வெறி மிகுதலால் நாரையைத் தழுவிக்கொள்கின்றது. கள்ளுண்ட அன்னத்தின் மயக்கத்தைக் கண்ட பெண் மயில் தன் அன்புக் குரிய ஆண்மயிலை நோக்கி, "நீர் மயக்கத்தைத் தருகின்ற கள்ளை உண்டு மயங்கிவிடாதீர்" எனக் கூறிப் பாதுகாக்கின்றது — தெருட்டுகின்றது.

*வளைக்கையால் கடைசியர் மட்டு வாக்கலில்*
*திளைத்தவர் பருகிய தேறல் தேங்குழிக்*
*களிப்பவுண் டிளவனம் கன்னி நாரையைத்*
*திளைத்தலிற் பெடைமயில் தெருட்டும் செம்மற்றே*

இதில் கள்ளுண்டு களித்த அன்னம் தன் இனம் அல்லாத நாரையைத் தழுவி மயங்குகின்றது என்று கூறுவதால் கள்ளுண் டலின் தீமையையும் குறிப்பாகக் காட்டுகின்றார். அன்னத்தின் வெறிமயக்கத்தையும், அதன் செயலையும் கண்ட பெண்மயில் ஆண்மயிலைக் கள் உண்ண வேண்டாமென்று கேட்டுக்கொள் வதாகக் கூறுவதால் வாழ்க்கைத் துணைவி அமைச்சன் போலத் தன் தலைவன் தீயவழியில் செல்வதைத் தடுத்து, இடித்துரைக்கும் உரிமை வாய்ந்தவளென்பதையும் காட்டுகின்றார்.

# நெற்கதிர் விளைவும் கற்றவர் பண்பும்

**நா**ற்றுநட்ட பயிர் செழித்து வளர்ந்தது. உழவர்கள் வேண்டிய அளவு நீர்பாய்ச்சியும் களைபிடுங்கியும் நெற்பயிரைப் பாதுகாத்தார்கள். நிலவளமும் நீர்வளமும் உழவர்களின் பாதுகாப்பு வளமும் பெற்ற நெற்பயிர்கள் வளர்ந்து கருக் கொண்டன. கருக்கொண்ட நெற்பயிர்களின் காட்சியைப் புலவர் கண்டு வியக்கின்றார். கருத்தாங்கிய பச்சைப் பாம்புகளைப் போலப் பச்சைநிறமான நெற்கள் கருக்கொண்டு விளங்கு கின்றன என்று புலவர் பாராட்டுகின்றார். கருக்கொண்ட நெற்கள் கதிர்களை ஈன்றன. ஈன்ற கதிர்கள் அரிசிகட்டாத பருவத்திலே தலை நிமிர்ந்து நின்றன. தலை நிமிர்ந்தபடியே நின்ற கதிர் களின் தோற்றம் புலவர் உள்ளத்தில் புதிய சிந்தனையைத் தோற்றுவித்தது. அறிவில்லாதவர்கள் செல்வத்தைப் பெற்றால், தம்மை மறந்து இறுமாப்புடன் தலை நிமிர்ந்து திரிவார்கள், அதேபோல, அரிசிகட்டாத நெற்கதிர்களும் தலைநிமிர்ந்து நிற்கின்றன என்று புலவர் எமக்கு நினைவூட்டுகின்றார்.

இங்ஙனம் அரிசிகட்ட முன்னர் தலைநிமிர்ந்து நின்ற நெற்கதிர்கள் அரிசிகட்டி விளைந்தவுடன் தலைசாய்ந்து விட்டன. விளைந்து தலைசாய்ந்து நிற்கின்ற நெற்கதிர்களைத் துணையாகக் கொண்டு, நிறைந்த வாழ்க்கை உண்மையைப் புலவர் எமக்குக் கூறுகின்றார். கல்வி அறிவு நிரம்பிய சான்றோர் கள் தற்பெருமை இல்லாமல் தண்ணளி கொண்டவர்களாய்ப் பணிந்து வாழ்வதுபோல அரிசிகட்டி விளைந்து தலைசாய்ந்த நெற்கதிர்கள் விளங்குகின்றனவாம்.

**வித்துவான் க. வேந்தனார்**

*சொல் அரும் சூற்பசும் பாம்பின் தோற்றம்போல்*
*மெல்லவே கருவிருந்து ஈன்று மேலலார்*
*செல்வமே போல்தலை நிறுவித் தேர்ந்தநூற்*
*கல்விசேர் மாந்தரின் இறைஞ்சிக் காய்த்தவே*

இந்தப் பாட்டைப் படிக்கும்பொழுது எழுகின்ற சிந்தனை, விளைந்த நெல்லின் பயனோடு நிறைந்த வாழ்வின் பயனையும் காண்கின்றது. நெல் கதிர் ஈன்று விளைதலாகிய வயல் வளத்தைக் காணும்தோறும் கல்லாதார் பண்பையும் கற்றவர் பண்பையும் எல்லாரும் எண்ணும் வண்ணம், வாழ்க்கை உண்மைகளைப் புலவர் இணைத்து வழிகாட்டுகின்றார். செல்வத்தைப் பெற்ற சிறியவர்கள் செல்வச் செருக்கினால் தம்மை மறந்து இறுமாப் புடன் தலை நிமிர்ந்து திரிவார்கள். அவர்கள் அறத்தை மறந்து அல்லல் புரிவார்கள் என்பதைப் புலவரால் மறக்கமுடியவில்லை. அரிசிகட்டாத கதிர் தலைநிமிர்ந்து நிற்றலைக் காணும்பொழு தெல்லாம் எமக்குச் சிறியவர்கள் செல்வச் செருக்கால் தருக்கித் தலைநிமிர்ந்து திரியும் புன்மை புலனாகின்றது. சிறந்த நூல் களை ஆராய்ந்து கற்றுத் தெளிந்த அறிஞர்கள் அன்பும் பணிவும் உடையவர்களாய் அமைந்து வாழ்வார்கள்; அறத்தை மறவாமல் நின்று ஆக்கப்பணி புரிவார்கள் என்பதை எண்ணி எண்ணிப் புலவர் இன்ப வெறி கொள்கின்றார். அரிசிகட்டி விளைந்து சாய்ந்த நெற்கதிர்களைக் காணும்பொழுதெல்லாம், எமக்கு அறிவாய் அமைந்த சான்றோரின் அடக்கமும் பணிவும் புலனாகின்றன.

*பணியுமாம் என்றும் பெருமை சிறுமை*
*அணியுமாம் தன்னை வியந்து*

என்பது திருக்குறள்.

# நெல்லின் விளைவும் நல்லிசைப் புலமையும்

**நெ**ல்லின் விளைவைக் கொண்டு திருத்தக்கதேவர் சொல்லிய வாழ்க்கை உண்மைகளைக் கண்டோம். செல்வச் செருக்கால் இறுமாப்புக்கொண்ட சிறியவர் செயலையும், கல்விச் சிறப்பால் அமைந்த சான்றோரின் பண்பையும் தேவர் எமக்குத் தெரிவித்தார். தேவரின் செய்யுளைப் படித்த பரஞ்சோதி முனிவர் நெல்லின் விளைவைப்பற்றி இன்னுஞ் சில நல்ல கருத்துக்களை எமக்குச் சொல்கின்றார்.

கருத்தாங்கிய நெற்களின் தன்மையைப் பரஞ்சோதியார் நோக்குகின்றார். குற்றமில்லாத கல்வியறிவு நிரம்பிய நல்லிசைப் புலவர்கள் இயற்றிய நூலினுள் அடங்கியுள்ள பொருளைப் போலக் கருக்கொண்ட நெற்களின் தன்மை அவருக்குத் தோன்றுகிறது. கருக்கொண்ட நெற்கள் கருமுற்றிக் குடலையாகத் தோன்றுகின்றபோது புலவர் உள்ளத்தில் இன்னுமோர் புதிய எண்ணம் எழுந்தது. நல்லிசைப் புலவர்கள் இயற்றிய நூலின் பொருள், ஒழுங்குபட்டு விளங்குவதுபோல வளர்ந்த கரு தோன்றுகின்றதெனப் புலவர் புனைந்துரைக்கின்றார். இங்ஙனம் வளர்ந்த கரு கதிராகித் தலைநிமிர்ந்து நிற்கின்றது. தலைநிமிர்ந்து இறுமாப்புடன் நிற்கின்ற நெற்கதிர்களின் தோற்றம் கற்றறிவு நிரம்பாத போலிப் புலவர்களின் பண்பைப் புலவருக்கு நினைவூட்டுகின்றது. போலிப் புலவர்கள் தாம் பாடிய கவிகளைத் தாமே வியந்து இறுமாப்புடன் தலைநிமிர்ந்து திரிவார்கள். அதுபோல் அரிசி கட்டாத நெற்கதிர்களும், பணிவில்லாமல் தலை நிமிர்ந்து நிற்கின்றன என்பதே புலவரின் கருத்தாகும்.

இனி இங்ஙனம் தலைநிமிர்ந்து நின்ற நெற்கதிர்கள், அரிசி கட்டி விரிந்தன. விரிந்த நெற்கதிர்களின் தோற்றத்தை நல்லிசைப் புலவர்கள் இயற்றிய நூலின் பொருள் விரிந்து பயன் தரும் செயலுடன் புலவர் ஒப்பிட்டுரைக்கின்றார். கற்றவர்கள் இயற்றிய நூலின் பொருள், கற்குந்தோறும் விரிந்து நயம் பயப்பதுபோல, அரிசி கட்டிய நெற்கதிர்களும் நாள்தோறும் முற்றி விரிந்து, மக்கள் வாழ்வுக்கு ஏற்றதாகப் பயன்கனிந்து வருகின்றதென்பதைப் புலவர் சிந்திக்கின்றார். அரிசி கட்டி விரிந்த கதிர்கள் ஒன்றுகூடித் தலைசாய்ந்து நிற்கின்றன. அரிசி கட்டி முற்ற முற்ற விரிந்த நெற்கதிரின் கவர்க் கம்பிகள் எல்லாம் ஒன்று சேர்ந்து தலைசாய்ந்து நிற்கும் நெற்கதிர்களின் தோற்றம், நாற்குணங்களும் நிரம்பிய குலமகளிர், கற்பினால் பணிந்து வாழ்கின்ற பெருஞ்செயலைப் புலவர் உள்ளத்தில் எழுப்புகின்றது. அரிசி கட்டிய நெற்கதிர்கள் ஒன்றுசேர்ந்து தலைசாய்ந்து நிற்பது போல நாற்குணங்களும் நிரம்பிய குலமகளிர், தமது கருத்தையெல்லாம் கணவன் வாழ்வுக்கே உரிமையாக்கிப் பணிந்த உள்ளத்துடன் சிறந்து வாழும் கற்பொழுக்கத்தைப் புலவர் எண்ணி எண்ணி இன்பம் அடைகின்றார்.

*புரையற உணர்ந்தோர் நூலின்*
*பொருளினுள் அடங்கி அந்நூல்*
*வரையறை கருத்து மான*
*வளர்கருப் புறம்பு தோன்றிக்*
*கரையமை கல்வி சாலாக்*
*கவிஞர்போல் இறுமாந் தந்நூல்*
*உரையென விரிந்து கற்பின்*
*மகளிர்போல் ஒசிந்த தன்றே*

*என வரும் பரஞ்சோதி முனிவர் பாட்டுடன்*

*சொல்அரும் சூற்பசும் பாம்பின் தோற்றம்போல்*
*மெல்லவே கருவிருந்து ஈன்று மேலலார்*

*செல்வமே போல்தலை நிறுவித் தேர்ந்தநூற்*
*கல்விசேர் மாந்தரின் இறைஞ்சிக் காய்த்தவே*

என வரும் திருத்தக்கதேவரின் பாட்டையும் ஒப்பிட்டுப் பாருங்கள். முனிவர், தேவரின் கருத்தைப் படித்து, அத்துடன் தம்முடைய புதிய கருத்துக்களையும் சேர்த்து, நெல்லின் விளைவை எமது நல்விளைவாக மாற்றுகின்றார்.

## விளைவும் பயனும் – பரஞ்சோதியார் கருத்து

திருத்தக்கதேவர் நெற்கதிர் முற்றித் தலைசாய்ந்து நிற்கும் அளவும் தமது சிந்தனையைச் செலுத்திப் புதிய வாழ்க்கை உண்மைகளை எமக்கு வழங்கினார். முற்றிய நெற்கதிர்கள் விளைந்து பயன்தரும் நிலையைப்பற்றி அவர் ஒன்றும் நினைக்க வில்லை. பரஞ்சோதியார் விளைந்த நெல்லின் பயனைப்பற்றியும் சிந்திக்கின்றார். உழவர்கள் நெல்லை விதைத்து நீர்ப்பாய்ச்சிக் களைபிடுங்கி நாளும் பொழுதும் பாதுகாக்கின்றார்கள். உழவர் களின் பாதுகாவலில் நின்று செழித்து வளர்ந்த நெற்பயிர், கதிர் ஈன்று, முற்றி, விளைந்து, உழவரின் வாழ்வை மலர்த்துகின்றது. விளைந்த நெல்லின் பயனைப் பெற்ற உழவனும், விருந்தும் விழாவும் இயற்றி மகிழ்ந்து வாழ்கின்றான். விளைந்த நெல்லின் பயன் நுகர்ந்து விளங்குகின்ற உழவனின் உவகையைக் கண்ட பரஞ்சோதியார் உள்ளத்திலே வேறோர் உயர்ந்த கருத்துத் தோன்றியது.

ஈசனையே பணிகின்ற தொண்டர்கள் அன்பு என்னும் பத்தியைத் தமது நெஞ்சமாகிய வயலில் விதைக்கின்றார்கள். நெஞ்சிலே ஈசனைப்பற்றி நினைக்கின்ற அன்பு, அவர்களின் ஆராவேட்கை என்னும் ஆர்வ நீரால் நன்றாகச் செழித்து வளர்கின்றது. அன்பும் ஆர்வமும் கனிந்த தொண்டர்களின் நெஞ்சையே இடமாகக் கொண்ட இன்புருவாகிய ஈசன் தமது இன்னருளை விளைவிக்கின்றார். ஈசன் இடத்தில் தொண்டர்கள் கொண்ட அன்பு முதிர்ந்து ஈசனின் அருளாக விளைந்து அத்தொண்டர்களை வாழ்விக்கின்றது போல, உழவர்களால் வயலில் விதைத்துப் பாதுகாக்கப்பட்ட நெற்பயிர்களும் கதிர்

ஈன்று முற்றி விளைந்து உழவர்களை வாழ்விக்கின்றன என்பதே பரஞ்சோதியாரின் கருத்தாகும்.

*அன்புறு பத்தி வித்தி*
*ஆர்வநீர் பாய்ச்சுந் தொண்டர்க்கு*
*இன்புரு வான ஈசன்*
*இன்னருள் விளையுமா போல்*
*வன்புறு கருங்கான் மன்னர்*
*வைகலும் செவ்வி நோக்கி*
*நன்புலம் முயன்று காக்க*
*விளைந்தன நறுந்தண் சாலி*

எனப் பரஞ்சோதியார் பாடி மகிழ்கின்றார். ஈசனிடத்தில் அன்பு கொண்ட நெஞ்சத்தைத் தொண்டர்கள் "நெஞ்சம் உமக்கே இடமாக வைத்தேன், நினையாது ஒருபோதும் இருந்தறியேன்" என மிகவும் ஆராமையுடன் பாதுகாப்பார்கள். உலகப்பற்றாகிய எண்ணங்களுக்கு இடங்கொடாமல் நின்றும் இருந்தும் கிடந்தும், என்றும் இறைவனையே எண்ணி இன்பம் பெறுவார்கள். "மற்றுப் பற்றெனக்கின்றி நின் திருப்பாதமே மனம் பாவித்தேன்" என வரும் ஆர்வ மொழிகளைக் கேளுங்கள். இங்ஙனம் ஈசனையே நினைந்துருகுகின்றவரின் நெஞ்சில் ஈசன் புகுந்து இன்னருளாகிய பயனை விளைவிப்பான் என்ற உண்மையை விளைந்த நெல்லின் பயன்பாட்டில் வைத்துப் பரஞ்சோதியார் எமக்கு விளம்புகின்றார். பண்படுத்திப் பாதுகாக்கப்பட்ட வயலில் விதைத்த நெல் விளைந்து உழவனின் வாழ்வை உயர்த்துவது போல, அன்பு நிறைந்த தூய தொண்டர்களின் நெஞ்சிலே நின்று ஈசன் இன்னருளாகிய பயனை விளைத்து வாழ்விப்பான் என்பது கருத்தாகும்.

*"அருச்சனை வயலுள் அன்புவித் திட்டுத்*
*தொண்டர் உழவர் ஆரத் தந்த*
*அண்டத் தரும்பெறல் மேகன் வாழ்க"*

என வரும் மணிவாசகர் திருவாசகப் பகுதியையும் நோக்குக.

# விளைவும் பயனும் – சேக்கிழார் சிந்தனை

திருத்தக்கதேவர் இயற்றிய சீவகசிந்தாமணிக்குப்பின் தொண்டர் சீர் பரவவல்ல சேக்கிழார் பெரியபுராணத்தைப் பாடினார். தன்னேரில்லாத் தலைவனைக்கொண்ட பெருங் காப்பியத்தை விருத்தப்பாவால் தமிழிலே முதன் முதல் பாடிய பெருமை திருத்தக்கதேவருக்கே உரியதாகும். திருத்தக்க தேவரின் சிந்தாமணி, கி. பி. பத்தாம் நூற்றாண்டின் முற்பகுதியில் எழுந்தது. சேக்கிழாரின் பெரியபுராணம் பதினொராம் நூற்றாண்டின் இறுதியில் எழுந்தது. தேவரையும் சேக்கிழாரையும் வழிகாட்டிகளாகக் கொண்டே தமிழில் கந்தபுராணம், கம்ப ராமாயணம், திருவிளையாடற்புராணம் முதலிய நூல்களும் எழுந்துள்ளன. இவற்றுள் சேக்கிழார் பாடிய பெரியபுராணம் தனிப்போக்குடையது. கேடும் ஆக்கமும் கெட்ட தொண்டர்களின் வாழ்வைச் சேக்கிழார் தமது காப்பியத்தில் விளக்குகின்றார்.

*ஆரம் கண்டிகை ஆடையும் கந்தையே*
*பாரம் ஈசன் பணியல தொன்றிலார்*
*ஈர அன்பினர் யாதுங் குறைவிலார்*
*வீரம் என்னால் விளம்பும் தகையதோ*

எனத் தொண்டரின் பெருமையைச் சேக்கிழார் பாராட்டுகின்றார்.

இங்ஙனம் தொண்டர் சீரையே பரவுகின்ற சேக்கிழார் வளர்ந்து கருக்கொண்டு கதிர் ஈன்று அரிசிகட்டித் தலைசாய்ந்து முற்றி விளைகின்ற நெல்லின் செயல்களைச் சிந்திக்கின்றார். வேளாளர்குல முதல்வராகிய சேக்கிழாரின் உள்ளத்திலே நெல்லின் செயல்கள் எல்லாம் ஈசனின் இணையடி மறவாத தொண்டர்களின் செயல்கள் போலவே காட்சி அளிக்கின்றன.

நெற்பயிர்கள் நீண்ட வயல்களில் வளர்கின்றன. அன்பர்களும் ஈசன் அருளில் ஊறி உயர்ந்த நோக்கங்களுடன் ஓங்கி நிற்கின்றார்கள். வயலின் பண்பட்ட தன்மையால் அதன்கண் எழுந்த நெற்பயிர்கள் மிகச் செழிப்பாக வளர்ந்து அன்பர்களின் சிந்தையைப் போல் ஒப்புயர்வு இல்லாமல் விளங்குகின்றன. செழித்து வளர்ந்த நெற்கள், தூய வெண்மையான பதடிகள் இல்லாத உண்மைக் கருவினை உடையதாய்க் கலப்பில்லாத மெய்ம்மை சேர் புகழைப் போற்றுகின்ற தொண்டர்களின் உள்ளம் போல வளம் நிறைந்தன. கருக்கொண்ட நெற்கள் கருமுற்றிப் புதிய பச்சை நிறங்கொண்டு, ஈசனையே நினைந்து நினைந்து உருகுகின்ற அன்பர்களின் உடல் வேறுபட்டுப் புதிய நிறம் பெறுதல் போலத் தோன்றுகின்றன. பின் கரு முதிர்ந்த நெற்கள் கருவில் தங்கிப் பிணைந்திருந்த சுருள் களை விரித்து அன்பர்களின் சிந்தையில் நிறைந்திருந்த மெய் - அறிவு - விரிந்து வெளிப்படுதல் போல வெளிப்பட்டன. வெளிப்பட்ட கதிர்கள் ஈசனையே எண்ணுகின்ற அன்பர்களின் சிந்தை தன்முனைப்பொழிந்து, சிவத்தன்மையுடன் கலந்து முன்னைய நிலைமை மாறி அசைதல் போல அசைந்தன.

*சாலிநீள் வயலின் ஓங்கி தன்னிகர் இன்றி மிக்கு*
*வாலிதாம் வெண்மை உண்மைக் கருவினாம் வளத்த வாகிச்*
*சூல்முதிர் பசலை கொண்டு சுருள்விரித்து அரனுக் கன்பர்*
*ஆலின சிந்தை போல அலர்ந்தன கதிர்கள் எல்லாம்*

என வரும் சேக்கிழார் செய்யுளைப் படித்துப் பாருங்கள். நெல் வயலிலே வளர்ந்து, செழித்து, கருக்கொண்டு, நிறம் மாறிக் கதிர் ஈன்று விரிதலாகிய செயல்கள் ஒவ்வொன்றையும் ஈசனின் அன்பர் செயல்களுடன் ஒப்பிட்டுக் கூறுகின்றார். திருத்தக்க தேவர் கருவில் இருந்து வெளிப்பட்டு நிற்கும் அரிசிகட்டாத இளங் கதிர்களை அறிவில்லாதவர்கள் செல்வச் செருக்கால் இறுமாந்து நிற்கும் நிலைக்கு ஒப்பாகக் கூறினார். சேக்கிழார் உலகப் பற்றாகிய சுருளில் நின்று நீங்கி வெளிப்படுகின்ற அன்பர்களின் மெய்யறிவுக்கு ஒப்பாக உரைக்கின்றார். சேக்கிழாரின் உள்ளம்

நெற்களின் ஒவ்வொரு வளர்ச்சி நிலையையும் சிவனடியாரின் அன்பு நிலைகளாகவே காண்கின்றது.

இனிக் கருவில் நின்று வெளிப்பட்ட நெற்கதிர்களின் விளைவு பற்றிய செயல்களைச் சேக்கிழார் மெய்யடியாரின் செயல்களுடன் ஒப்பிட்டுக் கூறுகின்றார். வெளித்தோன்றிய கதிர்கள் அரிசிகட்டிய தன்மையால், தலைசாய்ந்து ஒன்றின் முன் ஒன்றாக வரிசையில் நிற்கின்றன. இச்செயல் சேக்கிழார் உள்ளத்தில் சிவனடியார்களின் ஓர் அரிய செயலை நினைவூட்டியது. சிவனடியார்கள் ஒருவரை ஒருவர் காணும்பொழுதெல்லாம் தலைவணங்கி இறைஞ்சி நிற்பார்கள். கருமுற்றிய நெற்கதிர்கள் ஒன்றின் முன் ஒன்று தலைசாய்ந்து வளைந்து நின்ற செயல் சிவனடியார்கள் ஒருவரையொருவர் தலைவணங்கி நிற்பதுபோலத் தோன்றிச் சேக்கிழாரின் சிந்தையை உருக்குகின்றது.

*"பத்தியின் பால ராகிப் பரமனுக்கு ஆளாம் அன்பர்*
*தத்தமில் கூடி னார்கள் தலையினால் வணங்கு மாபோல்*
*மொய்த்தநீள் பந்தி யின்பால் முதிர்தலை வணங்கி"*

எனச் சேக்கிழார் மிக ஆராமையுடன் பாடுகின்றார். அன்பு முதிர முதிரப் பணிவு கூடுகின்றது. "வணங்கத் தலைவைத்து" என மாணிக்கவாசகர் பாடி மகிழ்கின்றார்.

இனி அரிசிகட்டித் தலைசாய்ந்த கதிர்கள் அரிசிமுற்றி விளைந்து பயன்படும் செயலையும் சேக்கிழார் சிந்திக்கின்றார். அன்பு முதிர்வினால் தொண்டர்கள் உள்ளத்தில் நின்ற ஆணவம் வலிகெட்டுப்போகச் சிவனருள் இன்பம் விளையும். அன்பர்கள் சிவயோகம் நுகர்ந்து மகிழும் தன்மையே விளைவின் பயனாகும்.

*"மற்றவ் வித்தகர் தன்மை போல*
*விளைந்தன சாலியெல்லாம்"*

எனச் சேக்கிழார் பாராட்டுகின்றார். நெல்விளைவினால் வறுமைப் பிணி நீங்கி மகிழ்தல்போல, ஈசனிடத்தில் வைத்த அன்பின் விளைவினால் ஆணவப் பிணி நீங்கிப் பேரின்பப் பேறு கூடும் என்பதாம்.

## வயல் மாதர்கள்

**வ**யலில் உள்ள நெற்பயிர் வளர்ந்து முதல் இலை, சுருள் விரிந்து விட்டது. கட்டிலே நிறைந்து நின்ற புது நீர், முதல் இலை விரிந்த நெற்பயிரைத் தாலாட்டி வளர்க்கின்றது. வயற் பரப்பின் தலைவர்களாகிய உழவர்கள் நெல்லின் வளர்ச்சியைக் கண்டு உள்ளம் மலர்ந்தார்கள். நெற்பயிர்களின் சார்விலே நின்று அவற்றின் நலத்தைக் கெடுக்கும் புற்களைப் பிடுங்கும் பதத்தை உணர்ந்த உழவர்கள் வயல்மாதரை அழைத்தார்கள். வயல்மாதர்கள் மகிழ்ச்சியுடன் நெல்லின் வளர்ச்சிக்குத் தடையாய் உள்ள புல் முதலான களைகளைக் களையத் தொடங்கினார்கள். வயல்களிலே உள்ள புதுநீரில் உலாவித் திரிந்து புதிய முத்துக்களை ஈன்ற சங்குகள், வயல் மாதரின் கால்களில் தட்டுப்படுதலால் அவர்கள் கால் தவறித் தள்ளாடுவார்கள். வண்டுகள் தங்கித் தேன் உண்டு ஆடுகின்ற கூந்தல் அசையும் வண்ணம் இளநடை நடந்து அயலில் உள்ள வரம்புகளிலே சேர்வார்கள்.

*மண்டுபுனல் பரந்தவயல் வளர்முதலின் சுருள்விரியக்*
*கண்டுழவர் பதங்காட்டக் களைகளையும் கடைசியர்கள்*
*தண்தரளம் சொரிபணிலம் இடறிஇடை தளர்ந்தசைவார்*
*வண்டலையும் குழல்அலைய மடநடையின் வரம்பணைவார்*

எனச் சேக்கிழார் களைபிடுங்கும் கடைசியர்களை எம் கண்முன் கொண்டு வந்து நிறுத்துகின்றார். முத்தீன்ற சங்கு களால் தங்கள் கால்கள் இடறுண்டு, தளர்ந்த நடையுடன் வரம்பை அணைந்த வயல்மாதர்கள் என்னும் கடைசியர்களின் மென்மையையும் எழிலையும் தொண்டர் சீர்பரவும் சேக்கிழாரால்

மறக்கமுடியவில்லை. புதுநீர் நிறைந்த வயற்பரப்பில், இளந்தளிர் வீசி எழுச்சி கொண்ட நெற்பயிர்களின் நடுவே, இளமையும் எழிலும் நிரம்பிய வயல்மாதர்கள் நின்று களை களைகின்ற காட்சியைக் கவிஞரால் எப்படி மறக்க முடியும்? அவர் வயல்மாதர் களின் செயல்களைப் பார்த்தபடியே வரம்புத் தலையில் நிற்கின்றார்.

வயல்மாதர்கள் வயற் பரப்பிலே மலர்ந்துள்ள செங்குவளை மலர்களைப் பறித்துத் தமது கூந்தலில் அணிந்துகொள்வார்கள். அவர்கள் நீண்ட கருங்கூந்தலில் அணிந்துள்ள மலர்களிலே புதிய தேன் நிரம்பி இருந்தது. வயற் பூக்களில் இருந்த வண்டுகள் கருங் கூந்தலிலே உள்ள தேனை உண்ணுதற்காக மொய்த்தன. வயல்மாதர்கள் தமது செங்காந்தள் மலர் போன்ற கைகளால் கூந்தலில் மொய்த்த வண்டுகளை வெருட்டினார்கள். அவர்களின் கூந்தலிலே மொய்க்க இடமில்லாமல் பறந்து சென்ற வண்டுகள், அவர்கள் தலையின் மேலே எடுத்து வண்டுகளைக் கலைத்த கைகளைச் செங்காந்தள் மலரென எண்ணித் திரும்பி வந்து விட்டன. கூந்தலில் மொய்த்த வண்டுகளைக் கலைக்க எடுத்த முயற்சியால், தமது கைக் காந்தளிலும் வண்டுகள் மொய்த்தலைக் கண்டு கலங்கினர்கள். களைகளைக் களைந்த களைப்பினால் திங்கள்போல் ஒளிவீசுகின்ற அவர்களின் நெற்றியிலே வியர்வை அரும்பியது. களை களைந்த களைப்புத் தீரப் புதிய செந்தாமரை மலர்களில் பொங்கி வழிந்த நறுந்தேனை வாய்வைத்துப் பருகினார்கள். நறுந்தேனை உண்ட எழுச்சியால் களைப்பு நீங்கினவராய் முல்லை மொட்டுப் போன்ற பற்கள் தோன்ற சிறுநகை புரிந்தார்கள்.

*செங்குவளை பறித்தணிவார் கருங்குழல்மேற் சிறைவண்டை*
*அங்கைமலர் களைக்கொடுகைத் தயல்வண்டும் வரஅழைப்பார்*
*திங்கள்நுதல் வெயர்பரும்பச் சிறு முறுவல் தளவரும்பப்*
*பொங்குமலர்க் கமலத்தின் புதுமதுவாய் மடுத்தயர்வார்*

எனச் சேக்கிழார் பாடி மகிழ்கின்றார்.

தெய்வச் சேக்கிழார் சைவச் செஞ்சாலி வளர்ப்பதுடன், செஞ்சாலி வயலில் நின்று களை களைக்கின்ற வயல்மாதரின் வனப்பையும் பாடி வளர்க்கின்றார். வயல்மாதர்கள் செங்குவளை பறித்தணிவதைப் பார்க்கின்றார். கூந்தலில் மொய்த்த வண்டு களைக் கலைத்த செயலால் சென்ற வண்டுகள் மீண்டு வந்து கைக் காந்தளில் மொய்த்த செயலைக் காண்கின்றார். வயல் மாதரின் நிலாப் போன்ற நெற்றியிலே வியர்வை அரும்புவதைக் கண்டு வருந்துகின்றார். அவர்கள் பூத்த புதிய தாமரை மலர்களில் நிறைந்த தேனை அருந்திக் களை தீர்வதைக் கண்டு ஆவி தளிர்க்கின்றார். தேனுண்டு களை தெளிந்த வயல்மாதர்கள் சிந்தை மகிழ்ந்து முல்லை மொட்டுப் போன்ற பற்கள் தோன்றச் சிறு முறுவல் பூப்பதைக் கண்டு செம்மாப்படைகின்றார். தெய்வம் மணக்கச் செய்யுள் பாடிய சேக்கிழார் வயல்மாதரின் எழிலும் செயலும் மணந்து இன்பம் ஊட்டும் செய்யுளையும் பாடி எம்மை மகிழ்விக்கின்றார்.

## சிறுமகளிர் விளையாட்டு

வயல்மாதர்கள் வயற்பரப்பெல்லாம் பரந்து நின்று களை களைகின்றார்கள். அவர்களின் மொழி அமுதம் போன்றது. அவர்கள் களை களைகின்ற வயற்பரப்பில் உள்ள நெற்பயிர்கள் கரும்பைப் போலச் செழித்து வளர்ந்திருக்கின்றன. கரும்புகள் கமுகைப் போலப் பருத்து வளர்ந்திருக்கின்றன. பார்க்கின்றவர்கள் வேறுபாடு தெரியாமல் கரும்பை நெல் என்றும், நெல்லைக் கரும்பென்றும், கமுகைக் கரும்பென்றும் மயக்கம் அடைகின்றார்கள். வயல்களில் மலர்ந்துள்ள நீல மலரின் துகள் வண்டுகள் குடைதலினால் பரந்து, பகற்பொழுதிலேயே இரவுத் தன்மையைக் காட்டுகின்றது.

*கரும்பல்ல நெல்லென்னக் கமுகல்லக் கரும்பென்னச்*
*சுரும்பல்லி குடைநீலத் துகளல்ல பகலெல்லாம்*
*அரும்பல்ல முலையென்ன அமுதல்ல மொழியென்ன*
*வரும்பல்லா யிரம்கடைசி மடந்தையர்கள் வயலெல்லாம்*

எனச் சேக்கிழார் பாடுகின்றார். பல்லாயிரம் வயல்மாதர்கள் வயலெல்லாம் பரந்து நின்று களை களைகின்ற காட்சியைச் சேக்கிழார் மிக ஆர்வத்துடன் பாடுகின்றார். நெற்பயிரின் நிறைந்த செழிப்பையும் பச்சைப் பசேல் என்று தோன்றும் நெல்வயற்பரப் பெல்லாம் நிறைந்துலாவுகின்ற வயல்மாதரின் வனப்பையும், அப்படியே சேக்கிழார் படம் பிடித்துக் காட்டுகின்றார். பாட்டைப் படிக்கும்பொழுது எழுகின்ற ஓசை, வயற்பரப்பில் வளர்ந்து நிற்கும் நெற்பயிரையும் அங்கு நின்று களை களைகின்ற வயல்மாதரையும் எமது கண்முன் கொண்டு வந்து நிறுத்துகின்றன.

*“வரும்பல்லா யிரம்கடைசி*
*மடந்தையர்கள் வயலெல்லாம்”*

எனச் சேக்கிழார் மிக எழுச்சியுடன் கூறுகின்றார். அவர்களின் அழகை அள்ளி அள்ளிப் பருகுகின்றார்.

*''அரும்பல்ல முலையென்ன*
*அமுதல்ல மொழியென்ன*
*வரும்பல்லா யிரம் கடைசி*
*மடந்தையர்கள் வயலெல்லாம்''*

எனச் சேக்கிழார் கூறும் மொழிகளை இன்னொரு முறை படித்துப்பாருங்கள். சேக்கிழார் எமக்கு முன்நின்று கூறுவது போன்ற உணர்ச்சியை ஊட்டுகின்றது.

இங்ஙனம் வயல்மாதர்களையே நோக்கி நோக்கி மகிழ்ந்த சேக்கிழார் வரம்பை நோக்கினார். அவரின் உள்ளம் உவகையால் நிரம்பியது. வயல்மாதர்களின் சிறு பெண்பிள்ளைகள், வரம்பின் மேல் இருந்து விளையாடுகின்றார்கள். சேக்கிழார் அவர்களின் அருகிலே சென்று விளையாட்டுப் பொருள்களைப் பார்த்தார். வயல்களின் பக்கத்திலே உள்ள தடாகத்தின் கரையிலே கிடந்த ஊன்கழிந்த நந்து ஓடுகளைச் சோறாக்கும் பானைகளாக வைத்தார்கள். பூக்களிலே இருந்து வழிந்த தேனை உலை நீராக ஊற்றினார்கள். தேனை உலை நீராக ஊற்றிய நந்து ஓடுகளாகிய பானைகளைப் பக்கத்திலே கிடந்த ஆமை ஓடுகளால் ஆக்கிய அடுப்பின்மேல் ஏற்றினார்கள். ஏற்றிய உலையில், வெண்மையான சங்குகள் ஈன்ற முத்துக்களை அள்ளி அரிசியாக இட்டார்கள். சிவந்த ஆம்பல் மலர்களைப் பிடுங்கி நெருப்பாக வைத்து அடுப்பை ஊதினார்கள்.

*கயல்பாய்பைந் தடநந்தூன் கழிந்தபெரும் கருங்குழிசி*
*வியல்வாய் வெள்வளைத்தரளம் மலர்வேரி உலைப்பெய்தங்கு*
*அயலாமை அடுப்பேற்றி அரக்காம்பல் நெருப்பூதும்*
*வயல்மாதர் சிறுமகளிர் விளையாட்டு வரம்பெல்லாம்*

எனச் சேக்கிழார் சொல்கின்றார். வயல்மாதர்களின் புதல்விமா ருடன் சேர்ந்து சேக்கிழாரும் வரம்பில் இருந்து விளை

யாடுகின்றார். வயலின் பக்கத்திலே உள்ள பொருள்களில், தங்களுடைய விளையாட்டுக்குப் பொருத்தமான பொருள்களை அவர்கள் தெரிந்தெடுத்துக் கொள்கின்றார்கள். சேக்கிழாரும் வயல்மாதரின் சிறு புதல்விமாருடன் சேர்ந்து சிறு சோறு ஆக்குகின்றார். அவர் ஊன்கழிந்த நந்து ஓடுகளையும் ஆமை ஓடுகளையும் அருவருப்பில்லாமல் அளைந்து விளையாடுகின்றார். வயல்மாதரின் அழகிலே மயங்கிய சேக்கிழார் அவர்களின் சிறு மகளிர் விளையாட்டைக் கண்டவுடன் தம் நிலையையும் மறந்து விட்டார். அச்சிறுமகளிர். நந்தோடுகளைப் பானையாக எடுத்த பொருத்தத்தைக் கண்டவுடன் சேக்கிழாரின் புலமை உள்ளம் மகிழ்ந்தது. அடுத்து, ஆமை ஓடுகளை அடுப்பாக அமைப்பதைக் கண்டவுடன் அளவில்லாத வியப்படைந்தார். இனி உலைக்கு வயலிலே உள்ள தண்ணீரை அள்ளுவார்கள் என்று எதிர்பார்த்தார். அவருடைய எண்ணத்திற்கு மாறாகப் பூக்களிலே உள்ள தேனை உலை நீராக ஊற்றினார்கள். அரிசிக்கு என்ன செய்வார்கள் எனச் சேக்கிழார் சிந்தித்தார். அச்சிறு பெண்பிள்ளைகள், வெண்மை யான சங்கீன்ற முத்துக்களை அள்ளி அரிசியாக உலையில் இட்டார்கள். இவ்வளவு செயல்களையும் நோக்கிய சேக்கிழார், நெருப்புமூட்ட என்ன செய்வார்கள் என்பதை எண்ணிப் பார்த்தார். அவரின் புலமை உள்ளத்திற்கு ஒன்றும் புலனாகவில்லை.

அக்குழந்தைகள் ஓடி ஓடிச் செவ்வாம்பல் மலரைப் பிடுங்கினார்கள். அப்பொழுதும் சேக்கிழாருக்கு ஒன்றும் விளங்க வில்லை. அவர்கள் நெருப்புப் போலச் சிவந்த செவ்வாம்பல் மலரை அடுப்புக்குள் வைத்து ஊதினார்கள். ஊதின பின்புதான் சேக்கிழாருக்கு உண்மை புலனாகியது. பிள்ளைகள், உலை ஏற்றினவுடனே நெருப்பு மூட்டாமல் உலையிலே நீரும் ஊற்றி அரிசியும் இட்ட பின்புதான் நெருப்பு மூட்டினார்கள். சேக்கிழாரும் நெருப்பாக என்ன பொருளை வைப்பார்கள் என்று அறியும் வண்ணம் நீண்ட நேரம் நின்று விட்டார். அரக்காம்பலை நெருப்பாக வைத்து ஊதிய செயலைக் கண்டவுடனே பாட்டைப் பாடினார். பிள்ளைகள் விளையாட்டுப் பொருள்களைத் தேடித் தேடி

எடுத்து விளையாட்டைத் தொடங்கின முறைப்படியே சேக்கிழார் தமது பாட்டிலே கூறியிருக்கின்றார். முதலில் நந்து ஓடுகளை எடுத்தார்கள். அதன்பின் சங்கீன்ற முத்துக்களை அள்ளினார்கள். தேனை உலைநீராக ஊற்றினார்கள். ஆமை ஓடுகளை அடுப்பாக அமைத்தார்கள். கடைசியாக அரக்காம்பலை நெருப்பென்று அடுப்புக்குள் வைத்து ஊதினார்கள். வழக்கப்படி பானையில் நீரை ஊற்றி அடுப்பிலே ஏற்றி நெருப்பை மூட்டி, அரிசியை உலையிலே இடவேண்டும். பிள்ளைகள் இந்த ஒழுங்கை மாற்றிச் செய்திருக்கின்றார்கள். சேக்கிழார் அவர்களின் செயல்களை அப்படியே பார்த்து, மாற்றஞ் செய்யாமல் எமக்குச் சொல்கின்றார்.

# உழவர்களின் உள்ளம்

வயல்மாதர்கள் களை பிடுங்குகின்ற வயற்பரப்பில் உழவர்களும் நின்று களை பிடுங்குகின்றார்கள். அழகு நிரம்பிய வயல்மாதர்களின் பக்கத்திலே நின்று களை பிடுங்குகின்ற உழவர்களைத் திருத்தக்கதேவர் நோக்குகின்றார். நெற்பயிரின் வளர்ச்சிக்குத் தடையாக நின்று வளர்கின்ற புற்களையும் பூக்களை யும் களைந்து வீச வேண்டியதே உழவர்களின் கடமையாகும். உழவர்கள் கருங்குவளை மலர்களைக் கண்டவுடன் களையாமல் உற்றுப் பார்க்கின்றார்கள். பக்கத்தில் நின்று களை பிடுங்குகின்ற வயல்மாதர்களின் கண்கள் போலக் கருங்குவளை மலர்கள் விளங்குவதை உணர்ந்தார்கள். உடனே கருங்குவளை மலர்களைப் பிடுங்காமல் விலகிச் சென்றார்கள். களை பிடுங்கவந்த உழவர்கள் கருங்குவளை மலர்களைப் பிடுங்காமல் விட்டுச் செல்வதைக் கண்ட திருத்தக்கதேவர் வியப்புடன் அவர்களின் செயலை நோக்கியபடியே வரம்புத் தலையில் நீண்ட நேரம் நின்றுவிட்டார். உழவர்கள் கருங்குவளையைப் பறிக்காமல் விட்ட பெருமிதத்துடன் வயல்மாதரின் வண்ண முகங்களைப் பார்த்தார்கள். வயலில் உள்ள தாமரை மலர் களையும் பார்த்தார்கள். வயல்மாதரின் வண்ணமுகங்கள்போல் வயற்பரப்பில் மலர்ந்துள்ள தாமரை மலர்கள் விளங்கின. தாமரை மலர்களைப் பார்த்தபடியே நின்ற உழவர்கள் தம்மை மறந்துவிட்டார்கள். வயல்மாதரின் கண்களையும் முகங்களையும் ஒத்து விளங்குகின்ற குவளை மலர்களையும் தாமரை மலர்களை யும் கண்டவுடன் காதல் பாட்டுப் பாடத் தொடங்கிவிட்டார்கள். களைபிடுங்கும் தொழிலை மறந்து உழவர்கள் பாடிய காதற் பாட்டு வயற்பரப்பெல்லாம் ஒலித்தது.

*கண்ணெனக் குவளையும் கட்டல் ஓம்பினார்*
*வண்ணவாண் முகமென மரையின் உள்புகார்*
*பண்ணெழுத் தியல்படப் பரப்பி யிட்டனர்*
*தண்வயல் உழவர்தம் தன்மை இன்னதே*

என்று திருத்தக்கதேவர் சொல்கின்றார். தேவரின் உள்ளம் உழவரின் செயல்களைக் கண்டு நாணம் அடைந்து விட்டது. வயல் மாதர்களுடன் வயலில் நின்று களை பிடுங்குகின்ற உழவர்களின் தன்மையை எமக்குக் கூறிய அளவில் திருத்தக்கதேவர் அமைந்து விட்டார்.

களை பிடுங்க வந்த உழவர்கள் வயல்மாதர்களைக் கண்டு மயங்கிக் களை பிடுங்காமல் காதற் கவி பாடுகின்ற செயலைக் கம்பர் மிகவும் வெறுக்கின்றார். கடமையை மறந்து காதல் கொள்கின்ற உழவர்களைக் கம்பர் சிறியவர் என்று கூறி இகழ்கின்றார்.

*பண்கள்வாய் மிழற்றும் இன்சொற் கடைசியர் பரந்து நீண்ட*
*கண்கைகால் முகம்வாய் ஒக்கும் களையலாற் களையிலாமை*
*உண்கள்வார் கடைவாய் மள்ளர் களைகிலா துலாவி நிற்பர்*
*பெண்கள்பால் வைத்த நேயம் பிழைப்பரோ சிறியோர் பெற்றால்*

என வரும் கம்பரின் பாட்டைப் படியுங்கள். இனிய பண்ணைப் போலப் பேசுகின்ற வயல்மாதரின் மொழிகளைக் கேட்டவுடனே உழவர்கள் மயங்கி விட்டார்கள் என்பதைக் கம்பர் காட்டுகின்றார். மொழியால் மயங்கிய உழவர்கள் வயல்மாதரின் விழிகளைப் பார்த்தார்கள். பரந்து காதளவும் நீண்ட விழிகளைக் கண்டவுடனே உழவர்கள் உணர்வை இழந்துவிட்டார்கள். வயல்மாதரின் முகங் களும் கைகளும் கால்களும் தாமரை மலர்கள் போல விளங்கு கின்றன. அவர்களின் கண்கள் குவளை மலர்போல விளங்கு கின்றன. குமுதமலர் வாயைப்போல விளங்குகின்றன. களை பிடுங்கத் தொடங்கிய உழவர்கள் வயற்பரப்பெல்லாம் மலர்ந்துள்ள மலர்கள் வயல்மாதரின் உறுப்புகள் போல் விளங்குவதைக் கண்டு களை பிடுங்காமலே நின்றுவிட்டார்கள்.

சடையப்ப வள்ளலாருடன் வயல் வளம் காணச் செல்கின்ற கம்பரின் உள்ளத்திலே, காதலினால் கடமையை மறந்து நிற்கின்ற உழவரின் செயல் மிக ஆழமாகப் பதிந்துவிட்டது. நெல்லின் ஆக்கம் கருதிப் பிடுங்க வேண்டிய களைகளைப் பிடுங்காமல் வயல்மாதரின் உறுப்புநலத்தைப் பாராட்டி நிற்கின்றார்களே இந்த உழவர்கள், இவர்களின் அறிவு ஏன் இவ்வளவு மாறுபட்டதோ, என்று எண்ணிய கம்பர் உழவர்களின் முகத்தை உற்று நோக்கினார். உழவர்களின் வாயிலே இருந்து உண்ட கள் வடிந்து ஓடுகின்றதைக் கண்டார். காதல் வெறியுடன் கள் வெறியுங்கொண்ட உழவர்கள் கடமையை மறந்துவிட்டார்கள் என்பதைத் தெளிந்தார். அறிவைப் பறிகொடுத்த காதலைக் கண்ட கம்பர் உழவர்களின் இழிநிலையை எண்ணினார். கள்ளும் காதலும் வேண்டியவைகள்தான். அவற்றை அளவுக்கு மிஞ்சி ஆதரிப்பதால் அறிவு மயங்கிவிடக்கூடாது. கடமையை மறக்கச்செய்யும் அளவுக்குக் கள்ளையும் காதலையும் கொண்ட உழவர்களைத் திருத்தி ஊக்கம் அளிக்கக் கம்பர் பாடுபட்டார். முடியவில்லை.

*"பெண்கள்பால் வைத்த நேயம்*
*பிழைப்பரோ சிறியோர் பெற்றால்"*

எனத் தாம் கண்ட உண்மையை ஒளியாமல் எமக்கு உணர்த்துகின்றார். அறிவில் குறைந்த சிறியவர்கள், பெண்கள் மேல் வைத்த காதலால் தாம் ஆற்றவேண்டிய கடமையையும் மறந்து அல்லற்படுவார்கள் என்பதே கம்பரின் கருத்தாகும். காதல் வெறியும் கள் வெறியும் கொண்ட உழவர்கள் கடமையை மறந்து கம்பரிடத்தில் அகப்பட்டுக் கொண்டார்கள்.

# மகிழ்வும் வாழ்வும்

விளைந்த நெல்லை வைக்கோலின் வேறாக்கிப் பொன் மலை போலக் குவித்தார்கள். வயற்பரப்பெல்லாம் உழவர்களின் மகிழ்ச்சிக் குரல் கேட்டது. அரசனுக்குக் கொடுக்க வேண்டிய ஆறில் ஒரு பங்கு நெல்லையும் அளந்து கொடுத்தார்கள் மிகுதி நெல்லை வீட்டிற்கு எடுத்துச் சென்று பலவகை அறங்களையும் ஆற்றினார்கள். தெய்வத்தைப் போற்றிக் காணிக்கை செலுத்தி னார்கள். தம் முன்னோர்களாகிய குடி முதல்வர்களையும் தாய் தந்தை குரு முதலாயினோரையும் நினைத்து நன்றிக் கடன் செலுத்தினார்கள். தம்மைச் சூழ்ந்துள்ள சுற்றத்தாரின் நிலை அறிந்து அவர்களுக்கும் அன்புடனே நெல்லில் ஒரு பகுதியைக் கூறிட்டுக் கொடுத்தார்கள். தமது வீட்டிற்கு வந்த விருந்தினரை வரவேற்று இன்முகங்காட்டி இன்சொற்கூறி விருந்தளித்தார்கள்.

*அரசுகொள் கடன்கள் ஆற்றி மிகுதிகொண்டு அறங்கள் பேணிப்*
*பரவரும் கடவுட் போற்றிக் குரவரும் விருந்தும் பண்பின்*
*விரவிய கிளையும் தாங்கி விளங்கிய குடிகள் ஓங்கி*
*வரைபுரை மாடம்நீடி மலர்ந்துள பதிகள் எங்கும்*

எனச் சேக்கிழார் கூறுகின்றார்.

விளைந்த நெல்லை வீட்டிற்கு எடுத்துச் சென்ற உழவருடன் சேக்கிழாரும் சென்று அவர்களின் செயல்களை மிக ஆராமை யோடு நோக்குகின்றார். அமைச்சரானபடியால், அரசனுக்கு அளிக்க வேண்டிய ஆறிலொரு பங்கு நெல்லையும் உழவர்கள் முதற்கடமையாக எண்ணி ஆர்வத்தோடு அளந்தளிப்பதைக் கண்டு சேக்கிழார் இன்பம் அடைகின்றார். செங்கோல் தவறாத

மன்னனின்மேல் மக்களுக்குள்ள மதிப்பை, அவர்கள் மனமுவந்து அளிக்கின்ற வரிக்கொடையால் அறியலாம். மக்களின் வருவாயைக் கருதாமல் வருத்தி வரி வேண்டுகின்ற கொடுங்கோல் மன்னனை ஒருபோதும் மக்கள் விரும்பார்கள். இந்த உண்மையை மனத்தில் எண்ணிய சேக்கிழார், “அரசுகொள் கடன்கள் ஆற்றி” என உழவர்கள் மகிழ்ச்சியோடு வரிகொடுத்த செயலை முதலிலே வைத்துக் கூறுகின்றார். மகிழ்ந்து வரிகொடுத்த உழவர்கள் மிகுதி நெல்லைக்கொண்டு பலவகை அறங்களை ஆற்றி வாழ்வதைக் கண்டதும் சேக்கிழாரின் உள்ளம் தளிர்த்தது. செங்கோல் திறம்பாத அரசின் ஆட்சியும், அந்த ஆட்சி நிழலில் நின்று அறத்தைப் பாதுகாத்து வாழ்கின்ற குடிகளின் மகிழ்வும் நிறைந்த நாட்டின் சிறப்பைச் சேக்கிழார் மிகுந்த எழுச்சியுடன் எமக்குக் கூறுகின்றார்.

*“விளங்கிய குடிகள் ஓங்கி வரைபுரை மாடம்நீடி*
*மலர்ந்துள பதிகள் எங்கும்”*

அறத்தைப் போற்றி வாழ்கின்ற மக்கள் வீற்றிருக்கின்ற மேலடுக்கு வீடுகள் மலைகளைப் போல விளங்குகின்றன. வயல் வளத்தினால் நிரம்பிய உழவர்களின் வாழ்க்கை வளத்தைப் பெருமிதத்துடன் வேளாள குலத் தலைவராகிய சேக்கிழார் எடுத்து விளக்குகின்றார். வயல் வளத்தால் வறுமையைப் போக்கி, உறவினரையும் விருந்தினரையும் பாதுகாத்து வாழ்கின்ற உழவர்களின் வாழ்வுதான் ஒரு நாட்டின் சிறப்புக்குக் காரணமாகும்.

*மங்கல வினைகள் எங்கும் மணஞ்செய் கம்பலைகள் எங்கும்*
*பங்கய வதனம் எங்கும் பண்களின் மழலை எங்கும்*
*பொங்கொளிக் கலன்கள் எங்கும் புதுமலர்ப் பந்தர் எங்கும்*
*செங்கயல் பழனம் எங்கும் திருமகள் உறையுள் எங்கும்*

எனச் சேக்கிழார் வயல் வளத்தினால் நிறைந்த மக்களின் வாழ்க்கை வளத்தைப் பாடி மகிழ்கின்றார். உழவர்கள் உறைகின்ற வீடுகளில் எல்லாம் மங்கலமான செயல்கள் நிகழ்கின்றன. மங்கலச் செயல் களில் சிறந்ததாகிய திருமண விழாக்கள் எங்கும் ஆரவாரத்துடன் நிகழ்கின்றன. மங்கலச் செயல்களிலும் திருமண விழாக்களிலும்

கலந்து களிக்கின்ற பெண்களின் முகங்கள் செந்தாமரை மலர்போல விளங்குகின்றன. திருமண விழாவிற் கலந்து மகிழ்கின்ற பெண்களின் இனிமையான மொழிகள் பண்ணின் ஓசைபோல இன்பம் ஊட்டுகின்றன. ஆண்களும் பெண்களும் அணிகலங்களுடன் விழாக்களில் உலாவித் திரிகின்றார்கள். ஒவ்வொரு வீட்டிலும் பலவகையான மங்கலச் செயல்கள் நிகழ்ந்துகொண்டே இருப்பதால் புது மலர்ப்பந்தர்கள் எங்கும் பொலிந்து விளங்குகின்றன. இந்த மகிழ்ச்சி வாழ்வுக்கெல்லாம் காரணமாகிய நெல் வயல்கள் சிவந்த சேல்மீன்கள் புரளுகின்ற செழிப்புடன் உழவர்களின் மேலடுக்கு வீடுகளின் மருங்கே சூழ்ந்துள்ளன. செல்வத்தின் தெய்வமாகிய திருமகள் உழவர் களின் இல்லங்களிலே நிலையாக வாழ்கின்றாள். சேக்கிழார் உள்ளம் உழவர்களின் செல்வ வாழ்வை எண்ணி எண்ணி என்று மில்லா இன்பம் அடைகின்றது.

இங்ஙனம் செல்வச் சிறப்புடன் வாழ்கின்ற உழவர்கள், விருந்தினரை வரவேற்று அறுசுவை உண்டி அளித்து மகிழ்கின்ற செயலில் மிகவும் விருப்பம் நிறைந்தவர்கள். உழவர்களின் விருந்தோம்பி மகிழும் செயலைப் பரஞ்சோதி முனிவர் பாடுகின்றார்.

*நறைபடு களிதேன் பெய்த*
*பாலொடு நறுநெய் வெள்ளம்*
*நிறைபடு செம்பொன் வண்ணப்*
*புழுக்கலால் நிமிர்ந்த சோறு*
*குறைவற வுண்டு வேண்டும்*
*பொருள்களும் கொண்மின் என்ன*
*மறைமுதல் அடியார் தம்மை*
*வழிமறித்து அருத்துவார்கள்*

பாட்டைப் படிக்கும்போதே வாய் ஊறுகின்றது. நல்ல பழச்சாற்றுடன் தேனைச் சேர்த்து, அவற்றுடன் பாலையும் நெய்யையுங் கலந்து பதமாக ஆக்கிய பருப்புச் சோற்றை

உண்ணுங்கள், உண்ணுங்கள் என்று ஊட்டுகின்றார்கள். வழி மறித்து வற்புறுத்தி ஊட்டுகின்றார்கள். உழவர்களின் அன்பும், அவர்கள் ஆக்கிய பருப்புச் சோற்றின் சுவையும் சேர்ந்து பரஞ்சோதி முனிவரின் உள்ளத்தை அள்ளிவிட்டன. அன்பும் அறிவும் அருள்வாழ்வும் நிரம்பிய அடியார்களை வரவேற்று விருந்தளிப்பதால் அடைகின்ற இன்பத்தைப் போலச் சிறந்த இன்பம் வேறென்ன இருக்கின்றது. விருந்தினரை நன்றாக உண்பித்து, அவர்களுக்கு வேண்டிய பொருளும் கொடுத்து வழிவிடுகின்றார்கள்.

*"குறைவற உண்டு வேண்டும்*
*பொருள்களும் கொண்மின் என்ன*
*மறைமுதல் அடியார் தம்மை*
*வழிமறித்து அருத்துவார்கள்."*

# பொருளும் போகமும் – தேவரின் இன்பம்

வயலிலே விளைந்த நெல்லின் நிறைவினால் நாட்டில் வாழும் மக்கள் பொருளும் போகமும் பெற்றுப் பொலிந்தார்கள். நெல்லின் நிறைவால் அவர்களின் உள்ளம் நிறைந்தது. நில வளமும், நீர்வளமும் அவற்றால் நிரம்பிய நெல்வளமும் போலவே பால்வளமும் பெருகிப் பயன் சுரந்தது. எருமைகள் வயலில் உள்ள பொய்கைகளிலே மலர்ந்த பூக்களை மேய்ந்து மகிழ்ந்தன. அவற்றின் மடியில் பால் சுரந்தது. சுரந்த பால் வெள்ளம் போலப் பாய்ந்து நிலத்தை நனைக்க நனைக்கக் கன்றை நினைத்து உள்ளம் கசிந்த எருமைகள் பெரிய மேலடுக்கு வீடுகளை நோக்கிச் சென்றன. சென்ற எருமைகள், கன்றுகள் பருகிக் களிக்கும் பாலைச் சுரந்தூட்டி, மிகுதிப் பாலால் மங்கையர் கலங்களை நிறைத்து நின்றன.

*மன்றனாறு இலஞ்சிமேய்ந்து மாமுலை சுரந்தபால்*
*நின்றதாரை யால்நிலம் நனைப்பஏகி நீண்மனைக்*
*கன்றருத்தி மங்கையர் கலம்நிறை பொழிதர*
*நின்றமேதி யாற்பொலிந்த நீரமாட மாலையே*

என்று திருத்தக்கதேவர் பாடுகின்றார். தேவரின் உள்ளத்திலே அறத்தைத் தழுவிப் பாலைக் கறக்கின்ற பெருங்குடிப் பெண்களின் செயல் மிகவும் அழுத்தமாகப் பதிந்துவிட்டது. கன்றுகளுக்குப் பால் விடாமல் கறந்து வருத்துகின்ற கொடுமையைத் தேவரால் காண முடியவில்லை. பால் மடியிலே சுரந்து பாயப்பாய ஆவலுடன் கன்றுகளை நினைந்து வந்த எருமைகள், கன்றுகளின் பசி போகும் படி பாலை ஊட்டி மகிழ்கின்றன. மகிழ்ந்த பின், தம்மை ஆதரித்து அன்புடன் பேணும் பெருங்குடிப் பெண்கள் ஏந்திய கலங்கள்

நிறையப் பாலைப் பொழிந்து கொடுக்கின்ற எருமைகளின் நன்றி உணர்ச்சியைத் தேவரால் மறக்க முடியவில்லை. கன்றுகளும் பருகி, மங்கையரின் கலமும் நிறையும் பால்வளத்தை எண்ணி எண்ணித் தேவர் இன்பம் அடைகின்றார்.

*"கன்றருத்தி மங்கையர் கலம்நிறை பொழிதர*
*நின்ற மேதியாற் பொலிந்த நீரமாட மாலையே"*

எனத் தேவர் பாடிய குரலைப் படித்துப் பாருங்கள். அன்பினால் பாலைப் பெற்று அகம் மலரும் பெண்களின் தாய்மைப் பண்புதான் நாட்டை வாழ்விக்கின்றது. கலம் நிறையப்பெற்ற பாலைக் காய்ச்சித் தம் சுற்றமும் விருந்தும் சூழ இருந்து பருகக் கொடுத்துக் களித்த பெண்களின் அன்புச் செயல் ஒன்றைப் புலவர் ஆர்வமுடன் கூறுகின்றார்.

மேல்மாடத்திலே பெண்கள் அருகிலே வைத்து ஊட்டுகின்ற புறாக்களும் பூவைகளும் கிளிகளும் கூட்டில் இருந்து வாழ்கின்றன. பெண்கள் மிகவும் அன்புடன் காய்ச்சி ஆறிய பாலைப் பருகும்படி கூட்டில் இருக்கும் பறவைகளின் முன் வைத்தார்கள். அப்பொழுது வெள்ளித் தகட்டைப்போன்ற வாயையும் மணிபோன்ற கால்களை யும் குன்றுமணி போன்ற கண்களையும் அகிற் புகையின் திரட்சி போன்ற நிறத்தினையும் கொண்ட புறாக்களும், அழகிய கிளிகளும் பாலைப் பருகுகின்றன. அவைகள் பாலைப் பருகுகின்ற பொழுது, பூவைகள் பாடுகின்றன.

*வெள்ளிப்போழ் விலங்கவைத் தனையவாய் மணித்தலைக்*
*கொள்பவளம் கோத்தனைய காலகுன்றிச் செங்கண்*
*ஒள்அகிற் புகைதிரண்ட தொக்கும்மா மணிப்புறாக்*
*கிள்ளையோடு பால்உணும் கேடில்பூவை பாடவே*

என்று பாடுகின்றார். இந்தப் பாட்டைப் படிக்கும்பொழுதே எமதுள்ளம் இன்பம் அடைகின்றது. புறாவும் கிளியும் பாலுண்ணப் பூவை பாடுகின்ற காட்சியை நேரே காண்பதுபோன்ற உணர்ச்சி எழுகின்றது. கிளியும் புறாவும் பூவையும் பெண்களின் தாய்மை அன்பினால் ஒன்றுபட்டு வாழ்கின்ற இன்ப வாழ்வைத் துறவுள்ளம் படைத்த திருத்தக்கதேவர் செயல் மறந்து வாழ்த்துகின்றார்.

*"மணிப்புறா கிள்ளையோடு பாலுணும்*
*கேடில்பூவை பாடவே"*

எனத் தேவர் பாடுகின்ற குரலில் எழுகின்ற ஆர்வத்தைப் பாருங்கள். சிறு குழந்தைகளைப் போலத் தேவர் சொல்லிச் சொல்லி மகிழ்கின்றார். கிளியும் புறாவும் பூவையும் உடன் இருந்து வாழவைத்த பெண்களின் அன்புள்ளத்தைக் கண்ட திருத்தக்க தேவர் தம்மையும் மறந்து அப்பெண்களின் செயல்களை நோக்கிய வண்ணமே நிற்கின்றார். ஏவற்பெண்கள் ஏந்திய பொன் வள்ளத்தில் நிரம்பியிருந்த நறவைப் பெண்கள் பருகினார்கள். தாங்கள் பருகிய இனிய நறவை இளமையான புன்னைமரங்களின் மேல் கொப்புளித்தார்கள். அன்பினால் பெண்கள் கொப்புளித்த நறவை உண்ட புன்னைகள் நன்றாக வளர்ந்து வண்டுகள் பாடும்படி புதிய பெரிய பூக்களைத் தாங்கி நின்றன.

*இறுநுசுப்பி னந்நலார் ஏந்துவள்ளத்து ஏந்திய*
*நறவங்கொப் புளித்தலின் நாகுபுன்னை பூத்தன*
*சிறகர்வண்டு செவ்வழி பாடமாடத் தூடெலாம்*
*இறைகொள் வானின்மீனென அரம்பை முலையின் இருந்தவே*

என்பது பாட்டு. பெண்கள் நறவைக் கொப்புளித்ததினால் நாகுபுன்னை செழித்து வளர்ந்து, வெள்ளிக் கூட்டங்கள்போல நெருக்கமாகப் பூத்தது. புன்னைப் பூக்கள் நறவை உண்ட எழுச்சியால் வாழைப்பூவின் முகைபோலப் பருத்திருந்தன. மேல் மாடத்தில் நின்று நறவினைக் குடித்த பெண்கள் தாங்கள் வளர்த்த புன்னை மரத்தின்மேல் கொண்ட அன்பினால் அதற்கும் நறவை ஊட்டுகின்றார்கள். நறவை உண்ட புன்னை பெண்களின் உள்ளம் மலர வளர்ந்து புதிய நல்ல பூக்களை மலர்ந்தன. மலர்ந்த பூக்களில் வழிந்த தேனை உண்டு மகிழ்ந்த வண்டுகள் செவ்வழி பாடுகின்றன. இங்ஙனம் பொருளும் போகமும் பெற்று ஈகையும் அன்பும் மலர வாழ் கின்ற உழவர்குலப் பெண்களின் இனிய பண்பைத் தேவர் எமக்குக் கூறி மகிழ்கின்றார்.

## பொருளும் போகமும் – கம்பரின் பெருமிதம்

வயலில் விளைந்த நெல்லின் வளத்தால் மக்கள் வாழ்வின் வளர்ச்சியைக் கண்ட கம்பர் பெருமிதக் குரலோடு பேசுகின்றார். உழவர்களின் இல்லந்தோறும் திருமண விழாக்கள் நிகழ்கின்றன. இசை விழாக்கள் நிகழ்கின்றன. அறிவும் ஒழுக்கமும் நிறைந்த சான்றோர்கள் பலர் உழவர்களின் உள்ளம் உவகையில் ஊறும் வண்ணம் அரிய பல சொற்பொழிவுகளை நிகழ்த்துகின்றார்கள். அறிவிற் சிறந்த பெரியோர்களின் சொற்பொழிவைக் கேட்ட உழவர்கள் ஆவி தளிர்த்தார்கள். செல்விருந்தை ஓம்பி வருவிருந்தை எதிர்பார்த்திருக்கும் உழவர்களின் இல்லங்களில் விருந்தினரை வரவேற்கும் திருவிழாக்கள் நடைபெறுகின்றன.

*பொருந்திய மகளிரோடு வதுவையில் பொருந்து வாரும்*
*பருந்தொடு நிழல்சென்றன்ன வியலிசைப் பயன்றுய்ப் பாரும்*
*மருந்தினு மினிய கேள்வி செவியுற மாந்து வாரும்*
*விருந்தினர் முகங்கண் டன்ன விழாவணி விரும்பு வாரும்*

இந்தப் பாட்டைப் படிக்கும்போது எழுகின்ற ஓசை கம்பரின் இன்ப எழுச்சியைக் காட்டுகின்றது. உழவர்கள் கருத்தொருமித்த காதல் மணம் செய்கின்றவர்கள் என்பதைக் கம்பரால் மறக்க முடியவில்லை.

“பொருந்திய மகளிரோடு வதுவையில் பொருந்துவாரும்” எனக் கூறுகின்ற குரலில் கருத்தொருமித்த காதல் மணம் நிகழ்ந்த பின்புதான் இரு முதுகுரவராலும் ஈயப்படுகின்ற வதுவை நிகழ்கின்ற உண்மை ஏற்றத்தைக் காண்கின்றோம். உழவர் குலப் பெண்களின் உயர்ந்த பண்பாட்டைக் கம்பர் பாடிப் பாடி

மகிழ்கின்றார். ஈகையும் விருந்தும் பெண்களின் உள் அன்பினால் தான் நிலைபெற முடியும். உழவர்கள் எவ்வளவு உயர்ந்த செல்வத்தைத் தொகுத்து வைத்தாலும் அவற்றை இல்லாதாருக்கு ஈயவும் இன்முகம் காட்டி வந்த விருந்தினரை ஆதரிக்கவும் இல்லத்தில் வாழும் பெண்களுக்கு இனிய பண்பும் சிறந்த கல்வியும் வேண்டும். அன்பும் பண்பும் இல்லாத இல்லத்திலே அறத்தெய்வம் வீற்றிருக்க மாட்டாள்.

*பெருந் தடங்கண் பிறைநுதலார்க் கெலாம்*
*பொருந்து செல்வமும் கல்வியும் பூத்தலால்*
*வருந்தி வந்தவர்க் கீதலும் வைகலும்*
*விருந்து மன்றி விளைவன யாவையே*

இந்தப் பாட்டிலே நிறைந்த வாழ்வின் பண்பை அப்படியே நிழல் படம் பிடித்துக் காட்டுகின்றார். காதளவோடிய அகன்ற கண்களையும் பிறைபோன்ற நெற்றியையும் உடைய பெண்க ளென உழவர் குல மாதரின் வெளி அழகைக் கூறுகின்ற கம்பர், அவர் அக அழகையும் எங்களுக்கு அறிவிக்கின்றார். வாழ்க்கைக்கு வழிகாட்டியாக அமைந்த செப்பமான கல்வியை உழவர் குலப் பெண்கள் உணர்ந்திருக்கின்றார்கள். கம்பர் அவர்களின் கல்வியைத் திருந்து கல்வியெனப் பாராட்டுகின்றார். திருந்து கல்வி மட்டும் இருந்தால் வாழ்க்கை நிறையாது. நிறைந்த செல்வமும் வாழ்க்கைக்கு வேண்டும். வறுமையால் வாடி வருந்திவந்த மக்களின் நிலைமைக்கிரங்கி மலர்ந்த முகத்தோடு வாரி வழங்குகின்ற பெருங்குணம் உழவர் குலப் பெண்களின் பிறவிக் கொடையாகும். நாள்தோறும் விருந்தினர் வந்தாலும் நல்ல அன்போடு வரவேற்று அறுசுவை உண்டி அளிக்கும் அருள் உள்ளம் படைத்த உழவர் குலப் பெண்களைக் கம்பர் பாராட்டுகின்றார்.

*"வருந்தி வந்தவர்க் கீதலும் வைகலும்*
*விருந்து மன்றி விளைவன யாவையே"*

என மிக ஆராமையோடு எங்களைக் கேட்கிறார். வயல் வளத்தின் மலர்ச்சியால் மகிழ்ந்து வாழும் உழவர்குலப் பெண் களைக் கண்ட கம்பர் பால்வளம் படைத்த ஆயர்குலப் பெண் களைப் பார்க்கின்றார். அவர்கள் தயிரைக் கடைகின்ற ஓசையைக் கம்பர் எண்ணியெண்ணி இன்பம் அடைகின்றார். ஆயர்குலப் பெண்கள் தயிரைக் கடையும்பொழுது எழும் மத்தின் ஓசையும் அவர்களின் கைகளிலே உள்ள வளையல்களின் ஓசையும் கம்பர் உள்ளத்தை அள்ளிவிட்டன. அவர்களின் மெல்லிய இடைகள் வளைவதையும் காந்தள் மலர்போன்ற கைகள் மத்தைச் சுழற்றி வருந்துவதையும் கண்ட கம்பர் கண்ணீர் வடிக்கின்றார். மெல்லிய இடைகள் வளையவும் அழகிய கைகள் வருந்தவும் நின்று ஏன் ஆயர் மகளிர் தயிரைக் கடைய வேண்டும் என்று கம்பர் எண்ணுகின்றார்.

*தோயும் வெண்டயிர் மத்தொலி துள்ளவும்*
*மாய வெள்வளை வாய்விட்ட ரற்றவும்*
*தேயு நுண்ணிடை சென்று வணங்கவும்*
*ஆயர் மங்கைய ரங்கை வருந்துவார்*

இங்ஙனம் ஆயர் மகளிர் அங்கை வருந்துவதைக் கண்டு ஆவி துடிக்கும் கம்பரின் குரலைக் கேட்ட அதிவீரராம பாண்டியன் ஆயர் மகளிரைப்பற்றிப் பாடுகின்றான்.

*முல்லையங் கோத நல்லார்*
*முகமதி வேயர்வு தோன்ற*
*வல்லிநுன் மருங்கு நோவ*
*வரிவளை வாய் விட்டார்ப்ப*
*மெல்விரல் காந்தள் சேப்ப*
*வெண்தயிர் கடையும் ஓசை*
*கொல்புலி முழக்கம் என்ன*
*வயின்வயின் குமுறும் மாதோ*

இதில் கம்பரின் கருத்தை அள்ளிக்கொண்ட அதிவீரராம பாண்டியன் கம்பரிலும் பார்க்க மிக உருக்கத்துடன் ஆயர் மகளிர் தன்மையைப் பாடுகின்றான்.

ஆயர் மகளிர் தமது கூந்தலில் முல்லை மலரை அணிந்திருக்கிறார்கள். முல்லை மலரை அணிந்த மெல்லிய பெண்களின் முகத்திலே தயிரைக் கடையும் களைப்பினால் வேர்வை தோன்றுகின்றது. புலவர் அவர்களின் முகத்தில் தோன்றும் வேர்வையைக் கண்டு மிகவும் இரங்குகின்றார். மத்தைப் பிடித்து அசைத்துக் கடைவதனால் மெல்லிய காந்தள் மலர் போன்ற விரல்கள் சிவந்து விட்டன. வல்லிக்கொடி போன்ற மெல்லிய இடுப்புகள் வளைந்து வளைந்து வருந்துகின்றன. இங்ஙனம் அவர்கள் களைத்துக் களைத்துத் தயிர் கடைவதைக் கண்டு இரங்குவது போல அவர்களுடைய கைகளிலே உள்ள வளையல்கள் வாய்விட்டுப் புலம்புகின்றன என்றெல்லாம் கூறிக் கூறி அதிவீரராம பாண்டியன் எமக்கு இரக்க உணர்ச்சியைத் தோற்றுவிக்கின்றார். மெல்லிய பெண்கள் தமது இல்லந்தோறும் தயிர் கடைகின்ற ஓசையெல்லாம் சேர்ந்து கொல்லும் புலியின் முழக்கமாக புலவருக்குக் கேட்கின்றது.

# திருமணமும் நாடகமும்

திருத்தக்கதேவர் வயல் நிலத்தில் ஒரு சிறந்த இயற்கைக் காட்சியைக் காண்கின்றார். வயலின் மருங்கே உள்ள பொய்கையில் தாமரை மலர்கள் மலர்ந்திருந்தன. தாமரை மலரின் அழகில் ஈடுபட்ட அன்னச் சேவல், தன் அலகால் தாமரை மலரைப் பிடுங்கிக் கவ்விக்கொண்டிருந்தது. குயில் கூவிக் கொண்டிருந்தது. குயிலின் குரலைக்கேட்ட மயில் கள் இளவேனிற்காலம் வந்துவிட்டதே என்றெண்ணி, வண்டுகள் தங்கிய பூங்கொம்பர்களின் இடையே சென்று மறைந்தன. இவையெல்லாம் சேர்ந்து தேவர் உள்ளத்தில் திருமண விழாவை நினைவூட்டுகின்றன.

அன்னச்சேவல் தாமரை மலரை விளக்காகப் பிடிக்க, குயில் முழவின் ஒலிபோலக் கூவ, மெல்லிய சாயலை உடைய பெண் மயிலுக்கு ஆண்மயிலை வண்டுகளை உடைய பூங்கொம்புகள் மணம்செய்து கொடுக்கின்றன.

*சேவலன்னம் தாமரையின் தோடவிழ்ந்த செவ்விப்பூக்*
*காவிற்கூ டெடுக்கிய கவ்விக்கொண்டி ருந்தன*
*தாவில்பொன் விளக்கமாத் தண்குயில் முழவமாத்*
*தூவிமஞ்ஞை நன்மணம் புகுத்துந்தும்பிக் கொம்பரோ*

இதில் வயல் வளத்தில் புதிய வாழ்க்கை வளம் ஒன்றைத் தேவர் எமக்குக் காட்டுகின்றார். இளவேனிற் பருவத்தில், தாமரை மலரும்; குயில் கூவும்; மயில்கள் ஒடுங்கும் என்ற செய்தியைக் கூறவந்த தேவர் திருமண விழாவொன்றையும் படைத்துவிட்டார். மயில்கள் ஆணும் பெண்ணுமாக, வண்டுகள்

தங்கிய பூங்கொம்புகளுக்கிடையில் மறைந்து வாழ்கின்றன என்று கூறாமல், பூங்கொம்புகள் மயில்களை ஆதரித்து மணம் செய்து வைக்கின்றன என்று கூறுகின்றார். தாமரை மலரை வாயில் கவ்விய அன்னச் சேவல் திருமண நிகழ்ச்சிக்காகத் திருவிளக்கை ஏந்துகின்றது. குயில் முழவை ஒலிக்கின்றது, பூங்கொம்புகள் வண்டுகளாகிய தம் உறவினருடன் சேர்ந்து, ஆணும் பெண்ணுமாக அமர்ந்த மயில்களை மணமக்களாக வைத்துத் திருமண விழாவை நடாத்துகின்றன என்று தேவர் கூறிய செய்திகளைக் கம்பரும் படித்தார். தேவரின் கற்பனை கம்பரின் உள்ளத்தைக் கவர்ந்துவிட்டது. கம்பர் தேவரின் கருத்துடன் தனது புலமை நலத்தையும் ஏற்றிப் பாடுகின்றார்.

*தண்டலை மயில்கள் ஆடத் தாமரை விளக்கந் தாங்கக்*
*கொண்டல்கள் முழவின் ஏங்கக் குவளைகண் விழித்து நோக்கத்*
*தெண்டிரை எழினி காட்டத் தேம்பிழி மகர யாழின்*
*வண்டுகள் இனிது பாட மருதம் வீற்றிருக்கும் மாதோ*

இதில் கம்பரின் புலமை ஆற்றல் சுரந்து பாய்கின்றது. தேவர் இளவேனிற் காலத்தில் திருமண விழாவைக் கண்டார். கம்பர் கார் காலத்தில் கூத்தையும் பாட்டையும் காண்கின்றார். தேவரின் மயில்கள் ஒடுங்கிவிட்டன. கம்பரின் கார் மயில்கள் களித்தாடுகின்றன. தேவரின் இளவேனிற்காலக் குயில் கம்பரின் கார்காலக் கவியில் இடம் பெறவில்லை. வயற்பரப்பெல்லாம் தாமரை மலர்கள் நிறைந்திருக்கின்றன. மழை முகில்கள் முழவம் போல முழங்குகின்றன. குவளை மலர்கள் கட்டுவிட்டு அலர்ந்திருக்கின்றன. வயற்பரப்பில் உள்ள நீர், திரைச்சேலை போல அசைகின்றது. வண்டுகள் பாடுகின்றன. இவற்றைக் கண்ட கம்பர், மருத நிலத்தைத் தலைவனாக வீற்றிருக்க வைக்கின்றார். மருத நிலமாகிய தலைவன் கண்டுகளிக்கும் வண்ணம் ஒரு நாடகம் நடாத்துகின்றார்.

சோலைதான் நாடக மேடை. அதில் மயில்கள் ஆடுகின்றன. தாமரைகள் தமது பூக்களாகிய விளக்குகளை ஏந்துகின்றன.

மழை முகில்கள் முழவம்போல ஒலிக்கின்றன. குவளை மலர்கள் கண்விழித்துக் கூத்தைப் பார்க்கின்றன. தெளிந்த நீர்ப்பரப்பு திரைச்சேலைபோல அசைகின்றது. இனிய மகரயாழின் இசை போல வண்டுகள் பக்கப்பாட்டுப் பாடுகின்றன என்பதாம்.

இதில் திருத்தக்கதேவரின் உள்ளமும் கம்பரின் உள்ளமும் சேர்ந்த புதிய கோலத்தைக் காண்கின்றோம். தேவரிலும் பார்க்கக் கம்பர் வயல் வளத்தில் ஈடுபட்டவர். இளவேனிற் காலத்திலும் கார்காலமே வயல் வளத்தைக் காண வாய்ப்பானது என்பதைக் கம்பர் நிலைநாட்டிவிட்டார். இளவேனிற்காலக் குயிலின் குரலைக் கார்காலத்தில் எப்படிச் சேர்க்கலாம் என்று கம்பர் சிந்தித்தார். குயிலைச் சேர்க்காவிட்டால் முழவத்துக்கு என்ன செய்யலாம் என்று கம்பர் எண்ணினார். முகிலின் முழக்கம் கேட்டது. கம்பரின் கவிதை உள்ளம் புது வாழ்வு பெற்றது. கூத்தை நடாத்தினால் பார்க்கின்ற மக்களாக எதைக் கூறலாம் என்றும் கம்பர் எண்ணினார். கண்போல மலர்ந்த குவளை மலர்களைக் கண்டார். கவிதை பிறந்தது. நீர்ப்பரப்பு, நெளிந்து நெளிந்து அசைகின்ற திரைச்சேலையாகக் கம்பரின் உள்ளத்திலே காட்சி அளித்தது. தேவரின் தாமரை விளக்கத்தை மாத்திரம் கம்பர் ஏற்றுக்கொண்டார். விளக்கைத் தாங்கிய அன்னச் சேவலைக் கம்பர் அகற்றிவிட்டார். தேவரின் வண்டுகள் பூங்கொம்புகளிலே இருக்கின்றன. கம்பரின் வண்டுகள் பாடுகின்றன. தேவரின் திருமணக் காட்சியும், கம்பரின் நாடகக் காட்சியும் வயல் வளமாய் நின்று, இன்றும் மகிழ்விக்கின்றன.

# பண்பாடும் பயனும்

வயல் வளத்தால் நிரம்பிய நாட்டிலே வாழ்கின்ற மக்களின் பண்பாட்டையும் பயனையும் திருத்தக்கதேவர் கண்டு சிந்தை மகிழ்கின்றார். வீடுபேற்றை விரும்பித் தவஞ் செய்கின்ற மெய் உணர்ச்சியாளர்களும் நாட்டில் வாழ்கின்றார்கள். போகம் நுகர்ந்து இல்லறத்தில் வீற்றிருந்து, மறுமை கருதித் தவம் புரிகின்ற வாய்மையாளர்களும் வாழ்கின்றார்கள். அழியாத பொருளாகிய கல்வியை ஆராய்ந்து கற்கின்ற அறிஞர்களும் அங்கு வாழ்கின்றார்கள். நிலையாத பொருட் செல்வத்தைத் தேடுவதிலேயே தமது வாழ்நாளையெல்லாம் போக்குகின்ற மதியிலா மாந்தரும் அங்கு வாழ்கின்றார்கள். எனவே, வீடுபேற்றை விழைகின்ற மேலோர்கள் தமது தவஒழுக்கத்தை முட்டின்றி ஓம்புதற்கு வாய்ப்பான அமைதியும் ஆதரவும் நாட்டில் ஆர்ந்துள்ளன என்பதைத் தேவர் ஆர்வத்துடன் அறைகின்றார். தவ ஒழுக்கத்தில் நிற்கும் சான்றோரை மதித்துப் போற்றும் சால்பும், தண்ணளியும் வாழும் மக்கள் உள்ளத்தில் நிலைபெற்ற மாண்பை இதனால் அறிகின்றோம்.

*தள்ளா விளையுளும் தக்காரும் தாழ்விலாச்*
*செல்வரும் சேர்வது நாடு*

என்பது திருக்குறள்.

இனி இல்லறத்தில் நின்றொழுகும் மாந்தர் இனிய பண்பும் விருந்தோம்பும் விழைவும் பொருந்தியவர்களாய், கடவுள் கொள்கையுடன் வாழ்கின்ற மாண்பு உடையவராதல் வேண்டும்.

இல்லற வாழ்வுதான் தவத்தையும் கல்வியையும் சான்றோரையும் உருவாக்கும் உயர்ச்சியுடையதாகும். இதனை உணர்ந்த திருத்தக்க தேவர்,

*"நற்றவம் செய்வார்க்கிடம்*
*தவஞ்செய்வார்க்கும் அஃதிடம்*
*நற்பொருள் செய்வார்க்கிடம்"*

எனத் தவஞ்செய்வார்க்கும், நற்பொருள் என்னும் கல்வியை ஆராய்வார்க்கும் இடையில் தவஞ்செய்வார்க்கும் அஃதிடம் என இல்லறத்தாரை எடுத்துச் சொல்கின்றார்.

*இல்வாழ்வான் என்பான் இயல்புடைய மூவர்க்கும்*
*நல்லாற்றின் நின்ற துணை*

என்பது திருக்குறள்.

தவத்தோரையும் கல்விவல்ல சான்றோரையும் போற்றி, அறம், பொருள், இன்பம் தழுவி வாழும் கொள்கை இல்லாத மாந்தரையும் தேவர் பார்க்கின்றார். அவர்கள் பொருளைப் பெருக்கிப் போகம் நுகர்தலில் மாத்திரம் கருத்தூன்றி வாழ்வார்கள். அன்பும் அறனும் இல்லாத அவர்கள், பொருட் செல்வத்தில் சிறந்து வாழ்வதினால் பயன் ஒன்றும் இல்லை. நாட்டின் பண்பாடும் அவர்களால் சிறப்படையாது. நல்ல பேற்றையும் அவர்கள் பெறமாட்டார்கள்.

*அன்பொரீஇத் தற்செற்று அறன்நோக்காது ஈட்டிய*
*ஒண்பொருள் கொள்வார் பிறர்*

என்பது திருக்குறள். அறன்நோக்காது பொருளை ஈட்டி வாழ்கின்ற அறியாமை நீங்கி மக்கள் வாழவேண்டுமென்பதே தேவரின் கருத்தாகும். நற்றவத்தோடு தவமும், நற்பொருளோடு பொருளும் இணைந்து நிற்கும் பெருவாழ்வை நாட்டில் காணத் தேவர் விரும்புகின்றார்.

தேவரின் உள்ளத்தோடு சேர்ந்து கம்பர் காட்டுகின்ற பண்பையும் பயனையும் பாருங்கள். கம்பர் தாம் கண்ட நாட்டிலே வாழ்கின்ற மக்களின் ஒழுக்கத்தை மிக விழிப்பாக நோக்குகின்றார். இல்லறம், துறவறம் என்னும் இரண்டு நிலை களிலும் நின்று வாழ்கின்ற மக்கள், ஒழுக்கத்தை உயிரினும் மேலாக ஓம்புகின்றார்கள் என்பதைக் கம்பர் எழுச்சியுடன் எடுத்துரைக்கின்றார். கடல்கடந்து தேடும் செல்வமும், நிலஞ் சுரக்கும் செல்வமும், மலையை அடுத்த பிலங்களில் பெறுகின்ற மாணிக்கம் முதலான பொருள்களும் நாட்டில் நிரம்பியுள்ளன. நிறைந்த செல்வச் செருக்கால், அறத்தை மறந்து வாழ்கின்றவர்கள் ஒருவரும் இல்லை என்று கம்பர் உறுதி உரைக்கின்றார்.

*கலஞ் சுரக்கும் நிதியம் கணக்கிலா*
*நிலஞ் சுரக்கும் நிறைவளம் நன்மணி*
*பிலஞ் சுரக்கும் பெறுதற் கரியதங்*
*குலஞ் சுரக்கும் ஒழுக்கம் குடிக்கெலாம்*

என்பது கம்பரின் குரல். இதில் வாழையடி வாழை போலத் தொடர்ந்துள்ள ஒழுக்கம் வாழ்கின்ற மக்களின் பரம்பரைப் பண்பாக நின்று பயன் சுரக்கின்றதென்பதைக் கம்பர் பாராட்டுகின்றார். தேவர், பொருள் ஈட்டுதலிலேயே கருத்தூன்றி, அறத்தை மறந்த மாந்தரையும் கண்டார். கம்பர் நிறைந்த செல்வம் படைத்த போதும் நிலை திரியாமல் ஒழுக்கத்தை ஓம்பி வாழ்கின்ற உயர்ந்த மக்களையே காண்கின்றார்.

*கூற்றம் இல்லையோர் குற்றம் இலாமையால்*
*சீற்றம் இல்லைதஞ் சிந்தையிற் செம்மையால்*
*ஆற்றல் நல்லறம் அல்ல திலாமையால்*
*ஏற்றம் அல்லது இழிதக வில்லையே*

என்று கம்பர் பெருமிதத்துடன் கூறுகின்றார். எந்நிலையில்

நின்றாலும் எத்தொழிலைச் செய்தாலும் அறத்தை மறவாமல் வாழ்கின்ற மக்கள் நாட்டின் நலம் போற்றி வளர்க்கின்றார்கள்.

*ஆற்றல் நல்லறம் அல்லது இலாமையால்*
*ஏற்றம் அல்லது இழிதகவு இல்லையே*

என்று கேட்கின்ற கம்பரின் குரலிலே நாடெங்கும் அறத்தை மறவாமல் வாழ்கின்ற மக்களினம் நிரம்ப வேண்டும், நிரம்ப வேண்டும் என்ற ஆரா வேட்கை அலையெறிகின்றது.

# 5

# இலக்கியத்தில் பாலை நிலம்

ஐவகை நிலங்களில் ஒன்றான பாலை நிலத்தின் இயல்புகளும் தமிழ் இலக்கியங்களிலே கூறப்பட்டுள்ளன. மரம் செடிகள் குறைந்த, செழிப்பற்ற, வெப்பம் கூடிய பாலை நிலத்தை வர்ணிக்கும் பாடல்களையும் படிப்போர் மனதில் பதியத்தக்க வகையில், மக்களின் வாழ்வுடன் இணைத்துப் பாடிய புலவர் களின் - பாலை பாடிய கடுங்கோ (கலித்தொகை), கம்பர் (கம்பராமாயணம்), சயங்கொண்டார் (கலிங்கத்துப் பரணி) ஆகியோரின் – கவிவளத்தை வெளிப்படுத்தும் கட்டுரைகள் இவை.

## மரமும் வாழ்வும்

**பா**லை நிலம் நெருப்பினும் கொடியது. நீண்ட மணற்பரப் பாகப் பரந்து கிடக்கும். நீண்டகாலம் நீர் இல்லாமல் வாழக் கூடிய மரங்கள், செடிகள் முதலியன எங்கேனும் அருமையாக அந்நிலத்தில் நிற்பதைக் காணலாம். நிற்கின்ற மரஞ்செடிகளும் சூட்டின் மிகுதியால் வாடிச் சுருண்டு வற்றலாகவே காட்சி அளிக்கும்.

*பொரிந்த காரை கரிந்த சூரை*
*புகைந்த வீரை எரிந்த வேய்*
*உரிந்த பாரை எறிந்த பாலை*
*உலர்ந்த ஓமை கலந்தவே*

*உதிர்ந்த வெள்ளில் உணங்கு நெல்லி*
*ஒடுங்கு துள்ளி உலர்ந்த வேல்*
*பிதிர்ந்த முள்ளி சிதைந்த வள்ளி*
*பிளந்த கள்ளி பரந்தவே*

எனப் பாலை நிலத்தில் உள்ள மரஞ்செடிகளையும் அவற்றின் வரண்ட கோலத்தையும் சயங்கொண்டார் கூறுகின்றார். காரைச் செடிகள் எல்லாம் வெப்பமிகுதியால் பொரிந்து விட்டன. சூரைமரங்கள் கரிந்து போயின. வீரைமரங்கள் இருந்த இடம்தெரியாமல் புகைந்துவிட்டன. மேற்பட்டை உரிந்த பாரை மரங்களும், வெட்டப்பட்ட பாலைமரங்களும், காய்ந்த ஓமை மரங்களும் கலந்து நிற்கின்றன. கனிகள் உதிர்ந்த விளாமரங்கள்,

உலர்ந்த நெல்லிமரங்கள், காய்ந்த வேல்மரங்கள், பிளவுபட்ட முள்ளிச்செடிகள், கள்ளிமரங்கள் என்பன பாலை நிலமெல்லாம் பரந்து காணப்பட்டன என்று சயங்கொண்டார் கூறுவதைப் படிக்கும் பொழுதே எமக்கு அச்சம் உண்டாகின்றது.

சயங்கொண்டாருக்கு முன் வாழ்ந்த பாலைபாடிய கடுங்கோ என்னும் நல்லிசைப் புலவர் பாலைநிலத்தில் உள்ள மரங்களைப்பற்றிப் பாடுகின்றார்.

*வறியவன் இளமை போல் வாடிய சினைய வாய்ச்*
*சிறியவன் செல்வம் போல் சேர்ந்தார்க்கு நிழல் இன்றி*
*யார்கண்ணும் இகந்து செய்து இசைகெட்டான் இறுதி போல்*
*வேரொடு மரம் வெம்ப விரி கதிர் தெறுதலின்*
*அலவுற்றுக் குடி கூவ ஆறின்றிப் பொருள் வெ:கிக்*
*கொலை அஞ்சா வினைவராற் கோல் கோடியவன் நிழல்*
*உலகு போல் உலறிய உயர்மர வெஞ் சுரம்*

இந்தப் பாட்டில் வெறும் மரங்களைப்பற்றி மட்டும் புலவர் கூறியிருந்தால் எமதுள்ளம் மலராது. மரங்களின் வேறுபாட்டைக் கொண்டு மக்களின் வாழ்க்கை நிலையைப் புலவர் காட்டுகின்றார். இளமைப் பருவத்தில் வறுமை எய்தினவனுடைய வாழ்வு வளர்ச்சி அடையாது. அவனுடைய உடல் நலம் குறையும். மன எழுச்சி குன்றும். பல்வேறு துறைகளில் சென்று பயன் சுரக்கின்ற ஆற்றல்கள் எல்லாம் அழிந்துபோகும். கொப்புகளில் இலையில்லாமல் வாடிய மரங்களும், எழுச்சியும் எழிலும் இல்லாதனவாய்ப் பயன்கெட்டுவிடுகின்றன. அரும்பு கட்டி மலர்ந்து காய்த்துப் பழம் தரவேண்டிய நிலை கெட்டுப் பாழாய்ப்போகின்றன. இந்த உண்மைகளை உணர்ந்த புலவர் "வறியவன் இளமைபோல வாடிய சினையவாய்" என்று கூறினார்.

*நல்குரவு என்னும் இடும்பையுள் பல்குரைத்*
*துன்பங்கள் சென்று படும்*

என்பது திருக்குறள்.

மரத்தின் இலைகள் வாடி உலர்ந்து உதிர்ந்துவிட்டன. பாலை நிலத்தில் நின்ற மரங்கள் எல்லாம் பட்ட மரங்கள் போலத் தோன்றுகின்றன. கொடிய வெயிலால் வருந்திய மக்கள் வந்து நிற்க நிழல் இல்லாத நீண்ட மரங்களைக் கண்ட புலவர், உறவினர்க்கு உதவாத சிறியவனின் செல்வத்தை நினைக் கின்றார். நிழலைப் பரப்பாத மரமும், உறவினர்க்கு உதவாத சிறியவனின் செல்வமும் ஒரே தன்மையாகத் தோன்றுகின்றன. சிறியவன் நிரம்பிய செல்வம் படைத்திருந்தாலும், தன்னைச் சேர்ந்தவர்களை ஆதரிக்கமாட்டான். மரமும், தன்னை வந்து சேர்ந்தவருக்கு நிழலைக்கொடுத்து ஆதரியாமல் நிற்கின்றது.

*ஏதிலார் ஆரத் தமர்பசிப்பர் பேதை*
*பெருஞ்செல்வம் உற்றக் கடை*

என்பது திருக்குறள்.

எல்லார்க்கும் கொடுமையைப் புரிகின்ற கொடியவன் தானும் தன்னைச் சேர்ந்தவர்களும் ஒருங்கே அழிந்து போவதை நாம் காண்கின்றோம். வேரோடு மரம் வெம்ப நிற்கின்ற மரங் களைக் கண்ட புலவர் தீமைபுரிந்து, தன்னைச் சேர்ந்தவர்களுடன் அழிந்துபோகின்ற கொடியவனின் செயலை எண்ணுகின்றார். வேர் இருந்தால் மீண்டும் முளைத்து மரம் உண்டாகும். வேரோடு மரமும் வெம்புவதால் மரத்தின் பரம்பரையே அழிந்து போகும். கொடியவனும் அறத்தை மறந்து பிறர்க்கு அல்லல் புரிவதால் தான் கெடுவதுடன் அமையாது தன் பரம்பரையையும் கெடுத்து விடுகின்றான் என்பதாம்.

*கூழும் குடியும் ஒருங்கிழக்கும் கோல்கோடிச்*
*சூழாது செய்யும் அரசு*

என்பது திருக்குறள்.

சூரியன் நெருப்புப்போலப் பாலை நிலத்தைக் காய்ச்சுகின்றது. கொடிய வெப்பத்தால் தாக்குண்டு நெருப்பாய் எரிகின்ற பாலை

நிலத்தின் தன்மையைக் கண்ட புலவர், கொடுங்கோல் வேந்தனின் ஆட்சியில் உள்ள நாட்டை நினைக்கின்றார்.

பாலை நிலத்தில் உள்ள மரங்கள் எல்லாம் இலை தளிர் ஒன்றும் இல்லாமல் வற்றலாக வாடி நிற்கின்றன. கொடுங்கோல் மன்னனின் ஆட்சியின்கீழ் இருந்து வாழ்கின்ற மக்களும் மகிழ்ச்சி இன்றி அச்சம் மிகுந்தவர்களாய் அல்லற்பட்டு வாழ்கிறார்கள். பாலை நிலத்தின் பாழ்பட்ட தோற்றத்தில் வைத்து, கொடுங்கோல் வேந்தன் ஆளுகின்ற நாட்டின் பாழ்பட்ட நிலையைப் புலவர் எமக்குக் காட்டுகின்றார்.

*"கோல் கோடியவன் நிழல்*
*உலகுபோல் உலறிய*
*உயர்மர வெஞ்சுரம்"*

எனப் புலவர் கூறுகின்ற குரலிலே எழுகின்ற துடிப்பைப் பாருங்கள்.

*இன்மையின் இன்னாது உடைமை முறைசெய்யா*
*மன்னவன் கோற்கீழ்ப் படின்.*

என்பது திருக்குறள்.

# விலங்கும் பறவையும்

**பொ**ருள், வாழ்க்கையை மலர்த்திப் பயன்பெருக்கும் பண்பு வாய்ந்தது. "பொருள் இல்லார்க்கு இவ்வுலகம் இல்லை" என்றார் வள்ளுவர். அருள் நிரம்பிய அந்தணர்க்கும் தவமுனி வர்க்கும் சான்றோர்க்கும் கொடுக்கப் பொருள் வேண்டும். மாற்றாரை வென்று, வாய்மையையும் அறத்தையும் பாதுகாக்கப் பொருள் வேண்டும். கருத்தொருமித்த காதல் இன்பம் நுகர்ந்து, வாழ்க்கைத் துணைவியுடன் வாழ்வதற்கும் பொருள் வேண்டும். இவற்றை எல்லாம் எண்ணிய தலைவன் பொருள்தேடப் புறப்பட்டு விட்டான்.

*அரிதாய அறன் எய்தி அருளியோர்க்கு அளித்தலும்*
*பெரிதாய பகை வென்று பேணாரைத் தெறுதலும்*
*புரிவமர் காதலில் புணர்ச்சியும் தருமெனப்*
*பிரிவெண்ணிப் பொருள்வயிற் சென்ற நங்காதலர்*

எனத் தலைவன் தன்னைப் பிரிந்து சென்ற காரணத்தைத் தலைவி கூறுகின்றாள். பிரிந்து சென்ற உமது தலைவன் எப்பொழுது திரும்பி வருவார் என்று தோழி தலைவியைக் கேட்டாள். உடனே தலைவி மிக மன எழுச்சியுடன் தோழியை நோக்கிச் சொல்கின்றாள். எனது தலைவர் பொருள் தேடச் செல்கின்ற வழியிலே பெரிய பாலை நிலம் இருக்கின்றதாம். அந்தப் பாலை நிலத்தின் தன்மையை அவர் எனக்கு விளக்கிக் கூறினார். பாலை நிலத்தின் வெப்ப மிகுதியையும் அங்கு வாழ்கின்ற விலங்குகளும் பறவைகளும் நடத்துகின்ற அன்பு வாழ்க்கையையும் அவர் மிக ஆர்வத்தோடு கூறியபொழுதே,

நீண்டகாலம் என்னைப் பிரிந்து நிற்கமாட்டார் என்பதையும் நான் உணர்ந்து கொண்டேன்.

நிலத்தில் அடிவைத்தால் நெருப்பைப்போலச் சுடுகின்ற கொடிய பாலை நிலத்தைக் கடந்து செல்ல நேரிடும் என்று கூறினார். அங்ஙனம் செல்கின்றபொழுது தாம் காண்கின்ற ஓர் அன்புக் காட்சியை மறக்க அவரால் முடிய வில்லை. எங்கும் ஒரே வெப்பமாக இருக்கின்ற அந்தக் காட்டிலே, ஒரு சிறிய நீர் ஓடை காணப்பட்டது. தண்ணீர்த் தாகத்தினால் வருந்திய பெண் யானையும் ஆண் யானையும் தங்கள் கன்றுகளுடன் அந்த நீரோடைக்கு வந்தன. சேறு நிரம்பிய நீரோடையில் உள்ள சிறிதளவு நீரை யானைக் கன்றுகள் கலக்கிவிட்டன. தண்ணீர் விடாயினால் வருந்திய களிறும் பிடியும் தங்கள் கன்றுகள் நீரைக் கலக்கி விளையாடுகின்ற செயலைப் பார்த்தவண்ணம் நின்றன. கன்றுகளும் வேண்டிய அளவு கலக்கி விளையாடிவிட்டு வெளியே வந்துவிட்டன. அதன்பின் தாகத்தால் வருந்திய ஆண் யானை தான் தண்ணீரைக் குடிக்காமல் பெண் யானையைக் குடிக்கச் செய்து, மிகுதி நீரைத் தான் குடித்தது என்று கூறினார்.

அந்தக் காட்டிலே நிழல் மரம் ஒன்றும் இல்லையாம். வெப்பத்தைப் பொறுக்க முடியாமல் பெண்புறா வருந்துவதைக் கண்ட ஆண்புறா, தனது சிறகுகளை அகல விரித்து, அதன் நிழலிலே பெண்புறாவை விட்டு அணைத்துக் கொண்டதென்றும் கூறினார்.

மலையிலே நிற்கின்ற மூங்கில்களும் வாடுகின்ற வெப்பத்தை உடைய அக்காட்டிலே இன்னொரு காட்சியையுங் கண்டாராம். நிற்க நிழல் கிடையாமல் நின்று வருந்திய பெண் மானின் துன்பத்தைக் கண்ட ஆண் மான் அதன் பக்கத்திலே நின்று, தன் நிழலைக் கொடுத்துப் பாதுகாக்கின்றதாம்.

*அடிதாங்கும் அளவின்றி அழலன்ன வெம்மையால்*
*கடியவே கனங்குழாய் காடென்றார் அக்காட்டுள்*

*துடியடிக் கயந்தலை கலக்கிய சின்னீரைப்*
*பிடியூட்டிப் பின்னுண்ணும் களிறெனவும் உரைத்தனரே*

*இன்பத்தின் இகந்தொரீஇ இலைதீர்ந்த உலவையால்*
*துன்புறூஉந் தகையவே காடென்றார் அக்காட்டுள்*
*அன்புகொள் மடப்பெடை அசைஇய வருத்தத்தை*
*மென்சிறகரால் ஆற்றும் புறவெனவும் உரைத்தனரே*

*கன்மிசை வேய்வாடக் கனைகதிர் தெறுதலான்*
*துன்னரூஉம் தகையவே காடென்றார் அக்காட்டுள்*
*இன்னிழல் இன்மையால் வருந்திய மடப்பிணைக்குத்*
*தன்னிழலைக் கொடுத்தளிக்கும் கலைஎனவும் உரைத்தனரே*

இச்செய்யுள்களைப் படிக்கும்பொழுது எழுகின்ற அன்புணர்ச்சியைப் பாருங்கள். ஆணும் பெண்ணுமாகக் கூடிவாழும் விலங்குகளும் பறவைகளும் ஒன்றின் துன்பத்திற்கு ஒன்று உருகி உதவுகின்ற அன்பு வாழ்வைப் புலவர் காட்டுகின்றார். தலைவியைப் பிரிந்து பொருள்தேடச் சென்ற தலைவன், இந்த அன்பு வாழ்க்கையைக் காண்பதாக வைத்துப் பாடிய புலவரின் உள்ளம் மிக அகலமானது. அன்பால் இணைந்த இல்வாழ்வைப் புலவர் நினைவூட்டுகின்றார். அன்பில்லாமல் ஆற்றுகின்ற அறமும் நுகருகின்ற இன்பமும் ஈட்டுகின்ற பொருளும் பயன் இல்லாதன என்பதைப் புலவர் குறிப்பாகக் கூறுகின்றார். பொருளை ஈட்டுவதிலேயே கருத்தூன்றி அன்பை மறத்தல் கூடாது. அன்பை மறந்து ஈட்டுகின்ற பொருளால் அல்லல்தான் வரும். அன்பினால் தன்னை ஆதரித்த தலைவன், தன்னை மறந்து பொருள் தேடுதலிலேயே கருத்தூன்றமாட்டார் என்று தலைவி எண்ணுவதைப் புலவர் எமக்குக் கூறுகின்றார். வெப்பத்தால் வெந்து நெருப்பாகச் சுடுகின்ற காட்டின் வழியாகச் செல்கின்ற தன் தலைவன், களிறு பிடி உண்ணும்வண்ணம் நீரை ஊட்டுவதையும், ஆண்புறா, தன் சிறகை விரித்து அதன் நிழலிலே பெண் புறாவை விட்டுக் காப்பாற்றுவதையும், ஆண்மான் தன் நிழலிலே பெண் மானை அணைத்து அன்பு செய்வதையும் காண்பான். கண்டவுடனே

தன்னை நினைந்து மீண்டுவிடுவான் என்பதே தலைவியின் எண்ணமாகும். தலைவன் உள்ளத்திலே அன்புணர்ச்சியை எழுப்புகின்ற பாலை நிலத்திற்குத் தலைவி நன்றி கூறுகின்றாள்.

*"இனைநலம் உடைய கானஞ் சென்றோர்*
*புனைநலம் வாட்டுநர் அல்லர்"*

எனத் தலைவி மிகப் பெருமிதத்துடன் கூறுகின்றாள். "இனை நலம் உடைய கானம்" எனப் பாலை நிலத்தை வாழ்த்துகின்றாள். தன்னைப் பிரிந்து சென்ற தலைவனை விரைந்து தன்னுடன் கலந்து வாழச்செய்த காட்டின் தன்மையை எண்ணி எண்ணித் தலைவி களிக்கின்றாள். கால்வைத்து நடக்க முடியாத வெப்பம் உடைய காட்டைக் கருத்தொருமித்த காதல் வாழ்க்கையோடு இணைவித்த கடுங்கோவின் கனிந்த உள்ளத்தைக் கண்டோம்.

*அன்பும் அறனும் உடைத்தாயின் இல்வாழ்க்கை*
*பண்பும் பயனும் அது*

என்பது திருக்குறள்.

# துன்பத்தில் இன்பம்

**க**ம்பர் பாலை நிலத்தின் கொடுமையைப் பாடுகின்றார். பாடும்பொழுதே கம்பரின் உள்ளம் நடுங்குகின்றது.

*படியின்மேல் வெம்மையைப் பகரினும் பகருநா*
*முடியவேம் முடியமூ டிருளும்வான் முகடும்வேம்*
*விடியுமேல் வெயிலும்வேம் மழையும்வேம் மின்னினோடு*
*இடியும்வேம் என்னின் வேறுயாவை வேவாதவே*

என்று கம்பர் கூறும் குரலைக் கேளுங்கள். நிலவுலகம் பாலை நிலத்தின் வெப்பத்தால் வெந்துவிடும். பாலை நிலத்தின் வெப்பத்தைப் பற்றிப் பேசினால் பேசுகின்ற நாவும் வெந்து விடும். அப்பாலை நிலத்தின் கண்ணே வந்து இரவுக் காலத்தில் மூடுகின்ற இருளும் வெந்துவிடும். வானத்தின் முகடும் வெந்து விடும். பொழுது விடிந்தவுடன் எறிக்கின்ற வெயிலும் பாலை நிலத்திலே நின்று எழுகின்ற சூட்டைத் தாங்க முடியாமல் வெந்துவிடும். மழையைக் கொட்டுகின்ற முகிலும் பாலை நிலத்தின் மேல் படருமானால் வெந்துவிடும். வானத்தில் மழையுடன் எழுகின்ற மின்னலும் வெந்துவிடும். இடியும் வெந்துவிடும் என்று அறிகின்றோம். நினைத்தாலும் நெஞ்சைச் சுடுகின்ற, நெருப்பினும் கொடிய பாலை நிலத்தைக் கம்பர் பாட்டிலே படம் பிடித்துக் காட்டுகின்றார். ஆயிரம் ஆயிரம் ஆண்டுகள் நின்று வாழக்கூடிய கவிதைகளைச் சொரிந்த கம்பரின் செந்நாவும் பாலை நிலத்தின் கொடுமையைக் கூற அஞ்சுகின்றது. தன்னிடத்தில் தங்கிய உயிர் இனங்களை ஆவி துடிக்கத்துடிக்க, அல்லற்படுத்துகின்ற பாலை நிலத்தைப் பற்றிப் பாட அன்பு தழுவிய கம்பரின் உள்ளம் மிக அல்லற்படுகின்றது. பாலை நிலத்தில் வாழும் உயிரினங்கள் ஆற்றல் அழிந்து ஆவி பதைக்கின்ற காட்சியைக் கண்ட கம்பரின் உள்ளம் உருகி விட்டது.

*புழுங்குவெம் பசியொடு புரளும் பேரரா*
*விழுங்கவந் தெழுந்தெதிர் விரித்த வாயினவாய்*
*முழங்குதிண் கரிபுகு முடுகி மீமிசை*
*வழங்கு வெம்கதிர் சுடமறைவு தேடியே*

என்ற பாட்டைப் படித்துப் பாருங்கள். கொல்லும் கொடிய பாம்பென்றாலும் பசிக்கொடுமையினால் கிடந்து புரளுகின்றது. ஏதும் விலங்குகளைப் பிடித்து விழுங்கிப் பசியைப் போக்கி விடலாம் என்ற எண்ணத்தினால் பாம்பு வாயை அகலத்திறந்து வைத்தது. விரித்த வாயை மூடக் கூடிய வலிமை இல்லாமையால் பாம்பு அப்படியே மயங்கிக் கிடக்கின்றது. பாலை நிலத்தின் வெப்பத்தைப் பொறுக்க முடியாமல் பெரிய வலிய யானை யொன்று நிழலைத் தேடியலைந்தது. அலைந்த யானை மயங்கிக் கிடந்த பாம்பின் வாயினுள்ளே புகுந்து அதன் நிழலிலே நின்றது. வாயின் உள்ளே புகுந்த யானையை விழுங்கித் தனது பசியைப் போக்கக் கூடிய வலிமை பாம்பினிடம் இல்லை. பாம்பின் வாயை விட்டு வேறு நிழலில் சென்று தங்கக் கூடிய வலிமை யானையிடம் இல்லை. பாலை நிலத்தின் வெப்ப மிகுதியால் தாக்குண்டு தங்கள் ஆற்றலை இழந்த பாம்பும் யானையும் படுகின்ற இன்னலைக் கம்பர் எமக்குக் காட்டு கின்றார். ஆற்றல் அழிந்த பின்பு இன்பமும் துன்பமும் பகையும் உறவும் வேறு வேறான நிலையில் தோன்றாவென்பதை இதனால் உணர்கின்றோம்.

*தீயின் வாய்நீர் பெறினும் உண்பதோர்*
*சிந்தைகூர வாய் வெந்து வந்து செந்*
*நாயின் வாயின்நீர் தன்னை நீரெனா*
*நவ்வி நாவினால் நக்கி விக்குமே*

எனச் சயங்கொண்டாரும் கம்பர் கண்ட காட்சியைப்போல் ஒரு காட்சியைக் கண்டு கூறுகின்றார். இதில் மான்கள் நீர் விடாயினால் வருந்திய நிலைமை கூறப்படுகின்றது. மான்களின் வாய்கள் பாலை நிலத்தின் வெப்பத்தினால் வெந்துவிட்டன. அவைகள் நெருப்பிலே நீர் இருக்கின்றதோ என்று நெருப்பையும் நக்கிப் பார்க்கக்கூடிய மனத்துடன் தண்ணீர் விடாயினால்

அலைந்து திரிந்தன. பாலை நிலத்திலே உள்ள செந்நாய்கள் களைப்பு மிகுதியால் நாக்கை நீட்டிய வண்ணம் செயலற்று நிற்கின்றன. அவற்றின் நாவிலே இருந்து நீர் வடிகின்றது. தண்ணீர் விடாயால் அலைந்த மான்கள், செந்நாய்களின் வாயிலே ஊறிய நீரை அச்சமில்லாமல் நக்கிக் குடித்து, விக்கி நின்றன. செந்நாய்கள் வலிமை இல்லாமையால் தம்முடைய நாவிலே ஊறிய நீரை நக்கிய மான்களைப் பிடித்துத் தின்னாமல் நின்றன. மான்களும் உயிர் போகின்ற தாகமிகுதியால், செந்நாய்கள் தம்மைக் கொன்றுவிடும் என்ற அச்சம் இல்லாமல் அவற்றின் நாவிலே ஊறிய நீரை நக்கிக் குடித்தன.

இங்ஙனம் கம்பரும் சயங்கொண்டாரும் கண்ட காட்சிகள் எமதுள்ளத்தையும் தொடுகின்றன. உயிரைக் காப்பாற்ற வேண்டுமென்ற ஆசையினால், கொடிய பாலை நிலத்திலே உள்ள விலங்கினங்கள் செய்கின்ற முயற்சிகள் எமக்கும் இரக்கத்தைத் தருகின்றன. பாம்பும் யானையும் பகை உணர்ச்சியில்லாமல் உயிரைக் காப்பாற்றப் படுகின்றபாட்டைக் கம்பர் காட்டினார். செந்நாயும் மானும் பகை உணர்ச்சியை மறந்து உயிரைக் காப்பாற்றப் படுகின்றபாட்டைச் சயங்கொண்டார் காட்டினார். இதனால், உடம்பில் ஆற்றலும் உள்ளத்தில் நான் என்ற ஆணவமும் உள்ளபொழுதுதான் உலகிலே வாழ்கின்ற விலங்கு முதலான உயிர்கள் ஒன்றையொன்று பகைத்துக் கொள்கின்றன என்பதை உணர்கின்றோம். இதுபோலவே மக்களும் தமது செயல்கள் அற்று ஆற்றாமை மிகுந்த பொழுதுதான் பகை உறவு என்ற வேறுபாடு எல்லாவற்றையும் மறந்து அன்பினால் ஒன்றுபடுவார்கள் என்பதையும் அறிகின்றோம். பாலை நிலத்திலே தோன்றிய வெம்மை, அதன்கண் வாழ்ந்த உயிர்களை வருத்துகின்றது. மக்கள் உள்ளத்திலே தோன்றுகின்ற ஆணவ உணர்ச்சி அவர்களை வருத்துகின்றது. ஆணவம் வருத்த வருத்த, அன்போடு சேர்ந்து வேறுபாடில்லாத அருள் உள்ளத்தை மக்கள் அடைவார்கள். பாலை நிலத்தின் வெப்பத்தைக் கூறவந்த புலவர்கள், துன்பத்திலும் இன்பத்தைக் காண்கின்ற உயர்ந்த உண்மை நெறியையும் கூறிவிட்டார்கள்.

# கொடுங்கோல் மன்னன்

**பா**லை நிலத்தின் வெப்பத்தைப் பாடிய கடுங்கோ, கொடுங்கோல் மன்னனின் ஆட்சியைப்பற்றிச் சிந்திக்கின்றார். குடிகளின் நலத்தை எண்ணாமல் கொடுங்கோல் ஆட்சி புரிகின்ற மன்னனை எண்ண எண்ணக் கடுங்கோவின் உள்ளம் எரிகின்றது. கொடுங்கோல் மன்னனுடைய ஆட்சியிலே அகப்பட்டு அல்லற்படுகின்ற குடிகளின் வாழ்வை எடுத்துக்கூற முடியாமல் கடுங்கோ ஏங்குகின்றார். உயிர்கள் வாழமுடியாத கடும் வெப்பங்கொண்ட பாலை நிலத்தின் தன்மையை மட்டும் கூறினால் மக்கள் ஆர்வமாகக் கேளார்கள். பாலை நிலத்தினும் கொடிய பண்பு வாய்ந்த மன்னனின் ஆட்சியிலே இருந்து கண்ணீர் வடிக்கின்ற மக்களைப் பற்றி நினைவூட்டுதற்காகப் பாலை நிலத்தின் பண்பை எடுத்துக் காட்டுகின்றார். பாலை நிலத்தினும் கொடிய பண்பு வாய்ந்த புதிய பாலை நிலத்தைப் பற்றிப் புலவர் கூறுகின்றார் கேளுங்கள்.

*நடுவிகந்து ஓரீஇ நயனிலான் வினைவாங்கக்*
*கொடிதோர்த்த மன்னவன் கோல்போல ஞாயிறு*
*கடுகுபு கதிர்மூட்டிக் காய்சினந் தெறுதலின்*
*உறல்ஊறு கமழ்கடாத்து ஒல்கிய எழில்வேழம்*
*வறன்உழு நாஞ்சில்போன் மருப்பூன்றி நிலம்சேர*
*விறல்மலை வெம்பிய போக்கறு வெஞ்சுரம்*

இதில் பாலை நிலத்தின் கொடிய வெப்பத்தோடு ஒப்பிட்டுக் கூறிய கொடுங்கோல் மன்னனின் குணத்தைக் காண்கின்றோம். கொடுங்கோல் மன்னனின் குணத்தைப் புலவர்

மிகச் சிறப்பான அடைமொழிகளால் எடுத்துக் கூறுகின்றார். நடுவு நிலைமையை முற்றாகக் கைவிட்டு ஆட்சிசெய்வதே கொடுங்கோல் மன்னனின் கொடுந்தன்மையாகும். தமர் என்றும் பிறர் என்றும் வேறுபாடு பாராமல், எல்லோரையும் வரவேற்று, நீதி வழங்குவதுதான் செங்கோலாகும். கொடுங்கோல் வேந்தன் எள்ளளவும் நடுவு நிலைமையைக் கொள்ளாமல் தனக்கு வேறானவரை மிகவும் வருத்துவான். "நடுவிகந்து ஒரீஇ" எனப் புலவர் கொடுங்கோல் மன்னனின் அறம்கெட்ட நெஞ்சத்தை அறிவிக்கின்றார்.

நடுவுநிலைமையை அடியோடு கைவிட்ட கொடுங்கோல் வேந்தன், அருள் இல்லாத அமைச்சரின் எண்ணப்படி கொடுமைகளைச் செய்து குடிகளைத் துன்புறுத்துவான். அறத்தை மறந்த அரசன் அருளை மறந்த அமைச்சரின் சொல்லைக் கேட்டுச் செய்கின்ற ஆட்சியிலே அகப்பட்ட மக்கள் பாலை நிலத்தில் வாழ்கின்ற மக்களிலும் பார்க்கப் பலகோடி மடங்கான துன்பத்தை அடைவார்கள்.

*"நயனிலான் வினைவாங்கக்*
*கொடிதோர்த்த மன்னவன்*
*கோல்போல ஞாயிறு*
*கடுகுபு கதிர்மூட்டிக்*
*காய்சினந் தெறுதலின்"*

என்ற அடிகளைப் படிக்கும்பொழுதே பாலை நிலத்தின் வெப்பத்திலும் கொடிய பண்பு வாய்ந்த கொடுங்கோல் வேந்தனின் கொடுமை தோன்றுகின்றது. கொடுங்கோல் மன்னன் சினங் கொண்டு சீறி, அருள் இல்லாத அமைச்சரின் சொல்லைக் கேட்டு, அழல் போலக் கொதித்துக் குடிகளுக்குச் சொல்ல முடியாத அல்லல்களைச் செய்வான். இதனை, "ஞாயிறு கடுகுபு கதிர்மூட்டி காய்சினந் தெறுதலின்" எனச் சூரியனுக்குக் கொடுத்த அடை மொழிகளால் அறிக .

இனிக் கொடுங்கோல் மன்னனின் ஆட்சியிலே அகப்பட்டுக் கிடந்து, மக்கள் அடைகின்ற அல்லலையும் புலவர் எமக்குக் கூறுகின்றார்.

*“உறல்ஊறு கமழ்கடாத்து*
*ஒல்கிய எழில்வேழம்*
*வறன்உழு நாஞ்சில்போல்*
*மருப்பூன்றி நிலம்சேர”*

என வரும் பகுதியைப் படியுங்கள். இதில், மதம் பொருந்திய இளம் யானை பாலை நிலத்தின் வெப்பத்தால் பட்ட அல்லல் சொல்லப்படுகின்றது. மதம் பொழிகின்ற யானை இடையறாமல் மதம் பொழிகின்றபடியால் வண்டுகள் மதத்தில் மொய்த்திருக்கும். இளமையும் எழிலும் நிரம்பிய யானை என்பதை அதன் மதத்திலே வண்டுகள் மொய்த்திருக்கும் என்பதால் அறிகின்றோம். பாலை நிலத்தின் வெப்பத்தினால் இந்த யானையின் இளமையும் மதம் பொழிகின்ற தருக்கும் எழிலும் அற்றுவிட்டன. வரண்ட நிலத்தை உழுகின்ற கலப்பையைப்போல் நிலத்திலே கொம்புகளை ஊன்றியவண்ணம், யானை எழும்ப முடியாமல் கிடந்து வருந்துகின்றது. இயல்பாகவே வெப்பம் பொருந்திய பாலை நிலத்தைச் சூரியனும் சினந்து சுட்டதினாலே யானையின் ஆற்றல் அழிந்து விட்டது.

நடுவுநிலையை முற்றாகக் கைவிட்ட மன்னவனைப் பாலை நிலமாகவும், அப்பாலை நிலத்தைத் தன் கதிர்களால் சுட்டுக் கொதிக்க வைக்கின்ற சூரியனை, அருளில்லாத அமைச்சனாகவும், வெப்பத்தால் தாக்குண்டு அல்லற்படுகின்ற யானையைக் கொடுங்கோல் மன்னனின் ஆட்சியிலே அகப்பட்டு அல்லற்படுகின்ற மக்களாகவும் கொள்ளலாம். யானை, இளமையும் எழிலும் மதமும் அற்றுப்போகக் கிடந்து வருந்துவது போலவே, கொடுங்கோல் மன்னனின் ஆட்சியில் அகப்பட்ட மக்களும் வீரமும் எழிலும் இளமையும் இல்லாதவராய், வறுமையால் வாடி வருந்துவார்கள் என்பதாம்.

பாலை நிலத்தில் உள்ள நீர்வளம் படைத்த மலையும் வரண்டுவிட்டது. பாலைவனத்தின் வழியாக ஒருவரும் போவ தில்லை என்பதையும் புலவர் கூறுகின்றார்.

*"விறன்மலை வெம்பிய*
*போக்கறு வெஞ்சுரம்"*

என்ற அடிகளைப் படியுங்கள். இதில் அக்கொடுங்கோல் மன்னனை எதிர்த்து வெல்லக்கூடிய ஆற்றல் உள்ளவர்கள் ஒருவரும் இல்லை என்பதையும் புலவர் குறிப்பாக உணர்த்துகின்றார். பிற நாட்டினரின் தொடர்பை விரும்பாமல் கொடுங்கோல் மன்னன் தன் நாட்டை ஆள்கின்றான் என்பதாம். கொடுங்கோல் வேந்தரின் ஆட்சி ஒழிய வேண்டும் என்ற துடிப்புடன், பாலை பாடிய கடுங்கோ கொடுங்கோல் வேந்தனின் குணங்களைக் கூறிக் கூறிக் கொதிக்கின்றார்.

# 6

# திருக்குற்றாலச் செந்தமிழ்

திருக்குற்றாலம் மலை சார்ந்த இடம். திருஞானசம்பந்தர் திருக்குற்றாலப் பதிகத்திலே, குற்றால மலைச்சாரலின் இயற்கைக் காட்சிகளையும் குற்றால நாதனின் அருட்செயல்களையும் ஒவ்வொரு பாடல்களிலும் இணைத்துப் பாடியுள்ளார். அக்குற்றாலப் பதிகப் பாடல்களின் செந்தமிழ்ச் சிறப்பை, அவை உணர்த்தும் குறிப்புப் பொருள்களை நயம்பட எடுத்துக் கூறும் கட்டுரைகள் இவை.

# மடமந்தி தீங்கனி மாந்தும் குற்றாலம்

திருக்குற்றாலமலை செந்தமிழ் பிறந்த சந்தனப் பொதிய மலையைச் சார்ந்து விளங்குகின்றது. பொதியமலையிலே பிறந்த தமிழ், தண் பொருனை ஆற்றிலே தவழ்ந்து, குற்றாலமலையிலே நடந்து, புலவர் நெஞ்சிலே கிடந்து, புதிய கவிதை ஊற்றாகச் சுரந்து பாய்கின்றது. குற்றாலமலையின் இயற்கை அழகை அள்ளிப் பாடிய தமிழ், அழியாத இனிமை யும் செழிப்பும் பொருந்திப் பொலிகின்றது. குற்றாலமலையின் இயற்கை அழகிலே ஈடுபட்ட தமிழர்கள், அங்கு இறைவன் திருவருளையுங்கண்டு மகிழ்ந்தார்கள். இயற்கை அழகிலே இறைவன் அருளைக்கண்டு போற்றுகின்ற மரபு தமிழரின் பிறப் புரிமை ஆகும். குழந்தைக் குரலாலே இறைவனைக் கூவி அழைத்த திருஞானசம்பந்தப் பெருமான் பாடிய குற்றாலச் செந்தமிழைக் கேளுங்கள்.

*மலையார்சாரல் மகவுடன்வந்த மடமந்தி*
*குலையார்வாழைத் தீங்கனிமாந்தும் குற்றாலம்*
*இலையார்சூலம் ஏந்தியகையான் எயிலெய்த*
*சிலையான்மேய நன்னகர்போலும் சிறுதொண்டீர்*

இந்தப் பாட்டிலே குற்றாலமலையின் இயற்கை அழகுடன் இறைவன் அருள்நலத்தையும் இணைத்துக் கூறுகின்ற குரலைக் கேட்கின்றோம். குற்றாலமலையின் சாரலிலே வாழைகள் செழித்து வளர்கின்றன. ஒவ்வொரு வாழையும் பல குலைகளை அடுக்கியபடியே நிற்கின்றது. மலைச்சாரலின் நிழலிலே நின்று ஒரு குறையும் இல்லாமல் வளர்ந்த வாழைகளிலே இனிமை

நிறைந்த கனிகள் நிரம்பி இருந்தன. ஒரு குலையில் பழுத்த கனிகள் ஒழியமுன் அடுத்த குலை பழுத்துவிடும். இங்ஙனம் இடையறாமல் என்றும் வாழைக் கனிகளைப் பெறக்கூடிய வாய்ப்பு குற்றால மலைச்சாரலிலே உண்டு. இக்குற்றாலமலையை அடுத்த காட்டிலே குரங்குகள் இருந்து வாழ்ந்தன. எப்பொழுதும் இலைகளையும் வேறு பழங்களையுமே உண்டு உண்டு அலுப்படைந்த குரங்குகள், குற்றால மலைச்சாரலிலே உள்ள இனிய வாழைக் கனிகளை உண்ண விரும்பின. மலைகளின் மேல் ஏறிக் குற்றால மலைச்சாரலை அடைதல் என்றால் எளிதான செயலன்று. வாழைக்கனியை உண்ண வேண்டுமென்று எண்ணிய குரங்குகள் பல, மலையின்மேல் ஏறிச் செல்லும் பொழுது ஏற்படும் வருத்தத்தை நினைத்து மனம் சோர்ந்து விட்டன. முயற்சி இல்லாமல் இருந்த இடத்திலே எளிதாகக் கிடைக்கின்ற காய் கனிகளை அருந்தி அருந்தி அக்குரங்குகள் இருந்துவிட்டன. அக்குரங்குகளின் கூட்டத்திலே உள்ள ஒரு பெண் குரங்கு எந்தவகையிலும் குற்றால மலைச்சாரலை அடைந்து, வாழைக்கனிகளை உண்ண வேண்டுமென்று எண்ணியது. இளமை நலம் நிரம்பிய அப்பெண் குரங்கு, தான் ஈன்ற குட்டியையும் ஏந்திய வண்ணம் குற்றாலமலையை நோக்கி வற்றாத ஆர்வத்துடன் வழிக்கொண்டது. வழிகளிலே உள்ள மலைகளிலே ஏறி ஏறி மிக வருத்தத்துடன் குற்றாலமலைச் சாரலை அடைந்தது. குட்டியைச் சுமந்து சென்ற வருத்தத் துடன் மலைகளைத் தாண்டிச் சென்ற வருத்தத்தையும் பொருட் படுத்தாமல் வாழைக்கனிகளை உண்ணவேண்டுமென்ற ஆர்வத்தினால் குற்றால மலைச்சாரலை அடைந்த அப்பெண் குரங்கு மிக மகிழ்ச்சிகொண்டது. தேன் சொரிகின்ற இனிய வாழைக்கனிகளைத் தேடிப் பெற்ற இன்பத்தினால், உள்ளம் செழித்த மந்தி தன் சிறிய குட்டிக்கும் கொடுத்துக் கொடுத்துத் தானும் உண்டது.

*மலையார்சாரல் மகவுடன்வந்த மடமந்தி*
*குலையார் வாழைத் தீங்கனிமாந்தும் குற்றாலம்*

என்ற அடிகளிலே அமைந்துள்ள பெருமிதச் சுவை, மந்தி முயன்று பெற்ற இன்பத்தின் சிறப்பைக் காட்டுகின்றது. இங்ஙனம் குற்றால மலைச்சாரலிலே உள்ள வாழைத் தீங்கனியை முயன்று பெற்ற மந்தியின் செயலிலே வைத்து, எமக்குமோர் நன்னெறியைச் சம்பந்தர் காட்டுகின்றார்.

நீண்டகாலம் உலக இன்பத்திலேயே ஊறிக் கிடந்து இளமை கழிந்தவுடன் ஏங்கி இறைவன் அருளைப்பெற முயலுதல் பெரும்பாலான மக்களின் பண்பாக இருப்பதைப் பார்க்கின்றோம். இளமை கழிய முன் உலகப்பற்றை விட்டு, இறைவன் அருளைப் பெற்று நுகர்கின்ற வாழ்வைச் சம்பந்தர் வரவேற்கின்றார். இளமைப் பருவத்திலே இறைவன் திருவருளைப் பெற்ற சம்பந்தர், எம்மையும் இளமை மாறமுன் இறைவன் அருளைப்பெற்று வாழும் வண்ணம் வழிகாட்டுகின்றார். இறைவனை எண்ணவும், அவன் அருளை நுகரவும், அவன் புகழைப் பாடவும், பாடிப் பாடி ஆடவும் ஏற்ற இளமைப் பருவத்தை உலகப் பற்றிலே கழித்த பின்பு வாழ்வின் ஒளி மறைந்து விடுகின்றது. முதுமைத் தளர்ச்சியால் உள்ளம் சோர்ந்து விடுகின்றது. குற்றால மலைச் சாரலிலே உள்ள வாழைக் கனியை உண்ண விரும்பிய மந்திபோல நாமும் இறைவனின் அருளைப் பெற முயலவேண்டும். எழுச்சியும் சிந்தனையும் நிறைந்த இளமைப் பருவத்தைச் சிறிய இன்பங்களை நுகர்தற்காக மட்டும் நாங்கள் பயன்படுத்து கின்றோம். நெடுங்காலமாகத் தான் உண்ட காய் கனிகளை வெறுத்து அவைகளிலும் நிறைந்த சுவை பொருந்திய வாழைக் கனியை உண்ண எண்ணிய மந்தியைப் போல, நாமும் உலக இன்பங்களை வெறுத்து இறைவன் திருவருள்வழி நின்று, பேரின்பத்தைப் பெறுதற்கு முயலவேண்டும். தனது குட்டியையும் சுமந்துகொண்டு, மலைகளின்மேலே ஏறி ஏறிக் குற்றாலமலைச் சாரலை அடைந்த மந்தியின் முயற்சியைப் பாருங்கள். நாமும் மனைவி, மக்கள், வாழ்வு என்ற சுமைகளைப் பொருட்படுத்தா மல், இறைவன் திருவருளைப் பெறுதலில் நிரம்பிய ஊக்க முடையவர்களாய்ச் செயல்புரிந்தால் வெற்றி காணலாம்.

உலகப் பற்று மிகப் பலவாக விரிந்து விரிந்து எம்மைப் பற்றுவதுபோல வாழைக்கனியை உண்ண வழிக்கொண்ட மந்தியின் செயலைப் பல மலைகள் நின்று தடுத்தன. "மலையார்சாரல்" என்ற தொடர் இதனைக் காட்டுகின்றது. வழிகளிலே உள்ள மலைகள் மந்தியைத் தடுத்தது போல பலவகையான உலகப் பற்றுக்களும் இறைவன் அருளைப்பெற முயல்கின்ற எம்மைத் தடுக்க முற்படுமென்பதை அடிகள் உணர்த்துகின்றார். உலகப்பற்றின் ஆற்றலை உணர்த்த மலை யோடு ஒப்பிட்டுக் கூறினார். மலைகளின் தடையைப் பொருட் படுத்தாமல் ஏறிக் குற்றால மலைச்சாரலை அடைந்த மந்தியைப் போல நாமும் உலகப்பற்றின் மோதலைப் பொருட்படுத்தாமல் இறைவன் திருவருளைப் பெறுதற்குப் பாடுபட வேண்டும் என்பதாம். எவ்வளவு முயன்றாலும் உலகப்பற்று எம்மை விட்டு நீங்காமல் நிற்க நேரிடும். அங்ஙனம் நீங்காமல் நின்றாலும், அதனை அடக்கி இறைவனை அடையவேண்டுமென்பதை விளக்க "மகவுடன் சென்ற மட மந்தி" என்றார். இளமைப் பருவம் நீங்க முன்பு முயன்றால்தான், இறைவன் திருவருளை நெடிது நுகர்ந்து வாழலாம் என்பதை நினைவூட்ட "மடமந்தி" என மந்தியின் இளமைப் பருவத்தைச் சுட்டிக் கூறினார்.

இனி, இங்ஙனம் இளமைப் பருவத்திலேயே, இறைவன் திருவருளைப்பெற எண்ணி உலகப் பற்றைத் துறந்த அறிஞர்கள், திருவருள் நலத்தை நுகர்ந்து பெற்ற சிற்றின்பத்தையும் பேரின்ப மாகக் கொண்டு வாழ்வார்கள். இதனை

*"குலையார்வாழைத் தீங்கனிமாந்தும் குற்றாலம்"*

என்ற அடிகளால் உணர்க. என்றும் ஒரே தன்மையாக உள்ள பேரின்ப வாழ்வை நுகர்ந்து விளங்குகின்ற நிலையை, "குலையார் வாழைத் தீங்கனி மாந்தும்" என்ற தொடரால் நினை வூட்டுகின்றார். குலைகள் நிறைந்திருப்பதால் இடையறாது மந்தி வாழைக்கனியைப் பெற்று நுகர்வதுபோல நாமும் பேரின்பத்தை நுகரலாம் என்பதே கருத்து. உலக இன்பம் நிலையில்லாதது,

பேரின்பம் என்றும் உள்ளதென்பதை உணர்த்தத் "தீங்கனி மாந்தி" என்று கூறினார். தெவிட்டாத பேரின்பம் என்பதாம். மாந்துதல் — இடையறாது நுகர்தல்.

இங்ஙனம் குற்றாலத்தின் இயற்கை வளத்தைக் கூறுவது போல, எமது வாழ்க்கை வளத்துக்கும் வழிகாட்டிய சம்பந்தர் இறைவனின் தன்மையைக் கூறுகின்றார்.

*"இலையார்சூலம் ஏந்தியகையான் எயிலெய்த*
*சிலையான்மேய நன்னகர்போலும் சிறுதொண்டர்"*

என்பதாம். இதிலே இறைவனின் முழுமுதல் தன்மை கூறப்படுகின்றது. தன்னோடு மாறுபட்டவர்களை அழித்து, அறத்தை நிலைநாட்டுகின்ற முதல்வனாக இறைவன் விளங்கு கின்றான். எங்களை இறைவன் திருவடிக்கு ஆளாகாமல் தடுத்து நிற்கின்ற மும்மலங்களையும் போக்கிப் புரக்கின்ற திருவருளின் ஆற்றலை, "எயில் எய்த சிலையான்" என்ற தொடரால் சுட்டிக்காட்டுகின்றார். எனவே, இதனால் குற்றாலத்தில் எழுந்தருளி இருக்கின்ற இறைவனை வணங்கினால் மும்மலப் பிணிப்பில் நின்று நீங்கி வீட்டின்ப வாழ்வைப் பெறலாம் என்பதைக் குறிப்பாகக் கூறுகின்றார். இங்ஙனம், இயற்கை எழிலுடன் இறைவன் அருளையும் எமக்குக் காட்ட எண்ணிச் சம்பந்தர் பாடிய,

*"மலையார்சாரல் மகவுடன்வந்த மடமந்தி*
*குலையார்வாழைத் தீங்கனிமாந்தும் குற்றாலம்"*

என்ற செந்தமிழ் உடன்,

*"தாழைப்பொழில் ஊடேசென்று பூழைத்தலை நுழைந்து*
*வாழைக்கனி கூழைக்குரங் குண்ணும் மறைக்காடே"*

என வரும் சுந்தரர் செந்தமிழை ஒப்பிட்டு நோக்குங்கள். இளமையிலேயே இறைவன் திருவருள் இன்பத்தில் ஊறித் திளைத்த இரு அன்பர்களின் குரலிலும் இளமை மாற முன்பே இறைவன் அருளை அடைய முயலுங்கள் என உலக மக்களைக் கூவி வழிகாட்டுகின்ற ஆராமை நிழலாடுகின்றது.

# நீலக் கண்ணியர் ஏனல் உண் கிளி ஓப்பும் குற்றாலம்

குற்றால மலைச்சாரலிலே குறவர்கள் வாழ்வார்கள். அவர்கள் மலைச்சாரலைப் பண்படுத்தித் தினை விதைப்பார்கள். விதைத்த தினை கதிர் ஈன்று விளையும் பருவத்திலே, இளம் பெண்கள் தினைப் புனங்களைக் காவல் செய்வார்கள். கிளி முதலான பறவைகள் முற்றிய கதிர்களைக் கொய்து கொண்டு போகாமல் கலைத்தலே அப்பெண்களின் கடமை யாகும். கள்ளம் அறியாத இளம் பருவத்துப் பெண்கள் துள்ளி ஓடி ஆடிக் கிளிகளைக் கலைப்பார்கள். இங்ஙனம் இளம் பெண்கள் தினைப்புனங்களிலே இருந்து கிளிகளைக் கலைக் கின்ற காட்சியைத் திருஞானசம்பந்தர் கண்டார். அருளிலே ஊறித் திளைத்த அவரின் உள்ளம் இயற்கை அழகிலே படிந்து எழுகின்ற குரலைக் கேளுங்கள்,

*மைம்மாநீலக் கண்ணியர்சாரல் மணிவாரிக்*
*கொய்ம்மாஏனல் உண்கிளிஓப்பும் குற்றாலம்*
*கைம்மாவேழத் தீருரிபோர்த்த கடவுள்எம்*
*பெம்மான்மேய நன்னகர்போலும் பெரியீர்காள்*

இந்தப் பாட்டிலே தினைப்புனத்தைக் காக்கின்ற இளம் பெண்களின் செயலுடன், சிவபெருமானின் அருட்செயல்களும் கூறப்படுகின்றன. நீல மலர் போலும் கண்களை உடைய இளம் பெண்கள், மிக ஊக்கத்துடனே தினைக் கதிர்களைக் கொய்ய வருகின்ற கிளிகளைக் காண்கின்றார்கள். முற்றி விளைந்த தினைக் கதிரைக் கவர்ந்து உண்ண வந்த கிளிகளைக்

கலைத்துத் தினைக் கதிர்களைக் காப்பாற்ற வேண்டுமென்ற ஒரே எண்ணம் அந்த இளம் பெண்களுடைய மனதில் நிலை பெற்றுவிட்டது. அவர்கள் மலைச்சாரலிலே கிடக்கின்ற மாணிக்கக் கற்களை வாரி வாரி எறிந்து கிளிகளைக் கலைத்தார்கள்.

> *"கைம்மாநீலக் கண்ணியர்சாரல் மணிவாரிக்*
> *................ ஏனல் உண்கிளிஓப்பும் குற்றாலம்"*

என வருகின்ற, சம்பந்தரின் குரலிலே எழுகின்ற ஆர்வம் அந்த இளம் பெண்கள் எம் கண் முன்னே நின்று, கிளிகளைக் கலைப்பது போன்ற உணர்ச்சியை ஊட்டுகின்றது.

இளமை எழுச்சி நிரம்பிய அப்பெண்கள் விரைந்து சென்று மணிகளை வாரி எறிகின்றார்கள். மாணிக்கக் கற்களிலும் பார்க்கத் தாம் பாடுபட்டு விளைவித்த தினையை மிக மேலாக மதிக்கின்றார்கள். தினைக் கதிர்களைக் கொய்ய வருகின்ற பச்சைக் கிளிகளின் அழகிலே மயங்காமல் அவற்றைக் கலைக் கின்ற மனத்திண்மையும் அப்பெண்களிடம் அமைந்துவிட்டது. இவற்றை எல்லாம் சிந்தித்த சம்பந்தர், "கைம்மா நீலக் கண்ணியர்" என அப்பெண்களின் இளமைப் பருவத்தைச் சிறப்பாக எடுத்துச்சொல்கின்றார் மிக இளமைப் பருவத் தினராய் இருந்தும், மாணிக்கக் கற்களின் அழகிலும், கிளிகளின் அழகிலும் மயங்காமல், தமக்குரிய தினைக் கதிர்களைக் காப்பாற்றினார்கள் என்பதைச் சம்பந்தர் விளக்குகின்றார்.

இங்ஙனம் தினைப்புனங் காத்த குறச் சிறுமிகளின் செயல் களைக் கூறிய சம்பந்தர் எமக்கும் ஓர் நல்வாழ்வைக் காட்டு கின்றார். இளஞ்சிறுமிகள் தமக்குரிய தினைக் கதிர்களைக் காக்க முற்பட்டதுபோல நாமும் எமக்குரிய தெய்வ உணர்ச்சியை இளமைப் பருவத்திலே வளர்க்க வேண்டும். பலபல நூற்றாண்டு களாக எமது முன்னோர்கள் நமது நெஞ்சிலே வித்திட்டு விளைவு செய்த தெய்வ உணர்ச்சியை நாம் பாதுகாத்து வாழவேண்டும்.

விளைந்த தினைக் கதிர்களைக் கொய்து கொண்டுபோக வருகின்ற கிளிகளைப்போல எமது உள்ளத்தில் உள்ள உணர்ச்சியை ஐம்புல வேட்கைகள் அழிக்க முற்படுகின்றன. அந்த ஐம்புல வேட்கைகள் பொன்னும் பொருளும் போகமும் என்ற இவற்றையே எமக்குக் காட்டுகின்றன. பொன்னையும் பொருளையும் போகத்தையும் விரும்பித் தெய்வ உணர்ச்சியை மறந்தோமானால் நாம் உய்வடையமுடியாது.

*"யாம் இரப்பவை*
*பொன்னும் பொருளும்*
*போகமும் அல்ல*
*நின்பால் அருளும் அன்பும்*
*அறனும் மூன்றும்*
*உருள் இணர்க் கடம்பின்*
*ஒலி தாராயோ"*

எனக் கடுவனிளவெயினனார் முருகனை வேண்டுகின்றார். நாங்கள் மாணிக்கக் கற்களை வாரி எறிந்து கிளிகளைக் கலைக்கின்ற குறச்சிறுமிகளைப் போலப் பொன்னும் பொருளும் போகமும் என்ற இவற்றிலே பற்று வையாமல் ஐம்புலன்களையும் அடக்கித் தெய்வ உணர்ச்சியைக் காப்பாற்றவேண்டும்.

கிளிகள் ஐம்புலன்களையும், தினை தெய்வ உணர்ச்சியையும், மாணிக்கக் கற்கள் ஐம்புல நுகர்ச்சிக்குரிய பொன் பொருள் போகம் என்பவற்றையும், குறச்சிறுமிகள் மெய்யுணர்ச்சி கைவந்த உயிர்களையும் (ஆன்மாக்களையும்) குறிப்பாக உணர்த்துகின்றன. ஐம்புலன்களால் அலைக்கப்பட்டுத் தெய்வ உணர்ச்சியை மறவாமல், எமது உள்ளத்தை நிலைப்படுத்த வேண்டுமென்பதாம்.

இனி இளமைப் பருவத்தின் எழுச்சியினால் விரைந்து சென்று மணிகளை வாரிக் கிளிகளைக் கலைக்கின்ற குறச்சிறுமி

களைப் போல நாமும் இளமைப் பருவத்திலேயே ஐம்புல வேட்கைகளை அடக்கித் தெய்வ உணர்ச்சி உடையவராக வாழவேண்டும் என்பதும் சம்பந்தரின் விருப்பமாகும். தினைக் கதிரைக் கொய்யவருகின்ற கிளி பச்சை நிறம் வாய்ந்து மிக அழகாக இருப்பதுபோல ஐம்புல நுகர்வுகளும் மிக இன்பம் உடையனவாகத் தோன்றும் என்பதையும் காட்டுகின்றார். மாணிக்கக் கற்களை எறிந்து கிளியைக் கலைத்த குறச்சிறுமி களைப்போல நாமும் உலக நுகர்ச்சிகளை உதறித் தள்ளி, திருவருளைப் பெற்று வாழ முயலவேண்டும் என்பதையும் உணர்த்துகின்றார்.

இனி, இங்ஙனம் குற்றால மலைச்சாரலிலே நின்று தினைப் புனங் காக்கின்ற குறச் சிறுமிகளின் செயல்களைத் துணையாகக் கொண்டு எமக்கு உணர்ச்சி ஊட்டிய சம்பந்தர் குற்றால நாதனின் அருள் ஆற்றலையும் அறிவிக்கின்றார்.

*"கைம்மாவேழத் தீருரிபோர்த்த கடவுள்எம்*
*பெம்மான்மேய நன்னகர்போலும் பெரியீர்காள்"*

இதில் குற்றாலத்தில் கோவில் கொண்டிருக்கும் இறைவனின் சிறப்பைப் பாராட்டி உரைக்கின்றார். மதம் மிகுந்த யானையைக் கொன்று அதன் தோலைப் போர்த்தவன் என இறைவனைப் போற்றுகின்றார். எம்மை மயக்கித் தெய்வ உணர்ச்சியை அழிக்க முயல்கின்ற ஆணவம் என்னும் யானையின் மதத்தை அடக்கி, எம்மை ஆட்கொள்ள வல்லவன் என்பதே கருத்தாகும். ஆணவத்தால் இறைவன் தாக்கப்படான் என்பதும், ஆணவமலம் இறைவன் திருவருளின் முன் அடங்கிவிடுமென்பதும் மெய்கண்ட நூல் முடிவாகும்.

*"கைம்மாவேழத் தீருரி போர்த்த கடவுள்"*

என்ற குரலிலே எழுகின்ற பெருமிதச் சுவை இறைவனின் ஆற்றலை உணர்த்துகின்றது. இங்ஙனம் அருள் ஆற்றல்

நிரம்பிய இறைவன் குற்றாலத்திலே வீற்றிருந்து அருள் நிதியை அளிக்கின்றான். உலகப்பற்றிலே செல்கின்ற சிந்தையை மடக்கிக் குற்றால நாதனையே நினைந்து நினைந்து வழிபட்டால் நிலையான பேரின்பப் பேற்றை அடையலாம் என்பதைச் சம்பந்தர் எமக்குக் கூறுகின்றார்.

*"பெம்மான்மேய நன்னகர் போலும் பெரியீர்காள்"*

என எம்மை ஆர்வக் குரலால் அழைத்து அறிவிக்கின்ற சம்பந்தரின் செந்தமிழ் குற்றால மலையின் அருவி ஊற்றைப் போல எம் உள்ளத்தில் அருள் ஊற்றைப் பெருக்குகின்றது. குற்றால மலைச்சாரலிலே நின்று, தினைப்புனத்தைக் காக்கின்ற குறச்சிறுமிகள் சம்பந்தரின் செந்தமிழிலே இடம் பெற்று என்றும் வாழ்கின்றார்கள். குற்றாலச் செந்தமிழைப் பாடிப்பாடி நாமும் இன்பம் அடைகின்றோம்.

# கோல மஞ்ஞை பேடையொடு ஆடும் குற்றாலம்

**கு**ற்றால மலைச்சாரலிலே சோலைகள் பல இருந்தன. அச்சோலைகளைச் சூழ்ந்து குளிர்நீர்ப் பொய்கைகள் விளங்கின. பொய்கைகளின் நீர்ப்பரப்பிலே நீல நெய்தல்கள் மலர்ந்து அசைந்தன. சோலைகளின் நடுவிலே நின்று நீலக் கோலக் கலாபத்தை அகல விரித்துத் தம் காதல் பேடைகள் கண்டு களிக்கும் வண்ணம் வண்ண மயில்கள் ஆடின. இங்ஙனம் கண்ணையும் நெஞ்சையும் அள்ளும் காட்சிகளைக் கண்ட சம்பந்தர் ஆவி தளிர்த்தார். இயற்கை இன்பத்தில் நிழலாடும் இறை ஒளியை எண்ணி எண்ணி இன்பம் அடைந்தார்.

*நீலநெய்தல் தண்சுனைசூழ்ந்த நீள்சோலைக்*
*கோலமஞ்ஞை பேடையொடாடுங் குற்றாலம்*
*காலன்தன்னைக் காலாற்காய்ந்த கடவுள்எம்*
*சூலபாணி நன்னகர்போலும் தொழுவீர்காள்*

இந்தப் பாட்டிலே சம்பந்தரின் எழுச்சி நிரம்பிய ஆர்வக் குரலைக் கேட்கின்றோம். குற்றால மலைச்சாரலிலே குளிர்நீர்ப் பொய்கைகளும் அவற்றை அடுத்துச் சோலைகளும் இருப்பதால் அங்கு மயில்கள் நிலைத்து வாழ்கின்றன. மலையில் நின்று சுரக்கும் அருவி பொய்கைகளை நிரப்ப, பொய்கைகள் பூஞ்சோலைகளை வளம்படுத்த, பூஞ்சோலைகள் மயில் இனங்களை மகிழ்விக்கின்றன என்பதை உணர்கின்றோம். மழை முகிலைக் கண்டு மகிழ்ந்தாடுகின்ற மயில்கள் நீர்வளத்தால் செழித்து வளர்ந்த சோலைகளிலே வந்து படிகின்ற மழை முகிலைக் கண்டும், சோலைகளின் இருண்ட நிறத்தை மழை முகில் என்று மருண்டு நோக்கியும் மகிழ்ந்து மகிழ்ந்து ஆடுகின்றன.

குறைவில்லாத நிழலும் நீரும் உணவும் கிடைப்பதால் உள்ளம் மலர்ந்த மயில்கள் தம் காதல் பேடைகளுடன் களித்துப் போக நுகர்ச்சி பெற்று வாழ்கின்றன. குற்றால மலைச்சாரலாய் இருப்பதால், தமக்கு இன்னல் வருமென்ற உணர்ச்சி இல்லாமலே அம் மயில்கள் பரம்பரை பரம்பரையாக வாழ்ந்துவருகின்றன. தெய்வமலையின் சாரலிலே வாழ்கின்ற உயிர்களை இன்னல் புரிய ஒருவரும் எண்ணமாட்டார்கள் என்பது எல்லோரும் அறிந்த உண்மையாகும்.

இங்ஙனம் குற்றால மலைச்சாரலிலே மயில் இனங்கள் அடைகின்ற இன்பவாழ்விலே வைத்து, எமக்கும் ஓர் உண்மையைச் சம்பந்தர் உணர்த்துகின்றார். உலகியல் வாழ்வில் ஈடுபட்டிருக் கின்ற நாமும் இறைவன் திருவருளைப் பெற்று வாழ முடியும் என்பதைச் சம்பந்தர் தெளிவுபடுத்துகின்றார். குளிர்ந்த பொய்கை களால் சூழப்பட்ட சோலைகளிலே மயில்கள் போகம் நுகர்ந்து மகிழ்வது போல நாமும் திருவருளின் வழி நின்று இல்லற இன்பத்தை நுகரலாம். பொய்கையைத் திருவருள் ஆகவும், பொய்கையின் நீர்வளத்தால் செழித்து வளர்கின்ற சோலையைத் திருவருள் வழி நின்று பெறுகின்ற நுகர் பொருள் ஆகவும், சோலையின் நடுவே நின்று பேடையோடு ஆடுகின்ற ஆண் மயிலைத் திருவருளின் வழி நின்று தன் காதல் மனையாளோடு போகந் துய்க்கின்ற தலைவனாகவும் கொள்ளலாம்.

*"நீலநெய்தல் தண்சுனைசூழ்ந்த நீள்சோலைக்*
*கோலமஞ்ஞை பேடையொடாடுங் குற்றாலம்"*

என்ற அடிகளை இனிப் படித்துப்பாருங்கள். சம்பந்தரின் உள்ளத்திலே சுரந்து பாய்கின்ற அருள் உணர்ச்சி எம்மையும் உருக்குகின்றது.

பொய்கையைத் தண்சுனை என்று சிறப்பிக்கின்றார். திருவருள் என்றும் இன்பமானதென்பதே இதன் கருத்தாகும். இனித் திருவருளால் ஆட்கொள்ளப்பட்டு எமக்கும் வழி காட்டு கின்ற அடியார்களை நினைவூட்டுதற்காக "நீல நெய்தல் தண்சுனை" என்று கூறினார். "நீலநெய்தல்" என்றும் தண்ணீரை

விட்டு வாழமுடியாதவைகள்; அதேபோல இறைவன் திருவருளைப் பெற்ற அடியார்களும் இறைவன் திருவருளை விட்டு நீங்கி வாழார்கள் என்பதாம். பொய்கையிலே நீர் இல்லாவிட்டால் சோலை செழித்து வளராது. இறைவன் எமக்குத் திருவருளை அளிக்காவிட்டால் நாம் இன்பமாக வாழமுடியாது. பொய்கை நீரால் சோலை செழிப்பது போல இறைவன் திருவருளால் நுகர் பொருள்கள் எமக்குக் கிடைக்கின்றன.

*வகுத்தான் வகுத்த வகையல்லால் கோடி*
*தொகுத்தார்க்கும் துய்த்தல் அரிது*

என்பது திருக்குறள். "கோலமஞ்ஞை பேடையொடாடும்" என்பதால் இளமை மாறாத தலைவன் திருவருளின் வழி நின்று, தன் காதல் மனையாளுடன் போகந்துய்க்கலாம் என்பதை நினைவூட்டுகின்றார். இளமைப் பருவத்தின் எழுச்சியால் சிற்றின்ப நுகர்வில் மயங்கி இறைவனை மறந்து போகாமல் வாழவேண்டுமென்பதை உணர்த்த,

*"கோலமஞ்ஞை பேடையொடாடும்"*

எனக் கூறினார். பொய்கையின் நீர்வளத்தினால்தான் சோலை செழிக்கின்றது என்பதை மயில் மறந்துவிடாமல் பொய்கைக் கரையை அடுத்துள்ள சோலையிலே வாழ்வது போல நாமும் இறைவன் திருவருளாலேதான் நுகர் பொருள்கள் எமக்குக் கிடைக் கின்றன என்னும் உணர்ச்சியுடன் போகத்தை நுகர வேண்டும்.

*"பொன்னும்மெய்ப் பொருளும் தருவானைப்*
*போகமும் திருவும் புணர்ப்பானை"*

என வரும் சுந்தரர் செந்தமிழை நோக்குக. இறைவன் தமது திருவருளால் போக நுகர்ச்சியையும் அடியார்களுக்கு ஈந்து ஈடேற்றுவான் என்பதை,

*மண்ணில்நல் லவண்ணம் வாழலாம் வைகலும்*
*எண்ணில்நல் லகதிக்கி யாதுமோர் குறைவிலைக்*

*கண்ணில்நல் ல::துறும் கழுமல வளநகர்ப்*
*பெண்ணினல் லாளொடும் பெருந்தகை இருந்ததே*

எனச் சம்பந்தர் விளக்கிக் கூறுகின்றார். இல்லறத்தில் போகம் நுகர்ந்துகொண்டே திருவருளை அடையலாம் என்பதை உலக மக்களுக்கு உணர்த்துதற்காக இறைவன் மங்கை யொருபாகனாக வீற்றிருக்கின்றான் என்பதை

*"பெண்ணினல் லாளொடும் பெருந்தகை இருந்ததே"*

என்ற தொடர் எமக்கு உணர்த்துகின்றது.

*"கோலமஞ்ஞை பேடையொடாடும் குற்றாலம்"*

என்ற தொடருடன்,

*"பெண்ணின்னல் லாளொடும் பெருந்தகை இருந்ததே"*

என்ற தொடரையும் ஒப்பிட்டுப் பாருங்கள்.

இங்ஙனம் போக நுகர்ச்சியும் இறைவன் திருவருளால் கிடைக்கின்றது என்பதை உணர்த்தியதுடன் சம்பந்தர் குற்றால மலைச்சாரலையும் எமக்கு நினைவூட்டி மகிழ்விக்கின்றார். குற்றால மலைச்சாரலிலே உள்ள சோலையில் நின்று ஆடுகின்ற கோலமயில் தன் காதற் பேடையுடன் கலந்து நுகர்கின்ற போகம் பெரும் போகமாய் நிறைந்துவிட்டது.

இனி இங்ஙனம் குற்றாலச் சிறப்பைக் கூறிய சம்பந்தர் குற்றால நாதனையும் எமக்கு நினைவூட்டுகின்றார்.

*"காலன்தன்னைக் காலாற்காய்ந்த கடவுள்எம்*
*சூலபாணி நன்னகர்போலும் தொழுவீர்காள்"*

எனக் குற்றால நாதனைப் போற்றி உரைக்கின்றார். குற்றால நாதனைத் தொழுதால் பெற்ற சிற்றின்பம் பேரின்ப மாக மாறுவதுடன், காலனுக்கும் அஞ்சாத பெருவாழ்வையும் அளிக்கும். இறைவன் அடியார்களுக்கு வருகின்ற இடர்களைப் போக்கிக் காப்பாற்றுவதற்காகச் சூலப்படையை ஏந்திய

வண்ணம் இருக்கின்றான். அவன் வீற்றிருக்கின்ற குற்றாலத்தைத் தொழுங்கள். தொழுதால் காலனையும் கடக்கலாம் என்பதைக் கருத்தில் வையுங்கள்.

*"காலன்தன்னைக் காலால்*
*காய்ந்த கடவுள்"*

*என்ற தொடருடன்.*

*"நாமார்க்குங் குடியல்லோம்*
*நமனை அஞ்சோம்"*

என வரும் நாவுக்கரசர் செந்தமிழையும் சேர்த்துப் படியுங்கள். காலனைக் காய்ந்த கடவுளைக் கருத்தில் இருத்திய அன்பர்கள் காலம் கடந்து வாழ்பவர்கள். சம்பந்தரின் மெய்யுணர்ச்சியுடன் குற்றால மலைச்சாரலிலே உள்ள பொருள்கள் கலந்து கலந்து தெய்வ உருவம் பெறுகின்ற சிறப்பைக் கண்டோம். குற்றால மலைச் சாரலில் உள்ள சோலையிலே தன் காதற் பேடையுடன் ஆடிக் களித்த கோல மயில் சம்பந்தர் செந்தமிழில் இடம் பெற்று, எம்மையும் வாழ்விக்கின்றது.

# சிறைவண்டு செவ்வழி பாடும் குற்றாலம்

குற்றால மலைச்சாரலிலே குளிர்ந்த பல சோலைகள் இருந்தன. மலைவளத்தால் வளர்க்கப்பட்ட சோலைகள், மலர் வளம்படைத்து விளங்கின. மலர்களிலே நிறைந்த தேனை உண்டு மகிழ்ந்த வண்டுகளின் இன்பவாழ்வு திருஞான சம்பந்தரின் உள்ளத்தைக் கவர்ந்தது. "என் உள்ளங் கவர் கள்வன்" என இறைவனைப் பாடிய அவர் பாடுகின்ற இன்பக் குரலைக் கேளுங்கள்.

*பெருந்தண்சாரல் வாழ்சிறைவண்டு பெடைபுல்கிக்*
*குருந்தம்ஏறிச் செவ்வழிபாடும் குற்றாலம்*
*இருந்துண்தேரும் நின்றுண்சமணும் எடுத்தார்ப்ப*
*அருந்தண்மேய நன்னகர்போலும் அடியீர்காள்*

இதிலே வண்டுகளின் இன்பவாழ்வு சொல்லப்படுகின்றது. குளிர்ந்த சோலைகளிலே உள்ள புதுமலர்களில் சுரந்த தேனை அருந்திய ஆண்வண்டு தன் காதலுக்குரிய பெண்வண்டைத் தழுவி மகிழ்கின்றது. மகிழ்ச்சிப் பெருக்கினால் கருத்து ஒருமித்த அக் காதல் வண்டுகள் குருந்த மரத்தின் மேலே இருந்து, செவ்வழியென்னும் பண்ணைப் பாடிப் பாடிச் சிந்தை செழித்தன. இங்ஙனம் மலரில் ஊறிய தேனை உண்டும் கூடியும் பாடியும் தம்முள் ஆரா இன்பத்தை அடைகின்ற வண்டுகளின் பெருவாழ்வைச் சம்பந்தர் எமக்கும் நினைவூட்டுகின்றார். குற்றால மலைச் சோலையிலே குடிபுகுந்த வண்டுகள், வற்றாத தேனை உண்டு மகிழ்தல் போல, நாமும் குற்றால நாதனின் திருவருளைச் சார்ந்து என்றும் உள்ள பேரின்பத்தை நுகர வேண்டுமென்பதே சம்பந்தர் கருத்தாகும்.

குற்றால மலைச்சாரலிலே உள்ள குளிர்ந்த சோலை, குற்றாலமலையில் எழுந்தருளி இருக்கின்ற இறைவனின் திருவருளையும், சோலையில் உள்ள மலர்கள் இறைவன் திருவருளால் உளவாகும் போகப் பொருள்களையும், மலர்களிலே உள்ள தேனை வண்டுகள் உண்ணுதல் போகப் பொருள்களை உயிர்கள் (ஆன்மாக்கள்) நுகர்தலையும், தேனை உண்ட ஆண்வண்டு பெண்வண்டைத் தழுவி மகிழ்தல் போக நுகர்ச்சியில் ஈடுபட்ட உயிர்களின் ஈடுபாட்டையும், இங்ஙனம் ஆணும் பெண்ணுமாகக் கலந்து போக நுகர்ச்சியிலே ஈடுபட்ட வண்டுகள் அவ்வளவில் அமையாமல் குருந்தமரத்தில் ஏறுதல், பெற்ற சிற்றின்பத்திலே மயங்கி அவ்வளவில் நில்லாமல் பேரின்பத்தை அடைய முயல்கின்ற உயிரின் (ஆன்மாவின்) முயற்சியையும், குருந்தமரத்தில் ஏறிய வண்டுகள் செவ்வழி பாடுதல், சிற்றின்பத்தில் மயங்காமல் பேரின்பத்தைப் பெறமுயன்ற உயிர்கள் பேரின்பவாழ்வில் வீற்றிருந்து அடைகின்ற ஆனந்தத் தையும் குறிப்பாகக் காட்டுகின்றன. இனி,

*"பெருந்தண்சாரல் வாழ்சிறைவண்டு பெடைபுல்கிக்*
*குருந்தம்ஏறிச் செவ்வழிபாடும் குற்றாலம்"*

என்ற தொடர்களைப் படித்துப் பாருங்கள். வண்டுகள் பெற்ற பெருவாழ்வை நாம் ஏன் பெறமுடியாதென்ற உணர்ச்சி எம் உள்ளத்தைத் தொடுகின்றது.

குற்றாலமலை, குற்றாலமலையை அடுத்துச் சோலைகள், சோலைகளிலே மலர்ந்த புது மலர்கள், மலர்களிலே வழிகின்ற தேன், தேனை உண்டு காதல் இன்பம் நுகர்கின்ற வண்டுகள், இங்ஙனம் காதல் இன்ப நுகர்ச்சியுடன் அமையாது குருந்த மரத்தில் ஏறிச் செவ்வழி பாடுகின்ற வண்டுகளின் பெருவாழ்வு என்னும் இவற்றை நோக்குங்கள். ஒன்றின் பயன் ஒன்றாகத் தொடர்ந்து தொடர்ந்து வருகின்றன. இங்ஙனமே நாங்கள் செய்த வினைப்பயன்களும் முன்வினையாய், நுகர்வினையாய், செய்வினையாய் எம்மைத் தொடர்ந்து வருகின்றன.

என்றும் ஒரே தன்மையாக நின்று எம்மை வாழ்விக்கும் திருவருளின் தன்மையை உணர்த்தப் "பெரும் தண்சாரல்" என்று மலைச்சாரலைச் சிறப்பித்துக் கூறினார். பெருமை, தண்மை எனும் இரண்டு சொற்களும் திருவருளின் அளக்க முடியாத அகலத்தையும், நுகர நுகரத் தெவிட்டாத செழுமையையும் உணர்த்துகின்றன. "வாழ்சிறை வண்டு" என்பதினால், இளமைப் பருவத்திலேயே திருவருளின் வழிநின்று செயலாற்றுகின்ற சிறப்பை உணர்த்துகின்றார். உடலுறுப்புகள் ஆற்றல் அழியுமுன் இறைவனை எண்ணி ஆனந்தக் கூத்தாட வேண்டுமென்பதாம்.

*நாச்செற்று விக்குள்மேல் வாராமுன் நல்வினை*
*மேற்சென்று செய்யப் படும்*

என்பது திருக்குறள். இனி இளமையிலே திருவருள் காட்டிய வழியிலே நின்று வாழ்கின்றவன், தன் காதல் மனையாளோடு கலந்து போகம் நுகர்கின்றபோதும், திருவருளின் நிழலை விட்டுப் பிரியான் என்பதையும் உணர்த்துகின்றார்.

*"வாழ்சிறைவண்டு பெடைபுல்கி"*

*என்ற தொடர், இதனை விளக்குகின்றது.*

*"ஆணும் பெண்ணுமாய் அடியார்க் கருள்நல்கிச்*
*சேணின் றவர்க்கின்னஞ் சிந்தை செயவல்லான்"*

*என வரும் சம்பந்தர் குரலுடன்,*

*"வாழ்சிறைவண்டு பெடைபுல்கி"*

என்ற குரலையும் ஒப்பிட்டுப் பாருங்கள். போகமும் வீடும் திருவருள் பேறுகள் என்பதை இதனால் தெளிகின்றோம். இங்ஙனம் பெற்ற சிற்றின்பத்தையே பேரின்பமாகக் கண்டு சிறக்கின்ற பெருவாழ்வையும் சம்பந்தர் எமக்கு விளக்குகின்றார். இதனை,

*"குருந்தம்ஏறிச் செவ்வழிபாடும் குற்றாலம்"*

என்ற தொடரால் அறிகின்றோம். காதல் இருவராகக் கலந்து வாழ்ந்து பண்பட்டவர்கள், வீட்டின்ப நெறியை அடைந்து, ஆரா இன்பம் துய்த்துப் பேரானந்தம் பெறுகின்ற செயலைச் சம்பந்தர் மிக ஆராமையோடு சொல்கின்றார்.

*"குருந்தம்ஏறிச் செவ்வழிபாடும் குற்றாலம்"*

என்ற தொடர், இதனை வலியுறுத்துகின்றது.

இனி இங்ஙனம், பேரின்பப் பெருவாழ்வை அளிக்கின்ற திருக்குற்றால நாதனின் அருள் ஆற்றலையும் சம்பந்தர் ஆராய்கின்றார்.

*"இருந்துண்தேரும் நின்றுண்சமணும் எடுத்தார்ப்ப*
*அருந்தண்மேய நன்னகர்போலும் அடியீர்காள்"*

இதில் பிற சமயத்தாரும் பாராட்டத்தக்க பெருங் கருணையாளராக இறைவன் வீற்றிருக்கின்றார் என்பதையும் தெளிகின்றோம்.

*"அருந்தண்மேய நன்னகர் போலும் அடியீர்காள்"*

என்ற தொடரில் எழுகின்ற ஓசை, திருக்குற்றால நாதனைத் தொழுதால் எல்லையில்லாத இன்பப் பெருவாழ்வை எய்தலாம்; எல்லோரும் வாருங்கள் என அழைப்பது போன்ற ஆர்வத்தை எழுப்புகின்றது.

# முல்லை மெல்லரும்பு ஈனும் குற்றாலம்

குற்றால மலைச்சாரலிலே உள்ள முல்லைக் கொடிகள் தாம் படர்ந்து அரும்பு கட்டி மலரத்தொடங்குகின்றன. அரும்பு கட்டி மலரும் பருவம் வந்தவுடன், அயலிலே உள்ள செண்பக மரத்திலும் வேங்கை மரத்திலும் படருகின்றன. தம்மேல் படர்ந்த முல்லைக் கொடியை ஆதரித்து செண்பகமும் வேங்கையும் வரவேற்கின்றன. ஆதரவாகத் தம்மைப் பற்றிப் படர்ந்த முல்லையின் ஆக்கங்கருதி அணைத்துக்கொண்ட செண்பகமும் வேங்கையும் சம்பந்தரின் உள்ளத்தைக் கவர்ந்துவிட்டன. இறைவனின் அருளையே ஆதரவாகப் பற்றிச் செந்தமிழ் நாடெல்லாம் படர்ந்து, சிவநெறியை அரும்பி மலரச் செய்த திருஞான சம்பந்தரின் உள்ளம் முல்லை படர உதவிய வேங்கையையும் செண்பகத்தையும் மிக மிக விரும்புகின்றது. பிறரின் வாழ்வு கருதி உதவுகின்ற பண்பை எவரால் மறக்கமுடியும்.

*செல்வம்மல்கு செண்பகம்வேங்கை சென்றேறிக்*
*கொல்லைமுல்லை மெல்லரும்பீனும் குற்றாலம்*
*வில்லின்ஒல்க மும்மதில்எய்து வினைபோக*
*நல்குநம்பான் நன்னகர்போலும் நமரங்காள்*

என்பது சம்பந்தரின் ஆர்வக்குரல். இதிலே செண்பகமும் வேங்கையும் செழித்து வளர்கின்றன என்பதை மிகத் தெளிவாகச் சம்பந்தர் சொல்கின்றார்.

*"செல்வம்மல்கு செண்பகம்வேங்கை"*

என்னும் தொடரால் செண்பகத்தையும் வேங்கையையும் பாராட்டு கின்றார். “செல்வம் மல்கு” என்ற அடைமொழி செண்பகத்தின் செழிப்பையும் வேங்கையின் செழிப்பையும் தெரிவிக்கின்றது. குற்றால மலைச்சாரலிலே நின்ற சிறப்பால் செண்பகமும் வேங்கையும் நன்கு செழித்து வளர்வது போல நாமும் குற்றாலக் கூத்தனின் திருவருளைப் பெற்றால், சிறந்து வாழலாம் என்பதை உணர்கின்றோம். செண்பகமும் வேங்கையும் புதிய மலர்களைப் பூத்து மங்கலமாகப் பொலிகின்றன. வண்டுகள் உண்ணும் வண்ணம் இனிய தேனைக் கொடுக்கின்றன. மக்கள், விலங்கு, பறவை முதலான உயிர் இனங்கள் மகிழ்ந்து தங்குதற்கான நிழலைப் பரவுகின்றன. இதேபோலக் குற்றாலக் கூத்தனின் திருவருளைப் பெற்றவர்களும் பிறர் பின்பற்றக்கூடிய ஒழுக்கத் துடன் விளங்குவார்கள். வந்த விருந்தினரை, இன்முகங்காட்டி, இன்சொற் கூறி உண்பிப்பார்கள். ஊருணி போல எல்லோருக்கும் பயன்படுவார்கள். இவற்றை எல்லாம் “செல்வம் மல்கு” என்ற மொழியால் அடிகள் எமக்கு நினைவூட்டுகின்றார்.

இனி இங்ஙனம் செல்வம் நிரம்பிய செண்பகமும் வேங்கையும் முல்லைக்கொடி தம்மைப்பற்றிப் படர்ந்தபோது மிக ஆர்வத்துடன் ஆதரித்தது போலக் குற்றாலக் கூத்தனின் அருளிலே கலந்த மெய் அடியார்களும், தம்மை வந்தடைந்தோர்களை இகழாமல் ஏற்று ஆதரிப்பார்கள் என்பதையும் சம்பந்தர் எமக்குக் கூறுகின்றார். மிகவும் மென்மையான முல்லைக்கொடி தாவிப் படரப் பற்றுக்கோடில்லாமல் தளர்ந்து தம்மைப் பற்றுக்கோடாகப் பற்றிப் படர்ந்த செயலை வெறுக்காமல் பெரிய மரங்களாகிய செண்பகமும் வேங்கையும் ஆதரித்தது போலக் குற்றாலக் கூத்தனின் திருவருளிலே ஊறித் திளைத்த தொண்டர்கள், தம்மிலும் அறிவிற் குறைந்தவர்கள் அல்லற்பட்டுத் தம்மைப் புகலாக வந்து சேர்ந்தாலும் அவர்களை இகழாமல் ஆதரிப்பார் என்பதையும் குறிப்பாக அறிகின்றோம். “செல்வம் மல்கு செண்பகம் வேங்கை”

என்பதினால் செண்பகம், வேங்கை என்பவற்றின் பெருமையையும் "கொல்லை முல்லை" என்பதினால் முல்லையின் எளிமையையும் அறிகின்றோம்.

இனி, மென்மையான முல்லை அரும்புகட்டி, மலரும் பருவம் வந்தவுடன், பற்றிப் படருதற்காகப் பக்கத்திலே உள்ள செண்பகத்தையும் வேங்கையையும் சென்றணைதல் போல, நாமும் நல்வினைப்பயன் வந்து கூடும்பொழுது இறைவன் திருவருளைப் பற்றி நிற்போம் என்பதையும் குறிப்புப் பொருளாகக் கொள்ளலாம். பக்கத்திலே உள்ள வேறு சிறு கொடிகளிலே படராமல் பெரிய செண்பகம், வேங்கை என்னும் மரங்களிலே படர்ந்து சென்றபடியால், ஒருவகையான குறைபாடும் இல்லாமல் முல்லை அரும்பு கட்டி மலர்ந்தது. நாமும் உலகப்பற்றிலே ஊறிப் பொய்மை பெருக்கி வாழ்கின்ற புல்லியருடன் சேராமல் மெய்யுணர்ச்சியாளருடன் சேர்ந்து வாழ்ந்தால், மெய்யுணர்ச்சி அரும்பி அருள் நிதி மலர்ந்து ஆக்கம் எய்தலாம் என்பதையும் தெளிகின்றோம்.

*"செல்வம்மல்கு செண்பகம்வேங்கை சென்றுஏறிக்*
*கொல்லைமுல்லை மெல்லரும்பீனும் குற்றாலம்"*

என்ற அடிகளை இனிப் படித்துப் பாருங்கள். படிக்கும் பொழுது எழுகின்ற ஓசை சம்பந்தரின் உள்ளத்திலே எழுந்த ஆர்வத்தை அப்படியே காட்டுகின்றது.

செண்பகத்திலும் வேங்கையிலும் சென்றேறிய முல்லை அவற்றின் ஆதரவாலே பசிய இலைகளை எங்கும் பரப்பிப் படர்ந்து அரும்பு கட்டியது. நாமும் குற்றாலக் கூத்தனின் அருளையே பற்றுக்கோடாகக் கொண்டு வாழ்க்கையைச் செலுத்தினால், குறைவில்லாத பெருவாழ்வில் வீற்றிருந்து போக நுகர்ச்சி யுடன் வீட்டின்ப உணர்ச்சிக்கு வேண்டிய மெய்யுணர்வையும் பெற்றுக்கொள்ளலாம் என்பதாம். முல்லை மெல் அரும்பு

ஈனுதல் போல நாமும் அருள் வாழ்வில் தலைப்படுவோம் என்பதே குறிப்புப் பொருள். காற்றினாலும் ஆடு முதலான விலங்குகளாலும் அலைக்கப்பட்டுச் சிதையாமல், பெரிய செண்பகத்திலும் வேங்கையிலும் சென்று படர்ந்த முல்லை காப்பாற்றப்படுதல் போலத் திருவருளைப் பற்றுக்கோடாகக் கொண்ட நாமும் உலகப்பற்றால் எற்றுண்டும், போக நுகர்ச்சியால் விழுங்கப்பட்டும் பிறவிப் பயனைப் பாழாக்காமல் காப்பாற்றப்படுவோம் என்பதாம்.

செண்பகம் குருவையும், வேங்கை இறைவன் திருவருளையும் குறிப்பாக உணர்த்துகின்றன. செண்பகத்தில் படர்ந்து அதன் துணையால் வேங்கையில் சென்றேறி மெல்லரும்பீன்ற முல்லை குருவருளைத் துணையாகக் கொண்டு, திருவருளை அடைந்து, மெய்உணர்ச்சி அரும்பிய உயிரை (ஆன்மாவை)க் குறிப்பால் உணர்த்துகின்றது.

இனி இங்ஙனம் மெய்யுணர்ச்சியை ஊட்டக்கூடிய இயற்கை வளம் நிரம்பிய குற்றாலமலையிலே வீற்றிருக்கின்ற இறைவனின் பண்பையும் சம்பந்தர் எமக்குச் சொல்கின்றார்.

*''வில்லின்ஒல்க மும்மதில்எய்து வினைபோக*
*நல்குநம்பான் நன்னகர்போலும் நமரங்காள்''*

என்ற அடிகளிலே குற்றாலக் கூத்தனின் கொற்றம் கூறப்படு கின்றது. மகா மேருமலையை வில்லாகக் கொண்டு, முப்புரத்தை அழித்த வெற்றியாளன் என்பதால் தம்மை அடைந்தவரின் அல்லலைப் போக்கி ஆதரிக்க வல்லவன் என்பதைக் காட்டு கின்றார். "மும்மதில்" என்பது குறிப்பாக மும்மலங்களை உணர்த்துகின்றது. குற்றாலக் கூத்தனைப் போற்றினால் எம்மைப் பிணித்துள்ள மும்மலங்களும் இருவினைகளும் ஒழிந்து வீட்டின்பம் கிடைக்கும் என்பதாம்.

*“வில்லின்ஒல்க மும்மதில்எய்து வினைபோக*
*நல்குநம்பான் நன்னகர்போலும் நமரங்காள்”*

என்ற அடிகளைப் படிக்கும் பொழுது எழுகின்ற ஓசை இறைவனின் அருளாற்றலை உணர்த்துகின்றது.

*“வினைபோக நல்குநம்பான்”*

என்ற குரலுடன்

*இருள்சேர் இருவினையும் சேரா இறைவன்*
*பொருள்சேர் புகழ்புரிந்தார் மாட்டு*

என வரும் வள்ளுவர் குரலையும் ஒப்பிட்டுப்பாருங்கள். எங்கள் வினைகளைப் போக்கி வீட்டின்பத்தை நல்குகின்ற முதல்வன் எழுந்தருளி இருக்கின்ற குற்றாலத்தை மறந்துவிடாதீர்கள் எனச் சம்பந்தர் எமக்குச் சொல்லி ஊக்கம் ஊட்டுகின்றார்.

# கோலவண்டு யாழ்செய் குற்றாலம்

**கு**ற்றால மலைச்சாரல் எல்லாம் புதிய பூக்களின் நறுமணம் வீசிப் பரவுகின்ற இன்பத்தை எவராலும் மறக்கமுடியாது. வேங்கை மரங்கள் பெரிய கிளைகளை எங்கும் போக்கி, ஓங்கி வளர்ந்திருக்கின்ற காட்சியை என்னென்று சொல்ல முடியும். புதிய பூக்களில் சுரந்த இனிய தேனை உண்ட வண்டுகள், வேங்கை மரங்களின் கிளைகளின் மேல் வீற்றிருந்து, யாழ் இசை போலப் பாடுகின்றன. இந்த இயற்கை இன்பங்களிலே ஈடுபட்ட திருஞானசம்பந்தப் பெருமான் பாடுகின்ற செந்தமிழைக் கேளுங்கள்.

*வம்பார்குன்றம் நீடுயர்சாரல் வளர்வேங்கைக்*
*கொம்பார்சோலைக் கோலவண்டுயாழ்செய் குற்றாலம்*
*அம்பால்நெய்யோடு ஆடல்அமர்ந்தான் அலர்கொன்றை*
*நம்பான்மேய நன்னகர்போலும் நமரங்காள்*

இந்தச் செய்யுள் குற்றால மலைச்சாரலிலே உள்ள சோலைகளில் வண்டுகள் வீற்றிருந்து இசை பாடுகின்ற செயலை அறிவிக்கின்றது. குற்றால மலைச்சாரல் இயல்பாகவே அழகிய பூக்களைப் பரப்பி இனிய மணத்தை எங்கும் பரப்புகின்ற இயற்கைச் செல்வம் வாய்ந்தது. இந்த இயற்கைச் செல்வத்துடன், உயர்ந்த பெரிய வேங்கை மரங்கள் குற்றாலமலையின் உச்சியை அடுத்த இடங்களிலே நின்று வளர்கின்றன. மலை வளத்தால் செழித்து வளர்ந்த அம்மரங்கள் பெரிய கிளைகளை எங்கும் போக்கிக் குளிர்ந்த நிழலைப் பரப்பி இன்பம் செய்கின்றன. குற்றாலமலையின் அடிவாரத்தை அடுத்த இடங்களிலே மலர்ந்த

பூக்களின் தேனை உண்டு மகிழ்ந்த வண்டுகள், வேங்கை மரங்கள் நெருங்கிய சோலையை அடைந்து விளையாடின. வேங்கை மரங்களின் மேல் கிளைகளிலே பறந்து பறந்து சென்று தம்மை மறந்த வண்டுகள், இனிய யாழ் ஓசை போன்ற இசையை எழுப்பிப் பாடின.

*"வம்பார்குன்றம் நீடுயர்சாரல் வளர்வேங்கைக்*
*கொம்பார்சோலைக் கோலவண்டுயாழ் செய்குற்றாலம்"*

என்ற அடிகளைப் படித்துப் பாருங்கள். திருக்குற்றால மலை, மலர் மணம் நிரம்பிய மாண்புடையது. இதனை, "வம்பார் குன்றம்" என்ற தொடர்களால் சம்பந்தர் உணர்த்துகின்றார். திருக்குற்றாலமலையில் எழுந்தருளி இருக்கின்ற இறைவன் என்றும் வற்றாத அருள் நிதியாளர் என்பதையும் இத்தொடர் குறிப்பாக உணர்த்துகின்றது. குற்றால மலைச்சாரலிலே உள்ள வேங்கை மரங்கள் அம்மலையின் நீர்வளத்தால் ஓங்கி வளர் கின்றன. நாமும் குற்றாலக் கோமானைக் குழைந்த அன்புடன் அணைந்து வாழ்ந்தால் அவனின் அருள் வளத்தால் ஆக்கம் அடையலாம் என்பதையும் அறிகின்றோம். மலையை அடுத்த மேல் இடத்திலே நின்று வளர்வதால் வேங்கை மரங்கள் மிகவும் செழித்திருக்கின்றன. குற்றாலமலையில் உறைகின்ற கூத்தனின் திருவருளைப் பற்றாகக் கொண்டு உலகப் பற்றை விட்ட மேலோர்கள் உயர்ந்த போகவாழ்வில் இருந்து நுகர்ந்த வண்ணமே இறைவன் திருவடி நீழல் இன்பத்தையும் பெறுவார்கள் என்பதையும் இதனால் அறிகின்றோம். "வளர் வேங்கை" என்ற தொடர் குற்றாலக் கூத்தனின் அருளில் ஈடுபட்டவர்கள் இடை விடாது பேரின்பத்தை நுகர்ந்து வாழ்கின்ற பேற்றை எய்துவார்கள் என்பதைக் குறிப்பாகக் காட்டுகின்றது.

இனி, இங்ஙனம் குற்றால மலைச்சாரலிலே வளர்ந்த வேங்கை பெரிய கிளைகளை எங்கும் போக்கி இனிய நிழலைப் பரப்புவதுபோல, குற்றாலக் கூத்தனின் அருள் பெற்ற மேலோர் களும் தமது பரம்பரையை வாழையடி வாழையாக வளர்த்து

அருள் வாழ்வை எங்கும் பரப்பி உலக மக்களை உய்விப்பார்கள் என்பதையும் தெரிந்து கொள்ளலாம். இங்ஙனம் குற்றால நாதனின் அருள்பெற்ற அருளாளர்களை அடைந்தால் நாமும் குற்றால நாதனின் அருளைப் பெறலாம். குற்றால மலைச் சாரலிலே நின்று செழித்து வளர்ந்த வேங்கைமரங்கள் தம்மை வந்தடைந்த வண்டுகளை ஆதரித்து மகிழ்கின்றன. அவ்வேங்கை மரங்களை அடைந்த வண்டுகளும் அச்சம் இல்லாமல் தேனை உண்டு இனிய பாட்டுப் பாடுகின்றன. குற்றால மலைச்சாரலை அடுத்துள்ள வேங்கைமரங்களைக் குற்றால நாதனின் திருவருள் பெற்ற மேலோர் ஆகவும், வேங்கை மரங்களின் மேலிருந்து இசை பாடுகின்ற வண்டுகளை அம்மேலோரைச் சேர்ந்து அவர்கள் வாயிலாகக் குற்றால நாதனின் அருள் பெற்ற அடியார்களாகவும் கொள்ளலாம்.

இறைவன் திருவருளே குருவாக நின்று வழிகாட்ட அதனால் உலகப் பற்றைத் துறந்து மெய்யுணர்ச்சி பெற்ற உயிர்கள் பேரானந்தப் பெருவாழ்வை நுகர்கின்றன. இதனை,

*“வளர்வேங்கைக் கொம்பார்சோலைக்*
*கோலவண்டு யாழ்செய் குற்றாலம்”*

என்ற அடிகளால் சம்பந்தர் எமக்கு உணர்த்துகின்றார். உலகப் பற்றில் நின்று விடுதலை பெற்ற உயிர்கள் பேரின்பப் பெருவாழ் வென்னும் ஆனந்தத்தேனை வாரி உண்டு அடைகின்ற மகிழ்ச்சியை,

*“கோலவண்டு யாழ்செய் குற்றாலம்”*

எனக் கூறி மகிழ்கின்றார். “கோலவண்டு” என்ற தொடரால் இளமை நலம் நிரம்பிய வண்டு என்பதையும் நினைவூட்டுகின்றார். கோலம் — அழகு. இளமையின் ஒளி அழகாகும். எனவே, இளமைப்பருவம் வீழ முன்னமே இறைவன் திருவருளைப் பெற்று வாழவேண்டும் என்பதையும் அடிகளார் எமக்கு அறிவிக்கின்றார். வண்டுகள் யாழ் செய்தல், அடியார்கள் இனிய குரலெடுத்து இறைவனைப் பாடிப் பாடி உருகுகின்ற செயலை நினைவூட்டுகின்றது. இதனை,

*"கோழைமிட றாககவி கோளுமில வாகஇசை கூடுவகையால்*
*ஏழையடி யாரவர்கள் யாவைசொன சொன்மகிழும் ஈசன்"*

எனவும்

*"கீதத்தை மிகப்பாடும் அடியார்கள் குடியாக"*

எனவும் வருகின்ற தொடர்களால் அறிக. சோலையிலே வாழ்கின்ற வண்டுகள் ஒரு குறையுமில்லாமல் தேனையுண்டு வாழ்வது போல, இறைவன் திருவருள் நெறி நின்று வாழ்கின்ற அன்பர்களும் "இன்பமே எந்நாளும் துன்பமில்லை" என்ற இறுமாப்புடன் வாழ்வார்கள் என்பதாம்.

*"கொம்பார்சோலைக் கோலவண்டு யாழ்செய் குற்றாலம்"*

என்ற அடிகளைப் படிக்கின்றபொழுது எழுகின்ற ஓசை சம்பந்தரின் ஆர்வத்தைக் காட்டுகின்றது. குற்றாலமலைச் சோலையிலே குடியிருக்கின்ற கோல வண்டுகள் பெறுகின்ற இன்பத்தைச் சம்பந்தர் எண்ணி எண்ணி எழுச்சி கொள்கின்றார். அறிவில்லாத உயிர் இனங்களும், மெய்யுணர்ச்சி வாய்ந்து விளங்குகின்ற அருள் ஆற்றலைக் குற்றாலத்திலே கண்ட சம்பந்தர் கூறிக் கூறிக் குதூகலிக்கின்றார்.

இனி, இங்ஙனம் திருவருளை வழங்கி அடியார்களை வாழ்விக்கின்ற குற்றாலக் கூத்தனின் சிறப்பையும் சம்பந்தர் கூறுகின்றார்.

*"அம்பால்நெய்யோடு ஆடல்அமர்ந்தான் அலர்கொன்றை*
*நம்பான்மேய நன்னகர்போலும் நமரங்காள்"*

இதில் அன்பர்கள் பாலாலும் நெய்யாலும் ஆட்டி வழிபடுவதை ஏற்று அருள் செய்கின்ற இறைவனின் இயல்பு சொல்லப்படுகின்றது. அன்பால் உருகி உருகி வழிபடுகின்ற அடியார்கள் தமக்கு அளிக்கின்ற அன்புக்காணிக்கைகளாகிய பால், நெய் முதலான சிறு பொருள்களையும் மனமுவந்து ஏற்று அருள் செய்கின்ற வள்ளலாகக் குற்றால நாதன் விளங்குகின்றான்.

*"அம்பால்நெய்யோடு ஆடல் அமர்ந்தான்"*

என்ற அடிகளைப் படிக்கும்பொழுது எழுகின்ற ஓசை, இறைவன் அன்பர்கள் செய்கின்ற செயல்களை ஏற்று அருள் வழங்குகின்ற அருந்தகையாளன் என்பதைக் காட்டுகின்றது. "அலர் கொன்றை நம்பான்" என்ற தொடர், இறைவனின் போக வாழ்வை அறிவிக்கின்றது.

கார்காலத்திலே மலர்ந்த கொன்றை, போகமார்ந்த பூண்முலையாளுடன் வீற்றிருந்து, உயிர்களுக்குப் போகத்தை நுகர்விக்கின்ற இறைவனின் அருளாற்றலை உணர்த்தி எம்மை ஊக்கி வழிப்படுத்துகின்றது.

*"போகம் ஈன்ற புண்ணியன்"*

என்றார் திருத்தக்கதேவரும்.

இங்ஙனம் போகத்தை ஊட்டி ஞானத்தை நல்குகின்ற குற்றாலநாதனைத் தொழுது உய்யும் வண்ணம் சம்பந்தர் எமக்குச் சொல்கின்றார்.

*"நம்பான்மேய நன்னகர்போலும் நமரங்காள்"*

என்ற குரலை நாம் என்றும் எண்ணி வாழவேண்டும்.

# 7

# மூவர் தமிழ் விருந்து

தேவாரம் பாடிய சம்பந்தர், அப்பர், சுந்தரர் ஆகிய மூவரதும் தேவாரத் தமிழின் சிறப்பை அவற்றுள் பொதிந்துள்ள சமயக் கருத்துக்களை வெளிக் கொணரும் நோக்குடன் எழுதப்பட்ட கட்டுரைத் தொடர் 'மூவர் தமிழ் விருந்து'. "ஈசன் இன்னருள் எல்லாப் பொருள்களிலும் கலந்து நிழலாடும் இயல்பு வாய்ந்தது. உலகெலாம் ஆகி, வேறாய் உடனுமாய் நிற்கும் அம்முழுமுதலை உலகுய்ய வாழ்விலே கண்டு, உய்வடைந்த மெய்யடியார் களின் அடிச்சுவட்டை உணர வேண்டும். உணர்ந்து உள்ளம் தெளிய வேண்டும்" என அறிவுறுத்திக் கட்டுரையைத் தொடங்கிய ஆசிரியர், சம்பந்தர் தமிழின் விருந்தினை அள்ளி வழங்கிக் கொண்டிருக்கும் பொழுதே இவ்வுலக வாழ்வை நீத்தார். 1966இல் இறுதியாக எழுதிய கட்டுரைத் தொடர் இது.

## தானெனை ஆண்டவன்

இறைவன் அருட்பெருங்கடல். ஆருயிர்களின் அல்லலை அறுத்து ஆட்கொண்டருளும் தண்ணளியாளன். ஆருயிர்கள் ஆணவப் பிணிப்பினால் தாம் அடையவேண்டிய பேரின்பப் பெருவாழ்வை மறந்து, பிறந்தும் இறந்தும் பெருந்துன்பமடைகின்றன. ஆருயிர்களின் பிறப்பிறப்புத் துன்பங்களைப் போக்கி ஆட்கொண்ட ருளும் பேரருட் குணத்தை இயல்பாகவே உடையவனாய் இறைவன் விளங்குகிறான். அல்லற்பட்டு ஆற்றாது தம்மையே புகலென அடைந்த ஆருயிர்களை ஆட்கொண்டருளும் பேரருளாளன் இறைவனே என்பதை உணர்ந்த அன்பர்கள் அவனை ஆண்டவன் என அழைத்து ஆவி உருகுவார்கள்.

ஆருயிர்களின் அல்லல்களை அறுத்து ஆண்டருளும் ஆண்டவனாகிய இறைவனுக்கு ஆருயிர்கள் என்றும் அடியவர்கள். மீளா அடிமை உமக்கே ஆளாய் என ஆண்டவனை ஆருயிர்கள் அனைத்தும் அல்லும்பகலும் சொல்லிப் பரவித் தொழுதற்கே யுரியன. அன்னையினும் இனியோனாய்த் தம்மை ஆதரித்தும் அருள் ஈந்தும் பொல்லா வினைகளைப் போக்கி ஆட்கொண் டருளும் எல்லாம் வல்ல இறைவனின் இன்னருளை எண்ணி வியந்து நெஞ்சம் நெக்குருகும் இன்பம், சிந்தையில் தேனூறித் தித்திக்கும் இன்பம்; ஆனந்த வெள்ளத்துள் அமிழ்ந்தி விருந்தயரும் இன்பம். திருஞானசம்பந்தப் பெருமான் இறைவனால் ஆட்கொள்ளப்பட்டவர். தோணிபுரத்தில் எழுந்தருளிய பெரியநாயகர் என்னும் இறைவனும் பெரியநாயகி என்னும் இறைவியும் காட்சி கொடுத்துத் தம்மையாள் கருணையை கவுணியர் கோனாகிய திருஞானசம்பந்தப்பெருமான்

எண்ணி எண்ணி இதயம் நெக்குருகுகின்றார். தாம் பொய்கைக் கரையில் நின்று அம்மே, அப்பா என அழைத்து அழுதபொழுது, தோணியப்பராகிய இறைவன் உலக அன்னையாராகிய உமாதேவி யாரோடு எழுந்தருளித் தம்மை ஆட்கொண்ட அருட்செயலை அவரால் மறக்கவே முடியவில்லை.

தோளிற் சுமந்து தம்மையே ஆரா வேட்கையுடன் வளர்த்த தம் அருமைத் தந்தையார் ஆர் ஊட்டிய பாலை உண்டாய் எடா என்று அதட்டிக் கேட்டுச் சினந்த பொழுது, அம்மையப்பர் கோலத் துடன் எழுந்தருளித் தம்மை ஆட்கொண்ட ஆண்டவனை அவரால் மறக்கமுடியுமா? செந்தாமரை மலர் போன்ற பொற்கிண்ணத்தில் பாலைக் கறந்து, தமக்கு ஊட்டியருளிய பெரியநாயகியார் என்னும் உமையம்மையாரை நினைக்கின்றார். அவர் பாலைக் கறந்து ஊட்டிய அன்புடன் பால் கறந்த பொற்கிண்ணத்தின் அழகையும் நினைக்கின்றார். உலகுயிர்கள் அனைத்துக்கும் அன்னையாராகிய உமாதேவியார் பொற்கிண்ணத்தில் கறந்தூட்டிய பாலைப் பொல் லாதது - இழிந்தது எனக் கூறித் தம்மைச் சினந்த தம் தந்தையாரையும் நினைக்கின்றார். தந்தையாரால் சினந்து வெறுத்துரைக்கப்பட்ட பொழுதும் தமக்குற்ற துணையாய் எழுந் தருளிக் காட்சி கொடுத்தாண்ட இறைவனையும் நினைக்கின்றார்.

*“போதையார் பொற்கிண்ணத்து அடிசில்பொல் லாதெனத்*
*தாதையார் முனிவுறத் தானெனை ஆண்டவன்”*

என்பது திருஞானசம்பந்தப் பெருமானின் அன்பும் வியப்பும் கலந்த குழந்தைக் குரல். இந்தக் குரலிலே கிடந்து அலைமோது கின்ற ஞானவெள்ளத்தின் அகலத்தையும் ஆழத்தையும் எழுச்சி யையும் யாரால் அறிய முடியும்.

## போதை ஆர் பொற்கிண்ணம்

திருஞானசம்பந்தப் பெருமானின் குழந்தை உள்ளத்தை அம்மையார் திருமுலைப்பாலைக் கறந்து ஊட்டிய பொற் கிண்ணத்தின் எழில் கவர்ந்துவிட்டது. பூவைப்போல அழகான

கிண்ணம். பொன் தூய்மையானது, தீயில் இட்டு உருக்க உருக்க மாசு நீங்கி ஒளி கூடிக் கூடி விளங்குவது. திருவருள் வழிப்பட்ட மெய்யடியார்களின் உள்ளமும் பொன்போன்றது. அந்த உள்ளம் இறைவனின் திருவருளால் மலமாசு நீங்கி ஒளி உடையதாக விளங்கும். திருவருள் பதிந்த உள்ளத்திலே சிவஞானம் நிறையும். போதையார் பொற்கிண்ணமாகிய திருஞானசம்பந்தப் பெருமானின் திருவுள்ளத்திலே சிவஞானம் நிறைந்து நிலவுவது போலவே, மலமாசு நீங்கிய ஆருயிர்கள் என்னும் மெய்யடியார்களின் உள்ளத்திலும் திருவருள் பதியும். உலக நுகர்ச்சிகளில் ஊறித் திருவருளை மறந்த உள்ளத்தில் சிவஞானம் பதியாது. அந்த உள்ளத்தை திருவருளால் தூய்மைப்படுத்த வேண்டும். அவன ருளாலே அவன் தாள் வணங்க வேண்டும்.

## அடிசில்

பொற்கிண்ணத்து அடிசில் என்றது சிவஞானத்தைக் குறிக்கும். அம்மையார் பாலாகக் கறந்து ஊட்டிய சிவஞானத் தையே சம்பந்தப் பெருமான் அடிசில் எனக் குறித்துள்ளார். ஞானபோனகர் எனச் சேக்கிழார் பெருமானும் திருஞானசம்பந்தப் பெருமானைப் போற்றி உரைத்த பொருளுரையை நோக்குக. சிவனருள் பதிந்த திருஞானசம்பந்தரின் திருவுள்ளத்திலே சிவஞானம் நிறைந்துவிட்டதென்பதை போதை ஆர் பொற் கிண்ணத்து அடிசில் என்னும் தொடர் குறிப்பாக உணர்த்துகின்றது.

## பொல்லாது என

திருஞானசம்பந்தப் பெருமான் ஞானப் பாலை உண்ட நற் செய்தியை - திருவருட் செயலைச் சிவபாதவிருதயர் உணர்ந்திலர். அவர் திருஞானசம்பந்தர்மேல் மிக்க அன்புடையவர். சைவம் வாழ ஒரு தெய்வக் குழந்தை வேண்டுமென இறைவனிடம் இரந்து தவங்கிடந்தவர். சம்பந்தப் பெருமானைத் தம் மைந்தனாகப் பெற்ற தவத்திருவும் சால்பும் நிரம்பியவர். ஆனால் சிவனருட் செயலைத் தெளிந்துகொள்ளும் திருவருட் பேறு வாய்ந்திலர்.

ஆரோ தாழ்ந்த குலத்தவர் கொடுத்த பாலைத் தம் மைந்தன் அருந்திவிட்டானே என்று எண்ணி ஆறாச்சினங்கொண்டார். திருவருட்செயலை அறியாது சீறினார். சிறு கோல்கொண்டு தம் மைந்தனைத் தாக்க முற்பட்டார். இவரின் செயலை எண்ணிய சம்பந்தர் வியப்படைந்தார். திருவருட் செயலைத் தெளியும் பேறு தம் தந்தையாரிடம் இல்லை என்பதை எண்ணினார். உமையம்மை யார் அளித்த ஞானப்பாலை உண்டு நிற்கும் என்னை, ஊரார் அளித்த பாலை உண்டேன் என உறுக்கி அடிக்க முனைந்தாரே என்னருமைத் தந்தையார். இவருக்கு யான் ஞானப்பால் அருந்தி ஞானம் பெற்ற உண்மையை எங்ஙனம் உணர்த்துவேன் என்று ஏங்கினார். இதனால் திருவருளை முன்னிட்டு நிற்கும் அன்பர் களின் செயல்களுக்கும், உலகியலை முன்னிட்டு நிற்கும் மாசுடை யாரின் செயல்களுக்கும் உள்ள வேறுபாட்டை நாம் உணர்ந்து கொள்ளலாம்.

## தாதையார் முனிவுற

உலகியலில் அன்னை தந்தையராக எமக்கு அமைந்தவர்கள் வினைவழிப்பட்டவர்கள். அவர்கள் தாம் ஆற்றிய நல்வினை தீவினை என்னும் இருவினைப் பயன்களையும் நுகர்பவர்கள். திருவருளை மறந்து வாழத் தலைப்படுவார்களானால் அவர் களுக்குத் திருவருட் செயல் புலனாகாது. சண்டேசுர நாயனாரின் தந்தையாராகிய எச்சதத்தன் போலவும், பிரகலாதனின் தந்தை யாராகிய இரணியன் போலவும் திருவருளை மறந்து தீமை புரியவும் தொடங்குவார்கள். உலகுயிர்கள் அனைத்துக்கும் தந்தையும் தாயுமாக விளங்குகின்ற இறைவன் அருளே உருவானவன். வினையில் நீங்கி விளங்கிய அறிவுடையவன். தாயிற் சிறந்த தயாவான தத்துவன். அவனை ஆருயிர்களாகிய நாம் மறந்தாலும் அவன் என்றும் எம்மை மறக்கவேமாட்டான். பால் நினைந்தூட்டும் தாயினும் சாலப் பரிவுடையவன். எம்மை ஈன்று புரந்த உலகியல் தாயும் தந்தையும் எமக்குத் தீமைபுரிய முனைந்தாலும் அதனையும் தடுத்து எம்மைக் காப்பவன்.

திருஞானசம்பந்தப் பெருமான் தம் தந்தையாராகிய சிவபாதவிருதயர் தம்மை வெறுத்து முனிந்தபோது, இறைவனாகிய தந்தையார், அம்மையப்பர் கோலத்துடன் தம்முன் எழுந்தருளிக் காட்சிகொடுத்தாண்ட அருட்செயலை எண்ணியுருகுகின்றார். பெற்று வளர்த்த தந்தையாரினும் பார்க்க உற்ற துணையாக என்றும் உள்ளவன் இறைவனாகிய தந்தையாரே என்பதைத் தெளிந்தார்.

## தான் எனை ஆண்டவன்

தந்தையார் சினந்த நேரத்தில் தோடுடைய செவியனாய் விண்மேல் எழுந்தருளி, தூய மூன்றாம் பிறை நிலவை அணிந்து, திருமேனியில் திருவெண்ணீற்றைப் பூசிய திருக்கோலத்துடன் காட்சி கொடுத்தார். தந்தையார் சினந்தாலும் நீ அஞ்சவேண்டாம் என அடைக்கலம் கொடுத்து ஆட்கொண்டார். தந்தையினும் இனிய தண்ணளியாளனாகிய இறைவனைச் சம்பந்தர் கண்டு களித்தார். தன்னைச் சினந்துரைத்த தந்தையாருக்கும் சுட்டிறந்த தூய முழுமுதற் சிவத்தின் திருவருட் கோலத்தைச் சுட்டிக் காட்டினார். அவர் கண்டிலர். மைந்தன் திருவருள் வழிகாட்டிச் சிவஞானம் பெற்றுவிட்டான் என உய்த்துணர்ந்தார். தந்தையார் முனியவும் தன்னையாண்ட பெருங்கருணைத் தடங்கடலாகிய இறைவனின் இனிய திருக்கோலக் காட்சியை எண்ணி வியந்து ஏத்துகின்றார்.

*"காதையார் குழையினன் கழுமல வளநகர்ப்*
*பேதையாள் அவளொடும் பெருந்தகை இருந்ததே"*

எனத் தாதையார் முனிந்த நேரத்தில் காட்சி கொடுத்த கோலத்தை மீண்டும் சொல்லித் தொழுகின்றார். நினைந்து நினைந்து நெஞ்சம் நெகிழ்கின்றார்.

## காதையார் குழையினன்

உலக அன்னையாராகிய உமாதேவியார் ஞானப்பால் ஊட்டியருளியதை நினைந்து முதலில் தோடுடைய செவியன்

என அம்மையாரின் தோடணிந்த செவியை இடப்பாகத்தில் உடையவனாய் இறைவன் இடபத்தில் எழுந்தருளிய கோலத்தைக் குறித்தார். இச் செய்யுளில் அம்மையை ஏவிப் பால் ஊட்டுவித்த அப்பனாகிய இறைவன் குழை (கடுக்கன்) அணிந்த செவியை முதலில் நினைத்துக் கூறுகின்றார். தாம் அழுத குரலை அருளே உருவமாகிய உமையம்மையாரே முதலில் கேட்டார் என்றும், அதன்பின்பே இறைவன் கேட்டு அம்மையாரை ஏவி ஞானப் பாலை ஊட்டுவித்தார் என்றும், திருஞானசம்பந்தப் பெருமான் எமக்குணர்த்துகின்றார். திருவருள் காட்டவே ஆருயிர்கள் இறைவனைக் காண்கின்றன என்னும் உண்மையும் புலனாதல் காண்க.

## பேதையாள் அவளொடும் பெருந்தகை இருந்ததே

இறைவன் ஆருயிர்களுக்கு உலகின்ப நுகர்ச்சியாகிய போகத்தையும் பேரின்ப நுகர்ச்சியாகிய வீட்டினையும் அம்மையப்பர் கோலமாக வீற்றிருந்தே அருள்கின்றான்.

ஆண்மையும் பெண்மையும் கலந்த அருட்கோலம் இல்லறவாழ்வின் ஏற்றத்தையும் உணர்த்துகின்றது. பெண்ணினல்லாளொடு பெருந்தகை ஒன்றுபட்டு விளங்குவது போலவே, இல்லறத்தில் காதலிருவர் கருத்து ஒருமித்து ஆதரவு பட்ட நிலையும் அமைய வேண்டும். அன்பு தனித்து வாழாது; இரு பொருள்களை ஒன்றாகக் கலந்து வைப்பதே அன்பின் செயலாகும். ஆருயிரும் ஆண்டவனாகிய இறைவனும் இரண்டறக் கலந்து நிற்கும் அத்துவித நிலையின் நிலைக்களம் இல்லறமேயாகும்.

இல்லறத்தில் தலைவனிடம் தலைவி தன்னை முற்றும் ஒப்புவித்து அவன் தன்மையாகவே நின்று இன்ப நுகர்ச்சி அடைதல் போலவே, ஆருயிர்களும் ஆண்டவனிடம் தம்மை முற்றும் ஒப்புவித்து, அவனடி நீழலில் உறைந்து பேரின்ப நுகர்ச்சி கூடும் என்க. போக வாழ்வின் நுகர்ச்சியே வீட்டை எய்துவிக்கும் வழி

யாகும் என்பதை உணர்த்தவே பேதையாள் அவளொடும் பெருந் தகை இருந்ததே என்றார். பேதையாளொடு எழுந்தருளியிருந்த பெருந்தகையாகிய இறைவன் தந்தையினும் இனியோன் என்பதால், அவன் ஆருயிர்கட்கு அருள் ஈந்து ஆட்கொள்ளும்போதெல்லாம் அம்மையுடன் உடனாய் வீற்றிருப்பான் என்பதும், அங்ஙனம் அம்மையுடன் உடனாய் வீற்றிருந்து உலகுயிர்கட்கெல்லாம் போகம் ஈன்ற புண்ணியன் ஆதல்பற்றியே பெருந்தகை எனப் புகழ்ந்து போற்றப்பட்டான் என்பதும் புலனாகும்.

*போதையார் பொற்கிண்ணத்*
*தடிசில்பொல் லாதெனத்*
*தாதையார் முனிவுறத்*
*தானெனை ஆண்டவன்*
*காதையார் குழையினன்*
*கழுமல வளநகர்ப்*
*பேதையாள் அவளொடும்*
*பெருந்தகை இருந்ததே.*

போது – பூ. ஆர் – உவம உருபு. அடிசில் – உணவு (ஞானபோனகம்). குழை – ஆண்கள் காதில் அணிவது. பெருந்தகை – பெருந்தன்மை வாய்ந்தவன்.

# கற்குடி மாமலையார்

கற்குடி மாமலையின்கண் எழுந்தருளிய கண்ணுதற் கடவுளை, ஆலமுண்ட நீலகண்டனைத் தொழுது நற்றமிழ் வல்ல ஞான சம்பந்தப் பெருமான் பாடினார். ஆலத்தை அமுதாக உண்டு அமரரை உய்யக் கொண்ட ஈசனின் பெருங் கருணையை எண்ணி எண்ணி வியந்தார். அமுது எழும் என்னும் ஆர்வத்துடன் அமரர்கள் திருப்பாற்கடலைக் கடைந்தார்கள். முழுமுதல் இறைவனாகிய சிவனைத் தொழுது கடையத் தொடங்காமல் தம் முனைப்புடன் தொடங்கினார்கள். அமுதை உண்டு சாவாமல் வாழலாம் என்ற எண்ணத்தினால் ஈசனின் அருளை மறந்துவிட்டார்கள். அமுதம் எழவில்லை. ஆலகாலவிடம் என்னும் நஞ்சம் எழுந்தது. நஞ்சைக் கண்ட அமரர்கள் நடுங்கினார்கள். நஞ்சின் வேகத்தைத் தாங்க முடியாமல் அஞ்சி ஓடினார்கள். ஈசன் திருமுன்னிலையை அடைந்து எங்களைக் காத்தருள வேண்டும் என்று கதறினார்கள். அமரர்களின் அல்லலையும் ஆலகாலவிடத்தின் வேகத்தையுங் கண்ட ஈசன் ஆலத்தை அமுதாக உண்டு அமரரைக் காத்தருளினார். இவ்வாறு ஆலமென்னும் கொடிய நஞ்சை அமுதாகத் தாம் உண்டு அமரரைக் காத்த ஈசனின் இன்னருளை எண்ணிய திருஞானசம்பந்தர்,

*ஒருங்களி நீஇறை வாஎன்று*
*உம்பர்கள் ஓலமிடக் கண்டு*
*இருங்களம் ஆர விடத்தை*
*இன்னமுது உண்ணிய ஈசர்*

எனப் போற்றுகின்றார்.

## உம்பர்கள் ஓலமிட

இறைவனை மறந்த அமரர்கள் நஞ்சின் வெம்மையைத் தம்மால் தாங்க முடியாத நிலையிலேதான், இறைவனை எண்ணினார்கள். அமரர்கள் எல்லோரும் அழியப் போகின்றோம்; இறைவனே இனி உமது இன்னருள்தான் எமக்குப் புகல்; அமுதத்தை உண்டு அழிவில்லாமல் வாழலாம் என்று மகிழ்ந்தோம்; ஆலம் என்னும் கொடிய நஞ்சம் எழுந்து எம்மை நலிகின்றது; திருவருளை முன்னிட்டுத் தொடங்காத எமது பிழையைப் பொறுத்தருள்க; எமது இன்னலைப் போக்கியருள்க என்று புலம்பினார்கள், ஓல மிட்டார்கள். அமரர்கள் அஞ்சி ஓலமிட்டு அடைக்கலம் புகுந்தவுடன் இறைவன் இரங்கிவிட்டார். ஆலமென்னும் கொடிய நஞ்சை அள்ளி அமுதம் போல் உண்டார்.

*ஒருங்களிநீ இறைவா என்று*
*உம்பர்கள் ஓலமிடக்கண்டு*

என்னும் தொடர்களால் அமரர்கள் அஞ்சி அலறி ஓலமிட்ட அல்லல் நிலையை அப்படியே சம்பந்தப் பெருமான் உணர்த்துகின்றார்.

"இறைவா நீ ஒருங்கு அளி" என்பதால் நாங்கள் நீர்தான் முழுமுதல் இறைவன் என்பதை உணர்ந்துவிட்டோம்; நீர்தான் எங்களைக் காப்பாற்றியருளும் கருணையாளன் என அமரர்கள் தம் தன்மைகெட்டு இறைவனிடத்தில் தம்மை ஒப்படைக்கின்ற, தான் அதுவாம் தரத்தைக் காண்கின்றோம்.

உலகப் பற்றில் மூழ்கி, இறைவனின் திருவருளை மறந்து, போகப் பொருளைப் பெறுதற்காக மக்கள் முயலுகின்ற நிலையை, அமரர்கள் அமுதத்தைப் பெறும் வண்ணம் திருப்பாற்கடலைக் கடைந்த செயல் குறிப்பாகக் காட்டுகின்றது. இன்பமெனத் தாம் எண்ணி முயன்று அடைந்த உலக போகங்கள் யாவும் திருவருளை மறத்தற்கு ஏதுவாகித் துன்பந்தருதலை உணர்ந்து, இறைவனின் அருளைப் பெற்று உய்வடைய முயலும் மக்களின் நிலையை ஆலத்தைக் கண்டு அஞ்சி இறைவனிடம் அடைக்கலம் புகுந்த அமரர்களின் செயல் குறிப்பாகக் காட்டுகின்றது.

அமரர்களின் அல்லலைக் கண்டு ஆலத்தை அமுதாக உண்டருளிய இறைவனின் அருட் செயலைப் பாலறாவாயராகிய ஞானசம்பந்தப் பெருமான் பாடிப் பாடி வியக்கின்றார்.

*இருங்களம் ஆர விடத்தை*
*இன்னமுது உண்ணிய ஈசர்*

ஆலமுண்ட ஈசனின் திருக்கழுத்து நிறைந்த நீலநிறமாகவே விளங்கியது. அல்லற்பட்டு ஆற்றாது அடைக்கலம் புகும் ஆர் உயிர்களின் அல்லலைப் போக்கி அருள்புரியும் அருள்வள்ளல் ஈசன் என்பதை ஆலம் தோய்ந்த நீலகண்டம் அறிவிக்கின்றது. நீலமணி மிடற்று ஒருவன் என ஔவையார் ஈசனைப் போற்று கின்றார். நஞ்சை அமுதாக உண்டவன் என்பதால், தம்மைப் புகலாக வந்தடைந்த ஆருயிர்களின் வினை நுகர்ச்சியைக் கெடுத்துப் பேரின்பம் அருள்பவன் என்னும் உண்மையும் குறிப்பாகத் தோன்றுகின்றது. இன்பமே உருவாகிய இறைவன், தம்மையே புகலாக வந்தடைந்த ஆருயிர்களின் அல்லலைப் போக்குவதால் தானும் ஓர் இன்பமடைகின்றான் எனக் கூறி நயக்கத்தக்க சிறப்பும் விடத்தை இன்னமுது உண்ணிய ஈசன் என்னும் தொடரில் அமைந்துள்ளது.

*“தந்தது உன்தன்னைக் கொண்டது என்தன்னைச்*
*சங்கரா ஆர்கொலோ சதுரர்*
*அந்தம் ஒன்றில்லா ஆனந்தம் பெற்றேன்*
*யாது நீ பெற்றது என்பால்”*

என்பது திருவாசகம். இறைவன் ஆருயிர்களின் வினை நுகர்ச்சியைக் கெடுத்தும் தான் அவ்வினையால் தாக்குண்ணாது நிற்கும் பேராற்றல் உடையவன். “வினையில் நீங்கி விளங்கிய அறிவின் முனைவன்.”

*“விண்ணோர் அமுதுண்டும்சாவ ஒருவரும்*
*உண்ணாத நஞ்சுண்டு இரந்தருள் செய்குவாய்”*

என்பது சிலப்பதிகாரம்.

இங்ஙனம் கற்குடிமலையில் எழுந்தருளியிருக்கும் ஈசனின் பெருங் கருணையை வியந்து பாடிப் போற்றிய சம்பந்தர் கற்குடி மலைச்சாரலை நோக்கினார். அங்கு, ஆலத்தை உண்டு அமரர்க்கு ஆரமுதை அருளிய ஈசனின் அருட்செயலிலும் உயர்ந்ததோர் செயலைக் கண்டார். கண்டதும் களிபேருவகை கொண்டார்.

கற்குடி மலைச்சாரலிலே களிறும் பிடியுமாக யானைகள் களித்து வாழ்ந்தன. ஒரு களிற்று யானையின் பக்கத்திலே பிடி ஒன்று நின்றது. களிறு மிகவும் மதம் கொண்டது. ஆனால் அந்த மதக் களிறு தன் காதற் பிடியாகிய பெண்யானைக்காகவே வாழ்கின்றது. தன் காதற் பிடி

யின் இன்பமே தன் இன்பமாகக் கொண்டுவிட்டது. தன் தன்மை கெட்டுக் காதற் பிடியின் தன்மையாகவே மாறிவிட்டது. மலைச்சாரலிலே மூங்கில் முளைகள் காணப்பட்டன. களிறு அந்த மூங்கில் முளைகளைத் தனது கையால் வாரிவாரிப் பிடிக்கு ஊட்டுகின்றது. பிடி உண்பதைக் கண்டு உயிர் தளிர்க்கின்றது. மீண்டும் மீண்டும் வாரி வாரி ஊட்டுகின்றது. தான் உண்ணவே இல்லை. தன்னை மறந்துவிட்டது. தான் அதுவாந்தரத்தை அடைந்துவிட்டது.

ஆலத்தை அமுதாக உண்டு அமரரைக் காத்த ஈசன் எழுந் தருளி இருக்கும் கற்குடிமலையில் வாழும் களிறு, இன்னருளால் ஈசனையே வென்றுவிட்டது என்பதை உணர்ந்தார்; வியந்தார்.

*மருங்குஅளி யார்பிடி வாயில்*
*வாழ்வெதி ரின்முளை வாரிக்*
*கருங்களி யானை கொடுக்கும்*
*கற்குடி மாமலை யாரே*

எனப் பாடிப் போற்றினார்.

## மருங்கு அளியார் பிடி

களிற்றின் பக்கத்திலே நிற்கின்ற பிடியை நோக்கினார். அந்தப் பிடி களிற்றின் மேல் வைத்த அன்பே உருவமாக நிற்கின்றது.

பிடி, களிற்றையே எங்கும் காண்கின்றது. அதற்குப் பார்த்த இட மெல்லாம் நீக்கமறத் தன் அன்புத் தலைவனாகிய களிறே காணப் படுகின்றது. அன்பு நிறைந்த பிடியின் அல்லலைப் போக்கி ஆதரித்தல் ஒன்றையே தன் கடனாகக்கொண்ட களிறு கருணையே உருவமாகக் காட்சியளிக்கின்றது. பிடியின் அயரா அன்பைக் கண்ட சம்பந்தர் "அளி ஆர் பிடி" என்று பாராட்டுகின்றார். களிறு எங்கு சென்றாலும் அகலாமல் அதனையே புகலாகக் கொண்டு அதன் மருங்கிலேயே நிற்கின்ற பிடியைச் சம்பந்தரால் மறக்கவே முடியவில்லை. அன்பி னால் அல்லவா பிடி, களிற்றின் அருளைப் பெறுகின்றது என எண்ணுகின்றார். அன்பு அருளைப் பெற்றுவிட்டது. "அன்பு ஈன் குழவி அருள்" என்பது திருக்குறள்.

## கருங்களி யானை

களிறு மதம் மிக்கது. ஆணவங் கொண்டது. அதன் மதச் செருக்கெல்லாம் பிடியின் அன்பினால் அடங்கிவிட்டது. பிடியின் அன்புப்பிடியிலே களிறு தன் ஆணவத்தன்மை அற்றுவிட்டது. அருளால் நிறைந்த களிறாக மாறிவிட்டது. அன்பினால் பண்பட்டு அருளால் நிறைந்த கருங்களி யானையாகிய களிறு, நல்ல மூங்கில் முளைகளை வாரி வாரிப் பிடியின் வாய்க்குள் வைத்து ஊட்டு கின்றது. தன் பசித்துயரை மறந்தேவிட்டது. தான் என்பது அற்று விட்டது. கற்குடிமலையில் எழுந்தருளியிருக்கும் கருணைக் கடலாகிய ஈசனிலும் களிற்றின் கருணை கூடிவிட்டது. களிறு தன் துன்பத்தை மறந்து, தன் அன்புப் பிடியின் துன்பத்தைப் போக்கு தலையே பெரிதாக மதித்தது. களிறு ஒரு மூங்கில் முளையை யேனும் உண்ணவில்லை. கற்குடிமலையில் எழுந்தருளிய ஈசன், நஞ்சையேனும் உண்டார். கற்குடிமலைக் களிறு, தன் அன்புப் பிடியின் பசியைப் போக்குதலே தன் பசியைப் போக்குதலாகக் கருதிவிட்டது.

## பிடிவாயில் கொடுக்கும்

பிடியின் வாயில் மூங்கில் முளைகளை வாரி வாரி வைத்த வண்ணமாகவே களிறு நிற்கின்றது. கொடுத்தலே அன்றிக்

கொள்ளுதலில்லை. ஈசனும் அன்பினால் தம்மை அடைந்த ஆருயிர் களுக்கு, இன்பத்தை அளித்தலேயன்றி அவ்வுயிர்களிடம் தான் இன்பத்தை அடைதல் இல்லை. நஞ்சை உண்டு அமரர்க்கு அமுதை அளித்த கற்குடிமலைக் கடவுளின் கருணைச் செயலிலும் பார்க்கத் தான் உண்ணாமல் மூங்கில் முளையை வாரி வாரிப் பிடிக்கே ஊட்டிய கற்குடிமலைக் களிற்றின் செயல் விஞ்சிவிட்டது. எனவே கருங்களி யானை, மருங்கு அளியார் பிடிவாயில் வாழ்வெதிரின் முளையை வாரிக்கொடுக்கின்ற கற்குடிமாமலையில் ஈசன் எழுந் தருளியிருப்பதினால்தான் பெருமை அடைகின்றான். தான் நஞ்சையுண்டு அமரர்க்கு அமுதளித்த செயலினும் விஞ்சிய அருட் செயலை உடைய களிறு வாழ்கின்ற கற்குடிமலையில் எழுந்தருளியிருப்பதைக் குறித்து ஈசனும் உவகை எய்துகின்றான்.

*ஒருங்களி நீஇறை வாஎன்று*
*உம்பர்கள் ஓலமிடக்கண்டு*
*இருங்களம் ஆர விடத்தை*
*இன்னமுது உண்ணிய ஈசர்*
*மருங்குஅளி யார்பிடி வாயில்*
*வாழ்வெதி ரின்முளை வாரிக்*
*கருங்களி யானை கொடுக்கும்*
*கற்குடி மாமலை யாரே.*

(ஒருங்கு - எங்கள் எல்லோரையும். அளி - காத்தருள்க. உம்பர்கள் - தேவர்கள். இருங்களம் - பெரிய கழுத்து. விடம் - நஞ்சு. உண்ணிய - உண்ட. மருங்கு - பக்கத்தில். அளி - அன்பு. வாழ் - வளர்கின்ற. வெதிர் - மூங்கில். கரும் - கரிய. களி யானை - மதம் பொருந்திய களிறு.)

இத்திருப்பாட்டில் ஈசனின் இன்னருளைக் களிறும் பிடியுங் கலந்த அன்பு வாழ்வில் வைத்து அருள் வள்ளலாகிய சம்பந்தர் எமக்கு உணர்த்துகின்றார். ஓர் உயிர் தன் இன்பத்தை இன்னோர் உயிருக்காக ஈந்து, தான் இன்பமே எந்நாளும் துன்பமில்லை என்ற நிலையில் வாழ்கின்ற பொழுதுதான் அருளைக் காண்கின்றது.

மிக்க மதங்கொண்ட களிறு, மூங்கில் முளையைக் கண்டவுடன் தான் உண்ணவில்லை. தன் மருங்கில் நின்ற தனது அன்புப் பிடியின் வாய்க்குள் மூங்கில் முளையை வாரி வைத்து ஊட்டியது. மதங் கொண்ட மால்யானை, மூங்கில் முளையை வாரித் தானுண்ணா மல், அன்பார் பிடியுண்ண அள்ளி ஊட்டிய அருட்செயலைக்கண்ட திருஞானசம்பந்தர் சிந்தை மகிழ்ந்தார். நஞ்சைத் தாம் உண்டு, அமரர்க்கு அமுதம் அளித்தருளிய ஈசனின் செயலைக் களிற்றின் செயல் நினைவூட்டியது, உடனே கருங்களிமால் யானையையும் கற்குடி மாமலையாரையும் ஒருங்கு வைத்துப் பாடி உவந்தார்.

ஈசனின் இன்னருளை, அஃறிணை உயிர்களாகிய களிறும் பிடியும் கொண்ட காதல் வாழ்வு அணிசெய்கின்றது; அன்பு அகன்று அருளாக மலர்ந்து பேரின்பப் பெருவாழ்வை வழங்கிவிடும் என்பதை இதனால் தெளிகின்றோம். களிறு தன்னை முற்றாகப் பிடியின் அன்புக்கே ஒப்படைத்துத் தான் அதுவாக நின்ற தன்மை போல் ஆருயிர்களும் தம்மை முற்றாக இறைவனிடமே ஒப்படைத்துத் தம் தன்மைகெட்டு, இறைவனின் தன்மையாக மாறி, அவன் அடி நிழற்கீழ் பேராவியற்கைப் பேரின்பம் நுகர்ந்து வாழ்தல் வேண்டும் என்பதே இதனாற் போந்த குறிப்பாகும்.

# கொன்றைவார் சடையார்

ஆண்டவன் தலைவன். ஆருயிர்கள் அவனின் அடிமைகள். ஆண்டான் அடிமை நெறியில் நின்று, தொண்டு பூண்டொழுகும் ஆருயிர்கள், ஆண்டானாகிய இறைவனிடம் தம்மை முற்றும் ஒப்புவித்து நிற்கும்பொழுது தம் தன்மை கெட்டுவிடும். தம் தன்மை கெட்ட ஆருயிர்கள் ஆண்டானாகிய அவன் தன்மையாக நின்று பேரின்பம் நுகரும். அப்பேரின்பக்கூடலே அத்துவித மெனப்படும். அத்துவிதக்கூடலை விரும்பிய ஆருயிர்கள், தம்மை இறைவனையே காதலிக்கும் கன்னியர்களாகவும், இறைவனைத் தங்கள் காதலுக்குரிய தலைவனாகவும் பாவனை செய்யும் பண்புடையன.

இல்லறம், இறைவனுடன் பேரின்பக்கூடல் என்னும் அத்து விதக் கலப்பை ஆருயிர்கள் அடைதற் பொருட்டுப் பயிற்சி செய்யும் ஒரு பயிற்சி நிலையமாகும். தன் தலைவனிடம் தன்னை முற்றும் ஒப்புக்கொடுத்து, அவன் தன்மையாக நின்று வாழ்கின்ற தலைவி தான், சிறந்த வாழ்க்கைத் துணைவியாவாள். "காதல் இருவர் கருத்து ஒருமித்து ஆதரவுபட்டதே இன்பம்" என்பது, இல்லறத்தில் தலைவனும் தலைவியும் கருத்துக் கலந்து நுகரும் அத்துவிதக் கூடலைக் குறிக்கின்றது. ஆதரவு, அன்பு, அன்புக் கலப்பே இன்பமாகும். "இன்பமே என்னுடையன்பே" என்று மணிவாசகர் இறைவனை அழைக்கின்றார். தலைவனிடம் தலைவி தன்னை ஒப்புவித்து வாழ்கின்ற வாழ்வில் அவள் என்றும் இன்பத்தையே காண்கின்றாள். அவளுக்குத் துன்பமே தெரியாது. தொல்காப்பியர் காலத்திற்கு முன்பே கருத்து ஒருமித்த கதலர்களின் இல்லற வாழ்வு,

இறைவனிடம் ஆருயிர் தன்னை ஒப்புவித்துநிற்கும் பேரின்ப வாழ்வின் பயிற்சி நிலையமாகும் என்ற கருத்து நிலைபெற்று விட்டது.

இல்லறத்தில் தலைவி தனது பெற்றார் முதலிய சுற்றத் தொடர்பு எல்லாவற்றையும் மறந்து, தன் தலைவனுக்கு அன்பினால் தொண்டு பூண்டு ஒழுகுதலையே தன் பிறப்பின் பயனாகக் கொண்டு இன்பமடைவாள். "கண்டார் இகழ்வனவே காதலன்தான் செய்திடினும் கொண்டானை அல்லால் அறியாக் குலமகளாய்" வாழ்வாள். இவ்வாறு ஓருயிர் தன்னை முற்றமுடிய இன்னோருயிருக்கே ஒப்புவித்து வாழ்ந்து, பழகிப் பழகிப் பயின்ற ஈடுபாட்டால், ஈற்றில் இறைவனிடம் தன்னை முற்றாக ஒப்பு விக்கும் உயர்ந்த ஈடுபாட்டைப் பெறுகின்றது. "அன்றே என்றன் ஆவியும் உடலும் உடைமை எல்லாமும் குன்றே அனையாய் என்னை ஆட்கொண்டபோதே கொண்டிலையோ" என்ற நிலையை அடைகின்றது. காதல் வாழ்வைத் தொல்காப்பியர் அன்போடு புணர்ந்த ஐந்திணை எனக் கூறுகின்றார். ஐந்திணை என்பது ஐந்து ஒழுக்கங்களைக் குறிக்கும். தலைவனுந் தலைவியும் காதலாற் கலந்த தூய வாழ்வில், கூடியும், பிரிந்தும், ஊடியும், இரங்கியும், இருந்தும் அன்பை வளர்க்கின்றார்கள். இந்தக் கூடல் முதலிய ஐந்து ஒழுக்கங்களிலும் அன்பு கலந்துநின்று அவர்களின் வாழ்வை அணி செய்கின்றது. "அன்பு அகத்து இல்லா உயிர் வாழ்க்கை வன்பாற்கண், வற்றல் மரம் தளிர்த்தற்று" என்பது திருக்குறள்.

இங்ஙனம் இல்லறவாழ்வே அன்பை வளர்த்துத் தன் தன்மை கெட்டு நிற்கும் அருள்வாழ்வை விளைவுசெய்யும் பண்ணை என்பதை ஈசன் அடியார்களும் கண்டு மதித்தார்கள். அவர்கள் இல்லற வாழ்வின் உயர்ந்த நோக்கத்தை மதித்து வரவேற்று, வையத்து வாழ்வாங்கு வாழ வழிவகுத்தார்கள். இல்லற வாழ்வு பயனில்லாதது எனச் சொல்லி இகழ்ந்திலர். தாமும் இறைவனுடன் கலந்து இல்லறம் புரிவதாகவே எண்ணினார்கள். இறைவனைத்

தலைவனாகவும் தம்மை அவ்விறைவனைக் கூடும் தலைவியராகவும் பாவித்தார்கள். நாயன்மார்களும் ஆழ்வார்களும் தாம் அருளிய அருட்பாடல்களில், நாயகன் நாயகி பாவனை என்னும் காதல் நெறியைத் தழுவிப் பாடியுள்ளார்கள்.

திருஞானசம்பந்தப்பெருமான், தாம் முதன் முதற் பாடிய "தோடுடைய செவியன்" என்னும் திருப்பதிகத்தில், தம்மைத் தலைவியாகவும் இறைவனைத் தலைவனாகவும் பாவித்துப் பாடியுள்ளார். "உள்ளங்கவர் கள்வன்," "இறைகலந்த இனவெள்வளை சோர என் உள்ளங்கவர் கள்வன்" என வருகின்ற தொடர்களை நோக்குக. காதல் நெறியிலே பிரிவு என்னும் ஒழுக்கத்தில்தான் தலைவன் தலைவியரின் அன்பைக் காணலாம். அன்பின் அகலம் பிரிவாற்றாமையால் கூடிவிடும். ஈசனுடன் கலந்து அவனாகவே நின்று அவனருளைப் பெற்று மகிழ்ந்த திருஞானசம்பந்தர் ஈசன் மறைந்தவுடன் இன்னலுறுகின்றார். திருத்தோணிபுரத்தில் உறையும் பெருமானாரின் திருக்கோலத்தைக் காணவும், கலந்து மகிழவும் முடியாதவராய்க் கவல்கின்றார். காதலியாகிய தம்மைக் கலந்து பிரிந்த தலைவராகிய இறைவனிடம் அன்றில் பறவைகளைத் தூதாகவிடத் துணிந்தார். துணிந்த சம்பந்தர் தம்மை ஒரு கட்டிளங் கன்னியாகக் கற்பனை செய்கின்றார். வீட்டைவிட்டு வெளியிற் செல்ல முடியாத கட்டுப்பாட்டுக்குள் இருந்து அக்கன்னிப் பெண் கவலைப்படுகின்றாள். தன் காதலனைக் காணமுடியாமற் கண்ணீர் வடிக்கின்றாள், எவரைத் தூதாகவிட்டுத் தன் பிரிவுத் துயரைத் தலைவனுக்கு உணர்த்தலாம் என எண்ணி எண்ணி ஏங்குகின்றாள். தூது செல்பவரைத் தன் வீட்டின் எல்லைக்குள்ளேதான் தேட வேண்டும். இந்நிலையில் இருந்து நீள நினைந்து நினைந்து நெடுமூச்செறிந்த தலைவிக்குத் தன் வீட்டின் முற்றத்திலே நிற்கின்ற பனையின் நினைவு வந்தது. பனைமேல் கூடு கட்டி வாழ்கின்ற காதல் அன்றில் பறவைகளின் இன்பவாழ்வை எண்ணினாள். அவைகள் அல்லும் பகலும் பிரியாமல் அன்புடன் அமர்ந்து இன்பம் நுகரும் பேறுடையன. அவற்றைத் தன் காதலனாகிய தோணியப்பரிடம் தூது விடுத்தால் தன் பிரிவுத்துயர் நீங்குமென எண்ணி நெஞ்சந் தளிர்த்தாள்;

*"முன்றில்வாய் மடற்பெண்ணைக்*
*குரம்பைவாழ் முயங்குசிறை*
*அன்றில்காள்"*

என அன்புகனிந்த ஆர்வக் குரலால் அழைத்தாள்.

## முன்றில்வாய்

எங்கள் வீட்டு முற்றத்திலே குடியிருக்கின்றீர்கள். அதுவும் மடல் நிரம்பிய இளம்பருவத்துப் பனையின் வட்டிலே கூடுகட்டி அதன்கண் வாழ்கின்றீர்கள். நான் என் ஆருயிர்த் தலைவனாகிய தோணியப் பரைச் சென்று காண முடியாமல் சிறைப்பட்டுக் கிடந்து வருந்து வதையும் அறிவீர்கள். எங்கள் வீட்டு முற்றத்தில் நிற்கின்ற பனை உங்கள் காதல் வாழ்வுக்குப் பற்றுக்கோடாக இருக்கின்றது. அது இளம்பனை, மடற்பனை, அதன்கண் நீங்கள் நெடுங்காலம் வாழலாம். அதன் வட்டிலே உள்ள கூட்டை நான் ஒருபோதும் கலைக்கவிடேன். நீங்கள் வழிவழியாக இருந்து வாழ வழிசெய்வேன்.

## முயங்குசிறை அன்றில்காள்

ஒருவரை ஒருவர் பிரியாமல், தழுவியவண்ணம் கூட்டில் வாழ்கின்றீர்கள். உங்கள் சிறகுகள் அழகும் ஆற்றலும் உடையவை. அச்சிறகுகளால் ஒருவரை ஒருவர் அணைத்து ஆனந்தமடை கின்றீர்கள். முயங்குசிறை அன்றில்களாய்ப் பேரின்பக் கூடலில் திளைத்துச் செம்மாந்திருக்கின்றீர்கள். யானோ என் அன்புத் தலைவனைப் பிரிந்து, அல்லற்படுகின்றேன். ஆனந்தமடைகின்ற நீங்கள் என் அல்லலைப் போக்க வழி செய்யவேண்டும். நீங்கள் இருவரும் பிரிவு இல்லாது அமைந்த தெவிட்டாத இன்ப நுகர்வில் ஈடுபட்டு உவகை அடைவதுபோல, என்னையும் என் தலைவனுடன் கூட்டி வைக்கவேண்டும்.

## பிரிவுறு நோய் அறியாதீர்

உங்களுக்குப் பிரிவுத் துன்பம் என்பதே இல்லை. நீங்கள் பிரிவுத்துன்பம் என்பதை அறியவேமாட்டீர்கள். நீங்கள்

ஒருவரையொருவர் பிரிந்தால் உடனே இறந்துவிடுவீர்கள். என்னைப் போல் தலைவனைப் பிரிந்த பின்பும் உயிர்வாழும் வன்கண்மை உங்களிடம் இல்லை. எனது வீட்டு முற்றத்திலே நீங்கள் வாழ்ந்துகொண்டிருந்தும் எனது துன்பத்தை உணர்ந்து உதவிபுரிய வராதிருந்த காரணத்தை நான் இன்றுதான் உணர்ந் தேன். பிரிவு இல்லாமல், இன்பமே எந்நாளும் துன்பமில்லை என்ற நிலையில் இருந்து வாழ்கின்ற நீங்கள், தலைவனைப் பிரிந்து வருந்துகின்ற எனது துன்பத்தின் தன்மையை எங்ஙனம் உணர் வீர்கள். உணர்ந்தால் உதவிபுரிந்தே இருப்பீர்கள். தலைவனைப் பிரியாத வாழ்வே தலைசிறந்த வாழ்வு. ஒன்றினார் வாழ்க்கையே வாழ்க்கை. நான், என் தலைவனைப் பிரியாது இருக்கும் பெருவாழ்வைப் பெற்றிலேன்.

## மிகவல்லீர்

நான் என் தலைவனைப் பிரிந்த துயரால் மிக மெலிந்து விட்டேன், உடல் வலுக் குறைந்துவிட்டேன். நீங்கள் பிரிவுத் துயரின்றி வாழ்ந்த மாண்பால் மிகமிக உடல் வலிமை பெற்று விட்டீர்கள். தூதுசென்று உரைக்கத்தக்க உடல் வலுவும் உளச்செழிப்பும் உங்களிடம் உள்ளன. நீங்கள் இருவரும் ஒன்றாகச் சென்று என் தலைவனிடம் என் பிரிவுத் துன்பத்தை எடுத்துரைத்தால் அவரும் என் துயரை உணர்ந்து இரங்குவார். என் வீட்டின் முற்றத்திலே உள்ள பனையில் வாழ்கின்ற நீங்கள் என் துயரை நேரிற்கண்டு நெஞ்சுருகிக் கூறும்பொழுது, அவர் என்மேல் இரங்கி என் துயரைப் போக்குவார். தலைவனும் தலைவி யும் என்றும் உடனாய் இருந்து வாழ்கின்ற வாழ்வின் மேம்பாட்டை அவரும் உணர்வார். அவர் முன்னரே உண்ணாமுலை உமை யாளுடன் உடனாகிய ஒருவனானபடியால் உங்களைக் கண்ட வுடன் எனது பிரிவுத் துன்பத்தைப் போக்கி என்னுடன் என்றும் உடனாக வதிய விரும்புவார்.

## தென்றலார் புகுந்துலவும் திருத்தோணிபுரம்

நீங்கள் எனக்காகத் திருத்தோணிபுரம் செல்லவேண்டும். இப்பொழுது நல்ல இளவேனிற்பருவம், பிரிவே அறியாமல் வாழ்கின்ற நீங்கள் இன்னிளவேனிற் பருவத்திலே தென்றல் புகுந்து உலாவுகின்ற திருத்தோணிபுரத்துக்குச் செல்லுதல் மிக நல்லது. திருத்தோணிபுரம் ஈசன் உவந்துறையும் இனிய திருக்கோயில் நீங்கள் அத்திருத்தோணிபுரத்திற்குச் சென்று ஈசனை வழிபடுங்கள். வழிபட்டால் உங்கள் பிரிவில்லாக் காதல் வாழ்வு என்றென்றும் நிலைபெறும். இறவாத இன்ப அன்பின் அகலத்தையும் நீங்கள் எய்திவிடுவீர்கள். திருத்தோணிபுரத்தில் வீசுகின்ற தென்றல், தெய்வத் தென்றல். திருவருளே அங்கு தென்றலாக வீசுகின்றது. அந்தத் தென்றல் சிறப்புடையது. அதனைத் தென்றலார் என்றுதான் போற்றி உரைக்கவேண்டும். தென்றலார் தரும் இன்பத்தையும், திருவருள் இன்பத்தையும் நன்றாகப் பெற்று நுகர்ந்து பேரின்பக் காதல் கொள்ளலாம். பெற்ற சிற்றின்பத்தையே பேரின்பமாகக் கண்டு களிக்கலாம். விரைந்து புறப்படுங்கள். உங்கள் முயங்கு சிறைகளை விரித்து நயந்த பேருவகையுடன் ஞாலம் போற்றும் திருத்தோணிபுரத்தை நோக்கிப் பறந்து செல்லுங்கள்.

## கொன்றைவார் சடையார்

திருத்தோணிபுரத்திலே போக நுகர்ச்சிக்குரிய பொன்னெழிற் கொன்றைமாலை தங்கிய திருமுடியை உடையவராய் ஈசன் எழுந்தருளி இருப்பார். அவரைக் கண்டு தொழுங்கள். ஆராக்காதல் வாழ்விற் கலந்து இன்பம் நுகரும் எமக்கும் பேரா இயற்கைப் பெருவாழ்வைத் தந்தருளுவீராகவென்று தோணிபுரத்தானைத் தொழுது வேண்டுங்கள். அவன் மன்னும் அயரா அன்புடன் தொழுது வேண்டுகின்றவர்களுக்குப் "பொன்னும் பொருளும் போகமும் நல்கும் வள்ளல்" -போகமும் வீடும் நல்கும் பெரியோன்.

## என்கூர்பயலை கூறீரே

நீங்கள் திருத்தோணிபுரத்துக் கோமானைத் தொழுது பேரா இயற்கைப் பெருவாழ்வு பெறும் நல்லருள் பெற்றவுடன் என்னை மறந்துவிடாதீர்கள். நான், ஊண் இன்றி உறக்கமின்றி அல்லும் பகலும் அவரையே எண்ணி எண்ணி ஏங்குகின்றேன் என்பதையும் எடுத்துச் சொல்லுங்கள். கொன்றைவார் சடையை உடைய அக் கோமானைப் பிரிந்தபின், என்னுடலில் பசலை படர்ந்துவிட்டது. அவருக்கே உரிய என் உடலின் அழகைப் பசலை அள்ளி உண்டுவிட்டது. பசலை உண்டதினால் வெளிறிய என் உடலைக் கண்டவர்கள் இகழ்ந்து பேசுகின்றார்கள். பசலை அவ்வளவுக் கவ்வளவு மிகுந்துவிட்டது. கூர்பசலையாய்க் கூடிவிட்டது, நாளுக்கு நாள் கூடிக் கூடி என்னை நலிகின்றது. இவற்றை எல்லாம் நீங்கள் நேரிற் கண்டவர்கள். என்வீட்டு முற்றத்திலே குடியிருந்து நான் படும் பிரிவுத் துன்பத்தின் தன்மையை முற்ற முடியக் கண்ட நீங்கள் மொழிகின்றதை அவர் நம்புவார். உடனே என்னைத் தழுவி முயங்கித் தண்ணளி புரிவார். பிரிவின்றி நுகரும் பேரின்பக் கூடலை ஒழிவின்றி நல்குவார். உங்களைப் போல் நானும் பிரிவின்றி வாழும் பேற்றைப் பெற்றுக் களிப்பேன். நல்லாக என் துன்பநிலையையும் என் உடலிற் படர்ந்த பசலை அவருக்கே உரிய என் எழிலை உண்டுவக்கும் வன்கண்மையையும் ஒன்றும் ஒளியாமல் உரையுங்கள். உங்களை யான் என்றும் மறவேன். எங்கள் வீட்டின் முற்றத்திலே நிற்கும் மடற் பெண் பனையை இனி என்றும் உங்களுக்கே உரித்தாக்குவேன். திருத் தோணிபுரத்துறையும் கொன்றைவார் சடையார் என் பெண்மை நயந்துவரச் செய்யுங்கள்.

*முன்றில்வாய் மடற்பெண்ணைக்*
*குரம்பைவாழ் முயங்குசிறை*

*அன்றில்காள் பிரிவுறுநோய்*
*அறியாதீர் மிகவல்லீர்*
*தென்றலார் புகுந்துலவுந்*
*திருத்தோணி புரத்துறையும்*
*கொன்றைவார் சடையார்க்கென்*
*கூர்பயலை கூறீரே.*

முன்றில் - இல்லத்தின் முன்னேயுள்ள முற்றம். பெண்ணை - பனை, குரம்பை - கூடு, முயங்கு சிறை - தழுவிய இறக்கைகள், அன்றில்காள் - அன்றிற் பறவைகாள், பிரிவுறுநோய் - பிரிவுத்துயர், வல்லீர் - வல்லமை உடையீர், தென்றலார் - தென்றற் காற்று, கொன்றை - திருக்கொன்றைமாலை, வார்சடை - நீண்ட சடை, கூர்பயலை - மிக்க பசலை, கூறீரே - கூறுங்கள்.

# அண்ணாமலை அண்ணல்

ஈசனின் இன்னருள் எல்லாப் பொருள்களிலும் கலந்து நிழலாடும் இயல்பு வாய்ந்தது. இயற்கை எழிலில் ஈசனின் அருளைக் கண்டு மகிழலாம். என்றும் ஈசனையே எண்ணி, எங்கும் அவனையே காண்கின்ற மெய்யடியார்கள் இயற்கையில் ஈசனைக் கண்டு இதயம் நெகிழ்வார்கள். மரமும், செடியும், புள்ளும், விலங்கும், பிற பல உயிர்களும் ஆற்றும் செயல்களில் எல்லாம் ஈசனின் அருளைக் கண்டு களிப்பார்கள். உலகில் உள்ள இயங்குதிணை உயிர் களிலும் நிலைத்திணை உயிர்களிலும் உடனாய்க் கலந்து நின்று வழிகாட்டும் இறைவனை உணரும் தவத்திரு மிக மிக மேலானது. உயிர்க்குயிராய் ஒன்றுபட்டு நின்று உள் ளொளியைப் பெருக்கி, உலப்பிலா ஆனந்தத்தை அளிக்கும் ஆண்டவனை உலகிலேயே கண்டு உய்யவேண்டும். உலகெலாம் ஆகி வேறாய் உடனுமாய் நிற்கும் அம்முழுமுதலை, உலகுயிர் வாழ்விலே கண்டு உய்வடைந்த மெய்யடியார்களின் அடிச் சுவட்டை உணரவேண்டும். உணர்ந்து உள்ளம் தெளிய வேண்டும். இறைவனின் அருள் எங்குமாய்ப் பரவி அலை எறி கின்றது. அந்த அருள் வெள்ளத்தில் தோய்ந்து தூய்மை அடைந்த செம்புலச் செல்வர்கள் அவனை எங்கும் காண்பார்கள். அவர்கள் காண்பதும் அருள், கேட்பதும் அருள். உண்பதும் அருள், உயிர்ப்பதும் அருள், உறுவதும் அருள். “கண்டு கேட்டு உண்டு உயிர்த்து உறுவ”தாகிய ஐந்து புலன்களின் ஈடுபாடும் ஒரு பொருளிலே சென்று நிறைந்துவிடும். ஐந்து பேருணர்வும் ஒன்றிலே சென்று படிதல்தான் ஒன்றுபட்ட பேரின்ப நிலையாகும். இந்நிலையை,

*ஐந்து பேரறிவுங் கண்களே கொள்ள*
*அளப்பருங் கரணங்கள் நான்கும்*
*சிந்தையே யாகக் குணமொரு மூன்றும்*
*திருந்து சாத்து விகமேயாக*
*இந்துவாழ் சடையான் ஆடுமானந்த*
*எல்லையில் தனிப்பெருங் கூத்தின்*
*வந்தபேரின்ப வெள்ளத்துள் திளைத்து*
*மாறிலா மகிழ்ச்சியின் மலர்ந்தார்*

எனச் சேக்கிழார் பெருமான் எடுத்துக்காட்டுகின்றார். உலகுயிர் களின் செயலெல்லாம் ஈசன் இயற்றுகின்ற எல்லையில் தனிப் பெருங் கூத்தின் செயல் என்பதைத் தெளியவேண்டும். தெளிந்தால் வழிப்பட்டு நின்று சிவம் பெருக்கவேண்டும். திருஞானசம்பந்தப் பெருமான், தாவில் சராசரங்கள் எல்லாம் சிவம் பெருக்கும் திருநிறைந்தவர். 'தவம் பெருக்கும் சண்பையிலே தாவில் சராசரங்கள் எல்லாம் சிவம் பெருக்கும் பிள்ளையார் திருவவதாரஞ் செய்தார்' என்பது பெரிய புராணம்.

சிவம் பெருக்கும் பிள்ளையார், சிவம் பெருக்கும் திரு ஞானசம்பந்தர் திருவண்ணாமலையை அடைந்தார். அண்ணா மலை நாதரின் அடிக்கமலங்களைத் தொழுதார். விண்ணோர் தொழும் அண்ணாமலை நாதன், எல்லா உயிர்க்கும் புகலாய், உண்ணாமுலை உமையாளொடு உடனாய் எழுந்தருளியிருக்கும் திருக்கோலத்தைத் தொழுது பேருவகை கொண்டார்.

ஆரா வேட்கையுடன் அண்ணாமலைச் சாரலை நோக்கினார். அண்ணாமலைச் சாரலில் வதியும் அனைத்துயிர்களும் அண்ணா மலை நாதனின் அருட் கோலமாக விளங்குவதைக் கண்டார்.

விண்ணை முட்டும் அண்ணாமலைச் சாரலின் மருங்கே தேமா மரங்கள் நின்றன. அவற்றில் கனிகளும் காய்களும் பூக்களு மாய்ப் பொலிந்தன. கடுவன் ஒன்று தேமாங்கனிகளைப் பறிக்க முயன்றதினால் உண்டான அற்புத நிகழ்ச்சியொன்றை அருள்

வள்ளலாகிய சம்பந்தர் கண்டார். கண்டதும் உள்ளம் செழித்தார். அண்ணாமலையானின் அடிக்கமலங்களைப் பாடும் வாயால், அங்கு வதியும் ஆண்குரங்கின் ஆண்மைச் செயலைப் பாடுகின்றார்.

*தேமாங்கனி கடுவன்கொள*
*விடுகொம்பொடு தீண்டி*

இனிய தேமாங்கனி மலையளவு உயர்ந்த மாங்கொப்பில் தொங்குகின்றது. ஏறிப் பிடுங்க எண்ணினால் உள்ளம் நடுங்கும். கனியின் சுவையை எண்ண எண்ணக் கடுவனின் உள்ளம் இனிக் கின்றது. எந்தவகையிலும் அந்தத் தேமாங்கனியைப் பறித்து உண்ணவேண்டும் என்ற எண்ணம் கடுவனின் உள்ளத்தைக் கவர்ந்துவிட்டது. அச்சம் அகன்றது. ஆண்மை பிறந்தது. தேமா வின் உச்சிக்கிளையில் ஒரே தாவலாய்ப் பாய்ந்த கடுவன், கனிகள் தூங்கும் கொப்பைக் கையால் பற்றியது. பற்றிய கொப்பைப் பாடு பட்டு வளைத்தது. கொப்பு மிகப் பெரியது. இழுத்து வளைத்த கடுவனையும் எடுத்தெறியக் கூடிய விசையுடையது. ஆண்மை மிக்க கடுவன் கொப்பின் ஆற்றலை அடக்கி இழுத்து அதன்கண் உள்ள இனிய கனிகளைப் பறித்தது. கடுவன் அரும்பாடுபட்டுத் தேமாங்கனியைப் பறித்த செயல், இளமைப் பருவத்தில் ஈசனுக்கு ஆளான ஆளுடைய பிள்ளையாரின் அருள் உள்ளத்தைக் கவர்ந்து விட்டது. தம் உள்ளத்தைக் கவர்ந்து ஆண்டுகொண்ட ஈசனை, என் உள்ளங் கவர் கள்வன் எனப்பாடிய அவரின் உள்ளத்தை, அண்ணாமலைச் சாரலில் வாழ்ந்த கடுவனின் செயலுங் கவர்ந்து விட்டது.

## தேமாங்கனி கடுவன் கொள

தேமாங்கனியைக் கடுவன் கொண்ட செயலை அவரால் மறக்கவே முடியவில்லை. இளமைப் பருவக் கடுவன் என்றபடி யால்தான், இவ்வளவு முயன்று தேமாங்கனியைப் பறித்தது. முதுமைப் பருவக் கடுவன் என்றால் முயலமுடியாது. இளமை மாறமுன்னரே நாம் ஈசன் அடிக்கு ஆளாக வேண்டும். ஆளானால்

இளமை எழுச்சியுடன் அவனைப் பாடலாம், ஆடலாம், கூடலாம், ஊடலாம், தெருவுதொறும் அவனைத்தேடி அலறலாம், ஆனந்தக் கூத்தாடலாம் என்ற உண்மைகளை எல்லாம் கடுவனின் செயலில் வைத்துச் சம்பந்தர் எமக்குக் கூறாமல் கூறுகின்றார். குறிப்பாகக் காட்டுகின்றார். இளமைப் பருவக் கடுவன் முயன்று முயன்று, அடைதற்கரிய தேமாங்கனியைப் பறித்துச் சுவைத்தாற் போல, நாமும் இளமை கழிய முன்னரே ஈசனுக்குத் தொண்டு பூண்டு, பேரின்ப நுகர்ச்சி எய்தவேண்டுமென்பதாம்.

தேமாங் கொப்பின் உயரம், உலக வாழ்வில் ஊறி, ஈச னருளை மறந்தோர்க்குப் பேரின்பம் மிகச் சேய்மையில் உள்ள தென்பதையும், தேமாங் கொப்பைப்பற்றி வளைக்க வளைக்க அது, வளைக்கின்ற கடுவனைத் தூக்கி எறியத்தக்க விசையுடைய தாய் இருத்தல், ஈசன் அருளை அடைதற்கு முயல்கின்றவரை உலகப் பற்றுக்கள் தாக்கித் தம் பக்கம் இழுக்க முயல்வதையும், அந்த மாங்கொப்பின் ஆற்றலை அடக்கி வளைத்த கடுவன் மாங்கனியைப் பறித்து நுகர்தல், உலகப்பற்றினால் உண்டாகும் தாக்கங்களை வென்று, இறைவன் திருவடிக்காளாகிப் பேரின்ப நுகர்ச்சிபெறும் ஆருயிரின் ஆற்றலையும் குறிப்பாக உணர்த்தி நிற்றல் காண்க.

## விடுகொம்பொடு தூமாமழைதீண்டி

கடுவன் கனியைப் பறித்துக்கொண்டு விட்ட தேமாவின் கொப்பு, கருக்கொண்ட மழை முகிலுடன் மோதியது. மழை முகில் உடைந்து மழையைப் பொழிகின்றது. கருங்கற்பாறையின் மேல் வீழ்ந்த மழைத்துளிகள் வெள்ளமாகப் பாய்கின்றது. கடுவன் ஆற்றிய செயலால் தேமாங்கொப்பும் வேறோர் செயலை ஆற்றியது. கடுவனுக்குப் பெரும் தொல்லை கொடுத்த மாங்கொப்பு, கடுவனால் வளைக்கப்பட்டு விசை அடங்கியது. விசை அடங்கிய அக்கொப்பைக் கடுவன் விட்டது. அக்கொப்பு, கருக்கொண்ட மழை முகிலுடன் மோதி மழை பொழியச் செய்தது. காலந் தாழ்த்தாமல் விரைந்து மழையைப் பொழிந்து, வையத்தை வாழ்விக்க

வேண்டும்; காலந்தாழ்த்தினால் வையம் வருந்தும் என்று, மழை முகிலைத் தாக்கி மாங்கொப்பு வழிகாட்டுகின்றது. ஒவ்வொருவரும் தாம் ஆற்றவேண்டிய கடமைகளைக் காலந் தவறாது ஆற்ற வேண்டும். காலங் கழிந்தால், கருதிய பொருளைப் பெற இயலாது என்னும் உண்மையை, மழை முகிலை மோதி மோதி மழைபொழியச் செய்த மாங்கொப்பின் செயல் உணர்த்துகின்றது. காலத்தோடு கற்பனை கடந்த ஈசனை, நாம் காலத்தொடு தொழுது அன்பு செய்ய வேண்டும். "நாச் செற்று விக்குள் மேல் வாராமுன் நல்வினை மேற்சென்று செய்யப்படும்" என்பது திருக் குறள். இறைவனுக்கு ஆளாகி அன்பு செய்யும் நல்லவினையை, நாளைப் போக்காமல் நாம் விரைந்து புரிய வேண்டும் என்பதை நினைந்து ஈடேறுவோம். கடுவனால் வளைக்கப்பட்ட மாங்கொப்பு மெய்யடியாரின் அருள் நோக்கம் பெற்றோர் தம் புன்மை நீங்கி உய்ந்து, பிறருக்கும் உய்ய வழி காட்டுவது போலத் தானும் சிறந்து, காலத்தோடு மழையைப் பொழிந்து வையத்தை வாழ்விப்பாயாக என மழை முகிலுக்கும் வழிகாட்டிய தென்க.

## ஆமாம்பிணை அணையும் பொழில்

மாங்கொப்பினால் தாக்குண்ட மழைமுகில் மலைப்பாறை யின் மேல் மழையைப் பொழிந்தது. மழைநீர் பாறையில் நில்லா மல் வழிந்துசென்றது. மழைபெய்யும் அறிகுறியொன்றும் இல்லாமையால், அச்சம் சிறிதும் இன்றிப் புல்மேய்ந்து, மகிழ்ந்த காட்டுப் பெண்மான்கள், எண்ணாத வகையில் மழை பெய்வதைக்கண்டு ஏங்கிவிட்டன. மழைக்கு நனையாமல் ஒதுங்கி நிற்க இடம் இன்றி இன்னல் உற்றன. காட்டில் வாழும் பெண் மான்கள், மழைக்காலத்தில் தாம் நனையாமல் வதிதற்குப் பாதுகாப்பொன்றும் தேடாமல் வாழ்பவை; மழைக்கோலத்தைக் கண்டவுடன் ஒதுக்கிடந்தேடி ஓடும் இயல்புடையவை. எண்ணாத வகையில் செயற்கையால் மழை முகில் உடைந்து மழையைப் பொழியக் கண்டவுடன் மருண்டு மனங்கலங்கி மலைச் சோலையை நோக்கி ஓடின இக் காட்டுமான்கள் போல, வரு

முன்னர்க் காவாத வாழ்வில் இருந்து வாழும் மக்களும் பலர், இளமை கழிந்து முதுமை மிகுந்து, இறந்துபடும் எல்லை எய்தும் வரையும், இறைவனை எண்ணாமல் உலக வாழ்விலேயே மனத்தைப் பதித்து வாழ்கின்றார்கள். உடல் வலுக்குன்றித் தம் செயல் அற்ற நேரத்தில் இறைவனை எண்ணித் தொழுகின்றார்கள். இளமை கழிய முன்னர் இறைவனுக்குத் தொண்டு பூண்டு, பெற்ற சிற்றின்பத்தில் பேரின்பச்சாயலைக் கண்டு வாழாமல் வறிதே காலத்தைக் கழித்த தம் அறியாமையை எண்ணி அழுவார்கள்.

*காலன் வருமுன்னே கண்பஞ் சடைமுன்னே*
*பாலுண் கடைவாய் படுமுன்னே—மேல்விழுந்தே*
*உற்றார் அழுமுன்னே ஊரார் சுடுமுன்னே*
*குற்றாலத் தானையே கூறு*

என்ற உண்மையை உளங்கொள்ளத் தவறிவிட்டவர்கள் பிறவிப் பயனை அடைதல் அரிது. பெண்மான்கள் எண்ணாத வகையில் எதிர்பாராமல் வந்த மழைக்கு அஞ்சி அண்ணாமலைச் சோலையில் அடைக்கலம் புகுந்தன. நாமும் அம் மான்களைப் போல, அல்லல் வருந்துணையும் ஆண்டவனை எண்ணாமல் இப்பொழுதே அவனுக்கு ஆளாகுவோம்; அண்ணாமலை நாதனின் அடிக்கமலத்தைத் தொழுவோம். விண்ணோரும் வந்து தொழும் அண்ணாமலையானை அல்லும் பகலும் அயரா அன்புடன் தொழுதால் தொல்லை இரும்பிறவி ஒழியும்; அல்லல் அற்ற ஆனந்த வீட்டின்பம் கூடும். அஞ்சி நடுங்கிய மான்களுக்கு அண்ணாமலையான் பொழில் அடைக்கலம் அளித்தது போல, நாமும் பிறப்பிறப்புப் பிணிக்கு அஞ்சி அண்ணாமலையானைத் தொழுதால், அவனடியார்கள் எமக்கு ஆதரவு தந்து வழிகாட்டி வாழ்விப்பார்கள்.

## பூமாங் கழல் புனைசேவடி

அண்ணாமலையானின் அடிக்கமலம் பிறவிப்பிணியைப் போக்கும் புணை. அத்திருவடிகளில் அடியார்கள் தூவி வணங்கிய

மலர்கள் என்றும் உள்ளன. பூமாண் அடி, அத்துடன் அத்திருவடி களும் திருவருளாகிய தேனைச் சொரிகின்ற செந்தாமரை மலர்கள்; தொண்டர்களாகிய திருக்கோத்தும்பிகள் அந்த அண்ணா மலையான் அடிமலர்களில் என்றும் சுரந்து ஊறுகின்ற பேரின்பத் தேனை நுகர்ந்த வண்ணமாய் உள்ளன. சிந்திப்பவர்க்குச் சிறந்து செந்தேன் முந்திப்பொழிவன அத்திருவடிகள். அடைந்தவரின் பிறவிப் பிணியை நீக்குகின்ற மாண்புடையன. “மலர்மிசை ஏகினான் மாண்அடி சேர்ந்தார் நிலமிசை நீடுவாழ்வார்” என்பது திருக்குறள். அச்சேவடியில் வீரக்கழல் புனையப்பட்டுள்ளது. தம்மையே புகலென அடைந்த ஆருயிர்களின் இருவினைகளைப் போக்கிப் பேரா இயற்கைப் பேரின்ப வீட்டை நல்கும் பேரருள் ஆண்மையாளன் என்பதை வீரக்கழல்கள் உணர்த்துகின்றன.

## சேவடி நினைவார் வினையிலர்

அண்ணாமலையானின் பூமாங்கழல் புனைசேவடியை நினையுங்கள். நினைந்து நினைந்து நெஞ்சுருகுங்கள். அவனின் சேவடிகளை இடைவிடாது நினையுங்கள். இறைவன் அடிசேர்ந்தார் பிறவிப் பெரும் பிணியை நீங்குவார். அத்திருவடி சேவடி, சிவந்த திருவடிகள். சிறப்பென்னும் வீட்டைத் தருகின்ற சேவடிகள். அச்சேவடியைச் சேரச் சேவடி படரும் செம்மல் உள்ளம் வேண்டும். இறைவன் சேவடிகளையே சிந்திக்கின்ற உள்ளம் செம்மல் உள்ளம். தலைமை கொண்ட உள்ளம். அச்சேவடிகள் சிந்திப் பரியன; சிந்தித்தால் சிந்திப்பவர் உள்ளத்தில் தேனாய் இனிப்பன. என்றும் அண்ணாமலையான் அடிக்கமலங்களாகிய சேவடி களையே சிந்தியுங்கள். சிந்தித்துச் சிந்தித்துச் செம்மலர் நோன்தாள் சேர ஒட்டா அம்மலங்கழுவுங்கள். அன்பரொடு மருவுங்கள். இருவினைப் பற்றும் ஒழிந்து இன்பவீட்டை எய்தலாம்.

*தேமாங்கனி கடுவன்கொள*
*விடுகொம்பொடு தீண்டித்*
*தூமாமழை துறுகன்மிசை*
*சிறுநுண்துளி சிதற*

*ஆமாம்பிணை அணையும்பொழில்*
*அண்ணாமலை அண்ணல்*
*பூமாங்கழல் புனைசேவடி*
*நினைவார் வினையிலரே.*

கடுவன் - ஆண் குரங்கு. விடுகொம்பு - வளைந்து மாங்கனியைப் பறித்தபின் விட்டகொம்பு. தூமாமழை - தூய்மையான கரிய மழைமுகில். துறுகல் - பாறை. ஆமாம்பிணை - காட்டுமான். பூமாங்கழல் புனை - பூவும் கழலும் புனைந்த பெருமை பொருந்திய. சேவடி - சிவந்த திருவடிகள்.

# அஞ்சேல் என்று அருள் செய்வான்

ஈசன் என்றும் எம்மை ஈடேற்றி ஆட்கொள்ளும் இன்னருள் வாய்ந்தவன். எமக்கு என்றும் பொன்றாப் புகலாய் உள்ளவன். ஈசன் திருவடி நீழலை எய்திப் பேரின்பம் பெறும் பொருட்டே நாம் பிறவி எடுத்துள்ளோம். மனிதப் பிறவிதான் மிகவும் தூயது. ஈசனை அயரா அன்புடன் அல்லும் பகலும் ஏத்தி ஏத்தி, அவனருள் பெற்று அவன் தாள் பணியும் அரும்பெரும் பேறு மண்ணிலே மக்களாகப் பிறந்தவர்க்கே வாய்த்துள்ளது. இந்தப் பூமி எம்மைச் சிவன் உய்யக் கொள்கின்ற திரு நிறைந்தது. நிலவுலகில் மக்களாகப் பிறந்த நாம் காலந்தாழ்த்தாமல் ஈசன் கழலிணை களைப் போற்றி வாழுஞ் சீலத்தைத் தேடிக்கொள்ள வேண்டும்.

இளமையிலேயே ஈசனருளைப் பெற்ற இளைய பெருந் தகையாராகிய திருஞானசம்பந்தப்பெருமான் எம்மை ஊக்கு கின்றார். காலங்கடத்தாமல் ஆலமுண்டான் அடிபோற்றும் வண்ணம் அறிவுறுத்துகின்றார். திருவையாற்றில் எழுந்தருளிய ஈசனைப் பரவிப் பாடுகின்ற பாலறாவாயர் விரைவில் ஈசனைப் போற்றிப் பிறவிப்பயனைப் பெறும் வண்ணம் விளம்புகின்றார்.

## வலம் வந்த மடவார்கள்

திருவையாற்றில் எழுந்தருளிய ஈசனை வலம்வந்து வணங்கிய திருஞானசம்பந்தர் சிந்தை மகிழ்ந்தார். தம்முடன் வலம்வந்த மற்றைய அடியார்களின் அன்புப் பெருக்கைக் கண்டு வியந்தார். விம்மிதம் உற்றார். கன்னிமை கனிந்த இளம் பெண் களும் வலம்வந்து வணங்குவதைக் கண்டார். வலம்வந்த அம் மடவார்கள் திடமான அன்புடன் சிந்தை உருகிச் சிவனிடம்

தம்மை ஒப்புவித்து நிற்கும் உயர்ந்த நிலையை உணர்ந்தார். உணர்ந்து, உள்ளம் உருகினார். வலம்வந்த மடவார்களின் இறையன்பு சம்பந்தரின் உள்ளத்தைக் கவர்ந்துவிட்டது. அவர் திருவையாற்றானைப் பாடுதலொழிந்தார். மடவாரின் பத்தி மாண்பை மதித்துப் பாடினார். இளமை கனிந்த எழிலுடன் தம்மை மறந்த நிலையில் நின்று மடவார்கள் புரிகின்ற வழி பாட்டை விழியாரப் பருகி விருந்துண்டார்.

இன்னொரு பக்கத்தில் அடியார்கள் முழவை முழக்கு கின்றார்கள். வலம்வந்த மடவார்கள் முழவின் முழக்கத்தைக் கேட்டவுடன் ஆடத்தொடங்கினார்கள். முழவு அதிர அதிர அதன் தாளத்திற்குப் பொருத்தமாக அடி எடுத்து வைத்து ஆடத் தொடங்கிய மடவார்கள் தம்மை மறந்துவிட்டார்கள். தலைவன் தாள் தலைப்பட்டுவிட்டார்கள். எழிலாரும் இளமைக் கோலத்துடன் முழுமுதலிறைவனிடம் தம்மை முற்றும் ஒப்புவித்து அழலிடைப் பட்ட மெழுகுபோல அன்பினால், ஆவியுருக அகலிடத்தார் ஆசாரத் தையும்விட்டு ஆடுகின்ற மடவாரின் அன்பைக் காணச் சம்பந்தரும் தம்மை மறந்துவிட்டார்.

## நடமாட

வலம்வந்த மடவார்கள் நடமாட எண்ணி வந்தவர் அல்லர். திருவையாற்றில் எழுந்தருளிய சிவனார், அவர்களின் உள்ளத்தைக் கவர்ந்துவிட்டார். அவர்களும் அவருக்கே ஆட்பட்டுவிட்டார்கள். ஆடியவண்ணமே நிற்கின்றார்கள். ஆட்டுவித்தால் ஆரொருவர் ஆடாதாரே. திருஞானசம்பந்தரும் மடவாரின் நடனத்தை நோக்கிய வண்ணமே நிற்கின்றார். முதுமை நிறைந்த முது மகளிர் வலம்வரவும், தம் தன்மை கேட்டு நின்று நடம்புரியவும் முடியுமா என்று சம்பந்தர் எண்ணினார். கட்டிளமைக் கவின் நிரம்பிய உடல் நலமும், கருத்தெல்லாம் ஈசனுக்கே உரித் தாக்கும் காதலன்பும் ஒன்றை ஒன்று தொட்டபடியே விட்டுவிலகா மல் நின்று விளங்கும் பருவந்தான் ஆருயிர்கள் ஈசனுக்கு

விருந்தாகும் இனிய பருவம் என்பதை உணர்ந்த சம்பந்தர் உயிர் தளிர்த்தார். உலப்பிலா ஆனந்தம் உற்றார். "வலம்வந்த மடவார்கள் நடமாட" என்னும் தொடர்கள் நிலவுலகில் வெறும் சொற்களாகக் காணப்படினும் இறையுலகில் என்றென்றும் ஆருயிர்கள் ஆடுகின்ற ஆனந்த நடனமாகவே திகழ்கின்றது.

## முழவதிர

முழவும் இறைவனின் அருளை நினைந்துருகும் அடியார் களால் முழக்கப்படுகின்றது. முழவை அதிரச் செய்யும் அன்பர் களும் தம்மை மறந்துவிட்டார்கள். அந்த முழவின் ஓசை நாதப் பறையின் ஓசையை நினைவூட்டுகின்றது. வலம்வந்த மடவார் களின் நடனத்துடன் நாதப் பறையாகிய முழவின் ஓசையும் அத்துவிதமாகி விட்டது.

இருமையில் ஒருமை காணவல்லது அன்பேயாகும். வலம்வந்த மடவார்கள் ஈசன்மேல் வைத்த அன்பும், முழவை அதிரச்செய்த மெய்யடியார்கள் ஈசன் மேல் வைத்த அன்பும் ஒன்றுபட்ட இன்பக்கூடலைச் சம்பந்தர் தமிழ் செய்தார். ஈசனை எண்ணாமல் மடவார்கள் ஆடும் நடனமும் ஈசனை எண்ணாமல் பிறரால் முழக்கப்படும் முழவோசையும் சம்பந்தரின் சிந்தையைத் தொட்டுச் செந்தமிழ்த் திருப்பதிகம் தரக்கூடியனவல்ல. "வலம் வந்த மடவார்கள் நடமாட முழவதிர" என்னுந் தொடர்கள் இறை வனோடு இணைந்த பொருள்களின் நிகழ்ச்சிகளை நினைவூட்டி என்றும் நிலையான வாழ்வைப் பெற்றுவிட்டன.

## மழையென்று அஞ்சி

திருவையாற்றுத் திருக்கோயிலில் நிகழ்ந்த அன்பின் அதிரல் அக்கோயிலின் அயலிலே அச்சத்தை விளைவு செய்து விட்டது. மடவார்களின் நடனத்திற்கு அமைய அதிர்ந்த முழவின் முழக்கம் மழைமுழக்குப் போலக் கேட்டது. மழைக்காலத்தில் நனையாமல் இருந்து வாழுதற்கோர் உறையுள் புனையத் தெரியாத மந்திகள், முரசின் முழக்கத்தை மழையின் முழக்க

மென நினைந்து நெஞ்சம் நடுங்கின. மழை வரமுன்னர் விரைந்து மலையின் முழைகளில் சென்று ஒதுங்கவேண்டு மென்ற எண்ணம் அம் மந்திகளின் உள்ளத்தில் எழுந்தது. மந்தி களின் நிலையைக் கண்ட சம்பந்தர் நெஞ்சம் நெகிழ்ந்தார். வருமுன்னர்க் காக்க நினையும் அம்மந்திகளின் செயலில் பொதிந்துள்ள வாழ்க்கை உண்மைகளை நினைந்து மகிழ்ந்தார்.

## சிலமந்தி அலமந்து

மழைமுழக்கென எண்ணி அஞ்சிய எல்லா மந்திகளும் மனத்துடிப்புடன் மழை வருமென வருந்தி வருமுன்னர்க் காக்க முயலவில்லை. சில மந்திகள்தான் முயன்றன. மழை முழக்கைக் கேட்டவுடன் சில மந்திகள் அச்சத்தினால் சுழன்று திரிந்தன. திரிந்த மந்திகள் உயர்ந்த மரங்களின் மேல் ஏறின. மழைக்கருக் கொண்ட முகில்கள் வானப்பரப்பில் மிதந்து வருகின்றனவா என்பதை அறியத் துடித்தன. நிலையாமையுடையது உலகியல் வாழ்வு என்பதை உணர்ந்த பின்னும் இறைவனைத் தொழுது உய்வடைய எண்ணாமல் உலக போகங்களில் ஈடுபட்டுக் கிடந்து பிறவிப்பயனைப் பலர் இழக்கின்றார்கள். மெய்யுணர்ச்சி வாய்ந்த சிலர்தான் உலக போகங்களை விடுத்து இறைவ னருளைப் பெறுதற்காக முயல்கின்றார்கள் என்னும் குறிப்புப் பொருள், “சிலமந்தி அலமந்து” எனுந் தொடரில் அமைந்து கிடத்தலையும் நோக்குக.

## மரம் ஏறி முகில் பார்க்கும் திருவையாறு

மழை முகில்கள் வருகின்றனவா என்பதை அறிதற்காக உயர்ந்த மரங்களிலே ஏறிப்பார்க்கக் கூடிய வல்லமைப்பாடு இளமை மாறாத மந்திகளுக்கே உடையதாகும். கிழமந்திகள் அலமந்து மரமேறி முகில் பார்க்கும் ஆற்றலுடையனவல்ல. மக்களும் தங்கள் இளமை கழிய முன்னர் உயர்ந்த சான்றோரை அடைந்து அவரின் ஞான உரைகளின் துணையாலே மெய்ம்மை தெளிந்து இறைவனருளைப் பெற முயலல்வேண்டும் என்னும்

குறிப்புப்பொருள் "மரமேறி முகில் பார்க்கும்" என்ற தொடரில் அமைந்திருத்தலையும் நோக்குக.

## புலனைந்தும் பொறிகலங்கி

முழவதிர மழை முழக்கென்று எண்ணி அஞ்சி, மரமேறி முகில் பார்க்கும் சில மந்திகள் உள்ள திருவையாற்றில் எழுந் தருளிய இறைவன் எம்பொருட்டுச் செய்கின்ற இன்னருளையும் சம்பந்தர் நினைவூட்டுகின்றார்.

கண், வாய், மெய், மூக்கு, செவி என்னும் ஐம்பொறிகளும் எமக்குத் துணையாக உள்ளன. கண்ணால் விரும்பியவற்றைக் கண்டும், வாயால் விரும்பியவற்றை உண்டும், மெய்யால் விரும்பியவற்றை உற்றும், மூக்கால் விரும்பியவற்றை மோந்தும், செவியால் விரும்பியவற்றைக் கேட்டும் நுகர்கின்றோம். "கண்டு கேட்டு உண்டு உயிர்த்து உற்று அறியும் ஐம்புலன்" என்பது திருக்குறள். இந்த ஐம்பொறிகள் உடம்பிலே உயிர் நிலைத்து வாழும் வரையும் உடன் நின்று உதவுகின்றன. உடம்பு நலங் கெடக் கெட ஐம்பொறிகளும் படிப்படியாக ஆற்றல் குறைந்து விடும். உடம்பில் நின்று உயிர் நீங்குதற்கு முன்பே பொறிகளின் உணர்ச்சி அற்றுவிடும். உடம்பில் உயிர் உள்ளளவும் ஒன்று பட்டிருந்த ஐம்பொறிகளும் தத்தமக்குரிய காரியங்களைச் செய்யாமல் கலங்கிவிடுகின்றன. நாம் எண்ணியதைச் சொல் லவோ நா இடந்தராது; காணக் கண் இடந்தராது. இங்ஙனமே ஏனைய பொறிகளும் ஆற்றல் அழிந்துவிடும். புலன் ஐந்தும் பொறி கலங்கிய நேரத்தில் எமது நிலையை நாம் இப்பொழுது சிந்தித்துப் பார்க்க வேண்டும். புலனைந்தும் பொறி கலங்க முன்னரே நாம் இறைவனை ஏத்தி ஐம்பொறிகளாலும் அவனை நுகர வேண்டும் என்பதைச் சம்பந்தர் நினைவூட்டுகின்றார்.

"புலனைந்தும் பொறிகலங்கி" என்னுந் தொடரில் அமைந் துள்ள பொருள் எம்மை விழிப்புறச் செய்கின்றது. இப்பொறிகள் ஐந்தும் ஆருயிர்களாகிய ஆன்மாக்களுக்கு உற்ற துணையல்ல என்னும் உண்மையை நிலை நாட்டுகின்றது.

## நெறிமயங்கி

பொறிகள் கலங்கினவுடனே செய்வது இன்னதென்று தெரியாத தயக்க நிலை உண்டாகின்றது. நாங்கள் செல்லும் நெறி தெரியாதவர்களாய்க் கிடந்து அல்லலுறுவோம்.

## அறிவழிந்திட்டு

இங்ஙனம் நெறி மயங்கிய நிலையில் அறிவு அழிந்து விடு கின்றது. சென்ற இடத்தில் செலவிடாது தீது ஒரீஇ நன்றின் பால் உய்க்கும் அறிவு அழிந்தபின் ஆவதொன்றில்லை. கருவிகளால் பெற்ற அறிவு அழிந்தபின் நாம் எய்தும் இன்னல் நிலையை எண்ணிப் பாருங்கள்.

## ஐ மேல் உந்தி

அறிவு அழிந்தவுடன் ஐ என்னும் கபம் (சளி) தொண்டை அளவு தள்ளிவந்து அத்தொண்டையை அடைக்கும். கபம் தொண்டையையடைக்கும்பொழுது உண்டாகும் அவலமான நிலையில் ஆவி அகத்ததோ புறத்ததோ என்னும்படி நின்று சுழலும். இந்த நெருக்கடியான நேரத்தில் எமக்கு உதவுவார் ஒருவரும் இல்லை.

## அலமந்த போதாக

ஆவி கிடந்து சுழலுகின்ற இறுதி நிலை வரும் நேரத்தில் நமக்கார் துணைசெய்வார்கள். ஆண்டு பலவாக உயிருடன் ஒன்றுபட்டிருந்த ஐம்பொறிகளும், அவ்வுயிரை நெறிப்படுத்தி வாழ வழி காட்டிய அறிவும், அதற்கு இடமளித்த உடம்பும் பயன் படாமல் போகும்பொழுதுதான், உயிர் தனக்குற்ற உண்மைத் துணைவனாகிய இறைவனை நினைக்கும். நினைத்தால் அவன் காப்பாற்றுவான்.

## அஞ்சேல் என்று அருள்செய்வான்

உன்னைக் காப்பாற்ற நான் இருக்கின்றேன்; நீ அஞ்ச வேண்டாம் என இறைவன் அடைக்கலம் அளிப்பான். நீங்கள்

உமக்குத் துணையென்று கருதிய பொறிகளும் அறிவும் பிறவும் உம்மைக் காப்பனவல்ல. அவைகள் செயலற்றுப்போம். உற்ற துணைவன் இறைவன் ஒருவனே என்பதை உணருங்கள். உணர்ந்து உய்யுங்கள். அந்த இறைவன் திருவையாற்றில் எழுந்தருளி இருக்கின்றான். அஞ்சேல் என்று அருள்செய்வான் அமருங்கோயில் திருவையாறு.

*புலனைந்தும் பொறிகலங்கி நெறிமயங்கி*
*அறிவழிந்திட்டு ஐம்மேல் உந்தி*
*அலமந்த போதாக அஞ்சேலென்று*
*அருள்செய்வான் அமருங் கோயில்*
*வலம்வந்த மடவார்கள் நடமாட*
*முழவதிர மழையென்று அஞ்சிச்*
*சிலமந்தி அலமந்து மரம்ஏறி*
*முகில்பார்க்கும் திருவையாறே*

பொறி ஐந்து - கண், வாய், மெய், மூக்கு, செவி; புலன் ஐந்து - சுவை, ஒளி, ஊறு, ஓசை, நாற்றம்; நெறி - வழி, மயங்கி - தெளிவின்றி, ஐ - கபம், உந்தி - செலுத்த, அலமந்த - உயிர் சுழலுகின்ற, போது ஆக - நேரம் வரும்பொழுது, அஞ்சேல் - அஞ்சற்க (அஞ்சவேண்டாம்), மடவார்கள் - இளம்பெண்கள், மந்தி - குரங்கு, முழவு - மத்தளம், அலமந்து - கலங்கி.

# செம்மையினார்

இறைவன் அடியார்க்கு என்றும் இனியவர். அவர்களால் அறிதற்கு மிக எளிமையானவர். நண்ணினர்க்கு நல்லவன். 'நண்ணினர்க்கினியாய்' என்று அன்பர்கள் இறைவனை அழைப்பார் கள். இறைவனருளினால் தாம் அடைகின்ற உலக இன்பங்களில் மூழ்கி இறைவனையே மறந்து வாழ்கின்றவர்களையும், இறைவன் மறக்கமாட்டார். அவர்களைத் தமது இன்னருளால் ஈடேற்றி உய்யக் கொள்ளும் வெள்ளக் கருணை மிக்கவர். திருமாலும் நான்முகனும் தமக்கு இறைவன் அருளிய பதவிகளில் மூழ்கி இறைவனை மறந்துவிட்டார்கள். தனித்தனி தம்மையே முழு முதலாக எண்ணித் தருக்குற்றார்கள். திருமால் உலகைக் காக்கின்ற நானே முழுமுதலாவேன் என்றான். நான்முகன் உலகைப் படைக்கின்ற நானே முழுமுதல் என்றான். இருவர்க்கும் போர் மூண்டது. முழுமுதற்கடவுளாகிய சிவன், அவர்களின் அறியாமையைக் கண்டு திருவுள்ளம் இரங்கினார். இருவருக்கும் இடையில் தீப்பிழம்பாய் தோன்றி அவர்களின் அறியாமையை அகற்றி ஆட்கொள்ள எண்ணினார். அவர்கள் தீப்பிழம்பின் அடியையும் முடியையும் அறிய முடியாதவர்களாய் அல்லற் பட்டார்கள். அல்லற்பட்டபின் மூவர் கோனாய் நின்ற சிவனே முழுமுதற் கடவுள் என்னும் உண்மையை உணர்ந்தார்கள்.

*மாலும் அயனும் வணங்கிநேட*
*மற்றவர்க்கு எரியாகி நீண்டசீலம்*

என்று திருஞானசம்பந்தர் இறைவனின் செயலைப் போற்றுகின்றார்.

## சீலம்

மாலும் அயனும் கொண்ட மயக்கத்தைப் போக்கி ஆட் கொள்ளுதற்காகவே இறைவன் நெருப்புமலையாய் நின்றான். திருமாலும் நான்முகனும் கண்டு தொழும் வண்ணம் மிக எளிதாய ஒளிவடிவை இறைவன் எடுத்துவந்த அருட்செயலைச் சீலம் எனத் திருஞானசம்பந்தர் சொல்லித் துதிக்கின்றார். சீலம் - எளிமை. ஒருரும் ஒருருவும் இல்லாத முழுமுதற்சிவம் ஒளி உருவாய்க் காட்சி கொடுத்து மாலையும் அயனையும் உய்யக் கொண்ட சீலத்தை எண்ண எண்ணத் திருஞானசம்பந்தரின் சிந்தை செழிக்கின்றது.

*"வெளிவந்த மாலயனுங் காண்பரிய வித்தகனைத்*
*தெளிவந்த தேறலைச் சீரார் பெருந்துறையில்*
*எளிவந்து இருந்திரங்கி எண்ணரிய இன்னருளால்*
*ஒளிவந்தென் உள்ளத்தின் உள்ளே ஒளிதிகழ*
*அளிவந்த அந்தணனைப் பாடுதுங்காண் அம்மானாய்"*

என வரும் திருவாசகத்தினை நோக்குக.

## சீலம் அறிவரிதாகிநின்ற

இங்ஙனம் முழுமுதற் சிவமாகிய இறைவன் அடியார்களை ஆட்கொண்டருளும் வண்ணம் எளியனாய் வெளிவந்து நிற்கும் சீலம் எம்மால் அறிய முடியாததாய் இருக்கின்றது. அவனருளே கண்ணாகக் காணவல்ல மெய்யடியார்களுக்கே இச்சீலம் தெரியக் கூடியதாகும்.

*"ஊனே புகுந்த உனைஉணர்ந்தே*
*உருகிப் பெருகும் உள்ளத்தைக்*
*கோனே அருளுங் காலந்தான்*
*கொடியேற்கு என்றோ கூடுவதே"*

என்பது திருவாசகம். இறைவன் எளிவந்து அருளுங் காரணத்தை, அவனருளால் உணர்ந்து கொள்ளலாமே அன்றி, உரைப்பார் உரைக்கும் உரைகளால் உணரமுடியாதென்பதாம். ஆருயிர்கள்

தம் தன்மை கெட்டு சிவத் தன்மையுற்ற தூயநிலையிலேதான், அருளின் செயல்களை அறிய வல்லனவாகும். தம் தன்மை கெடாமல் நின்று தாம் கற்ற நூலறிவினால் இறைவனின் இயல்பு களையும் இன்னருள்வகையையும் உணரா. உணர்ந்தார்க்கு உணர்வரியோன் என்பது திருக்கோவையார்.

## செம்மையினார்

உணர்ந்தார்க்கு உணர்வரியோனாய், தம் தன்மை கெட்டு நிற்கும் ஆருயிர்களால் உணரக்கூடியவனாய், உள்ளத்தின் உள்ளே நிற்கும் கருவாய் விளங்குகின்ற இறைவன் மிகச் செம்மையானவர். சிறப்பென்னும் செம்பொருளாய் உள்ளவர். இச்செம்பொருளைச் "செம்மையே ஆய சிவபதம் அளித்த செல் வமே சிவபெருமானே" என்று மணிவாசகர் ஆராக் காதலுடன் அழைக்கின்றார், சிவம், செம்பொருள் என்பன ஒருபொருட் சொற்கள். இந்தச் செம்பொருள்தான், தன்தன்மை எய்திய ஆருயிர்கட்குச் சிறப்பென்னும் வீட்டின்பத்தை ஈந்தருளும் மெய்ப்பொருளாகும்.

*பிறப்பென்னும் பேதைமை நீங்கச் சிறப்பென்னும்*
*செம்பொருள் காண்ப தறிவு*

என வரும் திருக்குறளுரையில் "தோற்றக் கேடுகள் இன்மையின் நித்தமாய், நோன்மையால் தன்னை ஒன்றுங் கலத்தல் இன்மை யின், தூய்தாய், தான் எல்லாவற்றையுங் கலந்து நிற்கின்ற முதற்பொருள், விகாரமின்றி எஞ்ஞான்றும் ஒருதன்மைத்தாதல் பற்றி அதனை, செம்பொருள் என்றார்" எனக் கூறும் விளக்கத்தை நோக்குக. இறைவன் ஆருயிர்களுடன் அத்துவிதமாய்க் கலந்து நின்றாலும் தன் தூயதன்மையில் திரியான் என்பதை உணர்த்தச் செம்மையினார் என்றார். இங்ஙனம் செம்மைவாய்ந்த செம் பொருள் எழுந்தருளியிருக்கும் பசுபதியீச்சரத்திலே நிகழ்ந்த செயலொன்று சம்பந்தரின் சிந்தையைத் தொட்டுவிட்டது. சிவனையே சிந்திக்கும் திருப்பெருகும் தம் தூய சிந்தையைத் தொட்ட செயலைத் திருநெறிய தீந்தமிழாற் பாடிப் பரவுகின்றார்.

## கோலவிழா

பசுபதியீச்சரத்தில் அருள் அழகு நிழலாடும் திருவிழா நிகழ்கின்றது. அந்தத் திருவிழா அடியார்களின் அன்புள்ளத்தை ஈர்த்தீர்த்து, ஆனந்தம் அளிக்கும் அருள் ஆடல்களும் பாடல்களும் நிரம்பியது என்பதை உணர்த்தக் கோலவிழா என்றார். கோலவிழா நிகழும் பசுபதியீச்சரத்தில் கொடிபோல இடையை உடைய இளம் நங்கையர்கள், தமது அன்புத் தலைவர்களாகிய இளம் நம்பியர்களுடன் வந்து வழிபடுவார்கள். வழிபாட்டினால் முதிர்ந்த பத்திவீறு, அவர்களை அரங்கிலே ஏறி ஆடல்புரியும் வண்ணம் ஏவிவிட்டது. நங்கையரும் நம்பியரும் கோலவிழாவில் அரங்கேறி ஆடல் புரிந்தார்கள். உலகவாழ்வின் இன்பச் செவ்வியிலே ஊறித்தோய்ந்த இன்ப நுகர்வை மறந்து இறைவனடி பரவும் இறவாத இன்பக் காதலராய்ச் சிறந்து, ஆடல்புரியும் அவர்களின் தூய பத்தி சம்பந்தரின் திருவுள்ளத்தைக் கவர்ந்துவிட்டது. நங்கையர்கள் கொடியிடையுடையவர்கள். மிகமிக இளமைப் பருவத்தினர். தமது அன்புத் தலைவர்களுடன் ஆடல் புரியும் அரங்கில் ஏறி நாணம் இன்றி ஆடுகின்றனர். பசுபதியீச்சரத்தில் எழுந்தருளிய ஈசன்மேற் கொண்ட ஆராக்காதலன்பினால் தம்மை மறந்து தம்நாமங் கெட்டு ஆடுகின்றார்கள். ஆடும் பொழுது பால்போன்ற மொழிகளால் பசுபதியீச்சரத்தானைப் பாடிய வண்ணம் ஆடுகின்றார்கள். நங்கையரும் நம்பியரும் பசுபதியீச்சரநாதனைக் காதலிக்கும் நங்கையர்களாக மாறி விட்டார்கள். இச்செயலைக்கண்ட சம்பந்தரும் தம்மை மறந்து விட்டார்.

*கோல விழாவின் அரங்கேறிக்*
*கொடியிடை மாதர்கள் மைந்தரோடும்*
*பாலென வேமொழிந்து ஏத்தும்ஆவூர்ப்*
*பசுபதி யீச்சரம் பாடுநாவே*

என்று பாடுகின்றார்.

## அரங்கேறி

கொடியிடை நங்கையர் தம்மை மறந்த பத்திநிலையில் அரங்கேறி நடிக்கின்றார்கள். ஆண்டவனிடத்தில் தம்மை ஒப்பு வித்துவிட்டார்கள். இளமை எழிலும் இன்பச் செவ்வியும் கனிந்த பருவத்தில் பல்லாயிரம்பேர் கூடிநிற்கும் கோலவிழாவின் அரங்கேறிப் பசுபதியீச்சரநாதனைப் பரவி ஆடுகின்ற அற்புதக் காட்சியைச் சம்பந்தர் அப்படியே எமது அகக்கண்ணில் பதிக்கின்றார்.

## கொடியிடை மாதர்கள்

ஆடுகின்ற மங்கையரின் இடையின் எழிலை ஞானப்பால் உண்ட ஞானசம்பந்தர் பாடுகின்றார். கொடியிடை மாதர்கள் எனக் கூறி மகிழ்கின்றார். இறைவனை எண்ணி, வளைந்து, நெளிந்து, துவண்டு ஆடுகின்ற இடையைப் பாடுகின்ற இன்பத்தை இறைவனைப் பாடுகின்ற இன்பத்தினும் பெரிதாகச் சம்பந்தர் மதிக்கின்றார். மாதர்கள் அழகை உடையவர்கள். இறைவனுக்கே தமது அழகை அளித்து ஆடுகின்றார்கள். அழகை அழியாத அழகாகப் படைத்து விட்டார்கள். ஆடிய மங்கையரின் அழகு சம்பந்தர் பாடலை அழகுபடுத்தித் தானும் அழியாமல் வாழ்கின்றது.

## மைந்தரோடும்

மாதர்கள் தமது காதல் தலைவர்களாகிய மைந்தரோடும் கூடிநின்று இறைவனை ஏத்தி ஆடுகின்றார்கள். தமது வாழ்க்கைத் துணைவராகிய உலகியல் தலைவரினும் மேலான உயிர்த் தலைவனை - ஆன்மநாயகனை அம்மாதர்கள் கண்டுவிட்டார்கள். அவன் கருணையிற் படிந்து விட்டார்கள். தாமும் தமது காதலரும் ஆருயிர்கள் என்பதையும், பசுபதியீச்சர நாதனே பேரின்பக் கூடலைத் தமக்கு அளித்தருளும் ஆண்டவன் என்பதையும் அவர்கள் அறிந்துவிட்டார்கள்.

## பாலெனவே மொழிந்து ஏத்தும்

பால்போன்ற மொழிகளால் பசுபதியீச்சரத்தானைப் பரவிப் பணிந்து பாடுகின்றார்கள். இளமை மாறாத இனித்த சுவை மொழிகளால் இறைவனைப் பாடுகின்ற பேற்றை அம்மங்கையர் கள் பெற்றுவிட்டார்கள். கீதமினிய குயிலைப் போலக் கோல விழாவின் அரங்கேறி ஆடுகின்ற கொடியிடை மாதர்கள் பாடு கின்றார்கள். பாட்டின் இனிமை யாழ்முரி பாடிய சம்பந்தரின் அருள் உள்ளத்தை அள்ளிவிட்டது. பால் எனவே மொழிந்து ஏத்தும் என ஆவலன்புகனிய ஆவியுருகிப் பாடுகின்றார். இறைவனும் பண்ணினேர் மொழியாளுமை பங்கன், பாலெனவே மொழிந் தேத்தும் பாடலைக் கேட்டு மகிழ்பூப்பார்.

## பசுபதியீச்சரம் பாடுநாவே

பாலெனவே மொழிந்து மாதர்கள் பாடி ஏத்திய பசு பதியீச்சரத்தை பாடிப் பாடிப் பரவும் வண்ணம் நற்றமிழ்வல்ல ஞானசம்பந்தர் தமது நாவுக்கும் ஆணையிடுகின்றார். கன்னிமை கனிந்த கட்டிளமைப் பருவத்திலே பசுபதியீச்சரத்தானைத் தமது காதல் மிக்க தலைவருடன் ஆடிப் பாடி அன்பு செய்த கொடியிடை மாதரைச் சம்பந்தரால் மறக்கவே முடியவில்லை. அம்மாதர்கள் பாடியது போலப் பாடும்படி நம் நாவுக்குச் சொல்லி நயக்கின்றார்.

*மாலும் அயனும் வணங்கி நேட*
*மற்றவ ருக்கெரியாகி நீண்ட*
*சீலம் அறிவரிதாகி நின்ற*
*செம்மையி னாரவர் சேரும்ஊராம்*
*கோல விழாவின் அரங்கேறிக்*
*கொடியிடை மாதர்கள் மைந்தரோடும்*
*பாலென வேமொழிந்து ஏத்தும்ஆவூர்ப்*
*பசுபதி யீச்சரம் பாடுநாவே.*

குறிப்பு :- நேட - தேட, சீலம் - எளிமை, செம்மையினார் - செம்பொருளாய் உள்ளவர். கோலம் - அழகு, மைந்தர் - வீரம்மிக்க ஆடவர்.

# தொழுவார்க்கு அருள்செய் சோதி

உலக போகங்களை நுகர்ந்து வாழ்கின்றவர்கள் அவற்றி லேயே ஊறி அருளை மறத்தல் கூடாது. இறைவனின் திருவருள் தான் எம்மை உய்விக்கவல்லதென்பதை உணரவேண்டும். உணர்ந்துணர்ந்து உருகவேண்டும். இவற்றுக்கெல்லாம் காரண மாக விளங்குகின்ற உள்ளத்தைத் தூய்மையாக வைத்திருத்தல் என்பது எளிதான செயலல்ல. உள்ளம் எம்மை உலக இன்பத்திலே ஈடுபடுத்தும். ஈர்த்துச் செல்லும். அழுக்காறு, அவா, வெகுளி, இன்னாச்சொல் என்னும் தீய பண்புகள் உள்ளத்தைத் தம் விளைபுலமாக்கிக்கொள்ள விரும்பும். அவற்றுள் அழுக்காறு மிகமிகக் கொடியது. அயலவர்க்கு உண்டாகும் நன்மைகளைக் கண்டவுடன் அவர்கள்மேல் வெறுப்புக்கொள்ளும் வண்ணம் மனத்தைத் தூண்டும். மனம் அவரின் செல்வத்தைப் பெற வேண்டும் என்று ஆசைப்படும். ஆசை முற்றுப்பெறாவிடின் கோபங்கொள்ளும். கோபங் கொடிய சொற்களைக் கூறிச் செல்வம் உடையவர்களைத் திட்டி வையச் செய்யும். இவ்வாறு தூய்மை கெட்ட உள்ளம் இறைவனை மறந்து போகும். இறைவனை மறந்து வாழ்கின்ற வாழ்வு பயனற்றது. அந்தப் பயனற்ற வாழ்வை விடுத்து அல்லும் பகலும் இறைவன் திருப் பெருவாழ்வுக்கு எம்மை வழிப்படுத்தவேண்டும். திருஞானசம்பந்தர் இறைவனையே எண்ணித் தொழுது வாழ்கின்ற இன்ப நெறியைக் கைக்கொண்டு வாழும்வண்ணம் எம்மை ஊக்குகின்றார்.

## நாளும் மிகுபாடல்

எப்பொழுதும் அன்புடன் பல பாடல்களால் இறைவனை ஏத்துங்கள். இறைவன் பாடலில் மிக விருப்புடையவன். கீதத்தை

மிகப்பாடும் அடியார்களை வாழ்விப்பவன். "ஏழிசையாய் இசைப் பயனாய்" இலங்குகின்றவன். இன்னிசை இறைவனுடன் எமது உள்ளத்தை இசைவிக்கும் தன்மை வாய்ந்தது. இறைவனின் பொருள்சேர் புகழை இன்னிசை அமைந்த பாட்டுக்களால் பாடிப் பரவி உருகுகின்ற பத்தர்களைக் கூடிக்களிக்கின்ற இன்பமே மேலான இன்பம். இறவாத இன்ப அன்பை எளிதாகப் பெறுகின்ற வழி.

*பாடு வாரிசை பல்பொருட் பயன்நுகர்ந்து அன்பாற்*
*கூடு வார்துணைக் கொண்டதம் பற்றுஅறப் பற்றித்*
*தேடு வார்பொரு ளானவன் செறிபொழில் தேவூர்*
*ஆடு வானடி அடைந்தனம் அல்லல் ஒன்றுஇலமே*

எனத் தேவூர் ஈசனையும் திருஞானசம்பந்தர் பாடிப்பரவுகின்றார். இதில் அடியார்கள் பலதிறப்பட்ட இசையைப் பாடுகின்றார்கள். அங்ஙனம் பாடும்பொழுது பொருட்பயன் நுகர்ந்து பாடுகின்றார் கள். பொருள் – இறைவன், பொருட்பயன் – இறைவனின் இன்னருள். இறைவனை மெய்ப்பொருள் என்று வள்ளுவர் வழுத்துகின்றார். "கற்றீண்டு மெய்ப்பொருள் கண்டார் தலைப்படுவர் மற்றீண்டு வாரா நெறி" என்பது திருக்குறள். பாடிப்பரவி உருகும் பத்தர்கள் மெய்ப் பொருளாகிய இறைவனின் இன்னருளை நுகர்ந்து நுகர்ந்து களிக் கின்றார்கள். இறைவனைப் பாடுகின்றபொழுதுதான் இசை ஏற்ற மடைகின்றது. இறைவன் புகழை இசையில் அமைத்துப் பாடுதலால் எய்துகின்ற இன்பமே இன்பம். நாயன்மார்களும் ஆழ்வார்களும் பண் ஒன்ற இசைபாடி இறைவன் புகழை இயம்பிய அருட்பாக்களில் நிறைந்துள்ள பத்திச் சுவையை நாம் அள்ளிப்பருகி ஆனந்த மடைகின்றோம். "வட்டமிட்டுத் திசைதொழுது ஆடியும் பாடுவார் சிந்தையுட் சேர்வாரே" என்று வரும் சம்பந்தர் செந்தமிழ்த் தொடையையும் நோக்குக. நாளும் மிகுபாடல் பாடிப்பரவி ஆடுங்கள். இறைவன் பாடியபடியே கூடிநின்று கும்பிடுகின்ற அடியார்களைத் தன்குடியாகக் கொண்டுவக்கும் கொள்கையாளன்.

# ஞானமிகும் நல்லமலர்

பாடி ஆடி இறைவனைப் பரவுகின்ற அடியார்கள் நல்ல மலரும் சூடித் தொழுவார்கள். இறைவனுக்கு மரங் கொடி முதலியவற்றில் உள்ள மலர்களைச் சூட்டியும் தொழுவார்கள். அந்த மலர்களிலும் மேலான மலர் ஒன்றும் உள்ளது. அதுதான் ஞானமலர். ஞான மாகிய மலரையிட்டு இறைவனைத் தொழுகின்ற பொழுதுதான் அவன் எம்மை ஆட்கொள்வான். உலகத்தார்களால் தீண்டப்படாமல் பக்குவம் வாய்ந்த தூயமெய்யுணர்ச்சி என்னும் ஞானமலர்தான், ஆருயிர்கள் ஆண்டவனுக்கு அணியக்கூடியது. இந்த ஞானமலரிலே அன்புத்தேன் கமழும். பத்தர்கள் ஞானமலரால் தொடுத்த மாலையைக் கொண்டு இறைவனின் திருவடிகளைக் கட்டுவார்கள்.

*'ஆர்மின் ஆர்மின் நாண் மலர்ப் பிணையலில்*
*தாள்தளை இடுமின்'*

என மாணிக்கவாசகர் ஆர்வக் குரலால் அடியார்களை அழைக் கின்றார். கண்ணபிரான் கழலடிகளை, அன்பனாகிய சகாதேவன் ஞானமலர் மாலையாற் கட்டிய வரலாற்றைக் கருதுங்கள்.

*"உன்னை நீதானும் உணராதாய்*
*உன்வடிவம்*
*தன்னைநீ காட்டத் தளைத்திடுவன்*
*யான் என்றான்"*

*"அன்பால் நீஎன்னை அறிந்தே*
*பிணித்தமையால்*
*என்பாதந் தன்னை இனிவிடுக"*

என வரும் தொடர்களால் ஞானமலர்ப் பிணையலால் கண்ணபிரானின் தாள்களைத் தளையிட்ட சகாதேவனின் தவச் சிறப்பை உணர் கின்றோம். ஞானமலராகிய மெய்யுணர்ச்சி இறைவனின் தாளிணை சேரும் தனிப்பெரும் பேற்றைத்தரும் சிறப்புடையது என்பதை

எமக்குணர்த்தி எம்மை ஈடேற்றக் கருதிய தமிழ் ஞானசம்பந்தர், ஞானமிகு நல்ல மலர் என்றார்.

## வல்ல வகையால்

ஞானமிகு நல்லமலரை உங்களால் இயன்றவகை இறைவனுக்குச் சூட்ட வேண்டும். இடைவிடாது சூட்ட வேண்டும். எள்ளளவும் உலகத்தார்கள் என்னும் மாசு ஞானமலரில் படியாதவண்ணம் பாதுகாத்தல் வேண்டும். என்னென்ன நெறிகளால் ஞான நன்மலரை இறைவனுக்குச் சூட்ட முடியுமோ அவற்றையெல்லாம் ஆய்ந்து கண்டு ஆராமையுடன் சூட்டவேண்டும்.

*ஒல்லும் வகையால் அறவினை ஓவாதே*
*செல்லும்வா யெல்லாம் செயல்*

என்பது திருக்குறள். ஞான மலரை அர்ச்சனை வயலுள் அன்பு வித்திட்டு வளர்க்கவேண்டும். அன்பாகிய வித்திலே தோன்றி மலர்ந்த ஞானமலரை வல்லவகையால் ஓம்பி வாழவேண்டும்:

*மெய்ம்மையாம் உழவைச் செய்து*
*விருப்பெனும் வித்தை வித்திப்*
*பொய்ம்மையாங் களையை வாங்கிப்*
*பொறையெனும் நீரைப் பாய்ச்சி*
*தம்மையும் நோக்கிக் கண்டு*
*தகவெனும் வேலி யிட்டுச்*
*செம்மையுள் நிற்பராகில்*
*சிவகதி விளையு மன்றே*

என வரும் நாவுக்கரசர் திருநெறிப்பாடலையும் நோக்குக. ஞான மலரை மாசுபடாதவண்ணம் காத்து வந்தால் சிவகதியாகிய பயனை நல்கும். 'வல்லவகை' என்பது தம்மையும் நோக்கிக் கண்டு தகவு எனும் வேலி இடலாகிய செயலைக் குறிக்கின்றது. 'தம்மை உணர்ந்து தமையுடைய தம் உணர்தலே' ஞானமலராகிய மெய்யுணர்ச்சியால் எய்தும் பேறாகும். ஞானமிகு நல்லமலரை

வல்லவகையால் காத்து வாழும் வண்ணம் எம்மை ஊக்கி வழி காட்டும் சம்பந்தரின் செந்தமிழ்த் தொடர்கள் ஞானத்தேனைச் சொட்டுகின்றன.

## தோளினொடு கைகுளிரத் தொழுவார்

ஞானமலர் இட்டுத் தொழுகின்ற அடியார்களின் தோள் களும் கைகளும் அன்பினால் நனைந்து குளிரும். கைகளைத் தூக்கும்பொழுது அவற்றை உடைய தோளிணைகள் குளிர் கின்றன. தொழும்பொழுது கைகள் குளிர்கின்றன. இவ்வாறு தொழும்பொழுது தோள்களும் கைகளும் அகத்தில் ஊறிப் பெருகும் அன்பினால் குளிர்கின்றன.

*"குரம்பைகொண்டு இன்தேன் பாய்த்தி நிரம்பிய*
*அற்புத மான அமுத தாரைகள்*
*எற்புத் துளைதொறும் ஏற்றினன் உருகுவது*
*உள்ளங் கொண்டோர் உருச்செய் தாங்கெனக்கு*
*அள்ளூறு ஆக்கை அமைத்தனன்"*

என வரும் திருவாசகத் தொடர்களை நோக்குக. இதனால் உள்ளத்தில் நின்று ஊறிப் பெருகுகின்ற இறை அன்பால் உடலும் இன்தேன் சுரக்கின்றது என்பதை உணர்கின்றோம். மயிர்க்கால் தோறும் அற்புதமான அமுததாரைகள் சுரக்கின்றன. சுரந்து எலும்பின் துளைகளில் எல்லாம் ஏறுகின்றன என்று மணிவாசகர் கூறி ஆனந்தமடைகின்றார். இதனையே சம்பந்தர் செந்தமிழ் 'தோளினொடு கைகுளிரத் தொழுவார்' எனச் செப்புகின்றது. 'அன்பினால் என்தன் ஆவியோடு யாக்கை ஆனந்தமாய்க் கசிந்துருக' என்பதையும் எண்ணுங்கள்.

## தொழுவார்க்கருள்செய் சோதி

ஆவியும் யாக்கையும் ஆனந்தமாய்க் கசிந்துருக நின்று தொழுகின்ற அடியார்களை ஆட்கொண்டருள்வான். அவன் ஒளி உருவமாய் வைகாவிலே எழுந்தருளி உள்ளான். அவனை

அயரா அன்புசெய்து தொழுங்கள். அவன் பொருள்சேர் புகழை இன்னிசைப் பாக்களால் பரவித் தொழுங்கள். ஞானமிகு நல்ல மலர் இட்டு வல்லவகையால் தொழுங்கள். அவன் தொழுகின்ற அடியார்களின் உள்ளத்தே நின்று உள் ஒளி பெருக்கி உய்யக் கொள்ளும் சோதி. “ஒப்புனக்கில்லா ஒருவனே அடியேன் உள்ளத்துள் ஒளிர்கின்ற ஒளியே” என்றும், “ஊறிநின்று என்னுள் எழுபரஞ்சோதி” என்றும் சோதியாய் நின்றருளும் இறைவனை மணிவாசகர் சொல்லிப் பரவுகின்றார்.

## நீளவளர் சோலை

சோதியாய் இறைவன் எழுந்தருளும் திருவைகாவிலே உயர்ந்தோங்கும் சோலைகள் உள்ளன. அச்சோலைகளில் தென்னைகள் செழித்து வளரும். திருவருளால் செழித்தோங்கும் தென்னைகள் பல குலைகளை ஈன்று பயன்தருகின்றன. குலைகளில் நெருங்கிப் பழுத்த தேங்காய்கள் விழும்வண்ணம் வாளைமீன்கள் நீர்நிலைகளில் நின்று துள்ளிப் பாய்கின்றன. தென்னைகள் ஞானநிலை எய்திய அடியார்களையும், முதிர்ந்த தேங்காய்கள், அவர்களின் ஞான உணர்ச்சி முட்டின்றி நிறைந்து பயன்தரும் பண்பையுங் குறிப்பாகக் காட்டுகின்றன. வயல்களில் உள்ள நீர்ப்பெருக்கால் மேலெழுந்து துள்ளிப் பாய்கின்ற வாளைமீன்கள், அடியார் கூட்டத்தின் நடுவே தங்கி வாழ்ந்த சிறப்பால் இறைவனருளைப் பெறும் வேட்கை மிக்கவராய்க் குருவைத் தேடித்திரியும் ஞான வேட்கையாளரையும், தென்னைகள், வாளைமீன்கள் துள்ளித் தம்மைத் தீண்டியவுடன் தேங்காய்களை உதிர்த்தல், ஞான வேட்கைகொண்ட அடியார்களுக்குக் குருவாய் எழுந்தருளி அவர்களின் பக்குவமுதிர்வு நோக்கி ஞானத்தை நல்கி ஆட்கொள்ளலையும் குறிப்பாகக் காட்டுகின்றன.

## மதுநாற மலர்விரியும்

இங்ஙனம் வாளைமீன்கள் துள்ளிப் பாய்தலால் நீர் நிரம்பிய வயல்களிலே உள்ள பேரரும்புகள் எல்லாம் மலர்ந்து

தேன் மணக்கின்றது. இச்செயல், பக்குவம் வாய்ந்த ஆருயிர்கள் இறைவனருளைப் பெற்று உய்வடைதலைக்கண்ட ஏனையோரும் தமது உலகநாட்டங்களை ஒழித்து, அன்பு கொண்ட உள்ளத்தினராய் இறைவனருளைப் பெற முயல்வதைக் குறிப்பாகக் காட்டுகின்றது. பேரரும்புகளாய் இருந்த நிலை, உலக இன்பங்களிலேயே நாட்டமுடையவராய்த் தம் நலங்கருதி அன்பின்றி வாழ்ந்தமையைக் குறிக்கும். வாளைமீன்கள் துள்ளிய அதிர்ச்சியினால் பேரரும்புகள் விரிந்த செயல், ஞான வேட்கைகொண்ட உள்ளம் தம் நலத்தைவிட்டுப் பிற உயிர்களையும் போற்றி இறைவனுக்கு ஆட்படும் உள்ளத்தை வேட்கைவாய்ந்து விரிவைக் காட்டுகின்றது. மலர்ந்த மலர்களில் மதுநாறுதல், உலக வேட்கையை விடுத்து அகன்ற உள்ளத்தில் இறை அன்பு தோன்றிப் பிற உயிர்களுக்கும் பயன்படுதலைக் காட்டுகின்றது. இவற்றை எல்லாம் திருவைகாவிலே கண்டு திருவருளை வியந்த திருஞானசம்பந்தர் திருநெறிய தமிழாற் பாடிச் சிந்தை மகிழ்ந்தார்.

*நாளுமிகு பாடலொடு ஞானமிகு*
*நல்லமலர் வல்லவகையால்*
*தோளினொடு கைகுளிர வேதொழும்*
*அவர்க்கருள்செய் சோதியிடமாம்*
*நீளவளர் சோலைதொறும் நாளிபல*
*துன்றுகனி நின்றதுதிர*
*வாளைகுதி கொள்ளமது நாறமலர்*
*விரியும்வயல் வைகாவிலே.*

குறிப்பு : வல்லவகையால் - இயன்றவாறு. சோதி - ஒளி வடிவானவன். நாளி - தென்னை. உதிர - உதிரும்படி. வாளை - வாளைமீன்கள். குதிகொள்ள - துள்ளிப்பாய. மது - தேன்.

# கானப்பேர் அண்ணல்

ஈசனை நேசம் நிறைந்த நெஞ்சுடன் நெக்கு நெக்குருகி வழிபடல் வேண்டும். காதலாகிக் கசிந்து கண்ணீர் மல்க வேண்டும். பூவும் நீரும் தூவிப் புகழ்ந்து பாடி ஆடவேண்டும். ஈசனைக் காதலன்பு கனியக்கனிய வழிபடுகின்ற இன்பமே மேலான இன்பம். "கூடும் அன்பினில் கும்பிடலே அன்றி வீடும் வேண்டா விறல்" உடையவராய் மெய்யடியார்கள் விளங்குவர். ஈசனின் இன்னருளை எண்ணி வழிபடும்போது எழுகின்ற ஆனந்தப் பெருக்கினை, நுகர்ந்து நுகர்ந்து ஆவி தளிர்ப்பெய்துகின்ற இன்பத்தையே அடியார்கள் விரும்புவார்கள்.

*"பாடவேண்டும்நான் போற்றி நின்னையே*
*பாடி நைந்துநைந் துருகி நெக்குநெக்கு*
*ஆட வேண்டும்நான் போற்றி அம்பலத்து*
*ஆடு நின்கழற் போது நாயினேன்*
*கூடவேண்டும் நான் போற்றி"*

என மணிவாசகனார் ஈசனை இரந்து வேண்டுகின்றார். ஈசனையே என்றும் பாடித் தொழுது பரவுகின்ற பாலறாவாயராகிய திருஞானசம்பந்தப் பெருமான் திருக்கானப்பேரில் எழுந்தருளி இருக்கும் ஈசனைத் தொழச் சென்றார். சென்றவர் அங்கோர் திருவருட் காட்சியைக் கண்டார். கண்டதும் உள்ளங் களித்தார். இறவாத இன்ப அன்பின் இயல்பை உணர்ந்தார்.

## பெருங்கைமா

ஒரு பெரிய களிறு, பிடிகள் தன்பின்னே வரத் திருக்கானப் பேர்த் திருக்குளத்தை நோக்கி வருகின்றது. மிகவிரைவாக வரு

கின்றது. வருகின்ற நேரமோ விடியற்காலம். விடியற்காலத்திலே, தன்னைத் தொடரும் பிடிகளையும் பொருட்படுத்தாமல் பெரிய கையையுடைய மதக்களிறு ஏன் திருக்குளத்தை நோக்கி வருகின்றது என்ற எண்ணத்துடன் திருஞானசம்பந்தர் சிந்தித்தார். அவரின் சிந்தனை தெளிய முன்னர், வந்த களிறு பொய்கையில் இறங்கி நீராடியது. பிடிகளும் நீராடின. நீராடிக் கரை ஏறிய களிறு சோலையில் புகுந்து மலர்களைக் கொய்தது. தன் மூச்சுக்காற்றும் எச்சிலும் மலர்களிலே படாதவண்ணம் மிகமிகப் பாதுகாவலாய் அம்மலர்களை ஏந்தியவண்ணம் அக்களிறு கானப்பேரில் எழுந் தருளிய கடவுளின் திருமுன்னிலையிற் சென்றது. மலர்களைத் தூவி வழிபட்டது.

## பிடியெலாம் பின்செல

பெரிய துதிக்கையை உடைய களிறு, அழகும் ஆண்மையும் வாய்ந்த களிறு. அதன் அழகினால் கவரப்பட்ட பிடிகள் அதனை விட்டு விலகாமல் தொடர்ந்து திரிகின்றன. பிடிகளின் பெண்மையை நயந்து நுகருகின்ற இன்பத்திலும், கானப்பேர் அண்ணலைப் பூத்தூவி வழிபடுகின்ற இன்பத்தையே களிறு மேலாக மதித்தது. மதம்மிக்க பெருங்கைக் களிறு போகநுகர்ச்சியிலும் ஈசனை வழிபாடு செய்யும் ஞான நுகர்ச்சியுடையதாய்ச் செயல் புரிகின்றது. பிடிகள் எல்லாம் பின்தொடர்ந்து வருகின்றபோதும், அவற்றைத் திரும்பியும் கூடப் பார்க்காமல், விரைந்து திருக்குளத்தை நோக்கிச் செல்கின்ற களிற்றின் தவநெறித் திருவின் மேம்பாட்டை உணர்த்தப் பிடியெலாம் பின்செல என்றார். தன்னிடம் எய்துகின்ற சிற்றின்பத்தையே நாடிவந்த பிடிகளையும் ஈர்த்து ஈர்த்துச் சென்று பேரின்பக் கூடலுக்கு வழிப்படுத்துகின்ற களிற்றின் மெய் யுணர்ச்சித் திறத்தை அடிகள் எமக்குக் குறிப்பாகக் காட்டு கின்றார். பெற்ற சிற்றின்பத்தையே பேரின்பமாகக் கொள்ளும் களிற்றின் செயலை நாம் சிந்திக்க வேண்டும்.

## விடியலே தடமூழ்கி

கதிரவன் தோன்றாத விடியற்காலத்திலேயே பெருங்கைக் களிறு துயில் எழுந்து விட்டது. "வைகறை யாமந் துயில் எழுந்து"

தான் செய்ய வேண்டிய நல்லறத்தையும் ஒண்பொருளையும் களிறு சிந்தித்து விட்டது. கானப்பேர்த் திருக்குளத்தில் கடுங்குளிரையும் தாங்கிய வண்ணம் களிறு மூழ்குகின்றது. களிற்றைத் தொடர்ந்து வந்த பிடிகளும் தம் தலைவனாகிய களிற்றையே தாமும் பின் பற்றி, கொண்டானை அல்லாது அறியாக் குலமகளிரைப் போல, திருக்குளத்தில் மூழ்கின. "உள்ளேன் பிறதெய்வம் உன்னை யல்லா தெங்கள் உத்தமனே" என்ற நிலையைப் பிடிகள் எய்திவிட்டன. இந்த நிலைதான் "ஒருவனைப் பற்றி ஓரகத்தில்" இருத்தலென்னும் உயர்நிலையாகும். களிறு, இறைவனையும், பிடிகள் அவ்விறைவனையே தலைவனாகக் கொண்ட ஆருயிர் களையும் குறிப்பாகக் காட்டுகின்றன. "நன்றே செய்வாய் பிழை செய்வாய் நானோ இதற்கு நாயகமே" என இறைவனிடம் தம்மை முழுதும் ஒப்புவித்து நிற்கின்ற ஆருயிர்கள் போலப் பிடிகளும் தம்மை முழுதும் களிற்றிடம் ஒப்புவித்து, அதன் செயலையே தம் செயலாகக் கொண்டு வாழ்கின்றன என்பதை உணர்கின் றோம். "விடியலே தடம் மூழ்கல்" காலங்கடத்தாமல் உலகப் பற்றில் நின்றும் தம்மை விடுவித்துக்கொண்டு, "நாச்செற்று விக்குள் மேல் வாராமுன் நல்வினை மேற்சென்று செய்யப்படும்" என்னும் மெய்யுரைப்படி இறைவன் திருவருளிற் கலந்து நிற்றலைக் குறிக்கும்.

## விதியினால் வழிபடும்

ஈசனை வழிபடும்பொழுது மனம், மெய், மொழி என்பது தூய்தாய் ஒரு நெறிப்பட்டு நிற்றல் வேண்டும்.

*கையொன்று செய்ய விழியொன்று*
*நாடக் கருத்தொன் றெண்ணப்*
*பொய்யொன்று வஞ்சக நாவொன்று*
*பேசப் புலால் கமழும்*
*மெய்யொன்று சார செவியொன்று*
*கேட்க விரும்பும் யான்*
*செய்கின்ற பூசை எவ்வாறு*
*கொள்வாய் வினை தீர்த்தவனே*

என வரும் பட்டினத்தார் பாடலை நோக்குக. மனத்தில் அன்பும் தூய்மையும் இன்றிப் புறத்தே பூத்தூவி நீராட்டிப் புகழ்ந்து போற்றி இறைவனை ஏத்துகின்ற வழிபாடு, பிறரை மயக்கும் பொய் வழிபாடாகும். இப்பொய்யரின் வழிபாட்டை எண்ணி இறைவன் நகைப்பான். "பொக்கமிக்கவர் பூவும் நீருங் கண்டு நக்கு நிற்பர்" என்பது தேவாரம். மதம் மிக்க பெருங்கைக் களிறு இறைவனை மெய்யன்புடன் வழிபாடு புரிகின்றது. வண்டுதாத நாண்மலர்களை ஆய்ந்து கொய்து, அயராத்தூய அன்புடன் தூவி வழிபடுகின்றது. களிற்றுடன் கூடிப் பிடிகளும் விதியால் வழிபடு கின்றன. "பிடியெலாம் பின்செல" என்பதால் களிறு ஆற்றுகின்ற செயல்களை எல்லாம் அப் பிடிகளும் பின்பற்றுகின்றன என்பதை உணரலாம்.

## கடிஉலாம் பூம்பொழில்

களிறு பூக்கொய்த பூஞ்சோலையும் என்றும் மாறாத நறு மணத்தையே வீசியவண்ணம் விளங்குகின்ற தெய்வத்தன்மை கொண்டது. இறைவனை வழிபாடு புரிதற்குப் பொருத்தமான பூக்களைப் பூத்து விளங்கும் புதுமையுடையது அப்பூம்பொழில் என்பதை உணர்த்தக் "கடியுலாம் பூம்பொழில்" என்றார். இறை வனுக்குத் தூவி வழிபடுதற் பொருட்டே பூம்பொழிலின் பூக்கள் மலர்ந்துள்ளன என்பதைத் தெய்வ மணம் வீசிப் புலப்படுத்தும். இறைவனுக்கு இட்டு வணங்கும் பூக்களில் வண்டுகளும் மொய்யா என்று மேலோர் கூறுவர். "சுரும்பும் மூசாச் சுடர்பூங் காந்தள்" என்பது திருமுருகாற்றுப்படை. கானப்பேரில் உள்ள பூஞ்சோலை இறைவனுக்கு இட்டு வழிபாடு புரிதற்குப் பொருத்த மான தெய்வத்தன்மை வாய்ந்த பூக்களையே பூத்திருக்கும் என்பதாம். அப் பூக்களைக் கொய்து ஏந்திச் சென்று வழிபடாமல் இருப்போரைப் பெருங்கைக் களிறு ஊக்கி வழிகாட்டுகின்றது. பூக்களும் தெய்வமணத்தை எங்கும் பரப்பித் தம்மைக் கொய்து, கானப்பேரில் எழுந்தருளும் கடவுளின் திருவடிகளில் இட்டு வணங்கும் வண்ணம் அன்பர்களை அழைக்கின்றன.

## அண்ணல்

அண்ணல் - பெருமை உடையவன். தன்னை அடைந்தாரைத் தானாக்கித் தண்ணருள் புரியும் தலைமைப் பாடுள்ளவன். "அண்ணல் ஆண்டுதன் அடியரிற் கூட்டிய அதிசயங் கண்டாமே" என்பது திருவாசகம்.

## அடியலால் அடைசரண் உடையரோ அடியர்

கானப்பேர் அண்ணலின் அடிகள்தாம் அவனடியார்க்குப் புகலாக உள்ளன. அண்ணலின் அடிகளை அடையாதார் பிறவிப் பெருங்கடலைக் கடக்க மாட்டார். பிறவிக்கடலைக் கடந்து பேரின்பக் கரையை அடைதற்குத் தெப்பமாக உள்ளவை இறைவனின் திருவடிகளேயாகும். உலகத் தாக்கங்களினால், அலைக்கப்பட்டு அல்லல் உற்றவர்கள் இறைவனின் திருவடி களையே புகலாகக் கருதி அடைக்கலம் புகுவார்கள். அங்ஙனம் அடைக்கலம் புகுந்த அடியார்களை ஆதரித்து ஆட்கொள்ளும் பெருங்கருணைத் தடங்கடலாக இறைவன் விளங்குகின்றான். உலக போகங்களால் எய்திய துன்பத் தீயின் வெம்மை போக வேண்டுமானால், இறைவனின் கருணைக்கடலிலே படியவேண்டும். கருணைக்கடலிலே படியும் பெருவாழ்வைப் பெற விரும்புவோர் அவனின் திருவடிகளையே புகலாகக் கொள்ளவேண்டும். "அருள் புரிவாய் உடையாய் அடியேன் உன் அடைக்கலமே" என மாணிக்க வாசகர் இறைவனிடம் அடைக்கலம் புகுகின்றார். உன் அடைக் கலம் என்பதன் பொருள், நின் திருவடிகட்கு யான் அடைக்கலம் என்பதேயாகும். இறைவன் திருவடிகளைத் தொழுவதால்தான் தீவினைகள் நீங்கும். "ஈசன் கழல்களை நிறையால் வணங்க நில்லா வினைகளே" என்றும், "ஈசன் கழல்களை மருவாதவர்மேல் மன்னும் பாவமே" என்றும் திருஞானசம்பந்தர் கூறியிருத்தலையும் நோக்குக.

அடியார்களுக்கு என்றும் போகாப் புகலாய் உள்ளது இறைவன் திருவடிகளே என்ற உண்மையை மறவாமல் உலக

போகங்களில் ஈடுபடும் மக்கள் மனத்தில் பதிக்க வேண்டும்; அவர்களை இறைவனுக்கு ஆளாக்க வேண்டும்; ஆளாக்கி அவனருளே கண்ணாகக் கொண்டு வாழும் பெருநெறியில் ஈடுபடுத்த வேண்டும் என்ற இரக்கத்தால், அடியலால் அடைசரண் உடையரோ எனத் திருஞானசம்பந்தர் மலர்ந்தார்.

*பிடியெலாம் பின்செலப் பெருங்கைமா மலர்தழீஇ*
*விடியலே தடமூழ்கி விதியினால் வழிபடும்*
*கடியுலாம் பூம்பொழிற் கானப்பேர் அண்ணல்நின்*
*அடியலால் அடைசரண் உடையரோ அடியரே.*

குறிப்பு: பிடி - பெண்யானை, பெருங்கைமா - பெரிய கையையுடைய களிறு, தழீஇ - ஏந்தி, விடியல் - கதிரவன் தோன்றுதற்குக் கிட்டிய நேரம் (வைகறை), தடம் - பொய்கை, விதி - முறை (ஒழுங்கு), கடி - வாசனை (மணம்), பூம்பொழில் - பூஞ்சோலை, சரண் - அடைக்கலம்.

ஓர் இனத்தின் உயிர்த் துடிப்பும் உயர்ந்த வாழ்வும் இலக்கியத்தால் வளம்படுகின்றன. சென்ற காலத்தில் வாழ்ந்த மக்களின் எண்ணத்தையும் இன்று வாழ்கின்ற மக்களின் எண்ணத்தையும் ஒன்றுபடுத்தி உயிர் கொடுக்கின்ற சிறப்பு இலக்கியத்துக்குத்தான் உண்டு. ஒருவரின் சிந்தனையை ஒருவர் உள்ளத்தில் பதித்து, உருப்படுத்தும் இலக்கியத்தாலேதான் மக்களின் வாழ்வு மலர்கின்றது. இலக்கியத்தைப் படைக்கின்ற புலவனின் உணர்ச்சியிலே ஊற்றெழுகின்ற எண்ணங்கள், வாழுகின்ற மக்களின் எண்ணங்களுடன் கலந்து, அவர்களின் வாழ்வைப் புதுக்கிப் படைக்கின்றன. .....

மொழிதான் ஒரு மக்கள் இனத்தின் உயிர்.
மொழி அழிந்தால் இனம் அழியும்.
தமிழ்மொழி மறைந்தால் தமிழர் என்றொரு இனமே இல்லாமல் மறைந்து போகும்.
தமிழர்கள் தங்கள் மொழியைப் போற்றி வந்த மரபு மிக மேலானது.
தமிழ்மொழியைத் தெய்வமாக எண்ணி வழிபடுகின்ற பெருமை தமிழர்களுக்கு உரியதாகும். .....

இன்று தமிழுக்கு ஏற்பட்டிருக்கின்ற நெருக்கடிகள் எல்லாம் தமிழர்கள் தமிழை மறந்து வாழ்ந்ததினால் வந்தனவாகும்.
தமிழர்கள் என்று உண்மையான உருக்கத்துடன் தமிழை நினைக்கின்றார்களோ, அன்றே தமிழும் உரிமை ஒளிவீசி உலாவும்.
தெய்வத்தை மறந்து வாழ்ந்தாலும் தமிழை மறந்து தமிழர்கள் வாழமுடியாது. .....

இளந்தமிழர்களே! உங்கள் உடம்பிலே ஓடுகின்ற குருதியின் ஒவ்வொரு துளியும் தமிழ்மொழிக்குத்தான் உரியது.
தமிழைக் காப்பதுவே நீங்கள் ஆற்றுகின்ற அறம்.
தமிழுக்காக வாழ்வதே நீங்கள் ஈட்டுகின்ற பொருள்.
தமிழின் விடுதலை கண்டு மகிழ்வதே நீங்கள் அடைகின்ற இன்பம். .....

**- வித்துவான் க. வேந்தனார்**

மித்ர வெளியீடு
ISBN 978-8189748883
9 788189 748883